ஸ்ரீ

ஸ்ரீ மஹாபாரதம்.

ஸபாபர்வம்.

(ஸ்ரீ வேதவியாஸபகவான் வடமொழியில் அருளிச்செய்த
ஸ்ரீ மஹாபாரதத்திற்குச் சரியானது.)

இது

தும்பகோணம்காலேஜ் ஸம்ஸ்கிருதபண்டிதர்

மஹாவித்வான்

சதாவதானம், ஸ்ரீ உபய - வே.

தி. ஈ. ஸ்ரீ நிவாஸாசாரியர்

அவர்களால் மொழிபெயர்க்கப்பெற்று,

தும்பகோணம் நேடிவ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

ம. வீ. இராமானுஜாசாரியரால்

பதிப்பிக்கப்பெற்றது.

விலை - 2; தபால்சார்ஜ் 0 - 4 - 0.

Madras:
PRINTED AT THE VAIJAYANTI PRESS,
32, MOUNT ROAD.

1910

(All Rights Reserved.)

ஸ்ரீ ः

ஸ்ரீ மஹாபாரதம்.

ஸபாபர்வம்.

விஷய ஸூசிகை.

மந்த்ராபர்வம்.

அத்தியாயம்.		பக்கம்.
1	கடவுள் வாழ்த்து	1.
	மயன் அர்ஜுனனுக்குப் பிரதியுபகாரஞ்செய்ய இச்சித்தது..	1- 2
	அர்ஜுனன் கிருஷ்ணனுக்குச் செய்யுமபடி மயனுக்குக் கட்டளையிட்டது	2
	கிருஷ்ணன் ஒருஸபைசெய்யும்படி மயனை ஆஜ்ஞாபித்தது ..	3
	தர்மபுத்ரர் மயனுக்கு மரியாதைசெய்தது	3
	மயன் ஸபைசெய்ய ஆரம்பித்தது	3
2	கிருஷ்ணன் குருநிமுதலானவரிடம் விடைபெற்றுத துவாரகைக்குப் புறப்பட்டது	4- 5
	பாண்டவர்கள் கிருஷ்ணனை வழிவிட்டுத திரும்பியது ...	5- 6
	கிருஷ்ணன் துவாரகை சேர்ந்தது ...	6
3	மயன் அர்ஜுனனிடம் விடைபெற்றுப் பிந்துஸரஸுக்குச் சென்றது	7
	மயன் பிந்துஸரஸிலிருந்து பலவகைப் பொருள்களைக் கொணர்ந்தது	8
	மயன் பீமார்ஜுனர்களுக்குக கதாயுதத்தையும் சங்கத்தையும்கொடுத்தது	8
	மயன் ஸபையை நிர்மாணஞ்செய்தது	9
	ஸபையின் சிறப்பு	9- 10
	மயன் எவ்வளவுகாலத்தில் ஸபையைச செய்தானென்பது ...	10
4	தர்மபுத்ரா ஸபாப்ரவேசஞ் செய்தது	10- 11
	தர்மபுத்ரர் ஸபையில வீற்றிருந்த சிறப்பு . .	11- 13
5	தர்மபுத்ரருடைய ஸபைக்கு நாரதா வந்தது	13- 15
	நாரதர் தர்மபுத்ராரீ யோகக்ஷேமம் விசாரித்தது ...	15- 23
	தர்மபுத்ரர் வேதமுதலியன பயன்படுவதெபபடியென்று நாரதரை வினவியது	23- 24
	நாரதர் யுதிஷ்டிரர்வினவுக்கு விடைகூறித திரவியலாபத்தைப்பற்றித திரும்பவும் வினவியது	24- 25
6	தர்மபுத்ரர் நாரதர்வினவுககு விடைகூறியது	25
	நாரதர் இந்திரன்முதலியோரின் ஸபைசிறப்புக் கூறுவேனென்றது	26
7	நாரதர் இந்திரஸபைச்சிறப்புக் கூறியது	27- 29
8	நாரதர் யமஸபைச்சிறப்புக் கூறியது	29- 32

விஷயவஸ்துசிகை.

அத்தியாயம்.		பக்கம்.
9	நாரதர் வருணஸபைச்சிறப்புக் கூறியது	32- 34
10	நாரதர் குபேரஸபைச்சிறப்புக் கூறியது	34- 37
11	நாரதர் யமஸபைச்சிறப்புக் கூறியது	37- 42
12	தர்மபுத்ரர் நாரதரிடம் ஹரிச்சந்திரனைப்பற்றி விஞவியது ...	42
	நாரதர் ஹரிச்சந்திரனுடைய ராஜஸூயத்தையும் அதனால் வந்த சிறப்பையும் சொல்லியது	43- 44
	நாரதர் பாண்டவின்கட்டளையைத தாமபுத்ரருக்குத் தெரிவித்தது	44
13	தர்மபுத்ரர் ராஜ்யபாரஞ்செய்தது	45- 46
	தர்மபுத்ரர், ஸஹோதரர்கள் மந்திரிகள் முதலியோரிடம் ராஜஸூயத்தைப்பற்றிக் கேட்டது	46
	மந்திரிகள் முதலியோர் ராஜஸூயஞ்செய்யும்படி தர்மபுத்ரருக்குச் சொல்லியது	46- 47
	தர்மபுத்ரர் கிருஷ்ணனுக்குத் தூதனுப்பினது ...	48
	கிருஷ்ணன் இந்திரப்பிரஸ்தஞ்சேர்ந்தது	49
	தர்மபுத்ரர் கிருஷ்ணனை ராஜஸூயத்தைப்பற்றிக் கேட்டது..	49
14	கிருஷ்ணன் தர்மபுத்ரருக்கு ஜராஸந்தன் வலிமையைக கூறியது	50- 55
	கிருஷ்ணன் தர்மபுத்ரருக்கு ஜராஸந்தன்முதலியவரிருக்கையில் ராஜஸூயஞ்செய்வது முடியாதென்று கூறியது ..	55
15	தர்மபுத்ரர் ராஜஸூயஞ்செய்யாதொழிவது நலமென்றது ...	56
	பீமஸேனன் ஜராஸந்தனைஜயிப்பதாகச்சொன்னது ...	57
	கிருஷ்ணன் ஜராஸந்தனையெதிர்ப்பது முகியமென்றது ...	57- 58
16	தர்மபுத்ரர் கிருஷ்ணபீமார்ஜுனர்களை ஜராஸந்தவதத்துக்கு அனுப்புகிறதைப்பற்றித் தூக்கிதகூறியது ...	58- 59
	அர்ஜுனன் சத்ருஜயஞ்செய்து ஸமராஜபட்டம்பெறுவது அவசியமென்றது	59- 60
17	கிருஷ்ணன் ஜராஸந்தவதத்துக்கு உபாயங்கூறியது ..	60- 61
	கிருஷ்ணன் ஜராஸந்தன்பிறப்புமுதலியவற்றைக் கூறியது...	61- 69
	பிருஹத்ரதனுடைய விவாஹமும் அவன்வாக்குத்தத்தமும் ...	61
	பிருஹத்ரதன் தபோவனஞ்சென்றது	62
	பிருஹத்ரதன் சண்டகௌசிகரைக்கண்டது	62
	சண்டகௌசிகர் பிருஹத்ரதனுக்கு மாங்கனிகொடுத்தது ...	63
	சண்டகௌசிகர் பிருஹத்ரதனுக்குப்பிறக்கும்புத்ரனுக்குவேட்டு வரங்கொடுத்தது	63
	பிருஹத்ரதன் மாங்கனியைத் தன் இரண்டுமனைவிகளுக்கும் கொடுத்தது	63
	பிருஹத்ரதனுடைய இருமனைவியரும் ஒருடம்பின் இருகூறுகளேப்பெற்றது	63
	தாதிகள் பிறந்தஇருதுண்டங்களையும் காற்சந்தியில்போட்டது	64
	ஜரையென்னும்அரக்கியால் அவ்விரு துண்டங்களும் ஒருருவமானது	64
	ஜரை பிருஹத்ரதன்மனைவியரிடம் குழந்தையைத்தந்தது ...	64
	பிருஹத்ரன் ஜரையின்வரலாற்றைவினவியது	65
18	ஜரை பிருஹத்ரதனுக்குத் தன்வரலாறுகூறியது ...	65
	பிருஹத்ரதன் தன்புத்ரனுக்கு நாமகரணஞ்செய்தது ...	66

அத்தியாயம். பக்கம்.

19 சண்டகௌசிகர் பிருஹத்ரதனரண்மனைக்குவந்தது ... 66
சண்டகௌசிகர், ஜராஸந்தன் பலபராக்ரமமுள்ளவனுவா னென்றது 66- 67
பிருஹத்ரதன் ஜராஸந்தனுக்கு அபிஷேகஞ்செய்து வனஞ் சென்றது 67
பிருஹத்ரதன் மனைவிமாருடன் விண்ணுலகடைந்தது ... 67- 68
ஜராஸந்தனுகுகுக் கிருஷ்ணனிடம் விரோதமுண்டானது ... 68

ஜராஸந்தவதபர்வம்.

20 கிருஷ்ணன், தாயும் பீமார்ஜுனர்களும் ஜராஸந்தவதத்தைச் செய்வதாகச்சொல்லியது 69
தர்மபுத்ரர் ஜராஸந்தவதத்திற்காகக கிருஷ்ணபீமார்ஜுனர் களுக்கு விடைகொடுத்தது 69- 70
கிருஷ்ணபீமார்ஜுனர்கள் கோரதகவேஷந்தரித்து மகததே சஞ்சென்றது 70- 71
21 கிருஷ்ணன் அர்ஜுனனுக்குமகதசேதுக்கும் கிரிவிரஜத துகருமுள்ள அரண்முதலியநிறப்புரைத்தது ... 71- 72
கிருஷ்ணபீமார்ஜுனர்கள் மூன்றுபேரிகைகளை உடைத் தது 73
கிருஷ்ணபீமார்ஜுனர்கள் சைத்யகத்தின் சிகரத்தையுடைத் துக் கிரிவிரஜதகருகுட்பிரவேசித்தது 73
ஜராஸந்தன் அபசகுனங்களைக கேட்டு வீரதோபவாஸங்கள் நடத்தியது 73
கிருஷ்ணபீமார்ஜுனர்கள் கடைகளிலிருந்து புஷ்பசந்தனஞி களைப் பலாத்காரமாக எடுத்தணிந்தது 74
கிருஷ்ணபீமார்ஜுனர்கள ஜராஸந்தனரண்மனையிற் பிரவே சித்தது 74
ஜராஸந்தன் கிருஷ்ணபீமார்ஜுனர்களைப்பூஜிததுக் குசலப்ர ச்னஞ்செய்தது 74
கிருஷ்ணன் ஜராஸந்தனுடைய குசலப்ரசனதுக்கு விடை யளித்தது 74
ஜராஸந்தன் அர்த்தராத்திரியில் கிருஷ்ணபீமார்ஜுனர்களிடம் வந்தது 75
ஜராஸந்தன் கிருஷ்ணபீமார்ஜுனர்களுடைய வேஷத்தைப் பற்றி ஸகேதஹித்துக்கேட்டது 75- 76
கிருஷ்ணன் ஜராஸந்தனுக்கு மஹமொழிகூறியது ... 76
22 கிருஷ்ணனுக்குமீ ஜராஸந்தனுக்கும் வாக்குவாதம் ... 76- 77
கிருஷ்ணன், தாங்கள் இன்னுரென்று வெளியிட்டது ... 78
ஜராஸந்தன் கிருஷ்ணனேஇகழ்ந்ததும், கிருஷ்ணபீமார்ஜுன ரோடு யுத்தஞ்செய்ய எணணங்கொண்டதும் .. 79- 80
ஜராஸந்தன் தன்குமாரனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்யக்கட் டளையிட்டது 80
23 கம்ஸன்வரலாறு 80- 82
தேவதூதன் கம்ஸனுக்குச் சொல்லியது 81
கம்ஸன் தேவகியைக்கொல்ல யத்தனித்ததும், வஸுதேவர் சமாதானஞ்செய்ததும் 81

விஷயஸூசிகை.

அத்தியாயம்.		பாகம்.
23	கம்ஸன் தேவகியின்குமாரர்கள் அறுவரைப் பிறக்கப்பிறகீக்க கொன்றது	82
	தேவகியின் ஏழாவதுகாப்பம் ரோஹிணியின்வயிற்றில் வைக்கப்பட்டது	82
	கிருஷ்ணன் அவதரித்தது	82
	வஸுதேவர் கிருஷ்ணனை இடையனுக்குக்கொடுத்து அவன் பெண்ணைவாங்கிவந்தது	82
	கம்ஸவதம்	82;172;174
	கிருஷ்ணன் உக்ரஸேனனுக்குப் பட்டங்கட்டியது	82,172;174
	ஜராஸந்தன் கிருஷ்ணனைத்தமித்துக் கம்ஸன்மகனுக்குப் பட்டங்கட்டியது	83
	ஜராஸந்தன் அரசர்களைஜயித்துச் சிறையில்வைத்தது ...	83
24	ஜராஸந்தன் பீமஸேனனோடு யுத்தம்வேண்டினது ...	83
	ஜராஸந்தனுடையபுரோஹிதர் கோபாசனைமுதலியவற்றோடு ஜராஸந்தனிடம்வந்தது	83
	ஜராஸந்தன் யுத்தஸந்நாஹஞ்செய்தது	84
	பீமஸேனனுக்கும் ஜராஸந்தனுக்கும் மல்லயுத்தம் ...	84- 88
	ஜராஸந்தன களேப்படைந்தது	86
	கிருஷ்ணன் பீமஸேனனைத தூண்டிச் சொல்லியது ...	86
25	பீமஸேனன் ஜராஸந்தன் விஷயத்தில் தாமதிக்கக் கூடாதென்றது	86- 87
	கிருஷ்ணன் பீமஸேனனுக்கு ஜராஸந்தவதத்தைப்பற்றிச்சொல்லியது	87
	கிருஷ்ணன் பீமஸேனனுக்குக் கோரையைக்கிழித்துக் காண்பித்தது	87
	கிருஷ்ணன் திரும்பவும் கோரையைக்கிழித்துக் கல்மாற்றிப் போட்டது	88
	ஜராஸந்தவதம்	88
	கிருஷ்ணபீமார்ஜுனர்கள் ஜராஸந்தனுடைய தேரிலேறி அரசர்களை விடுவித்தது நகரத்துக்கு வெளியில்வந்தது ...	88- 89
	கிரிவிராஜநகரத்தஜனங்கள் கிருஷ்ணனைப் பூஜித்தது ...	89
	சிறையிலிருந்து விடுபட்ட அரசர்கள் கிருஷ்ணனைப்பூஜித்தது அவருக்குத தாங்கள் என்ன செய்யவேண்டுமெனக கேட்டது	89- 90
	கிருஷ்ணன் தர்மபுத்ரருக்கு உதவிசெய்யும்படி அரசர்களை ஆஜ்ஞாபித்தது	90
	அரசர்கள் கிருஷ்ணனுக்குக் காணிக்கை கொடுத்தது ...	90
	கிருஷ்ணன் ஸஹதேவனுக்கு அபயமளித்து அவன்கொடுத்த ரத்தினங்களைப் பெற்றுக்கொண்டது	90
	ஸஹதேவன் கிருஷ்ணபீமார்ஜுனர்களிடம் அனுமதிபெற்றுத் தன் தலைநகரத்துக்குத்திரும்பிவந்தது ...	90- 91
	கிருஷ்ணன் ஸஹதேவனிடம் காணிக்கைபெற்று அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தது	91
	கிருஷ்ணன் அரசர்களை ராஜஸூயயாகத்துக்குவரக் கட்டளையிட்டு அவர்களோடும் பீமார்ஜுனர்களோடும் இந்திரப்பிரஸ்தம் வந்தது	91

அத்தியாயம். பக்கம்.

25 கிருஷ்ணன் தாமபுத்தராலமரியாதைசெயது புகழபபெறறது 92
தாமபுத்தரா ஜராஸந்தனதேதரைக கிருஷ்ணனுகருக கொடுத்தது 92
சிறையிலிருந்து விடுபட்ட அரசாகள தாமபுத்தரிடம விடை பெற்றுத தத்தமநகராஞ செனறது ... 92
கிருஷ்ணன தாமபுத்தர்முதலியோரிடம விடைபெறறுத துவாரகைகருச செனறது .. . 92- 93

திக்விஜயபர்வம்.

26 தாமபுத்தரா ராஜஸூயததைபபற்றிக கவலையுறறது . 93
அஜாதனன பொகஷ்தத்தை நிரபபுவது அவசியமென்றது... 94
பீமாஜுனன நகுலஸஹதேவாகள திகவிஜயதத்துகருச செனறது 94
27 அஜாதனன திகவிஜயம ... 95-104
அஜாதனன பகதத்தனை ஜயித்தது ... 96
28 அஜாதனன கூவேதபாவதம வரையில ஜயித்தது . 96- 98
29 அஜாதனன உத்தராகுருகேஷ்தரமவரையில ஜயித்து இநதிரபபிரஸ்தம வநதது 98-104
30 பீமஸேனன திகவிஜயம 104-107
பீமஸேனன சேதிதேசமவரையில ஜயித்தது 104-105
31 பீமஸேனன திகவிஜயஞசெயது இநதிரபபிரஸ்தம வநதது... 105-107
32 ஸஹதேவன திகவிஜயம 107-122
ஸஹதேவன நீலனோடு யுததஞசெயதது ... 109-110
அகநி நீலராஜனபுதரியை விவாகஞசெயதது 110
அகநி நீலராஜனுகரு வரங்கொடுத்தது ... 110
ஸஹதேவன அகநியைத தரிசித்தது 110-111
நீலராஜன ஸஹதேவனுகருக்கபபங்கொடுத்தது 112
33 ஸஹதேவன சோழநாடு பாண்டியநாடுகளுகருச செனறது ... 114-116
34 ஸஹதேவன கடோதகசனை அழைத்தது 116
ஸஹதேவன விபீஷணருகருத தூதனுபபியது 117
கடோதகசன விபீஷணனரகணடது ... 118-119
கடோதகசன தானவகாரியததை விபீஷணருகருத தெரிவித்தது 119-121
விபீஷணர கபபங்கொடுத்தது 121
கடோதகசன விபீஷணரிடம திரவியஙகளைப பெறறுவநது ஸஹதேவனுகருக கொடுத்தது ... 122
ஸஹதேவன இநதிரபபிரஸ்தம சோநதது ... 122
35 நகுலன திகவிஜயம 122-124

ராஜஸூயபர்வம்.

36 கிருஷ்ணன் தனஙகளோடு இநதிரபபிரஸ்தம வநதது 125
தாமபுத்தரா கிருஷ்ணனை ராஜஸூயஞசெயயுமபடி வேணடினது 126
கிருஷ்ணன தர்மபுத்தருகருக ராஜஸூயஞசெயய அனுமதி கொடுத்தது 126
தர்மபுத்தரா யாகஸாமகரிகளை வரித்தஞசெயயக கட்டளையிட்டது 126

அத்தியாயம். பக்கம்.

36 தர்மபுத்ரருடைய ராஜஸூயத்தில், பிரம்மா உத்காதாமுதலியோர் யார்யாரென்றது 126-127
சிற்பிகள் யாகசாலைமுதலியவற்றைக் கட்டினது ... 127
ஸஹதேவன், பிராமணர்அரசர்முதலியோருகுக் தூதனுப்பினது 127
தர்மபுத்ரர்யாகதீக்ஷைசெய்துகொண்டு யாகசாலைக்குச் சென்றது 127-128
சிற்பிகள் யாகத்துக்குவருபவர்தங்கும்படி வீடுகளைக்கட்டினது 128
தர்மபுத்ரர் பிராமணர்களுக்குப் பசுக்கள்முதலியவற்றையும் வேலைக்காரிகளையும்கொடுத்தது 128
37 அரசர்கள் ராஜஸூயயாகத்துக்குவந்தது 128-129
38 தர்மபுத்ரர், பீஷ்மாமுதலியோரை அவரவருக்குத்தக்கவேலைகளில் ஏற்படுத்தினது 130-131
தர்மபுத்ரர் ராஜஸூயம்நடத்தியது 131-132

அர்க்காஹரணபர்வம்.

39 யாகத்துக்குவந்தவர்கள் பலசாஸ்திரங்களைப்பற்றி வாதஞ் செய்தது 132-133
நாரதர்சிலாகித்தது 133-134
கிருஷ்ணன் வஸுதேவரைச சேனைக்கதிபதியாகவைத்தது... 134
யாகத்தில் பூஜிக்கத்தக்கவர்கள் யார்யாரென்பது ... 135
பீஷ்மர் கிருஷ்ணனைப்பூஜிக்கஆஜ்ஞாபித்தது... ... 135
ஸஹதேவன் கிருஷ்ணனைப்பூஜித்தது 135-136
சிசுபாலன், பீஷ்மர்முதலியோரைத தூஷித்தது ... 136
சிசுபாலன் அக்ரபூஜையைப்பற்றித் தாமபுதரரைகேட்டது.. 136
40 சிசுபாலன் தர்மபுதரரையும் ஸபையோரையும் கிருஷ்ணனையும் பார்த்துப் பூஜையைஇகழ்ந்துகூறியது 136-138
சிசுபாலன் ஸபையைவிட்டுசென்றது 138
41 தர்மபுதரர சிசுபாலனை ஸமாதானப்படுத்திசொல்லியது .. 139
பீஷ்மர் சிசுபாலனைக்கோபித்துக் கிருஷ்ணனைப்பூஜிப்பது நியாயமென்றது 139-141
42 ஸஹதேவன் கிருஷ்ணனைப்பூஜித்தது தகுந்தானென்றது... 141-142
ஸஹதேவன் கிருஷ்ணபூஜையைப்பொறுதவர்களுக்குத் தன் காலைக்காண்பித்தது 142
43 பீஷ்மர் உலகஸ்ருஷ்டியையும் நாராயணரூபத்தையும்கூறியது 143-144
நாராயணன் உலகத்துக்கு ப்ரபிதாமஹரென்றது ... 144
44 பீஷ்மர் மதுகைடவவதத்தைக்கூறியது 144-146
பூமி மேதினியென்னும் பெயரைப்பெற்றவரலாறு .. 146
45 வராஹாவதாரசரித்திரம் 147-148
யஜ்ஞவராஹர் ஸமுத்ரத்தினின்றும் பூமியைத்தூக்கி நிலை நிறுத்தினது 148
46 நரஹிம்மாவதாரசரித்திரம் 148-153
ஹிரண்யகசிபு தவஞ்செய்தது 148
ஹிரண்யகசிபு பிரம்மதேவரிடம்வரம்பெற்றது .. 149
பிரம்மா, ஹிரண்யகசிபுவை விஷ்ணு வதஞ்செய்வாரென்று தேவர்களுக்குச்சொல்லியது 150

அத்தியாயம்.		பக்கம்.
46	ஹிரண்யகசிபு மூவுலகங்களையும் பீடித்தது	150-151
	பிரம்மாமுதலியதேவர்கள ஹிரண்யகசிபுவின்வதத்திற்காக நாராயணனைப் பிரார்த்தித்தது	152
	நாராயணன் நரஸிம்மரூபந்தரித்து ஹிரண்யகசிபுவிடம்வந்தது	152
	ஹிரண்யகசிபுவின்வதம்	153
47	வாமனவதாரசரித்திரம் ..	153-155
	நாராயணன் வாமனவதாரஞ்செய்தது	154
	வாமனமூர்த்தி மஹாபலியிடம் மூன்றடிநிலம் யாசித்தது ...	154
	விஷ்ணுஉலகனந்தது	154-155
	விஷ்ணு பாதம்வைத்தபிளப்பிலிருந்து நதிஉண்டானது	155
	விஷ்ணுஅஸுரர்களின்செல்வத்தையும் மூவுலகத்தையும் இந்திரனுக்குக்கொடுத்தது	155
48	தத்தாத்ரேயாவதாரசரித்திரம்	156-157
	கார்த்தவீர்யார்ஜுனன் தவஞ்செயத்து வரம்பெற்றது ...	156-157
49	பரசுராமாவதாரசரித்திரம்	158-160
	பரசுராமர் காமதவீர்யனைவதஞ்செய்தது	158
	பரசுராமர்எத்தனைமுறை க்ஷத்ரியர்களை ஸம்ஹரித்தாரென்பது ...	159
	பரசுராமா பித்ருதர்ப்பணஞ்செய்தது	159
	பரசுராமா பூமியைக காச்யபருக்குக்கொடுத்தது .	159
	கன்னிகைகள பரசுராமரை ஸௌபரியோடு எதிர்க்கவேண்டாமென்றது	159
	பரசுராமர் ஆயுதங்களைவிட்டுத் தவஞ்செய்தது	160
50	ராமாவதாரசரித்திரம	160-163
	இருமால்சுகபுத்ரராகஅவதரித்தது . .	160
	ராமபிரான ஸீதையைமணந்தது	161
	ராமபிரான் எத்தனைவருஷம்வனவாஸஞ்செய்தாரென்பது . .	161
	ராமபிரான் ஸீதையைப்பிரிந்தது	161
	ராமபிரான் ஸுக்ரீவனையும் ஆஞ்சனேயரையும்நேசித்தது வாலியைவதஞ்செய்தது	161
	ராவணன்முதலியோவதம	162
	ராமபிரான் விபீஷணருக்குப் பட்டாபிஷேகஞ்செய்வித்தது..	162
	ராமபிரான் ராஜ்யபரிபாலனஞ்செய்தது	162-163
	ராமபிரான் எத்தனைவருஷகாலம் அரசாட்சிசெய்தாரென்பது..	162
	பீஷ்மர் கிருஷ்ணவதாரகதையைச சுருக்கிச்சொன்னது ...	163
	பீஷ்மர், விஷ்ணு கலகியாகஅவதரிக்கப்போகிறரென்றது	163
51	தர்மபுத்ரர், கிருஷ்ணசரித்திரத்தை விரிவாகசசொல்லுமபடி பீஷ்மரைகேட்டது	164
	தாரகாமயயுத்தம்நடந்தது	164-166
	காலநேமியின்வதம்	166
	விஷ்ணு கிருஷ்ணவதாரத்துக்குமுன் எத்தனை வருஷங்கள் யோகநித்திரைசெய்தாரென்பது	166
	பூமிதேவி தேவஸபையில் முறையிட்டது	167
52	விஷ்ணு தேவர்களைப் பூமியிற்பிறக்கக் கட்டளையிட்டது ..	167
	விஷ்ணு யதுகுலத்தில் அவதரித்தது	168
	தேவேந்திரன், கிருஷ்ணன் தேவகாரியங்களைச் செய்யப் போகிறரென்றது	168

அத்தியாயம். பக்கம்.

52 கிருஷ்ணன் சகடாஸுரனைக்கொன்றது 168
கிருஷ்ணன் பூதனையைக்கொன்றது 169
கிருஷ்ணன் மருதமரங்களைவீழ்த்தியது 169
53 கிருஷ்ணன் பாண்டுரமரதத்தினடியில விளையாடினது ... 170
கிருஷ்ணன் காளியநர்த்தனம்செய்தது 171
பலராமர் தேனுகாஸுரனைக்கொன்றது 171
கிருஷ்ணன் கோவர்த்தனபூஜையில் பாயஸான்னம்புஜித்தது.. 171
கிருஷ்ணன் கோவர்த்தனகிரியைதூக்கினது .. 171
இந்திரன் கிருஷ்ணனுக்கு ராஜ்யாபிஷேகஞ்செய்தது ... 171
கிருஷ்ணன், அரிஷ்டன் கேசி சாணூரன் ஸுதாமனென்னும்அரசன் இவர்களைக்கொன்றது 172
பலராமர் முஷ்டிகனைக்கொன்றது 172
54 பலராமகிருஷ்ணர்கள் குருகுலவாஸஞ்செய்தது ... 172
பலராமகிருஷ்ணர்கள் எத்தனைநாட்களில வேதவேதாங்கங்களை அப்யஸித்தனரென்பது 172
பலராமகிருஷ்ணர்கள் விலவித்தைகற்றது 172-173
பலராமகிருஷ்ணர்கள் எத்தனைதினங்களில் வில்வித்தை கற்றாரென்பது 172-173
ஸாந்தீபனி பலராமகிருஷ்ணர்களைக குருதக்ஷிணைகேட்டது .. 178
பலராமகிருஷ்ணர்கள் மீண்மடிவமாயிருந்த அஸுரனைக கொன்றது 173
பலராமகிருஷ்ணர்கள் குருதக்ஷிணைகொடுத்தது ... 173
கிருஷ்ண் ஜராஸந்தனை ஜயித்தது ... 175
55 நரகாஸுரன் உதபத்திமுதலியன 175
இந்திரன் துவாரகைக்கு வந்தது... 176
இந்திரன் அதிதியின்வேண்டுகோளைக் கிருஷ்ணனுக்குத்தெரிவித்தது 176
கிருஷ்ணன், மூரன் நிசும்பன் ஹயக்ரீவன் விரூபாக்ஷன் நரகன் இவர்களைக கொன்றது 177
பூமிதேவி கிருஷ்ணனிடம குண்டலங்களைகொடுத்து நரகனுடைய ஸந்ததிகளைக காப்பாற்றும்படி வேண்டினது ... 177
கிருஷ்ணன், நரகன் குற்றஞசெய்ததஞல கொல்லப்பட்டானென்றது 177-178
56 கிருஷ்ணன் நரகனுடைய அரண்மனையைப் பார்த்தது ... 178
மணிக்குன்றிலிருந்தபெண்கள் தங்களுக்கு நாரதரும் வாயுதேவனும் சொன்னதைக கிருஷ்ணனுக்குத் தெரிவித்தது. 179
மணிக்குன்றிலிருந்தபெண்கள் கிருஷ்ணனைத் தங்களுக்குக கணவராகும்படி பிரார்த்தித்தது 180
கிருஷ்ணன் தனங்களையும் பெண்களையும் மணிக்குன்றையும் கருடன்மேலேற்றித் தேவலோகஞ் சென்றது .. 180-181
கிருஷ்ணன் அதிதிதேவிக்குக் குண்டலங கொடுத்தது ... 181
அதிதிதேவி ஸத்யபாமைக்கு வரமளித்தது 181
57 கிருஷ்ணன் துவாரகையில் பிரவேசித்தது 181-182
துவாரகாநகரசிறப்பு 182-186
58 கிருஷ்ணன் பலராமரோடும் இந்திரனும் தமது அரண்மனையில் பிரவேசித்தது 186

அத்தியாயம். பக்கம்.

58 இந்திரன் கிருஷ்ணசரித்திரத்தைச் சுருக்கிச் சொன்னது ... 187-188
இந்திரன் தேவலோகஞ் சென்றது 188
59 கிருஷ்ணனுடைய தாய்மாரும் மனைவியரும் கிருஷ்ணனைக் கண்டது 188-189
60 பாணாஸுரன் வரலாறு 190
அநிருத்தன் உஷையை அடைந்தது 190
பாணன் அநிருத்தனைச சிறையிலிட்டது 190
நாரதர், அநிருதனை சிறையிலிருப்பதைக் கிருஷ்ணனுக்குத் தெரிவித்தது 190-191
கிருஷ்ணன் பாணனது நகருக்குச் சென்றது 191
சிவன்முதலியோர் பாணன்நகரைக் காத்தது 191
கிருஷ்ணன், சிவன் முதலியோரை ஜயித்தது.. .. 191
கிருஷ்ணனுக்கும் பாணனுக்கும் யுத்தம் 191-192
கிருஷ்ணன் பாணனுடையகைகளை அறுத்தது ... 192
கிருஷ்ணன், அநிருத்தன் உஷை முதலியோரைக் கூடன் மேல் எற்றிவந்தது 192
61 கிருஷ்ணனுடைய வேறு பலஜயங்கள் 192-194
கிருஷ்ணனுக்கு மேலானவர் யாருமிலலை யென்றது ... 195
62 ஸஹதேவன் அரசர்களை நிராகரித்தது கூறியது . . 195
நாரதர் ஸபையில கிருஷ்ணனைப் புகழ்ந்து கூறியது ... 196
ஸஹதேவன் ராஜஸூயத்தை நிறைவேற்றினது 196
சிசுபாலன் யுத்தத்தைப்பற்றி ஆலோசித்தது 196
கிருஷ்ணன் சிசுபாலனது யுத்தஸந்நாஹத்தை அறிந்தது ... 196

சிசுபாலவதபர்வம்.

63 தர்மபுத்தர் அரசர்கள்விஷயத்தில் தாம் நடந்துகொள்ளவேண்டியதைப் பீஷ்மரிடம் விஞவியது 197
பீஷ்மர் தர்மபுத்தருக்கு மறுமொழி கூறியது 197-198
64 சிசுபாலன் பீஷ்மரைநோக்கி அவரையும் கிருஷ்ணனையும் இகழ்ந்து கூறியது 198-203
65 பீமஸேனன் சிசுபாலன் சொன்னதைக்கேட்டுக் கோபித்தது 203
பீஷ்மர் பீமஸேனனை அடக்கியது 203
சிசுபாலன் பீஷ்மரிடம் பீமஸேனனை விடும்படி சொல்லியது 203
66 பீஷ்மர் பீமஸேனனுக்குச சிசுபாலன் வரலாறுகூறியது .. 204-206
67 சிசுபாலன், பாஹ்லீகன்முதலியோரைப் புகழ்ந்து பீஷ்மரையும் கிருஷ்ணனையும் இகழ்ந்தது 206-208
பீஷ்மர் சிசுபாலனை இகழ்ந்தது 208
68 சிசுபாலன் கிருஷ்ணனை யுத்தத்திற்கு அழைத்தது ... 209
சிசுபாலன் யுத்தஸந்நாஹஞ்செய்து தேரேறியது ... 209
கிருஷ்ணன் சிசுபாலனுடையகுறைகளை அரசர்களுக்குச் சொன்னது 210-211
அரசர்கள் சிசுபாலனைவிட்டுநீங்கியது 211
சிசுபாலன் கிருஷ்ணனை 'உன்னுல் எனக்கு ஆவது என்ன' என்றது 211
69 தர்மபுத்தர் நாரதரிடம் அபசகுனத்தைப்பற்றிக் கேட்டது .. 212
நாரதர் தர்மபுத்தருக்குச் சகுனபலன்கூறியது 212-215

அத்தியாயம். பக்கம்.

69 சிசுபாலன் யுத்தத்துக்குவந்தபோது அபசகுனங்கள்உண்டா னது 215
70 சிசுபாலன், கிருஷ்ணனையும் பீஷ்மரையும் பாண்டவர்களையும் கொல்வதாகச்சொல்லியது 215-216
கிருஷ்ணனுக்கும் சிசுபாலனுக்கும் யுத்தம் 216-219
தாருகன் சிசுபாலனைக்கொல்லும்படி கிருஷ்ணனுக்குச்சொல் லியது 218
கிருஷ்ணன் தாருகனைத் தைரியப்படுத்தியது ... 218-219
சிசுபாலவதம் 219
பீமன்முதலியோர் சிசுபாலனுக்குத் தேஹஸம்ஸ்காரஞ்செய்தது 220
தர்மபுத்ரர் சிசுபாலன்புதனுக்குச சேதிராஜ்யாபிஷேகஞ் செ ய்தது 220
71 தர்மபுத்ரர் ராஜஸூயத்தை நிறைவேற்றியது 220-223
72 தர்மபுத்ரர் நித்விக்குக்களைப்பூஜித்து அவபிருதஸ்நானஞ்செய் தது 224
யாகத்துக்குவந்த அரசர்கள் தர்மபுத்ரரைப் புகழ்ந்து விடை கேட்டுச் சென்றது 224-225
பீமன்முதலியோர் அரசர்களை வழியனுப்பியது ... 225
கிருஷ்ணன் தர்மபுத்ரரிடம் விடைபெற்றது 225-226
கிருஷ்ணன் குந்தி முதலியோரிடம் விடைபெற்றுச்சென்றது 226
பாண்டவர்கள் கிருஷ்ணனை வழியனுப்பியது 226
துரியோதனன்முதலியோர் மரியாதைசெய்யப்பெற்று ஸபை யில் வஸித்தது 226

த்யூதபர்வம்.

73 தர்மபுத்ரர் ப்ராஹ்மணர்களுக்கும்ப்ராதாக்களுக்கும்விடைகொடுத்தது 227
வியாஸர் தர்மபுத்ரரிடம் வந்தது 227
தர்மபுத்ரர் வியாஸரிடம் உத்பாதங்களைப்பற்றிக் கேட்டது ... 227
வியாஸர் தர்மபுத்ரருக்கு மறுமொழிசொல்லிச சென்றது ... 227-228
தர்மபுத்ரர் ப்ரதிஜ்ஞைசெய்தது 229
தர்மபுத்ரர் நகரப்ரவேசஞ்செய்தது ... 229
74 துரியோதனன் ஸபையைப்பார்க்கையில் தடுமாறி விழுந்து பொருமையுற்றது 229-231
சகுனி துரியோதனனை இளைப்பின் காரணம் கேட்டது ... 231
துரியோதனன் சகுனிக்கு மறுமொழி கூறியது ... 231-232
75 சகுனி துரியோதனனுக்குப் பொருமை தகாதென்பதையும் அவனுக்கிருக்கும் ஸஹாயங்களையும் கூறியது ... 232-233
துரியோதனனும் சகுனியும் பாண்டவர்களை ஜயிப்பதையும் சூதாட்டத்தையும்பற்றிப் பேசிக்கொண்டது ... 233-234
76 சகுனி திருதராஷ்டிரனுக்குத துரியோதனனது இளைப்பைக் கூறியது 234-235
திருதராஷ்டிரன் துரியோதனனை இளைப்பின் காரணங்கேட் கேட்டது 235-236
துரியோதனன் தன்குறையைத் திருதராஷ்டிரனுக்குச் சொ ன்னது 236;238
சகுனி தான் பாண்டவர்களைச் சூதில் ஜயிப்பதாகச்சொல்லியது 239;258

அத்தியாயம். பக்கம்.

76 திருதராஷ்டிரனும் துரியோதனனும் சூதைப்பற்றிப் பேசிக் கொண்டது 239

திருதராஷ்டிரன் சபைகட்டும்படி சிற்பிகளுக்குக் கட்டளை யிட்டது 239;259

விதுரர் சூதுவேண்டாமென்று திருதராஷ்டிரனுக்குச் சொல்லியது 240;260

திருதராஷ்டிரன் பாண்டவர்களையழைத்துவரும்படி விதுரருக்குச் சொன்னது 240;260

விதுரர் பீஷ்மரிடம்சென்றது 240

77 ஜனமேஜயா சூதுக்குக் காரணமுதலியவற்றை விவரித்துச் சொல்லும்படி கேட்டது 240-241

வைசம்பாயனர் சூதின்காரணமுதலியவற்றை விரித்துக்கூறியது 241-242

திருதராஷ்டிரன் சூதுவேண்டாமென்று துரியோதனனுக்குச் சொல்லியது 241;259

திருதராஷ்டிரன் துரியோதனனைத் துயரத்துக்குக் காரணம் கேட்டது 241-242

துரியோதனன் ராஜஸூயஸபையில் தனகுகேர்ந்தஅவமானங்களைத் திருதராஷ்டிரனுக்குச்சொன்னது ... 242-243

78 துரியோதனன் தர்மபுத்திரருக்குவந்தகாணிக்கைகளைத் திருதராஷ்டிரனுக்குச்சொன்னது 243-252

79 துரியோதனன் தர்மபுத்திரரின் ஸாம்ராஜ்யபட்டாபிஷேகமுதலியவற்றைக் கூறியது 252-254

80 திருதராஷ்டிரன் துரியோதனனுக்குப் பாண்டவர்களைப் பகையாமலிருக்கும்படிசொல்லியது 254-255

81 துரியோதனன் திருதராஷ்டிரனிடம் தன்கருத்தை வற்புறுத்திக்கூறியது 256

82 துரியோதனன் திருதராஷ்டிரனிடம் சூதுக்கு அனுமதிகேட்டது 258

திருதராஷ்டிரன் சூதைப்பிற்றி விதுரரிடம்யோசிப்பதாகச் சொல்லியது 258

துரியோதனன் விதுரருடன்ஆலோசித்தல் தகாதென்று திருதராஷ்டிரனுக்குச்சொன்னது 258-259

துரியோதனன் சூதைப்புகழ்ந்துகூறியது 259

திருதராஷ்டிரன் பெரும்பயம்வந்திருப்பதாகத் துரியோதனனுக்குச்சொன்னது 259

சிற்பிகள் ஸபைசெய்தது 260

83 விதுரர் ஹஸ்தினபுரம்சென்றது... 261

தர்மபுத்திரர் விதுரரைஎதிர்கொண்டு சூசலப்ரச்னஞ்செய்தது. 261

விதுரர் திருதராஷ்டிரன்கட்டளையைத் தர்மபுத்திரருக்குத் தெரிவித்தது 261-262

தர்மபுத்திரர் சூதைப்பற்றி விதுரரின்அபிப்பிராயதைக்கேட்டது 262

விதுரர் தர்மபுத்திரருக்கு முறைமொழிகூறியது... ... 262

தர்மபுத்திரர் தம்மோடுஆடவந்திருக்கும்சூதர்கள் யார் யாரென்றுவினவியது 262

அத்தியாயம். பக்கம்.

83 விதுரர் ஆடவந்திருக்கும்சூதர்களைத் தெரிவித்தது ... 262
தர்மபுத்திரர் தமதுவிரதத்தை விதுரருக்குச்சொன்னது ... 262
தர்மபுத்திரர் ஸஹோதரர்களோடும் திரௌபதியோடும் புறப்பட்டு ஹஸ்தினபுரம்வந்தது 262-264
தர்மபுத்திரர் நகருக்குவெளியில்தங்கியது 264
விதுரர் திருதராஷ்டிரன்எண்ணத்தைத் தர்மபுத்திரருக்குச் சொன்னது 264
தர்மபுத்திரர் ஹஸ்தினபுரத்தில்பிரவேசித்தது 264
தர்மபுத்திரர், திருதராஷ்டிரன் காந்தாரிமுதலியோரை ஸந்தித்தது 264 265
பாண்டவர்கள் தங்களுக்குஏற்பட்டவிடுதிகளில் தங்கியது .. 265
பாண்டவர்கள் மாலைக்கடன்களைமுடித்து உண்டுதியின்றது . 265
பாண்டவர்கள் காலையிலஎழுந்து ஸபாப்ரவேசம்செய்தது ... 265
84. சகுனிக்கும் தர்மபுத்திரருக்கும் ஸம்வாதம 266-267
துரியோதனன் தான் பதயம்வைப்பதாகச்சொல்லியது ... 267
85 பீஷ்மர்துரோணர்முதலியோரும் மற்றஅரசர்களும் ஸபையில் வந்து உட்கார்ந்தது 267-268
தர்மபுத்திரரும் சகுனியும் ஆடியசூதில் தர்மபுத்திரா பொருள்களைத்தோற்றது 268-271
86 விதுரர் சூதாட்டத்தைநிறுத்தச்செய்யுமபடி திருதராஷ்டிரனுக்குச்சொன்னது 271-273
87 துரியோதனன் விதுரரைநிந்தித்தச்சொல்லியது .. 274-275
விதுரீர் துரியோதனனுக்கு ஹிதமுரைத்தது 275-276
88 தர்மபுத்திரர் சூதில்பொருள்களையும் ஸஹோதரர்களையும் தம்மையும்தோற்றது 276-279
தர்மபுத்திரர் சூதில் திரௌபதியைப் பதயம்வைத்தது ... 279
பீஷ்மர்முதலியஸபையோர்கள் துயரமடைந்தது ... 279-280
திருதராஷ்டிரன் ஜயத்தைப்பற்றி அடிக்கடிகேட்டது ... 280
கர்ணன் துரியோதனன்முதலியோர்மகிழ்ந்தது ... 280
சகுனி திரௌபதியைஜயித்ததுவிட்டதாகச் சொல்லியது ... 280
89 துரியோதனன் திரௌபதியையழைத்துவரும்படி விதுரருக்குச்சொன்னது 280
விதுரர் துரியோதனனைக் கோபித்துச்சொன்னது ... 280-282
துரியோதனன் திரௌபதியையழைத்துவரும்படி பிராதிகாமிகருக்கட்டளையிட்டது 282
பிராதிகாமி திரௌபதியையழைத்தது 282
திரௌபதி பிராதிகாமியைக்கேட்டது 282
பிராதிகாமி, பதயம்வைக்கப்பட்ட விவரத்தைத் திரௌபதிக்குச்சொன்னது 282
திரௌபதி தன்னைப் பதயமாகவைத்துத் தோற்றவிவரத்தைப்பற்றித் தர்மபுத்திரரைக்கேட்கும்படி பிராதிகாமிக்குச்சொல்லியது 282
பிராதிகாமி திரௌபதியின்கேள்வியைத் தாமபுத்திரருக்குத் தெரிவித்தது 283
துரியோதனன், 'பாஞ்சாலியைக்குவந்துகேட்கட்டும்' என்றது 283

அத்தியாயம். பக்கம்.

89 பிரதிகாமி துரியோதனன்எண்ணதைத் திரௌபதிக்குத் தெரிவித்தது 283
திரௌபதி தன்கேள்வியை ஸபையோரிடம்கேட்கும்படி பிராதிகாமிக்குச்சொல்லியது 283
பிராதிகாமி திரௌபதியின்கேள்வியை ஸபையோருக்குத் தெரிவித்தது 283
ஸபையோர் மறுமொழிசொல்லாமல் மௌனமாயிருந்தது ... 283
தர்மபுத்திரர் திரௌபதிக்குத் தூதனுப்பினது .. 283-284
துரியோதனன் மறுபடியும்பிராதிகாமிக்குக கட்டளையிட்டது. 284
பிராதிகாமி ஸபையோரைத் திரும்பவும்கேட்டது ... 284
துரியோதனன் திரௌபதியைபிடித்துவரும்படி துச்சாஸனனுக்குகட்டளையிட்டது 284
துச்சாஸனன் திரௌபதியைஅழைத்துச் சொல்லியது ... 284
துசசாஸனன் திரௌபதியைக் கூந்தலைப்பிடித்திழுத்ததுவந்தது 284-285
திரௌபதி துச்சாஸனனைக கோபித்ததுசசொல்லியது ... 285
துச்சாஸனன திரௌபதியைப் பரிஹஸித்து ஜீகழ்ந்து சொலலியது 285
துச்சாஸனன் இரைந்துகிரித்த திரௌபதியைத் தாவியென்றழைத்தது 286
கர்ணனும சகுனியும துச்சாஸனனைப் புகழ்ந்தது ... 286
பீஷ்மா திரௌபதிக்குச சொல்லியது 286
திரௌபதி ஸபையோரைக கேட்டது 287
துச்சாஸனன் திரௌபதியைத தூஷித்தது 287
90 பீமஸேனன் திரௌபதியைப் பதமம்வைத்தது தகாதென்றது 287-288
அர்ஜுனன் பீமஸேனனே ஸமாதானஞ் செய்தது .. 288
விகர்ணன் ஸபையோரைத் திரௌபதிக்கு மறுமொழி சொலலுமபடி சொல்லித் தன்கருததையும் கூறியது ... 288-289
அரசருக்கு வ்யஸனங்க ளைவையென்பது 289
கர்ணன் விகர்ணனைக கோபித்ததுச சொல்லியது ... 289-290
துசசாஸனன் திரௌபதியின் வஸதிரத்தை இழுத்தது ... 290
திரௌபதி கிருஷ்ணனைத் துதித்தது 290-291
கிருஷ்ணனருளால் திரௌபதிக்கு அநேகவஸதிரங்கள் உணடானது 291
துசசாஸனன் களைத்து உட்கார்ந்தது 291
பீமஸேனன் சபதஞ்செய்தது 291-292
விதுரர், கேள்விக்கு மறுமொழிசொல்வது அவசியமென்றது.. 292-294
தெரிந்தும் மறுமொழிசொலலாதவனுக்கும தப்பாக மறுமொழி சொல்லுகிறவனுக்கும்வரும்பலன்கள் யாவையென்பது 292
விரோசனனும் ஸுதன்வாவும் தம்மில் யார்பெரியவரினென்று பிரஹ்லாதனைக் கேட்டது 292-293
பிரஹ்லாதன் கசயபரிடம் ஸதேஹமிங்கேட்டது ... 293
கசியபர பிரஹ்லாதனுக்கு மறுமொழிகூறியது ... 293-294
கேள்விக்கு மறுமொழி சொல்லாதவன், கண்டதை உள்ளபடி சொல்லாதவன்,தப்பாக மறுமொழி சொல்லுகிறவன்,பொய்

அத்தியாயம்.		பக்கம்.
	சொல்லுகிறவன், உண்மைசொல்லுகிறவன் இவர்களுக்கு வரும் பாவபுண்ணியங்கள்	293-294
	எப்படிப்பட்டவன் ஸாகூியாவா னென்பது	294
	பிரஹ்லாதன், 'ஸுதன்வா பெரியவன்' என்றது ..	294
	ஸுதன்வா விரோசனரை கூமித்து விட்டது... ...	294
	திச்சாஸனன் திரௌபதியை இழுத்தது	294;300
91	திரௌபதி ஸபையில் புலம்பியது	294-295
	பீஷ்மர் திரௌபதிக்கு யுதிஷ்டிரரே மறுமொழி கூறவேண்டு மென்றது	295-296
92	துரியோதனன் திரௌபதிக்குப் பாண்டவர்களே மறுமொழி சொல்லட்டுமென்றது	297
	பீமஸேனன் ஸபையில கோபித்துச் சொல்லியது ..	297-298
	பீஷ்மர்முதலியோர் பீமனை அடக்கினது	298
	கர்ணன், வேறுகணவனை அடையும்படி திரௌபதிகருச் சொல்லியது	298
	துரியோதனன் திரௌபதிகரு இடத்துடையைக்காண்பித்தது	299
	பீமஸேனன் துரியோத்னனது துடையைப் பிளப்பதாகப் பிரதிஜ்ஞைசெய்தது	299
	விதுரர் கௌரவர்களுக்கு அழிவுவந்தென்றது ...	299-300
	அர்ஜுனன் தர்மபுத்ரரின்ஸ்வதந்திரத்தைப்பற்றிச்சொல்லியது	300
	கர்ணன் திரௌபதியை இஷ்டம்போல அனுபவிக்கும்படி துரியோதனனுக்குச் சொல்லியது	300
	சகுனி கர்ணனைப் புகழ்ந்தது	300
	திரௌபதி கதறியது	300-301
	விதுரர் தம்சொல்லைத் துரியோதனன் கேட்பனே கேளானே என்றது	301
	விதுரர் துரியோதனனியரைத் தடுக்கும்படி திருதராஷ்டிரனுக்குச் சொல்லியது	301
	பீமஸேனன்முதலியோர் துரியோதனனியரைக் கொல்வதாகச் சபதஞ்செய்தது	301-303; 326-327
	திரௌபதி துரியோதனனியரைச் சபித்தது	303
	திரௌபதி சபித்தபோது பூமாரிபொழிந்தது... ...	303
93	அர்ஜுனன் யுத்தஸங்காஹரஞ் செய்ததும், தர்மபுத்ரர் அடக்கியதும்	303-304
	திருதராஷ்டிரனது அக்னிஹோத்ரசாலையில் அபசகுனங்கள் உண்டானதைச் சொன்னது	305
	திருதராஷ்டிரன் திரௌபதிக்கு வரம்கொடுத்தது ...	305-306
	யார்யார் எத்தனைஎத்தனைவரம் பெறத்தக்கவரென்பது ...	306
94	கர்ணன் திரௌபதியால் பாண்டவர்கள் மீட்கப்பட்டார்களென்றது	306
	எப்படியிருப்பவன் மனிதனென்பது	306
	மேலோர்களின் குணம்	307
95	திருதராஷ்டிரன் தர்மபுத்ரருக்கு இந்திரப்பிரஸ்தம்சென்று அரசாள விடைகொடுத்தது ...	308-309

அத்தியாயம். பக்கம்.

அனுத்யூதபர்வம்.

96 துரியோதனன் பாண்டவர்களை ஸ்வேச்சையாக விடக்கூடா தென்றது 310-311
துரியோதனன், திருதராஷ்டிரனுக்குக்கார்த்தவீர்யார்ஜுனன் பரசுராமர் இவர்களுடையசரித்திரதத்தைச் சொல்லியது ... 311-314
97 துரியோதனன், அர்ஜுனன்பராக்ரமங்களையும் அவனிடம் தன கஷ்டத்தையும் திருதராஷ்டிரனுக்குச் சொல்லியது 314-319
துரியோதனன் மறுபடியும் சூதாடத திருதராஷ்டிரனிடம் அனுமதிகேட்டது 319-320
திருதராஷ்டிரன் மறுமுறை சூதுக்கு அனுமதிகொடுத்தது... 320
காந்தாரி மறுமுறை சூதுக்கு அனுமதி கொடாதிருக்கும்படி திருதராஷ்டிரனுக்குச சொல்லியது 320-321
98 பிராதிகாமீ தாமபுத்ரரை அழைத்ததும் பாண்டவர்கள் திரும்பிவந்ததும் 321-322
சகுனி சூதுக்குப் பந்தயத்தைச் சொன்னது 322
தர்மபுத்ரர் மறுமுறை சூதாடித் தோற்றது 323
99 துச்சாஸனன் பாண்டவர்களையும் திரௌபதியையும் இகழ்ந்து கூறியது 324-325
துச்சாஸனனும் துரியோதனனும் பீமனை அவமதித்ததும், அவன் அவர்களுக்கு மறுமொழிகூறியதும் ... 325-326
100 தர்மபுத்ரர் பீஷ்மர்முதலியோரிடம் வனஞ்செல்ல விடை கேட்டது 327-328
விதுரர், குந்தி தமது கிருஹத்திலிருக்கட்டு மென்றது ... 328
விதுரர், தர்மபுத்ரருக்குப் புத்திகூறி விடைகொடுத்தது ... 328-329
101 நகரத்துஜனங்கள் பிரலாபித்து, 'பாண்டவர்களோடு வனஞ் செல்வோம்' என்றது 330-331
குந்தி திரௌபதியிடமும் பாண்டவர்களிடமும் பலவாறு புலம்பித திரும்பியது 332-334
பாண்டவர்கள் வனஞ்சென்றது 334
102 விதுரர், பாண்டவர்கள் வனஞ்செல்லும்போது செய்துசென்ற சூகிகளையும் அவற்றின் கருத்தையும் ஜனங்கள் தங்கித்ததையும் அபசகுனங்க ளுண்டானதையும் திருதராஷ்டிரனுக்குக் கூறியது 335-337
நாரதர், கௌரவர் அழிவாமென்றது 337
துரோணர், யுத்தத்தில் கௌரவர்களும் தாமும் அழிவதுநிச்சயமென்றது 337-338
103 ஸஞ்ஜயன் துரியோதனன்முதலியோர் அக்ரமஞ்செய்ததென்று திருதராஷ்டிரனுக்குச் சொன்னது ... 339-340
திருதராஷ்டிரன், திரௌபதி அவமதிக்கப்பட்டபோது உண்டான அபசகுனங்களையும், விதுரர்சொல்லத் தான்கேளாமற்போனதையும் ஸஞ்சயனுக்குச் சொல்லியது. ... 340-341

ஸபாபர்வம் விஷயஸூசிகை முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீ கணேசாயவாஸுதேவாயநமஃ.

ஸ்ரீ கிருஷ்ணாயவாஸுதேவாயநமஃ.

ஸ்ரீ மஹாபாரதம்.

ஸபாபர்வம்.

முதலாவது அத்தியாயம்.

மந்த்ரபர்வம்.

[1] நாராயணம் நமஸ்க்ருத்ய நரம்சைவ நரோத்தமம்।
தேவீஸரஸ்வதீம் வ்யாஸம் ததோ ஜயமுதீரயேத்॥

(அர்ஜுனனுக்குப பிரதியுபகாரத்தைச் செயயக்கருதின மயனைப்பார்த்து, தர்மராஜாவுக்கு ஒருஸபைசெயயும்படி கிருஷ்ண பகவான் கட்டளையிட்டது.)

ஜனமேஜயர், "பிராமணோத்தமரே! ஜயிபபவரிற்சிறந்தவனும் மஹாபராக்கிரமசாலியுமாகிய அர்ஜுனன் அபபோது மயனைவிடுவித்தபிறகு என்னசெய்தானென்பதை எனக்குச்சொல்லும்" என்று கேட்க, வைசம்பாயனர் சொல்லுகிறார்.

"ராஜாவே! உமது கூட்ஸ்தருடையசரித்திரத்தை ஊக்கத்துடன் கேளும். அரசாக்கரசே! ஆயுதகரிபபவர்களிற்சிறந்த மஹாவீரனான அந்த அர்ஜுனன் மயனைவிடுவித்து, பூமியில் அரசர்கள்பெறுதற்கரிய காண்டவமென்னுஞ்சிறந்தவில்லையும் அமபுகள்வறாத இரண்டுதூணி களையும் திவயாஸ்திரங்களையுமபுடன் தேரையும கொடியையும் வெளளைக் குதிரைகளையும அக்னிபகவானிடமிருந்துபெற்றதனால் மிகுந்தஸலங் தோஷமுள்ளவனாகி மயனுடன்கூட அங்கேயிருந்தான். அப்போது அர்ஜுனனுற்காப்பாற்றப்பட்டமயன், அவன்செய்தநன்றியைநினைத்து அவனைப் பலமுறைமரியாதைசெய்து கண்ணபிரான்முன்னிலையில் கைகளைக்குவித்துக்கொண்டு இன்சொல்லால் பேசத்தொடங்

[1] உன்னிவிசேஷத்தை ஆதிபர்வம் 1 - வது பக்கம் குறிப்பிற்காண்க.

ஜனன்: "குந்தியின்மைந்தனே! சிறினகண்ணனிடத்திலிருந்தும் எரிக்கத்தொடங்கின அக்னிபகவானிடத்திலிருந்தும் உன்னால் நான் காக்கப்பட்டேன். உனக்கு என்னசெய்யக்கடவேன்? பகைவரைத் துயரப்படுத்துகிறவனே! யான் அஸுரர்களுக்குவிசுவகர்மாவன்றே? அதனால், நான் மற்றவர்செய்யக்கூடாததும், நீ வியக்கத்தக்கதுமாகிய ஒன்றை உனக்குச் செய்வேன்" என்றான். அவனால் இவ்வாறுரைக்கப்பட்ட மஹாவீரனும் அர்ஜுனன் சற்றுநேரமிருந்து [1]மாயைகள் தெரிந்தவனுகிய மயனைப்பார்த்து கைதுக்கொண்டு, "ஓ! அஸுரசிரேஷ்டனே! நீ எனக்குஎல்லாம்செய்ததுபோலவே (நிணக்கிறேன்.) நீ ஸுகமாகச்செல். என்மேல் என்றும் அன்புடையவனுயிரு. நாங்களும் உன்மேல் அன்புடையவராயிருப்போம். உதவிபெற்றவனிடத்தில் பிரியோஜனத்தைஅங்கீகரியேனென்பது எனதுவ்ரதம்" என்று சொன்னான். அதைக்கேட்டமயன், "புருஷச்ரேஷ்டனும்பிரபுவுமான அர்ஜுனனே! நீசொல்வது உனக்குத்தகும். ஆனால் உன்னிடம் அன்பைமுன்னிட்டு நான் உனக்கு ஒன்றுசெய்யக்கருதுகிறேன். பாண்டவனே! யான் அஸுரர்களின்விசுவகர்மாவானே[2] மஹாகவியன்றே. அப்படிப்பட்டநான் உனக்காக ஏதாவதுஒன்றைச செய்யவிரும்புகிறேன். அர்ஜுனனே! முன்னம் அஸுரர்களுக்கு அரண்மனைகளும், அழகியவையும் ஸுகமான உட்புறங்களுடையவையும் ராஜபோகங்களுக்குரிய அளவற்றபொருள்கள்நிரம்பினவையுமான தோட்டங்களும், மனத்தைக்கவருகின்ற பலவகைத்தடாகங்களும், விசித்திரங்களான ஆடைகளும், நினைத்தபடிசெல்லும ரதங்களும, சிறந்தகோபுரங்களோடும் பிராகாரங்களோடுங்கூடிய பெரியநகர்களும், அற்புதங்களான அனேகம் சிறந்தவாஹனங்களும ஸுகிப்பதற்கு மிகத்தகுதியான அழகியகுகைகளும் என்னுறசெய்யப்பட்டன. பல்குனனே! அதனால் உனக்கும் ஏதாவதுஒன்றுசெய்ய விரும்புகிறேன்" என்று கேட்க, அர்ஜுனன், "நீ உயிருக்குநேராத அபாயத்திலிருந்து என்னால்விடுபட்டவனை நினைத்துக்கொண்டிருக்கிறாய். இவ்வாறிருக்கையில், உன்னைக்கொண்டு ஒன்றைச்செய்வித்துக்கொள்ள என்னால்இயலாது. அஸுரனே! உனதுஎண்ணம பயன்படாமற்போவதும் எனக்குஇஷ்டமில்லை. ஆதலால், நீ கிருஷ்ணனுக்கு ஏதாவதுசெய்யலாம். அதனால், எனக்குப் பிரியுபகாரம் செய்ததாகும்" என்றுசொன்னான். புருஷச்ரேஷ்டரான ஜனமேஜயரே! பிறகு மயனுக்காக (அர்ஜுனன்

---

1 மாயை - அற்புதக்களைக்காட்டும்வித்தை.

2 விசித்திரங்களான கல்பனைகள் செய்யத்தக்கவன்.

னால்) கேட்டுக்கொள்ளப்பட்ட கண்ணபிரான், 'இவனுக்கு என்னகட்டளையிடலாம்' என்று சிறிதுநேரம் சிந்தித்தார். உலகநாதரும் பிரஜைகளைக்காப்பவருமாகிய கிருஷ்ணன், 'இவனை ஒருஸபையைசெய்யச்சொல்லலாம்' என்று தம்மனத்தில் நிச்சயித்துக்கொண்டு, அந்தமயனைப்பார்த்து, "சிற்பிகளிற்சிறந்தவனே! நீ நமதிருபத்தைச்செய்ய எண்ணமுள்ளவனாலை, இவ்வுலகத்தில் எவ்வகையானஸபை தர்மராஜாவுக்குப் பிரியமாயிருக்குமென்று நினைக்கிறாயோ, மானிடலோகமத்தியிலுமுள்ள மனிதர்கள் உன்னுடையசாதுர்யவேலையைக்கண்டு அதைப்போலச் செய்யமாட்டாமல் ஒய்ந்துநிற்பார்களோ, எதில் தேவர்களும அஸுரர்களும் மனிதர்களும் எண்ணுமனிஷயங்கள் உன்னாற்செய்யப்படட்டதை யாம்காண்போமோ, அவ்வகையானஸபையைச் செய்வாயாக" என்றுகட்டளையிட்டார். அப்போது மயன் மனமகிழ்ச்சியுடன அவாசொல்லை ஏற்றுக்கொண்டு தேவஸபைக்குஒப்பான அழகியஸபையைத் தர்மராஜாவுக்குச செய்யதொடங்கினான். பிறகு கிருஷ்ணனும அர்ஜுனனும தர்மராஜாவானயுதிஷ்டிரருக்கு நடந்தவற்றையெல்லாம தெரிவித்தது மயனைக்காணபிதனர். அப்போது யுதிஷ்டிரர் அந்தமயனுக்குத் தகசபடி மரியாதைசெய்தார். ஜனமேஜயரே! அசுரமயன் அந்தமரியாதையைகொண்டாடிப் பெற்றுக்கொண்டான். ஜனமேஜயராஜாவே! அந்தமயன் அப்போது அந்தபபாண்டவர்களிடத்தில [1]விருஷபர்வாவென்னும அஸுரனுடைய சரிதத்திரதைச் சொன்னான். அந்த அஸுரவிசுவகர்மாவானமயன் கொஞ்சகாலம ஒய்ந்திருந்து மனததிலஆலோசனைசெய்து மஹாதமாக்களான பாண்டவர்களுக்குச் சபைஒனறு செய்யத்தொடங்கினான். சிறந்தஸாமர்த்தியமுள்ளமயன், மஹாதமாவானகிருஷ்ணன், பாண்டவர்கள் இவர்களுடையஅனுமதியின்மேல ஒருசுபதினத்தில் ஆரம்பத்திற்குரிய மங்களங்களோசெய்து ஆயிரக்கணக்கான பிராமணசிரேஷ்டாகளுக்குப பாயஸான்னமஅளித்து ஸந்தர்பபணைசெய்து அவர்களுக்கே மிக்கபொருள்களீந்தும தானஞ்செய்து எல்லா ருதுக்களின்சிறப்புக்களுமநிரம்பினதும் பதினாயிரமுழமவிசாலமுள்ளதும் தேவஸபையைபபோன்றதுமான அழகானஸபையைச்செய்வதறகாகச் சுற்றிலும்அளவெடித்தான்.

ஆதிபர்வம் 262 - ம் பக்கம் பார்க்க:

ஸ்ரீ மஹாபாரதம்.

இரண்டாவது அத்தியாயம்.

மந்த்ரபர்வம். (தொடர்ச்சி.)

(கண்ணன் துவாரகைக்குச் செல்வதும், பாண்டவர்கள் வழிகொண்டு விடுதலும்.)

பூஜைக்குரியவரானகண்ணபிரான் காண்டவபிரஸ்தத்தில் அன்புள்ளபாண்டவரால்பூஜிக்கப்பெற்று ஸுகமாக வஸித்திருந்தபிறகு தமதுதந்தையைப்பார்க்கஆவலுள்ளவராய்த் தமதுநகரமெலவதற்கு எண்ணங்கொண்டார். உலகமெல்லாமவருதனஞ்செய்வதற்குரியவரும் விசாலமானகண்களையுடையவருமான கண்ணபிரான் தாமபுதிரரிடத்திலும் சுந்தியினிடத்திலும் விடைபெறுக்கொண்டு தம்தந்தையின் உடன்பிறந்தவள்ளான குந்தியின்பாதங்களைத் தலையால்வணங்கினர். மிக்கபுகழ்பெற்ற அந்தக்கிருஷ்ணபகவான் குந்தியினல்தழுவிக்கொண்டு உச்சியில்மோக்கப்பெற்றபிறகு தம்ஸோதரிகளைப்பார்த்தார். அவளருகிற்சென்று அன்பினல்கண்ணீர்விடடகிருஷ்ணபகவான் அழகியும் அழகாகப்பேசுகிறவளுமான அந்தஸுபத்ரைக்குச் சிறந்தபயனைத்தருவதும், உண்மையும், நன்மையும், இனிமையும், நியாயமும், மிகச்சிறந்ததுமான வாகியதைக்கூறினர். அவள தன்உறவினர்களுக்குச்செலுத்தும்படி சிலவசனங்களையுரைத்துபலமுறைதலையால் வணங்கி வந்தனஞ்செய்து கிருஷ்ணனைப்பூஜித்தாள். அவளாலபூஜிக்கப்பெற்றகிருஷ்ணன், அந்தப்பெண்ணரசிக்கு ஆசீர்வாதஞ்செய்து அவளிடம் விடைபெற்றுக்கொண்டு திரௌபதியையும் தௌமயமுனிவரையும்கண்டனர். புருஷோத்தமரானகண்ணபிரான்தௌம்யருக்கு முறைப்படிவந்தனஞ்செய்தார். விதவானும் பலசாலியுமான கிருஷ்ணபகவான் திரௌபதிக்கு இனியவார்த்தைசொல்லி, ஸுபத்ரையை அவளிடமஒப்பித்து ஆஜ்ஞனுடன்கூட அவனுடையஸோதரர்களிடம்சென்றார். அவ்வசுதஸோதரர்களாலுமசூழப்பட்டு, அமரர்களாற்சூழப்பட்ட தேவேந்திரன்போலிருப்பவரும் கருடக்கொடியையுடையவருமானகண்ணன் யாத்திரைக்காலத்திற்குரிய சடங்குகளைச் செய்யக்கருதி, ரோடி நிர்மலராய் அலங்காரங்கள்செய்துகொண்டு தேவர்களையும பிராமணர்களையும க்மல்காரஞ்செய்து பல வகைப்புஷ்பசந்தனங்களினல் பூஜித்தார். நிலைதவறுதலிறந்தவரானகிருஷ்ணபகவான் யாத்ராகாரியங்களெல்லாவற்றையும்செய்துமுடித்து புறப்பட்டார். அந்தக்கிருஷ்ணன் வெளிக்கட்டைவிட்டுப்புறப்பட்டு

வருது யோக்கியர்களானபிராமணர்களால ஸ்வஸ்திவாசனம்செய்வித்
துத் தயிர்பப்பாத்திரங்களையும கனிகளையும அக்ஷதைகளையும தக்ஷிணை
யையுமகொடுத்தபிறகு அவர்களைபபிரதக்ஷிணமசெய்தார். அதன்
பின் தாமரைக்கண்ணராகியகண்ணன் நல்லதிதியும் நல்லநக்ஷத்திர
முங்கூடிய சிறந்தலக்கினத்தில ஸ்ரேஷ்டமும, ஸௌக்யமான என்னும குதி
ரைகள்பூட்டபபட்டதும, கதை, சக்கரம, கத்தி, சார்ங்கமமுதலிய
ஆயுதங்களநிரம்பியதும, கருடக்கொடியுளளதும், விசைவாகசசெல
வதுமாகிய பொன்மயமான அதிகி பதேரிலேறிப புறப்பட்டார். ராஜா
வாகியயுதிஷ்டிரர் ஸாரதிகளிற்சிறந்தவனுகிய தாருகனென்னும்கிரு
ஷ்ணஸாரதியை விலக்கிய பிறேமயிலை தாமும்கிருஷ்ணனுடன்
தேரிலேறினர். அபபோது யுதிஷ்டிரா தாமேகடிவாளம்பிடித்தார்.
பருதததகைகளைபுடையஅர்ஜுனனும கூடவறிப பொற்காமபோடு
கூடிய வெண்சாமரதததப பிரதக்ஷிணமாகசசுழறறினன். அவ்வாறே
வீரனனபீமஸேனனும் அநததேரிலேறி நாறுகமபீகளுஞ்ளதும
உயாநதபுஷ்பமாலைகளாலும பொறகாசுகளினுலுமலங்கரிக்கப்பட்ட
னும் வைடூரியக்காமபுளளதுமான சிறநதகுடையை விசைவாகக் கிரு
ஷ்ணனுக்குபபிடித்தான். சத்துருக்களை ஸமஹரிபபவாகளாகிய பீமா
ர்ஜுனாகளும் நகுலஸஹதேவாகளும, புரோஹிதர்களாலும நகரத்
தோராலும சூழபபட்டவாகளாகக் கிருஷ்ணனைப பினசென்றனர்.
சதத்துருக்களான வீரர்களைக்கொலபவராகிய அநதக்கேசவர் அவ்
வைநதுலஸஹாதரர்களாலும அநுலஸரிக்கபபடடு அன்புள்ளமாணக்
கர்களினலுதொடரபபட்ட ஆசாரி பன்போலவிளங்கினர். பிராமணச்
சிரேஷ்டராகிய தௌமயமுனிவரும பெரியோர்களாறசூழப்பட்டவ
ராய் ஸுபத்தரையின்புததிரனுடனுபயுவை ரதததிலேறறிக்கொ
ண்டு புறபபட்டார். சிறநதமஹிமையுள்ள ஸ்ரீகிருஷ்ணன் இந்திரப்
பிரஸ்தத்தைக்கடநது ஒருகுரோசதூரதததில அர்ஜுனனை நெருங்கத்
தழுவி விடைபெறறுகொண்டு தருமராஜாவுக்கும பீமஸேனனுக்கும
நகுலஸஹதேவர்களுக்கும மரியாதைசெய்து அவர்களால்திடமாக
ஆலிங்கனஞசெய்யபபட்டார்; நகுலஸஹதேவர்களால்அபிவாதனமும
செய்யப்பெறறார். ஜனமேஜயரே! எதிரிகளின் நகரங்களைஜயிப்பவ
ரும் தர்மநிதரிநதவருமாகிய கிருஷ்ணபகவான் அரையோசனைதூரம
சென்றபிறகு யுதிஷ்டிரரிடம்விடைபெற்று 'நீர் திரும்பலாம' என்று
சொல்லி அவருக்குஅபிவாதனதது தரிடு பாதங்களைத்தொட்டு வந்த
னஞ்செய்தார். தர்மராஜாவானயுதிஷ்டிரர் யாதவச்சிரேஷ்டரும் தாம
ரைக்கண்ணருமான கண்ணனைத் தூக்கியெடுத்து உச்சிமோந்து

'செல்லலாம்' என்று அனுமதிகொடுத்தபிறகு (ஸமயதத்தில்உதவிசெய்வதாக) கிருஷ்ணனும் பாண்டவர்களுக்குமுறைப்படி வாக்குத்தத்தஞ்செய்து பரிவாரங்களுடன்தொடர்ந்துவரும்பாண்டவர்களைப பிரயத்தனத்தினல்திரும்பச்செய்து பிறகு இந்திரன்அமராவதிக்குச்செல்வதுபோல்த தமபட்டணத்திறகு மகிழ்சியுடன்சென்றார். அப்போது அந்தபபாண்டவர்கள் அன்பின்மிகுதியினுல அந்தக்கிருஷ்ணனைக் கண்ணுக்கெட்டுகிறவரையில கண்களாலும் அதன்பின் மனங்களாலுமதொடர்ந்தனர். அவர்களுக்குக கிருஷ்ணனைக்காண்பதில ஆசைதீராமலிருக்கையிலேயே கண்ணிறைந்தகாட்சியுடையகண்ணபிரான் விரைவில் கண்களுக்குமறைந்தார். அந்தபபுருஷச்ரேஷ்டரான பாண்டவாகள் திரும்பமனமில்லாதவர்களாகவே கிருஷ்ணனிடம் மனஞ்சென்றவர்களாகி விருபபமிலலாமல் விரைவாகத திரும்பித தங்கள்நகரமசேர்ந்தனர். பிறகு கிருஷ்ணனும தேரைசசெலுத்தி விரைவாகத் துவாரகைக்குச்சென்றார். எபபோதும தமபின்னேவருபவனும் யாதவவீரனுமான ஸாத்யகியோடிம தாருகனென்னுமஸாரதியோடுங்கூட விஷ்ணுவாகியகிருஷ்ணன் கருடனபபோல வேகமாகத் துவாரகைக்குசசென்றார். தர்மபுதிரரும தாமருதன்றுதவர்களான ஸஹாதரர்களோடுமம ஸ்நேஹிதர்களோடுங்கூடத திரும்பித் தமது சிறந்தநகரத்தில் பிரவேசித்ததார். ஜனமேஜயராஜாவே! புருஷசரேஷ்டரான தாமராஜா, ஸஹாதரர்கள புத்திராகள் மிதரர்கள் எலலாரையும் அனுபபிவிட்டுத திரௌபதியுடன்சோகதுமகிழ்நதிருநதார். அவ்வாறே கிருஷ்ணனும்உக்ரஸேனன்முதலிய யாதவச்சிரேஷ்டர்களால் கொண்டாடபபட்டவராக ஸுதோஷத்துடன் தம்முடைய சிரேஷ்டமானதுவாரகாபுரத்தில் பிரவேசித்ததார். தாமரைக்கண்ணராகிய கிருஷ்ணன் ஆகுகூனியும முதிர்ந்தவரான தமதுதநதையையும் புகழ் பெற்றதாயையும பலராமரையும நமஸ்கரித்துகின்றார். அந்தஜனர்த்தனர் பிரத்யும்னனியும ஸாமபனியும் நிசடனியும் சாருதேஷ்ணனியும் கதனியும் அநிருத்தனியும பானுவ்வியும தழுவிக்கொண்டபிறகு பெரியோர்களிடம்விடைபெற்றுக்கொண்டு ருக்மிணியின்கிருகத்துக்குச்சென்றார். எப்போதும் ஸுகியான அந்தக்கிருஷ்ணன் அந்தச் சிறந்தகிருகத்தில் ஸுகமாக மகிழ்ந்திருநதார். ஜனமேஜயராஜாவே! அந்தஸமயத்தில் அஸுரசிரேஷ்டனைமயனும் சிற்பசாஸ்திரப்பிரகாரம் தர்மபுத்ரருக்கு ஸபாநிர்மாணஞ்செய்தான்.

மூன்றுவது அத்தியாயம்.

மந்த்ரபர்வம். (தொடர்ச்சி)

ஸபை செய்தவரலாறு.

(மயன் பிந்துஸரஸுக்குச்சென்று ஸபைக்குரியகருவிகளையும் பீமனுக்குக் கதாயுதத்தையும் அர்ஜுனனுக்குச்சங்கத்தையும் கொண்டுவந்துகொடுத்ததும், ஸபாநிர்மாணமும்.)

பிறகு மயன் ஜயிப்பவர்களிற்சிறந்தவனான அர்ஜுனனைப்பார்த்து, "நான் உன்னிடத்தில் விடைபெற்றுக்கொள்ளுகிறேன்; சென்று திரும்பவும் வருவேன். தனஞ்சயனே! மூவுலகங்களிலும்பெயர் பெற்றதும் மனிதர்களுக்குஆச்சரியமதையுண்டுபண்ணுவதும் உனக்கும் பாண்டவர்களனைவர்க்கும ஸந்தோஷத்தைவிருத்திசெய்வதுமாகிய ஒருதிவ்யஸபையைச் செய்யப்போகிறேன். பாரதனே! முன்னம கைலாஸத்திற்குவடபுறத்தில் மைநாகபர்வதத்தைச்சேர்ந்த பிந்துஸரஸினருகில் அஸுராக்களுக்காகச்செய்த ஆரம்பித்தபோது ஸத்யுகமுறுத வருஷபர்வனென்னும அஸுரராஜாவின்ஸபையில் அழகும அற்புதமும் ரத்னமயமுமான பொருள்கள் என்னாற்செய்யப்பட்டன. அவை இபபோதிருக்குமாயின் எடுத்துவருவேன். அதன் பிறகு பெயாபெற்றதும உள்ளதுதைமகிழ்விப்பதும் எல்லாரத்னங்களினாலும் அலங்கரிக்கபபட்டதுமான ஒருவிசித்ரஸபையைத தர்மராஜாவுக்குநிர்மாணம்செய்வேன். கௌரவனே! யுவனச்வன்புத்திரனுகிய மாந்தாதாவென்னுமராஜாவினால் போரில பகைவரைக்கொன்று வைக்கபபட்ட உக்ரமானகதாயுதமும ஒன்றும பிந்துஸரஸில்இருக்கின்றது. பொறபுள்ளிகளினால்சித்ரமும் பெரிதுமம பாரத்தைத்தாங்குவதும் உறுதியுள்ளதும நூறுயிரம்கதாயுதங்களுக்குச்சரியானதும் சத்துருக்களைக் கொலலுவதுமாகிய அநுதக்கதாயுதமும உனகுக்காண்டீவம் போலப் பீமஸேனனுக்குத் தகுதியானது. அழகான சபதமுள்ள தேவதத்தமென்னப்பட்ட வருணனுடையமஹாசங்கமும் ஒன்று இருக்கிறது. இவற்றையெல்லாம உனக்காகக்கொடுபபேன். இதில்ஸந்தேஹமில்லை" என்றுசொன்னான். அர்ஜுனனுக்குஇவ்வாறுசொன்னபின், அந்தமயனென்னும அஸுரன் வடகிழக்குத்திசைக்குச் சென்றான். கைலாசத்திற்குவடக்கே மைநாகபருவதத்தினருகில் மிகபபெரிதும் உயர்ந்ததுமான மயமுமான ஹிரண்யசிருங்கமென்னுமலை இருக்கிறது. அதில் அழகான பிந்துஸரஸென்னும் தடாகமிருக்கிறது. அங்கே

தான் பரீக்ஷித்மஹாராஜன் கங்கையைத்தரிசிப்பதற்காக அனேகவருஷங்கள் வஸித்தான். எல்லாப்பூதங்களுக்கும் ஈச்வராகிய மஹாத்மாவான [1]சங்கரரும் அங்கே அதில்யாகமசெய்தார். பரதசிரேஷ்டனே! யாகங்களில்முக்கியமான ராஜஸூயவமேதங்களை அங்கே (இந்திரன்) செய்தான். அந்தயாகங்களில இரத்தினங்களிழைத்த யூபஸ்தம்பங்களும் பொன்மயமானயாகஸாலைகளும சிறப்பில் ஒப்பில்லாத வைகளாகச செய்யப்பட்டன. ஸஹஸ்ராக்ஷனான இந்திரன் அங்கே யாகஞ்செய்துதான் ஸித்திபெற்றான்; நிதயபுருஷரும உக்ரமான தேஜஸ்ஸுள்ளவருமாகிய [2]பிரமமஹேச்வரா எல்லாலோகங்களையும் அங்கிருந்துபடைத்து அனேகமபிராணிகளால ஸேவிக்கப்பட்டிருக்கிறார். அங்கே நரநாராயணர்களும, பிரமடாக்ஷமும, யமனும, ஸ்தாணுவுமாகிய இருதேவரும் ஆயிரயுகங்களாகப பரப்பிரமமத்தை உபாசனைசெய்கின்றனர். தர்மதத்தைச் சாசுவதமாக நிலைநிறுத்துவதன்பொருட்டு விஷ்ணுவான்வா சிரதத்தையோடு அநேகவருஷகாலங்கள அவ்விடத்தில் ஸத்ரயாகங்களசெய்தார. அங்குள்ளயூபஸ்தம்பங்கள் பொன்மாலைகளணிந்ததவை. யாகசாலைகளும அக்கலளியுள்ளவை. நாராயணன் அங்கே அநேகமாயிரங்களையும பதஸஹஸ்ரங்களையும் (ஸ்வர்ணம, கோமுதலியஸ்வ) தானமசெய்தார. ஜனமேஜயரே! அந்தமயன் அங்கே சென்று கதையையும சங்கத்தையும் எடுத்துக்கொண்டான். அஸுரசிரேஷ்டனானமயன் அங்கேசென்று அமமலீலையிலிருந்து மிகஅழகான உருவமுள்ள கற்களையும வருஷபர்வாவின்ஸபையிலிருந்த ஸ்படிகக்கலஉருக்களையும அந்தபபெருமபொருள்களைக்காத்திருந்த கிங்கரர்களென்னும் அரக்கருடன் எடுத்த்வந்தான். அவற்றையெல்லாம் கொண்டுவந்தபிறகு அவ்வஸுரன் நிகரற்றதும் மூன்று உலகங்களிலும்பெயர்பெற்றதும் தேவாக்களுக்கு தரியாததும் ஒப்பற்றசிறந்தரத்னங்களால் சோபிக்கின்றதுமாகிய ஸபையைநிர்மாணஞ்செய்தான். அப்போது அந்தச்சிறந்தகதாயுதத்தைப பீமனுக்கும் தேவதத்தமென்னும் சிறந்தசங்கத்தை அர்ஜுனனுக்குங்கொடுத்தான். அந்தச்சங்கின்ஒலியினால் பிராணிகள்நடுங்கின. அந்த அஸுரவிச்வகர்மாவாகியமயன் சற்றுநேரமஇளைப்பாறிப புத்தியில்ஆராய்ந்து ஆயிரக்கணக்கான பிராமணசிரேஷ்டர்களைப பாண்டவர்களினால் திருப்திசெய்

1 இவ்விடத்தில் பிரம்மாஎன்னும் பின்னே பிரம்மாஎன்றவருமிடத்தில் சங்கரர்என்றும் பழையஉரை கூறுகிறது.

2 ஸ்ருஷ்டிசொன்னதனால் இவ்விடத்தில் பிரம்மதேவர்என்பதுபொருத்தம்.

வித்து மஹாத்மாக்களானபாண்டவர்கள் மஹாத்மாவானகிருஷ்ணன் இவர்கள் அபிப்பிராயப்படி எல்லாபருவங்களின்சிறப்புக்களும்நிரம்பினதும் உயர்ந்தகாட்சியும் அலங்காரங்களுமுள்ளதுமான ஸபையைச் செய்யத்தொடங்கினர். ஜனமேஜயமஹாராஜாவே! பொன்மயமான மரங்களோடுகூடிய அந்தஸபை, சுற்றிலும்பதினாயிரமுழம் விஸ்தாரமுள்ளதாகவிருந்தது; அக்னிஸபையைபோலவும ஸூர்யஸபையைப் போலவும சந்திரஸபையைபோலவுமபிரகாசிபதாக மிகச்சிறந்தவடிவததோடிருந்தது. அந்தச்சிறந்தஸபை பிரகாசமான கதிரோன்ஒளியைத் தன்ஒளியினுலேதோற்கசெய்வதுபோலவும மேல்கிளம்புகிற ரத்னகிரணங்களால், ஜ்வலிபதுபோலவும் விளங்கிற்று. அந்தச்சபை மீருண்டமேகம்போல ஆகாயத்தைமறைத்துநிற்பதும், மீண்டதும், அகன்றதும், அழகியதும, குற்றமற்றதும், கீளப்பைப்போக்குவதும், சிறந்தபொருள்கள்நிரம்பினதும், ரத்னமயமானமதில்களும் வாயில் களுமுடையதும், பற்பலஅற்புதங்களைகொண்டதும், தனங்கள்நிரம்பின தாக மயனுல் நன்முகசெய்யப்பட்டது. புதுதிர்ச்லியான மயன் செய்தஸபையைபோல அவ்வளவுஅழகுள்ளவையாக விஷ்ணுஸபை யும் இந்திரஸபையும பிரம்மஸபையும ஆகவிலலே. ஆகாசத்தில்ஸஞ்சரி பவாகளும உக்ரமானரூபமும பெரியதேகமும் சிவபபும்பொன்னிற முமானகண்களும முத்துச்சிபபிபோன்ற காதுகளுமுள்ளவர்களும் எதிரிகளைக்கொல்லுகிறவாகளுமாகிய கிங்கராகளென்னும் மஹாபல சாலிகளான அரக்கர்கள் எண்ணுயிரவாகள் மயனுலகட்டளையிடபபட்டு அங்கே அந்தச்சபையைக்காத்தும் வஹித்துமிருந்தனர். அந்தச்சபை யில் வைடூரியமயமான இலைகள் உள்ளதும், ரத்னமயமான காம்புகளுள் ளதும், தாமரை செங்கழுநீர்முதலிய நீர்மலராகள் மலர்ந்திருபபதும், பலவகை நீர்பபறவைக்கூட்டங்களிருபபதும், பொன்மயமான ஆமைக ளும் மீன்களுமஇருபபதினுலும் தாமரையடுக்குகள் மலர்ந்திருபபதினு லும் சித்ரவர்ணமுள்ளதும, பலநிறங்களானபடிக்கற்படிகளுள்ள தும், தெளிந்தஜலமுள்ளதுமாகிய ஒருசிறந்ததடாகத்தை மயன்செய் தான். மந்தமாருதத்தினுல்அசைக்கபபட்டதும, முத்துபபுள்ளிகள் நிரம்பினதும், உயர்ந்த ரத்னபலகைகளினுல் சுற்றிலும்மேடைகள் கட்டப்பட்டதும், உயாந்த ரத்னங்களுபதிபபிக்கப்பட்டதுமான அந் தத்தடாகத்திற்குவந்து அதைப்பார்த்தும் சில அரசர்கள் தெரிந்து கொள்ளவில்லே. அவர்கள்தெரியாமைபால் விழுவுமவிழுந்தனர். அந்த ஸ்பையின்நாற்புறமும் என்றும் புஷ்பித்தவையும், காற்றினுலாடுகின்ற வையும், குளிர்ந்தநிழலுள்ளவையும், மனத்தைக்கவருகின்றவையு

மான பலவகைப் பெரியமரங்களும், நல்லவாஸனையுள்ளகாடுகளும், அன்னங்கள் நீர்க்காக்கைகள் சக்கரவாகங்களினுல்விளங்கும் தடாகங்களும் நிரம்பவிருந்தன. நீரிலும்நிலத்திலுமமுளைத்த தாமரை மலர்களெல்லாவற்றினுடைய மணத்தையுமெடுத்துக்கொண்டு அநதக் காற்றுவீசுது பாண்டவர்களை அடைந்தது. "ராஜாவே! இவ்வாறுன அந்தச்சபையைப பதினுன்குமாஸகாலத்திற்கதிகமாள் வேலைசெய்து முடிந்ததைத் தர்மராஜாவுக்கு மயன்தெரிவித்தான்."

நான்காவது அத்தியாயம்.

மந்த்ரபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் ஸபாப்ரவேசம் செய்தது.)

அநதச் சிறந்தஸபையைசெய்தபிறகு, மயன் அர்ஜுனனைப் பார்த்து, "ஓ! ஸ்வயஸாசியே! எலலாபபூதங்களுள்ளும் மிகுநதசக்தியுள்ள கிங்கரர்களென்னும் அரக்காகூட்டம உன்கொடியின்மேல் இருக்கின்றது. அநதக்கூட்டம நீராணேறிமிக ஓசையினுல மேகமபோலக் கர்ஜிக்கும். அக்னிபகவான்கொடுதத இநதசசிறநததேர் ஸூர்யனைப போலப பிரகாசிக்கின்றது. தேவலோகத்திய இநதச்சிறநதவெண்மையானகுதிரைகளும் மிக்கவேகமுள்ளவை. மாயையினுற்செய்யப்பட்ட இநதவானரக்கொடி, மரங்களில தடைப்படாமல் வால்நகூத்திரம போல் உயர்ந்திருக்கிறது. வானரததைஅடையாளமாகவுடைய (இந்தக்) கொடியானது அனேகநிறங்களாகக்காணபபடும. இநத உயர்நத கொடியானது யுததத்தில்எலலாக்கொடிகளுக்கும்மேற்பட்டுநிற்பதை நீகாண்பாய். இநதவீரனுன அனுமான் (நிசஉருவத்துடன்) த்வஜத் தின்மேல்இருப்பார்" என்றுசொன்னுன். இவ்வாறுசொல்லி அர்ஜுனனைத்தழுவிக்கொண்டு அவனுல்விடைகொடுக்கப்பெற்று மயன்சென்றுன். பிறகு தர்மராஜா அநதஸபையில்பிரவேசித்தார். ஜனமேஜய ராஜாவே! நெய்யும பாலுமதேனும்சேர்நத அன்னத்தையும, பக்ஷிணங்களையும், கிழங்குகளையும், கனிகளையும் எள்ளுன்னதையும [1]ஜீவநதிகையென்னுமபுஷ்டியைத்தரும் ஓர்உணவையும, [2]ஹவிஷ்யமென்

---

[1] இதை யவனர் விரிஞ்சியென்பர். சர்க்கரைபோல்இதிக்கும் புஷ்பமுள்ள ஒருமூலிகையென்றும சீந்திக்கொடியென்றும் சிலர்சொல்லுவர்.

[2] ஹவிஷ்யமாவது:—பனிகாலத்திலுணடானவையும் புழுக்காதவையுமான வெள்ளைத்தானியத்தையும், பச்சைப்பயறு, எள், யவை, அசேணுகம், தினை, நீவாரம், குமுவையிவற்றையும், வாஸ்துகம், ஹிலமோசிகை, காலசாகம்

னும்உணவையும், பன்றிகள் மான்கள்முதலியவற்றின் பலவகைமாம்ஸங்களையும், கடித்து மெல்லத்தக்கவற்றையும், உறிஞ்சத்தக்கவற்றையும், குடிக்கத்தக்கவறறையும் மிகுதியாகக்கொடுத்துப் பலதேசங்களிலிருந்துவந்த பிராமணோத்தமர்கள் பதினாயிரவரைப்புசிப்பித்து அனேகவிதங்களான புதியவஸ்திரங்களையும் புஷ்பமாலைகளையும் அளித்து அவர்களோத் திருபதிசெய்வித்தார். அவர்களில் ஒவ்வொருவருக்கும் அனேகமாயிரம் கோதானஞ்செய்தார். ஜனமேஜயரே! அந்தஸபையில் புண்யாஹவாசனஞ்செய்த கோஷமானது தேவலோகத்தை எட்டினதுபோலிருந்தது. தர்மராஜாவானவர் பலவகை வாத்தியங்களோடும் அனேகம் சிறந்தவாஸனோத்திரவியங்களோடும் தேவதைகளைபபிரதிஷ்டைசெய்து பூஜித்தார். அவ்விடத்தில் மல்லர்களும், நாட்டகமாடுகிறவர்களும், [1]சல்லர்களும், [2]ஸூதர்களும் [3]வைதாளிகர்களும மஹாத்மாவானதர்மபுத்திரரை ஸேவித்தனர். அந்தத்தர்மராஜா, ஸோதரர்களுடன்கூட அந்தப்பூஜையை அவ்வாறுநடத்தி அந்த அழகானஸபையில் தேவலோகத்தில் இந்திரனிருப்பதுபோல் மகிழ்ந்திருந்தார். ரிஷிகளும பற்பலதேசங்களிலிருந்துவந்த அரசர்களும பாண்டவர்களுடன் அந்தச்சபையில் உட்கார்ந்திருந்தனர. தர்மங்களைதெரிந்தவரும் இந்திரியங்களையும் மனத்தையும் அடக்கினவரும வேதங்களிலும வேதாங்கங்களிலும் கரைகண்டவரும பரிசுத்தரும் குற்றமற்றவருமான அஸிதர், தேவலர், ஸத்யர், ஸர்ப்பிர்மாலி, மஹாசிரஸ், அர்வாவஸு, ஸுமித்ரர், மைத்ரேயர், சுனகர், பலி, தல்பாபுத்ரரான பகர், ஸ்தூலசிரஸ், வியாஸர், சுகர, வியாஸசிஷ்யாகளாகிய ஸுமந்து, ஜைமினி, பைலர், நாம் (வைசம்பாயனர), தித்திரி, யாஜ்ஞவல்க்யர, ரோமஹர்ஷணர், [4]அவர்புத்திரரூ, அபஸுதேஹாமியர, தௌம்யர, ஆணிமாண்டவ்யர், கௌசிகர், தாமோஷ்ணீஷர், த்ரைபலி, பாரணர், கடஜானுகர், மௌஞ்சாயனர், வாயுபக்ஷர், பாராசர்யர (இவர் வியாஸரல்லர்), ஸாரிகர்,

---

என்னும் ரைகளையும், கேழுகம்தவிரமற்றஎல்லாவகைகளையும், இந்துப்பு, கடலுப்பு இவற்றையும், பசுவின்தயிர், நெய், ஆடையெடுக்காதபால், பலாப்பழம், மாம்பழம், கடுக்காய், புளி, ஜீரகம், நாகரகம், இப்பிலி, வாழைப்பழம், லவலிப்பழம், தானிகைகாய் இவைகளையும், வெல்லம்தவிர கரும்புஸம்பந்தமான சர்க்கரை கற்கண்டுமுதலியவற்றையும், சேர்த்ததை லைபாகமில்லாமல் செய்யப்பட்டது. மேற்கூறியவற்றோடு தேங்காய் நெல்லிக்கனிகளையும் சேர்த்துக்கூறுவதுமுண்டு.

1 **விகடகவிகள். தடிச்சிலம்பும் செய்பவரென்பது பழையவுரை.**

2 **புராணஞ்சொல்லுகிறவர்கள்.**

3 **ஸங்கீதத்திலுல் காலம்தெரிவிப்பவர்.** 4 **உக்ரச்ரவர்.**

'பலிவாகர், ஸினீவாகர், ஸப்தபாலர், க்ருதச்சமர், ஜாதுகர்ணர், சிகாவான், ஆலம்பர், பாரிஜாதகர், பர்வதர், மஹாநுபாவரான மார்க்கண்டேயமாமுனிவர், பவித்ரபாணி, ஸாவர்ணர், பாலுகி, காலவர், ஜங்காபந்து, ஸைப்யர், கோபதிவேகர், ப்ருகு, ஹரிபப்ரு, கௌண்டின்யர், பப்ருமாலி, உசிக்தின்புத்திரரான கக்ஷீவான் என்னும் பழையரிஷி, நாஸிகேதர், கௌதமா, பைங்கியர், வாஹா: சிறந்ததவமுள்ள சாண்டில்யர், குக்குரர், வேணுஜங்கர், கலாபர், கடர்முத்தலான ரிஷிச்ரேஷ்டர்கள் அந்தச்சபையில புண்யகதைகளைச்சொல்லிக்கொண்டு மஹாத்மாவான தர்மராஜாவினிடமிருந்தனர். அவ்வாறுகவே க்ஷத்ரிய சிரேஷ்டர்களும் தர்மராஜரை அடுத்திருந்தனர். ஐசுவரியமுள்ளவனும் மஹாத்மாவும தர்மதத்தில் மனமுள்ளவனுமாகிய முஞ்சகேது, விவர்த்தனன், ஸங்கிராமஜித, தூமுகன், வீரனுனஉக்ரஸேனன், ககக்ஷஸேனராஜன், தோல்வியடையாதவனுகிய சக்ஷுமகன், கம்போஜதேசத்தரசனுன கமடன், பலமுமஉறசாகமும நிரமபினவரும் அஸ்த்ரத்தேர்ச்சியுள்ளவரும் அளவற்றபராக்கிரமமுள்ளவருமாகிய யவனர்களோ, காலகேயர்களென்னும்அஸுரர்களோ வஜ்ராயுதநாசித்த தேவேந்திரன் நடுங்கச்செய்ததுபோல் தானுருவனுகவே ஏபபோதும நடுங்கச்செய்த மஹாபலசாலியான கம்பனன், ஜடாஸுரன், மத்ரதேசத்தரசன், குந்திராஜன், கிராதராஜனனபுளிந்தன், அங்கன், வங்கன், புண்ட்ரகன், பாண்டியன், ஓட்ராராஜன், ஆந்ரதன், ஸுமித்ரன், பகைவரைஅழிப்பவனுகிய சைபயன், கிராதர்களுக்குஅரசனுகிய ஸுமனஸ், யவனராஜன், சாணூரன், தேவராதன், போஜன், பீமரதன், களிங்கதேசத்தரசனுனச்ருதாயுதன், மகதராஜாவான ஜயஸேனன், ஸுகர்மா, சேகிதானன், பகைவரைகருறைப்பவனுகியபுரு, கேதுமான், வஸுதானன், விதேஹராஜனுகியக்ருதக்ஷணன், ஸுதர்மா, அனிருத்தன், மஹாபலசாலியானச்ருதாயு, வெல்லமுடியாதவனுகிய அனாபராஜன், க்ரமஜித், ஸுதர்சனன், சிசுபாலன், அவன்புதல்வன், கருசதேசத்தரசன், தேவதாரூபமுள்ளவர்களும் வெல்லமுடியாதவர்களுமான ஆஹுகன், விபருது, கதன், ஸாரணன், அக்ரூரன், க்ருதவர்மா, சினியின்புத்ரனுகியஸத்யகன், பீஷ்மகன், ஆக்ருதி, வீரனுன த்யுமத்ஸேனன் ஆகியாதவகுமாரர்கள், சிறந்தவில்லாளிகளானகேகயதேசத்தரசர்கள், ஸோமககுலத்தோனுகியதிருபதன், மஹாபலசாலியும் அஸ்திரங்களில்தேர்ந்தவனுமாகிய வஸுமான் முதலான அனேகம்க்ஷத்ரியத்தலைவர்களும் அந்தஸபையில் குந்தியின்புத்ரரான யுதிஷ்டிரரைஉபாஸித்தனர். ஜனமேஜயராஜாவே! அர்ஜுனனியடைந்து

புள்ளிமான்தோலாடையுடுத்து வில்வித்தைகற்றுக்கொண்டப்ரத்யும்னன், ஸாம்பன், யுயுதானன், ஸாத்யகிஎன்னும்யாதவகுமாரர்களும், ஸுதர்மா, அனிருத்தன், புருஷசிரேஷ்டனான சைப்யன் முதலான அனேகராஜாக்களும் அங்கேயிருந்தனர். ஜனமேஜயராஜாவே! தனஞ்சயனுக்குநண்பனான தும்புருவென்னுமகந்தர்வன் அங்கேஎப்போதுமிருந்தான். தன்மந்திரிகளோடுகூடிய சித்ரஸேனனென்னும் கந்தர்வனும் மீற்றுமுள்ளஇருபத்தேழுகந்தர்வர்களும், அப்ஸரஸ்களும் அங்கே வீற்றிருந்த யுதிஷ்டிரரைஸேவித்தனர். பாட்டிலும் வாத்தியத்திலும ஸமர்த்தராகளும சுருதியிலும தாளத்திலும் [1]காலப்பிரமாணத்திலும் [2]லயதத்திலும [3]ஸ்தானத்திலும தேர்ச்சியுள்ளவர்களுமான கின்னரர்கள் அப்போது தும்புருவினுகைடகளோயிடப்பட்டுக் கந்தர்வர்களுட்சேர்ந்து மனத்தில் உத்ஸாஹதுடன் சாஸ்திரப்படி தேவலோகத்திய [4] தானங்களேபபாடிப்பாண்டவர்களேயும் ரிஷிகளேயும் மகிழ்வித்துக்கொண்டிருந்தனர். விரதம்தவறாதவரும் ஸத்யம்தவறாதவருமான அந்தஸபையிலிருந்தவர்கள பிரமமலோகத்தில் தேவர்கள் பிரம்மாவைஸேவிப்பதுபோல தர்மராஜாவைஸேவித்தனர்.

ஐந்தாவது அத்தியாயம்.

மந்த்ரபர்வம். (தொடர்ச்சி.)

(நாரதர் ஸபைக்குவந்து யுதிஷ்டிரரைக் குசலப்ரச்னம்செய்தது.)

அரசர்க்கரசரான ஜனமேஜயராஜாவே! மஹாத்மாக்களான பாண்டவர்களும பெரியோர்களும் கந்தர்வர்களும் அந்தச்சபையில் அவ்வாறு வீற்றிருக்கையில தேவக்கூடடங்களினுல பூஜிக்கபபட்டவரும வேதங்கள உபநிஷத்துக்கள் இதிஹாஸபுராணங்கள் யாகம் முதலிய கருமங்கள்செய்யும்விதிகளின் வேறுபாடுகள் [5]ஸ்துதம், ஸ்தோமம், க்ரஹம், ஸ்தோபம, பதம, கிரமம், சிகூஷ, அக்ஷரம், இவற்றின் விசேஷங்கள், பூர்வ கலபசரித்திரங்கள், ஸ்ருஷ்டிக்குமூன்னுள்ளவிஷயங்கள் · இவற்றையெல்லாமறிந்தவரும், [6]கல்பஸூத்

---

1 த்ருதம், மத்யம, விளம்பிதம்என்றமூன்றுகாலங்கள்.

2 பாட்டுக்களுக்கும் வாத்தியங்களுக்கும் இருக்கும்ஒற்றுமை.

3 மந்த்ரம், மத்தியம், தாரம்என்னும்மூன்றுஸ்தாயி.

4 ஸ்வரஙகளின் ஆரோஹணவரோஹணங்கள்.

5 ஸ்துதம், ஸ்தோமம், க்ரஹம், ஸ்தோபம்இவைமந்த்ரங்கள்.

6 வேதமந்த்ரங்களின் பொருள்களே விளக்கி ஆபஸ்தம்பர்முதலியோர் செய்த ஸூத்ரங்கள்.

ங்களின்பொருள்களே ஸரியாக அறிந்தவரும், பிரம்மசாரிவிரதம் தவறுதவரும், [1] ஊஹம் [2] அபோஹம் இவற்றில்தேர்ந்தவரும், நர்த்தனத்தையும் ஸங்கீதத்தையும் அனுஸரிப்பவரும், எல்லாவற்றிலும் ஒப்பற்றவரும, [3] பதினெண்வித்தைகளுக்கும் பொக்ஷமேபோன்றவரும, சிறந்த கீர்த்தியுள்ளவரும, நியாயசாஸ்திரம தெரிந்தவரும், தர்மங்களின்நுட்பத்தை யறிந்தவரும, ஆறுவேதாங்கங்களையு மறிந்தவரில் தமக்குயர்வில்லாதவரும், [4] ஒருமை, [5] செயற்கை, [6] வேற்றுமை, [7] கூடுதல் இவற்றையறிந்தவரும, சொல்வன்மையும் தைரியமும புத்திக்கூர்மையும மறவ்வாமையுமுடையவரும், தருதரங்தெரிந்தவரும், [8] கவியும், உயர்ந்தவைதாழ்ந்தவை இவற்றின் வித்தியாஸமறிந்தவரும், பிரத்யக்ஷம அனுமானம்முதலிய பிரமாணங்களின் துணிபைபறிந்தவரும், [9] ஐந்துஅங்கங்களோடுகூடிய [10] வாக்கியத்தின் குணதோஷங்களையறிந்தவரும், ப்ருஹஸ்பதிபோலுமம மேன்மேலும் உத்தமசொல்லவல்லவரும், தர்மார்த்தகாமமோக்ஷங்களென்னும புருஷார்த்தங்களின் லக்ஷணங்களே நன்றுகஅறிந்தவரும, இதுதப்பிரமமாண்டத்தின் மேலும்கீழும மதியிலுமுளள உலகங்களெல்லாவற்றையும பிரத்யக்ஷமாகக்கண்ட மஹாஜ்ஞானியும், [11] ஸாங்கியம் [12] யோகம் இவற்றின்விசேஷங்களையறிந்தவரும, தேவர்களுக்கும அஸுரர்களுக்கும விரோதஞ்செய்யக்கருதுகிறவரும, [13] ஸந்தி [14] விகரஹம்இவற்றின்உண்மையையறிந்தவரும, இங்கிதங்களின் வேறுபாடுகளே யறிந்தவரும், [15] ஆறுகுணங்களைப்பிரயோகிப்பதில் ஜாக்கிரதையுள்ளவரும், சாஸ்திரங்களெலலாவற்றிலும ஸமாத்தரும், சண்டைமூட்டுவதிலும் ஸந்

1 கூட்டுவனவற்றைக் கூட்டிக்கொள்ளல.

2 விலக்குவனவற்றை விலக்கல.

3 ரு.வேதம், ஆறுவேதாங்கம், சாக்கம், மீமாம்ஸை, புராணம், தர்ம சாஸ்திரம், ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வவேதம, ராஜநீதி.

4 ஒருபயனைத் தலைமையாகக்கொள்வது.

5 அதற்குப் பல உபாயங்களைச் சேர்ப்பது.

6 ஒன்றோடொன்று மாறுபடுங்காரியங்கள்.

7 ஒருகாலத்திற் பலகாரியங்கள் கூடுவது.

8 எதிர்காலஉணர்ச்சியுடையவரென்பது பழையஉரை.

9 ப்ரதிஜ்ஞை, ஹேது, உதாஹரணம், உபநயம், நிகமனம்.

10 நியாயவாக்கியம். 11 ஜ்ஞானயோகம்.

12 கர்மயோகம். 13 ஸமாதானம். 14 விரோதம்.

15 ஸந்தி=ஸ்நேகம்; விக்ரஹம்=விரோதம், யானம்=யுத்தத்துக்குப் போவது, ஆஸனம்=தன்னிடத்திலிருப்பது, த்வைதீபாவம்=சேனைகளை இரண்டுவகுப்புக்களாகப் பிரிப்பது, ஸமாச்ரயம்=ஒரு பலவானை அடுப்பது.

கீதத்திலும விருப்பங்கொண்டவரும், எவ்வுலகத்திலும் ஸஞ்சரிக்கத் தடையில்லாதவரும, சொன்னவையும் சொல்லாதவையுமான அனேக குணங்கள நிரமபினவரும, மிகப்பெரியமஹிமையும ஒளியுமுள்ளவருமான தேவரிஷியாகிய நாரதமுனிவா, பாரிஜாதர் சிறந்த ஞானமுள்ள பர்வதா ஸுமுகர் ஸௌமயா ஆகியதேவரிஷிகளுடன்கூட எல்லாலோகங்களிலும் ஸஞ்சரித் துவருமபோது ஸபையிலுள்ள பாண்டவர்களிக்காண விருமபி மதிப்புவேகமாக அருதசசபைக்குவநதார. அருதப்பிராமணரான நாரதர் ஜயதைப்பறறிய ஆசீரவாதங்களினுல் அருதத்தாமராஜரைசசிறபபிதது, எல்லாத்தர்மங்களுநதெரிநததாம புத்திரர் அநத நாரதமுனிவர்வரக்கண்டு தமமுடையதமபிமாருடன் கூட விரைவாகஎதிரகொண்டு முழைதது பக்தியுடன்தலவணங்கி அபிவாதனஞ்செய்தார். தர்மநெரிநதவரானதர்மராஜா அருதநாரதருக்குத்தகுதியான ஆஸனததைக்கொடுத்துச சாஸ்திரபபிரகாரம பசுவையும மதுபர்க்கததையும் அரக்கியதையுமகொடுத்து உத்தரங்களிலும விருமபத்தக்கபொருள்களஎலலாவறறினுலும அவரைப பூஜித்தார். யுதிஷ்டிரரிடதில ஸரியானமரியாதையைபபெறறு நாரதர் ஸநதோஷமடைநதார். வேதங்களின்கரைகண்டவராகிய அருதநாரத மஹரிஷி பாண்டவர்களிடமவராலும பூஜிக்கபபெற்றவராகி யுதிஷ்டிரரைப்பார்த்துத தாமார்த்தகாமங்களென்னும புருஷார்ததங்களைபபற்றிப பின்வருமாறுவினவினார : "ராஜாவே! ராஜ்யகாரியங்கள் ஸரியாகநடக்கின்றனவா? உன்மனம் தர்மத்திலவிருபபமுள்ளதாயிருக்கிறதா? ஸுகங்கள அனுபவிக்கபபடுகின்றனவா? கருதினது தடைப்படாமலிருக்கிறதா? அறம்பொருள் இன்பமென்னும்மூன்றனுள் அறம் பொருள்களைவிடாததும முன்னோர்களானகுடல்தர்களால் நடத்திவரபபட்டதுமான மேலானகாரியத்தை நடத்திவருகிறாயா? பொருளினுல் அறத்தையும் அறத்தினுறபொருளையும மனமகிழ்ச்சியை முதன்மையாகவுடைய சிறறின்பததினுல் அறமபொருளிரண்டையும கெடிக்காமலிருக்கிறாயா? ஜயிப்பவரிற்சிறநதவனே! வேண்டினவற்றையெல்லாங்கொடுபபவனே! காலதததையறிநது தாமார்த்தகாமங்களை அநதஅநதக்காலத்தில் பகுதது அனுஷ்டிக்கத்தவறுமலிருக்கிறாயா? குற்றமறறவனே! அரசனுக்குரிய ஆறுகுணங்களுடன்கூடத் தன்பக்கத்தில் [2]ஏழாம எதிரிபக்கத்தில்வழுமாகப் பதினன்காகநிற்குமுபாயங்களின் பலாபலங்களைச் செமமையாகபபரீக்ஷிக்கிறாயா? ஜயிப்பவரிற்

இனியஆகாரம்.

[2] மந்திரம், ஔஷதம், இந்திரஜாலம், ஸாமம், தானம், பேதம், தண்டம்.

நிறைந்தவனே! பாரதனே! தன்பலத்தையும் பிறர்பலத்தையும் ஆராய்ந்துபார்த்துப் பலவான்களுடன் ஸந்திசெய்துகொண்டு [1]எட்டுக் கருமங்களையும்நடத்துகிறாயா? பரதசிரேஷ்டனே! ராஜ்யத்தின்அங்கங்கள் [2]ஏழும்கெடுக்கபடாமலிருக்கின்றனவா? தனிகாகள் வறிஞர்கள்அனைவரும் உன்னிடத்தில் அன்புடனிருக்கின்றனரா? தூதர்களாலும் நம்பப்பட்டவேறு எந்தமன்னர்களாலும் உன்னிடமிருந்தாவது உன்னமைச்சரிடமிருந்தாவது மந்த்ராலோசனை வெளிப்படுத்தப்படாமலிருக்கிறதா? நண்பர்களும்வகைவர்களும மத்தியஸ்தர்களும் செய்யக்கருதியதை நீ அறிகிறாயா? ஸந்தியையும் விக்ரஹத்தையும் காலத்தைஅனுஸரித்துச் செய்துவருகிறாயா? தன்பக்கத்திலும் எதிரிபக்கத்திலும் [3]சோதரனுக்குமு, இருவர்க்கும் [4]பொதுவாக விருப்பவனுக்கும், ஜீவனத்தைததிக்காமலிருக்கிறாயா? வீரனே! உனக்குச்சரியானவர்களும் உண்மைவிட முதிர்ந்தவர்களும் பொருளாசையுற்றவர்களாகப பரிசோதிக்கபபட்டவர்களும் உனக்குபுத்தி சொல்லத்தக்கவர்களும மேற்குலததோர்களும் அன்புள்ளவர்களுமான மந்திரிகள் ஏற்படுத்தபபட்டனரா? பாரதனே! ராஜாவுடைய ஜயத்துக்கு மந்திராலோசனை காரணமன்றோ? நண்பனே! மநதரத்தை வெளிவிடாதவரும் சாஸ்திரங்களில் ஸமர்தருமாகிய அமைச்சர்களால் உனதுராஜ்யம் நன்முகரக்ஷிக்கப்பட்டு எதிரிகளால்கெடுக்கப்படாமலிருக்கிறதா? தூக்கத்துக்குட்படாமலிருக்கிறாயா? காலத்திற் கண்விழித்துக்கொள்ளுகிறாயா? கார்யங்களையறிநது அவற்றைப் பின்னிரவுகளிற சிநதிக்கிறாயா? தனித்தும பலருடன்சேர்ந்தும் மந்த்ராலோசனை செய்யாமலிருக்கிறாயா? நீ செய்த மநத்ராலோசனை தேசமெங்கும்பரவாமலிருக்கிறதா? சிறிபஉபாயமும் பெரிய பயனுமுள்ளகார்யங்களை ஆராய்நதெடுத்து அபபடிப்பட்டவற்றை இடையூறுவாமலிருக்கும்படி உடனேசெய்யத்தொடங்குகிறாயா? ஸந்தேஹிக்கப்பட்டவேலைகளனைத்தும் உன்னால் நேரில்பார்க்கப்படுகின்றனவா? (பார்த்தபிறகு) மறுபடியும் (வேலைக்காரரிடம்) ஒப்பிக்கப்படுகின்றனவா? இவற்றிற் கலநதுகொள்வது ஸாதகம். வேண்டியவர்களும் பொருளாசையில்லாதவர்களும் குலக்கிரமமாக வந்திருப்பவர்களுமான வேலைக்காரர்களால் அநதவேலைகள் நடத்தப்பட்டுவரு

1 பயிர், வர்த்தகம், கோட்டை, அணை, ஆனைபிடித்தல், புதையலெடுத்தல், பொன்மணிகள்எடுத்தல், வெற்றிடங்களில் ஜனகளைக் குடியேற்றுதல்.

2 தலைவன், அமைச்சன், நண்பர், பொக்கிஷம், தேசம், கோட்டை, படை.

3 உதாவீனன். 4 மத்தியமன்.

கிறதுண்டோ? ராஜாவே! வீரனே! உன்காரியங்களையெல்லாம் முடிந்த பிறகும் முடியுந்தருணத்தில்மட்டும பிறர் அறிகின்றார்களா? முடியாதனவற்றை யாரும்அறியாமலிருக்கின்றனரா? தர்மங்களிலும் எல்லாச் சாஸ்திரங்களிலும வித்வான்களானஉபாத்தியாயர்கள் ராஜகுமாரர்களும்படைவீரர்களுமாகிய அனேவரையும் பழக்குகின்றனரா? [1]அனேக மாயிரம்மூர்க்கர்களுள் ஒருகற்றவனைவிலக்குவாங்குகிறுயா? கற்றவனன்றே கார்யஸங்கடங்களில் சிறந்தகண்மையைச்செய்வான். தூர்க்கங்களைத்தும் தனங்களிலுலும் தான்யங்களிலுலும் ஆயுதங்களிலும் தண்ணீராலும் யந்திரங்களிலுலும சிற்பிகளாலும் வில்லாளிகளாலும் நிரப்பப்பட்டிருக்கின்றனவா? புத்திசாலியும் சூரனும் ஜிதேந்திரியனும் நன்றுகப்பேசத்தக்கவனுமாகிய மந்திரிஒருவனே ராஜாவையும ராஜகுமாரனையும பெருஞ்செல்வமடையச்செய்வான். ஒருவர்க்கொருவர் தெரியாத மும்மூன்று [2]சார்களால் பிறர்பக்கங்களில் 3 பதினெண்தீர்த்தங்களையும் தன்பக்கத்தில் பதினைந்துதீர்த்தங்களையும் அறிகிறுயா? சத்ருக்களைஸமஹரிப்பவனே! நீ எதிரிகளால்அறியப்படாமல் நம்பப்பட்டவனுகி ஊக்கத்தைவிடாமல் எதிரிகளெல்லாரையும் எபபோதும்அறிகிறுயா? கல்வியும கேள்வியும் மிகுதியாக வள்ளவனும அழுக்காறற்றவனும் மேன்மேலுங்கேட்டுத்தெரிந்து கொள்ளுகிறவனுமாகிய மேற்குலத்தானுனபுரோஹிதன் உன்னல் கௌரவிக்கப்பெற்றிருக்கிறுனு? சாஸ்திரவிதிகளையறிந்தவனும் நுண்ணறிவுள்ளவனும உள்ளுமபுறமும்ஒத்தவனுமான அந்தப்புரோஹிதன் உனது அக்னிகார்யத்தில் ஊக்கமுள்ளவனுகி ஹோமம்செய்ததையும் ஹோமம்செய்வதையும் காலநேரமுந் தெரிவிக்கிறுனு? வேதாங்கங்களிலநிபுணனும் கிரஹநக்ஷத்திரங்களையறிந்தவனுமாகியசோதிடன் எல்லா [4]அனிஷ்டங்களையும பரிகரித்தத்தக்கவனுகஇருக்கிறுனு? வேலைக்காரர்களில் உயர்தரத்தார்உயர்ந்தகருமங்களிலும் நடுத்தரத்தார் நடுத்தரக்கருமங்களிலுமம தாழ்வானவர்தாழ்ந்தகருமங்

[1] அனேகருள ஒருகற்றவனைக்கண்டெடுகிறுயாஎன்பதுகருத்து.

[2] ஒற்றர்.

3 ஆதிபர்வம் 578, 579-ம்பகுகங்களிற்காண்க. இவர்களில்மந்திரி, இளவரசன், புரோஹிதன்இம்மூவரைப் பதினேவர்தன்பக்கத்தில்கொள்க. தன்பக்கத்தில்மந்திரி, இளவரசன், புரோஹிதன்இவர்களுடன்ராஜாவேஎப்போதும்பழகுவதனுலும் அவர்கள் சார்களைக்கட்டளையிடும் நிலைமையுள்ளவர்களாதலாலும் அவர்களைச்சார்களைக்கொண்டு பரிசோதிப்பது ஒழுங்காகாதென்பது ராஜநீதிசாஸ்திரத்தின் துணிபு.

4 ஆகாயத்திலிருந்துவிளக்கொள்ளிவிழுவது, வால்நக்ஷத்திரம்கிளம்புவது, பூகம்பம்உண்டாவதுமுதலியன.

களிலும் நியமிக்கப்பட்டிருக்கின்றனரா? பொருள்விஷயத்தில் பரிசுத்தர்களாகப் பரீக்ஷிக்கப்பட்டவர்களும் தந்தைபாட்டன்பரம்பரையாக வந்தவர்களுமான சிறந்தமந்திரிகளைச் சிறந்தகாரியங்களில் நீதியமிக்கிறாயா? கடுமையானதண்டனையினால் பிரஜைகளை அதிகமாகஅச்சப்படுத்தாமலிருக்கிறாயா? பரதசிரேஷ்டனே! உனதுராஜ்யத்தை மந்திரிகள் ஆளுகின்றனரா? யாகமசெய்பவர்கள் கர்மபரிஷ்டனை அவமதிப்பதுபோலவும் நயமில்லாமல்பிடிக்கும காமுகனைப் பெண்கள் அவமதிப்பதுபோலவும் அநுதமந்திரிகள் உன்னை அவமதிக்காமலிருக்கின்றனரா? உனதுபுலனுபதி உத்ஸாஹமுள்ளவனுகவும சூரனுகவும புத்திகூர்மையும துணிவும் தூய்மையுமுள்ளவனுகவும நற்குலத்தோனுகவும அன்புள்ளவனுகவும காரியங்களைமுடிக்கும திறமையுள்ளவனுகவுமிருக்கிறனு? எல்லாவகையுத்தங்களிலுமதோநதவர்களும அஞ்சாதவர்களும் பரிசுததர்களுமப பராக்கிரமசாலிகளுமான படைத்தலைவர்கள் உன்னுல் கௌரவமாக வெகுமதிசெய்யபபெறு வருகின்றனரா? சேனைக்குக்கொடுக்கத்தக்க உணவையும வேதனத்தையும தகுதிப்படி ஸரியானகாலததில கொடுக்கிறாயா? குறைக்காமலிருக்கிறாயா? இந்தவேலைக்காரர்கள் வறுமையால் அன்னத்துக்கும் வேதனத்துக்கும காலங்கடப்பதுபற்றி அரசன்மேல் கோபிப்பார்கள். அநத அனர்த்தம் மிகப்பெரிதாக நினைக்கபபடுகிறது. தேசத்தில் பிரதானர்களாயுள்ள ராஜகுமாரர்கள் அனைவரும உன்னிடதத்தில் அன்போடிருக்கின்றனரா? யுத்தத்தில் உயிரையும்விடுவார்களா? தன்விருப்பத்தையே முக்கியமாகக்கொண்டஒருவன் உன்ஆஜ்ஞையைமீறியும் மற்ற அமைச்சருடன்சேராமலும் பெரும்பயன்தரத்தக்க அனேககாரியங்களை முழுவதும தன்னிஷ்டபபடியே நடத்தாமலிருக்கிறனு? தன்முயற்சியினால் காரியங்களைச்சீர்ப்படுத்துகிற ஒருமனிதன் விசேஷமான வெகுமானத்தையும போஜனமவேதனங்களின் அபிவிருதியையும பெறுகிறனு? வித்தைகளிலபயின்று அறிவிலதேர்ந்த மனிதர்களின் குணங்களுக்குத்தக்கபடி திரவியம்கொடுதது அனுக்கிரஹிக்கிறாயா? பரதசிரேஷ்டனே! உன்காரியத்தில் மரணத்தையும் நஷ்டத்தையும் அடைந்த மனிதர்களின்குடும்பங்களைக் காப்பாற்றுகிறாயா? பார்த்தனே! பயந்தாவது இலோபத்தாவது உன்னை அடைக்கலமாக அடைந்தவனும் யுத்தத்தில்தோற்றவனுமான சத்ருவைப் புத்ரனைபோலக் காப்பாற்றுகிறாயா? அரசே! நீஒருவனே புவனிமுழுமைக்கும் தாய்போலவும் தந்தைபோலவும் பக்ஷபாதமில்லாதவனுகவும் நம்பத்தக்கவனுகவும்இருக்கிறாயா? பரதசிரேஷ்டனே! உன்னுடையசத்துருக்

கள், காமம், சூது, வேட்டைமுதலிய [1]வ்யஸனங்களிலிருக்கக்கேட்டு [2]மூன்றுவிதமானபலங்களையும் ஆராய்ந்துகொண்டு விரைவாகவே எதிர்த்துச்செல்லுகிறாயா? பகைவரைஜயிப்பவனே! அதிருஷ்டவசமாகக் காலமறிந்தபோது [3]பின்பலத்தையும் [4]மூலபலத்தையும் தன் உத்ஸாஹத்தையும் எதிரியின்தோல்வியையும் தெரிந்துகொண்டு யுத்தயாத்திரைக்கு ஆரம்பிக்கிறாயா? பகைவரைப்பரிதபிக்கச்செய்யும் மஹாராஜாவே! முதலில உன்சேனைக்குச் சம்பளங்கொடுத்துப் பிறகு பிறர்தேசத்தின் சேனைத்தலைவர்களுக்கு அவரவர்கட்கேற்ற படி விலைபெற்றபொருளையே ரஹஸ்யமாகக் கொடுக்கிறாயா? குந்திபுத்ரனே! முதலில் இந்திரியங்களையடக்குவதனால் தன்னையேஜயித்துக்கொண்டபிறகு புலன்களையடக்காமல் தவறிநடக்கும்பிறரை வெல்லக்கருதுகிறாயா? நீ சத்துருக்களையெதிர்த்ததுச் செல்லுகையில் நீதிசாஸ்திரப்படி நன்றாகபரிசோதிக்கப்பட்ட ஸாமதானபேததண்டங்களென்னுமுபாயங்கள் முன்செல்லுகின்றனவா? மனிதர்க்கரசே! உன் தேசத்தை உறுதியுள்ளதாகச்செய்தபிறகு பிறரிடம்செல்லுகிறாயா? அவர்களைஜயிப்பதற்குப பராக்கிரமத்தைச் செலுத்துகிறாயா? ஜயித்தபின் அவர்களைக்காப்பாற்றுகிறாயா? [5]எட்டுவகையங்கங்களோடுகூடிய [6]நால்வகைசேனையும உன்படைத்தலைவர்களால்நன்றாகநடத்தப்பட்டு எதிரிகளையெதிர்த்துக் கண்டிபபதாயிருக்கிறதா? பகைவரைத் தன் புறச்செய்கிற மஹாராஜாவே! அயல்ராஜ்யங்களில் பயிரறுக்குங்காலத்தையும் பயிரைக்காபபாற்றுங்காலத்தையும் விட்டுவிடாமல் மாற்றரசர்களைவதஞ்செய்கிறாயா? உன்னுடைய அதிகாரிகளனேகர்கள் உன் தேசத்திலும் பிறர்தேசங்களிலுமுள்ள காரியங்களைச் சேர்ந்துநடத்தி ஒருவரையொருவர் காபபாற்றிவருகின்றனரா? மஹாராஜாவே! உணவுகளையும் உடமபின்மேல்படத்தக்க சாதனமுவஸ்துமுதலியவற்றை

[1] மனஊக்கத்தைக் கெடுப்பது.

[2] மூன்றுவிதமான பலங்கள்:—மந்தரம் = ராஜ்யாலோசனை, கோசம் = பொக்கிஷம், சேனை = படை.

[3] பின்பலம = தான் ஒருதேசத்தைநோக்கி யுத்தத்துக்குமுன்செல்லும்போது பின்தேசத்தரசர்கள் தன்தேசததை ஆக்ரமிக்காமலிருக்கும்படி எல்லைக்காவலாக வைக்கப்படும்சேனை.

[4] மூலபலம = தன்தேசத்தில் நிலைமையாகஇருக்கும் சேனை.

[5] தேர், யானை, குதிரை, காலாட்கள், படைத்தலைவர்கள், வேலைக்காரர்கள், வேவுகாரர்கள், அந்தஅந்ததேசங்களின் தலைவர்கள்.

[6] மூலபலம் - பரம்பரையாகவ்ந்த சேனை, மந்திரி முதலியவர்கள் மித்ரபலம், ப்ருதியபலம், ஆடவிகபலம்.

யும் மோக்கத்தக்கவற்றையும் உனக்குரும்பிக்கையானவர்கள் [1]பாது காக்கின்றனரா? பொக்கிஷமும, தான்யசாலையும், வாகனங்களும், வாயிலும், ஆயுதங்களும, த்ரவ்யத்தின்வரவும, உன்னுல்நன்மைபெற்று உன்னிடம்பற்றுள்ளவரால் நடத்தப்படுகின்றனவா? மனிதர்களுக்கதி பதியே! (சமையற்காரன்முதலிய) ஸபீபத்தாராலும் (சேனைமுதலிய) வெளியோராலும் உனக்குத்தீங்குவராமலும, உன்சுற்றத்தாரால் அவர் களுக்குத் தீங்குவராமலும, சுற்றத்தாருள்ளும ஒருவராலொருவருக் குத் தீங்குவராமலும் பாதுகாக்கிறாயா? பானத்திலும சூதாட்டத் திலும் (வேட்டைமுதலான) விளையாட்டுக்களிலும பெண்களிடத்தும் உன்மனம்பற்றினதனுலுண்டானசெலவைக் காலையில (கணக்கர்கள்) [2]தெரிந்துகொள்ளாமலிருக்கின்றனரா? [3]வீரவின் காற்பாகத்திலாவது அரைப்பாகத்திலாவது முக்காற்பாகத்திலாவது உனதுசெலவுமுடி ந்துபோகிறதா? உறவினரையும ஆசாரியர்களையும் மூதறோரையும் வர்த்தகர்களையும் சிற்பிகளையும் அடுத்தவரையும் வறியர்களையும் தனங் களாலும் தான்யங்களாலும் அடிக்கடி அனுக்கிரஹிக்கிறாயா? வரவு செலவுபார்க்க நியமிக்கபபட்ட கணக்கர்கள எழுதுக்காரர்களை வரும் ஒவ்வொருநாளும் காலைவேளைகளில வரவுசெலவுகளை [4]நட த்துகின்றனரா? காரியங்களில்லமர்த்தர்களும நன்மையைக்கருதுகிற வர்களும் நெடுநாளாகஅன்பர்களுமான அதிகாரிகளை முன்னேகுற்றத் தைக்காணுமல் அவர்களை அதிகாரங்களிலிருந்து விலக்காமலிருக்கி றாயா? பாரதனே! உயர்ந்தவர்களும தாழ்ந்தவர்களும் நடுத்தரமானவர் களுமாகிய மனிதர்களையறிந்து அவரவருக்குத்தக்கவேலைகளில் அவர் அவர்களைநியமிக்கிறாயா? அரசனே! உலோபிகளும திருடர்களும் பகைவர்களும் வேலைபபயிற்சியிலலாதவர்களும் உன்காரியங்களில்பிர வர்த்திக்காமலிருக்கின்றனரா? திருடர்களாலும் பொருளாசை கொண்டவர்களாலும் பெண்களுக்குவசப்பட்டராஜகுமாரர்களாலும் உன்னலும் உனதுராஜ்யம் பீடிக்கப்படாமலிருக்கிறதா? பயிரிடுவோர் கள் திருபதியோடிருக்கின்றனரா? உன்ராஜ்யத்தில் நீர்நிறைந்த

---

[1] அவற்றில் விஷஸம்பந்தமில்லாமலிருக்கும்படி பார்க்கின்றனரா?

[2] தெரிந்துகொள்ளாமலிருக்கின்றனரா என்பதற்கு நடக்காமலிருக்கிற தாஎன்பதுகருத்து. பானம்முதலிய விஷயங்களைப்பற்றிய செலவைத் தர் மானுஷ்டானகாலமான காலைவேளையில் தெரிவித்தால அப்போதுவரைகிருக் கும் புரோஹிதர்முதலான பெரியோர்கள் கெடுதலையறிந்துவிட்டுவிடுவார்கள் என்பதை பழையஉரை.

[3] வரவுக்குட்பட்டுச் செலவிருக்கவேண்டுமென்பதுகருத்து.

[4] தெரிவிக்கின்றனரா? என்பதுபழையஉரை.

பெரியதடாகங்கள் ஒவ்வோரிடங்களிலும் இருக்கின்றனவா? பயிர்களது வானத்தையெதிர்பாராமலிருக்கிறதா? பயிரிடுகிறவர்களுக்குச் சோறும் வித்தும் நஷ்டப்படாமலிருக்கின்றனவா? ஓவ்வொருவனுக்கும் தூற்றுக்கணக்கானதனத்தை வட்டிக்குக்கடன்கொடுத்து உபகாரஞ்செய்கிறாயா? அன்பனே! உலகேசதத்தியவர்த்தகம் யோக்கியர்களானமனிதர்களால் நன்றாகநடத்தப்படுவருகிறதா? அன்பனே! வர்த்தகத்தைச்சார்ந்துதான் இவ்வுலகம் ஸுகமாக அபிவிருத்தியாகிறது. ராஜாவே! [1]உன்தேசத்தில் சூரர்களும் அறிவுமுதிர்ந்தவர்களும் நன்னடையுள்ளவாகளுமாகிய [2]ஐந்துஐந்துபேர்சேர்ந்து தேசத்துக்கு க்ஷேமத்தைச்செய்கின்றனரா? நகரங்களைக்காபபதற்காகக் கிராமங்கள்நகரங்கள்போல்வும், கிராமங்களின்எல்லைகள் கிராமங்கள் போலவும் செய்யப்பட்டிருக்கின்றனவா? அவையெல்லாம உன்வசத்திலிருக்கின்றனவா? உன்தேசத்தில் திருடரையடிபபவர்கள் ஸேனையிலுள்தொடரபபட்டு ஸமபூமிகளிலும் மேடுபள்ளங்களிலும் நகரங்களிலும ஸஞ்சரிக்கின்றனரா? மங்கையாகளை அன்பாகநடதகுகிறாயா? அவர்கள் நன்றாகபபாதுகாகபபட்டிருக்கிறாகளா? அவர்களை நம்பாமலிருக்கிறாயா? அவர்களிடம ரஹஸ்யதைச சொல்லாமலிருக்கிறாயா? ராஜாவே! காலங்கடக்கததகாதகாரியதைக்கேட்டு அதன் பயனையுமஆராய்ந்து பிறகு அநதபபுரதில இன்பங்களை அனுபவித்துக்கொண்டு படுதிராமலிருக்கிறாயா? ராஜாவே! இரவில் [3]மூத விரண்டியாமங்கள் தூங்கிப பின்யாமத்திலெழுந்து அறமபொருள்களைப்பற்றிச் சிநதிகிறாயா? பாண்டவனே! ஒவ்வொருநாளும் காலத்திலெழுநது அலங்காரங்களைச்செய்துகொண்டு காலநதெரிநதமநதிரிகளுடன்கூட ஜனங்களுக்குக் காட்சிகொடுக்கிறாயா? பகைவரையடக்குகிறவனே! சிவபபுஉடுபபுக்களைத்தரிக்கும கீத்திகளைக்கையிற் பிடிதது செவ்வையாக அலங்காரங்களைச் செய்துகொண்டுமிருக்கும மனிதர்கள் உன்னைகாபபதறகாகச் சூழ்ந்திருகின்றனரா? ராஜாவே! தண்டிக்கத்தக்கவர்களையும் பூஜிக்கத்தக்கவர்களையும் நன்றாகபபகுத்

---

1 ஒவ்வொருகிராமத்தினுடைய க்ஷேமகாரியஙகள்.

2 ப்ரசாஸ்தா (உததரவுகொடுப்பவன்), ஸமாஹர்த்தா (ஜனஙகளிடம் தீர்வைவாஙகி ராஜாவுக்குக்கொடுக்கிறவன்), ஸம்விதாதா (ப்ராஜைகளுககும ஸமாஹர்த்தாவுக்கும் இடையிலிருதது வேலைபார்ப்பவன்), லேககன் (எழுதுகிறவன்), ஸாக்ஷி ஆகஜீவர்.

3 முதல்யாமம் ஸாயங்காலத்தைச்சேர்ந்ததாதலால், இரண்டாவது மூன்றாவதுயாமமே முதலிரண்டியாமங்களென்று கொள்க. பின் யாமம் என்பதற்கு நான்காம்யாமம் என்று பழையஉரை கூறுகிறது. அதனாலும் இது அணியப்படும்.

ತಿರಿಂತು ನಂಬರಾಯಿನುಂ ಪಗೆವರಾಯಿನುಂ ಅವರ್ಕಳ್ವಿಷಯತ್ತಿಲ್ ಯಮ
ನೀಪ್ಪೋಲಚ್ ಚಮಮಾಕನಡಕ್ಕಿಱಿಯಾ? ಪಾರ್ತ್ತನೇ! ಉಟಂಬಿನ್ನೋಯೈ
ಔಷಧತಂಕಳಾಲುಂ ಪತ್ತಿಯಂಕಳಾಲುಂ ಮನತ್ತಿನ್ನೋಯೈಪ್ ಪೆರಿ
ಯೋರ್ಕಳೈ ಅಡುಪ್ಪತಿನಾಲುಂ ಎಪ್ಪೋದುಂ ನಿವಿರುತ್ತಿಚೆಯ್ಕಿಱಿಯಾ? [1]ಎಟ್
ಟುಅಂಗಂಕಳೋಟುಕೂಡಿಯ ಸಿಕಿತ್ಸೈಯಿಲ್ ಸಮರ್ತ್ತರ್ಕಳುಂ ವೇಂಡಿನವರ್
ಕಳುಮಾನ ವೈತ್ತಿಯರ್ಕಳ್ ಉನ್ಸರೀರತ್ತಿಲ್ ಎಪ್ಪೋದುಂ ಅನ್ಬುಂ ಹಿತ
ಮುಮುಳ್ಳವರ್ಕಳಾಯಿರುಕ್ಕಿನ್ರನರಾ? ರಾಜಾವೇ! ಉನ್ನಿಡಮ ಜಿಯವಹಾ
ರತ್ತಿಱ್ಕಾಕವಂದ್ತ ವಾದಿಪ್ರತಿವಾದಿಕಳುಕ್ಕುಪ್ ಪೊರುಳಾಸೈಯಿನಾಲಾ
ವತು ಅಱಿಯಾಮೈಯಿನಾಲಾವತು ಕಾವತ್ತಿನಾಲಾವತು ಎವ್ವಕೈಯಿಲುಂ
ನಿಯಾಯವಿರೋತಂಚೆಯ್ಯಾಮಲಿರುಕಿಱಿಯಾ? ಪೊರುಳಾಸೈಯಾಲಾವತು ಅಱಿ
ಯಾಮೈಯಾಲಾವತು ಪಿಱರ್ಸೊಹುತತ್ತಿನಾಲಾವತು ಅಡಿ
ತ್ತಮನಿತರ್ಕಳಿನ್ಪಿೞೈಪ್ಪಬೈಕ್ ಕೆಡುಕ್ಕಾಮಲಿರುಕ್ಕಿಱಿಯಾ? ಪಟ್ಟಣತ್ತಿ
ಲುಂ ದೇಚತ್ತಿಲುಮುಳ್ಳವರ್ಕಳ್ ಎದಿರ್ಕಳಿನಾಲ್ ಪೊರುಳ್ಕೊಡುತ್ತು
ವಚಪ್ಪಡುತ್ತಪ್ಪಟ್ಟವರ್ಕಳಾಕ ಒನ್ರುಚೇರಾತು ಎವ್ವಕೈಯಿಲುಂ ಉನ್ನು
ಡನ್ ಪಕೈಕ್ಕಾಮಲಿರುಕ್ಕಿನ್ರನರಾ? ಉನತುವಲಿಮೈಯಿನಾಲ್ವೆಲ್ಲಪ್ಪಟ್
ಟುತ್ ತನ್ವಲಿಮೈಕುಱೈನತ ಚತ್ರುವಾನವನ್ [2]ಮನತರತ್ತಿನಾಲಾವತು ಮಂತ್
ರಮ ಸೈನ್ಯಮ್ ಇರಂಡ್ಟಿನುಮಾವತು ವಲಿಮೈಯುಳ್ಳವನಾಕ ಎವ್ವಕೈಯಿ
ಲುಂ ಆಕಾಮ್ಯಮಿರುಕ್ಕಿಱಿನು? ತಲೈವರ್ಕಳಾಯುಳ್ಳ ಅಮಾತ್ಯರ್ಕಳ್ ಅಂಜೈವರುಮ
ಉನ್ನೈನೇಚಿಕ್ಕಿನ್ರನರಾ? ಅವರ್ಕಳ್ ಉನ್ನಾಲ್ ಅೞೈಕ್ಕಪ್ಪಟ್ಟು ಉನ್
ಕಾರಿಯತ್ತುಕ್ಕಾಕ ಉಯಿರೈಯುಂವಿಡುವಾರ್ಕಳಾ? [3]ಎಲಾವಿತ್ತೈಕಳಿಲುಂ
ಬಿರಾಮಣರ್ಕಳ್ವಿಷಯತ್ತಿಲುಂ ಕುಣಂಕ್ಕೊಯನುಸರಿತ್ತು ಉನ್ಮರಿಯಾತೈ
ನಡನ್ತುವರುಕಿಱತಾ? ಮುನಿವರ್ಕಳ್ವಿಷಯತ್ತಿಲುಂ ಉನ್ನನ್ಮೈಕ್ಕುಕ್ಕಾರ
ಣಮಾನ ಸಿಱನ್ತಪೂಜೈನಡನ್ತುವರುಕಿಱತರ್? ಸ್ವಾಕ್ಕತತ್ತೈಯುಮ ಮೋಕ್ಷತ್
ತೈಯುಂ ತರುವನವಾಕಿಯ ನಿತ್ತಿಯತಕ್ಷಿಣೈಕಳೈ ಅವರ್ಕಳುಕ್ಕುಅಳಿಕ್ಕಿ
ರುಯಾ? ವೇತತ್ತಿನಾಲಿಯಬಪಟ್ಟವೈಯುಂ ಮುನ್ನೋರ್ಕಳಾಲಾಚರಿಕ್ಕಪ್
ಪಟ್ಟವೈಯುಮಾನ ವೇತೋಕ್ತಕರ್ಮಂಕಳೈ ಅವರ್ಕಳೈಪ್ಪೋಲವೇ ಊಕ್
ಕತ್ತುಡನ್ ಚೆಯ್ತುವರುಕಿಱಿಯಾ? ಕುಣಂಕ್ಕಳ್ಪೊರುನತಿನಬಿರಾಮಣರ್ಕಳ್

---

[1] ಎಟ್ಟುಅಂಗಂಕಳಾವನ. 1. ಶಲ್ಯಂ=ತೇಕತ್ತುಕ್ಕುಳ್ಳಿರುಕ್ಕುಂ ಮೂಳ್ಮುತ
ಲಿಯವಟ್ಱೈ ಎಡುಪ್ಪತು. 2. ಶಾಲಾಕಯಂ=ಕುತ್ತಿ ಕೀಳ್ಎಡುಪ್ಪತು. 3. ಕಾಯಚಿಕಿತ್ಸೈ-
ನೋಯ್ಕ್ಕು ಮರುನ್ತುಕೊಡುಪ್ಪತು. 4. ಭೂತವಿತ್ತೈ=ಪೇಯ್ಮುತಲಿಯವಟ್ಱೈ ಒட்டு
ವತು. 5. ಕೌಮಾರಭೃತ್ಯಂ=ಕುೞನ್ತೈಕಳುಕ್ಕುಂ ಸ್ತ್ರೀಕಳುಕ್ಕುಂ ವೈತ್ತಿಯಂ.
6. ಅಚತತಂತ್ರಂ=ವಿಷವೈತ್ತಿಯಂ. 7. ರಸಾಯನತಂತ್ರಂ=ತೇಕಪುಷ್ಟಿ ಆಯುಳ್
ಮುತಲಿಯವಟ್ಱೈ ಉಂಡಾಕ್ಕುವತು. 8. ವಾಜೀಕರಣಂ=ಪೋಕಂಕಳಿಲ್ ಅಧಿಕಉತ
ಸಾಹಪ್ಪಡಿತ್ತುವತು.

[2] ಮಂತ್ರಂ=ಪುತ್ತಿಬ್ಬಲಂ.

3 ನಚಿಷ್ಟಜಿ ಎನ್ಬತೈ ಮಾಱ್ಱಿಪ್ ಪಾಡಂಕಳೈಯನುಸರಿತ್ತುಂ ಪೞೈಯಉರೈ
ಯೈ ಅನುಸರಿತ್ತುಂ ಅನುಜಿಷ್ಟಜಿ ಎನ್ಱು ಪಾಡಂಕೊಳ್ಳಪ್ಪಟ್ಟತು.

உனதுகிருகத்தில் சுவையுள்ளநிறந்தபோஜனங்களை உன்முன்னிலையில் தக்ஷிணையோடுபுஜிக்கின்றனரா? வாஜபேயம் பௌண்டரீகம்முதலிய யாகங்களெல்லாவற்றையும மனஉறுதியோடும் பக்தியோடும் பூர்ணமாக நிறைவேற்றமுயல்கின்றாயா? உறவினரையும ஆசார்யர்களையும் மூத்தோரையும் தேவர்ஷிகளையும முனிவர்களையும் கிராமங்களின்முக்கியமான (அரசுமுதலிய) புண்ணியவிருக்ஷங்களையும் பிராமணர்களையும் வணங்குகிறாயா? குற்றமற்றவனே! உன்னால் யாருக்கும் வ்யஸனமாவது கோபமாவது உண்டாக்கப்படாமலிருக்கின்றதா? மங்கள திரவியங்களைக் கைகளிலவைத்துக்கொண்டு ஜனங்கள் உன்பக்கத்திலிருக்கின்றனரா? குற்றமறறவனே! தாமார்த்தகாமங்களைப்பகுத்தறிவதும் ஆயுளையும்புகழையும தருவதுமாகிய இருத (முற்கூறிய) புத்தியும் நடையும் உன்னிடதிலிருக்கின்றனவா? இருதபுதபுத்தியோடிருப்பவனுக்கு ராஜ்யம்கெடாது. அபபடிப்பபட்டஅரசன் பூமியையஜயித்து மிகவும்ஸுகமாக அபிவிருதியடைவான். பரிசுததமான மனத்தூய்மையுள்ளவனும குறறமறறவனுமான யோக்கியன் திருட்டுத்தொழிலில் பழிசுமத்தபபட்டபோது, அவன் ஸமர்த்தர்களானஅதிகாரிகளினால் பொருளரிசைகொண்டு சாஸ்திரங்களைப பாராமலே கொல்லப்படாமலிருக்கிறனை? குற்றம்செய்யும்போது உளவறிந்தவர்களால் பார்க்கப்படடுத் திருடபபொருளுடன் பிடிக்கப்பட்டகுற்றவாளியானதிருடன் பொருளாசையிலை விடப்படாமலிருக்கிறனை? பாரதனே! செல்வனுக்கும் வறிஞனுக்கும உண்டானவியவகாரங்களை உனதுநியாயஸபையோர் பொருளுக்கிணங்கி வித்தியாஸமாகப பாராமலிருக்கின்றனரா? நாஸ்திகம், பொய், கோபம், ஊக்கமின்மை, காரியங்களைவிளமபித்தல, தெரிநதவர்களைபபாராமை, சோமபல், ஐம் புலன்களறிவாடபாடு, ஒருவனுகவேகாரியங்களைஆலோசிபபது, காரியம்தெரியாதவாகளுடன் ஆலோசிப்பதீ, நிச்சயிக்கபபட்டவற்றைச் செய்யாமலிருப்பது, மந்த்ராலோசனையை ரஹஸ்யமாக வைத்துக் கொள்ளாமை, மங்களகாரியங்கள் முதலியவற்றைச் செய்யாமை, யாவர்க்கும்எதிர்கொண்டெழுந்திருபபதுஆகிய பதினெண்குராஜதோஷங்களை நீவிட்டிருக்கிறாயா? வேநருன்றினஅரசர்களும் இந்தக்குற்றங்களினால் பெரும்பாலுங்கெடுவர். உனதுவேதங்கள் புயன்பட்டனவா? உன்னுடையதனம் பயன்பட்டதா? உனதுமனைவிகள் பயன்பட்டனரா? உனதுகல்விகேள்வி பயன்பட்டனவா"? என்று நாரதர் ப்ரச்னஞ்செய்தார்.

யுதிஷ்டிரர், "வேதங்கள்பயன்படுவதுஎவ்வகை? பொருள்பயன்

படுவது எவ்வகை? மீனவி பயன்படுவது எப்படி? கேள்வி பயன்படுவது எவ்வாறு"? என்றுகேட்க, நாரதர், " அக்னிஹோத்ரத்தினால் பயன்படுவது வேதம். கொடுப்பதினாலும் அனுபவிப்பதினாலும் பயன்படுவது பொருள். இன்பத்தினாலும் ஸந்ததியினாலும் பயன்படுபவள் மீனவி. வணக்கத்தினாலும் ஒழுக்கத்தினாலும் பயன்படுவது கேள்வி" என்றுமறுமொழிஉரைத்தார். சிறந்ததவமுள்ள நாரதமுனிவர் இவ் வாறுசொல்லியபிறகு யுதிஷ்டிரரைத திரவியலாபத்திற்காகத் திரும்ப வும்வினவத்தொடங்கினர்: " தாரமோசத்திலிருந்துவந்த வணிகர்க ளிடம் சுங்கம்வாங்குகிறவர்களால குறிப்பிடகப்பட்டசுங்கம் வாங்கப் படுகின்றதா? ராஜாவே! உனதுநகரத்திலும் தேசதத்திலும் கௌர விக்கப்பட்டமனிதர்கள் மோசங்களில்அகப்படாமல சரக்குக்களைவரு விக்கின்றனரா? நண்பனே! அர்த்தசாஸ்திரம்தெரிந்தவரும் தர்மத் துக்கொற்றுமையாகத் தமதுலாபத்தைபபார்ப்பவருமாகிய பெரியோர் களின் தர்மார்த்தங்களடங்கியசொற்களை என்றும்கேட்கிறுயா? உழ வுத்தொழிலினால்உண்டான பூக்களும் கனிகளுமாகிய பச்சைத்தான் யங்களிலும் உலர்ந்ததான்யங்களிலும், பசுக்களின்புஷ்பங்களும் பலங் களுமாகிய பால்நெய்களிலும் ஸாரமானவை தர்மதத்திற்காகப பிரா மணர்களுக்குக் கொடுக்கபபடுகின்றனவா? எப்போதும எல்லாச்சிற் பிகளுக்கும நாளுமாஸங்களுக்கு வேண்டியபொருளையும் கருவிகளை யும்குறித்தகாலத்தில் நன்றுகக்கொடுக்கிறுயா? மஹாராஜாவே! செ ய்தவேலையைப பார்க்கிறுயா? செய்தவீனச சிலாகிக்கிறுயா? தெரிந் தவர்களின்நடுவில் கௌரவிதது அவனுக்குப் பரிசளிக்கிறுயா? பரத சிரேஷ்டனே! பிரபுவே! யானை, குதிரை, தேர்களைபபற்றிய முதல் நூல்களெல்லாவறறையும் கிரஹிக்கிறுயா? பரதசிரேஷ்டனே! உன் கிருகத்திலதனுர்வேதத்தின்ஸூத்திரங்களும் நகரத்துக்குரிய யந்திர சாஸ்திரதின்ஸூத்திரங்களுமா நன்றுகபபயிற்சி செய்யபபடுகின் றனவா? குற்றமற்றவனே! எல்லா அஸ்திரங்களும் [1]பிரம்மதண்ட மென்றுசொல்லப்பட்ட மந்திரஸித்தியும் சத்துருக்களையழிப்பன வாகிய விஷபபிரயோகங்களறிதும் உன்க்குத தெரிந்திருக்கின் றனவா? அக்னிபயத்திலிருந்தும ஸர்ப்பபயத்திலிருந்தும் சோகபய த்திலிருந்தும் பேய்பிசாசுபயத்திலிருந்தும உன்தேசமீனத்தையும் காப்பாற்றுகிறுயா? தர்மந்தெரிந்தவனே! கண்ணில்லாதவர்களையும் ஊமைகளையும் முடவர்களையும அங்கஹீனமுள்ளவர்களையும் ஆதரவற் றவர்களையும் ஸந்யாஸிகளையும் தந்தைபோலக் காப்பாற்றுகிறுயா?

[1] ஆபிசாரஸித்தை.

மஹாராஜாவே! உறக்கம், சோம்பல், பயம், கோபம், மிருதுத்தன்மை, காரியங்களைவிளம்பித்தலென்னும் ஆறுதீங்குகளும் உன்னுல் விலக்கப்பட்டிருக்கின்றனவா"? என்றார். கௌரவசிரேஷ்டரும் மஹாத்மாவுமான தர்மர்ஜா பிராமணேந்தமான நாரதருடைய சொற்களைக்கேட்டவுடன் ஸந்தோஷமடைந்து அவர்பாதங்களில்வணங்கி அபிவாதனஞ்செய்து கடவுளுக்கொப்பான அந்தமுனிவரைப்பார்த்து, "நீங்கள் எவ்வாறுசொன்னீர்களோ அவவாறு செய்வேன். என் அறிவானது மிக்கமேன்மையெற்றது" என்றுசொல்லி அவ்வாறே செய்யவுந் தொடங்கினர். அதனுல், அந்தராஜா கடல்சூழ்ந்தபுவனியையும்பெற்றார். நாரதர், "எந்தஅரசன் நான்குவருணங்களையும் காப்பாற்றுவதில இவ்வாறுநடக்கின்றனனே அவன் இம்மையிலும் மிகச்சுகமாக மகிழ்ந்திருந்து மறுமையிலும் இந்திரலோகத்தையடைவான்" என்றுசொன்னர்.

ஆறுவது அத்தியாயம்.

ம ந் த் ர ப ர் வ ம். (தொடர்ச்சி.)

(தம்முடையஸபைக்குஒப்பான ஸபையைக் கண்டதுண்டாவென்று தர்மராஜர்கேட்க, நாரதர் தேவஸபைகளைக்கண்டிருப்பதாக மறுமொழிகூறியது.)

தர்மராஜாவான யுதிஷ்டிரர், நாரதமஹரிஷி சொன்னபிறகு அதைக்கொண்டாடி அவரால் அனுமதிகொடுக்கப்பெற்று முறைப்படி மறுமொழியுரைத்தார்: "பகவானே! நீங்கள் இந்தத்தர்மத்தின்துணிபைச் சாஸ்திரப்பிரகாரமும் யுக்தியுத்தமாகவும் உரைத்தீர்கள். இந்த ஒழுங்கானது என்னுல் கூடியவரையில் சாஸ்திரத்தையனுஸரித்துச் செய்யப்படுகிறது. (மூற்காலத்தரசர்கள் நியாயமாகத் தனங்களைச் சம்பாதித்துக் காரியங்களைச் செய்யவேண்டியமுறைப்படி உபாயங்களினுல் பயன்படச்செய்தனர்.) • அதில் ஸந்தேஹமில்லை. பிரபுவே! யாமும் அவர்களின்நல்வழியிற் செல்லவிரும்புகிறோம்; ஆனுல் அவர்கள் மனத்தைக்கட்டிநடந்ததுபோல நடக்கமுடியாது" என்றார். தர்மாத்மாவும் சிறந்தமஹிமையுள்ளவருமான யுதிஷ்டிரர், நாரதர்சொன்னதைச் சிறப்பித்து இவ்வாறுரைத்து அவர்தொல்லைக்கொண்டாடி, அளவற்றமஹிமையுள்ளவரும் த்ரிலோகஸஞ்சாரியும் தேவரிஷியுமான அந்தநாரதமுனிவர் ஸுகமாகஉட்கார்ந்து இளைப்பாறிச் சற்று

நேரமானபின், சரியானகாலமென்றுகண்டு அவர்அருகிலிருந்து அரசர்களின்நடுவில் விஞவினர்: "பிராமணரே! நீங்கள் ஆதியில் பிரம்மாவினுல்படைக்கப்பட்ட பலவகையான அனேகலோகங்களேப் பார்த்துக்கொண்டு மனேவேகமாக எப்போதும ஸஞ்சரிக்கிறீர்கள். இந்த ஸபையைப்போன்றதாகவாயினும் இதற்கு மேற்பட்டதாகவாயினும் மூள்ள ஒருஸபை [1]இதற்குமுன் எங்கேயாவது பார்க்கப்பட்டதா? இனியாவது உண்டாகுமா? கேட்கின்றனைக்கு இதைச்சொல்வீராக" என்றார். அந்தத்தர்மாஜாவின் அந்தச்சொல்லேக்கேட்டு நாரதர் புன்னகையுடன் இன்சொல்லாகப பின்வருமாறு அவருக்கு மறுமொழிகூறலானார்: "அன்பனே! பரதவம்சத்தரசே! உன்னுடைய இந்தஸபையைப்போன்ற ரத்னமயமானஸபை மானிடலோகத்தில் இதற்குமுன் காணபபட்டதுமில்லே; கேட்கப்பட்டதுமில்லே. பரத சிரேஷ்டனே! உனக்குக் கேட்கவிருபபமிருகுமாயின் யமஸபையையும் வருணஸபையையும் இந்திரஸபையையும குபேரஸபையையும்பற்றிச் சொல்வேன். பரதசிரேஷ்டனே! எல்லாவற்றிலுமசிறந்ததும், கலேப்பைநீக்குவதும், தேவலோகத்திற்கும மற்றலோகங்களுக்கு முரிய போகங்கள்பொருந்தியதும், எல்லாஉலகங்களின்உருவங்களு மமைந்ததும், தேவர்களாலும் பிதிர்தேவதைகளாலும் ஸாத்தியர்களாலும் இந்திரியங்களேஜயித்துச் சாஸ்திரபபடி யாகங்கள்செய்தவர்களாலும் சாந்தர்களானமுனிவர்களாலும வேதங்களாலும் தக்ஷிணேகளோடுகூடியயாகங்களாலும் அடையபபெற்றதுமான பிரம்மஸபையைப்பற்றியும் சொல்லுவேன்" என்றார்.

சிறந்தமனமுள்ள தர்மாஜாவான்னயுதிஷ்டிரர், நாரதரால் இவ்வாறுசைக்கப்பெற்றபின், தம்முடையஸஹோதரர்களோடும் அங்குள்ள எல்லாப் பிராமணேத்தமர்களோடும நாரதரைப்பார்த்துக் கைகூப்பிக்கொண்டு சொல்லலானார்: "பிராமணரே! அந்தச்சபைகளெல்லாவற்றையும் சொல்லுங்கள். நாங்கள் கேட்கவிரும்புகிறோம். அந்தச் சபைகளிலுள்ள பொருள்கள்யாவை? அவற்றின்அகலமென்ன? நீளமென்ன? அந்தப்பிரம்மஸபையில் பிரமமாவை ஸேவிபபவர்யார்? மற்றச்சபைகளில்-தேவராஜாவான இந்திரணேயும் சூரிபபுத்திரனை யமனேயும் வருணனேயும் குபேரனேயும் ஸேவிப்பவர்யார்? பிரம்மரிஷியே! இவற்றையெல்லாம் கிரமமாக நீங்கள்சொல்லக்கேட்க எங்களுக்கு

---

[1] பவதா - என்றபாடம்கொள்ளப்பட்டது. பவிதா - என்னும் பாடத்திற்குச் 'காணப்பட்டிருக்கிறதா' என்பதற்குப் பிறகு 'இனியாவது உண்டாகுமா?' என்று சேர்த்துக்கொள்க.

மிக்கவிருப்பமிருக்கிறது" என்றார். இவ்வாறு தர்மராஜரால் கேட்கப்பட்ட நாரதர், "ராஜாவே! அந்தத்தேவஸபைகளைப்பற்றி இப்போது வரிசையாக நான்சொல்லுகிறேன்; கேளும்" என்றுசொல்லினார்.

ஏழாவது அத்தியாயம்.

மந்த்ரபர்வம். (தொடர்ச்சி.)

(இந்திரஸபைச்சிறப்பு.)

நாரதர், "கௌரவராஜனே! உயர்ந்த சிறபவேலைசெய்யப்பட்டதும் இந்திரன் தன்சக்தியினுலஅடைந்ததும ஸூர்யனுக்கொப்பான ஒளியோடுவிளங்குவதுமான இந்திரனதுதிவ்யஸபைப் நூறு யோசனைஅகலமும நூறைமடங்குயோசனைளுமும ஐந்துயோசனை உயரமுமுள்ளதும, அந்தரத்திலிருப்பதும், நினைத்தப்படிசெல்வதும, மூபபு துன்பம கனைபபு அசசங்களைபபோகுவதும, ஸுகத்தையும நன்மையையும தருவதும, வீடுகளும ஆஸனங்களுமுள்ளதும, மனத்திற்கினியதும, கற்பகவிருக்ஷங்களினுல சோபிபபதுமாயிருக்கிறது. பாரதனே! கூருகிபுதரனே! அந்தசசபையில் தேவேந்திரன் கிரீடத்தையும் சிவபபு ரத்தினமிழைத்த தோள்வளைகளையும் தூயஆடைகளையும் விசித்திரமானபுஷ்பமாலைகளையும தனதுதிவ்யசரீரத்தில்தரித்துச் [1]சசி, மஹேந்திராணி, ஸ்ரீ, லக்ஷ்மி, ஹ்ரீ, கீர்த்தி, காந்தியென்னும்ஸ்திரீகளுடன் உயர்ந்தஸிம்மாஸனத்தில் வீற்றிருக்கிறுன். ராஜாவே! அந்தசசபையில [2]ஸுபதமருததுக்களும், லித்யதர்களும, தேவரிஷிகளும, ஸாத்யாகளும, தேவகூட்டங்களும, இந்திரபதத்துக்

---

[1] 'சசியென்னும் பெயரையுடைய மஹேந்திராணி என்பது பழையஉரை. சசி=இந்திரனமனைவி; மஹேந்திராணி=தேவேந்திரபதத்தின் அதிஷ்டான தேவதை; ஸ்ரீ=அழகின்தேவதை; லக்ஷ்மி=செலவதின்தேவதை; ஹ்ரீ=லஜ்ஜை (அதாவது குற்றங்களில் விலகுதல) அதன்தேவதை; கீர்த்தி=புகழின்தேவதை; காந்தி=ஒளியினதேவதை; இந்தத்தேவதைகள் பெண்வடிவங்களாக இந்திரனுடன இருக்கினறனர எனபது கருத்து.

[2] காற்றின் ஏழுபிரிவுகள: 1. ஆவஹம=(மேகமமுதலியவற்றைநடத்துவது) 2. ப்ரவஹம=(ஸூர்யமண்டலத்தைநடத்துவது) 3. ஸம்வஹம=(சந்திரமண்டலத்தைநடத்துவது) 4. உதவஹம=(நக்ஷத்திரங்களைநடத்துவது) 5. விவஹம=(அங்காரகனமுதலிய கிரகங்களைநடத்துவது) 6. பரிவஹம=(ஆகாசகங்கையையும் ஸப்தரிஷிகளையும்நடத்துவது) 7. பராவஹம=(சந்ரனைநடத்துவது); இருஹஸ்தர்களான மருத்துக்கள்என்பது பழைய உரை.

க்ஷத்ரியவர்களும், ஆதித்தியர்களும் ஆகியஇவர்களனைவரும் திவ்ய ரூபங்களோடு பொன்மாலைகள்முதலான அலங்காரங்களையணிந்து கொண்டு பரிசையகளோடும் வேலைக்காரர்களோடும்சேர்ந்து மஹாத்மாவும் பகைவரையடக்குகிறவனுமாகிய தேவேந்திரனை உபாஸிக்கின்றனர். பாவங்களைநீக்கி ஜ்வலிக்கின்றஅக்னிகள்போலப் பரிசுத்தர்களும் மகிமையுள்ளவர்களும் ஸோமலதையைபபிழிந்தவர்களும் துயரமும் அச்சமும் அற்றவர்களும் காற்றையும் ஹோமசேஷத்தையும் புஜிப்பவர்களுமான பராசரர், பர்வதர், ஸாவர்ணி, காலவர், ஏகதர், த்ரிதர், சிறந்தஅறிவுள்ள த்ரிதர், சங்கர், லிகிதர், கௌரசிரரென்னும்முனிவர், கோபமுள்ளதுர்வாஸர், ச்யேனர், தீக்கதமஸ் என்னும் முனிவர், பவித்ரபாணி, ஸாவர்ணி, யாஜ்ஞவல்க்யர், பாலுகி, உத்தாலகர், சுவேதகேது, [1]தாண்டர், பாண்டாயினி, ஹவிஷ்மான், கரிஷ்டர், அரிச்சந்திரனென்னுமரசன், ஹ்ருதயர், உதரசாண்டில்யர், வியாஸர், க்ருஷ்வலர், வர்தஸ்கந்தர், விசாகா, விதாதா, காலா, காலதந்தர், த்வஷ்டா, விச்வகர்மா, தமபுருஷனாகிய கர்ப்பத்திற்பிறந்தவர்களும் பிறவாதவர்களுமான ரிஷிகள், எல்லாலோகங்களுக்கும் ஈச்வரனை வஜ்ரபாணியை ஸேவிக்கின்றனர். பாரதனே! பாண்டவனே! ஸநாதேவர், ஸனாதர், சிறந்ததவமுள்ள வால்மீகி, பொய்யாமொழியான ஸுகர், பிரதிஜ்ஞைதவறாதவான பரசேதஸ், மேதாதிதி, வாமதேவர், புலஸ்தியர், புலஹர், க்ரது, மருத்தர், மரீசி, சிறந்ததவமுள்ள ஸ்தாணுவென்பவர், கஸ்யபர், கௌதமர், தார்க்ஷ்யர், வைச்வானரமுனி, காலகவ்ருக்ஷீயரென்னுமமுனிவர், ஆச்சாவ்யர், ஹிரண்மயர், ஸம்வர்த்தர், தேவஹவ்யர், [2]தவவன்மையுள்ள விஷ்வக்ஸேனர் ஆகிய இந்த முனிவர்களும், தேவதாரூபங்களையுடைய தீர்த்தங்கள், ஓஷதிகள், சித்தை, மேதை, ஸாஸ்வதி, தாமார்த்தகாமங்கள், மின்னல்கள், முழங்குகின்ற மேருண்டமேகங்கள், காற்றுக்கள், யாகங்களை நடத்தும் [3]இருபத்தேழுஅக்னிகள், 3அக்னிஷோமர்கள்

---

1 'தாண்டியர்' என்பதும் பாடம்.

2 கார்ஹபத்யம், ஆஹவநீயம், தக்ஷிணம், நிர்மந்த்யம், வைத்யுதம், சூரம், ஸம்வர்த்தம், லௌகிகம், ஜாடரம், விஷ்ணகம், க்ரவ்யாத, க்ஷேமவான், வைஷ்ணவம், தஸ்புமான், பலதம், சாந்தம், புஷ்டம், விபாவஸு, ஜ்யோதிஷ்மான், பரதம், பதரம், ஸ்விஷ்டக்ருத், வஸுமான், க்ருது, ஸோமம், பித்ருமான், அங்கிரஸ் என்பன.

3 சந்திரனுடன்சேர்த்தும் இந்திரனுடன் சேர்த்தும் அக்னியை இரண்டு தரம்கூறுவது ஹவிஸ்ஸுகளை வெவ்வேறுகக்கொடுக்கவேண்டுமென்பது கருத்து.

இந்திராக்னிகள், மித்திரன், ஸவிதா, அர்யமா, பகன், விச்வேதேவர்கள், ஸாத்யர்கள், பருஹஸ்பதி, சுக்கிரர், விச்வாவஸு, சித்ரஸேனன், ஸுமனன், தருணன், யஜ்ஞபுருஷர்கள், தக்ஷிணைகள், க்ரஹங்கள், ஸ்தோபங்கள் என்னப்பட்ட ஸாமவேதஸ்வரங்கள், யாகங்களோடத்தும் மந்த்ரங்கள், இவர்களனைவரும் அந்தசசபையில் சேர்ந திருக்கின்றனர். ராஜாவே! ரம்பை, ஊர்வசி, மேனகை, க்ருதாசி, பஞ்சசூடை, விச்வாசிதாதிமுதலான அப்ஸரஸுகளும் வித்யாதராகளும் அழகானகந்தர்வர்களும் நர்த்தனங்களாலும் வாத்தியங்களாலும் பாட்டுக்களாலும் பலவகைஹாஸ்யங்களாலும் தேவராஜாவான இந்திரனை ஸந்தோஷப்படுத்துகின்றனர். பிரமமரிஷிகள் ராஜரிஷிகள் தேவரிஷிகளனைவரும் சரித்திரங்களையும் பராக்ரமத்தையும்பற்றிய துதிகளையும மங்களங்களையும்சொல்லி, வலாஸுரனையும் வ்ருத்திரனையுங்கொன்ற மஹாத்மாவான தேவேந்திரனைச் சிறபபிக்கின்றனர். மற்றவர்களெல்லாரும் பூமாலைகளைச்சூடி ஆபரணங்களையணிந்து திவ்யவிமானங்களிலேறி ஜ்வலிக்கின்றஅக்னிகள்போலப் போக்கும் வரவுமாகவிருக்கின்றனர். பிருஹஸ்பதியும் சுக்ரரும் எப்போதும் அங்கேயேயிருக்கின்றனர். ராஜாவே! மஹாத்மாக்களும் உறுதியானதவமுள்ளவரும் சந்திரனப்போலக் காட்சிக்கினியவருமான இவர்களும் பிருகுவும் ஸப்தரிஷிகள்முதலான மற்றும்அனேகர்களும் பிரம்மாவின்ஆஜ்ஞையினல் அங்கே வந்துபோகின்றனர். சிறந்த கைகளையுடைய ராஜாவே! இந்தப்புஷ்கரமாலினி என்னும் இந்திரஸபையை நான்பார்த்திருக்கிறேன். யமஸபையைபற்றியும் கேள்.

எட்டாவது அத்தியாயம்.

மந்த்ரபர்வம். (தொடர்ச்சி.)

(யமஸபைபச்சிறப்பு.)

யுதிஷ்டிரா! யமஸபையைச்சொல்லபோகிறேன். அதைத்தெரிந்துகொள். பார்த்தனே! யமனுக்காக அந்தச்சபையை விசுவகர்மா செய்தான். ராஜாவே! பாண்டவனே! ஒளியேஉருக்கொண்டஅந்தச்சபை நூறுயோசனைக்குமேலேஅகலமுள்ளதும், ஸூரியனைப்போன்றஒளியினல் எங்கும்பிரகாசிப்பதும், நினைத்தஉருவம்அமைவதும், மிக்ககுளிர்ச்சியும் அதிகவெப்பமுமில்லாமல் மனத்தைமகிழ்விப்பதுமாகஉள்ளது. துயரம், மூப்பு, பசி, தாகம், வெறுப்பு, மனச்

சோர்வு, கோப்பு, கெடுதல் இவற்றில் ஒன்றும்அச்சபையிலில்லை. தேவர்க்கும் மானிடர்க்குமுரிய போகங்களனைத்தும் அதில்உள்ளன. பகைவரையடக்குகிறவனே! சுவையுள்ளவையும் பலத்தைத்தருகின்றவையும் மனத்தைக்கவருகின்றவையும் தெவிட்டாதவையுமான [1]பக்ஷியம் போஜ்யம் லேஹ்யம சோஷ்யம் பேயம்இவைமிகுதியாகஇருக்கின்றன. சிறந்தமணமுள்ளபூமாலைகளும் நிறைந்தபலன்களைத்தரும் மாங்களும் சுவையுள்ளதண்ணீரும் வெகுரீரும எக்காலமுமிருக்கின்றன. அன்பனே! அந்தச்சபையில் புண்ணியஞ்செய்த ராஜரிஷிகளும் பரிசுத்தர்களான பிரமமரிஷிகளும மகிழ்ச்சியுடன் ஸூர்யபுத்ரனான யமனை ஸேவிக்கின்றனர். அரசர்க்கரசே! யயாதி, நஹுஷன், பூரு, மாந்தாதா, ஸோமகன், நிருகன், திரஸதஸ்யுவென்னுமராஜரிஷி, க்ருதவீர்யன், சுருதச்ரவன், அரிஷ்டநேமி, ஸித்தன், கிருதவேகன், கிருதி, நிமி, ப்ரதர்தனன், சிபி, மத்ஸ்யன், பருதுலாக்ஷன், பருஹத்ரதன், வார்த்தன், மருதன், குஷிகன், ஸாங்காசயன், ஸாங்க்ருதி, த்ருவன், சதுரச்வன், ஸதஸ்யூர்மி, கார்தவீர்யாஜுனனென்னும் ராஜா, பரதன், ஸுரதன், ஸுநீதன், நிசடன், அனலன், திவோதாஸன், ஸுமனஸ், அம்பரீஷன், பகீரதன், வியசுவன், ஸதச்வன், வாத்ரியச்வன், பருதுவேகன், பருதுசிரவஸ், பிருஷதச்வன், வஸுமனன், மிக்கஅதிகபலசாலியானக்ஷுபன், ருஷதரு, பருஷஸேனன், புருகுத்ஸன், த்வஜி, ரதி, ஆரஷ்டிஷேணன், திலீபன், மஹாத்மாவானஉஷீநரன், உசீநரன்புதல்வனானபுண்டரீகன், சாயாதி, சரபன், சுசி, அங்கன், ரிஷ்டன், வேனன், துஷ்யரதன், ஸ்ருஞ்ஜயன், ஜயன், பாங்காஸுரி, ஸுநீதன், நிஷதன், வஹீநரன், கரதமன், பாஹ்லீகன், ஸுத்யும்னன், பலவானுகியமது, [2]ஜீளன், பலவானனமருத்தராஜன், கபோதரோமன், த்ருணகன், ஸஹதேவன், அர்ஜுனன், வியசுவன், ஸாச்வன், கிருசாசுவன், சசபிந்துவென்னுமசன், தசரதபுத்திரர்களான [3] ராமலக்ஷ்மணர்கள், ப்ரதர்தனன், அளர்க்கன், ககக்ஷஸேனன், கயன், கௌராசுவன், பரசுராமா, நாபாகன், ஸகரன், [4]பூரித்பும்னன், மஹாச்வன், ப்ரதாசுவன், ஜனகன், வேனபுத்திரனானபருது, வாரிஸேனன்,

1 பக்ஷ்யம்முதலிய ஐந்தும் உணவின்வகைகள்.

2 இளையென்பவளின் புத்திரனை புரூரவஸ்.

3 ராமலக்ஷ்மணர்கள் தம்முருவத்துடன் யமஸபையிலிருப்பது, உத்தர ராமாயணத்தில் அவதாரஸமாபனகாலத்தில் ராமலக்ஷ்மணர்களே யமன்வந்து கண்டதாகச்சொல்வதனாலும்விளங்குகின்றது.

4 இது இரண்டுமுறைவருகிறது.

புருஜித், ஜனமேஜயன், பிரமமதத்தன், த்ரிகர்த்தி, ராஜாவாகியஉபரிசரவஸு, இந்திரத்யும்னன், பீமஜானு, கைலப்ருஷ்டன், அனகன், லயன், பத்மன், முசுகுந்தன், பூரிதயும்னன், பிரஸேனஜித், அரிஷ்டநேமி, ஸுதயும்னன், பருதுலாசுவன், அஷ்டகன் இவர்களும், மத்ஸ்யராஜர்களநூற்றுவரும், நீபர்கள்நூற்றுவரும, ஹயர்கள்நூற்றுவரும, க்ருதாக்ஷர்கள்நூற்றொருவரும, ஜனமேஜயர்கள்எண்பதின்மரும், பிரம்மதத்தர்கள் வீரிகள் ஈரிகள் நூறுநூறுபேர்களும், இருநூறுபீஷ்மர்களும, நூறுபீமர்களும, நூறுபிரதிவிந்த்யர்களும், நூறுநாகர்களும, நூறுஹயாகளும, நூறு [1]பலாசங்களும், நாணல் தர்ப்பைமுதலியவைநூறும, அங்கிருபபனவாக அறியத்தக்கவை. சுரதனு, உனதுபிதாவாகிய பாண்டு, உசங்கவன், சதரதன், தேவராஜன், ஜயத்ரதன், புததிமானுகிய விருஷதர்ப்பனென்னும்ராஜரிஷி, அவனுடையமந்திரிகள், நிரமபினதக்ஷிணைகளோடுகூடின அனேகஞ் சிறந்தஅச்வமேதயாகங்களைச்செய்து (இவ்வுலகைவிட்டுச்) சென்ற இன்னுமனேகமாயிரம [2]சசபிந்துக்களாகிய இந்தப்புண்ணியசாலிகளும, புகழ்பெற்றவர்களும கல்விகேள்விமிகுந்தவருமான ராஜரிஷிகளும அநதச்சபையில யமதர்மராஜனைஸேவிக்கின்றனர். முறைப்படியாகஞ்செய்தவரும தவததில்லித்திபெற்றவரும் யோகச்சீரைபெற்றவர்களுமாகிய அகஸ்தியர் மதங்கர் காலர் மருத்துவென்னும்முனிவர்களும் தேகமெடுத்திருக்கும அக்னிஷ்வாத்தர்கள், [3]பேனபர்கள், [4] ஊஷ்மபர்கள், [5]ஸுதாவந்தர்கள், [6]பர்ஹிஷத்தர்கள்முதலானபித்ருக்களும், காலசக்ரமும், பரத்யக்ஷரூபியான அக்னிபகவானும், பாவஞ் செய்து தக்ஷிணையனத்தில்மாண்மடைந்த மனிதர்களும், காலத்தை நடத்துவதறகாக நியமிக்கப்பட்டயமகிங்கரர்களும் சரீரமெடுத்துக் கொண்டுவந்த சிம்சுபைமம் பலாசமம் நாணல் தர்ப்பைமுதலிய தாவாங்களும அந்தஸபையில் தர்மராஜனை உபாஸிக்கின்றனர். இவர்களும இன்னும் அனேகர்களுமாகிய தர்மராஜஸபையோரின்பெயர்களையும் செய்கைகளையும் கணக்கிடமுடியாது. பார்த்தனே! அழகியதும் நினைத்தபடிசெல்வதுமாகிய அந்தச்சபை நெருக்கமில்லாமலிருக்கிறது. விச்வகர்மா நெடுங்காலந்தவஞ்செய்து நிருமாணஞ்செய்தது. பாரதனே! அது தன்னொளியினால் ஜ்வலித்துச் கொண்டு பிரகாசிக்கின்றது. நியமந்தவறுதவரும் பொய்சொல்லாத

---

1 பலாச நாணல் தர்ப்பம்முதலியவற்றின் அதிஷ்டானதேவதை.

2 சசபிந்துவம்சத்தில் பிறந்தவர்கள். 3 தூரையையுண்பவர்கள்.

4 சீராயியையுண்பவர்கள். 5 அமிர்தமுண்பவர்கள். 6 தீயிலிருப்பவர்கள்

வரும் சாந்தரும் சுத்தருமான ஸந்யாஸிகள் தமது நற்கருமங்களினால் லோகப்பட்டு அந்தச்சபைக்குச்செல்லுகின்றனர். எல்லாரும் ஒளியோடுகூடிய தேஹங்களையுடையவர்களும், தூயஆடைகளைத்தரித்தவர்களும், விசித்ரங்களானதோள்வளைகளையும் பூமாலைகளையும் ஜ்வலிக்கின்றகுண்டலங்களையும் முத்தாரங்களையும் அணிந்தவர்களும், மஹாத்மாக்களுமான கந்தர்வக்கூட்டங்களும் அப்ஸரஸ்களின்கூட்டங்களும் அவரவர்கள் செய்வையாகச்செய்த புண்ணியகர்மங்களினால் அச்சபைக்குப் போகின்றனர். 'பார்த்தனே! அந்தச்சபையில் எங்கும் வாத்தியமும் ஆட்டமும் பாட்டும் சிரிப்பும் விளையாட்டும் இனியவாஸனைகளும் இனியஒலிகளும் இருக்கின்றன. தேவலோகத்தியமாலைகள் அங்கே திலகதோறுமவருகின்றன. தர்மமும் அழகும் சிறந்தமனமுமுள்ள நூறுலக்ஷம்பெயர்கள், பிரஜைகளுக்கு ஈச்வரனும் மஹாத்மாவுமாகிய யமனை உபாஸிக்கின்றனர். ராஜாவே! மஹாத்மாவான பிதிருராஜனுடைய அந்தச்சபை இவ்வகையானது. [1]புஷ்கரமாலினியென்னும் வருணஸபையையும்சொல்வேன்.

ஒன்பதாவது அத்தியாயம்.

மந்த்ரபர்வம். (தொடர்ச்சி.)

(வருணஸபைச்சிறப்பு.)

யுதிஷ்டிரனே! வருணனுடைய திவ்யஸபையும் யமஸபையைப்போலவே விஸ்தாரமுள்ளதும் மீக்கஒளியுள்ளதும் அழகியபிராகாரங்களையும் தோரணங்களையுமுடையதுமாக ஜலத்துக்குள் விசுவகர்மாவினால் நிர்மாணஞ்செய்யப்பட்டது. கனிகளையும் மலர்களையும் கொடுக்கின்றவைகளும் நீலமும் பொன்மையும் பச்சையும் வெளுப்பும் சிவப்புமான ரத்தினங்களின் வடிவங்களையுடையவைகளுமான கற்பகதருக்களாலும், பூங்கொத்துக்களைமிகுதியாகவுடைய கொடிகளாலும், புதர்களாலும்சூழப்பட்டிருக்கிறது. அச்சபையில் இனியகுரலும் அழகியஉருவங்களுமுள்ள விசித்ரமான எண்ணிறந்தபறவைகள் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவுமிருக்கின்றன. வருணனால்ஆளப்பட்ட அச்சபை வீடுகளும் ஆஸனங்களும் நிரம்பினதும், ஸுகமானகாற்றுள்ளதும், குளிருமெப்பமுமில்லாததும், வெண்

---

[1] 'புஷ்கரமாலினி' என்பதை விகேஷணமாக்கி, தீர்த்தவிசேஷத்தினால் சோபிப்பது' என்பது பழையஉரை.

ணிறமுள்ளதுமாக அழகாயிருக்கிறது. வருணன் சிறந்தஆடைகளையும் ரத்தினபரணங்களையும்அணிந்துகொண்டு வாருணியென்னும் தன் மனைவியுடன் அந்தச்சபையிலிருக்கிறான். அந்தவாருணி கௌரியென்னும் இரண்டாவதுபெயரால உலகத்தில்வழங்கப்படுகிறாள். அந்தவருணன் மகிழ்ந்தது அமமனைவியுடன் ஸுகமாகவீற்றாயிருக்கிறான். அந்தச்சபையில் ஆதித்தர்கள் மாலைகளோடும சிறந்தசந்தனமுதலியபூச்சுகளோடும் நல்லமணம்வீசஜலதேவதையானவருணனை உபாஸிக்கின்றனர். ராஜாவே! வாஸுகி, தக்ஷகன், ஜராவதன், கிருஷ்ணன், லோஹிதன், பத்மன், சக்திமானுகியசிதரன், கம்பலன், அசுவதரன், த்ருதராஷ்ட்ரன், வலாஹகன், மணிமான், [1]குண்டதாரன், கார்க்கோடகன், தனஞ்சயன், பலவானுனபாணிமான், குண்டதாரன், ப்ரஹ்லாதன், மூஷிகாதன், ஜனமேஜயன் ஆகியஇந்நாகர்கள்எல்லாரும் தந்தங்கொடிகளோடு மண்டலமிட்டுப்படமெடுத்துக்கொண்டிருக்கின்றனர். தார்மார்த்தகாடங்களும் அஷ்டவஸுக்களும் கபிலமுனிவரும் அங்கேயிருக்கின்றனர் நாகராஜாவான ஆதிசேஷனும் அங்கிருக்கிறார். அவரைக்கண்டு நீர்பிரியானிகளுக்கதிபதியானவருணன் (அருக்கியம் முதலிய) உபசாரங்களைசெய்து ஆஸனமளித்தது மரியாதைசெய்கிறான். வாஸுகிமுதலியநாகர்களனைவரும அஞ்சலிசெய்து, ஆதிசேஷனுல்அனுமதிக்கப்பெற்றபிறகு தந்தமதகுதியின்படி உட்கார்ந்திருக்கின்றனர். யுதிஷ்டிரனே! இவர்களும மற்றுமப்பலநாகர்களும் வினதையின்புதல்வரானகருடனும் அவாவேலைகாரரும அந்தச்சபையில் மஹாத்மாவானவருணனைச சலிபபின்றிபபணிகின்றனர். விரோசனன்மகனான பலியெனனுமஅஸுரராஜன், பூமியைஜயித்தவனுகிய நரகாஸுரன், ஸம்ஹ்ராதன், விபரசித்தி, காலகஞ்சர்களென்னும்அஸுரக்கூட்டத்தார், சுஹனு, தூமகன், சங்கன், ஸுமனஸ், ஸுமதி, கடோதரன், மஹாபார்சவன், கரநனன், பிடான், விச்வரூபன், ஸ்வரூபன், விரூபன், மஹாசிரன், தசக்ரீவன், வாலி, மேகவாஸன், தசாவரன், டிட்டிபன், விடபூகன, ஸம்ஹ்லாதன், இந்திரதாபனன் ஆகியதவம்புரிந்துவரமபெற்றவாகளும். சூர்களும மரணமில்லாதவர்களுமான அஸுரகுலதேதாரனைவரும, அழகானகுண்டலங்களோடும் கிரீடங்களோடும திவ்யவஸ்திரங்களோடுமதித்த மலாமாலைகள்சூடித் தர்மரூபமான பாசாயுதத்தைத்தரித்திருக்கும மஹாத்மாவானவருணனை அந்தச்சபையிலேஸேவிக்கின்றனர். அசுசர்க்காசே! பரதகுலத்தோனே! யுதிஷ்டிரனே! நாலுஸாகரங்களும், பெயர்பெற்றநதிகளும்,

[1] இஃதுஇரண்டுமுறைவந்திருக்கிறது.

யமுனை, விதிசை, வேணை, நர்மதை, வேகவாஹினி, விபாசை, சதத்ரு, சந்திரபாகை, ஸரஸ்வதி, இராவதி, விதஸ்தை, தேவநதியாகிய ஸிந்து, கோதாவரி, கிருஷ்ணவேணி, நதிகளிற்சிறந்தகாவேரி, கிம்புனை, விசல்யை, வைதரணி, த்ருதீயை, ஜ்யேஷ்டிலை, சோண்மென்னும்பெரிய [1]நதம், சர்மண்வதி, பர்ணைசியென்னும்மஹாநதி, ஸரயு, வாரவத்யை, நதிகளிற்சிறநதலாங்கலி, காரீதாயை, ஆத்ரேயி, லௌஹித்யமென்னும்மஹாநதம, லங்கதி, கோமதி, ஸுதியை, த்ரிஸ்ரோதஸிமுதலிய உலகத்தில்பெயர்பெற்ற புண்ணியதீர்த்தங்களுள்ள ஆறுகளும, புண்ணியதீர்த்தங்களும், தடாகங்களும, கிணறுகளும், அருவிகளும், குளங்களும், குட்டைகளும, திசைகளும பூமியும் மலைகளும ஜலஜந்துக்களனைத்தும தேகமெடுத்து மஹாத்துமாவான வருணபகவானை உபாஸிகின்றன. கந்தாவர்கள் அப்ஸரஸுகளின் கூட்டங்கள் அனைத்தும் ஸங்கீதவாத்தியங்களோடு அநதச்சபையில் வருணனைத்துதிசெய்துகொண்டிருக்கின்றனர். இரத்தினங்களோடு கூடியம்லேச்சர்களும் ஜலங்களும் அநதச்சபையில் தேவரூபிகளாக மிக்க இனியகதைகளைச் சொல்லிக்கொண்டிருக்கின்றன. வருணனுடைய மந்திரியான ஸுஷேணனென்பவன் தன்பிள்ளைகளாலும பேர்களாலும் கோவென்னும்புஷ்கரனுமம சூழப்பட்டவனாக வருணனைஉபாஸிக்கின்றான். மேற்கூறியஎல்லோரும் திவ்யசரீரங்களோடு தங்களுக்கதிபதியானவருணனை உபாஸிக்கின்றனர். பாரதரே! முன்னே நான்ஸுசரித்தபோது இதஅழகானவருணஸபை என்னுல்காணப்பட்டது; குபேரன்ஸபையைபபற்றியுமகேள.

பத்தாவது அத்தியாயம்.

மந்த்ரபர்வம். (தொடர்ச்சி.)

(குபேரஸபைச்சிறப்பு.)

ராஜாவே! குபேரனுடையஸபை நூறுயோசனைநீளமும் எழுபதுயோசனைஅகலமுமுள்ளது; வெண்மைநிறமானது. ராஜாவே! அந்தச்சபை குபேரன் தன்தவதனுலசமபாதித்தது. சந்திரனுடையஒளியையும் மறைபபதும் கயிலைமலையின்சிகரம்போன்றதுமான அந்தச்சபை யக்ஷர்களால்வகிக்கப்பட்டு ஆகாயத்தில்பறப்பதுபோல விளங்குகின்றது. பொன்மயமான உயர்நதமாளிகைகளினுல்சோபிப்ப

---

[1] மேல்கடலில்விழும்ஆறு.

தும், உயர்ந்தரத்தினங்களிஞல் விசித்திரமானதும மனத்தைக்கவருவதும் சிறந்தமணமுள்ளதும், வெண்மேகம்போன்றசிகரத்தையும் உருவத்தையுமுடையதுமான அந்தத்திவ்யஸபை ஆகாயத்தில்மிதப்பதுபோலக் காணப்படுகின்றது. பொன்மயமான உறுபுக்கரோடுகூடியிருபபதனுல மின்னற்கொடிகளாலேயே புதுமையாகஅமைக்கப்பட்டதுபோலிருக்கிறது. ஸ்ரீமாஞகியருபேரனென்னும்அரசன் அறபுதமான ஆபரணங்களேயும ஆடைகளேயும் ஜ்வலிப்பவைபோன்றகுண்டலங்களேயுமதரித்தது அனேகமாயிரமமங்கையர்களால்சூழப்பெற்று அந்தசசபையில்வீற்றிருக்கிருன். மஹாராஜாவே! தனங்களுக்கெல்லாம் ஈசுவரனுன குபேரன் எல்லாஆபரணங்களிஞலும் அலங்கரிக்கப்பெற்றவனும் அழகியதேகமுள்ளவனுமாகிய ரிததியென்னும்மனைவியுடன் கூடி உயர்ந்தவிரிபபுகள்போடபபட்டதும உயர்ந்த [1]காலணிகளுடையதும் ஸர்ய்யனேபோலபபிரகாசிப்பதுமான உயர்ந்தஸ்ரிம்மாஸனத்தில்வீறறிருந்து விளங்குகிறன். [2]நந்தனவனத்தில், வேண்டினவற்றைவழங்குகின்ற மந்தாரமென்னும கறபகமரங்களின்சோலகளே அசைத்துக்கொண்டும் அலகையென்னுமபெயருள்ள ஓடையிலுள்ள தாமரைமலர் செங்கழுநீர்மலர்களின் கந்தங்களேயெடுத்துக்கொண்டும் உள்ளதைதமகிழ்விக்கும் குளிர்ந்தகாறறு குபேரனேயடைகின்றது. மஹாராஜாவே! தேவர்களுடி கந்தர்வர்களும அபஸரஸ்களின்கூட்டங்களும் அந்தஸபையைசேர்ந்து அங்கே தேவலோகத்திய [3]தானங்களேப பாடுகின்றனர். மிசரகேசி, ரம்பை, சித்திரலேனே, சுசிஸ்மிதை, சாருநேத்ரை, கிருதாசி, மேனகை, புஞ்சிகஸ்தலி, விசவாசி, ஸஹஜன்யை, பிரம்லோசை, ஊர்வசி, இரை, வர்க்கை, சௌரபேயி, சமீசி, புதபுதை, லதைமுதலாகிய ஆட்டத்திலும் பாட்டிலும் நிபுணர்களான ஆயிரக்கணக்கான அப்ஸரஸ்களுடி கந்தர்வர்களும் குபேரனேஸேவிக்கின்றனர். தேவலோகத்தியவாத்தியங்களும் ஆட்டங்களும் பாட்டுக்களும் எக்காலமும் இடைவிடாதஅந்தஸபை கந்தர்வர்கள் அப்ஸரஸ்களின்கூட்டங்களினுல் நிறைந்து அழகாகவிளங்குகின்றது. பாரதனே! கின்னராகளென்னும நரர்களென்னும சொல்லப்பட்ட கந்தர்வஜாதியாரும மாணிபதரன், தனதன், சுவேதபத்ரனென்னும்யக்ஷன், நடேரகன், கண்டகண்டு, மஹாபலசாலியானபிரதயோதன், குஸ்தமபுரு, பிசாசன், கஜகர்ணன், விசாலகன், வராஹகர்ணன், தாம்ரோஷ்டன், பலகக்ஷன், பஞ்சாசகன், ஹரம்ஸகூடன்,

---

[1] கால்கொட்டை. [2] சைத்ரரதமென்னும் அவனுடையதோட்டம்.

3 ஒருவகை ஸ்வரவரிசை.

சிகாவர்த்தன், ஹேமநேத்ரன், விபீஷணன், புஷ்பானனன், பிங்கள கன், சோணிதாதன், பிரபாலகன், விருக்ஷவாலி, அனிகேதன், சிர வாஸன்முதலான அனேகலக்ஷக்கணக்கான யக்ஷர்களும் பெருமை பொருந்தியலக்ஷ்மிதேவியும் நளகூபரனும் எப்போதும அங்கேயே யிருக்கின்றனர். நாமும் மற்றுமுள்ள எம்மைபோன்றவரனேகரும் அநதச்சபையில் இருபபோம். அநதச்சபையில பிரமமரிஷிகளும் தேவரிஷிகளும இருக்கின்றனர். மஹாபலசாலிக்ளான ராக்ஷஸர்க ளும கந்தர்வர்களும் அநதச்சபையில் பிரபுவும்மஹாத்துமாவுமாகிய குபேரனை உபாஸிக்கின்றனர். ராஜாக்களிறசிறநதவனே! உமாபதி யும் [1]பசுபதியும் சூலாயுததாரியும பகதேவதையின்நேதத்ரத்தைக் கெடுத்தவரும் முக்கண்ணரும்உக்கிரமான்வில்லேத்தரித்தவரும் மஹா பலசாலியும பகவானுமாகிய சங்கர இரத்தம்போறசிவநதகண்களும பேரிசைச்சலுமுடையவராகளும் கொழுபபையும மாமிஸதையுமுண் பவரும் கோடியுவரும் பலவிதஆயுதங்களேத்தரிதது பயங்கரமாயிரு ப்பவரும் காற்றைபபோலக கடியவேகமுள்ளவரும குட்டையும்உயர மும் கூனருமான பூதக்கூட்டங்களினல்சூழபபெறறவராகத் தமது தோழனுகிய குபேரனிடததில் எபபோதுமிருக்கிறார். விசுவாவஸு, ஹாஹா, ஹூஹூ, துமபுரு, பர்வதன், சைலூஷன், காநம்தெரிந்த சித்திரஸேனன், சிதரரதனமுதலான கநதாவராஜாகளனேகரும மற்றுமுள்ளகந்தர்வர்களும் தமபரிவாரங்களுடன்மகிழ்நது தனேசுவ ரனைப் பணிகின்றனர். வித்தியாதரருக்கரசனுன சக்ரதர்மனென்ப வன் தன்தம்பிமார்களுடன்கூட அந்தசசபையில் பிரபுவானதனேசுவ ரனைப பூஜிககிறான். நூற்றுக்கணக்கானகின்னரர்களும் அங்கே பிரபு வானகுபேரனைப பூஜிக்கின்றனர். பகதததன்முதலிய ராஜாக்களும் அச்சபையிலிருக்கின்றனர். கிம்புருஷர்க்கு அரசனுகிய துருமனும, ராக்ஷஸர்க்குஅரசனுகிய ம்ஹாநதிரன், கநதமாதனன் இவர்களும குபேரனைஉபாஸிக்கின்றனர். தாமிஷ்டரானவிபீஷணரும், இயககர், கநதர்வர் அனைவரோடுங்கூடத் தமஸ்ஹாதரனும பிரபுவுமான குபே ரனை அடித்திருக்கிறார். ஹிமாலயம், பாரியாதரம, விநதியம், கைலா லம, மந்தரம, மலயம, தர்துரம், மஹேந்திரம, கநதமாதனம, தேவ பர்வதங்களாகிய இந்திரகீலம ஸ்ரீனுபம் ஆகியஇவைகளும மேருமுத லான மற்றுமுள்ள அனேகமலைகளும, பிரபுவும மஹாத்துமாவுமான தனபதியை ஸேவிக்கின்றன. பகவானுகிய நந்திகேசுவரர், மஹா காலன், காஷ்டன், குடமுகன், தூநதி, விஜயன், தமோநிகன், சங்கு

[1] பசுபதி=பசுவென்னும் ஆத்துமாக்களுக்குப் பதி.

கர்ணன்முதலிய சிவகணங்களனைவரும் குபேரனையடுத்திருக்கின்றனர். மிகுந்தபலமுள்ள வெள்ளரிஷபமும் அங்கேகர்ஜித்துக்கொண்டிருக்கிறது. இன்னும அனேகமாகஷ்தர்களும பிசாசர்களும தனதனிடம் காத்திருகின்றனர். தேவதேவர்க்கும ஈசுவரனும் மூவுலகங்களினபடைபவரும 'பலரூபங்கள்எடுபவரும உமாபதியுமாகிய சிவபெருமான் தமகூட்டத்தாரற சூழபபட்டுவருமபோது தனேசுவரனகுபேரன் ' அவரைததலியாலவணங்கி அநதமமஹாதேவரிடம் அனுமதிபெற்றபின்புதான் உட்காருகிறான். தனபதியின்ஸ்நேகிதரும் பகவானுமானசிவபிரானும் சிலஸமயமஉட்காருவார். நவநிதிகளுக்குமமுதன்மையான சஙகம் பதமமென்னும இரண்டுசிறநதநிதிகள் மற்றநிதிகளனையெல்லாம அழைத்துகொண்டு குபேரனேஸேவிக்கின்றன. ஆகாயததிறசஞசரிக்கும 'அபபடிபபட்டஅழகான அநதஸபை என்னறகாணபபட்டது. ராஜாவே! பிரம்மஸபையைசசொல்வேன் அதையுங் கேள்.

பதினேராவது அத்தியாயம்.

மந்த்ரபர்வம். (தொடர்ச்சி.)

(பிரம்மஸபைச்சிறப்பு.)

அன்பனே! பரதகுலததோனே! இவ்வகையானஉருவமுள்ளதென்று உரைக்கமுடியாததாகிய பிரமமஸபையையபபற்றி நான்சொல்வதை நீகேள். ராஜாவே! கனிபபில்லாதவானஸோயபகவான் முனிய [1]தேவயுகததில மானிடலோகததைபபாககவிருபபமுற்றவராக ஆகாயத்திலிருநதுவநதார். பாண்டவனே! பரதரேறே! மனத்தினுல் செல்லத்தக்கதும அறிவுக்குமஎலலுக்கும்எட்டாதபெருமைபொருந்தியதும் எல்லாபபிராணிகளின்மனங்களையும கவருவதுமாகிய பிரம்ம தேவருடைய திவ்யஸபையைப்பாரததபிறகு அவர் மானிடவடிவத்தோடு ஸஞ்சரித்துவருகையில் என்னைக்கண்டு அந்தச்சபையைப் பற்றி எனக்குரைத்தார். பாண்டவசரேஷ்டனனசாஜாவே! நான் அநதஸபைபின்சிறபபுக்களைக்கேட்டு அதைபபாாக்கவிருப்பமுள்ளவ

---

[1] மனிதர்களுக்குஒருவருஷம் தேவர்களுக்குஒருநாள். மானிடவருஷம் மூன்றுற்றறுபதுசேர்ந்தது தேவர்களுக்குஒருவருஷம். பன்னீராயிரமதேவவருடம் மானிடர்களுக்குநாலுயுகங்கள். அவைதேவர்களுக்குஒருயுகம். தேவயுகம் ஆயிரம் பிரம்மாவுக்கு ஒருதினம. இஙகுதேவயுகத்தில் என்பதற்கு கிருதயுகத்தில்என்பது பழையஉரை.

ங்க ஸ்ரீர்யஜீநோக்கி, "பகவானே! அழகானபிரம்மஸபையை யான் காணவிரும்புகிறேன். கிரஹங்களுக்குஅதிபதியே! என்ன தவம் என்னகருமம் அல்லதுஎந்தஉளஷதப்பிரயோகஞ்செய்வதனல் பாவங்கீனியொழிப்பதாகிய அந்தச்சிறந்தஸபைக்கு நான்போகமுடியும்? எவ்வகையாக அதையான்காண்பேன்? அதை எனக்குச்சொல்லும்" என்றுகேட்டேன். பரதச்ரேஷ்டனே! ஆயிரம்கதிர்களையுடைய அந்தஸ்ரீர்யன், என்னுடையஇந்தச்சொல்லைக்கேட்டு, "நீ மனத்தையடக்கி ஆயிரம்வருஷகாலம பிரமமவிதமென்னும தவமபுரிவாயாக" என்றுகூறினர். உடனே நான் இமயமலையின்மேல் அந்தபெருந தவஞ்செய்தேன். அதன்பிறகு பாவமற்றவரும கீளபபில்லாதவரும மஹிமையுள்ளவருமான ஸ்ரீர்யபகவான் என்னையழைததுக்கொண்டு அந்தப்பிரமஸபைக்குச்சென்றார். ராஜாவே! அந்தச்சபை இவ்வகை உருவமுள்ளதென்று சொல்லமுடியாது. அது நிமிஷததுக்குநிமிஷம் சொல்லுக்கெட்டாத வெவவேறுவடிவங்களை அடைகிறது. பாரதனே! அதன்அளவையும் வடிவத்தையும் நான்அறியேன். அவ்வகையான உருவத்தையும் நான் ஒருகாலத்திலும கண்டதிலலை. ராஜாவே! குளிர்ச்சியும்வெப்பமுமில்லாமல் எப்போதும் மிக்கஸுகமாகவே யிருக்கிறது. அந்தஸபையைச்சார்ந்தவர்கள் பசிதாகங்களையும் கீளப் பையும் அடைவதில்லை. அது மிக்கஒளியுள்ள பலநிறங்களானரத்தினங்களினுல் அமைக்கப்பெற்றது. அது தூண்களினுல்தாங்கபபடுவ தில்லை. என்றும்கெடாமலிருக்கிறது. மிக்கஒளியுள்ள பலவகைத் தெய்வலோகப்பொருள்களுடன்கூடியது. சந்திரனையும் ஸ்ரீர்யனை யும் அக்கினியையும் மிஞ்சிபபிரகாசிக்கின்ற அந்தஸபையானது ஸ்வர்க்கலோகத்திற்குமேலிருந்துகொண்டு ஸ்ரீர்யனபபயமுறுததுவது போலவிளங்குகின்றது. ராஜாவே! எல்லாஉலகங்களுகுகும்தாதையான அந்தப்பிரமதேவர் எப்போதும் தமதுஈசுவரசக்தியினுல் எல்லாவற்றையும்படைத்துக்கொண்டு அந்தச்சபையில தாம்ஒப்பற்றவராயிருக்கிறார். தக்ஷர், பிரசேதஸ், புல்ஹர், மரீசி, ஸமர்த்தரானகிய பர், பிருகு, அத்திரி, வஸிஷ்டர், கௌதமர், அங்கிரஸ், புலஸ்தியர், கிரது, ப்ரஹ்லர்தர், கர்த்தமர் ஆகியபதினுகுசிருஷ்டிகர்ததர்களும அதர்வாங்கிரஸர், வாலகில்லியர், மரீசிபர்என்னுமரிஷிகளுமபிரபுவான பிரம்மதேவரை அடுததிருக்கின்றனர். பாரதனே! மனம், ஆகாயம், ஸித்தைகள், வாயு, தேயு, நீர், நிலம், சபதம், பரிசம், ரூபம், ரஸம, கந தம், மூலப்பிரகிருதி (மகதது அகங்காரமுதலிய) விகாரங்கள் இவைக ளும் பூமிக்குக்காரணமான மற்றுமுள்ளவையும் பெரியமஹிமையுள்ள

அகஸ்தியர், தவவன்மையுள்ளமார்க்கண்டேயர், ஜமதக்நி, பரத்வாஜர், ஸம்வர்த்தர், சயவனர், மஹாணுபாவரான துர்வாஸர், தர்மிஷ்டரானரிஷ்யசிருங்கர், யோகசாஸ்திரஆசாரியரும் சிறந்ததவமுள்ளவருமான மஹிமைபொருந்திய ஸனத்குமாரர், அஸிதர், தேவலர், தத்துவஜ்ஞானியானஜைகீஷவ்யர், ஜீம்புலன்களென்னும் சத்துருக்களை ஜயித்தவரான ரிஷியர், சிறந்தமஹிமையுள்ள மணியென்பவர்இவர்களும அங்கேபிரம்மதேவரைஉபாஸிக்கின்றனர் பார்த்தனே! எட்டு அங்கங்களோடுகூடிய ஆயுர்வேதமும் தேகமெடுத்ததுக்கொண்டுஅங்கேயிருககிறது. சுநாரனும் ஸோயனும் ஈகூஷத்திரங்களும் கிரணங்கள்நிரமபின ஆதித்தனும காற்றுகளும யாகங்களும ஸங்கல்பமும் பிராணனும அறமபொருளின்பங்களும மகிழ்ச்சியும பகையும் தவமும இந்திரியஜயமும் மற்றுமுள்ள இவ்வகையான அனேகங்களும் தேகங்களெடுத்துப பெருந்தவஞசெய்துகொண்டு மஹாத்துமாக்களாகப பிரம்மதேவரை ஆச்சரயித்திருக்கின்றன. [1]கந்தர்வர்கள் அப்சரஸ்ஸுகள் இவாகளின் இருபதமேதமுவகையார்களும் திக்குபாலகரணவரும் அநதசபையில் வநதுசேர்நதிருக்கின்றனர். பாரதனே! பாண்டவனே! ராஜாவே! சுககிரன், பிருஹஸ்பதி, புதன், அங்காரகன், [2]சனீசசரன், ராகுமுதலானஎலலாக்கிரஹங்களும மந்திரமும் ரதந்தரமென்னுமஸாமமும ஹரிமான்வஸுமானென்பவர்களும் பன்னிரண்டுஆதித்தர்களும அவர்களுக்குத்தலைவனனஸூர்யனும் அக்னீஷோமா மித்ராவருணாமுதலியஇரட்டைதேவர்களும் ஸப்தமருத்துக்களும அஷ்டவஸுக்களும விசுவகாமாவும பிதிர்தேவரணவரும் மேறாமத்திரவியஙகளணைதது[3]ருக்வேதம் ஸாமவேதம் யஜுர்வேதம் அதர்வணவேதமென்னும் நான்கும எல்லாச்சாஸ்திரங்களும இதிகாசங்களும [3]உபவேதங்களும வேதாங்கங்களணைத்தும கிரஹங்களும் யாகங்களும ஸோமலதையும் எல்லாதேவர்களும் துன்பங்களைக்கடத்திவைக்கும சாவித்திரியும அவ்வாறே கல்பனசக்தி, ஞாபகசக்தி, சொல்வன்மை, திரிகாலஜ்ஞானம, உலகஅறிவு, புகழ், [4]பொறுமையென்னும் எழுவகையான, [5]ஸரஸ்வதியும் ஸ்தோத்திரங்கள் சஸ்

---

1 சிலர்இருபதேழுகூஷத்திரங்களென்றும் வேறுசிலர் கந்தர்வர்அப்சரஸ்ஸுகளின்கணங்கள் இருபதும் கநதர்வத்தலைவர்கள் எழுவருமென்றும் அபிப்பிராயப்படுவதாகப்பழையஉரைகூறுகிறது.

2 சனி 3 தநுர்வேதம்முதலியன.

4 அவஸரப்படாமல் கிரஹித்தலும்விளம்புதலும்.

5 அகரம், உகரம், மகரம், அரைமாத்திரை, நாதம், பிந்து, சக்திஎன்னும் எழுவகையான பிரணவம்என்றும், அல்லது, ஸம்ஸ்கிருதம், பிராகிருதம்

திரங்கள்என்னப்பட்ட ஸாமங்களும் பலவகைக் [1]காதைகளும் தர்க்கங்களோடுகூடிய பாஷியங்களும் பலவகைநாடகங்களும் காவியங்களும் [2]கதைகளும் ஆக்யாயிகைகளும் [3]காரிகைகளும் தேகங்களெடுத்துக்கொண்டுஅங்கேயிருக்கின்றன. குருவுக்குப் பூஜைசெய்தபுண்ணியசாலிகளும் அங்கேயிருக்கின்றனர். பாரதனேயுதிஷ்டிரனே! [4] க்ஷணங்கள், லவங்கள், [5]முகூர்த்தங்கள், பகல்இரவுகள், பக்ஷங்கள், மாதங்கள், ஆறு ருதுக்கள், வருஷங்கள், ஐநூது [6]யுகங்கள், [7]நாலு வகைத்தினங்கள், என்றும்அழியாததும் மாறுதலுமான அந்தமுதன்மையான காலசக்ரம், தர்மசக்ரம் ஆகியஇவைஅங்கேஎப்போதுமிருக்கின்றன. [8]தேவமாதாக்களாகிய அதிதி, திதி, தனு, ஸுரஸை, வினதை, இரை, காலிகை, ஸுரபிதேவி, ஸமை, கௌதமி, பிரபை, கத்ரு, ருத்ராணி, ஸ்ரீதேவி, [9]லக்ஷ்மி, பத்மை, ஷஷ்டிதேவி, பிருதிவிதேவி, ஹ்ரீதேவி, ஸ்வாஹாதேவி, கீர்த்தி, ஸுராதேவி, இரவிராணி, புஷ்டி, அருந்ததி, ஸம்விருத்தி, ஆசை, நியதி, ஸ்ருஷ்டி, ரதிதேவிமுதலிய தேவப்பெண்களும பிரமமதேவரைஸேவிக்கின்றனர். ஆதித்தியர்களும் வஸுக்களும ருத்திராக்களும் மருத்துக்களும் அச்வினிதேவர்களும் விசுவேதேவர்களும ஸாத்தியர்களும மணிவேகமுள்ளபிஷிர்தேவர்களும் பிரம்மதேவரை ஸேவிக்கின்றனர். புருஷச்ரேஷ்டனே! பிதிரிதேவதையின்கூட்டங்கள் ஏழுவகைகளென்று அறி. அவர்களுள், நான்குவகையார் [9]கடினசரீரமுள்ளவர்கள். மற்ற மூன்றுவகையார் [10]உருவங்கள் மட்டுமுள்ளவர்கள். பாரதனே!

பைசாசம், அபப்ரம்சம், லலிதம், மாகதம, கதயம்என்னும்ஏழுவகைப்பாஷைகளென்றும் உரைப்பது பழையவுரை. 'அதில் கல்பனுசகதிமுதலிய மேற்சொல்லியவழைவேறுகக்கொள்ளவேண்டும்.

1 தேசபாஷையிலுள்ளபாட்டுகள்.

2 ஆக்யாயிகை, கதைஇரண்டும் வசனப்ரபந்தகள். அவற்றுள்; "கதாகாயகனேகோல்சொல்வதும் உச்சுவாஸகளென்னும் பிரிவுகளுள்ளதும் ஒவ்வோர்உச்சுவாஸங்களிலும் அவ்வவற்றின விஷயங்களுக்குறிப்பிக்கும் ச்லோகம்இருப்பதும் ஆக்யாயிகை. இவவாறின்றிச சரித்திரங்களே வசனமடையாகச் சொல்லுவது கதை.

3 சாஸ்திர விஷயங்களைச் சுருக்கிச்சொல்லும் ச்லோகங்கள்.

4 நொடிகள. 5 மூன்றேமுக்கால்நாழிகை.

6 கிருதயுகம்,த்ரேதாயுகம் துவாபரயுகம் கலியுகம் யுகஸங்கியையஆகஐந்து.

7 மனுஷ்யதெய்வபித்ரி பிரம்மதினங்கள்.

8 இங்கே அஸுரர்நாகர்முதலியோரும் தேவஜாதியிற்சேர்க்கப்பட்டனர்.

9 ஸ்பரிசிக்கத்தக்க தேகமுள்ளவர்கள்.

10 ஸ்பரிசிக்கக்கூடாமல் காணப்படுபவர்.

மஹானுபாவர்களான வைராஜர்களும் அக்னிஷ்வாத்தர்களும் ஸ்வர்க்கத்தில்ஸஞ்சரிப்பவரும் உலகங்களில் பெயர்பெற்றவருமான கார்ஹபத்தியர்த்ளென்னும்பிதிர்க்களும் ஸோமபர்களும் ஏகுச்ருங்கர்களும் சதுர்வேதர்களும் கல்ர்களுமாகிய இந்த எழுவகைப்பிதிர்க்களும் பிரம்ம க்ஷத்ரிய வைசய சூத்ரரென்னும் நான்குவர்ணங்களிலும் பூஜிக்கப்படுகின்றனர். இந்தப்பிதிர்க்களே முதலில் புஷ்டிசெய்வதனால் சந்திரன் விருத்திசெய்யப்படுகிறான். அப்படிப்பட்ட பிதிர்க்களெல்லாரும் பிரம்மாவின்அருகிலிருந்துகொண்டு அளவற்றமஹிமையுள்ள பிரம்மதேவரைச் சந்தோஷமாகப்பணிகின்றனர். ராக்ஷஸர்கள், பிசாசர்கள், அஸுரர்கள், யக்ஷர்கள், நாகர்கள், கருடர்கள், பசுக்களாகிய ஜங்கமங்களும் தாவரங்களும் பூமிமுதலிய ஜகதுமஹாபூதங்களும் பிரமதேவரை உபாஸிக்கின்றனர். 'தேவர்களுக்குராஜாவான இந்திரன், வருணன், குபேரன், யமன், பார்வதியுடன்கூடிய மஹாதேவர் இவர்களனைவரும் எப்போதும அங்கேபோகின்றனர். 'ராஜர்ஷே! நீடனே! ஸுப்ரம்மண்யரும் எப்போதும் பிரம்மதேவரை உபாஸிக்கின்றனர். ராஜாவே! பகவானுனாராயணனும் தேவரிஷிகளும் வாலகில்லியரிஷிகளும் கர்ப்பத்தில்ஜனிததவர்களும் ஜனிக்காதவர்களுமானரிஷிகளும பிரம்மதேவரை ஸேவிக்கின்றனர். 'ராஜாவே! இவ்வுலகதத்தில்காணபடும் மற்றமுள்ளஜங்கமஸ்தாவரங்களும் அந்த ஸபையில் என்னல்காணபட்டனவென்று அறி. பாண்டவனே! நித்தியப்பிரம்மசாரிகளான ரிஷிகள் எண்பத்துஎண்ணுயிரவரும் ஸந்ததியுள்ளரிஷிகள் ஐம்பதினுயிரம்பேர்களும் அங்கேயிருக்கின்றனர். அந்தத்தேவர்களனைவரும அவ்விடத்தில் இஷ்டப்ரகாரம் பிரம்மதேவரைக்கண்டு அவருக்குத் தலைவணங்கிநமஸ்காரஞ்செய்து வந்தவாறே செல்லுகின்றனர். அளவற்ற ஞானமுள்ளவரும உலகங்களுக்குத் தாதையும எல்லாப்பிராணிகளிடத்தும் தயையுள்ளவருமாகிய பிரம்ம தேவர் அதிதிகளாகவந்த மஹானுபாவர்களான தேவர்களையும அஸுரர்களையும் நாகர்களையும் பிராம்மணர்களையும் யக்ஷர்களையும் கருடர்களையும் காலேயர்களையும் கந்தர்வர்களையும் அப்ஸரஸுகளையும் அவரவர்தகுதிப்படி அழைக்கிறார். ராஜாவே! அளவற்றமஹிமையுள்ளவரும் உலகங்களுக்குஆத்மாவீமான பிரம்மதேவர் அவர்களை அழைத்து இன்சொல்லினுலும வெகுமதியினுலும் அவர்கள்காரியத்தை நிறைவேற்றுவதனுலும் ஆனந்தத்தைஉண்டுபண்ணுகிறார். அன்பனே! பரதகுலத்தோனே! அவ்வாறு வந்துகொண்டும் போய்க்கொண்டுமிருக்கும்! அவர்களால்நிரம்பியிருக்கும் அந்தஸபை ஆனந்தத்தை

"யளிப்பதாயிருக்கிறது. எல்லாஒளிகளும்நிரம்பினதும் பிரம்மரிஷிக ளின்கூட்டங்களால் அடையப்பட்டதும் கீழ்ப்பில்லாததுமான அந் தத் திவ்யஸபை பிரம்மதேவருடையபெருமையினால் சிறப்பாகவிளங் கிற்று. ராஜசிரேஷ்டனே! மானிடலோகத்தில இந்த உன்ஸபையைப் படியோ அப்படியே மேலுலகங்களில் காணஅரிதாகிய அப்படிப் பட்ட அந்தச்சபை என்னால்காணப்பட்டது. பாரதனே! தேவலோ கங்களில் இந்தஸபைகளையே நான் முன்னம்கண்டிருக்கிறேன். உன் னுடைய இந்தச்சபை மானிடலோகத்திலுள்ள எல்லாவற்றிலும் மிகச்சிறந்தது" என்றார்.

பன்னிரண்டாவது அத்தியாயம்.

மந்த்ரபர்வம். (தொடர்ச்சி.)

(தர்மபுத்திரர் நாரதரைநோக்கித்தம்முடைய ராஜஸூய யாகத்தின் பெருமையைப்பற்றி அவருக்குச்சொன்னது.)

இவ்வாறு நாரதர்சொல்லக்கேட்ட தர்ம்மபுத்திரர், "பேசுகிறவ ரிற்சிறந்தவரே! வல்லமையுள்ளவரே! யமனுடையஸபையில் ராஜாக் களின்கூட்டம பெரும்பாலும உம்மால்கூறப்பட்டது. நீங்கள் சொல் வதே எனக்குச்சரி. ஸமர்த்தரே! வருணனுடையஸபையில் நாகர்க ளும் அஸுரச்ரேஷ்டர்களும நதிகளும ஸமுத்திரங்களும் மிகுதியா கக்கூறப்பட்டனர். அவ்வாறே குபேரஸபையில யக்ஷர்களும் குஹ்ய கர்களும் ராக்ஷஸர்களும கந்தர்வர்களும் அப்ஸரஸ்களும் சிவபெரு மானும் கூறப்பட்டுளர். பிரமமதேவருடையஸபையில மஹரிஷிக ளும் தேவர்கள்கூட்டத்தாரினவரும் சாஸ்திரங்களினத்தும் இருப்ப தாகச்சொன்னீர். முனிவரே! இந்திரனுடையஸபையில்மட்டும தே வர்களையும் அனேககந்தர்வர்களையும் மஹரிஷிகளையும் பெயரெடுத் துரைத்தீர். மஹாமுனிவரே! ராஜரிஷிகளில ஹரிச்சந்திரன் ஒரு வன்மட்டுமே மஹாத்துமாவான தேவேந்திரனஸபையிலிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறான். தவறுதலவமுடையவரே! மிக்கபெரும் புகழ்பெற்றவனான அந்த ஹரிச்சந்திரன் தேவேந்திரனுக்கு எதிரா யிருக்கும்படியாக என்னவினைசெய்தான்? என்னதவமபுரிந்தான்? பிராம்மணரே! பித்ருலோகத்திலிருக்கும் என்தந்தையும் மஹாபு பாவருமான பாண்டு உம்மால் எவ்வாறு காணப்பட்டார்? உம்மூடன் எப்படிச்சந்தித்தார்? என்னசொன்னார்? பகவானே! 'சிறந்ததவ

முடையவரே! அதனை எனக்குச் சொல்லும். இவற்றையெல்லாம் உம்மிடத்தில்கேட்க விருபபமுள்ளவனுகஇருக்கிறேன்" என்றுகூற நாரதர்சொல்லலானார்.

"அரசர்க்கரசே! பிரபுவே! ஹரிச்சந்திரனைப்பற்றி என்னைக் கேட்டபடியால் சிறந்தபுத்தியுள்ள அவனுடைய மஹிமையை யான் உனக்குச்சொல்வேன். இக்ஷ்வாகுகுலத்தில்பிறந்தோனும் அயோத்தி நகருக்கதிபதியும் விசுவாமித்திரரால் காபபாற்றபபட்டவனும் வீரனுமான திரிசங்குவென்னும அரசன் ஒருவன்இருந்தான். அவனுக்குக் கேகயராஜவம்சத்திற் பிறந்தவளான ஸத்தியவதியென்னும் மனைவியிருந்தாள். கௌரவபுத்திரனே! அவளுக்குத் தர்மமாகக் கர்ப்பம் உண்டாயிற்று. ராஜாவே! அந்தமஹாபாக்கியவதி பிரஸவமாலம் வந்தபோது ஹரிச்சந்திரனென்னும குற்றமற்றகுமாரனையீன்றாள். அந்த ஹரிச்சந்திராஜன் திரிசங்குவின்மைந்தனென்று சொல்லப படுகிறான். மிகுந்தபலசாலியான அவ்வரசன் எல்லாஅரசர்களுக்கும் அரசனுகஇருந்தான். அரசாகனவரும அவன்கட்டளைக்கு அடங்கியிருந்தனர். ராஜாவே! அவ்வரசன் பொன்னணிகள்பூண்ட ஒரே ஜயத்தேரிலேறி (வேறுதுணையின்றிச) சஸ்திரவன்மையினால் [1]ஏழு தீவுகளையுமஜயித்தான். மஹாராஜாவே! அவன் மலைகளும் நீர்களும் காடுகளும்அடங்கிய புவனிமுழுமையுமவென்று ராஜஸூயமென்னும் மஹாயாகததைப் புரிந்தான். எலலாஅரசர்களும் அவன்கட்டளைப் படி திரவியங்களைக் கொணர்ந்தனர். அவர்களே அந்தயாகத்தில் பிராம்மணர்களுக்குப போஜனம் பரிமாறுகிறவாகளாயிருந்தனர். பாக்கிரமசாலியான ஹரிச்சந்திரமஹாராஜன் சாஸ்திரப்படி ராஜஸூயயாகத்தை நிறைவேறறினபின் அரசர்க்காசனஙக அபிஷேகஞ் செய்யப்பெற்று விளங்கினன். சிறந்ததக்ஷிணைகளோடுகூடிய ராஜஸூயயாகத்தில் முடிசூட்டபபெற்ற அவ்வரசன் மகிழ்ச்சியுடன் யாசகர்கள் தன்னிடம்கேட்டதற்கு ஐந்துமடங்குதிகமாக அவர்களுக்குப் பொருளளித்தான். பிறகு அக்னியை விஸர்ஜனஞ்செய்யுங்காலம் வந்தபோது பற்பல தேசங்களினின்றும்வந்த பிராம்மணர்களுக்கு விருப்பபபடி மரியாதையோடு பலவகைப்பக்ஷணங்களையும் போஜனங்களையும் பொருள்களையும்கொடுத்துத் திருப்திசெய்வித்தான். ரத்தினங்களின் குவியல்களினுலை திருப்திசெய்விக்கபபெற்று மகிழ்வுற்ற அந்தணர்களின் ஆசீர்வாதங்களினுல் பராக்ரமத்திலும் புகழிலும்

---

[1] ஸப்தத்வீபங்களாவன:—1. ஜம்புத்வீவ. 2. ப்லக்ஷத்வீவ. 3. குசத்வீவ. 4. க்ரௌஞ்சத்வீவ. 5. சாகத்வீவ. 6. சால்மலித்வீவ. 7. புஷ்கரத்வீவ.

மற்றஅரசர்களைக்காட்டிலும மேலாகஇருந்தான். ராஜாவே! பரதரே றே! இந்தக்காரணம்பற்றிததான் அந்த அனேகமாயிரம்அரசர்களைக் காட்டிலும் ஹரிசசந்திரன் சிறப்புற்று விளங்குகிறானென்றறி. மனி தர்க்கதிபதியே! வெற்றிபெற்றஹரிச்சந்திரன் அம்மஹாயாகத்தை நிறைவேற்றினபின் ஸம்ராடடாக முடிசூடபபெறறு விளங்கினன். பரதச்ரேஷ்டனே! மற்றுமுள்ள அரசர்களில் எவர்கள் ராஜஸூயயாகத் தைச்செய்கின்றனரோ அவர்கள் இந்திரனுடன்கூடி மகிழ்கின்றனர். பரதச்ரேஷ்டனே! யுத்தத்தில்ஓடாமல் மரணமடைந்தவர்எவரோ அவ ரும் அந்த இந்திரலோகத்தைச்சேர்ந்து மகிழ்கின்றனர். எவர்கள் இவ்வுலகத்தில் கடுந்தவத்தினால் தேகத்தைவிடுகின்றனரோ அவர்க ளும் அவவிடமசோந்து எக்காலமும சிறப்புற்றுவிளங்குகின்றனர். கௌரவாகளைச் சிறபபிக்கிறவனே! குருதிபுத்ரனே! ராஜாவே! ஹரிசசந்திராசனிடத்திலுள்ள மேன்மையைக்கண்டு வியபபுற்ற உன் தந்தையாகியபாண்டு நான் மானிடலோகத்திற்கு வருவதைஅறிந்து என்னவணங்கி, "ஐயா! நீர்யுதிஷ்டிரனுக்கு 'பாரதனே! நீபுவனி யைவெல்ல வல்லவனுயிருக்கிறாய்; உன்னஸஹாதரர்கள் உனக்கு அட ங்கியிருக்கின்றனர். நீ யாகங்களிறசிறந்த ராஜஸூயயாகத்தைச செய்வீராக. எனதுபுதலவனுகியநீ ராஜஸூயயாகனுசெய்தால் நான் வெகுசீக்கிரத்தில் இந்திரனபைகுச்சென்று ஹரிசசந்திரனைப்போல அனேகவருஷகாலமநிதியஸந்தோஷமா யிருபபேன்' என்று சொல் லக்கடவீர்" என்றுகூறினன். 'அபபடியேயாகட்டுமெ. நான் பூலோகத் திற்குப்போவேனுயின் ராஜாவானஉன்புதரனுக்குச் சொல்வேன்' என்று அவனுக்கு மறுமொழிகூறினேன். பாண்டவனே! புருஷச் ரேஷ்டனே! அந்தபபாண்டுவின்எண்ணத்தை நீ நிறைவேற்றக்கட வாய். நீயும் உன்முன்னோர்களும் தேவேந்திரலோகவாஸத்தைப் பெறுவீர்கள். அரசே! இந்தபபெரியயாகம இடையூறுகள்மிகுதியாக உள்ளதென்று நினைக்கப்பட்டது. யாகங்களைக்கெடுக்கும் பிரம்மரக்ஷ ஸுகள் இதில் தவறுகளைத தேடிக்கொண்டிருக்கின்றன. க்ஷத்திரி யர்களையழிபபதும் பூமியையொழிபபதற்குக் காரணமும் மரணத்தை யுண்டபண்ணுவதுமான யுதகம ஏதாவது ஒருகாரணம்பற்றி இந்த யாகத்தில் உண்டாகும. அரசர்களரசே! இதனைச்செம்மையாக ஆராய் ந்து எதுகூடுமோ அதைச்செய்வாயாக. நான்குவருணங்களையும்காப் பதில் எப்போதும் ஊக்கமும் உத்ஸாஹமுமுள்ளவனுகஇரு; அபி ஷிருத்தியையடை; மகிழ்ந்திரு; திரவியங்களினுல் பிராம்மணர்களைத் திருப்தியடையச்செய். நீ என்னைக்கேட்ட விஷயத்தைப்பற்றி உன

க்கு விரிவாகஉரைத்தேன். உன்னிடம் விடைபெற்றுக்கொள்ளுகி றேன். கண்ணனுடையநகரத்திற்குச் செல்வேன்" என்றார். ஜனமே ஜயரே! நாரதர் பாண்டவர்களுககு இவ்வாறுசொல்லியபின், எந்த ரிஷிகளுடன் சேர்ந்துவந்தனரோ அவாகளுடன்கூடவே சென்றார். அவர்சென்றபிறகு கௌரவரான தர்மராஜர் ஸோதரர்களுடன்கூடி ராஜஸூயமென்னும சிறந்தயாகததைபபற்றி ஆலோசணைசெய்தார்.

பதின்மூன்றாவது அத்தியாயம்.

மந்த்ரபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் ராஜஸூயஞ்செய்யஆலோசித்துக் கிருஷ்ணனுக்குத் தூது விடுத்ததும், வந்துசேர்ந்தகிருஷ்ணரிடம் காரியத்தைத்தெரிவித்ததும்.)

ஜனமேஜயரே! நாரதமஹரிஷிசொல்லியதைக்கேட்டு, யுதிஷ் டிரர் பெருமூச்செறிந்தார். ராஜஸூயயாகததைபபற்றி நினைத்து மனத்தில் ஆறுதலிலலாமலிருந்தார். மஹாத்துமாக்களான ராஜரிஷி களின் அருதமஹிமையைக்கேடடுமு முறைபடி யாகஞ்செய்தவர்கள் தமதுபுண்ணியசுர்மங்களினுல் மேலுலகமபெறுவதை ஆசரியந்தும் ஹரிச்சந்திரனென்னும ராஜரிஷி சாஸ்திரப்பிரகாரம் யாகஞ்செய்து மேன்மையாகவிளங்குவதைகேடடுமு தர்மபுத்திரர் தாமும் ராஜ ஸூயயாகஞ்செய்யக்கருதினார். பிறகு யுதிஷ்டிரர் ஸபையோரணைவ ரையும மரியாதைசெய்து அவாகள் அனுமதராலும எதிர்மரியாதைசெய் யபபெற்றபிறகு யாகத்திலேயே நினைவாகஇருந்தார். அரசர்க்கரச ரானஜனமேஜயரே! அநதக்கௌரவசரேஷ்டரான தர்மராஜர் பலமு றைஆராய்ந்துபார்த்து ராஜஸூயமசெய்வதிலேயே உறுதிபடுத்திக் கொண்டார். வியக்கத்தககபராக்ரமமும் மஹிமையுமுள்ள அவர் மறு படியும் தர்மத்தையேநினைத்து, எல்லாஎலலாபபிராஜைகளுக்குமநன் மையாயிருக்குமென்பதிலேயே மனத்தைச்செலுதினார். எலலாப் பிராஜைகளையும் வேற்றுமையின்றிப பரிபாலனஞ்செய்பவரும் தர்மத் தைக்காப்பவரெல்லாரிலும் சிறநதவருமான யுதிஷ்டிரர் யாவருக்கும் நன்மையைச்செய்தார். கோபம பீதம்இரண்டையுமொழித்து யாவ ருக்கும்தானம்கொடுக்கும்படி கட்டளையிட்டார். 'தர்மம்நல்லது, தர் மம்நல்லது' என்றதைத்தவிர வேறுசொல்லை யாருமகேட்டதில்லை. இவ்வாறுநடக்கையில் ஜனஙகள் தநதையினிடம்அன்புவைப்பது போலஅவர்மேல் அன்புவைத்தனர். அவரைப்பகைப்பவனில்லை. அத

னுல் அவர் அஜாதசத்ருவானர். ராஜாவின் அனுக்ரஹத்தினுலும் பீம ஸேனன் பாதுகாப்பினுலும் ஸவ்யஸாசியான அர்ஜுனன் பகைவரை ஒழிப்பதினுலும் புகழ்பெறுதருகுலனுல் கப்பங்கள் சரியாகவருவதினு லும் புத்திசாலியானஸஹதேவன் தாமங்களிவிதிப்பதினுலும நகுலன் இயற்கையாகஎல்லாரிடத்திலும் பணிவேர்டிருப்பதினுலும அந்தத் தேசம் கலகமில்லாமலும், அச்சமில்லாமலும, நிரம்பமழைபொழிவத னுல் செழுமையாகவும் இருநதது. ஜனங்கள் தம்தம தொழில்களை விடாமற்செய்தனர். வட்டிக்குக்கொடுக்கலவாங்கலும் யாகச்சிறபபுக் களும் பசுக்காத்தலுமஉழுதொழிலும் வர்த்தகமுமாகிய இவையணைத் தும் ராஜாவின்பரிபாலனதினுல் மிகஒங்கியிருநதன. யுதிஷ்டிரர் தர் மநதவருமலிருநததனுல் அத்தேசத்தில் கப்பமவராமல்நிறறலும அதற் காகப்பிரஜைகளைப் பீடிப்பதும் ரோகங்களின்மிகுதியும தீபபிடிதலு மாகிய இவையொன்றும் உண்டாகவில்லை. திருடர்களாலும் மோசக் காரர்களாலும் ராஜாக்கள்ஒருவர்க்கொருவர்விரோதத்தினுலும ராஜா வின் அபிமானம்பெறறவர்களாலும நிகருடநததாகக் கேட்கப்பட வில்லை. அரசர்கள் ஆறுகுணங்களினுல ராஜாவின்பிரியதைதச்செய்ய வும் கப்பங்களைச்செலுத்தவும் தாங்கள்செய்தமுயறசியின்பயனைத் தெரிவிக்கவும் பலராஜாயாரான வர்த்தகர்களோடு ஒததிருநதனர். ஜனமேஜயராஜாவே! ஆமேய்பபவர்முதல் அநதணரீருக பத்துத் திசைகளிலுமுள்ளஜனங்களால் தமதநதைதாய்போல அன்புவைக் கப்பட்டவரும் எங்குமபிரகாசிபபவரும எல்லாக்குணங்களுமபொருந் தினவரும் எல்லாவறறையும்பொறுபபவரும எல்லாருக்கும்மேலாகப் பெரும்புகழ்பெற்றுவிளங்குபவரும அரசர்க்கரசருமான தர்மராஜாவி னுல்ஆளப்பட்ட அநதத்தேசமானது, அவர்தர்மதில்நிலைபெற்றிருநத தனுல், ஜனங்கள் பொருளாசையினுல் லௌகிகவிருத்திகளைச்செய்து அப்பொருள்களைநிறைதபடியனுபவித்தும் செலவம்மிகுநததாகவே யிருந்தது. பேசுகிறவரிற்சிறநதவரான அந்தத்தர்மராஜர் அக்காலத் தில் அமைச்சரையும் ஸஹாதரையும் வருவித்து ராஜஸூயயாகத் தைப்பற்றிப் பலமுறைவினுனினர். 'அவராற்கேட்கபபட்ட அந்தமந் திரிகள் சேர்ந்து அபபோது யாகஞ்செய்யவிரும்பின சிறந்தபிரஜ் ஞையுள்ள யுதிஷ்டிரரைநோக்கி' யதார்த்தமானசொல்லைப் பின்வரு மாறு சொல்லலானார்கள்:—

" எந்தராஜஸூயயாகத்தைச்செய்து பட்டாபிஷேகஞ்செய்யப் பெற்றஅரசன் வருணனுடையசிறப்பைப்பையடைவதினை அந்தராஜஸூய யாகத்தினுல் அந்தஅரசர்க்கரசனுடையமேன்மையணைத்தையும் ராஜா

வாகியநீங்களும் பெறவிரும்புகிறீர்கள். கௌரவச்ரேஷ்டரே! அவ்வாறு அரசர்க்கரசனுடைய மேன்மைக்குரியஉங்களுக்கு ராஜஸூயஞ் செய்ய இதுதருணமென்று நமதுஉண்மைநண்பர்கள் நினைக்கின்றனர். எந்த யாகத்தில் சிறந்ததியமுள்ள ரித்விக்குக்களால் ஸாமவேதமந்திரங்க ளோச்சொல்லி ஆறுஅக்னிகள்மூட்டப்படுகின்றனவோ அந்தயாகஞ் செய்யுங்காலம் உமதுகூத்திரியசக்தியின்மிகுதியினுல் ஸ்வாதீனமா யிருக்கிறது. [1]தர்விஹோமம்முதலாக ராஜஸூயஅங்கமான எல்லா யாகங்களையும் நிறைவேற்றி ராஜஸூயயாகத்தின்முடிவில் ராஜ்யாபி ஷேகஞசெய்துகொண்ட அரசன் அந்தயாகஞ்செய்ததனுலே [2]ஸர்வ ஜித்என்று சொல்லப்படுகிறான். சிறந்தகைகளுள்ளவரே! நீர் ஸமர்த்தர். நாங்களனைவரும் உம்முதொற்படிநடக்கிறவர்கள். மஹாராஜாவே! நீர் ராஜஸூயயாகத்தைச் சீக்கிரத்தில்முடிக்கலாம். மஹாராஜாவே! சங்கிக்காமல் ராஜஸூயயாகத்தில் மனமவைக்கக்கடவீர்" என்று மித்திரர்களனைவரும் தனித்தனியாகவும் சேர்ந்தும் உரைத்தனர். ஜனமேஜயராஜாவே! பகைவரையழிப்பவரான தர்மராஜர் அச்சமில்லாமலும் அன்போடும அவர்கள்சொன்ன தர்மமுள்ள சிறந்த சொல்லைக்கேட்டு மனத்தில்ஏற்றுக்கொண்டனர். அந்தவேண்டினவர்களுடைய சொல்லைக்கேட்டபின் தமதுசக்தியையறிந்திருந்தும் சிலாக்கியமானகாரியத்தை ஆரம்பிக்கபோகின்றதர்மராஜா (மற்றவர்களையும்) பரீக்ஷிக்கத்தொடங்கினார். பீமஸேனன்முதலிய ஸஹோதரர்கள் நால்வரையுமநுகூலித்து அவர்களாலும் ராஜஸூயம் நல்லதென்று சொலலபபெற்ற தர்மராஜர் அந்தத்தர்மத்திலேயே எண்ணங்கொண்டார். அரசர்களரசரும கௌரவச்ரேஷ்டருமாகிய அந்த யுதிஷ்டிரர் ராஜஸூயயாகஞ்செய்வதற்குத் தம்மனத்தில் உடனே நிச்சயஞசெய்துகொண்டார். ஜனமேஜயரே! ஆச்சரியப்படத்தக்க சக்தியுள்ளவராயிருந்தும தாமத்தையேயனுஸரித்து ராஜஸூயயாகஞ்செய்யத் திரும்பவும பலமுறை மனத்தை ஸ்திரப்படுத்திக்கொண்டார். ஆலோசனைகள்தெரிந்த புத்திசாலியான அந்தத்தர்மராஜா வானயுதிஷ்டிரர் திரும்பவும் ஸஹோதரர்களோடும் மஹாத்மாக்களாகிய ரித்விக்குக்களோடும மந்திரிகளோடும கௌமியர் வியாசர்முதலானவர்களோடும் ஆலோசித்தார். விராடன், த்ருபதன், புத்திசாலியானஸாத்யகி, யுதாமன்யு, உத்தமோஜன், புத்திமானான அபிமன்யு, சூரர்களான திரௌபதிபுத்ரர்கள் இவர்களோடுசேர்ந்தும் முக்கிய

[1] பலாசஇலையினுல் ஹோமம்செய்வது.

[2] எல்லாவற்றையும்ஜயித்தவன்.

மாக ஆலோசனைசெய்தார். "அரசர்ச்சக்ரசன் செய்யத்தக்க சிறந்த யாகமாகிய ராஜஸூயமென்னும் மஹாபாகம் சித்தையுள்ள எனக்கு எப்படிமுடியும்? நீங்கள் சொல்லுங்கள்" என்றுகேட்டார், தாமரைக்கண்ணராகிய ஜனமேஜயரே! அந்தராஜாவினால் இவ்வாறு வினவப்பட்ட ஸபையோர்கள் அக்காலத்தில் தர்மராஜாவான யுதிஷ்டிரனைநோக்கி, "தர்மத்தையறிந்தவரே! ராஜஸூயமென்னும் மஹாயாகத்தைச்செய்ய நீர் தகுதியுள்ளவர்" என்று மறுமொழிகூறினர்கள். ரித்விக்குக்களும் ரிஷிகளும் ராஜாவுக்கு இவ்வாறுசொன்னபின், அவர்கள் சொன்னசொல்லை ராஜாவின்மந்திரிகளும் ஸஹோதரர்களும்கொண்டாடினர். அறிவிற்சிறந்தவரும் அடக்கமுள்ளவருமாகிய அந்தத்தர்மராஜர் உலகங்களின் நன்மையைக்கருதி மறுபடியும் தம்முள்ளத்திலேயே மேன்மேலும் ஆராய்ந்தார். 'தனதுதிறமையைச் செவ்வையாகஅறிந்து தேசகாலங்களையும் செலவையும் வரவையும் செம்மையாகஆராய்ந்து புத்தியோடுசெய்யும் அறிவுடையோன் துயரப்படான். தன்மனத்தின்நிச்சயம் ஒருவனுல்மாத்திரம் இந்தயாகம் ஆரம்பிக்கத் தகாது' என்றறிந்து முயற்சியினுல் காரியத்தைச் சிறபபிப்பதற்காக அந்தக்காரியத்தை நிச்சயிக்கும்விஷயத்தில் ஜனார்த்தனராகியகிருஷ்ணனே யாவருக்கும் மேற்பட்டவரென்றெண்ணித் தர்மராஜர் மனதினுல் கண்ணனைத்தியானித்தார். தர்மபுத்திரர் தேவதாளால் மதிக்கப்பெற்ற செய்கைகளினுல் கண்ணன் அறியக்கூடாதவரென்றும் சிறந்தகைகளையுடையவரென்றும் ஜனனமில்லாதவராயினும் தமதுஇச்சையினுல மனிதர்களில்அவதரித்தவரென்றும் அவரறியாதது ஒன்றுமில்லையென்றும் அவர்செய்கைக்கு எட்டாதது ஒன்றுமில்லையென்றும் அவர் எதையும்தாங்கக்கூடாதவராகார்என்றும்அவரைப் பற்றிஊகித்துநிணைத்தார். குந்திபுத்திரரான அந்தயுதிஷ்டிரர் இவ்வகையானஉறுதியுள்ளநிச்சயத்தைச்செய்து உலகங்களுக்குத்தாதையான கண்ணனுக்கு,தமதுஆசாரியனுக்குஅனுபவுவதுபோல உடனே தூதனையனுப்பினர். அந்தத்தூதன் விரைவாகச்செல்லுகின்றரதத்தினுல் உடனே துவாரகையில்யாதவர்களைஅடைந்து அங்கேவாஸஞ் செய்யும் கண்ணபிரானிடம் சேர்ந்தான். அவன் பிரபுவானமாதவனிடம்கைகூப்பிக்கொண்டு விண்ணப்பஞ்செய்யலானன்:—"சிறந்தகைகளையுடையஹ்ருஷீகேசரே! தர்மராஜர்வான அந்தயுதிஷ்டிரர், தௌம்யர் வியாஸர்மூதலானவர்களோடும் த்ருபதன்விராடன் இவர்களுடன்சேர்ந்த தம்ஸஹோதரர்எல்லோரோடும் உமதுதரிசனத்தை விரும்புகிறார்" என்றான். ஜனமேஜயராஜாவே!. அந்தஇந்திரஸேன

னென்னும் தூதனதுசொல்லைக்கேட்டு யாதவச்ரேஷ்டரும் சிறந்த சக்தியுள்ளவரும ஶ்ரியபதியுமான அச்சுதர் தம்மைப்பார்க்கவிரும் புகிற யுதிஷ்டிரரைத தாமும்பார்க்கக்கருதினவராகி, வேண்டினவர்க ளிடமும் வஸுதேவரிடமும்விடைபெற்றுக்கொண்டு உடனே இந்திர ஸேனனுடன்கூட இந்திரப்பிரஸ்தம்சென்றார். ஜனார்த்தனர் ஆவ லுள்ளவராய் வேகமானகுதிரைகளைக்கட்டிக்கொண்டு அனேகதேசங் களைத்தாண்டி இந்திரபிரஸ்தத்திலிருக்கும தர்மராஜாவிடம்சேர்ந் தார். தம்மஸஹோதரர்முறையிலிருக்கும்தர்மராஜாவும் பீமனுலும் அந்தக்கிருஹத்தில் பிதாவைப்போலவ பூஜிக்கபபெற்றகிருஷ்ணன் உடனே தம்தாயைபின்ஸஹோதரியான குந்தியை அன்புடன்பார்த் தார். ஸர்வதாஷமடைந்திருக்கும சினேகிதனான அர்ஜுனனுடன் சேர்ந்து தாமுமசர்வதாஷமடைந்து விளையாடினார். நகுலஸஹதேவர் களால் ஆசாரியனைப்போலபூஜிக்கபபெற்றார். ஸமாத்தரான அசசுதர் சிறந்தஸ்தானத்தில்உட்காரந்து இளைபபாறி ஒழிவாயிருக்குமபோது தர்மராஜா அவரைசசந்தித்துத தமகாரியததை விண்ணப்பஞ்செய்ய தொடங்கினார்.

"கிருஷ்ணா! நான் ராஜஸூயமாகஞசெய்ய விரும்புகிறேன். ஆனால் அது வெறுவிருபபதநிலைமாதத்திரம நிறைவேறற்முடியாது. எதனால் அதனை அடையலாமென்பது உமகருன்முகத்தெரியும. எவ னிடதத்தில் (உலகம) எலலாமஅடஙகியிருககிறதோ, எவன் எல்லா இடங்களிலும பூஜிககபபடுகிறானோ, எவன் எல்லாவற்றிற்கும ராசவ னோ அநதராஜா ராஜஸூயஞசெய்யதகக்கவன். அநதராஜஸூயம் நான்செய்யக்கூடியதென்று ஸ்ரீஹருதிதாகள சோலலுகின்ற னர். கிருஷ்ணா! அதவிஷயதில எனகுக் தீதாநதகிச்சயம் உமது வாக்கினாலேதான் வரும. சிலர ஸ்ரீஹருதிதாலேயே குறறத்தைக் கண்டறிவதிலலை. மறறுமசிலர தாதஸபததிறகாக இவ்சொல்லை மாத்திரமே சொலலுகின்றனர். சிலர தமகருன்மையானதைப் பிற ருகருமபிரியமானதாகவே நினைக்கின்றனர. காரியவிஷயங்களில ஜன ங்களின்வாக்கியங்கள இவவாறுகவே பெருபபாலுமகாணபபடுகின் றன. நீர்மட்டுமே இதறகாரணங்களைக்கடநது காமக்ரோதங்களை நீக்கி உலகததில எநதமலானதருமியுளளீதா அதனை உள்ளபடி உரைக்கத்தக்கவர" என்றார.

பதினென்காவது அத்தியாயம்.

மந்த்ரபர்வம். (தொடர்ச்சி.)

(ஜராஸந்தனீழுதலிய பகைவரிருக்கையில் ராஜஸூயம் முடித்தலாகாதென்று கண்ணபிரான் தர்மராஜாவுக்கு விளம்பியது.)

யுதிஷ்டிரர் அப்படிச்சொலலியதைக்கேடடு, கண்ணன்சொல்லு கிறார். "பரதவம்சத்தியமஹாராஜாவே! எலலாக்குணங்களாலும் நீர் இராஜஸூயயாகத்துக்குத தகுதியுள்ளவர். ஆனல், உமக்கு எல்லாம் தெரிந்திருக்கையிலேயும் யான் ஒன்றுசொலவேன். இபபோது உலகத்தில் க்ஷத்திரியர்களென்று வழங்குபபபெறுகினறவரும ஜமதக்னியின்புத்திரனை பரசுராமனுற் கொல்லாமல்விடப்பட்டகூத்திரியர்களின்ஸந்ததிகளாயிருக்கிறார்கள். பரதகிரேஷ்டரே! பூமிக்கரசரே! இந்தக்ஷத்திரியர்கள் வம்சபரம்பரைக்கே ஒருநிச்சயஞ்செய்து அதை உபதேசவாக்கியம்மாகக் கொண்டிருக்கின்றனர். அஃது உமக்கும்தெரியும். பூமியிலுள்ள அரசாகளாகிய மறறக்ஷத்திரியர்கள் புரூரவவம்சத்திற்கும் இக்ஷ்வாகுவம்சத்திற்கும் (அடங்கின) குடிகளாகத் தம்மை நினைக்கின்றனர். பரதகிரேஷ்டரே! ராஜாவே! புரூரவவம்சத்து அரசர்களும் இக்ஷ்வாகுவம்சத்தரசர்களுமாகிய ராஜாக்களின்குலங்கள் நூற்றொன்றிருபபதாகஅறியும். மஹாராஜாவே! யயாதியின்வம்சத்தாராகிய போஜர்களின்அபிவிருத்தியானது குணங்களாற்சிறபபுற்றிருக்கிறது. அஃது இபபோது நாற்றிசைகளிலும் பரவியிருக்கிறது. அவர்களின் அந்தஐசுவரியத்தின முன்செய்தஉடன்பாட்டின்படியே எல்லாக்ஷத்திரியர்களும அனுஸரித்திருந்தனர். ராஜாவே! இப்போதுதான் ஜராஸந்தனென்னுமரசன் தன்பராக்ரமத்தினல் எல்லாரையும்வென்று அந்தப்போஜகுலத்தோரின் ஐசுவரியத்தைக் கீழ்படுத்தி அரசர்களுக்குத் தானேதலைமையாயிருக்கும்படி பட்டாபிஷேகம்செய்யபபெற்றிருக்கிறன். அவன் [2]மத்தியதேசத்தை ஆண்டுகொண்டு அரசர்களுள் வீரோதம்செய்யநினைத்தான். மஹாராஜாவே! எந்தஅரசன் (பீபாருள்படைகளின்வன்மையாகிய) பிரபுசக்தியிறகிறந்தவனெலகம் ஏவினருவனுக்கு அடங்கியிருக்கிறதோ அவன்தான் தன்சக்தியினல் ஸாம்ராஜ்யத்தை அடைந்தவனெறிறன். ராஜாவே! சிறந்தபராக்ரமசாலியென்று பீபயர்பெற்ற சிசுபாலனென்னுமரச

---

[1] அதிக பலவானுக்கு மற்றவர் அடங்கியிருக்க வேண்டுமென்பது.

[2] போஜர்களின்தேசமாகிய மதுரையைச்சேர்ந்ததேசம்.

னும் அந்தஜராஸந்தனேய முழுதும்அடித்து அவன்படைத்தலைவ னுகஆனனன்றே. மஹாராஜாவே! கபடயுத்தமசெய்பவனும மஹா பலசாலியும கரூசதேசாதிபதியுமான,1வக்ரன்என்பவனும்அந்தஜரா ஸந்தனிடத்திலேய சிஷ்யன்போலக்காத்திருக்கிறன். மஹாவீர்க ளும மஹாத்மாக்களுமான ஹம்ஸ 2டிம்பகர்களென்றுபெயர்பெற்ற இரண்டரசர்களும் ஜராஸந்தனைதான் அடுததிருக்கின்றனர். கரூச தேசாதிபதியான வக்ரதந்தனும கரபனும ஆச்சரியமணியென்று சொல்லப்படும திவ்யரதத்தினதைத் தலையிலணிந்திருக்கும் மேக வாகனனும் 3முருவையும்மகரகண்டியும்மடக்குகின்றவனும் அளவற்ற ஸைன்யஙள்ளவனும் வருணன்போலமேறறிசையில்விளங்குகிறவனும் யவனராஜனுமாகிய காலயவன்னும ஜராஸந்தனஆசரயித்திருக்கின் றனர். மஹாராஜாவே! வயஸ்முதிர்ந்தவனன பகதத்தன் உபதேபிதா வுக்குருண்பன். அவன் சொலலினுலும செய்கையினுலும ஜராஸந்த னிடம விசேஷமானபணிவுடனிருகிறன். உள்ளன்பினுற்கட்டப பட்டு உபதிதாவினிடத்திலிருப்பதுபோல உமமிடம்பறறுள்ளவனு யிருக்கிறன். மேறறிசையிலுங் தென்றிசையிலுமுள்ள பூமியின்கோடி களுக்கசனும உமகருமாதுலனும சூரனும குந்திதேசத்தைவிருத்தி செய்பவனும சத்துருகளைமஹரிபவனுமாகிய புருஜித்என்பவன் ஒருவன்மடடும சினேகதத்தினல உமக்குஉடபடடிருபபவன்.

இவ்வுலகத்தில தானேபுருஷாததமனென்றுசொலலிக்கொண் டும் மூடத்தனத்தினல் எனதுசின்னஙகளாகிய சங்குசக்கரம்முதலிய வறறை எபபோதுமசுமநதுகொண்டும பொளண்டரகவாஸுதேவ னென்று உலகதத்திலபெயாபெற்றும வஙகதேசம புண்டரதேசம் கிராததேசங்களுக்கதிபதியாகச சேனைகளுடன் சேதிதேசத்திலிருக் கும் அறிவுகெடடவன் முனனர் என்னலகொல்லாமல்விடபபட்ட போதே ஜராஸந்தனையடைந்தான். மஹாராஜாவே! எவன் தன்அஸ் த்ரவித்தைவன்மையினல பாண்டியர்களையும க்ருதகைசிகர்களையும் வென்றேனு எவனதுஸேஹாதரனன ஆகிருதியென்பவன் பரசராம னுக்கொபபான சூரனகஇருநதாலும இநதபபுவனியில் நாலிலொரு பாகம்பெற்றவனும இநதிரனுக்குசமம்பானமபகைவர்களானவீர்களை அதஞ்செய்யும பலசாலியுமாகிய அநுபதிஷ்மகனின்னும் போஜ குலத்தரசன் மாகதனைச்சாராதிருக்கிறன் நாம் உறவினராயிருதும்

---

1 தந்தவக்ரன்.

2 டிம்புனென்பவனுக்கு டிபிகனென்றும் டிம்பிகனென்றும் பெயர் காணப்படுகிறது. 3 மூரன்என்பதும்பாடம்.

பிரியங்கனீச்செய்தும் வணங்கியும் அடித்திருந்தும நம்மிடம் அவன் சார்வதில்லை. நமக்குஇன்னுதவைசெய்வதிலும நிச்சயத்தேதாடிருக்கிருன். ராஜாவே! அவன் தன்குலத்தையும பலத்தையும அறியவில்லை. ஜராஸந்தனுடையபுகழ் விளங்குவதைகண்டு அவனேயடுத்திருக்கிருன். பிரபுவே! அபபடியே வடதிசையிலுள்ள பதினெண்குலதேதாராகிய போஜாகளும் ஜராஸந்தனுக்களுகியே மேற்றிசைசேர்ந்தனர். சூரசேனர், பத்திரகாரா, போதர், சாலவர், படசரா, ஸுஸ்தலர், ஸுகுட்டர், குலிந்தா, குருதிகள், ஸார்வாயனா, தென்பாஞ்சாலதேசததார், கிழக்குக்குருதேசத்தார, கோஸலர், மதஸியர், ஸயஸ்தபா தமென்னும பலதேசஅரசர்களும ஸிஹாதரர்களோடும வேலிக்காரர்களோடுபகூட வடதிசையைவிடடுப பயநது தென்திசைசேர்ந்தனர். இவ்வாறேற பாஞ்சாலதேசததார்யாவரும ஜராஸந்தன்பயததினுல் கலகமுற்றபாதளாகத தங்களராஜ்யததை விடடுவிடடு நாறறிசைகளிலும ஓடிவிட்டனர். அந்தயுதததில மகதேசததிலுள்ள கிரிவ்ரஜமென்னுமகரததிலிருந்து முதற்படை வெளிபபடாமலிருக்கையிலேயே மஹாதமாவான ஜராஸந்தன்முன்னிலையில் பாஞ்சாலர்கள் பறகதோடினர். முன்னர் உகரஸேனன்புத்ரனுகிய மதிகெட்ட கம்ஸன் தன்சுறறதத்தவரையடக்கி ஜராஸந்தன்பெணகளிருவரை மனைவிகளாக எடுததுகொண்டான். ஜராஸந்தன்புதலவிகளும [1]ஸஹதேவன்தஙகைகளுமான அஸ்தியென்றும பிராப்தியென்றுமபெயருள்ள இரண்டு ராஜகுமாரிகளையும மணமபுரிநதான். அறிவுகெட்டவனுகிய அந்தக்கமஸன் அநதஜராஸந்தன்பலத்தினுல தன்சுறறதத்தவரையடக்கி மேன்மையையபடைநதான். அவனிடததில் அது மிகபபெரிய ஆதியாயிருநதது. போஜராஜாகளிலமுதிர்நதவர்கள் துராதமாவான கம்ஸனுறபிடிக்கபபட்டுத தமகுலதேதாரைக காபபாறறக்கருதி அழகுள்ள அநதஆகுகன்பெணணை அபபோதே அக்ரூனுக்குக்கொடுதது (அநத அக்ரூனுல) நமமையழைபபிதது கௌரவிததனர். நானும்ஸங்காஷணரைத துணையாகக்கொண்டு சுறறத்தாரின்காரியத்தைச்செய்தேன். கமஸனும ஸுநாமாவும் முறையே என்னுலும் பலராமனாலும் கொல்லபபடடனர். கமஸனைக்கொன்றபிறகு ஜராஸந்தனுக்களுகின என்குலதேதாரை முதலில்பலராமரும் நானும் சேர்ந்து காபபாறறினேனும. ராஜாவே! ஜராஸந்தன்எதிர்க்க, கரைகடநத பயம நேர்நதபோது நாங்கள்பதினெண்குலதேதார்கள்சேர்ந்து [2]இவ்

---

1 ஜராஸந்தன்புதரன்.

2 ஊரைவிட்டுப்போகிற ஆலோசனை.

வாலோசனைசெய்தோம். சத்துருக்களையழிக்கும் சிறந்த அஸ்த்ரங்களினால் நாங்கள் ஓயாமல் யுத்தஞ்செய்து முறையுருவருஷங்களாகத் தோன்றும் மூன்றுவருஷங்களாகியும அந்தஜராஸந்தனைஜயிக்கொல்லாமற்போனோம். ஏனெனில், தேவாகளுக்கொப்பான வன்மையுள்ளவாகளும வீரர்களிற்சிறந்தவர்களும அஸ்த்ரங்களால்மோஹமில்லாதவாகளுமாகிய ஹம்ஸடிம்பகர்களென்னுமபெயருள்ளவாகள் இருவரும் ஜராஸந்தன்பக்ஷத்திலிருந்தனர். இணைபிரியாத அவ்விரண்டுவீரர்களும் சூரனான ஜராஸந்தனுமாகிய இம்மூவரும மூன்றுலோகங்களுக்குமும் போதுமானவரென்பது என்கருத்து. புத்திசாலிகளிற் சிறந்தவரே! நமக்குமாத்திரமபன்று. மற்றுமுள்ள அரசர்கள் எவ்வளவுபேரிருக்கின்றனரோ அவரணைவாகளும இதேதண்ணந்தான் உண்டாயிற்று. ராஜாவே! நாம்ஜராஸந்தனுகு (பாபபவர்க்கு) மயிர்சிலிர்பபெடுக்குமபடியான பயங்கரமான பதினெடடியுத்தங்களைக்கொடுத்தோம். ஆகிலும, மஹாபலசாலியானஜராஸந்தன் கொல்லபபடவில்லை. பிறகு ஹம்ஸனென்று பிரசித்திபெற்றிருந்த அந்தச் சிறந்த அரசன் அந்தபபதினெடடாவதுயுத்தத்தில பலராமரால் அடிக்கபபட்டான். பாரதரே! ராஜாவே! அபபோது ஹம்ஸன்கொலலப பட்டானென்று யாரோசொன்னதைக்கேடடு, டிம்பகன் யமுனையாற்றில்மூழ்கினான். “இவ்வுலகத்தில ஹம்ஸனைவிடடு நான்ஜீவிக்கமாட்டேன்” என்று நிசசயஞ்செய்து அவன்மரணமடைந்தான். அவன்அவ்வாறுசெய்ததைகேட்டுபபகைவரின்உகங்களைஜயிபபவனுகிய அநாதிருஷ்டனும் யமுனைகேசென்று அகிலஅமிழ்ந்தான். பரதகுலரேஷ்டரே! அந்தராஜாவானஜராஸந்தன் அவ்விருவரும இறந்துபோனதைக் கேள்வியுறறுச் சோர்வடைந்தமனத்துடன் தன்நகரத்திற்குசசெலலுன். சத்துருக்களைமஹரிபபவரே! அந்தஜராஸந்தனென்னுமராஜா அவ்வாறுதிருமபிபபோனபிறகு நாங்களெலலாரும மகிழ்ந்து மறபடியும் மதுரையில்வஸித்தோம். அரசர்களரசே! பகைவரையடகுகிறவரே! தாமரைமலர்போன்ற கண்களையுடையவாகளான கமலன்மணிகள் தமகணவனுடையமரணத்தினல் துயரமுறறுத் தங்கள்தந்தையும் மகதராஜனுமான ஜராஸந்தனிடமசென்று, ‘எங்கள்கணவனைக் கொன்றவனைக்கொல்’ என்று தூண்டிமபோதெல்லாம் முன்செய்தஆலோசனையையேநினைத்து மனதுதுயரத்துடன் ஓடிப்போனோம். மஹாராஜாவே! நாங்களெல்லாரும் ஜராஸந்தன்பயத்தினல் தனஸம்பத்தைச் சோத்தெடுத்துக்கொண்டு புத்திரர்கள் குலதோர் சுற்றத்தார்களுடன் ஊரைவிட்டுத் தனித்துப போகவேண்டுமென்றுநினைத்து

மேற்றிசையில் ரைவதகமென்னும் குன்றினுல்வளங்கும், குசஸ்தலி யென்னும் அழகானநகரத்தையடைந்து அதில் வீடுகள்கட்டினேம். தேவர்களாலும் அணுகமுடியாத கோட்டையரண்களையும் செய் தோம். அந்தநகரத்தில் பெண்களும் யுத்தஞ்செய்யலாம். மஹாரதர் களான யாதவர்களுக்குச் சொல்லுவானேன். பகைவரையழிப்பவரே! நாங்கள் அந்தசிறந்தமலையைப்பார்த்தபிறகு ஜராஸந்தணைக்கடந்தோ மென்றுநினைத்து ஒருபயமுமின்றி அந்நகரத்தில் வஸிக்கிறோம். கௌரவச்ரேஷ்டரே! பிறகு யாதவர்கள் மேலானஸந்தோஷத்தை யடைந்தனர். இவ்வாறு ஜராஸந்தனுல் எல்லாவகையாலும் தீங்கு செய்யப்பட்டநாங்கள் ஸமாத்தர்களாயிருந்ததனுல் ஒன்றுசேர்ந்து மூன்றுயோசணைநீளமும் ஒவ்வொருயோசணைவிஸ்தாரமுமுள்ள மூன் றுசிகரங்களுள்ளதும் ஒவ்வொருயோசணையின்கோடியிலும் நூறு வாயில்களுள்ளதும் வீரர்களின்பராக்ரமத்தினுல்காக்கப்பட்ட தோர ணங்களையுடையதும் யுத்தத்தில்அடங்காத மதமுள்ள பதினெட்டு க்ஷத்திரியர்களால்காக்கப்பட்டதுமான கோமந்தமென்னும்மலையை ஆச்ரயித்தோம். எங்கள்குலத்தில் பிறந்தவர்கள் பதினெண்ணுயிரம் ஸஹாதாக்கள் இருக்கின்றனர். ஆகுகன்புதல்வர்கள் நூற்றுவர். ஒவ்வொருவனும் தேவர்களுக்குமேலானவன். ஸஹாதரனோடு கூடிய சாருதேஷ்ணன், சக்ரதேவன், சாத்யகி, நான், பலராமர், ஸாம் பன், பிரத்யும்னன்ஆகிய எழுவரும் மஹாரதாக்கள். ராஜாவே! மற்ற வரையும் சொல்லுகிறேன்; கேளும். கிருதவர்மா, அனுகிருஷ்டி, ஸமீகன், ஸமிதிஞ்சயன், கங்கன், சங்கு, குருதி இவ்வேழுபேரு ளும் மஹாரதர்கள். [1][பிரத்யும்நன், அநிருத்தன், பானு, அக்ரூரன், ஸாரணன், நிசடன், கதன், இவர்களனைவரும் மஹாரதர்கள்] விக்ரமன், ஜில்லி, பபரு, உததவன், விதூரதன், வஸுதேவர், உக்ர ஸேனன் ஆகியஇந்தவழுமஹாரிசரேஷ்டர்களும் அந்தகபோஜன்குமா ரர்களாகிய பிரஸேனஜித், ஸ்யமந்தகமென்னும்மணி மிகுதியாகஸ்வர் ணத்தையளிப்பதனுல் சூரியனுடைய்சிறப்பையடைந்த யமலன் இவ் விருவரும் அவர்களின்தந்தையாகிய அந்தகபோஜராஜனும் ஆகப் பதின்மர் இருக்கின்றனர். வஜ்ரம்போன்ற தேகவன்மையுள்ளவர்க ளும் சிறந்தபராக்ரமமும் பருத்தபுஜங்களையுமுள்ளவர்களுமாகிய யாதவ வீரர்கள் மல்லகளின் இடைத்தேசமாகிய குசஸ்தலியைநீங்கி அச்ச மற்றவராயிருக்கின்றனர். ராஜாவே! பாண்டவர்களாலும் நாங்கள் எப்போதும் காப்புள்ளவர்கள். பாரதரே! இவ்வாறு எல்லாச்சிகல்

[1] இந்த அதிகபாடத்தில் பிரத்யும்னன் இரட்டித்து வந்திருக்கிறது.

வச்சிறப்புக்களும்அமைந்த அந்தச்சராஸந்தன் வேரூன்றியிருக்கையில் கூடித்திரியர்களுள் உம்மை அரசர்க்கரசனாகச்செய்யத்தகுமா? துரியோதனன், பீஷ்மர், துரோணர், அசுவத்தாமா, கிருபர், கர்ணன், சிசுபாலன், வில்லாளியானருக்மி, ஏகலவ்யன், த்ருமன், சுவேதன், சைபயன், சகுனி இவர்களோப போரில்வெல்லாமல் யாகத்தை எவ்வாறுசெய்யமாட்டுவீர்? இவ்வரசர்கள் பெருந்தன்மையினால் யுத்தஞ் செய்யாமலிருப்பாராயினும் இவர்களில் பலதினுலும் சிறந்த அஸ்த்ர பலத்தினுலும் கர்வங்கொண்டதினுலும் மிக்கபொருமைக்காரனும் வீர சிரேஷ்டனும் ஸமர்த்யபுத்ரனுமான கர்ணனொருவன்மட்டும் யுத்தஞ் செய்வான். ராஜாவே! மஹாபலசாலியான ஜராஸந்தன் ஜீவித்திருக்கையில் ராஜஸூயயாகத்தை ஈர்நிறைவேற்றமுடியாதென்பதுதான் எனதுஅபிப்பிராயம். அந்தஜராஸந்தன் சிங்கம் மஹாகஜங்களைவெல்வதுபோல ராஜாக்களனைவரையும்வென்று கிரிவ்ரஜமென்னும் ஊரில் மலைக்குகையில் (அவர்களை) அடைத்திருக்கிறான். அந்தஜராஸந்தனென்னும்ராஜா இந்தயாகஞ்செய்யநினைத்துப பூமியையாளுகின்றவர்களாகிய எண்ணுயிரம்அரசர்களால் படடாபிஷேகஞ்செய்யபபெற்றான். பகைவரைவெல்லுகிறவரே! அவன் உமாபதியும் மஹாத்மாவுமான மஹாதேவரை உக்ரமானதவத்தினுல்ஆராதனஞசெய்து ராஜாக்களோஜயித்ததான் ராஜசூரவ்டரே! அவன் செய்தபிரதிஜ்ஞையைநிறைவேற்றினுன். அவன், ஜராஸந்தனோடுவந்த அரசர்களோ ஜயித்து ஜயித்துத் தன்நகரத்திற்கொண்டுவந்து அடைத்துக் [1]கிரிவ்ரஜத்தை [2]புருஷவ்ராஜமாகச்செய்தான் மஹாராஜாவே! நாங்களும் அபபோது ஜராஸந்தனுக்குபபயந்துதான் மதுரையைவழித்துத் துவாரகாபுரி சேர்ந்தோம். மஹாராஜாவே! இந்தயாகத்தை நீர்செய்யக்கருதினுல் அந்தராஜாக்களைவிடுவிக்கவும ஜராஸந்தனைவதஞ்செய்யவும முயல வேண்டும். கௌரவரே! புதிதுமான்களிறசிறந்தவரே! அவ்வாறின்றி ராஜஸூயயாகத்தைபபறறிய இந்தஆரமபம் முழுதும்நிறைவேற்றுவதற்குமுடியாது. குற்றமறறராஜாவே! இதுதான் என்ஆலோசனை. நீர் எவ்வாறுநினைக்கிறீர்? காரியமஇவ்வாறிருக்கையால் விஷயத்தைபபற்றி நீரும யுக்திக்கொக்கொண்டு நிச்சயஞசெய்து எனக்குச் சொல்லும்" என்றார்.

---

[1] மலைக்கூட்டம். [2] ஊர்கூட்டம்.

பதினேந்தாவது அத்தியாயம்.

மந்த்ரபர்வம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணன்சொல்லைக்கேட்டுத் தர்மபுத்திரர் ராஜஸூயஞ்செய்யாதொழிவதேநலமென்றுநினைத்துக் கிருஷ்ணனைக்கேட்டதும், பீமன் தான் ஜராஸந்தனைஜயிப்பதாகச்சொன்னதையறுஸரித்துக் கிருஷ்ணன் ஜராஸந்தவதம் முதற்காரியமென்றுசொன்னதும்.)

அதைக்கேட்டு, யுதிஷ்டிரர்சொல்லலானார் :—"ஓ! விருஷ்ணிகுலச்ரேஷ்டரே! மற்றவர்சொல்லமுடியாததால் மேதாவியானவர்மால் உரைக்கப்பட்டது ஸகலதேஹங்களிலிருந்துவிடுவிப்பவர் உமைவிட வேறெருவரும்இப்புவியிலில்லை தமதுமனிருபத்தைச்செய்துகொள்ளும் அரசர்கள் வீடடுக்குவீடு இருக்கிறார்கள் அவர்கள் ஸாம்ராஜ்யத்தைநடைந்தவர்களல்லர். ஸாம்ராட்என்னும்பெயர்பெறுவது கடினம். பிறர்சக்தியையறிந்தவன் தன்னைச் சிறப்பித்துப்பேசமாட்டுவனு? பிறருடன்சேர்ந்தபோது எவன்சிலாக்கியமாயிருக்கிறானோ அவன் பூஜிக்கப்பெறுகிறான். [1]பூமி விரிவாகவும் அனேககண்டங்களுள்ளதாகவும் அனேகரதனங்கள் நிரம்பினதாகவுமிருக்கிறது. மனிதன் வெகுதூரமாகச்சென்றபிறகுதான் லாபத்தைப்பார்க்கிறான். ஒழிவடைதலேயே சிறந்ததாகநினைக்கிறேன் ஒழிவையடைவதனால் எனக்கு நன்மையுண்டாகும். ராஜஸூயத்தில் இறங்குவதனால் மேன்மை பெறமுடியாதென்பது என்கருத்து. ஜனார்த்தனா! உயர்ந்தமனமுள்ள இந்தச்ன் [2]குலத்தோர் தம்மிலொருவர் இவ்வரசர்களெல்லாரிலும் மிகச்சிறந்தவனுகலாமென்று நினைகின்றனர் மஹாபாவரே! குற்றமற்றவரே! நாமும் அகாலத்தில ஜராஸந்தனுடையதுஷ்டத்தனத்

---

1 பூமியென்னப்பட்டமந்த்ராலோசனையின்விஷயம், உபாயங்கள் அபாயங்கள்முதலிய பலவகைகளடங்கியது. பொன, பெண், சேனை, ரதனம்முதலிய அனேகம் உயர்ந்தபயன்கள்நிரம்பினது அந்தமந்த்ராலோசனையின்விஷயதனில வேண்டினஸாதகங்களைகூட்டியும் பாதகங்களைவிலக்கியும் விடாமுயற்சிமுதலியவற்றால் மேலே வெகுதூரம்சென்றபின சிரேயஸ் என்று சொல்லப்பட்ட காரியஸித்தியை மனிதன்அறிகிறான் என்பதும், 2 பூமியைப்போல ஸ்திரமானநிச்சயபுத்தியானது அந்தஅந்தவிஷயங்களுக்கேற்றபடி அனேகவிதமாகவும தடையற்றதாகவும ரதனங்கள்போன்ற பலஉயர்ந்தபயன்கள் நிரம்பினதாகவும் இருக்கிறது. மனிதன்வெகுதூரஞ் சென்றபிறகுதான் தனதுகுணமையை அறிகிறான. அதாவது, மனதைக்கவரும் சப்தாதிவிஷயங்களைக் கடந்தநான் சனது ஆத்மஸ்வரூபமாகியசிரேயஸைக்கண்டறிகிறானென்பதும் பழையவுரை.

2 பீமன்முதலானவர்கள்.

தைப்பார்த்து அவனுக்கு அஞ்சியேயிருந்தோம். யார்க்கும்வெல்லக் கூடாத பிரபுவே! யான் உமதுகைவன்மையைச் சார்ந்தவனன்றோ? நீரே அவனுக்களிக்கின போது என்னைப் பலவானென்றுரூன்றினேயென். விருஷ்ணிகுலத்தவரே! சிறந்ததகைகளையுடையவரே! மாதவரே! உம் மாலாவது பலராமாலாவது பீமஸேனனுலாவது அர்ஜுனனுலாவது அவன் கொல்லப்படக்கூடியவனே கூடாதவனெனவென்று ஸந்தேதித்துத் திருமபத்திருமப ஆராய்ந்துகொண்டிருக்கிறேன். கேசரே! எல்லாக்காரியங்களிலும் எனக்கு நீர்தாம நியமிபபவராயிருக்கிறீர்" என்றார். அதைக்கேட்டபு பேசுவதில் ஸமர்த்தனனபீமன் பேசத்தொடங்கினன்.

"முயற்சியைக் கடைப்பிடியாத அரசனும் தான்பலஹீனனுயிருந்து தக்கூபாயமின்றிப் பலவானையெதிர்ப்பவனும் புற்றுபபோல் உட்கார்ந்துபோகின்றனர பலம்குறைந்தவனும சோம்பலின்றி ராஜநீதி தவறுமல உபாயங்களைத் திருத்தமாகசெய்வதினல் அதிக்பலமுள்ள சத்துருவையும்வென்று தனக்குவேண்டினகாரியங்களையும் பெரும் பாலும் ஸாதிபபான். கிருஷ்ணனிடத்தில்உபாயமும் என்னிடத்தில் பலமும் தனஞ்சயனிடத்துஜயமும் இருக்கின்றன. நாங்களுமூவரும் மூன்றுஅக்னிகள யாகத்தைமுடிபபதுபோல ஜராஸந்தனைமுடித்து விடுவோம். கோவிந்தா! உமதுபுத்திபலத்தைபபற்றுவதனல் தர்ம ராஜர் எல்லாநன்மைகளையும்அடைவர் உம்மைநாதனுகபபெற்ற எங்களுக்கு எபபோதும ஜயந்தானே" என்றான். அதற்குக் கண்ணபிரான், "பால்யனுனவன் காரியங்களை ஆரமபித்துவிடுவான். பின் வருவதைபபாரான். ஆதலால், பால்யனும பொருளையேநாடினவனுமாகிய பகைவனைபபற்றி சூஷ்திரியாகள [1]பொறுபபதில்லை. ஜயிக்கக்கூடிய அகபபுறபபகைவர்களை ஜயித்தலும் மாந்தாதாவும், பிரஜைகளைபபரிபாலித்தலும் பகீரதனும், தானவன்மையினல் கார்த்தவீரியார்ஜுனனும, நீதிபலத்தினல் பரதனென்னுமசனும், செல்வத்தினல் மருத்தனும ஆகியஇந்த ஐந்துஸம்ராஜாகள் தங்கள்குலத்தோரெல்லோரையும் (தங்கள்புகழால் வியாபிதத்து) தழுவிக்கொண்டிருந்தனரென்று கேள்விபபட்டிருக்கிறோம். ஒவ்வொருயுகத்திலும் ஸம்ராஜர்களிருப்பதில்லை. யுதிஷ்டிரரே! ஜயிக்கவேண்டியவர்களை ஜயிப்பது, பரிபாலனஞ்செய்வது, தவம்புரிவது, பொருள் விருத்தி செய்வது, உபாயங்களைப் பிரயோகிபபது ஆகியஐந்துவகைகளாலும் ஸம்ராட்டாகவிரும்புகிற உமக்குப் பிருஹத்ரத்தன்புத்ரனை ஜராஸந்

[1] அவன் பெரியவனுவதற்குமுன்னமே ஒழித்துவிடுகின்றனர்.

தன் ஜயிக்கமுடியாதவனுக இருக்கிறான். பரதச்ரேஷ்டரே! அதை அறியும். நூற்றொருகுலத்தோராகியஅரசர்களும் அவனுக்கு எதிர் யுத்தஞ்செய்யாமற்போயினர். ஆதலால், அவன் தன்பலத்தினுலேயே இவ்வுலகத்தில் ஸாமராஜ்யத்தைநடத்துகிறான். ராஜாக்கள் தனங்களே யெடுத்துகொண்டு ஜராஸந்தனிடம காத்திருகின்றனர். சிறுபிள் ளைத்தனத்தினுல் அநீதியைகடைபிடித்தத அவன் அதனுலும சந் தோஷப்படுவதில்லே. மனிதாகளில முதன்மையான ஜராஸந்தன் ராஜ் யபட்டாபிஷேகஞ்செய்யப்பட்ட அரசனேப பலவந்தமாகப பலிக்கு எடுத்துக் கொண்டுபோகிறான். மனிதாகளில ஜராஸந்தனுக்குப [1] பாக்மாயிரதவனே நாம எங்குமகண்டிலம ஜராஸந்தன் நூற்றுக் குட்பட்டவராகிய ராஜாகளே இவ்வாறு முழுதும் வசபடுத்தினுன். குந்திபுத்ரரே! மிகவும்பலக்குறைவானராஜா அவனிடம் அணுகு வது எவ்வாறு? தண்டுபரஸ்தமென்னுமஇடத்தில் ராஜாவானஜரா ஸந்தன் சிவபெருமானேக்குறித்துத் தவஞ்செய்கிறான். பரதசரேஷ் டரே! பசுபதியின்ஆலயத்தில் பசுக்களேபோலப பலிகொடுபடுதற காகக் குறிபிட்டுப் புரோக்ஷணஞ்செய்யபபட்ட அநதராஜாக்க ளுக்கு உயிர்விருப்பம்வ தது? க்ஷத்திரியன் எபோது சஸ்திரதினுல் மரணத்தையடைகிறனே அபோது கௌரவிக்கபடுகிறான். ஆத லால், நாம் யுத்ததில் ஜராஸந்தனேயெதிர்த்துத் தடுபோம. ராஜா வே! எண்பத்தாறுராஜாக்கள ஜராஸந்தனுல கொண்டுபோய்ச்சேர்க் கப்பட்டனர். பதினல்வா குறைவு. அவர்களேயும கொண்டுபோன பிறகு கொடியசெய்கை நடக்கப்போகிறது. அதற்குத் தடை எவன் செய்வனே அவன் உலகமெல்லாம வியாபிகுமபுகழைபபெறுவான். ஜராஸந்தனே எவன் ஜயிபனே அவன் நிச்சயமாக ஸம்ராஜனுவான்" என்றுசொன்னர.

பதினுறுவது அத்தியாயம்.

மந்த்ரபர்வம். (தொடர்ச்சி.)

(ஒழிவடைகிறதைபபற்றித் தர்மராஜர் சொல்ல, அர்ஜுனன் அதனே மறுத்துப் பாக்கிரமத்தின்சிறபபைக்கூறியது.)

யுதிஷ்டிரர், "கிருஷ்ணே! நான் ஸம்ராஜனுடையசிறப்பையடை யக்கருதித் தன்னுபத்தையே முதன்மையாகக்கொண்டு முற்றும் ஸாஹஸமாக உங்களே எவ்வாறுஅனுபபுவேன்? பீமன் அர்ஜுனன்

[1] வசப்படுத்தப்படாதவன்.

இருவரும் ,இரண்டுகண்களென்றும் ஜனார்த்தனர்மனமென்றும் நினைத்திருக்கிறேன். மனமும் கண்களுமிலலாதவனுடைய உயிர்வாழ்க்கை எவ்வாறிருக்கும்? பயங்கரமானபராக்ரமமுள்ளதும் கரைகாணமுடியாததுமான ஜராஸந்தனுடைய சேனையை எதிர்த்துச்சென்று யுத்தத்தில யமனும வெல்லான். அந்தவிஷயத்தில் உங்கள்செய்கை எவ்வளவு? இந்த வேறுலாபத்தில் பிரவிருத்திதானக்கு அனர்த்தம் வந்து சேருகிறது. ஆதலால, நான் இதற்கு அங்கீகாரம்கொடுப்பது யுக்தமாகாதென்று நினைக்கிறேன். கிருஷ்ணா! என்மட்டில் நான்ஆலோசிப்பதைச் சொலலுகிறேன். அதைக்கேட்கவேண்டும். இந்தக்காரியத்தில் ஒழிவடைதலே நலமென்றுநினைக்கிறேன். செய்வதற்குக்கடினமான ராஜஸூயயாகமானது இபபோது என்மனத்தைத் தடுக்கிறது" என்றுசொன்னார். சிறந்தவில்லியும் சிறந்தரணிகளியும ரதத்தையும கொடியையும குதிரைகளியுமபெற்றவனான அர்ஜுனன் யுதிஷ்டிரரிடமபேசலானன்.

"ராஜாவே! விரும்பத்தக்கவையும் பெறுவதறகரியவையுமான வில், அஸ்திரங்கள், அமபுகள், பராக்ரமம், தரணி, பூமி, கீர்த்தி, திறமை முதலியவைகள் எனக்குக்கிடைத்திருக்கின்றன. நன்றுகக்கற்றுத் தேர்ச்சியடைந்தவர்கள் உயர்குலத்திற்பிறப்பதைச் சிறப்பாகக் கூறுகின்றனர். பராகரமத்திற்கொபபானது ஒன்றுமில்லை. பராக்கிரமஞ்செய்வதே எனக்கு உசிதமாகதேதான்றுகிறது. பராக்கிரமசாலிகளின் குலத்திற்பிறநதும பராக்கிரமமில்லாதவன் என்னசெய்வான்? பராக்கிரமமில்லாத குலதகிறபிறநதாலும் பராக்கிரமமுள்ளவன் சிறநதவனுகிறான். ராஜாவே! எவன்செய்கை சத்துருஜயத்திலேயே முழுதும் பிரவிருத்திகிறதோ அநதப பராக்கிரமமுள்ளகூத்திரியன் மறறகுணங்கள ஒன்றுமிலலாதவனனாலும் பகைவரைமிஞ்சுவான். பராக்கிரமமில்லாதவன் எல்லாக்குணங்களும பொருந்தினவனயிருந்தும் என்னசெய்வான்? எல்லாக்குணங்களும் பராக்ரமத்தைச் சேர்நதவையாகவல்லவோ இருகின்றன. ஜயத்திற்குக்காரணம் உத்ஸாஹநதான். அது செய்கையையும் பாக்கியத்தையும்பற்றியிருக்கிறது. ஒருவன் ஸாதனங்களுள்ளவனயிருநதும் ஊக்கமின்மையினல் அவற்றை உபயோகப்படுத்தாவிடில், அநதவழியாகத்தான் ஒருவன் பலமுள்ளவனுகஇருநதும எதிரிகளிடம்தோல்வியடைகிறான். பலமுள்ளவனுக்கு உத்ஸாஹக்குறைவிருபபதுபோலவே தன் பலமறியாமையுமுண்டு. அவ்விரண்டும் கெடுப்பதற்குக்காரணங்கள். வெற்றியைவிரும்பும் அரசன் அவ்விரண்டினையும் விடவேண்டும்.

யாகத்திற்காக ஜராஸந்தனேயழிப்பதையும் அரசர்களைக்காப்பதையும செய்வோமாயின் அதைவிட மேலானதென்ன இருக்கும்? ராஜாவே! ஒருகாரியத்தைத் தொடங்காமலிருப்பதற்கு நமமிடத்தில் தகுதியில்லையென்றநிச்சயம அவசியமாயிருக்கவேண்டும. நமக்குத் தகுதியிருப்பதில் ஸந்தேஹமிலலாமலிருக்கும்போது தகுதியில்லையென்று நீர்நினைபபதேன். பிற்காலதில் நாம ரிஷிகளாகிச் சாந்தியைவிரும் பும்போது காஷாயவஸ்திரம் ஸுலபம். இப்போது ஸமராஜாவாவது நமக்குமுடியும. நாம் எதிரிகளுடன்யுத்தஞ்செய்வோம" என்றான்.

பதினேழாவது அத்தியாயம்.

மந்த்ரபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன்சொன்னதை அனுஸரித்துக் கிருஷ்ணன்சொல்லியதும், அவர் தர்மராஜாகேட்டதன்பின் ஜராஸந்தன் பிறபபபபற்றிக்கூறியதும்.)

அதன்பிறகு கிருஷ்ணபகவான் சொல்லலானார்:—"பரதவம சத்திறபிறநத குநதியின்புதரனபிருபபவனுகுத தகுதியானபுதத தான் இப்போது அரஜுனனுல வெளியிடபபடடது. மரணமேநா வது இரவிலோ பகலிலோ நாமறியோம. யுத்தஞசெய்யாமையிலை ஒருவன் மரணமில்லாமலிருநததையும் நாமகேட்டதில்லை. நீதிசாஸ் திரங்களினுல் அறியபபடட உபாயநகளினுல பிறரைவசபபடுத்தி அத னுல் தன்மனத்திறகுச சநதோஷததை யுண்டுபண்ணிகொளவது தான் மனிதர்களாலசெய்யகூடியது. தீங்குகளிலிலக்கி நல்லஉபா யங்களைச்சோபபதனுல ஆரமபமஉயாநததாகிறது. ஸஹாயமசேர்வ தனுல் விசேஷமுண்டாகிறது. அபபோது இரண்டுபக்ஷங்களும ஸம மாவதில்லை. உபாயநகளும் ஆலோசனையுமிலலாதவனுகுகு யுத்தத்தில் தோல்விநிச்சயம. இருவரும ஸமமாயிருபபதனுல ஸந்தேஹமஉண் டாகிறது. ஜயமென்பது இருகிறத்தாருக்குமு உண்டாகாதே. ஆத லால், நாம் தநதிரமாக ஆறுமுபபெருகுகு மரத்தினருகிற்செல்வது போலச் சத்துருவிருக்குமிடதிற்குசசென்று நமதுரஹஸ்யம்வெளி படவொட்டாமல் அவன் பலக்குறைவைக்கண்டு பாக்ரமஞ்செய் வோமாயின் ஏன் காரியஸித்தியையடையோம்? அதிகபலவான்க ளானசத்துருக்கள், சேனைகளைவகுத்துநிறகும்போது அவர்களுடன் போர்செய்யலாகாதென்பது புத்திசாலிகளின் நீதி. அஃது எனக்கும் இப்போதுசரியாகத்தோன்றுகிறது. நாம் சத்துருவுக்குத்தெரியா

மல் அவன்வீட்டில் பிரவேசிததோமாயின் அபாயமின்றி அநதச்சத் துருவின்தேசதைப பிடிததுக்கொண்டு நமமுடையஇஷ்டததை யடையுலாம. புருஷாகளில சரேஷ்டனுகிய ஒருவன்தான், ஹிந்து பூதங்களின் சேர்க்கையாகிய தேகததை ஆத்துமா தாஙகுவதுபோல ராஜ்யலக்ஷ்மியை எபபோதுமதாஙகுகிறான். அவன் ஒய்ந்திருபபதை நாமபார்க்கவில்லே. அலலது குலதேதாகளேகாபபதையே தலேமை யாகக்கொண்டநாம ஜராஸநதனேகொன்றபிறகு மிச்சமுளளசேனை யினுல் யுததத்திலடிபடடாலும அதனுல் ஸ்வாகதுசெலவோம" என்றார். யுதிஷ்டிரர், "கிருஷ்ணே! ஜராஸநதன்என்பவன் யாவன்? எத்தகைய சக்தியும் பராகரமமுடையவன். அவன் அக்னிக்கொப பான உமமையண்டியும் விடமிறபூச்சிபோல எரிகபபடாமலிருக் கிறனே" என்றுகேட்க, கண்ணபிரான்சொல்லுகிறார்.

"ராஜாவே! ஜராஸநதன்எவவகையான சகதியுள்ளவன்? எப் படிபபட்டபராக்ரமமுளளவன்? பலமுறைநீங்குசெய்தும நம்மால் என்விடபபடடானென்பதைச சொல்லுகிறேன்; கேளுமு. மூன்று அகெளஹிணிலேனேகளுகருஅதிபதியும யுத்ததில தனக்குச்சமு ஞைவனிலலேயென்று காவித்தவனும பலசாலியும மகததேசாதிபதியு மானபிருஹத்ரதனென்னுமரசன்ஒருவனிருநதான. அழிகும பல மும் செல்வமுமநிரமபினவனும, ஒபபறறபராக்ரமமுள்ளவனும், எக் காலமும சரீரததில யஜ்ஞதில கூக்குறிலேவஹித்தவனும, இரண்டா வது இநதிரனேபபோன்றவனும, எலலாவறறிறகுமமேலாகபபிரகா சிபபதில ஸூர்யனுகும, பொறுமையிலபூமிக்கும், கோபத்தில்யம னுக்கும், பொருட்செலவத்தில் குபேரனுக்கும ஒபபானவனுமாகிய அவ்வரசன் மகததேசததில கிரிவ்ரஜமென்னும நகரத்திலிருநதுதனது அரசாட்சியைநடதத்தினன். பரதசரேஷ்டரே! அவனதுஉயாகுலத் துகுரிய [1]குணங்கள ஸூரியகிரணங்கள்போலப பூமியெலலாம்பர வின. பரதசரேஷ்டரே! அநதமஹாவீரன் அழகும செலவமுமுள்ள வர்களும் இரடடையாகபபிற [2]தவர்களுமான காசிராஜன்பெண்களை மணமபுரிநதான். புருஷச்ரேஷ்டனுகிய அநதபபிருஹத்ரதன் அவ் விருமனைவிகளின்முன்னிலேயிலும, "நான், உங்களிலயார்க்கும் ரஹஸ் யத்தில் பகூபாதமாகநடபேன்" என்றுவாக்குததததஞ்செய்தான். அவ்வரசன் தனக்குஒத்தஅன்பினர்களான அவ்விரண்டுமனைவிகளோ டும்சேர்நது இரண்டு [2]பிடிகளோடுசேர்நதயானேபோலவிளங்கினன்.

---

[1] 'கேணை' என்றபாடத்தைவிட்டு 'குணை' என்றபாடம்கொள்ளப் பட்டது.

[2] பெண்யானை.

அவ்விருவர்க்கும்நடுவிலிருந்த அவ்வரசன் கங்காதேவி யமுனாதேவி களுக்கு நடுவில் தேகமெடுத்திருக்கும்ஸமுத்திராராஜன்போலச சோபி த்தான். சிற்றின்பங்களில்ஆழ்ந்திருக்கையிலேயே அவனுக்கு இள மைப்பருவம்தாண்டிற்று. அவனுக்கு ஸந்ததியைவிருத்திசெய்ய ஒரு புத்திரன்கூடப பிறக்கவில்லை. அந்தராஜசரேஷ்டன் மங்களகரமான அனேகவேஹாமங்களையும புத்திரகாமேஷ்டிகளையுஞ்செய்தும வம்சத் தின் விருத்திக்குக்காரணமான ஒருபுத்திரனையடையவில்லை. அவன் தன் இரண்டுமனைவிகளோடும் மிகவும்மனவேறுபபுறறான். ராஜாவே! ராஜ பக்தியுள்ள மந்திரிமுதலியவாகளாலதடுக்கபபடடும் அவன் ராஜ்யத் தைவிட்டு உடனே தபோவனத்தைச்சோந்தான். பிறகு மஹாத்மா வும் கௌதமவம்சத்தவருமான கக்ஷீவானுடைபுத்திரரும தவத்திற் சிறந்தவருமான உதாரருணமுள்ளவருமான சண்டகௌசிகரைபபற்றிக் கேள்விபபட்டான். தற்செயலாகவந்த ஒருமரத்தடியைச்சார்ந்திரு ந்த அம்முனிவரை அவ்வரசன் மனைவிகளுடன்கூட எல்லாவகைச்சு ச்ரூஷைகளினாலும் ஸந்தோஷபடுத்தினான். அந்தரிஷியும பிரஹத் ரதனுக்குத் தகுதிபபடி மரியாதைசெய்தார். அவ்வரசன் அந்தமஹாத் மாவினால் அனுமதிகொடுக்கபபெற்று உட்கார்ந்தான். அப்போது அம்முனிவர் ' அந்தராஜாவைபபார்த்து, '' நீ பிராமமணாகளால்அனு ஸரிக்கப்பட்டும மனைவிகளுடன்சோந்தும வந்திருப்பது எதற்காக?'' என்றுவினவினார். அவ்வரசன் அமுமுனிவரைபபார்த்து, '' பகவா னே! எனக்குப புத்திரனில்லை, ஸந்ததியிலலாதவனுக்கு முதிர்ந்தபிரா யத்தில் ராஜ்யதாலஆவதென்ன? ஆதலால், நான் பாரியைகள் இரு வருடனுஞ்சேர்ந்து வனத்திலதவஞ்செய்யபபோகிறேன். முனிவரே! ஸந்ததியில்லாதவனுக்குப புகழுமபிதிர்சசிராததும் அழியாமலிரா '' என்றுசொன்னான். அந்தஅரசன் இவவாறுசொலலலும், தைரியம் தவறாதவரும் ஸத்தியவாக்குள்ளவருமான அந்தரிஷிசரேஷ்டர், தயை கூர்ந்து அவனபபார்த்து, '' அரசர்க்கரசே! நல்லதவழுள்ளவனே! உன்மேல் நான்ஸந்தோஷமடைந்திருக்கிறேன்; வரமகேள்'' என்று சொன்னார். உடனே பிருஹத்ரதன் பார்யைகளுடன்கூடி அவரை நமஸ்காரஞ்செய்து புதரணிக்காணாவேமென்ற எண்ணமில்லாமை யினால் கண்ணீர்சொரிந்து மேலசுத்தழுதழுத்து, '' பகவானே! ராஜ்பத்தைவிட்டுத் தபோவனத்துக்குபபோன பாக்யஹீனனுக்கு வரம்எதற்கு? ஸந்ததியில்லாத எனக்கு ராஜ்யத்தினாலவதென்ன?'' என்றுசொன்னான். அதைக்கேட்டு மனங்கரைந்த அந்தமுனிவர்தியா னஞ்செய்ய அந்தம்மாமந்தின்நிழலிலேயேஉடகார்ந்தார். உட்கார்ந்த

அம்முனிவரின்மடியில்உலசாமலும்கிளியினுல்கடிக்கப்படாமலுமிருக்கும் ஒருமாங்கனி விழுந்தது. அமமுனிசரேஷ்டர் அதனையெடுத்து மனத்தைச்செலுத்தி மருந்தித்துப புதராலாபத்திற்கு நிகரற்றஸாதனமான அதை ராஜர்வுக்குஅளித்தார். சிறந்தஞானமுள்ள அந்தமஹரிஷி, ராஜாவைப்பார்த்து, "ராஜாவே! மனிதர்க்கதிபதியே! உன்னிஷ்டம நிறைவேறிறது; திருமபிசசெல். அரசனே! இதுதான் உனக்குபபுத்திரன்; இந்ததபோவனத்தில தவஞசெய்யாதே; தர்மமாகபபிரஜைகளைபபரிபாலனஞசெய். ராஜாகளுக்கு அதுதான்தவம; அனேகயாகங்களசசெய்து லோமாஸதனிலை இந்திரனுக்குத் திருபதிசெய். உன்புதனிரனுக்கு ராஜ்யபடடாபிஷேகஞசெய்தபிறகு நீதபோவனதற்குவா. பூமிக்கரசே! உன்புதலவனுக்கு எட்டுவரங்கள்கொடுக்கிறேன்; பிராமமணபக்தியோடிருபபது, புதனங்களில்பிறரால்வெல்லகூடாமை, புதனிக்கூமை, அதிதிகளிடமஅன்புடைமை, ஏழைகளிகவனிபபது, மிக்கஅதிகமானதேகபலம,உலகத்தில்என்றுமிருக்கும்கீர்த்தி, பிரஜைகளுக்கினிடனதுஅன்புஆக இநதஎட்டுவரங்களையுமகொடுததேன்; ராஜாவே! உன்காரியமகிறைவேறிற்று; திரும்பிச்செலலலாம்" என்றுசொன்னார். அநதரிஷியினுல் விடைகொடுக்கப்பெற்றஅவ்வாசன் தனநகரதனாரால பின்செல்லப்பட்டவனுகி மனைவிகளுடன் அநதநத தேபாவனதனிலிருநது தன்நகரதிற்குச சென்றான்.

"பரதசரேஷ்டரே! அநத ராஜச்ரேஷ்டன் முன்னே தான் வாக்களித்திருநததைநினைநது அநதஒருபழததை இரண்டுமனைவிகளுக்கும் கொடுத்தான். அநதபபெண்ணரசிகள் அமமுனிவரிடனதுள்ள கௌரவதனினுலும தங்களகாலவித்தியாஸதனினுலும அநதமாங்கனியை இரண்டுபாகங்களாகசசெய்து புஜித்தனர். ரிஷியின்சொல் தவறுதாகையாலும் அநதக்காரியம அவசியம கேரிட வேண்டியதாயிருநததனுலும கனியுண்டதேகாரணமாக அவரிருவருக்கும கர்பம உண்டாயிறறு. அவ்விருவரையுமகண்ட அவ்வாசன் பெருமகிழ்ச்சியடைநதான். சிறநதபுத்தியுள்ள தாமாராஜாவே! அதன்பிறகு கிரமமாகப் பிரஸவகாலமேர்நததேபாது இரண்டுஸ்திரீகளும் ஒருதேகத்தின் இரண்டுகண்டங்களைப பெறறனர் ஒருகண், ஒருகை, ஒருகால், அரைவயிறு, அரைமுகம், அரைபபிருஷ்டமாகவிருந்த இரண்டு தேககண்டங்களைக்கண்டு மிகநடுங்கினர். , ஸ்ரேஷ்டரிகளான அவ்விரண்டுபெண்களும் பயந்து ஒருவரோடொருவர் ஆலோசனைசெய்து உயிருள்ள இரண்டுதேகபாகங்களையும் மிகத்துயரத்தோடு விட்டுவிட்

ட்னர். அவர்களின் தாதிமார்களிருவரும் அவ்விரண்டு துண்டங்களையும் நன்றுகழுவி அநதப்புரத்தின்வாயிலிலிருநது வெளியேகொண்டு போய் எறிநதுவிட்டுவநதனர். அந்தத்தாதிகள் வெண்பட்டுக்களினால்மூடப்பட்ட அவ்விரண்டினையும யார்க்குமதெரியாமல் நாற்சநதியில்போட்டுவிட்டு உடனே மறுபடியும் அநதபுரத்துக்குப் போய்ச் சேர்ந்து அவ்விரண்டு அரசிகளுகருகும் தனிதனியே தெரிவித்தனர். புருஷச்ரேஷ்டரே! அப்போது மாமஸத்தையும ரக்தத்தையும்புஜிப பவளான ஜரையென்னும் ராக்ஷஸி நாற்சநதியிலபோடப்பட்ட அவ்விரண்டுகண்டங்களையும் எடுத்தாள். எடுபபதற்கு எளிதாயிருக்கும் படிசெய்யக்கருதின அவ்வரக்கி விதியின்வண்மையினால மதிகொடுக்கப்பெற்று இரண்டுகண்டங்களையும கூடடிவிட்டாள். புருஷச்ரேஷ்டரே! அவ்விருதுண்டங்களும் கூட்டப்படடவுடன் ஒருருவமுள்ளவீரனுகிய ஒரு ராஜகுமாரன் உண்டானன. ராஜாவே! உடனே ஆசசரியததினால் கண்மலர்ந்த அவவரக்கி வஜ்ராயுதத்தின் வபிரதத்தினற்செய்யபபட்டவன்போன்ற அநதக்குழந்தையை எடுக்கமுடியாமறபோனாள். அந்தக்குமாரன் சிவநதஉள்ளங்கைகளாலடிகூடிய கரதலபபிடியாகப் பிடித்து வாயில்வைதது க்கொண்டு மிகுநத கோபததுடன் நீருண்ட மேகம் கர்ஜிப்பதுபோற் கூவினன். புருஷஸிம்மமே! வீரரே! அந்தச்சப்தத்தினால் அந்தபபுரத்துஜனங்கள் பரபரபபடைநது ராஜாவுடன்கூட விரைவாகவெளிபபடடனர். பாலநிரமபின கொங்கைகளையுடையவரும் புத்ரலாபத்தில் எண்ணபவிடடுத் துயரமுற்றவருமான அவ்விரண்டுமங்கையர்களும் விரைவாகவே வந்தனர். அவ்விரண்டு துண்டங்களும் அவ்வாறுசோநததையும அரசன சந்ததியில்விருபப முற்றவனுயிருத்தலையும் அநதக்குழநதை மிக்கபலமுள்ளதாயிருப்பதையுப்கண்டு, அரகி, 'இநதராஜாவின்தேசததில வலிகசும் நான் புத்திரீனிலிரும்பினவனும மஹாத்மாவும் தர்மிஷ்டனுமான இவ்வரசனதுபுத்ரனை இந்தக்குழநதையைக் கொலலததகாது' என்றுநினைத்தாள். அவள் மானிடரூபமெடுத்து மேகம ஸூர்யனைவழிபபது போல அநதக் குழநதையையெதிரகொண்டு அரசனைநோக்கி, "பிருஹத்ரதனே! உனக்கு இநதபபுதிரனைக் கொடுக்கிறேன். வாங்கிக்கொள். பிராமணசரேஷ்டருடைய கட்டளையினால் உன்னிருமனைவிகளுக்கும் பிறநது தாதிமார்களால்பெறியபபட்ட இந்தக்குமாரன் என்னுற்காபபாறறபபட்டான்" என்றுசொன்னள. பரதச்ரேஷ்டரான நர்மாஜாவே! உடனே காசிராஜன்பெண்களாகிய அப்பெண்ணரசிகள் அந்தக்குழந்தையை விரைவாகவாங்கிக்கொண்டு முலைப்

பால்பெருக்கினால் நினைத்தார்கள். பிறகு அதையெல்லாம்கண்டு மகிழ்வுற்ற அவ்வரசன் பொன்னிறமுள்ளவளும் ராக்ஷஸத்தன்மையில்லாதவளுமான அவ்வரக்கியைப்பார்த்து, "தாமரைமலரின் உட்காய்போன்ற நிறமுள்ளவளே! எனக்குப் புத்ரதானம்செய்தலே யாவள்? மங்களரூபியே! நீசொல்லாமற்போனாலும் சரி; தேவதையென்று எனக்குத் தோன்றுகிறாய்" என்றுசொன்னன்.

பதினேட்டாவது அத்தியாயம்.

மந்த்ரபர்வம். (தொடர்ச்சி.)

(ஜரையென்னும்ராக்ஷஸி பிருஹத்ரதராஜாவுக்குத் தன்வரலாற்றைக் கூறிப் பிள்ளைக்குத் தன்பேரிடும்படி சொல்லிப்போனதும், அரசன் அவ்வாறேசெய்ததும்).

ராக்ஷஸி, "அரசர்க்கரசே! உனக்கு ஸுகமுண்டாகட்டும். நான் ஜரையென்னப்பட்ட ராக்ஷஸி; நினைத்தரூபமெடுப்பவள்; உன் அரண்மனையில்பூஜிக்கப்பெற்று ஸுகமாகவஸித்தேன். முன்னர் பிரம்மதேவரால் கிருஹதேவியென்னும் பெயரோடு படைக்கப்பட்ட ராக்ஷஸியாகிய நான் மனிதர்களின்வீடுகள்தோறும் எப்போதுமிருக்கிறேன். அஸுரர்களையழிப்பதற்காக உயர்ந்தஅழகுடன் நான் (வீடுகளில்) வைக்கப்படுகிறேன். யெவனவன்பிராயத்திலிருப்பவனும் புத்ரவதியுமாக என்னை எவன் பக்தியுடன்சுவரில் எழுதிவைப்பனோ அவன் வீடு தழைத்துவிளங்கும்; இதற்குமாறாயிருந்தால் கெடும். பிரபுவே! உன்வீட்டில் அனேகபுத்ரர்களால் சூழப்பட்டவளாகச் சுவர்களிலெழுதப்பட்டுக் கந்தங்கள் புஷ்பங்கள் தூபம பக்ஷணம் போஜனமுதலிய வற்றினால் எப்போதும் நன்றாகபூஜிக்கப்பட்டிருக்கிறேன். தர்மிஷ்டனாராஜாவே! இதற்குப் பிரதியுபகாரம்செய்வதற்காக எப்போதும் நினைத்துகொண்டிருக்கிறநான் உன்புத்திரனுடைய இவ்விரண்டுகண்டங்களையும்கண்டேன். மஹாராஜாவே! என்னால்கூட்டப்பட்ட இவ்விரண்டுகண்டங்களும் தெய்வச்செயலினாலும் உனதுபாக்கியத்தினாலும் ஒருகுமாரனாயின. இந்தவிஷயத்தில் நான் ஒருவ்யாஜமாத்திரமே. நான் மேருமலையையும்நின்னத்திறமையுள்ளவன். உன்குழந்தையைத்தின்பதுஎவ்வளவு. உன்வீட்டிற்செய்தபூஜையினால் ஸந்தோஷமடைந்தநான் உனக்குப் புத்திரனைத்திரும்பக்கொடுத்தேன். இவன் இவ்வுலகத்தில் என்பேரினால்புகழ்பெற்றிருக்கப்போகிறான்"

என்றுமறுமொழிசொன்னாள். தர்மராஜாவே! இவ்வாறுசொன்ன பின் அவ்வரக்கி அங்கேயே அந்தர்த்தானமானாள். அவ்வரசன் அந்தக்குமாரனையெடுத்துக்கொண்டு அரண்மனைக்குச்சென்றான். அவ்வரசன் அப்போதே அந்தக்குழந்தைக்குச்செய்யவேண்டிய ஜாதகர்மம் முதலியவற்றைச்செய்தான். அந்தராஷ்ஷிக்கு மகததேசமெங்கும் மஹோத்ஸவம்செய்யும்படி கட்டளையிட்டான். பிரம்மதேவருக்குச் சமானமான ப்ருஹத்ரதன், "இந்தக்குழந்தை ஜரையென்னும்அரக்கியினால் சேர்க்கப்பட்டதனால் ஜராஸந்தனென்றுவழங்கப்படட்டும்" என்று அந்தப்புத்திரனுக்கு நாமகரணஞ்செய்தான். மகததேசாதிபதியின் அந்தக்குமாரன் நெய்யினால்ஆகுதிசெய்யப்பட்ட அக்னியைப்போல வளர்ச்சியும் பலமும் சிறந்தகசக்தியுமுள்ளவனகவளர்ந்தான். ராஜாவே! தாமரைமலரைபோன்றகண்களையுடைய அந்தக்குமாரன் இவ்வாறு தாய்தந்தையர்களுக்கு ஆனந்தத்தைசெய்துகொண்டு வளர்பிறைச்சந்திரன்போல விருத்தியடைந்து வெகுகாலத்திற்குபபின் யௌவனமடைந்தான்

பத்தோன்பதாவது அத்தியாயம்.

மந்த்ரபர்வம். (தொடர்ச்சி.)

(சண்டகௌசிகமுனிவர் ஜராஸந்தனுக்கு வரங்கொடுத்ததையனுஸரித்து இதுவரையில்அவனைக்கொல்லவில்லையென்றுகிருஷ்ணன்சொல்லியது.)

சிலகாலத்திற்குபபிறகு சிறந்தவ்ரதமுள்ள பகவானுகிய சண்டகௌசிகமுனிவர் (ஒருமுறை) மகததேசத்திற்குவந்தார். அவர்வரவினால் ஸந்தோஷமடைந்தபிருஹத்ரதராஜன் அமைச்சரோடும் கட்டியங்கூறுபவரோடும் மனைவிகளோடும் புத்திரனோடுங்கூடப் புறப்பட்டான். பாரதரே! அவ்வரசன் அர்க்கியபாத்யாசமனீயங்களைக்கொடுத்து அந்தமுனிவரைபபூஜித்து ராஜ்யத்தையும் புத்திரனையும் அவருக்குஒபபுவித்தான். ராஜாவே! பகவானுனஅந்தரிஷி அரசன்செய்த அந்தப்பூஜையைபபெறறுக்கொண்டு உள்ளார்கிற்கது பிருஹத்ரதராஜனைப்பார்த்துச் சொல்லலானார்.

"ஓ! ராஜாவே! எனக்கு ஞானக்கண்ணினால் இம்மைதல்லாம முன்னமேமதரியும். அரசர்க்கரசனே! இந்தபபுத்திரன் எப்படிபபட்டவனுவானென்பதைக்கேள். இவனுடைய அழகும்தைரியமும் தேகபலமும் ஸ்திரமானவை. உனது இந்தப்புத்ரன் எல்லாச்சிறப்பு

களும்சேர்ந்து உண்டாயிருக்கிறானென்பதில் ஸந்தேகமில்லை. இவன் முன்சொல்லியவறறையெல்லாம அடைவன். பறக்கும்கருடனுடைய கதியை, மற்றபபறவைகள் எவ்வாறுஅனுஸரிக்கமாட்டாவோ அவ்வாறே சிறநதசக்திபுள்ள இவனுடையசெய்கையை மற்றஅரசர்கள் அனுஸரிக்கமாடடாகள். இவனுக்கு எவர்விரோதிகளோ அவர்கள் நாசமடைவார்கள். ராஜாவே! நதிப்பவாஹங்கள எபபடிமலைக்குத்தீங்குசெய்யமாட்டாவோ அப்படியே தேவாகளாலவிடிக்கபபட்ட அஸ்திரங்கள்கூட இவனுக்குத்தீங்குசெய்யமாடடா. படடாபிஷேகஞ்செய்யப்பெறற அரசர்கள்எல்லாருக்கும்மேல இவன்பிரகாசிபபான். ஸூர்யன் மற்றக்கிரகநக்ஷத்திரமுதலியவற்றின் ஒளியைவாங்குவதுபோல மற்றெல்லா அரசர்களுடையசக்தியையும இவன்வாங்கிக்கொள்வான். சேனைகளுமவாஹனங்களும்நிரமபப்பெறற அரசர்களும இவனைச் சந்தித்தபின் தீயைகிடடினவிடடிறபூச்சிகளைபோல நாசமடைவார்கள். வருஷாகாலத்தில் தண்ணீரபபெருக்குமிகுநதநதிகளைக், கடல் இழுததுக்கொளவதுபோல இவன் எலலா அரசர்களுடையவிபவங்களையும சேர்த்திதுதகொள்வான். செல்வமுள்ளதும எல்லாப்பயிர்களுமநிரம்பினதும் க்ஷேமமுள்ளதுமாகிய சிறநதபூமியையும் நான்கு வருணங்களையும் நன்றுகக்காபபாறறபபோகிறான். எல்லாப்பிராணிகளுக்கும ஆதாரமாவைபபோன்ற பிராணவாயுவுக்குப பிராணிகள் வசப்பட்டிருபபதுபோல இவன்கடடளைககு எல்லா அரசர்களும் வசப்பட்டிருபபர். எல்லாலோகங்களுகுமமேறபபட்ட பலசாலியான இந்த மகதராஜன், திரிபுரஸம்ஹாரஞ்செய்தவரும் பாபதைப்போக்குகிறவரும் மஹாதேவருமான சிவபெருமானைபபிரத்தியக்ஷத்திற்காண்பான்" என்றார்.

சத்ருக்களையழிபபவரான தர்மராஜாவே! அமமுனிவர் இவ்வாறுபேசிக்கொண்டிருக்கையிலேயே தாம்சொனனதக்காரியததை (தவத்தை) நிறைவேறறி, பிருஹத்ரதராஜாவுக்கு விடைகொடுத்தனுபபிவிட்டார். பிறகு பிருஹத்ரதன் பந்துக்களாலும சினேகிதர்களாலும சூழப்பட்டவனாகி ஜராஸந்தனுக்கு நகபரவேசஞ்செய்வித்துப் பட்டாபிஷேகஞ்செய்து மிகுந்தஸந்தோஷததையடைநதான். ஜராஸநதனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்தாலுடனே பிருஹத்ரதராஜா இரண்டுமணிநேரமாகும்பின்தொடரபபெறறுத் தபோவனஞ்சென்றான். பாரதரே! தன்தாய்மார்களுடன்கூடத் தக்கபடி வனத்திலிருக்கையில் ஜராஸந்தன் தன்பராக்ரமத்தினால் அரசர்களை வசப்படுத்தினன். பிறகு வெகுகாலத்திற்குப்பின் தபோவனத்திலிருநத பிருஹத்ரதராஜன்

பாரியைகளுடன்கூடத் தவஞ்செய்து ஸ்வர்க்கமடைந்தான். ராஜா வானஜாஸந்தனும் சண்டகௌசிகர்கொடுத்த வரங்களெல்லாம் அவர்சொன்னவாறேபெற்று ராஜ்யபரிபாலனமுஞ்செய்தான்; நான் மூன்னே கம்ஸனையும் ஹம்ஸடிம்பகர்களையும் வதஞ்செய்தபோது ஜராஸந்தனுடையபெண்கள் தம்தந்தையினருகிறசென்று அழுது கொண்டிருந்தனர். பரதரே! அப்போது அவனுக்கு என்னுடன் நீங்காதவிரோதமுண்டாயிற்று. பரதரே! அந்தபபலவானைஜராஸந்தன் கதாயுதத்தைத தொண்ணூற்றிரண்டு சுற்றுக்கள் சுற்றிக் கிரிவ்ரஜத்திலிருந்துஎறிந்தான். நான் மதுரையிலிருக்கையில் யாவரும்விபக்கத்தக்க ஜராஸந்தனுடைய அந்தச்சிறந்தகதாயுதம தொண்ணூற்றிரண்டுயோஜனதூரத்தில்வந்துவிழுந்தது. அபபோது மதுராபுரத்துஜனங்கள் அந்தக்கதாயுதஞ்தைநன்றாகபபார்த்து எனக்குத் தெரிவித்தனர். மதுரையின் ஸமீபததிலுள்ள அந்தஇடத்துக்கு, [1] கதாவஸான்ம் என்றுபேயாவழங்குகிறது. அஸ்த்ரங்களிலுல்மாண மிவ்லாதவர்களும் புத்திமான்களிறகிறந்தவர்களுமான ராஜநீதிசாஸ்திரத்தில் தோந்தவர்களுமான ஹம்ஸடிம்பகர்கள் அவனுக்குமந்திரிகளாயிருந்தனர். அந்தமஹாபலசாலிகளிருவரையுமபற்றி முன்னமேஉமக்குச்சொல்லியிருக்கிறேன். ஜராஸந்தனும ஹமஸடிம்பகர்களுமாகிய அம்மூவர்களும் மூன்றுலகங்களுக்கும் போதுமானவர்களென்பது என்அபிபிராயம. வீரரானமஹாராஜாவே! பலசாலிகளான குகுரர்களும் அந்தகர்களும் வ்ருஷ்ணிகளும் இவவாறு ரிஷியின்வரதானத்தைமாற்றத்தகாதென்பதாகிய நீதிகாரணமாகத்தான் முன்னே ஜராஸந்தனைவிட்டுவிட்டனர்.

மந்த்ராபர்வம் முற்றிற்று.

இருபதாவது அத்தியாயம்.

ஜராஸந்தவதபர்வம்.

(கிருஷ்ணனும், பீமார்ஜுனர்களும் தர்மராஜாவினிடம் விடைபேற்றுக்கொண்டு ஸ்நாதகப்ரிராமண வேஷம்பூண்டு மகதராஜதானிக்குச்சென்றது.)

ஹம்ஸடிபகர்களிருவரும் விழுந்துபோயினர். கம்ஸனும் அவன் கூட்டத்தாருடன் கொல்லப்பட்டான். ஜராஸந்தனைகொல்வதற்கு

[1] கதாயுதத்தின்முடிவு.

இதுதருணம்நேர்ந்திருக்கிறது. தேவாஸுரர்கள்யாவரும்சேர்ந்தாலும் அவனை யுத்தத்தில்வெல்லமுடியாது. தேகபலத்தைபற்றியயுத்தத்தினாலேதான் அவனைஜயிக்கவேண்டுமென்றுநினைக்கிறோம். என்னிடத்தில் உபாயமிருக்கிறது. பீமனிடத்தில்பலமிருக்கிறது. எங்களிருவரையும்காபபவனாக அர்ஜுனனிருக்கிறான். நாங்களமூவரும் மூன்றுஅக்னிகள்யாகத்தை முடிபபதுபோல ஜராஸந்தனைமுடித்துவிடுவோம். ஸஹாயமில்லாதஸமயத்தில் எங்களமூவராலும பிடிக்கபபட்டஅவரசன் ஒருவனாலுமாயினும் யுத்தஞ்செய்வானென்பதில் ஸந்தேஹமில்லை. அவமானத்தாங்காமையாலும் ஜயிக்கும் ஆசையினாலும் கைவன்மையினாலும் கர்வித்து எங்களில் பீமஸேனனோடு அவசியம் யுத்தத்துக்குவருவானென்பது நிசசயம். விருதத்தைடைந்த உலகங்களையழிபபதற்கு யமனைபபடிலியா அப்படியே அவனையழிபபதற்குச் சிறந்ததகைகளையுடையவனுமமஹாபலசாலியுமான பீமஸேனன் போதுமானவன். பீமனுடையபலமும உமக்குத்தெரிந்தது என்னிடத்தில் உமக்கு நமபிக்கையுமிருக்குமாயின் உடனே பீமஸேனனையும் அர்ஜுனனையும என்னிடம அடைபபலமாகஒபபுவிபபும” என்றார். இவ்வாறு பகவானாலசொலலபபட்ட யுதிஷ்டிரர், பீமார்ஜுனர்கள் முகமலர்ச்சியோடிருக்கக்கண்டு கிருஷ்ணபகவானுக்கு ம்றுமொழி கூறலானார்.

“அச்சுதரே! அச்சுதரே! பகைவரையழிபபவரே! நீர் இவ்வாறு சொல்லாதீர்; சொலலாதீர். பாண்டவர்களுக்கு நீர்தாம நாதர். உம்மையே! நாங்கள் அடுத்திருத்தினோம். கோவிந்தா! நீர்சொல்லுகிறபடியே எல்லாம பொருததமுள்ளது. கிருஷ்ணை! எவர்களுக்கு லக்ஷ்மி முகங்கொடாமலிருபபாளோ அவர்களுக்கு நீர்முன்னிற்பதில்லை. எவர்களுக்கு லக்ஷ்மிமுகங்கொடுப்பாளோ அவர்களுக்கே நீர்முன்னிறபவர். உமது கட்டளைபபடியிருக்கும் எனக்கு ஜராஸந்தவதமும் அவனிடத்திலிருது அரசர்களைவிடுவிபபதும் ராஜஸூயயாகத்தைமுடிபபதும தடந்தவைபோலவேயாயின. ஜகத்துக்கு நாதரே, புருஷோத்தமரே! எவ்வகையில் இதுகாரியம சீக்கிரமாகக்கூடிவருமோ அவ்வகையை ஆர்தையாகச்செய்வீர். நான் உங்கள்மூவரையும்விட்டுத தர்மாத்தகாமிங்கனையிழந்த சோகியைப்போலத் துக்கத்துடன் ஜீவிகக்கருதேன். அர்ஜுனன் கிருஷ்ணனை விட்டிரான். கிருஷ்ணனும அர்ஜுனனைவிட்டிரார். இவ்விசணடு கிருஷ்ணாகளாலும் ஜயிக்கபடட்தகாதவன் உலகதிலில்லையென்று நான்நினைக்கிறேன். வீரரே! பலவான்களிற்சிறந்தவனும் ஜயலக்ஷ்மி

'ಪೊರುನ್ದಿನವನುಂ ಪೆರುಂಪುಗಳ್ಪೆಟ್ರವನುಮಾಗಿಯ ಇನ್ತವ್ರುಗೋತಾನ್ ಉಂಗಳಿರುವರುಡನುಮಿಸೇರ್ನ್ತು ಎತೈತ್ತಾನ್‌ಚೆಯ್ಯಾನ್. ಪೆರುಞ್ಸೇನೆಯುಂ ನನ್ರುಗಡುತ್ತಪಟ್ಟುತ್ತಾನೇ ಸಿಱನ್ತಕಾರಿಯತ್ತೈಚ್‌ಚೆಯ್ಯುಂ; ಸೇಣೆ ಕಣ್ಣಿಲ್ಲಾತದಿನ್ರುಮ ಅಱಿವಿಲ್ಲಾತದಿನ್ರುಂ ತಿರಿನ್ತವರ್ಕಳಾಲ್ ನಡತ್ತಪ್ಪಡವೇಂಡುಮೆನ್ರುಮ ಸೊಲ್ಲುಗಿಱ್ರ್‌ಕಳೆನ್ಱೇ! ಪುತ್ತಿಯಿಱ್‌ಸಿಱನ್ತವರ್‌ಕಳ್ ಎಂಗೇ ಪಳ್ಳಮಿರುಕ್ಕಿಱದೆನ್ರ ಅಂಗೇಯನ್ಱೇ ಜಲತ್ತೈಪ್‌ಪೋಕ್ಕುಗಿನ್ರನರ್. ಎವ್ವೀಡತ್ತಿಲ್ ತುವಾರಮಿರುಕ್ಕಿನ್ರದೆನ್ರ ಅನ್ತವಳಿಯಾಗವುಂ ಜಲತ್ತೈಪ್‌ಪೋಕ್ಕುಗಿನ್ರನರ್. ಆಗಲಾಲ್, ರಾಜ್ಯತನ್ತಿರಂಗಳಿನ್ ಮುಱೈಯೈ ನಡತ್ತತೆನ್ರಿರುನ್ತವರೆನ್ರು ಉಲಗತ್ತಿಲ್ ಪೆಯರ್‌ಪೆಟ್ರ ಪುರುಷಞ್ಞಿಯ ಕೋವಿನ್ತಣೀ(ಉಂಮೈ)ಚ್‌ಚಾರ್ನ್ತ ನಾಮ ಕಾರಿಯತ್ತೈ ಸಾದಿಕ್ಕ ಮುಯಲ್‌ವೋಮ ಕಿರುಷ್ಣ! ಕಾರಿಯಂಕಳ್‌ಚೆಯ್ಯುಮ್‌ಪೋತು ಎಡುತ್ತಕಾರಿಯತ್ತಿನ್ ಪಯೞಿಪ್‌ಪಿಱವ್ವತ್ತಱಕಾಕ್ ಚೆಯ್ಕೈಯೋಡುಂ ಉಪಾಯತ್ತೋಡುನ್ಗೂಡಿಯ ಪುತ್ತಿಬಲತ್ತೈಯುಂ ಯುಕ್ತಿಬಲತ್ತೈಯುಂ ಇವ್ವಾಱು ಮುನ್ನಿಟ್ಟುಕ್ಕೊಳ್ಳವೇಂಡುಂ. ಯಾದವಶಿರೇಷ್ಟರೇ! ಇವ್ವಾರುಗವೇ ಚೆಯ್ಯತ್ತಕ್ಕ ಕಾರಿಯಂಗಳೆಲ್ಲಾವಱ್ಱೈಯುಂ ಮುಡಿಪವತ್ತ್ರ್‌ಕು ಅರ್ಜುನನ್ ಕಿರುಷ್ಣನೈಯನುಸರಿತ್ತುಂ ಭೀಮನ್ ಅರ್ಜುನನೈಯನುಸರಿತ್ತುಂ ಇರುಕಕ್ಕಡವರ್. 'ಧೈರ್ಯಮುಂ ಜಯಿಕ್ಕಿಱವಕ್ತಿಯುಂ ದೇವಕವಂಮೈಯುಮೆಸೇರ್ನ್ತಾಲ್ ತಾನೇ' ಯುತ್ತತ್ತಿಲ್ ಪಯೞಿತ್ತರುಂ" ಎನ್ರಾರ್. ಪೆರುಞ್ಸಕ್ತಿಯುಳ್ಳವರ್‌ಕಳಾನ ಕಿರುಷ್ಣಾರ್ಜುನ ಭೀಮರ್‌ಕಳಾಗಿಯ ಪಿರಾತಾಕ್ಕಳ್ ಅನೈವರುಂ ತರ್ಮಪುತ್ತಿರರಾಲ್ ಇವ್ವಾಱುಸೆಲ್ಲಪ್ಪಟ್ಟಪಿಱಗು ಜರಾಸನ್ತನೈನೋಕ್ಕಿಪ ಪುಱಪ್ಪಟ್ಟನರ್ ಕಿರುಷ್ಣಭೀಮಾರ್ಜುನರ್‌ಕಳ ಉಯರ್ನ್ತ ಪಿರಮ್ಮತೇಜಸ್ಸುಳ್ಳ [1]ಸ್ನಾತಕಪಿರಾಮಣರ್‌ಕಳಿನ್ ಉಡೈಕಳೈಯುಡುತ್ತ ತವವೇಷನ್ತರಿತ್ತ ನಣ್ಬರ್‌ಕಳಿನ್ ಇನ್ಸೊರ್ಪಕಳಿನ್ನುಲ ಆಶೀವದಿಕ್ಕಪೆಟ್ರವರ್‌ಕಳಾಯ್‌ಪ ಪುಱಪ್ಪಪಟ್ಟನರ್. ತಂಗಳ್‌ಕುಲತ್ತೆರಾನ ಕೂತಿರಿಯಾಕಳಿಡನ್ ತಿರುಕ್ಕಿಱ ತುಯರತ್ತೈಪಪಱ್ಱಿಯ ಕೋಪತ್ತಿನುಲ ಕೊದಿಪುಱ್ಱುವರ್‌ಕಳುಂ ಸೂರ್ಯನ್ ಚನ್ತಿರನ್ ಅಗ್ನೀ ಇಮಮೂವರೈಪ್‌ಪೋಲಚ್ ಸಿಱನ್ತಶಕ್ತಿಯುಳ್ಳವರ್‌ಕಳುಮಾಗಿಯ ಅವರ್‌ಕಳಿನ್‌ದೇಹಙ್ಕಳ್ ಅಪಿಮಾದ ಸೂರ್ಯಶನ್ತಿರಾಕಿರಣಿಕಳ್‌ಪೋಲ ಜ್ವಲಿತ್ತನ. ಯುತ್ತತ್ತಿಲ್‌ದೋಲ್ವಿಯಡೈಯಾತ ಕಿರುಷ್ಣರ್‌ಜುನರ್‌ಕಳ್ ಭೀಮಣ್ಣೈಮುನ್ನಿಡುಕ್ಕೊಂಡು ಒರುಕಾರಿಯತ್ತಿಲ್ ಮುಯಲ್ವತೈಕ್‌ಕಣ್ಡು 'ಜರಾಸನ್ತನ್ ಕೊಲೈಯಪಟ್ಟತಾಗವೇ ತರ್ಮರಾಜಾನಿಣೈತ್ತಾರ್. ಅವವಿರಣ್ಡುಮಹಾತಮಾಕಳುಂ ಎಲ್ಲಾಕ್ಕಾರಿಯಂಕಳೆಯುಮನುಡತ್ತು

---

1 ಬ್ರಹ್ಮಚಾರಿವ್ರತಂ ಮುಡಿತ್ತತ್ತುಕ್ ಗುರುವಿನುಲ್ ವಿಡೈಕೊಡುಕ್ಕಪ್ಪೆಟ್ರ ಪಿಱಗುಂ ಗಿರುಹಸ್ತಾಶ್ರಮಮ ಎಡುತ್ತುಕೊಳ್ವತ್ತುಕು ಮುನ್ನುಂ ಸ್ನಾತಕರ್ ಆವಾರ್. ಅವರ್‌ಕಳುಕ್ಕು ರಾಜಾವುಕ್ಕುಮೇಲ್‌ಪಟ್ಟ ಮರಿಯಾತೈಚೆಯ್ಯುಂಪಡಿ ತರ್ಮಶಾಸ್ತ್ರಿರಂ ವಿದಿಕ್ಕಿಱತು.

கிறவரும் தர்மார்த்தகாமங்களையும் உலகங்களையும் பிரவிர்த்திக்கச் செய்பவருமான ஈசுவரர்களன்றே? அந்தக்கிருஷ்ணர்ஜுனபீமர்கள் புறபபட்டுக் குருசேஷத்திரத்திலிருந்து குருஜாங்கலமென்னும் இடத்தின்வழியால் அழகான பத்மஸரஸுக்குச்சென்று காலகூடமலையையும் ஏகபர்வதத்திலுள்ள கண்டகிநதியையும மஹாசோணமென்னுந்தத்தையும் ஸதாநீரையென்னுமநதியையும முறையேதாண்டிச் சென்றனர். அழகான ஸரயூநதியைதாண்டிக் கோஸலதேசதத்தின் கீழ்பபாகங்களைக்கண்டு அவறறைதாண்டி மிதிலைக்குச்சென்றனர். மாலீ, சர்மண்வதி, கங்கை, சோணமஎன்னும ஆறுகளையும்தாண்டி அம்மூவருமு கிழக்குமேறாக்கிசசென்றனர். தோலவியடையாதவர்களாகிய அவாகள் தாபபைகளையும மரவுரிகளையும தரிதது்கொண்டு ஜராஸநதனிடமசென்றனர். அவாகளை இடதுகைபபக்கம் [1]கோதனங்கள்நிரமபியிருபபதும நீர்வளமுளளதும அழகியமரங்களுள்ளதுமான கோரதமென்னும மலையைச்சாரநது மகததேசதது ராஜதானியைக் கண்டனர்

இருபத்தோராவது அத்தியாயம.

ஜராஸந்தவதபர்வம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணபீமார்ஜுனர்கள் ஜராஸந்தன்வீடடுக்குச் சென்று அவனிடம்பேசியது.)

அபபோது கிருஷ்ணன் ஆஜுனனுக்குச்சொல்லுகிறார். "அர்ஜுன! இநதமகததேசதது்பெரியநகரம பசுக்கள்நிரமபவுள்ளதும எபபோதுமநீவளமுளளதும அழகானவீடுகள்நிரம்பினதும் ரோகங்களிலலாததுமாய் விளங்குகிறது இனைகளின் தூணிகள் புஷ்பங்களினுலமறைக்கப்பட்டு இனியமணமுளளவையும் மனததைக்கவருகின்றவையும யெலவனபபிராயததிலிருபபவா விருமபத்தக்கவையுமான லோதத்திரமென்னுமமரதடுகளினுல மறைகபபடடனவும உயர்நதகொடுமுடிகளுமகுளிரநதமரங்களுமுளளனவுமான விளையாட்டிறகுரியவிபுலமலை, வாராகமலை, விருஷபமலை, ரிஷிமலை, சைத்யகம என்னும் இவ்வைநதுமழகியமலைகள ஒன்றுசேரநது கிரிவ்ரஜமென்னுமஊரைக்காபபவைபோலிருக்கின்றன. இவவிடத்தில் மஹாத்மாவும் கடுந்தவமுள்ளவரும் ஜீம்புலன்களையும்மநமகவுமடக்கியவரும்

[1] பசுக்கள.

கோதமகோத்திரத்திற் பிறந்தவருமான [1]தீர்க்கதமஸ்என்னும் ரிஷி உசிநரன்புத்திரியும் மகதராஜன்மனைவியுமான ஸுதேஷ்ணையினிட மும் அவள்தாஸியினிடமும் கக்ஷீவான்முதலியபுத்திரர்களை உண்டு பண்ணினர். அந்தமுனிவர் 'அந்தஸ்மோ ஹத்தினால் அந்தக்கிருஹத்தி விருந்துகொண்டு மகதராஜர்களின்வம்சத்தைவிருத்திசெய்தது அந்த ராஜாக்களுக்கு அவர்செய்யும்அருள்தான். அஜுஜு[1]முற்காலத் தில் மிகச்சிறந்தபலசாலிகளாயிருந்த அங்கர்வங்கர்முதலியராஜாக்க ளும் கௌதமராகியதீர்க்கதமஸ் இருக்குமிடத்துக்குவருது மகிழ்ந் திருந்தனர். பார்த்தனே! கௌதமருடையகிருஹத்துக்குஅருகில் உண்டாயிருக்கும், அரசமரங்களும் வேலாதிமரங்களும் செழுமை யாகவும் அழகாகவும்வரிசையாகவும்இருக்கின்ற இதைக்காடுகளைபார். சத்துருக்களுக்குத் தாபமுண்டுபண்ணுபவர்களாகிய அர்ப்புதன் சக்ரவர்த்தியென்னும் இரண்டு [2]நாகர்கள் இங்கிருக்கின்றனர். ஸ்வஸ்தி கன் மணிநாகன் இவ்விரண்டுநாகர்களுடைய சிறந்தகிருஹங்களும் இங்கிருக்கின்றன. மேகங்கள் மகததேசத்தைவிட்டுப்போகாமலிருக் கும்படி மனுவேசெய்திருக்கிறார். கௌசிகன் மணிமான்என்னும் நாகர்களிருவருமு [3]அனுக்ரஹஞ்செய்திருக்கின்றனர். [4]பாண்டரம், விபுலம், வராகம், சைத்யகம், மாதங்கம்என்னும் இவ்வைதுசிறந்த பர்வதங்களிலும் ஸகலஸித்தர்களின்கிருஹங்களும் மஹாத்மாக்க ளானஸங்யாஸிகள் ரிஷிகள்இவர்களின்ஆச்சரமங்களும் விருஷபன், தமாலன், மஹாவீர்யன்என்னும நாகர்களுடையகிருஹங்களும கந் தர்வர்கள் ராக்ஷஸர்களின்வீடுகளும் இருக்கின்றன. கக்ஷீவானென் னும்முனியின்தவப்பெருமையினால் [5]தர்போதங்கள்என்றபெயர்பெற்ற புண்ணியதீர்த்தங்கள் இருக்கின்றன. அவையெல்லாம் ஸித்ததீர்த்த ங்களெனவும் சொல்லப்படுகின்றன. மணிமானென்னும நாகனைக் கண்டமாத்திரத்தினாலே மனிதன்சூக்ஷுமத்தையும் ஸுகத்தையும அடைவான். இப்படி நாற்புறங்களிலும வெல்லமுடியாத அழகியநாக ரத்தையடைந்துதான் ஜராஸந்தன் ஓபபற்றகாரியஸித்தியைநிணைக்கி றன். நாம் இப்போது ஸமீபத்தில்போய் அவன்கர்வத்தைப்போக்கி விடுவோம்" என்றுசொன்னர்.

---

1 இக்கதையின்விரிவை ஆதிபர்வம் 418-ம் பக்கத்தில்காண்க.

2 நாகர்கள்புருஷரூபியாயிருப்பவர்கள்.

3 காப்பாற்றுகின்றனர்.

4 விருஷபமலை ரிஷிமலை என்றவை பாண்டரம் மாதங்கம்என்றுகூறப் பட்டிருக்கின்றன.

5 தவத்தைக்கொடுப்பவை.

இவ்வாறு கிருஷ்ணன்சொன்னபிறகு, கிருஷ்ணனும் பாண்டவர்களுமாகிய பெருஞ்சக்தியுள்ள பிராதாகளனைவரும் ஜராஸந்தனுடையநகரத்துக்குச் சென்றனர். மகிழ்ச்சியும் செல்வமுமுள்ள ஜனங்கள்நிரம்பினதும் நர்லுவருணத்தாருமநிறைந்திருப்பதுமான உத்ஸவச்சிறப்புக்களுள்ளதும் வெல்லமுடியாததுமான கிரிவ்ரஜத்தைச்சேர்ந்தனர். அப்போது அநகரத்தின்வாயிலவழியேசெல்லாமல் பிருஹத்ரதன்வமசத்தாராலும் நகரத்துஜனங்களாலும் பூஜிக்கபடுவதும் மகததேசத்திற்கு அலங்காரமாயிருப்பதுமான உயர்ந்தகுன்றுகிய சைத்யகத்தின்சாநுவழியாகச சென்றனர். அநதஇடதிலேதான் பிருஹத்ரதராஜன், மாம்ஸத்தைத்தின்னும விருஷபரூபமாகவந்த அஸுரனைப பிடித்துகொன்று ஓருமாதம்வரையில் நாதமகாக்கின்ற மூன்றுபேரிகைகளைச செய்வித்து, அவன்தோலினால் அவற்றைக்கட்டித் தன்நகரத்திலஸ்தாபிதிருந்தான். அநதபபேரிகைகள் எங்கே முழங்கினவோ அங்கே தேவதைகளால் மலாமாரிபொழியப்பட்டது. அந்தக்கிருஷ்ணர்ஜுனபீமர்கள் அமமூன்றுபேரிகைகளையும் உடைத்து அநதஹுருகுமதிலையிருகுமச சைதயகமலையினிடம்சென்றனர். அப்போது அவர்களனைவரும கோட்டைவரயிலேவிட்டு மகததேசத்திறகு மிகுதஅலங்காரமான அநதசசைத்யகமலையநோக்கி விரைவாகநெருங்கிசசென்றனர். ஜராஸநதனகொல்லக்கருதின அந்தவீரர்கள் நெடுகாலமாக அழியாமலிருப்பதும் மிக்கஅகலமும உயரமுமுள்ளதும சாதனங்களாலும புஷ்பங்களாலும் எப்போதும் பூஜிக்கபபடடதும திடமாகநிலேபெறறிருப்பதுமாகிய அம்மலைச்சிகரத்தைப் பெரியகைகளினாலேயே அவன்தலையையுடைபபதுபோல உடைதது விழத்தினர். அதன்பிறகு, அவர்கள் உதஸாஹதுடன் அநகரதுகுள் பிரவேசித்தனர். வேதஙகளிலகரைகண்டவரான பிராமணர்கள் அதிகாலதிதில அபசகுனங்களகண்டு ஜராஸநதனுக்குத் தெரிவிததனர். பிரோஹிதாகள யாகீமமலிருந்தராஜாவுக்குத தீப ஹாரதது சுழற்றினர். பராக்ரமசாலியான ஜராஸநதராஜா அப்போது அநதத்தோஷங்களுகுச சாநதிசெய்வதறகாகத தீக்ஷையெடுத்துக் கொண்டு விரததகதையும உபவாஸததையுமகடதிருந்தான். ஜனமேஜயரே! ஸ்நாதகவிரதமமடுத்துக்கொண்ட கிருஷ்ணனும அர்ஜுனனும பீமனும் ஆயுதஙகளவிட்டுக் கைகளேப ஆயுதங்களாகக் கொண்டு ஜராஸநதனிடம யுத்தஞசெய்யகநதினவர்களாய் (நகரத்தில்) பிரவேசித்தனர். எல்லாக்குணங்களுமுள்ளதும வேண்டிய வெல்லாம நிரம்பினதும விலேபெற்றதுமாயுள்ள பகஷணக்கடை பூக்

கடைகளின் மிகுந்த சிறப்பைக்கண்டனர். புருஷோத்தமர்களும் மஹாபலசாலிகளும் மஹாரதர்களுமான அந்தக் கிருஷ்ணர்ஜுன பீமர்கள் ராஜமார்க்கமாகப போய்க்கொண்டே அநதஹீதியிலுள்ள அந்தச்சிறப்பைக்கண்டு புஷ்பக்காரனிடமிருந்து புஷ்பமாலைகளையும் கடையினுளிருக்கும வர்த்தகனிடமிருநது கர்பூரச்சிமிழையும் கோஷ்டத்தையும கனிகளையும் பலவநதமாகவெடுத்துப பூமாலைகளையணிந்து வெண்மையானவஸ்திரங்களையும் பிரகாசமான குண்டலங்களையுந தரித்து, இமயமலையிலுள்ளசிங்கங்கள மாட்டுததொழுவதைப் பார்ப்பதுபோலப் புத்திமானன ஜராஸநதன்வீட்டைப் பார்த்துக்கொண்டே சென்றனர். ஜனமேஜயராஜாவே! யுத்தததிலபிரகாசிப்பவர்களான அவர்களுடைய ஆச்சாமரங்களைபபோன்றகைகள் சாரநதையும அகிலையுமணிநது அழகாகவிளங்கின. ஆணைகளைபபோன்றவர்களும் பெருமரங்களின்தண்டுகள்போல் வளாநதவர்களும அகன்றமார்புகளையுடையவர்களுமான அவர்களைக்கண்டு பசததேசத்தவர்கள்வியப்புற்றனர். அவர்கள், வாயிலவழியைவிடடு வறிகசுத்து ஜராஸநதன்வீட்டிற்புகுநதனர். புருஷசரேஷ்டாகளான அவாகள் ஜனங்களிநிரமபின மூன்றுகட்டுக்களைததாண்டி அசசுமின்றித தாம்உயர்குலத்தோரென்னுமகர்வத்தோடு ராஜாவினிடமசென்றனர். மஹாரதர்களான அவர்கள், 'ஓ!' என்னுமசொல்லையுமேயே ராஜாவையழைத்தனர். அர்க்கியபாத்தியங்களையும [1]மதுபாக்கமென்னுஞ்சிறபபுணவோடு [2] பசுவையுங்கொடுத்தது உபசரிக்கத்தகுதியுள்ளவர்களுமம விசேஷமரியாதைபெறறிருபபவாகளுமான அவர்களை ஜராஸநதன் எதிர்கொண்டழைத்துச் சாஸ்திரபபடி பூஜித்தான். ஸமர்த்தனனஅவ்வரசன் அவர்களைபபார்த்து, 'உங்களுக்குநலவரவுண்டாகடடும்' என்றுசொன்னான். ஜனமேஜயரே! அப்போது அரஜுனனும் பீமனுமம மௌனமாகஇருநதனர். அவர்களுக்குள சிறநதபுததிசாலியானகிருஷ்ணன் ஜராஸந்தனைபபார்த்து, "அரசர்க்கரசே! இவர்களிருவரும் இப்போது ஒருவிரதமம்வஹித்திருபபதனால நடுஇரவுகழுமுன் பேசலாகாது அதன்பிறகு உன்னுடன் பேசுவார்கள்" என்றுசொன்னார். ஜராஸநதன் அவர்களைத் தன்யாகசாலையில்இருக்கச்செய்து தன் அரண்

[1] மதுபர்க்கமென்பது ஜலம ஸ்வல்பமும், தயிர நெய் சர்க்கரைமஜனும் தேன்எல்லாவற்றிலும் அதிகமுமாகச்சேர்த்துச்செய்யப்பட்டது.

[2] யோக்கியர்களான வேதவித்துக்கள் வந்தபோது கனறையாவது பெரியவிருஷபத்தையாவது ஆட்டுக்கிடாயையாவது மதுபர்க்கதோடு கொடுக்கவேண்டுமென்று ஆபஸ்தம்பர்சொல்லுகிறார்.

மணிக்குச்சென்றனன். பிறகு அர்த்தராத்திரிகாலம்வந்தபோது அந்தபிராமணர்களிருக்குமிடத்திற்குச சென்றனன். ஜனமேஜயராஜாவே! யுதந்களில்ஜயிபபவனான அர்ஜுனாஸநதன், ஸ்நாதகர்களான பிராம்மணர்கள்வநதிருபபதாக அர்த்தராத்திரிவேளையிற்கேட்டானும அவர்களையெதிர்கொண்டழைபபதை விதமாகவைத்திருநதானென்பது உலகபபிரஸித்தம. அநதராஜச்ரேஷ்டனானஜராஸநதன் அவர்கள் அற்புதமான வேஷததோடிருபபதைகண்டு மரியாதைசெய்து திகைதநதுநின்றனன. பரதசரேஷ்டரும ராஜரேஷ்டருமான ஜனமேஜயரே! சத்துருகளையழிபபவரான அநதபபுருஷரேஷ்டர்களெல்லாரும ஜராஸநதராஜாவைகணடவுடன், "ராஜாவே! மங்களமுண்டாகட்டும்; க்ஷேமமுண்டாகடும" என்றுசொலலி அவ்வரசனபபார்தத தம தமமில ஒருவரையொருவர்பாரதது அங்கேநின்றனர். ஜனமேஜயரே! ஜராஸநதன் அவ்வாறு பிராமமணவேஷததால மறைநதிருக்கும் அநதபபாண்டவர்களையும கிருஷ்ணனையும்பார்தது, "உட்காரலாம்" என்றுசொன்னன. உடனே அமமூன்றுபுருஷரேஷ்டர்களும மஹாயாகதின் மூனறுஅக்னிகளைபபோல ஒளியினால மிகபபிரகாசித்துக்கொண்டு உடகார்நதனர். ஜனமேஜயரே! ஸதநியநதவரும்தவனான ஜராஸநதன், தகாதஅலங்காரஙகளைசெய்து வேஷமிமடுதது க்கொண்டதனால உருமாறியிருநத அவர்களையிகழ்நது பேசலானன். "இமமானிடலோகததில் ஸ்நாதகவிரதம வஹித்திருக்கும் பிராமமணர்கள் வெளிபபடையாகப பூமாலைசூடிச் சாநதணிநதிரார்என்று எனக்குநன்றாகதெரியும. நீங்களயாவா? பூமாலைகளையணிநதும் கைகளில நாண்உரைநத காய்ப்புக்களினால் கூடதிரியசக்தியின் குறிபபுக்களைத்தாங்கியு மிருக்கிறீர்களை; பிராமமணர்களென்று சொல்லுகிறீர்கள். இவ்வுலகத்தில் இவவாறு வெளளாடையுடுத்து வெளிபபடையாகப புஷ்பசநதனங்களைததரித்திருபபவர்களை கூடத்திரியர்கள்தாமென்று எனக்குச் செவவையாகதெரியும. நீங்கள்யார்? உண்மையைச்சொல்லுங்கள்; ராஜாக்களிடததில உண்மைதான் மேன்மையாகும்; ராஜாபாதத்தில் அச்சமின்றிச சைதயகமலியின்சிகரததையுடைத்து வாயிலைவிட்டு வேறுவழியால இநதவீட்டில் என்றுழைந்தீர்கள்? மேலும் பிராம்மணருக்குச்சொலலின்வன்மையதிகம; உங்களுடையஇநதச்செய்கை உங்கள்வேஷத்துக்கு மாறுபடிருக்கிறது. இப்போது உங்களெண்ணமயாது? சொல்லுங்கள்; இவ்வாறு என்னிடம்வந்தும் சாஸ்திரப்படி நான்செய்தமரியாதையை நீங்களேன் பெற்றுக்கொள்ளவில்லை? என்னிடமவநதகாரியந்தான் யாது?" என்

'ருன். அவன் இவ்வாறுசொல்ல, சிறந்தஅபிப்பிராயமுள்ளவரும் பேசுவதில்ஸமர்த்தருமான கிருஷ்ணன் மதுரமும் கமபீர்முமான மறுமொழிகூறலானார்.

"ராஜாவே! மனிதர்களுக்குப பிரபுவே! நீ, எங்களை [1]ஸ்நாதகப பிராமணர்களென்றேஅறி. ராஜாவே! ஸ்நாதகவிரதமுள்ளவர்கள் பிராமணராகவும் க்ஷத்திரியராகவும வைசியராகவும இருக்கலாம். இவர்கள் ஒவ்வொருவருபபாருக்கும் சிறபபானநியமங்களும யாவருக்கும்பொதுவான நியமயங்களுமுண்டு. சிறபபானநியமமுள்ள க்ஷத்திரியன்தான் எப்போதுமலீசுவரியதையடைவான். புஷ்பங்கள்தரிதத வரிடத்தில் லக்ஷ்மி ஸ்திரமாயிருக்கிறாள். அதனால நாங்கள புஷ்பங்களைத்தரிததிருக்கிறோம. க்ஷத்திரியனுக்கவன்மையுள்ளவன்தான்; சொல்வன்மையுளளவனுகாண். பிருஹதரதபுதரனே! ஆதலால், க்ஷத்திரியன்வாக்குக் கமபீரமாயிராதென்று சொல்லபபடுகிறது. பிரம்மதேவா தமஞ்சக்தியை க்ஷத்திரியர்களின்கைகளிலவைதிருக்கிறார். ராஜாவே! அதை நீபாாக்கவிரும்புகிறாயாயின் இபபோதே பார்க்கலாம; ஸமதைஹமில்லை. தைரியமுளளபுருஷாகள் சத்துருவின்வீட்டில் வாயிலலலாவழியாலும மித்திரர்களவீட்டிலநோவழியாலும பிரவேசிக்கின்றனர். அநததாமபபடி இவையெலலாம் வழிகள்தாம. நாங்கள் காரியததோடு சத்துருவின்வீடடிறகுவருவது அவனிடம அதிதிபூஜையைபபெறறுககொளளமாடடோம. இஃது எங்கள்உறுதியானவிரதமென்று நீயறி" என்றார்.

இருபத்திரண்டாவது அத்தியாயம்.

ஜராஸந்தவதபர்வம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணனுக்கும் ஜராஸந்தனுக்கும் ஸம்பாஷணைநடந்தபிறகு ஜராஸந்தன் யுத்தத்துக்குஆரம்பம்செயதது.)

ஜராஸந்தன், "ஓ! பிராமமணர்களே! உங்களோடு நான்விரோதஞ்செய்துகொண்டது எபபொழுதென்று எனக்கு நினைவிலலை. ஆராய்ந்துபார்த்தும உங்களுகது நான்தீங்குசெய்ததாக எனக்குத தெரியவில்லை. தீங்குசெய்திருநதால என்னைக் [2]குற்றமில்லாதவனுக

---

[1] மூலத்தில, 'ஸ்நாதகப்பிராம்மணர்களையும் எங்களையும் நீபகுத்தறி' என்றகருத்தும்அடங்கியிருக்கிறது.

[2] ஆசீர்வாதம்செய்ததனால் குற்றமில்லாதவனுகநினைத்ததாகிறது.

நீங்கள்நிணைபதெவ்வாறு? [1]சத்துருவென்றே சொல்லுங்கள். [2]இது தானே சான்றோர்ஒழுக்கம். அர்த்தத்தையும தர்மத்தையும்கெடுப் பதனுலன்றோ மனமகிதபது. தாமததிரிதவனும மஹாரதனு மாயிருக்கும க்ஷத்திரியன் இதருகுமாறுகடாதது குறறமில்லாதவனிடத் தில் குற்றத்தைவறபடுத்துவானுயின், அவன் தனதுபுண்ணியலோகங் களைக்கெடுத்துக்கொண்டு பாவகதியையடை கிறான். ஸாதேஹமிலலை. ஒழுங்காகநடபபவர்களுகு க்ஷத்திரியதாமதான் மூன்றுலோகங் களிலும் சிலாக்கியமானது. தாமதிரிதயாவரும (க்ஷத்திரியதர்மந் தவிர) மறறதர்மத்தைச்சிலாகிபபதில்லை அபபடியே மனவுறுதி யோடு என்க்ஷத்திரியதர்மத்திலிருதுகொண்டு பிரஜைகளுக்குத்தீங் குசெய்யாமலிருகுமு என்னைபபறறி நீங்கள (பேசல்) தவறுதலாகப் பிதறறுவதுபோலிருக்கிறது" என்றுசொல்ல, கிருஷ்ணன்சொல் லானர். "கிறநதகைகளையுடையவனே! குலதைதத்தாங்குகிறவனிய ஓர் ஒபபறறமனிதன் தன்குலதேரின்காரியத்தைத தானெடுத்துக் கொண்டிருக்கிறன். அவனுடையகட்டளையினுல நாம உன்னையெதிர் தது வநதிருகிறோம. ராஜாவே! இநதஉலகதிலுளளக்ஷத்திரியர் களை நீபலியாக்கசெகாண்டுவநதிருக்கிறாய். அநதக்கொடியகுறறத்தை யுண்டாகியபின் நீகுறறமிலலாதவனுகநிணைததுக்கொள்வது எப்படி? ராஜசரேஷ்டனே! ராஜாவாயிருபபவன் ஸாதுக்களானராஜாக்களைத் துன்பஞ்செய்யலாமா? நீ அநதராஜாக்களைபபிடித்து ருத்திரபகவா னுக்குப்பலியாகக்கொடுக்க நிணைதிருகிறாய். பிருஹத்ரதபுத்திர னே! உன்னுறசெய்யபபடட அநதப்பாவம் எங்களையும் சேரும். ஏனெனில, நாங்கள தர்மதைசெயபவாகள. தாமததைரக்ஷிப்ப தில் சக்தியுளளவாகள. பிருஹதரதபுதிரனே! அதறகாக இப போது உன்னிடமவநதிருக்கிறோம. மனிதர்களைக்கொன்று யாகம் செய்வதை ஒருகாலும கண்டதிலலை. அவவாறிருக்க நீ மனிதாக ளைத் தேவானசங்கரருக்குப பலிகொடுகநிணைபபதெபபடி? ஜரா ஸநதா! பயன்படாதஅறிவுள நீசெய்வதுபோல வேறெவன் ஒரே குலதிறபிறநது தன்குலத்தோருக்கே பசுக்களென்றுபெயரிடுவான்? எவனெவன் எந்தஎநதகாலத்தில என்னென்னகர்மத்தைச்செய்கி றானே அவனவன் அதனதன் பயனை அநதநதக்காலதிலேயே அடை வான். ஆதலால், துகபபடடவரிடதில் பரிதாபமுளளநாங்கள்

---

[1] சத்துருவானஎன்னைக் குற்றமற்றவனுக நிணைப்பதெவ்வாறு? அதைச் சொல்லுங்களென்பதபழையஉரை.

[2] ஸத்தியம்சொல்வது.

குலத்தோர்விருத்தியின்நிமித்தமாகவே குலத்தோரைநாசஞ்செய்கிற உண்மைக்கொல்ல இங்கேவருதேதாம். ராஜாவே! இவ்வுலகத்தில் க்ஷத்திரியர்களுக்குள் வேறுஆண்பிளையில்லையென்று நீநினைதலுக்கொண்டிருக்கிறாயே, அஃது உன்னுடைய பெரும்புத்திமாறுபடம். ராஜாவே! தன்குலதையறிந்த உயர்ந்தமனமுள்ள எந்தக்ஷத்திரியன் யுத்தத்தினால் நேரிடுவதும் சாசுவதமானதும ஒப்பறற்றதுமான ஸ்வர்க்கததைவிரும்பமாட்டான்? மனிதாகளிற்சிறந்தவனே! க்ஷத்திரியர்கள் ஸ்வர்க்கததைக்கருதியேதான் யுத்தங்களென்னுமயாகங்களில் தீக்ஷைசெய்துகொண்டு உலகங்களைஜயிக்கின்றனரென்பதை நீயறி. விரிவானவேதமும ஸ்வர்க்கததிறகுகாரணம. பெருமபுகழும் ஸ்வர்க்கததிறகுக்காரணம. தவமுழு ஸ்வர்க்கததிறகுக் காரணம். ஆனால், யுத்தததிலமரணம ஸ்வர்கததிறகுததவறுதகாரணம. இந்த [1] யுத்தமரணந்தான் வைஜயந்தமென்னும இந்திரனுடைய அரண்மனை. இதனுள்ளுண்டான குணங்களநிரமபின தேவேந்திரன் அஸ்ரர்களை வென்று எபபோதும உலகங்களைககாபபாறறுகிறன். உனகுநேர்ந்திருபபதுபோல ஸ்வர்க்கத்துக்குமாகமாய் (எங்களோடுஇபபோது நேரதிருகிற) யுததம மறறஎவனுக்குநேரிடும? ராஜாவே! மகத தேசத்துஜீவிகளை மிகுதியாயிருபபதனால அசசேனமிகுதியையே பலமாகநினைதது காவங்கொண்டு பிறரையவமதிகாதே. ஒவ்வொரு மனிதனிடததும சக்தியிராது. ராஜாவே! உனக்குசசரியானதும உனக்குமேமற்பட்டதுமாகிய பராக்ரமமிருகிறதை எதுவரையில் நீ அறியவில்லையோ அதுவரையிலதான் பராக்ரமம உன்னுடையது. ராஜாவே! உன்பராக்ரமம எங்களால தாங்கக்கூடியதுதான். அதனால் உனகுச்சொல்லுகிறேன். மகதராஜாவே! உனக்குசசரியானவாகளிடத்தில்மட்டும கோபததையும அகங்காரததையும்ஒழிததுவிடு. பிளைகளுடனும் அமைச்சர்களுடனும் சேனைகளுடனுஞ்சேர்ந்து யமலோகமபோகாதே. இவ்வுலகத்தில் தமபோத்பவன், கார்த்தவீரியன், உததரன், பிருஹதரதன்என்னுமிவ்வரசாகள தமக்குமேமற்சிறந்தவரை அவமதித்தததான் சேனைகளோடு அழிந்துபோயினர். நாங்கள் உன்னை மோசமாகக் கொலலக்கருதினவர்கள்; உண்மையில் பிராமணர்களல்லோம். நான் ஸ்ரீகிருஷ்ணனுக்கும ஈசுவரனான வாஸுதேவன். இவரிரண்டுஷீரபுருஷாகளும பாண்டுபுத்திரர்கள். இவர்களுக்குமாமன்மகனும் உனக்குப்பகைவனுமான கிருஷ்ணனென்று

[1] மரணத்துக்கஞ்சாமல் யுத்தஞ்செய்பவன் இந்திரபதத்தையும் ஜயத்தையும் அடைவானென்பது கருதது.

என்னையறி. மகதராஜாவே! உன்னைச சண்டைக்கழைக்கிறேம். நின்றுசண்டைசெய்; ராஜாக்களெல்லாரையுமாவதுவிடு; நீயாவது யமலோகத்திற்குசெல்" என்றுசொன்னர்.

ஜராஸந்தன் இதைக்கேட்டுக கோபங்கொண்டு பேசதொடங்கினன். "நான் கமஸனல்லேன்; பிரலம்பனல்லேன்; பாணனல்லேன்; முஷ்டிகனல்லேன்; நரகனல்லேன்; இந்திரதபனனல்லேன்; கேசியல்லேன்; பூதனையுமல்லேன்; காலயவனனுமல்லேன்; அவர்களல்லரோ உன்னுல்யுத்தத்தில கொலலப்பட்டவர். நீ இடைக்குலத திற்பிறந்தவன. உன்முனஜாதியைநினை. நீ நமமிடமபயநதோடி நாடோடிமனிதனபோலப பிறபபிடமானமதுரையைவிடடுக் கடல் தீவைச்சார்நதாயன்றே? கிருஷ்ணை! அபபடிபபட்ட நீ, இப்போது கார்காலமகடநதபிறகு மேகமகாஜிபபதுபோல யீணைகைகார்ஜிக்கிறாய். மாதவா! உனனைகொன்று என்மருமகனும உகரஸேனன்புத்ரனும சிறநதபுத்திமானுமாகிய கமஸன்கடனை இப்போதே தீர்க்கபோகிறேன். உன்னையும உனக்குவேண்டினவர்களையும் கொல்வதற்காக உன்னுடன் யுததஞ்செய்ய எனககு நெடுநாளாகவிருபபமிருநதது. நல்லகாலமாதலால, இநதிரா திதேவாகள என்ஆசமபத்தைப பயன் படச்செய்தனர. கோவிநதா! இநதபபீமஸேனனும அர்ஜுனனுமாகியஇருவரும் அசக்தாகள. நான் இவர்களை யுததத்தில்பிடிததது ஒருசிங்கம சிறியமிருகங்களைக கொலவதுபோலக கொலவேன்" என்றான். அநதஜராஸநதன் கோபமுண்டு காஜித்தபோது அங்கிருநத எல்லாபபிராணிகளுமம நடுங்கின. அபபோது ஸ்ரீபகவான், "ஜராஸந்தா! ஏன்கர்ஜிக்கிறாய்? நீசொலவதைச செய்கையால்நடத்து. ராஜாக்களுள் இழிவானவனே! அமைசசர்களுடனுமம புத்திரர்களுடனுமம உன்னை நான் இபபோது சண்டையில எனதுகட்டுபபையசெய்பவர்களான இவவிருபாண்டவர்களால கொல்லுவிகபபோகிறேன். நீ, எபபாடிபட்டாலும உயிரோடு உன்நகரத்தில் பிரவேசிக்கமாட்டாய்" என்றுசொன்னர். அதைககேட்ட ஜராஸநதன், "நான், ராஜாக்களில எவரையும ஜயிககாமலகொண்டுவநதிருக்கவில்லை. என்னுல்ஜயிக்கபபடாதவரிகளா? கிருஷ்ணை! கூஷத்திரியன் பராக்ரமத்தினுல் பிறரைஜயிபபது அவர்களவிஷயதத்தில தன்இஷ்டபடி நடபபதே அவனுக்குநியாயமானவிருதத்தியென்று தெரிநதவர் சொல்லுகின்றனர் கிருஷ்ணை! கூஷத்திரியர்களின்வீரதததை மறவாத நான் ராஜாக்களைத தேவதைகளுக்குபபலியாகநிச்சயஞ்செய்து இப்போது பயதத்தினுல்விடுவேதது? நான் ஸேனையைவ்குதது்க்கொண்டு

'எதிரிலேனையோடு யுத்தஞ்செய்வேன். ஒருவனேடொருவனுகவும் யுத்தஞ்செய்வேன். இருவர் அல்லது மூவரும் தனித்தனியேவந்தாலும் சேர்ந்துவந்தாலும யுத்தஞ்செய்வேன்" என்றுசொன்னன். ராஜாவானஜராஸந்தன் இவ்வாறுசொன்னபிறகு பயங்கரமானசெய்கையையுடைய கிருஷ்ணபீமார்ஜுனர்களோடு யுத்தஞ்செய்யக்கருதி உடனே தன்புத்திரனுகிய ஸஹதேவனென்பவனுக்கு ராஜ்யாபிஷேகஞ்செய்யக் கட்டளையிட்டான். ஜனமேஜயராஜாவே! அந்தஜராஸந்தன் அந்தயுத்தம்நேர்ந்தபோது பாண்டிலோகத்திலுள்ளமனிதரால் கௌரவிக்கபபெறற ஹம்ஸன் டிபகனஎன்னும இரண்டுபெயர்கள் உலகுசொன்னேனே, அந்தபெயர்களுள்ள கௌசிகன் சித்ரஸேனனென்னும இரண்டுலேஞ்சுகளையும நினைத்தான். ஜனமேஜயராஜாவே! பிரபுவும 'புருஷோத்தமரும மதுவென்னுமஸுரஸ்ரீனஸம்ஹரிததவரும பலராமருக்குஇளையவரும ஸத்தியஸந்தரும ஞானவான்களிற்சிறந்தவீருமான கிருஷ்ணபகவான் பலவான்களிற்சிறந்தவனும புலிப்பல்போலப பூமியில பயங்கரமானபராக்ரமமுள்ளவனுமாகிய ஜராஸந்தராஜன் யாதவவமசத்தரால கொல்லபபடததகாதவனும வேறொருவனுகுப பாகமாக குறிபபிடபபடடவனுமாயிருப்பதைநினைத்து, பிரமமதேவரின்கடடளையை கௌரவிபபதறகாகத தாமே அவனைக்கொல்ல யதத்னிகவில்லை.

இருபத்துமூன்றுவது அத்தியாயம்.

ஜராஸந்தவதபர்வம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணனுக்கும் ஜராஸந்தனுக்கும் த்வேஷம்வந்தகாரணத்தை ஜனமேஜயர்கேட்க, வைசம்பாயனர்சொல்லியது.)

ஜனமேஜயா, "வைசமபாயனரே! கிருஷ்ணனும ஜராஸந்தனுமாகியஇருவருக்கும்யாதுகாரணமபற்றி ஒருவருக்கொருவர் விரோதமூண்டாயிறறு? கிருஷ்ணன், ஜராஸந்தனுல் யுத்ததில எவ்வாறு ஜயிக்கபபட்டனர்? கமஸன் ஜராஸந்தனுக்கு என்னமுறையாகிறான்? கம்ஸன் நிமித்தமாகவன்றே ஜராஸந்தன் கிருஷ்ணனுக்குப்பகையாளியானன். இவற்றையெல்லாம எனக்குத் தெளிவாகச்சொல்லக்கடவீர்" என்றுகேட்க, வைசமபாயனர் சொல்லுகிறார்.

"உக்ரஸேனனுக்குமஹதிரியும புராணபுத்திசாலியுமான வஸுதேவரென்பவர் யாதவவமசத்திற்பிறந்தவர். கௌரவரே! உக்ரஸேன

னுடையபுத்திரர்கள் அனேகர்களில் ஜ்யேஷ்டபுத்ரனாகம்ஸன் சிற
ந்தபலசாலியும் எல்லா அஸ்திரங்களும தெரிந்தவனுமாயிருந்தான்.
மிகப்புகழ்பெற்றவளாகிய ஜராஸந்தன்புதல்வி கம்ஸனுக்குமனைவியா
னாள். புத்திசாலியான ஜராஸந்தன் ராஜ்யதந்திரத்தையே பரிசமாகவாங்
கிக்கொண்டு அவனைக்கன்னிகாதானஞ்செய்தான். அந்தஜராஸந்த
னுக்காக அந்தக்காலத்தில் உக்ரசேனனுடையமந்திரிகள் அவன்மைந்
தனை கமஸனுக்கு மதுரைபிரப்பட்டாபிஷேகஞ்செய்தனர். அந்தக்
கம்ஸன் கொடியபராக்ரமமுள்ளவனுமிருந்தான். ஔவரியத்தின்மிகு
தியினால் கர்வமடைந்தும் தேகபலத்தினால்விவேகமற்றுமிருந்த அந்
தக்கம்ஸன் அப்போதே தன்தந்தையைநிக்ரஹித்தது மந்திரிகளுடன்
அந்தராஜ்யதந்திரத்தை ஆனைடான். புத்திஹீனனாகிய அந்தக்கம்ஸன் வஸு
தேவரிடமம் ராஜ்யகாரியத்தைக்கேட்கவுமில்லை; அவருடன்சேர்ந்து
அந்தராஜ்யத்தை நியாயமாகப பரிபாலனஞ்செய்யவுமில்லை. ஆகிலும்,
அஸுரராஜாவான அந்தக்கமஸன், தேவகன்பெண்ணாகிய தேவகியை
வஸுதேவருக்குப பாரியையாக அன்புடன் விவாகஞ்செய்வித்தான்.
ஜனமேஜயரே! அவளை ரதத்திலேறறி அழைத்துக்கொண்டுபோகும்
போது ராஜாவானகமஸன், தானும வஸுதேவருடன் ரதத்திலேறி
னான். அப்போது, "கமஸா! எந்ரதத்தேவகியை இப்போது விவா
ஹஞ்செய்வித்து நீ அழைத்துகொண்டுபோகிறாயோ அவளுடைய
எட்டாவதுபுதந்தான் உனகுயமனுகப போகிறான்" என்று ஒருதேவ
தூதனுடையவாக்கு ஆகாயத்திலுண்டாயிற்று. அந்தவாக்கை வஸு
தேவரும்கேட்டார்; ராஜாவானகமஸனும் கேடடான். மிகவும் துஷ்ட
புத்தியுள்ளராஜாவான கமஸன் உடனே தேரைவிட்டிறங்கிக் கூரான
கத்தியைஉருவிக்கொண்டு தேவகியின்தலையைதணிக்க யத்தனித்
தான். ஜனமேஜயரே! அப்போது நிறைந்தபுத்தியுள்ள அந்தவஸு
தேவர் சிரித்துக்கொண்டு கோபத்தினால் பவசங்கொண்டகம்ஸனை
நயமாக ஸமாதானபடுத்தத்தொடங்கினர். "ராஜாவே! பெண்
ணைக்கொல்லத்தகாதென்று தர்மசாஸ்திரங்களெல்லாம் கூறுகின்றன.
குற்றமற்றவளும மெல்லியவளுமான இந்தப்பெண்ணை நிஷ்காரண
மாகக் கொல்லுகிறாய். ராஜாவே! இவளிடத்தில் உனக்குண்டான
பயத்தை நிவிருத்திசெய்துகொள்ளவீம இவளையும உன்தாமத்தையும்
காப்பாற்றவும் கூடும. ராஜாவே! அக்காலத்தில் இவளுடையஎட்
டாவதுகர்ப்பத்தைநாம பிரஸவமானவுடன் கீயழித்திவிடலாம. அப்ப
டிச்செய்வதனால் உனக்குநேர்ந்தஆபத்தை விலக்கினதாகும" என்
றார். ஜனமேஜயரே! இவ்வாறு வஸுதேவரால்உரைக்கப்பட்ட அந்

தச்சூரஸேனபதியானகம்ஸன் அப்போது அவர்சொல்லை அங்கீகரித்தான். பிறகு தேவகிக்கு ஸூர்யனுக்கொப்பான ஒளியுள்ளகுமாரர்கள் பிறந்தார்கள். கம்ஸன் அந்தக்குமாரர்களையெல்லாம் பிறக்கப் பிறக்கக்கொன்றான். பிறகு [1]பலராமர் அந்தத்தேவகிக்கு ஏழாவது கர்ப்பமாக உண்டானார். ராஜாவே! ராஜாவான யமன்தன துமாயையினால் அந்தத்தேவகியின் ஒப்பற்றகர்ப்பதை [2]இழுத்து ரோஹிணியின் வயிற்றில்வைத்தான். செவ்வையாகஇழுக்கப்பட்டதனால் அவர் ஸங்கர்ஷணரென்றும் பலத்திற்சிறந்தவரானதால் பலதேவரென்றும் சொல்லப்படுகிறார். பிறகு கண்ணன் அவளுடையஎட்டாவதுகர்ப்பமாக உண்டானார். ராஜாவானகம்ஸன் அந்தக்கர்பத்தின்விஷயத்தில் அதிகமாகக் காவல்செய்தான். பிரஸவகாலத்தில் வஸுதேவரைத் தவறிப்போகாமல் காவல்காப்பதற்காகக் கொடியவேலைசெய்பவனுகிய உக்ரனென்னும்மந்திரி கம்ஸனால் நியமிக்கபபடடான். பிறந்தமாத்திரத்தில் கண்ணனை அவர்பிதாவான வஸுதேவர்எடுத்துக்கொண்டு போய் ஒருயாதவனுக்குக் கொடுத்துவிட்டு அவன்பெண்ணை விலைக்கு வாங்கிக்கொண்டுவந்தார். ராஜாவானகம்ஸன் தேவதூதன் சொன்ன சொல்லைப் பொறுமலிருந்ததனால் வஸுதேவர் மஹாத்மாவானகிருஷ்ணனை இடைச்சேரியிற்கொடுத்துவிட்டார். கிருஷ்ணனும் நீருக்குள் தாமரைபோலவும் கட்டைக்குள் தீபம்போலவும் கம்ஸனாலறியப்படாமல் ஆயர்களிடம் ஒளிந்துவளர்ந்தார். சிறந்தகைகளையுடையவனும் பராக்ரமத்தினாலும் பலத்தினாலும் விருத்தியடைகிறவனுமான கம்ஸன் இடையர்களெல்லாரையும் பீடித்தான். அவனால பீடிக்கப்பட்டகோபாலர்களில் கம்ஸன்பயத்தினால்சிலரும கண்ணன்மேல்விருப்பத்தினால் மற்றவரும் கூட்டங்கூட்டமாகத் தாமரைக்கண்ணனுகிய கண்ணனைச்சூழ்ந்துகொண்டனர். ஜனமேஜயராஜாவே! உக்ரஸேனனுக்கன்புள்ளவரும் மஹாபல்சாலியுமான அநதவாஸுதேவர் பலராமரை ஸஹாயமாகஅடைந்து போஜராஜாவானகம்ஸனையும் அவன்ஸஹோதரர்களையும் யுத்தத்தில்கொன்று வெற்றியடைந்து அந்தராஜ்யத்தில் உக்ரஸேனனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்தார். ராஜாவே! கண்ணனால் யுத்தத்தில் கம்ஸன்கொல்லப்பட்டதைக்கேட்டவுடன் ஜராஸந்தன் கம்ஸன்மகனைச சூரஸேனராஜ்யத்திற்கு [3]அதிபதியாகச்செய்

---

1 இந்தஇடத்தில் உததரதேசபாடம் கொள்ளப்பட்டது; கிருஷ்ணசாரியர் பதிப்பின்படி மிகச்சிறந்தவரான பலராமர் என்பதுபொருள்

2 பகவான் தமது யோகமாயையினால் இழுத்த ரோஹிணியின்கர்ப்பத்தில்வைத்தாரென்று ஸ்ரீபாகவதத்திலும் ஹரிவம்சத்திலும்சொல்லப்படுகிறது.

3 இந்தக்கதை, பாகவதம் ஹரிவம்சங்களில் இல்லை.

தான். ஜனமேஜயரே! அந்தஜராஸந்தன் பெரியஸைன்யைக்கிளப பிக் கிருஷ்ணனீத்தடுத்துத தன்பெண்ணின்மகனுக்குப பட்டாபிஷே கஞ்செய்வித்தான். சிறந்தபராக்கிரமமுள்ள அந்தஜராஸந்தன் பெருஞ் சேனையைச்சேர்த்துக்கொண்டு அங்கே உக்ரஸேனனையும் யாதவர் களையுமபீடித்தான். கௌரவரே! இதுபற்றித்தான் ஜராஸந்தனுக் குக் கிருஷ்ணன்மேல் விரோதமுண்டாயிறது. அரசர்க்கரசே! செல் வம்நிரம்பிய அந்தஜராஸந்தன் தான்பிரார்த்தித்துக்கொண்டவிஷயத் துக்காக, பட்டாபிஷேகஞ்செய்துகொண்ட அரசர்களைப் பலிகொடு த்து, தேவச்ரேஷ்டரும் தோலாடையுடித்தவரும முக்கண்ணருமா கிய மஹாதேவரை ஆராதிபபதறகாகத தன்ஞலஜயிக்கபபட்டஅரசர் களைச் சிறையில்வைததான். பாதசரேஷ்டரே! இவையெலலாம் நடநத வாறு உமக்குச்சொல்லப்பட்டன. "அந்த ஜராஸந்தராஜா பீமஸேன னல் எவ்வாறுகொலலபபட்டானென்பதைக் கேளும.

இருபத்துநான்காவது அத்தியாயம்.

ஜராஸந்தவதபர்வம். (தொடர்ச்சி.)

(பீமனுக்கும் ஜராஸந்தனுக்கும்நடந்த கைச்சண்டையில் ஜராஸந்தன் சோர்ந்தது.)

பிறகு ஜம்புலன்களின்அறிவுக்கும் எட்டாதவரும யதுவம்சத் திலவதரித்தவரும் சிறந்தவாக்குள்ளவருமாகிய கண்ணபிரான் யுத் தஞ்செய்ய மனததில்நிச்சயம்செய்துகொண்ட அநத ஜராஸநதனைப பார்த்து, "ஓ! ராஜாவே! எங்கள்மூவரில் எநதஒருவனேனுயுத்தஞ் செய்ய உன்மனததில் விருப்பமிருக்கிறது? எவன் யுத்தத்திற்கு ஸித்தமாயிருக்கலாம்?" என்றுகேட்டார். இவ்வாறு அவர்சொன்ன பின் சிறநத பராக்கிரமமுள்ளவனும் மகததேசாதிபதியுமான ஜரா ஸந்தராஜன் கிருஷ்ணனைக கோபாலனென்றும் அர்ஜுனனைச் சிறு வனென்றும் நினைத்து அவ்விருவரையுமவிட்டுவிட்டுப பீமஸேனன் உயர்ந்தகதாயுதத்தைத தரிததிருபபதையும் அவன்தேக்பலத்தையும் கேட்டிருநததனுல் ஸநதோஷமடைந்து அவனுடன் யுததத்தை வேண்டினான். கோரோசனை பூமாலைமுதலான மங்களத்திரவியங் களையும் களைபபைத்தீர்க்கின்றவையும் மூர்ச்சையைத்தெளிவிக்கின் றவையுமான சிறந்தஔஷதங்களையும் புரோகிதர்எடுத்துக்கொண்டு, யுத்தஞ்செய்யக்கருதின ஜராஸந்தனிடம்வந்தார். புகழ்பெற்ற அந்

தபபிராம்மணரால் மங்களகாரியங்கள்செய்யபபெற்ற ஜாஸஸந்தராஜன் கூத்திரியதாமத்தை நிஸ்தித்து யுத்தஸன்னஹமசெய்தான். அந்த ஜாஸஸந்தன் கிரீடத்தைக்கழற்றித தலைமயிரைவாரிகொண்டு கசை புரளும் கடல்போலெழுந்தான். பயங்கரமான ப்ராக்ரமமுள்ளவனும சிறந்த புதநியுள்ளவனுமான ஜாஸஸந்தன், பீமஸேநரைக்கி, "பீமா! உன்னுடன்கூட யுதநமசெய்வேன். மேலானவனிடத்தில் தோற பதும் சிலசமயம்" என்றுசொன்னன், பகைவரையடகும் சிற நதபராக்ரமசாலியான ஜாஸஸந்தன் இவவாறுசொல்லிய பலஸே ரன்இந்நிரணியெநிதாதநதுபோலப பீமஸேனனைஎதிர்த்தான். அப போது பலவானனபீமஸேனன் கிருஷ்ணனுடன்கலந்து ஆலோசனை செய்து, அவரால் மங்களகாரியங்களுசெய்யபபெறறு ஜாஸஸந்தனுடனு யுத்தஞ்செய்யசேர்ந்தான். அதன்பிறகு புருஷசரேஷ்டாகளாகிய அவ்விரண்டுவீராகளும மிகுந்தஉத்ஸாஹநதுடன் ஒருவரையொருவர் ஜயிக்கக்கருதிக் கைகளேயாயுதங்களாகக்கொண்டு யுதநஞ்செய்ய ஆரம்பித்தனர். அபபோது ஒருவர்க்கொருவர் முத்விலகைபிடித் துப பிறகுபாதவநதனஞசெய்து தோளிறகட்டினகச்சை அசையுமபடி அடிக்கைகளினால விலாபபுறங்களில தட்டிக்கொண்டனர். ஜனமே ஜயரே! இருகைகளாலும பலமுறைதாளதடடி ஒருவரையொருவர் இடித்து அங்கத்தினால அங்கநதைக்கட்டி மறுபடியும தோளதட டிச் [1]சித்ரஹஸ்தங்கள முதலியவற்றைச்செய்து ஒருவர்க்கொருவர் கச்சைகளுக்குள் கைகளேநுழைதனர். கழுத்தினுமகன்னத்தினும நெருப்புப்பொறிபறகக அடிபபதனால் இடிமுழக்கநதை யுண்டாக்கி னர். கயிறறினறகடடுவதுபோலக கைகளினால்கட்டுவதாகிய பாகு பாசமுதலிய கட்டுகளேகடடிக் காலகளினால [2]தலையில்உதைத்து மார்பில கையாலறைநது இருகாங்களேயும்தோதநத தலையில் அறைவ தாகிய பூர்ணகுபமென்னும அடியையும இருவருமசெய்தனர். கையி னால்கையைநெருக்கி யானைகள்போலவும மேகங்களபோலவுமகர்ஜித் துக்கொண்டு, கைகளேயாயுதங்களாகவைத்துக்கொண்டஇருவரும் கையறைவிழுமபொழுது லிம்மங்களேப்போலக் கோபிதநபாத்து ஒருவரையொருவர் இழுதநிழுதது யுதநஞசெய்தனர். அவவிருவரும் உடம்பினால் உடம்பைக்கசக்கியும கைகளோடுகைகளேப்பின்னியும் வயிற்றினும் இடுபபினும விலாபபுறங்களினும ஒருவரையொருவர்

---

1 மிகுந்தபயிற்சியினால் வெகுவிரைவாகக் கைகளேமேலும்கீழும்குறுக்கி லும் நீட்டல்மடக்கல் முதலியவை.

2 தரம்புகளே உதைத்தல் என்பதுபழையவரை.

பிடிததெறிநதனா. நன்ரூகபபயின்றஅவ்விரூவரும உடமபைச்சுருக் கிக்கொண்டு தமதுவயிறறிற்ருகழேயும கழுததிலேயும மார்பிலே யும கையைபபோடடுததளளினா. உலகதது்துளளநிறநதகைசசண் டைகள்எல்லாவற்றிற்கும மேலாக [1]ப்ருஷ்டபங்கததையும செய்த னர். இரண்டுகைகளினுலுண்டாகும [2]ஸமபூர்ண மூசசையையும பூணகுமபம, [3]திருணபீடம, [4]பூணயோகம, [5]முஷ்டிகம முதலான யுததநகளேயும தங்கள்ஸாமாதது்தியத்தை ஒருவர்க்கொருவர் காண் பிபபதறகாக நிணைதததபடியெலலாஞ்செய்தனர். ராஜசரேஷ்டரே! அபபோது அநகரதது்திலவஸிக்கும பிரமமக்ஷதது்திரியவைசியசூதரர்க ளணைவரும பெண்பிளளைகளகிழவாகளுளபட ஆயிரக்கணகக்காக அவா களுடையயுததததைகாண்பதறகு வநதுசேரநதனா. அநதஜனக் கூடடஙகள்நிரமபியிருநததனுல அவவிடம நெருகக மாயிருநதது. அப போது கைகளின் அடியினுலும பிடிததலாலும விடுததலாலும மலையும் இடியுமஸநதாதறபோல அவவிரூவருமஸநதது்தனா. பலவான்களி நிறநதவான அவவிரூவருட தநதமபலததினுல மிக்கஉதஸாஹமுள் ளவாகளாய் ஒருவரையொருவர்ஜயிக்கக்கருதி ஒவவொருவரும மற் றொருவரினகுமமபமதனை எதிர்பாாதது்துகொண்டு,கலகளினுல் ஆடகளும விருக்ஷங்களினுலராக்ஷஸர்களும காலகளினுல் உய்யாநதகுதி ரைகளும மூக்குக்களினுல் தந்திரிபபறவைகளுமபோல (கைகளால்) சண்டைசெய்தனர். ராஜாவே! அநதபபோராக்களததில அவ்விரண்டு பலசாலிகளுடைய அநதபபயங்கரமானயுததம விருத்திராஸுரனுக் கும்இநதிரனுக்கும நடநதயுத்தம்போல ஜனங்கள்விலகியோடும்படி நடநதது. தூரதது்திலதள்ளியும ஸமீபதது்திலிழுததும பின்னேடியிழு ததும சுறறிவிழுததும பலவகையாகஒருவரையொருவர் இழுத்தனர். முழுங்காலகளினுல இடித்தகொர். பிறகு பெருங்காஜுயினுல் ஒரு வரையொருவர் பயமுறுததிய பெருமபூரைகள்விழுவதுபோன்ற அறைகளினுல் அறைநதனர். பிறகு ஜராஸநதன் தனதுமுஷ்டியினுல்

---

[1] முதுகைத்தரையிற் படும்படிசெய்வதனுல் உணடாகும்அவமானம்என் பது.

[2] வயிறுமுதலான இடங்களில கசக்குவதனுலுணடாகும் மூர்ச்சைஎன் பதுபழையஉரை.

[3] நார்முதலியவற்றினுற் கயிறுதிரிப்பதுபோல ஒருவரோடொருவர்கை கால்களைப்பினனிக்கொளவது;

[4] தலைமுதல்கால்வரையில முழுஉடம்பையும் 'சேர்த்தணைப்பது. 'அச தியிலடி,த்தல' என்பதுபழையஉரை.

[5] ஓரிடத்தில்குத்துவதாகக் காட்டி மற்ரோரிடத்திற்குத்துவது.

பீமஸேனனோமாபிலடித்தான். அந்தபபீமஸேனனும ஜராஸந்தனே மார்பிலேயேயடித்தான். அகன்றமார்பும நீண்டகைகளுமுடையவர் களும் கைசண்டையில்தேர்ந்தவர்களுமாகிய அவ்விருவர்களும் இருப்புலக்கைகள்போன்ற கைகளினுல்போர்செய்தனர். கார்த்திகை மாதம முதலதேதியாரமபிதத அந்தயுததம் பதினேந்துதினங்கள் இர வுமபகலும ஆகாரமிலலாமலும் ஓய்விலலாமலும நடந்துகொண்டிருந தது. மஹாதமாக்களானபீமஜராஸந்தாகளின்யுததம திரயோதசி (பதின்மூன்றுவதுநாள்) வரையில் அவவாறேநடந்தது. சதுர்தசி தினம் (பதினான்காவதுநாள்) ராதரி ஜராஸந்தன் கணப்பினுலயுத் தஞ்செய்யாமல்நின்றான். ஜனமேஜயராஜாவே! அவ்வரசன் அவ் வாறுகோதரிருந்ததைக்கண்டு ஜனார்த்தனா பயங்கரமானசெய்கை யைசெய்தபீமஸேனனேதாண்டுவதற்காக, "ஓ! குந்தியின்மைந தனே! யுத்தத்திலெய்ந்துபோனசத்துருவைபபிடிபபது எளிது; மூற்றினுமபிடிக்கபபடிவ்தனுல் அவன் தன்னுயிரைவிட்டுவிடுவான். குந்திபுத்திரனே! ஆதலால, இவவரசனை இபபோதே நீபிடிக்கவேண் டும். பரதச்ரேஷ்டனே! கைகளால் இவனுடன்யுததஞசெய்" என்று சொன்னர். • வீரர்களானபகைவர்களை ஹதஞசெய்பவனுகிய அந்தப பீமஸேனன், கிருஷ்ணன்இவ்வாறுசொன்னவுடன் ஜராஸந்தனுக்கு அதுதருணமென்றுஅறிந்து அவனைக்கொல்லஎண்ணங்கொண்டான். பிறகு பலவான்களிறசிறந்தவனும கௌரவர்களைமகிழ்விப்பவனு மான விருகோதரன் யாராலுமஜயிக்கமுடியாத ஜராஸந்தனைஜயிபப தறகாக அவனைகோபததுடன்பிடித்தான்.

இருபத்தைந்தாவது அத்தியாயம்.

ஜராஸந்தவதபர்வம். (தொடர்ச்சி)

(ஜராஸந்தவதமானபிறகு கிருஷ்ணன் சிறையிலிருந்தக்ஷத்திரியர்களைவிடு வித்ததும், ஜராஸந்தபுத்திரனுக்கு ராஜ்யாபிஷேகஞ்செய்வித்ததும், பீமார்ஜுனர்களோடு ஜராஸந்தனுடைய ரதத்திலேறி இந்திரப்ரஸ்தம்சென்று யுதிஷ்டிரருக்குஜயத்தைச்சொன்னதும், பிறகு பாண்டவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு துவாரகைக்குச்சென்றதும்.)

அதன்பிறகு பீமஸேனன் ஜராஸந்தனை வதஞ்செய்வதற்காகச் சொல்லியமானஎண்ணத்தையடைந்து, கிருஷ்ணனைப்பார்த்து, "யாத வச்ரேஷ்டரே! கிருஷ்ணு! உமக்குவேண்டினவரைப் பெரும்பாலும்

அழித்தவனுகிய இந்தப்பாவியின்விஷயத்தில் யான்காலம்போக்கத் தகாது" என்றுசொன்னன். இவ்வாறு அவனுல்சொல்லப்பட்ட புருஷச்ரேஷ்டரான கண்ணபிரான் ஜராஸந்தவதஞ்செய்யவிருகோ தரனேத்துரிதப்படுத்தி மறுமொழிகூறலானுர். "பீமா! உன்னிடத்தி லிருக்கும் தெய்வீகசக்தியையும் வாயுபகவானுடையபலத்தையும் இப்பொழுது ஜராஸந்தனிடத்தில்காண்பி. மஹாரதனும் கெட்ட புத்தியுள்ளவனுமான இந்தஜராஸந்தன் உன்னுலேதான் கொல்லப் படத்தக்கவனென்பதைக் கோமந்தமென்னும் சிறந்தபர்வதத்தில் காற்றுவழியாகவந்த ஆகாயவாணியினுற்கேட்டேன். அதனுல் இவன் (அபபோது) விடப்பட்டான். மாகதனேத்தவிர மற்றெவன் பலதேவ ருடையபலத்திலகப்பட்டுப் பிழைப்பான்? மஹாபலசாலியே! ஆத லால், உன்னைவிட வேறுயாராலும் இவனுக்குமரணம்விதிக்கப்பட வில்லே. சிறந்தகைகளேயுடையவனே! வாயுபகவானேத்தியானித்து இம்மகதராஜனேக்கொல்" என்றுசொன்னர். மஹாபலசாலியும் எதிரி களேஜயிப்பவனுமாகியபீமன் கிருஷ்ணனுல் இவ்வாறுசொல்லப்பட்ட வுடன் கிருஷ்ணனேநமஸ்கரித்து அர்ஜுனனேத்தழுவி வாயுபகவானே மனத்தில்தியானித்து வாயுபகவானுடையபலத்தினுல்பூரிக்கப்பெற்ற வனுகிச் சிறந்தபலசாலியானஜராஸந்தனேத்தூக்கிச் சுழற்றினுன். பரத ச்ரேஷ்டரானஜனமேஜயரே! அவனே நூறுசுற்றுச்சுற்றி முழங்கால் களால்முதுகையழுத்தி ஒடித்தான்; அவனே அரக்கிக் கர்ஜனைசெய் தான். மஹாபலசாலியானபீமன் கையினுல் அவன்காலேபபிடித்து இரண்டாகக்கிழித்தான். ஜராஸந்தன்கசக்கப்படுவதனுலும் பீமன் கர்ஜிப்பதனுலும் எல்லாப்பிராணிகளும் பயங்கரமானபெரியகோஷத் தைச்செய்தன. பீமசேனனும் ஜராஸந்தனுமாகிய இருவருடைய கூச்சலினுலும் மகததேசத்தவரனேவருமநடுங்கினர். ஸ்திரீகளின் கர்பங்கள் கரைந்துவிழுந்தன. பீமசேனன்கர்ஜனையைக்கேட்ட மாகதர்கள், 'இமயமலேவெடிக்கிறதா? அல்லது பூமிபிளக்கிறதா?' என்றுநினேத்தனர். அதன்பிறகு, கிருஷ்ணபகவான் ஜராஸந்தனேக் கொலைசெய்தற்காகப பீமனேநோக்கி; கையினுல்கோசையையெடுத்து ஜரா ஸந்தவதத்தைக்குறிப்பித்து அதையிரண்டாகக்கிழித்தார். உடனே பீமசேனன்டுதரிதகுகொண்டு ஜராஸந்தன் காலேபபிடித்துத்தூக்கி அவன்தேகத்தைஇரண்டாகக்கிழிதது தபோட்டுக் கர்ஜித்தான். பரா க்ரமசாலியானஜராஸந்தன் மறுபடியும் தன்இரண்டுபாகங்களுமஒன் றுசேர்ந்தது பீமனுடன்கைச்சண்டைசெய்தான். எல்லாபபிராணிகளுக் கும் பயத்தையுண்டுபண்ணி மூபிர்கிலிர்க்கச்செய்வதும் எல்லாஉலகங்

'களையும் அழிபடதுமான கடுஞ்சண்டை அவ்விருவருக்கும் நடந்தது. ஸ்ரியபடதியானகண்ணபிரான் ஜராஸந்தவதத்தின் உபாயத்தைக் குறிபபிடிவதற்காகத் திரும்படவும பீமஸேனனுக்கு ஒருகோரையை யிரண்டாகக்கிழித்துக் காட்டினாறபிபோட்டார். பீமஸேனன் உடனே யறிந்துகொண்டு ஜராஸந்தனை இரண்டாகக்கிழித்துக் காட்மாற்றிப போட்டுவிட்டுக் கர்ஜித்தான். ராஜாவே! அபபோது ஜராஸந்தன் மாம்ஸமும் எலுமபும் கொழுபபும நேராலுமஉலர்ந்து மூளைவெளிப படடுப பிணமாகி உண்டைபோலானுன். சததுருவதஞ்செய்தவீரர் கள் அநதஇரவில் உயிர்தங்கித் தூங்கினவன்போலிருநத ஜராஸந்தனை அரண்மனைவாயிலிற்போட்டுவிட்டு வெளிபபட்டனர். கிருஷ்ணன் கொடிகட்டினஜராஸந்தனுடையதேரைபபூட்டிப பீமார்ஜுனர்களை அதில்ஏற்றிக்கொண்டு தமதுகுலக்தேரானசுஷ்திரியர்களைவிடுவித் தார். பெரும்பயதினின் றுமவிடுவிக்கபபட்ட அவ்வரசர்கள ரத்னங் களைபபிறதத்தக்கவரான' கண்ணனையடைது ரத்தினங்களைக்காணிக் கையாகஅளித்து அவரைத தங்களுக்குராஜாவாகசெய்தனர். இர ண்டுகைகளாலும்புத்தஞசெய்பவனும் பிறருடையகைபபிற்கியைத் தடுபபவனும் அழகியஉருவமுள்ளவனும் மற்றஅரசர்கள்எவராலும வெல்லமுடியாதவனுமான பெயாபெறற அர்ஜுனன் ஆயுதங்கள் செலவில்லாமலும் புண்படாமலும சத்துருவைஜயித்துக் கிருஷ்ணை ஸாரதியாகஅடைநது தன்ஸேஹாதரனுனபீமனுடன்கூட அந்தத திவ்யரதத்திலேறி ராஜாக்களுடன் கிரிவ்ரஜதத்திலிருநது புறபபட் டான். பீமார்ஜுனர்களென்னும யுதஸவீரர்களாலஏறபபெறறதும் கிருஷ்ணன் ஸாரத்தியமசெய்யபபெற்றதுமான அநதச்சிறந்தரதம் எந்தவில்லாளிகளும் வெலலக்கூடாததாக விளங்கிற்று. தாரகாமய மென்னும் தேவாஸுரயுத்தத்தில இநதிரனும்விஷ்ணுவுமஏறிச சஞ் சரித்ததாகிய அநதஜராஸந்தனுடையரதத்தில் கிருஷ்ணன்ஏறிச்சென் றார். காற்றுக்கொபபான வேகமுளளகுதிரைகளைநடத்துமப புருஷோத்தமரான கண்ணபிரானைக்கண்ட ஜராஸந்தனுடையகாரத்து ஜனங்கள், "இவவாறு கிருஷ்ணஞல்நடத்தபபட்டவர்களும் பிறர் செயற்கரியகாரியதைசெய்தவர்களுமாகிய இநதத்தரிலிருக்கும் இந்தமஹாவீரர்களிருவரையும், கண்ணெடுதது பார்ககத்தக்கவன் உலகத்தில்யார்?" என்றுபேசிக்கொண்டனர்.

புடம்போடபபொன்னிலைபிரகாசிபபதும சதங்கைகளின்ஸரங் களை மாலைகளாகஅணிநதிருபபதும, மேகமுழக்கம்போன்ற சப்த முள்ளதும பகைவரைக்கொன்று ஜயிததுவருவதுமான 'எநதரதத்தி

லேறித் தேவேந்திரன் (தாரகாமயயுத்தத்தில்) எண்ணூற்றுப்பத்து அஸுரர்களைக்கொன்றானே அந்த ரதத்தையடைந்து அந்தப் புருஷச்ரேஷ்டர்கள் மிகவுமசந்தோஷமடைந்தனர். ஸஹோதரர்களான பீமார்ஜுனர்களுடன்கூட ரதத்திலிருந்தகண்ணனைக்கண்டு மகத தேசத்தவர் வியப்புறறவராயினர். ஜனமேஜயரே! தெய்வக்குதிரைகள் பூட்டப்பட்டு வாயுவேகமாகச்செல்லும் அந்தரதம கிருஷ்ணனை றைப்பெறறு மிகவும்சோபித்தது. அந்தச்சிறந்ததேரில் தேவர்களாற்செய்யப்பட்டதும் எங்கும்தடையிலலாததும் வானவிற்போலப் பிரகாசிப்பதுமான அழகுள்ளகொடியானது ஒருயோசனைதூரம்வரையில காணப்பட்டது. பிறகு கிருஷ்ணன் கருடனைநினைக்க, கருடனும் அந்தநிமிஷத்திலேயேவந்தார். அந்தக்கருடனால் அக்கொடியானது உயர்ந்த பெரியவிருக்ஷமபோலிருந்தது. அந்தச்சிறந்த ரதத்தின்கொடியில் வாய்திறந்து பேரிரைச்சலிட்டுக்கொண்டிருக்கும் பூதங்களுடன்கூட நாகங்களைப்பக்ஷிப்பவரானகருடனும்இருந்தார். அவர் நடுப்பகலில் ஆயிரங்கிரணங்களுமசேர்ந்த ஆதித்தன்போலத் தம் மொளியினால் எந்தப்பிராணிகளும கண்ணைத்தறப்பார்க்கக்கூடாதவராக மிகப்பிரகாசித்தார். ராஜாவே! அந்த உயர்ந்த தெய்வக்கொடியானது மரங்களிலதடைப்படாததாகவும ஆயுதங்கள்ால்அடிக்கப்படாததாகவும இவ்வுலகத்தில மானிடர்களால காணப்பட்டது. புருஷோத்தமராகியகண்ணபிரான் பீமார்ஜுனாகளுடன்கூட மேகமுழக்கம்போன்றசப்தமுள்ள அந்தத் திவ்யரதத்திலேறிப் புறப்பட்டார். அந்த ரதத்தை இந்திரனிடத்திலிருந்து வஸுவென்னும அரசனும் வஸுவினிடமிருந்து பிருஹத்ரதனும பிருஹத்ரதனிடமிருந்து அவன்புதலவனான ஜராஸந்தனும வரிசையாகஅடைந்தனர். சிறந்த கைகளுள்ளவரும பெரும்புகழ்பெற்றவருமாகிய காமதைக்கண்ணர் அந்தக்கிரிவ்ரஜமென்னும் ஊரிலிருந்து வெளியிறசென்று மேடுபள்ளமில்லாத சமனானஇடத்தில நின்றார். ராஜாவே! அப்போது அவ்விடத்தில் அந்தகவிருஷ்ணிவம்சத்தோரனைவரும் பிராம்மணர்களைமுன்னிட்டுக்கொண்டு சாஸ்திரத்திற்சொன்னபடி பூஜைக்குரியகாரியங்களைசெய்து கிருஷ்ணனை எதிர்கொண்டழைத்தனர். சிறையிலிருந்துவிடுபட்ட அரசர்களும கிருஷ்ணனைபூஜித்துத் துதித்துப பின்வருமாறுபேசலுற்றார்.

“சிறந்தகைகளையுடையவரே! துர்மென்னும்சேற்றைநீக்குவதற்கு ஜராஸந்தனென்னும் பயங்கரமானமடுவில்முழுகியிருக்கும் அரசர்களை இப்போது கைதூக்கிவிட்டுத் தருமத்தைக்காபபாற்றினது, பீமனை

'யும்அர்ஜுனனையும் உதவியாகக்கொண்டவரும் தேவகீபுத்திரருமான உமக்குஅரிதன்று. யாதவராகஅவதரித்த விஷ்ணுவே! மிகக்கொடியதான மலைக்கோட்டையில் துயரபபட்டிருந்தவர்களை, விடுவித்ததனால் எங்கும்விளங்கும் புகழைஅடைந்தீர். ஸர்வேசரூபம், புருஷோத்தமரே! நாங்கள் என்னசெய்யட்டும்? வணங்கிநிற்கும் எங்களுக்குக் கட்டளையிடும்; நீர்கட்டளையிடுவது செயற்கரியதாயினும் அரசர்கள் அதைச்செய்தான துபோலவே நினையும்" என்றனர். சிறந்த மனமுள்ளகண்ணபிரான் அவர்களைத் தைரியப்படுத்தி, "யுதிஷ்டிரர் ராஜஸூயயாகஞ்செய்ய விரும்புகிறார். அரசர்க்கரசராயிருக்க விரும்பித தர்மத்தில்பிரவிருத்தித்த யுதிஷ்டிரரைஅறிந்து நீங்களெல்லாரும் அவருக்கு உதவிசெய்யவேண்டும்" என்றுசொன்னார். அரசர்களிற்சிறந்த ஜனமேஜயரே! உடனே அவ்வரசர்களெல்லோரும் கிருஷ்ணனுடைய அருதச்சொல்லை மிக்கஅன்புள்ளமனத்துடன் ஏற்றுக்கொண்டு 'அபபடியேசெய்கிறோம' எனறுகூறினர். அவ்வரசர்கள் கிருஷ்ணனுக்கும இரத்தினங்களைசேர்பபித்தனர். கண்ணபிரான் பெற விருபபமில்லாமலிருநதும அவர்களிடமிருநத தயையினால் அவற்றைப பெற்றுக்கொண்டனர். ஜராஸநதன்புத்திரனை பெரியமனமுள்ள ஸஹதேவனென்பவன் பிரஜைகளோடும் மந்திரிகளோடுங்கூடத தன்புரோஹிதரை முன்னிடடுக்கொண்டு வெளிபபட்டுவநதான். அந்தஸஹதேவன் அனேகரதனங்களை முன்னேவைத்து மிக்கவணக்கத்தோடு நமஸ்காரஞ்செய்து புருஷோத்தமராகிய வாஸுதேவரை அடைநதான். புருஷோததமரானகிருஷ்ணன் அபபோது பயத்தினாலவருநதின அவனுக்கு அபயமளித்து அதன்பிறகு அவனது விலிலிபெற்றஇரத்தினங்களைப பெறறுக்கொண்டார். அந்த ஸஹதேவன், "சிறநதகைகளையுடைய புருஷோத்தமரான ஜனார்த்தனரே! மஹாபுருஷரே! என்பிதாசெய்த அபராதததை நீர் மனத்தில் வைக்கததகாது. கோவிநதா! உம்மைச சரணமடைநதிருக்கிறேன். பிரபுவே! என்மீது அனுக்ரஹஞ்செய்யக்கடவீர. தேவகீபுத்ரரே! உம்மிடத்திலும் பீமார்ஜுனர்களிடத்திலும் அனுமதிபெற்றுக்கொண்டு என்பிதாவின் தேகஸமஸ்காரஞ்செய்ய விரும்புகிறேன். இனி நான் அச்சமற்று விரும்பினபடி ஸுகமாக லஞ்சரிக்கக்கடவேன்" என்றுசொன்னான். ஐயா! இவ்வாறு விண்ணப்பஞ்செய்துகொண்டு ஸஹதேவன்மேல் அன்புகூர்நத கண்ணபிரானும மஹாரதர்களான பீமார்ஜுனர்களும, "இராஜாவே! உன்பிதாவுக்கு ஸம்ஸ்காரஞ்செய்யலாம" என்றுகூறினர். 'ஜனமேஜய

ரே! கண்ணனும் பீமார்ஜுனர்களும் அவ்வாறுசொல்லக்கேட்டு மகததேசத்தரசனுகிய அருதஸஹதேவன் மருதிரிகளுடன்கூட விரை வாக நகரத்துக்குள்சென்று, சந்தனக்கட்டைகள், காலேயம், ஸ்ரா ளம், காரகில்முதலிய கட்டைகளினுல் சிதைசெய்து பலவகை ஸுகந்த தைலங்களையும் பெருநெய்த்தாரைகளையும் பொழிந்து நாற புறங்களிலும மலர்களை இறைத்து ஜராஸந்தனைத் தஹனஞ்செய் தான். பிறகு ஸஹதேவன் ஸ்வர்க்கத்துக்குசென்ற தன்பிதாவை உத்தேசித்துத் தமபிமார்களுடன் ஜலதர்பணஞ்செய்தான் அந்த ஸஹதேவன் கண்ணனும பெரும்பாக்கியம்பெற்ற பீமார்ஜுனர்க ளும் இருக்குமிடத்திற்குப் புறபபட்டுவந்து கண்ணபிரானைவணங் கிக் கைகூபபி, "கோவிந்தா! மாடுகள், செம்மறியாடுகள், வெள ளாடுகள், எருமைகள் முதலியவைகளும் யானைகளும் குதிரைகளும பலவகைவஸ்திரங்களும மிகுதியானரதனங்களும் இதோஇருக் கின்றன. தர்மராஜாவுக்குக் கொடுக்கலாம்; அல்லது தாங்களெவ் வாறு நினைக்கிறீர்களோ அவ்வாறுசெய்யலாம்" என்று விண்ணப பஞ்செய்தான். புருஷோத்தமரானகிருஷ்ணன் பயத்தினுல்வருந்தின அருதஸஹதேவனென்னும் ஜராஸந்தன்புத்ரனுக்கு அபயமளித்து அவனை மகதராஜனகபபட்டாபிஷேகஞ்செய்து அதன்பிறகு விலைபெ றறஇரத்தினங்களைப பெற்றுக்கொண்டார். புத்திசாலியான அவ்வர சன் கிருஷ்ணனுடைய ஸ்நேஹதையடைந்து பீமார்ஜுனர்களாலும் மிக மதிக்கபபெற்றுத் திரும்பவும் பிருஹத்ரதன்நகரத்தில் பிரவே சித்தான். பீமார்ஜுனர்களோடுகூடிய கண்ணபிரான் அரசர்களை வரையும் அவரவர் பிராயததுக்குத்தக்கபடி மரியாதைசெய்து 'தர்ம ராஜாவின் அன்பைவிரும்புகிற மஹாத்மாக்களானநீங்கள் ராஜஸூய யாகத்திற்குவரவேண்டும்' என்றுசொல்லி, அவர்களெல்லாருக்கும் கட்டளையிட்டு விடைகொடுத்தார். கிருஷ்ணனுல் இவ்வாறுசொல் லப்பெற்ற அந்தவீரர்களான அரசர்களனைவரும் மகிழ்ந்து அப்படி யேயாகட்டுமென்று சொல்லி, மிகுந்தஉத்ஸாஹதனுற் பிரகாசப் பவர்களாகி அளவற்றஇரத்தினங்களையெடுத்துக்கொண்டு பீமார் ஜுனகிருஷ்ணர்களோடுசேர்ந்து புறப்பட்டனர். சிறந்த ஜயலக்ஷ்மி யோடுகூடிய புருஷச்ரேஷ்டரான கிருஷ்ணன் மிகுதியான இரத்தி னங்களைப் பெற்றுக்கொண்டு பீமார்ஜுனர்களுடன்கூடப் புறப்பட் டார். அச்சுதர் பீமார்ஜுனர்களுடன் இந்திரப்பிரஸ்தத்திற்குச்செ ன்று தர்மராஜாவைச் சந்தித்து, அன்புடன், "அரசர்க்கரசரானதர்ம ராஜாவே! பலவானுனஜராஸந்தன் பீமனுல்கொல்லப்பட்டதும் இந்த

ராஜாக்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதும் நற்காலம். பாரதரே! இந்தப்பீமார்ஜுனர்களிருவரும் புண்படாமல க்ஷேமமாகத் திரும்பத தமதுநகரமசோந்ததும நல்லகாலம்" என்றுசொன்னர். பிறகு யுதிஷ்டிரர்மகிழ்ந்து கிருஷ்ணரை தக்கபடிபூஜித்துப் பீம ஸேனரையும் அர்ஜுனரையும தழுவிக்கொண்டார். அவ்வாறு ஜராஸந்தரையடித்துத தமஇருஸஹோதரர்களால உண்டாக்கப்பட்ட ஜயத்தையடைந்து தம்பிமார்களுடன்கூடித் தர்மராஜர் மகிழ்ந்தார். மகிழ்வுற்றதர்மராஜர் ஜராஸந்தனைபபார்த்து, "ஓ! புருஷசரேஷ்டரே! பலத்தினால் கொழுத்தவனும் சிறந்தபராக்ரமசாலியும மகதராஜாவுமான ஜராஸந்தன் பீமஸேனனுலகொலலபபட்டது உமமையடைந்த தனுலன்றே? இனிக்கவல்லியறறு ராஜஸூயமெனனும சிறந்தயாகத்தை நிறைவேறறுவேன். ஜனார்தனரே! உமது புதிபலததை மேற்கொண்டுதான் நான் இந்தயாகததுகருியவனுகிறேன். புருஷோத்தமரே! ஜராஸந்தன்கோபித்து உமதுகீர்தியைப பூமியிலிருந்து [1] குடித்துவிட்டான். ஜராஸந்தரை வதஞ்செய்ததினாலேயே உமகருமிருந்சிறபபுக்கள்வந்தன" என்றுசொன்னர். இவ்வாறு ஸம்பாஷணஞ்செய்தபின் தர்மராஜா அந்த உயர்ந்ததேரைப பிரபுவான கிருஷ்ணனுக்குக்கொடுத்தார். இவவாறு தாமராஜரால் கௌரவிக்கபபெற்ற அந்தக்கிருஷ்ணபகவான் ஸந்தோஷமடைந்து அவாமேலன்பு வைத்து அந்தஜராஸந்தரதத்தைப பெற்றுக்கொண்டு அர்ஜுனனுடன் மகிழ்ந்திருந்தார். தர்மராஜா ஸஹோதரர்களுடன்கூட அரசர்கனை அவரவர்வயதுக்குத்தக்கபடி ஸந்தித்துக் கௌரவித்துப் பூஜித்து விடைகொடுத்தனுபபினர். யுதிஷ்டிரரால் விடைகொடுக்கப பெற்ற அவ்வரசர்கள் மலமகிழ்ந்து பலவகைகளானவாஹனங்களிலேறி அங்கிருந்து விரைவாகத் தமதம்தேசங்களுக்குச் சென்றனர். ஜனமேஜயரே! பேரறிவாளரும புருஷசிமமமுமான கண்ணபிரான் தமக்குபபகைவனுன ஜராஸந்தனைப பாண்டவர்களால் இவ்வாறு கொல்வித்தார். பகைவரையடக்குகிறவராகிய கண்ணபிரான் தம்புத்தியைமுன்னிட்டு ஜராஸந்தவதஞ் செய்வித்தபிறகு, தர்மபுத்திரர், குந்தி, த்ரௌபதி, ஸுபதரை, பீமஸேனன், அர்ஜுனன், நகுல ஸஹதேவர்கள் இவர்களிடமசொல்லிக்கொண்டு தெளம்யமுனிவரிடம் விடைபெற்றுத தமதுநகரத்திற்குப்புறபபட்டார். யுதிஷ்டிரர் முதலான பாண்டவர்களால பின்செல்லப்படடு நிகரற்றபுகழ்பெறறு மிகுந்தமகிழ்ச்சியோடுகூடிய கண்ணபிரான் மனோவேகமாகச்செல்வ

[1] இலலாமற்செய்துவிட்டான்.

தும தர்மராஜரால் கொடுக்கப்பட்டதுமான அந்தச் சிறந்ததெய்வத் தேரிலேறித் திசைகளெல்லாம் ஒலிக்குமபடி துவாரகாநகரத்திற்குச் சென்றார். பரதச்ரேஷ்டரான ஜனமேஜயரே! அபபோது யுதிஷ்டிரர்முதலான பாண்டவர்கள் சிறநதகாரியம்செய்பவரான கிருஷ்ணபகவானைப் பிரதக்ஷிணஞ்செய்தனர். ஜனமேஜயரே! தேவகிபுத்ரரான கிருஷ்ணபகவான் மிகபபெரிய ஜயத்தையடைநது அரசர்களுக்கு அபயமளித்துச் சென்றபோது அநதசசெய்கையினால் மறுபடியும் அவர்புகழ் மிகபபெருகிறது. ராஜாவே! பாண்டவர்கள் திரௌபதிக்கு மிகுந்தஸநதோஷத்தையுண்டுபண்ணினர். தாமராஜா அநதக்காலத்தில் அறமபொருளின்பங்களையுடையதாகப் பிரஜாபரிபாலனஞசெய்வதற்கு எதுதகுநததோ அநதஸ்ரேஷ்டரியதர்மத்தைப்பற்றிப்பேசினார்.

ஜராஸந்தவதபர்வம் முற்றிற்று.

இருபத்தாறுவது அத்தியாயம்.

திக்விஜயபர்வம்.

(அர்ஜுனன் பீமன் நதுலஸஹதேவர் முதலானவர்கள் தர்மராஜாவினிடம் விடைபெற்றுக்கொண்டு தவத்துவஜியே திக்விஜயத்துக்குச் சென்றார்களென்று வைசம்பாயனர் சுருக்கமாகச் சொல்லியது.)

தர்மவான்களிற் சிறந்தவரும தர்மததைச்செய்ய விருமபுகிறவரும் பகைவரைத் துன்புறசசெய்கிறவருமான தர்மபுத்திரர் நாரதர் சொன்னதை நிணைத்துப பெருமூச்செறிநதார். ஆயுதநதரித்தவரெல்லாரிலும் சிறந்தவனும [1]அக்னிபகவானுல சிறநதவில்லையும் அம்புவற்றுத பெருநதூணிகளையும ரத்நதையும் கொடியையும [2]ஸபையையும் அடைநதிருபபவனும இநதிரபுத்திரனும குருதியின்புத்திரனுமாகிய அர்ஜுனன், தர்மராஜாவினுடைய குறிபபையறிந்து அவரெண்ணினதை முடிக்கக்கருதி அவரிட மபேசலானுன்.

"ஓ ராஜாவே! வில், அஸ்த்ரம், அம்புகள், பராக்ரமம, ஸஹாயம், பூமி, கீர்த்தி, சேஷ இவையெல்லாம் என்னுலடையப்பட்டிருக்கின்றன. உமமுடைய எநத அபிஷ்டமும இதுக்கக்கூடாமலிருக்கிறதோ

---

[1] இங்கு 'பார்த்தப்ராப்ய' என்ற உததாரதேசபாடம் கொள்ளப்பட்டது. 'ப்ராப்தம் ப்ராப்ய' என்பதற்கு துர்க்கீயினுல் கிடைத்த வில் முதலியவற்றையடைந்து என்பது பொருள்.

[2] அக்னியிலிருந்து காப்பாற்றப்பட்ட மயன்செய்ததாதலால் ஸபையும் அக்னிபகவானுல் கிடைத்ததாகச் சொல்லப்பட்டது.

அதைச்செய்வதற்கு உபாயம பொக்கிஷத்தை நிரபபுவதுதானென்று நான்நிணைக்கிறேன். அரசர்களுக்குத தலைமையானவரே! எல்லாஅர சர்களையும் கப்பங்கொடுக்கச் செய்வேன். சிறந்ததிதியிலும் சிறந்த நக்ஷத்திரத்திலும சிறநதலக்னத்திலும குபேரனுல் ஆளப்பட்ட திசை யை ஜயிக்கப்புறப்படுவேன்" என்றான். தனஞ்சயன் சொல்லக்கேட டுத் தர்மராஜர் அழகும்கம்பீரமுமான குரலுள்ளவாக்கினுல் அவ னுக்கு மறுமொழிகூறலானார். "பரதசரேஷ்டனே! யோக்கியர்க ளான பிராம்மணர்களைக்கொண்டு [1]ஸ்வஸ்திவாசனஞ செய்வித்துப் பகைவர் துயருறுமபடியும அன்பர் களிக்குமபடியும புறபபடு. பார்த்தா! உனக்கு ஜயமநிசசயம. நீ விருமபின பலனையடைவாய்" என்றார். அவர இவவாறுசொன்னவுடன் ராஜனன் பெரியஸைனி யத்தினுல்சூழபபெற்று அக்னிபகவானுறை கொடுக்கபபட்டதும் ஆச் சரியமாகச் செல்வதுமாகிய திவ்யரதத்திலேறிச் சென்றான். அவ் வாறே பீமஸேனனும் புருஷசரேஷ்டர்களான நகுலஸஹதேவர்களும் தர்மராஜரால் கௌரவிக்கபபெறறுச சேனைகளுடன்சென்றனர். ஜன மேஜயரே! குபேரனுகுஇஷ்டமான வடதிசையை அர்ஜுனனும் கீழ்ததிசையைய பீமஸேனனும தென்திசையை ஸஹதேவனும் மேற் றிசையை அஸ்தரங்களையறிநத நகுலனும ஜயிததனர். பிரபுவான தர்மராஜர் நண்பாகளின்கூடடங்களினுல சூழபபெற்றுச சிறநதஜீசு வரியததோடு காண்டவபரஸ்ததின் நடுவில இருநதார்.

இருபத்தேழாவது அத்தியாயம்.

திக்விஜயபர்வம். (தொடர்ச்சி.)

(திக்விஜயத்தைப்பற்றி விரிவாகச்சொல்லும்படி ஜனமேஜயர்கேடக, வைசம்பாயனர் முதலில் அர்ஜுனன்வடதிசையை ஜயித்ததைச் சொல்லத்தொடங்கிய பகதத்த ஜயம்வரையிற்சொல்லியது.)

ஜனமேஜயர், "பிராம்மணரே! திக்விஜயத்தைபபற்றி விரிவாகச் சொல்லக்கடவீர் என் முன்னோர்களின் சிலாக்கியமான சரித் திரத்தைக கேட்பதில் என்விருபபந தீரவில்லை" என்றுகேட்க, வை சம்பாயனர் கூறுகின்றார்

"தனஞ்சயனுடைய ஜயத்தை உமக்கு முதலிற்சொல்வேன். பாண்டவர்களால் ஒரேகாலத்திலன்றே இபபுவனி ஜயிக்கபபட்டது.

[1] ஜயகரமான வேதமநதிரங்களை ஜபித்தல்.

பெரியமனமுள்ளவரும் குருகிபுத்திரரும ராஜாவுமானயுதிஷ்டிரர் அர்த்தராஜ்யத்தையடைந்தபிறகு மஹாராஜாவென்னும் பெயரையடைவதில் எண்ணங்கொண்டார். அப்போது பூமியைஆண்டுகொண்டிருந்த க்ஷத்திரியர்கள இவர் பூமியைஜயிக்க இருபபதையறிந்து எதிர்த்துவநதனர். ராஜாவே! பூமியிலுள்ள அநத க்ஷத்திரியர்கள எவரும அர்ஜுனனைப பயன்படாமறசெய்வதற்காக ஒன்றுசேர்ந்து ரதகஜதுரகபதாதிகளுடன் தர்மராஜாவை எதிர்த்துசென்றனர். சிறநதகைகளையுடையவனும் இநதிரபுத்திரனுமான அர்ஜுனன் யுத்தஞ்செய்யககருதின அநத அரசர்களைப பெரும்போரில் தன் பராக்ரமத்தினல் எதிர்த்தான் புஜபலத்தையுடைய அர்ஜுனனல் தோற்கசெய்யபபட்ட அவரசர்கூட்டம் காற்றினலடிக்கப்பட்ட மேகக்கூட்டமபோல நாற்றிசைகளிலும பஞ்சாய்பபறநதது. எதிரிகளானவீரர்களை வதஞ்செய்கிறவனுன அர்ஜுனன் அநதக்ஷத்திரியர்களை யுத்தத்தில்வென்றபிறகு வடதிசையை வசபபடுத்தச்சென்றான். சிறநதகைகளையுடைய அர்ஜுனன் முதலில [1]சுவலிங்கதேசத்தரசனை எளிதாகவே வசபபடுத்தினன். அவனுடன்சேநாதே அர்ஜுனன் ஸால்வதேசநகரத்துகுச சென்றான். சிறந்தமனமுள்ள அநதததனஞ்சயன் ஸால்வநகரத்தைசேர்ந்து தனதுபராக்ரமத்தினல ஸால்வதேசத்தரசனுகிய உக்ரதன்வனென்பவனை வசபபடுத்தினன். வீரனான அர்ஜுனன் த்யுமதஸேனனென்னும் அநத அரசனை ஜயிததது உடனே அவனைத தனது படைததலைவனுகச் செய்துகொண்டு கடதேசதுக்குச்சென்றான். குருகிபுத்திரனை அர்ஜுனன் அநதத்தேசத்தரசனுகிய ஸுநாபனைப பராகரமத்தினல் யுத்ததில்வசபபடுத்தி இரண்டாவது ஸேனாதிபதியாகச செய்தான். இராஜாவே! பகைவரைபபீடிபபவனுகிய ஸவ்யஸாசியானவன் அவனுடன்கூடவே சாகலத்வீபத்தில் பிரதிவிந்தியனென்னும அரசனை ஜயித்தான். சாகலத்வீபத்தவர்களும ஸபதத்வீபத்தவாகளுமான அரசர்களுக்கு அர்ஜுனன்சேனைகளோடு பெரும்போர்உண்டாயிற்று. அர்ஜுனன் தர்மராஜாவுடைய இஷ்டத்தை நிறைவேற்றுவதறகாக அவர்களனைவரையும் ஜயித்து அவர்களுடன்சேர்ந்தே பராகஜ்யோதிஷமென்னும நகரத்துக்குச்சென்றான். இராஜாவே! அநதநகரத்தில பகததனென்னும் மஹாராஜனிருநதான். மஹாத்மாவான அர்ஜுனனுக்கு அவனுடன் மிகப பெரியபோர் நேர்ந்தது. அநத பராக்ஜ்யோதிஷராஜன் கிராதர்களும சீனர்களும கடலிலுள்ளதீவுகளில்வஸிக்கும மற்றுமுள்ள

[1] 'குளிந்ததேசம்' என்பது உத்தரதேசபாடம்.

அனேகயுத்தவீரர்களாலும் சூழப்பட்டிருந்தான். அவ்வரசன் எட்டு நாள்யுத்தஞ்செய்தபிறகு யுத்தத்தில் சோர்வில்லாததனஞ்சயனோக்கி நகைத்துக்கொண்டு பேசலானன். "சிறந்தகைகளையுடைய கௌரவபுத்திரனே! தேவேந்திரனுடையருமாரனும் 'யுதத்தில்பிரகாசிபவனுமாகிய உனக்கு இருதச்சூரத்தனம் தகும். நண்பனே! நான் மஹேந்திரனுக்குச சினேகிதன். யுத்தத்தில் இந்திரனுக்குத்தாழாதவன். ஆகிலும், யுத்தத்தில உனக்கெதிர்நிறக என்னல்முடியாது. பாண்டவனே! உனக்கு எந்தவிருபத்தை நான்செய்யக்கடவேன்; சொல். சிறந்தகைகளையுடைய [1]புத்திரனே! நீ, எதைசசொல்வையோ அதைச்செய்வேன்" என்றுசொன்னனர். அதற்கு அர்ஜுனன், கௌரவர்களிற்சிறந்தவரும் தர்மதேவதையின்புத்ரரும தர்மநெறிந்தவரும ஸத்தியஸந்தருமான யுதிஷ்டிரனென்னுமராஜா மிகுதியாகத் தக்ஷிணைகள்கொடுத்துச் சாஸ்திரபபடி யாகஞசெய்கிறார். அவர் பூமிக்கு அரசராயிருப்பதை விரும்புகிறேன். அவருக்குக் கபபங்கொடுக்க வேண்டும். நீர் எனதுபிதாவான தேவேந்திரனுகுச் சினேகிதர்; என்னிடத்திலும அன்புள்ளவராயிருகிறீர். ஆதலால், உம்மை நான் கட்டளையிடுவதில்லை. பிரீதியைமுன்னிடடுக் கொடுக்கவேண்டும்" என்றுசொன்னன். பகதத்தன் "குந்தியின்மைநதனே! எனக்கு நீளபபடியோ அபபடிததான் ராஜாவானயுதிஷ்டிரரும; நீசொன்னதையெல்லாம் செய்வேன்; உனககு மறறுமென்னசெய்யக்கடவேன்?" என்றான்.

இருபத்தெட்டாவ்து அத்தியாயம்.

திக்விஜயபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் வடதிசையில் சீவேதபர்வதம்வரையில் ஜயித்தது.)

இவ்வாறுசொல்லப்பட்டதனஞ்சயன் பகதத்தனைபபார்த்து, "நீர் இதனை அங்கீகரித்ததினாலேயே எல்லாம்செய்ததாகும" என்று மறுமொழிசொன்னன். சிறந்தகைகளையுடையவனும் குந்திபுத்திரனுமானதனஞ்சயன் பகதத்தனைஜயித்தபிறகு அங்கிருந்து குபேரனாலளிப்பட்ட வடதிசைக்குச்சென்றான். புருஷச்ரேஷ்டனான அர்ஜுனன் அந்தர்கிரி பஹிர்கிரி உபகிரியென்னும் மலைநாடுகளை ஜயித்தான். ஜனமேஜயராஜாவே! மலைநாடுகளெல்லாவற்றையுமஜயித்து அவற்றி

---

1 சினேகிதனுடைய புத்திரனதல்பற்றி 'புத்திரனே!' என்றான்.

ளுள்ள அரசர்களேஉட்படுத்தி நிலேநிறுத்தி மிகுதியான தனங்களேப் பெற்றுக்கொண்டு அவர்களுக்குவிருப்பமுண்டாக்கி அவர்களேவ சோடுஞ்சேர்ந்து சிறந்தபேரிகைகளின்முழக்கத்தினுலும் தேருருளே களின்கோஷத்தினுலும யானேகளின்கர்ஜனேயினுலும் பூமியெல்லாம் நடுங்கச் செய்துகொண்டு [1]உலூகதேசத்தில் வஸிக்கும் பிருஹந்த னிடஞ்சென்றான். அபபோது பிருஹந்தன் சதுரங்கதளத்தோடு தன நகரத்திலிருந்து விரைவாகபுறப்பட்டு அர்ஜுனனுடன்போர்செய் தான். தனஞ்சயனுக்கும பிருஹந்தனுக்கும் பெரியயுத்தம்நடந்தது ப்ருஹந்தன் அர்ஜுனனுடையபிரதாபததைத் தாங்கமாட்டாமற் போனுன். வெலலமுடியாத மலேயரசனன பருஹந்தன் அர்ஜுன னேத்தாங்குவது மிககடினமென்றுநிஜைத்து ரத்னங்களெல்லாவற் றையுமெடுத்துக்கொண்டு அர்ஜுனனிடம்வநதான். ஜனமேஜய ராஜாவே! அர்ஜுனன் அவனுக்கு ராஜ்யத்தைநிலேக்கச்செய்து அவ னுடன்சேர்ந்து ஸேனேபிருதுவென்னுமஅரசனே விரைவில் ராஜ்யத்தை விட்டுவிலக்கினன். அர்ஜுனன் அநதஸேனேபிருதுவின்ராஜ்யத்திலிரு ந்துகொண்டே மோதாபுரம, வாமதேவம, ஸுதாமம, ஸுஸங்குலம, உலூகதேசத்தின்வடபாகங்கள் இவைகளிலுள்ள அரசர்களேத் தர்ம ராஜர்கட்டளேயிடுவதாகத் தூதர்களேயனுப்பி வருவித்தான். ராஜா வே! அதன்பிறகு கிரீடி பஞ்சகணமென்னும்தேசததைஜயித்தான். பிரபுவான அர்ஜுனன ஸேனேபிருதுவின்நகரத்தினருகிலுள்ள தேவ ப்ரஸ்தநகரத்தையடைந்து சதுரங்கதளத்தோடு அங்கேவாஸஞ்செய் தான். புருஷச்ரேஷ்டரே! சிறநதசக்திமானுனஅர்ஜுனன் அவ்வர சர்களேவாலும சூழபபெற்றுப பூருவமசததவனுகிய விஷ்வகசேவ னென்னுமஅரசனே எதிர்த்தான். இராஜாவே! சூரர்களும் மஹாரதர் களுமான மலேயரசர்களேப்போரில்வென்றபிறகு விஷ்வகசவனுல்ஆளப பட்டநகரத்தை ஸேனேயினுலேயேஜயித்தான். அர்ஜுனன் பௌரவ னுனவிஷ்வகசேவனேஜயிததபின் மலேநாடுகளில்வஸிக்கும் கொள்ளேக் காரர்களாகிய உத்ஸவஸங்கேதரென்னும ஏழுகூட்டத்தாரைஜயித் தான். அதன்பிறகு க்ஷத்ரியச்ரேஷ்டனுன அர்ஜுனன் வீரர்களான காச்மீரதேசத்தரசர்களேயும் சிற்றரசர்கள்பதின்மருடன்கூடிய லோ ஹிதனென்னும்அரசனேயும் ஜயித்தான். ராஜாவே! அதன்பிறகு கிரி கர்த்தர், தார்வர், கோகநதர், என்னும்பலதேசத்துக்ஷத்ரியர்களெல் லோரும் அர்ஜுனனிடம் வந்துசேர்ந்தனர். அதன்பிறகு அர்ஜு னன் 'அவிஸாரியென்னும் அழ்கானபட்டணத்தைஜயித்தான். உரகா

[1] உலூகதேசமென்று, சிலபிரதிகளில்காணப்படுகிறது.

புரியில்வஸிக்கும் ரோசமானனென்பவனையும் யுத்தத்தில்ஜயித்தான். அதன்பிறகு அவன் பலவகைஆயுதங்களினல் நன்முகக்காக்கப்பட்ட அழகானஸிம்மபுரத்தைத தன்பராக்ரமத்தினல் யுத்தத்தில்பீடித்தான். பாண்டவச்ரேஷ்டனும கௌரவர்களைவிருத்திசெய்பவனுமாகிய அர்ஜுனன் பிறகு எல்லாச்சேனைகளோடுங்கூட ஸுஹ்ம தேசத்தையும் [1]சோளதேசத்தையும்ஜயித்தான். சிறந்தபராக்ரமசாலியும் இந்திரபுத்திரனுமான அர்ஜுனன் அணுகமுடியாதபாஹ்லீக தேசத்தைப் பெரியயுத்தத்தினல் பின்பு வசப்படுத்தினன். இந்திரபுத்திரனும் பாண்டவனுமான பல்குனன் முக்கியமானசேனையை யழைத்துக்கொண்டு தரததேசத்தாரையும் காம்போஜதேசத்தாரையும் ஜயித்தான். வடகிழக்குத்திசையைச்சார்ந்திருபபவரும் காட்டில் வஸிப்பவருமான [2]தஸ்யுக்களைவரையும் ஸமர்த்தனனர்ஜுனன் வென்றான். மஹாராஜாவே! லோஹர்களும பாமகாமபோஜர்களும் ரிஷிகர்களும் உத்தரர்களும் ஒன்றுசேர்ந்துவர, அவர்களையும் அர்ஜுனன்ஜயித்தான். ரிஷிகதேசத்தில் ரிஷிகர்களுக்கும் அர்ஜுனனுக்கும்நடந்தசண்டை தாரகாமயமென்னும தேவாஸுரயுத்தமபோல் மிகப்பயங்கரமாயிருந்தது. ராஜாவே! அந்த அர்ஜுனன் போர்முனையில் ரிஷிகர்களைவென்று அங்கே அவர்களிடமிருந்து கிளிவயிற்றுக்குச்சமானமான (நிறமுள்ள) எட்டுக்குதிரைகளைக்கொண்டுவந்தான். மயில்வர்ணமுள்ளவைசிலவும் அவற்றிற்கு மேலானவைசிலவுமான, வேகமாகவும் சோராமலும் ஓடத்தக்க குதிரைகளைக் கப்பமாகக் கொண்டுவந்தான். புருஷச்ரேஷ்டனான அர்ஜுனன் இமயமலையையும் நிஷ்குடமலையையும் யுத்தத்தில்ஜயித்துச் சுவேதபர்வதத்தையடைந்து அதில்வாஸஞ்செய்தான்.

இருபத்தோன்பதாவது அத்தியாயம்.

தி க் வி ஜ ய ப ர் வ ம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் திக்விஜயத்தைமுடித்துக்கொண்டு இந்திர ப்ரஸ்தம்வந்து சேர்ந்தது.)

பாண்டவச்ரேஷ்டனும் சிறந்தசக்தியுள்ளவனுமான அர்ஜுனன் சுவேதபர்வதத்தைத்தாண்டி த்ருமனென்னுங்கிம்புருஷனுடைய புத்திரனல் காக்கப்பட்டதும் கிம்புருஷர்களென்னும் தேவஜாதியா

---

1 இந்தப்பெயருடையதேசமொன்று வடக்கேயிருந்திருக்கவேண்டும்.

2 கொள்ளைக்காரர்கள்.

ருக்கு இருபிடமுமாகிய தேசத்தை க்ஷத்திரியர்களை முடிக்கும் பெரியயுத்தத்தினுல ஜயித்து அந்தத்தருமபுத்திரனைக் கப்பங்கட்டச் செய்தான். அவனை ஜயித்தபிறகு இந்திரபுத்திரனை அர்ஜுனன் யக்ஷர்களாலரக்ஷிக்கப்பட்ட ஹாடகமென்னுமதேசத்தைச சேர்ந்தயுடன் அச்சமின்றி அடைந்தான். கௌரவசரேஷ்டனை அர்ஜுனன் அந்த ஹாடகதேசத்தாரைப போர்செய்யாமலேவசபடுத்தி மானஸ ஸரோவரத்தையும ரிஷிகுல்யைகளென்றுசொல்லபடட கால்வாய்க ளெல்லாவற்றையும கண்டான். ஸமர்த்தனை அர்ஜுனன் மானஸ ஸரோவரத்தையடைந்தபிறகு ஹாடகதேசத்தின்ஸமீபத்தில் கந்தர் வர்களால் ரக்ஷிக்கப்படட தேசத்தை ஜயித்தான். அபபோது அந்தக் கந்தர்வநகரத்தில் திதிதிரிபக்ஷிகள்போலச சித்திரவர்ணமுள்ளவை யும் மண்டூகங்களென்று பெயருள்ளவையுமான உத்தமமானகுதிரை களையெல்லாம கபபமாகபபெற்றான். அதன்பிறகு பல்குனன் மேரும கூடமலையைபடைந்து அதில்வாஸஞ்செய்தான். ராஜசரேஷ்டரான ஜனமேஜயரே! பெருஞசேனையினுற் சூழபபட்டவனான அவன் அந்த மேரும கூடமலையைததாண்டி ஹரிவர்ஷமென்னும் கண்டத்தில் பிரவே சித்தான். அங்கே இவ்வுலகதிலெல்லாம அழகான அனேகநகரங் களையும் வனங்களையும் தெளிந்தஜலமுள்ளநதிகளையும தேவர்களைப போன்ற புருஷர்களையும் பார்பபதறகினிய பெண்களையும் கண்டான். தனஞ்சயன் அவர்களெல்லாரையுமகண்டு களிதது அவர்களை வசப படுத்திக்கொண்டான். மிக்கஅதிகமான ரத்னங்களையும பெற்றுக்கொ ண்டான். ஸமர்த்தனை அவன் அநகிருதம நிஷதமென்னுமமலைக் குசசென்று அமமலையிலுள்ளோர்களை ஜயித்தான். ராஜாவே! அர்ஜு னன் அதன்பிறகு நிஷதமென்னும பெரியமலையைத்தாண்டித் தேவ பூமியாகிய இலாவருதமென்னும நடுக்கண்டத்தில் பிரவேசித்தான். அந்தத்தனஞ்சயன் அவ்விடத்தில் தேவர்களைபபோன்றவரும பூமி யில்நிகரற்றவரும இதற்குமுன் காணபபடாதவரும் அழகுள்ளவரு மான சிறநதமனிதரையும் வெண்மையானவீடுகளையும் அபஸரஸ்கை ளுக்கொபபான பெண்களையும் கண்டான். அழகான அவர்களைக்கண்டு வசபபடுத்தினான். அவன் அவர்களாலும் பார்க்கபபெற்றான். ராஜச் சரேஷ்டரே! சிறநதபாக்யமுள்ள அர்ஜுனன் அவர்களைவசபபடுத்திக் கபபங்கட்டவித்து உயர்ந்தஇரத்தினங்களையுமஆபரணங்களையும் ஆஸ னங்களையும் பெற்றுக்கொண்டு ஸமீதாஷத்துடன் அங்கிருநது வட க்கே சென்றான். அங்கே மலைகளுட்சிறந்த மேருமலையைக்கண்டான். பொன்மயமான தும் நான்குநிறங்களுடையதும் (மனிதர்) அணுகமுடி

யாததும் லக்ஷ்மியோஜனை உயரமுள்ளதும் பூமியில்ஆழ்ந்திருப்பதும் ஒளிகளின்கூட்டமாக ஜ்வலிப்பதும் மிகச்சிறந்ததும பொன்மயமாகப பிரகாசிக்கின்ற கொடுமுடிகளினல் ஸூர்யன் ஒளியைவிலக்குவதும் பொன்ஆபரணங்கள்நிரம்பினதும ஸ்வர்கத்திலுள்ள தேவர்களாலும் கந்தர்வர்களாலும் ஆசரயிக்கபபட்டதும அளவிடக்கூடாததும் புண்ணியமிகுதியிலலாதஜனங்களால் அடையமுடியாததும் கொடியஸர்பங்கள் ஸஞ்சரிபபதும உயர்ந்தஔஷதிகள் விளங்குவதும் உயரதினல் ஸ்வர்க்கத்தைமறைத்துநிற்பதும மனதினலும் மற்றவாகள் செல்லக்கூடாததும நதிகளும் செடிகளுமநிரமபினதும மிக்க அழகான பலபறவைக்கூடடங்கள் கூவுவதுமான அந்தமேருமலையைக் கண்டு அர்ஜுனன் மகிழ்வுற்றான். தேவபூமியான இலாவருதகண்டம் மேருவினல் எங்கும் அலங்கரிக்கபபடடிருந்தது. மேருவின் தென்பக்கத்தில் எந்தக்காலத்திலும பூக்களும கனிகளும்நிரமபினதும் ஸித்தர்கள் சாரணர்களென்னுமதேவாகளால் நெருங்கபபடடதுமான நாவல் மரமிருக்கிறது. ராஜாவே! அம்மரதத்தின்கிளைகள் ஸ்வர்க்கம்வரையில் மேலே வியாபித்திருக்கின்றன. அதன்பெயரைவைத்துத்தான் இநதக்கண்டத்தை [1]ஜமபூகவீபமென்பர். சூரனனஸவ்யஸாசி அந்த ஜம்பூமரத்தைக்கண்டான். ராஜாவே! அவன் இவ்வுலகதத்தில் நிகரில்லாமலிருந்த அந்தஜமபுமரத்தையுமமேருமலையையும சுற்றிலும் பார்த்து மகிழ்ந்தான். அபபோது அர்ஜுனன் அங்குளள ஸித்தர் சாரணராகிய தேவர்களாலளிகபபடட அனேகமாயிரமரத்னங்களையும் ஆபரணங்களையும் பெறறுக்கொண்டான். அர்ஜுனன் அங்கே அதிகவிலபெறற வஸ்திரங்களையும்பெறறுக்கொண்டு தன்ஜ்யேஷ்டராகிய தர்மராஜாவின்யாகததுகாக அனேகஇரத்தினங்களையும வாங்கிக்கொண்டு அவர்களிடம் விடைபெற்றுச செல்லத்தொடங்கினன். ஸமர்த்தனனஅவன் சிறநதமலையாகியமேருவைப் பிரதக்ஷிணஞ்செய்து நதிகளிறசிறநத ஜம்பூநதியைபபார்ததுக்கொண்டு அதன்கரை வழியாகசசென்றான். ராஜச்ரேஷ்டரே! மதுரமானகாவற்பழசசாறு பிரவாகமாகஓடுவதும் பொன்மயமானபறவைக்கூட்டங்களாலடையபபட்டதும் பொற்றாமரைகளும் பொன்னிறமானசேறும் பொன்னிற மானஜலமும் மணலுமுள்ளதும் சிலவிடங்களில்மலர்ந்தபொன்மய மானநெய்தல்கள்நிரம்பினதும சிலவிடங்களில்பொன்மயமானபுஷ்பங்களினப்புஷ்பித்தமரங்கள் கரைகளில்நிரம்பினதும் பொற்படிகளோடு கூடியதுறைகளினல்சூழ்ந்தும்அலங்கரிக்கபபட்டதும் குற்றமற்றதனக்

1 நாவல்.

குவியல்களுள்ளதும் வாத்தியங்கள்பாட்டுக்களின் முழக்கங்களோடு கூடியதும பகாசிக்கின்றபொன் [1]விதானங்களினால் எல்லாவிடங்களிலும்சோபிப்பதும் அதற்குமுன்காணப்படாததுமான அந்தசிறந்த ருதியைக்கண்டு புகழ்ந்தான் அந்தருதியின்ஜலத்தைஉட்கொள்வதனால மிக்கஅழகானவர்களும எப்போதும ஸுகமும்ஸுதோஷமும் முள்ளவர்களும எல்லாஅலங்காரங்களாலுமசோபிப்பவர்களும தேவருக்குஒப்பானவர்களுமான மனிதர்கள் ஸம்ஸாரங்களுடன் அந்தருதிக்கரையிலிருக்கக்கண்டு மனங்களிதான். தனஞ்சயன் அவர்களிடத்தில் அனேகஇரதினங்களையும பொன்மயமானநாவற்பழங்களையும ஆபரணங்களையும் நயமாகபபெறறுக்கொண்டான். பெறுதறகுஅரிய வையான அவற்றைபபெறறுகொண்டு அவன் மேறறிசைகுச்சென்றான். அங்கேயும்நாகாகளாலஇரக்ஷிக்கபபட்ட தேசத்தை ஜயித்தான்.

ஜனமேஜயமஹாராஜாவே! ஸமாத்தஞனஅர்ஜுனன் அங்கிருந்து மேறகேசென்று கந்தபாதனமலையைசேர்ந்து, அங்குள்ளவர்களைஜயித்தான். ராஜாவே! அந்தக்கந்தமாதனத்தைதாண்டின பிறகு அவன் ரதனங்களுள்ளதும,பார்பபதறகுஇனியவர்களும்தேவர்களுகொபபானவாகளுமாகஸ்திரீபுருஷர்கள்வஸிபபதுமான கேதுமாலமென்னுமகண்டதைக்கண்டான். ராஜாவே! லயஸாசியான தனஞ்சயன் அதைஜயிததுக் கபபங்கபடடசெய்து அங்குள்ளஅருமையானரத்தினங்களைக்காணிகையாகவாங்கிக்கொண்டு மறுபடியும் மத்தியதேசமாகிய இலாவருதத்திறகுதிருமபிவந்து அங்கிருந்து கிழக்கேசென்று மேருமலைகுமம் மந்தரமலைக்கும்இடையில் சைலோதையென்னும் ஆற்றின்இருபுறங்களிலும மூங்கிலகளின்சுகமான நிழலைஅடுதிருபபவராகிய கஷா, ஜஷர், நத்தியேதர், பரகஸர், தீப்தவேணிபர், பசுபா, குலிந்தர், தங்கணர், பரதங்கணரென்னும்ஜாதியாரனைவரையும்ஜயித்துக் கபபங்கட்டச்செய்து அவரெல்லாரிடதிலுமிருந்து ரதனங்களைப்பெற்றுக்கொண்டு அங்கிருந்து மால்யவானென்னும்மலைக்குச்சென்றான். அர்ஜுனன் அந்தமால்யவானென்னும்பெரியமலையைத்தாண்டிப பரிசுத்தமும தேவலோகம்போன்றதுமான பத்ராச்வமென்னும் கண்டத்தில் பிரவேசித்தான். அவவிடததில் சிறப்புற்றவர்களும் தேவர்களைப்போன்றவர்களுமான புருஷச்ரேஷ்டர்களைஜயிதது உட்படுத்திக் கப்பங்கட்டசெய்து ஆங்காங்குள்ள எண்ணிறநதரத்தினங்களை அவரவர்களிடமிருந்து காணிக்கையாகவாங்கிக்

[1] மேற்கட்டி.

கொண்டு பிறகு நீலமென் னும்மலைக்குச்சென்று அங்குள்ளவரைஜயித் தான். பிறகு அர்ஜுனன் பெரியதாகியநீலமலையைத்தாண்டி அழகிய ஆண்பெண்களதிரமபியிருக்கும் ரமயகமென்னும கண்டத்தில்பிரவே சித்தான். அதஅர்ஜுனன் அந்தததேசதத்தைஜயித்துக் கப்பங் கொடுக்கச்செய்து குஹ்யகர்களாலரக்ஷிக்கபபட்ட தேசத்தையும் ஜயித்தான் அரசர்க்கரசே! மஹாபலசாலியான அர்ஜுனன் அந்தத் தேசத்தில ராஜஸூயயாகததின்சிறபபுக்காக மனத்தைககவரத்தக்க அழகானபொன்மான்களையும் பொற்பறவைகளையும இன்னும்அனேக ரத்னங்களையும் காணிக்கையாகவாங்கிக்கொண்டான். அதன்பிறகு கந்தர்வர்களாலரக்ஷிக்கபபட்ட தேசத்தையும அதிலுள்ளகந்தர்வக் கூட்டத்தையும ஜயிததான். ராஜாவே! அதன்பிறகு அர்ஜுனன் அங்குள்ளஉயாந்ததாதினங்களைபபெற்றுக்கொண்டு உடனே ஹிரண் வதமென்னும்கண்டததில் பரவேசித்தான். ராஜாவே! அவன் அந்த அழகானஇட்ங்களில நக்ஷத்திரங்களின்நடுவில சந்திரன்பிரகாசிபபது போல மானிகைவரிசைகளுக்கிடையே ஸஞ்சரிக்கததொடங்கினன். அரசர்கசரே! அங்கே பராக்ரமததினுண்டான சிறநதஅழகோடும புகழோடும , ராஜமார்க்கங்களெங்கும்மஞ்சரிக்கும்அவனே உயர்ந்த மாளிகைகளின் மேற்கட்டுகளிலிருந்த மங்கையர்களனைவரும் கண்ட னர். இரதத்திலேறித் தூணிகளைததாங்கிக கவசகிரீடங்களையணிந்து கையும்வில்லுமாக யுதஜன்ஞகத்தோடிருப்பவனும் விருதகளுள்ள வனும் மிருதுசரீரமுள்ளவனும மிகுந்தபலசாலியும சக்திகளெல் லாமசேர்ந்தவனும எதிரிகளை ஹதஞசெய்பவனும் எதிரிகளுடைய யானைகளைத்தடுபபவனும தனக்குயர்வறறவனும இந்திரனுக்கொப பானவனுமான அந்தஅர்ஜுனனைக்கண்ட அங்குள்ளபெண்கூட்ட ங்கள் 'வேலாயுதத்தையுடையமுருகக்கடவுளோ' எனநினைத்தன. 'யுத்தத்திலவியக்கததக்க பராக்ரமமுள்ள அந்தபபுருஷபபுலி இவன் தான். இவன்கைவண்மையிலகபபட்ட பகைவர்கூட்டங்கள் நிற்ப தில்லை' என்றசொறகளைச்சொலலிக்கொண்டு அந்தபபெண்கள் அன் புடன் தனஞசயனைத்துதித்து அவன்சிரஸில் பூமாரிபொழிந்தனர். அங்குள்ளவர்களனைவரும் அவனை விருபபதுடன்பார்த்து அவன் மேல் இரத்தினங்களையும பூஷணங்களையும வருஷித்தனர். அர்ஜு னன் அவர்களையெல்லாமஜயித்துக் கப்பங்கொடுக்கச்செய்து முத்து, பொன், பவழம, ஆயுதம், ஆபரணம்முதலியவற்றை அவர்களிடம் பெற்றுக்கொண்டு, சிருங்கவானென னும்மலைக்குச்சென்றான். மஹாத் மாவும் கௌரவனும் பாண்டவனுமாகிய பல்குனன் சிருங்கவானென்

னும்மலையையும்கடந்து அதற்குவடக்கிலுள்ள ஹரிவர்ஷமென்னும் கண்டத்தையடைந்து அங்குள்ள வித்யாதரர்களின்கூட்டங்களையும் யக்ஷராக்ஷஸர்களையும்ஜயித்து எல்லாவற்றிலும்சிறந்த ,திவ்யவஸ்திரங் களையும் கல்பகவிருக்ஷங்களின் இலைகளையும் யாகத்திற்குரிய பலவகை யான உயர்ந்தகிருஷ்ணஜினங்களையும பெறறுக்கொண்டான். இந்திர புத்திரனனஅர்ஜுனன் ஹரிவர்ஷமென்னுமகண்டத்தின்வடபாகத் திறசென்று அந்தத்தேசத்தைஜயிக்கவிரும்பினன். அங்கே பெரிய தேகமும் மிகுந்தவன்மையுமுள்ள துவாரபாலகர்கள் மஹாவீரனன அர்ஜுனனைவரதுகண்டு, “அர்ஜுனஞ! இந்தநகரத்தை நீவவ்வகை யிலும்ஜயிக்கமுடியாது. நலலவனே! திரும்பிசசெல. தேரல்லியடை யாதவனே! இதுவரையிறபோதும. இந்தபபட்டணத்தில் எந்தமனி தன்பிரவேசிபபஜை அவன் இருக்கமாட்டான். வீரனே! உன்னிடத தில் நாங்கள அன்புள்ளவராயிருக்கிறோம. நீஜயிததுபோதும். அர் ஜுனஞ! இந்தஇடத்தில் நீஜயிகக்கூடியதுஒன்றும் காணபபடவில்லை. இம்மஹத்தரகுருக்ஷேத்திரம். இவ்விடதத்தில் யுத்தம்நடவாது. குந்தி புத்ரா! நீ இங்கேபிரவேசித்தாலும ஒன்றையும்காணமாட்டாய். மானிடதேஹத்தோடு இங்கே எதையும்பார்ககமுடியாது. புருஷ ச்ரேஷ்டனே! அல்லது இவ்விடதத்தில் உனக்கு வேறுகார்யமஏதாவது ஆகவேண்டியிருந்தால் அதைச்சொல். பாரதனே! உன்சொல்லின் படி நாங்கள்செய்வோம்” என்றுசொன்னார்கள். ராஜாவே? பிறகு அர்ஜுனன் கைகளைக்கொண்டு அவர்களைபபார்த்து, “சிறந்தஅறி வுள்ளதர்மராஜாவைப் பூமிமுழுவதுக்கும அரசராகச்செய்யவிரும்பு கிறேன். மானிடர்கள் பிரவேசிப்பதுவிரோதமாயிருந்தால் உங்கள் தேசத்தில் நான்பிரவேசியேன். யுதிஷ்டிரருக்கு ஏதாவது ஒருதிரவிய த்தைக்கபபமாகக்கொடுங்கள. இல்லாவிட்டால் கிருஷ்ணனுடன்சேர் ந்து பாண்டவர்களுக்குசெய்வேன்” என்றுசொன்னான். அதன்பிறகு அவர் கள் திவ்யவஸ்திரங்களையும் திவ்யாபரணங்களையும தேவர்க்குரியபட் டுக்களையும தோல்களையும் அவனுக்குக் கப்பமாகக்கொடுத்தனர். அந்தப்புருஷச்ரேஷ்டனன அர்ஜுனன் இவ்வாறு க்ஷத்திரியர்களோ டும் கொள்ளைக்காரர்களோடும் அனேகயுத்தங்கள்செய்து அவர்களெ ல்லாரையும்ஜயித்துக் கப்பமகட்டுமபடிசெய்து வடதிசைமுழுமை யும் வசப்படுத்தி எல்லாரிடத்திலும் தனங்களையும் பலவகைரத்தினங் களையும் சிட்டுக்குருவிபோலச சித்திரவர்ணமும் கிளியிறகுநிறமும் மயில்நிறமுமுள்ளவையும் காற்றுக்குசசமானமான வேகமுள்ளவையு மான பலவகைக்குதிரைகளையும் வாங்கிக்கொண்டு பெரியசதுரங்க

சேனையுடன் இந்திரப்ரஸ்தநகரத்துக்குத் திரும்பிவந்தான். அவன் அந்தவாஹனங்கள் தனங்கள் ஆபீத்தையும் தர்மராஜாவுக்குஒப்பு வித்தான். அவரிடம் விடைபெற்றுக்கொண்டு தன்கிருஹத்திற்குச் சென்றான்.

முப்பதாவது அத்தியாயம்.

திக்விஜயபர்வம். (தொடர்ச்சி.)

(பீமஸேனன் திக்விஜயத்தில் சேதிதேசத்தைஜயித்தது.)

பலமும்பராக்ரமமுமுள்ளவனும எதிரிகளைநடுக்குத துயரதை விளைவிப்பவனும பாதசரேஷ்டனுமான பீமஸேனனும அர்ஜுனன் புறப்பட்டபோதே தர்மராஜரிடமவிடைபெறாறுகொண்டு அயல்தேசங் களையழிப்பதும ஆனைகள், குதிரைகள், தேர்கள்நிரம்பினதும கவசங் களைத் தரித்ததுமாகிய பெருஞசேனைக்கூட்டத்தினுற சூழப்பெற்றுக் கீழ்த்திசையை நோக்கிச்சென்றான். புருஷச்ரேஷ்டனுகிய அந்தப பீமன் பாஞ்சாலதேசத்தின் முதன்மையானஇராஜதானிக்குச்சென்று பாஞ்சாலராஜர்களைப பலவகையான உபாயங்களினுல் ஸமாதானஞ் செய்து அவர்களிடத்தில் ஒருகப்பத்தைவாங்கிக்கொண்டு விதேக தேசத்தின்ராஜதானிக்குச்சென்றான். சூரனும ஸமர்த்தனும் பரத ச்ரேஷ்டனுமான அந்தப்பீமன் கண்டகர்களென்னும் விதேகதேசத் தாரைஜயித்து, உடனே தசாணதேசத்தைஜயித்தான். அங்கே ஸுதர்மாவென்னும தசார்ணதேசத்தரசன் பீமஸேனனுடன் ஆயு தங்களில்லாமல் பயங்கரமான பெருஞசண்டைசெய்தான். மஹாத்மா வானஸுதர்மாவின் அந்தச்செய்கையைக்கண்டு பீமஸேனன் மஹா பலசாலியானஅவனைத் தன்துமுதன்மையானஸேனபதியாகச்செய்து கொண்டான். ராஜாவே! பயங்கரமான பராக்ரமமுள்ள பீமன் பெருஞ் சேனையினுல் பூமியைஅதிரச்செய்பவன்போல அங்கிருந்து கிழக்குத் திக்கிற்சென்றான். ராஜாவே! பலவான்களிற்சிறந்தவனும் வீரனு மான அந்தப்பீமன் ஸேனையுடன்விளங்கும் அச்வமேதேச்வரனென் னும் அரசனைப் போரில்வென்றான். குந்திபுத்திரனும் கௌரவ னும மஹாபராக்ரமசாலியுமான அந்தப்பீமன் அதிகச்ரமமில்லாமலே அவனைஜயித்து அதன்கீழ்த்தேசத்தையும் ஜயித்தான். அங்கிருந்து தெற்கே [1]புளிந்தர்களின் பெரியநகரத்திற்கு வந்து, ஸுகுமாரன்,

[1] ஒருவகை ம்லேசசஜாதியார

ஸுமித்ரனென்னும் இரண்டு அரசர்களையும் வசப்படுத்திக்கொண்டான். ஜனமேஜயரே! பரதசரேஷ்டனான பீமஸேனன் தர்மராஜாவின் ஆஜ்ஞையின்படி அங்கிருந்து மஹாபராக்ரமசாலியான சிசுபாலனை எதிர்த்துச் சென்றான். வீரரே! சேதிதேசத்தரசனான சிசுபாலனும் பீமஸேனன் ஆரம்பத்தைக்கேட்டு நகரத்திலிருந்து வெளியில்வந்து பீமஸேனனை எதிர்கொண்டழைத்தான். மஹாராஜாவே! அப்போது அந்தககௌரவராஜனும் சேதிதேசத்தரசனுங்கூடித் தங்கள் இரண்டுகுலங்களையுமபற்றிக் குசலபரசனஞ் செய்துகொண்டனர். ராஜாவே! அபபோது சேதிராஜன் தன்தேசதைதைப் பீமனிடம ஒப்பித்துப பீமனப்பாதது நகைத்துக்கொண்டே, "குற்றமற்றவனே! இதென்னசெய்கிறாய்?" என்றுகேட்டான். அப்போது பீமன் தர்மராஜா செய்யவிருமபியிருபபதை அவனுக்குசசொன்னான். அவ்வரசனும அவன்சொன்னதையங்கீகரித்து அபபடியே செய்தான். ராஜாவே! அபபோது பீமஸேனன் சேனைகளோடுமம வாஹனங்களோடும் பதின்மூன்றுராத்திரி அங்கேவஸித்து, சிசுபாலனுல மரியாதைசெய்யபபெறறுச சென்றான்.

முப்பத்தோராவது அத்தியாயம்.

திக்விஜயபர்வம். (தொடர்ச்சி.)

(பீமஸேனன் திக்விஜயம்முடித்துக்கொண்டு இந்த்ரப்ரஸ்தம் வந்து சேர்ந்தது.)

எதிரிகளையடக்குகிறவனுகிய பீமன் பிறகு அங்கிருந்து சுமார விஷயமென்னும தேசத்தரசனுன சிரேணிமானென்பவனையும கோஸலதேசாதிபதியான பிருஹதபலனென்பவனையும் ஜயித்தான். பாண்டவச்ரேஷ்டனுபீமன் தர்மநெரிநதவனும் இடைவிடாமல் யாகஞ் செய்பவனும மஹாபலசாலியுமான அநத பருஹத்பலனென்பவனை அயோதநியில எளிதில்வென்றான். அதன்பிறகு ஸமர்த்தனுபீமன் கோபாலகக்ஷனென்னுமரசனையும வடகோஸலதேதாடு சேர்ந்த கோஸலதேசத்தையும் மல்லதேசத்தரசனையும் ஜயித்தான். பலசாலியான பீமன் அதன்பிறகு இமயமலையின்பக்கம்சென்று ஜலக்கரையிலுள்ள தேசமனைத்தையும சீக்கிரத்தில் வசப்படுத்திக்கொண்டான். மிகச்சிறந்த பராக்ரமமுள்ளவனும பலவான்களிற்சிறநதவனும் பரதச்ரேஷ்டனுமான அந்தபபீமன் தன்வலிமையினால் பற்பலதேசங்களை இவ்

வாறுஜயித்துப் பல்லாடதேசத்தினருகிலுள்ள சுக்திமானென்னும் மலையையும் ஜயித்தான். சிறந்தகைகளையுடையவனும் அச்சத்தைத் தரும் பராக்ரமமுள்ளவனுமாகிய பீமன் யுத்தத்தில் புறங்காட்டாதவனுகிய ஸுபாஹுவென்னும காசிராஜாவைக் கீழ்ப்படுத்தினுன். பாண்டவச்ரேஷ்டனுன பீமன் அதன்பிறகு ஸுபார்ச்வமென்னும் மலைக்கருகில் எதிர்த்து யுத்தஞ்செய்யவந்த க்ரதனென்னும் ராஜச்ரேஷ்டனைத் தன்பலத்தினுல் யுத்தத்தில்வென்றுன். சிறந்தபராக்ரமமுள்ள அவன் பிறகு மிக்கபலமுள்ள மத்ஸ்யதேசத்தையும் மலததேசத்தையும் அநகதேசத்தையும் அபயதேசத்தையும் பசுபூமியென்னும்தேசத்தையும் முழுதுமஜயித்தான். சிறந்த கைகளையுடைய பீமன் அங்கிருந்து திரும்பி மததாரமென்னும்மலையையும் ஸோமதேயமென்னும் தேசத்தையும் ஜயித்து வடக்குநோக்கிச்சென்றுன். பலவானுனபீமன் தன்பலத்தினுல் வத்ஸதேசத்தையும்ஜயித்துப பர்ச்சதேசத்தரசனையும் நிஷாததேசத்தரசனையும மணிமான்முதலிய அனேகராஜர்களையும் ஜயிததான். அதன்பிறகு தக்ஷிணமல்லதேசத்தையும் போகவானென்னும்மலையையும் தன்பராக்ரமத்தினுல் பீமன் எளிதில் வென்றுன். புருஷச்ரேஷ்டனுனபீமன் சர்மகர்களையும் வர்மகர்களையும் ஸமாதானமாகவே வசப்படுத்தி விதேஹதேசாதிபதியான ஜனகனென்னும் அரசனை எளிதாகஜயித்தான். பாண்டுபுத்ரனும் குந்தியின்புத்ரனுமான பீமன் விதேஹதேசத்திலிருந்துகொண்டே சகர்களையும் பர்ப்பர்களையும இந்திரப்ரஸ்தத்தினருகிலுள்ள சோத ராஜாக்கள் எழுவரையும் தந்த்ரமாக ஜயித்தான். சிறந்தபலமும் பராக்ரமமுமுள்ளபீமன் அதன்பிறகு சேதிநகளோடுகூடிய ஸுமஹார்களையும் பரஸுமஹார்களையும் யுத்தத்தில்வென்று மகததேசத்தாரையெதிர்த்துச் சென்றுன். தண்டன் தண்டதாரன் முதலிய அரசர்களைஜயித்து அவர்களெலலாருடனுமசேர்ந்து கிரிவ்ரஜத்திற்குச் சென்றுன். ஜராஸந்தன்புதல்வனை ஸமாதானமாகவே கபபங்கட்டச் செய்து அவர்களெல்லாருடனுங்கூடக் கர்ணனைஎதிர்த்துச் சென்றுன். அநதப பாண்டவச்ரேஷ்டனுனபீமன் சதுரங்கதளத்தினுல் பூமியை அதிரச்செய்பவன்போலச் சென்று சத்துருக்களை ஹதஞ் செய்பவனுகிய கர்ணனுடன் போர்புரிந்தான். ஜனமேஜயரே! அநதபலவானுனபீமன் கர்ணனைப்போரில்வென்று உட்படுத்தினபிறகு மலைகளில்வஸிக்கும அரசர்களை ஜயிததான். அபபோது மோதாகிரியென்னும் மலையிலுள்ள மிக்கபலசாலியானஅரசனைப் பெரும்

போரில் தன்புஜபலத்தினால கொன்றான். அதன்பிறகு புண்ட்ரதேசத்தரசனும வீரனுமான அந்தபௌண்ட்ரக வாஸுதேவனென்னும் அரசன் கிருஷ்ணனுடையகைகளின் பயத்தினால், "நான் இபபோது யாதவவீரனை கிருஷ்ணனுடன் யுத்தஞ்செய்யேன்" என்றுசொல்லிக் கட்பங்கொடுத்தான். கௌசிகிநதிக்கரையிலிருக்கும மஹௌஜஸன் என்னும்அரசனையும சந்தித்தான். ஜனமேஜயமஹாராஜாவே! மிகுந்த ஸைனிகளையுடையவர்களும கொடியபராக்ரமமுள்ளவர்களுமாகிய அவ்விரண்டு வீரர்களையும யுத்தத்தில்ஜயித்து வங்கதேசத்தரசனிடம் சென்றான் பரதச்ரேஷ்டனான பீமன் ஸமுத்ரஸேனன் சந்த்ரஸேனனென்னும அரசாகளையும கர்வடதேசாதிபதியான தாம்ரலிபதனென்னும் அரசனையும ஸுஹ்மதேசத்து இராஜாவையும் ஜயித்துக் கடறகரைகளில்வஸிக்கும மிலேசசக்கூட்டத்தாரெல்லாரையும வென்றான். வாயுபுதரனும் பலசாலியுமானபீமன் இவ்வாறு பற்பலதேசங்களை ஜயித்தபிறகு அவர்களிடம் பொருள்களைப்பெற்றுக்கொண்டு லௌஹித்யமென்னும நதத்துக்குச் சென்றான். அவன் கடலிலுள்ளதீவுகளில் வஸிக்கும மிலேசசராஜாக்களெல்லாரையும் சந்தனம், அகில, வஸ்த்ரங்கள, ரத்தினங்கள், முத்துக்கள், சால்வைகள், பொன், வெள்ளி, பலமழம்ஆகிய விலைபெறற உயர்ந்த பொருள்களைக் காணிக்கைகளாகக் கொடுக்கசெய்தான். அவாகள் நூறுகோடிக்கணக்கான பெருமபொன்மாரியை மஹாத்மாவும் குந்திபுத்ரனுமான பீமனுக்குப பொழிந்தனர். பயங்கரமான பராக்ரமமுள்ளபீமன் இந்த்ரபிரஸ்தத்திற்கு வந்துசேர்ந்து உடனே அந்தத்தனத்தைத் தர்மராஜாவுக்கு ஒப்புவித்தான்.

முப்பத்திரண்டாவது அத்தியாயம்.

திக்விஜயபர்வம். (தொடர்ச்சி.)

(ஸஹதேவன் தக்ஷிணதிக்விஜயத்துக்குச்சென்றதும், விபீஷணர்காணிக்கைஅனுப்பியதும்.)

ஜனமேஜயராஜாவே! ஸஹதேவனும அவர்களைப்போலவே தர்மராஜாவினால் சிறபபிக்கபபெற்றபெருஞ்சேனையுடன் தென்திசைக்குச்சென்றான். ஸமர்த்தனனஸஹதேவன் சூரஸேனதேசத்தை முன்னமே முழுதும் ஜயித்திருந்தான். பலவானஸஹதேவன் தன்பலத்தினால் மத்ஸ்யதேசத்தரசனை வசபபடுத்தினான். அரசர்க்கரச

னும் மஹாபலசாலியுமான தந்தவக்ரனை ஜயித்து கபபங்கடடுவித்து அவனை அவன் ராஜ்யத்தில் நிலைநிறுத்தினன். ஸுகுமாரன ஸுமித்ர னென்னும் அரசர்களை வசபடுத்தினன். அபபடியே மத்ஸ்ய தேசத் தின் மேற்பக்கத்தாரையும் படசசார்களென்னும் திருடர்களையும் அவன் ஜயித்தான். புத்திமானனஸஹதேவன் நிஷாதாகளின் தேச த்தையும் கோச்ருங்கமென்னுமசிறந்தமலையையும் அதன் பிறகு சிசே ணிமானென்னும் அரசனையும் பராக்ரமத்தினல் ஜயித்தான். நராவஷ்ட்ர மென்னும் தேசத்தை ஜயித்துக் குந்திபோஜனிடஞ் சென்றான். அந்தக் குந்திபோஜன் அவன் கட்டளையை அன்புடன் அங்கீகரித்தான். அத ன் பிறகு சாமண்ய தந்திக்கரையில தன் பிதாவுக்குசசத்துருவும் கிருஷ் ணனல் (கொல்லாமல்) மிகுந்த துலைக்கப்பட்டிருப்பவனும் ஜமபகபுத திரனுமான அரசனைக் கண்டான். ஜனமேஜயரே! அவ்வரசன் ஸஹ தேவனோடு யுத்தஞ்செய்தான். அந்தயுத்தத்தில ஸஹதேவன் அவனை ஜயித்துத் தென்றிசைநோக்கிசசென்றான். மிகசசிறந்தபலசாலியான ஸஹதேவன் அந்தஜம்பகபுத்திரனுடன்கூடவே ஸேகர்கள் அபரஸே கர்களென்னும் தேசத்தாரை ஜயித்து அவர்களிடமிருந்து பலவகைத த்தினங்களைக் கபபமாகபபெறறுக்கொண்டு நர்மதாநதியை நோக்கிச சென்றான். அங்கே நரகாஸுரன் மகனும் சிறந்தகைகளையுடையவனு மாகிய பகதத்தனென்னுமரசன் ஆஜ்ஞனுகுகபபங்கொடுத்த தாகக்கேட்டுத திரும்பினன். அசவினிதேவாகளின் புத்திரனும் சிற ந்தபராக்ரமசாலியுமான ஸஹதேவன் பெருமபடையினலசூழபபட்ட வர்களும் வீரர்களுமாகிய விந்தன் அனுவிந்தனெனனும் அவந்தி தேசத்தரசர்களை போரில்வென்று அவர்களிடம ரத்தினங்களை பெறறுக்கொண்டு போஜகடமெனனுமநகரத்துக்குச் சென்றான். ஓ! ஸத்தியநதவறாத ஜனமேஜயராஜாவே! அந்தநகரத்தில இரண்டுநாள யுத்தம்நடந்தது. மாதரியின் புதல்வனும் மஹாபலசாலியுமான அந்த ஸஹதேவன் யார்க்குமவெலலமுடியாத பீஷ்மகராஜனையும கோஸல தேசத்தரசனையும் வேணுநதிக்கரையிலுள்ள அரசனையும் ஜயித்து அதன் பிறகு காட்டிலுள்ள அரசர்களையும பிராகோடகர்கள நாடகேயா கள் ஹேரம்பகர்களென்னும் அரசர்களையும மாருதம, ரம்மியக்ராம மென்னும் ஊர்களையும நாசினர்கள, அர்பபுதர்கள் முதலான பறபலகாட் டரசர்களனைவரையும பலத்தினல் ஜயித்தான். மஹாபலசாலியான அந்தஸஹதேவன் வாதாதிபனென்னுமரசனை வசப்படுத்தினன். புளிந தர்களென்னும் ஜாதியாரை போரில்வென்று தென்திசைநோக்கியே சென்றான். சிறந்தகைவன்மையுள்ள அந்தஸஹதேவன் பாண்டிய

தேசத்தரசனுடு ஒருநாள போர்செய்து அவனை ஜயிததுத்தென திசை மார்கமாகசசென்று கிஷ்கிநதையென்று உலகததில்பெயாபெறற குகையையுமதடைநதான். வாலியென னும்வானரராஜனால முன்னர்ஆளப படடதும பிறகு கோஸலதேசாதிபதியான ஸ்ரீ ராமபிரானையடுத்த ஸுக்ரீவனால்காபபாறறபபடடதுமான அநதக்குகையிற பிரவேசிதது அவ்வாசனையழைததான். அநதக்குகையில மைநதன் துவிவிதனென னும இரணடுவானரஅரசாகளோடும எழுநாள யுததஞசெய்தான். அவர்களும சோாவடையவிலலை. மஹாதமாகளாகிய அவவிரண்டு வானராகளும அநதயுதததினால ஸஹதேவன்மேல திருபதியடை நது மனமகிழ்நது அன்புடன, "ஓ! பாண்டவசரேஷ்டனே! இங் குள ள ரததினங்களை்னதையும எடுததுகொண்டுசெல. சிறநத அறிவாளரான தாமராஜாவின்யாகாரியம இடையூறிலலாமலிருக்க வேண்டும" என்றுசொன்னார்கள. அநதஇரததினங்களைபபெறறுக் கொண்டு அஙகிருநது மாஹிஷ்மதி யென்னும நகரததுக்குப்போனான். புருஷசரேஷ்டனும பகைவாகளாள வீரர்களையழிக்குமபராக்ரமசாலி யும பாண்டுபுதிரனுமான ஸஹதேவன் அஙகே நீலனென்னும அரச னுடன் போாபுரிநதான். அபபோது பயமுளளவர்களுக்குபபயங்கர மும ஸஹதேவனுடையலை்னக்நசசேதததையும உயிருகுகேஸந தேகததையுமுண்டாககுவதுமாகிய பெரியயுததம உண்டாயிறறு. அநத நீலராஜனுககு அகனிபகவான்ஸஹாயஞ்செய்தார். அதனால, ஸஹதேவனுடையசேனையிலுளள ரதாகளும குதிரைகளும யானைக ளும காலாடகளும கவசங்களும ளரிநதவைபோலகாணபபட்டன. ஜனமேஜயரே! அதனால கௌரவசரேஷ்டனான ஸஹதேவன் மனத தில மிகபபரபரபபுளளவனுகி மறுமொழிசொலலவும சக்தியறறவனு னான" என்று வைசமபாயனாசொலல, கேடட ஜனமேஜயா, "ஓ! பிராம்மணரே! யாககாரியத்துக்காக ஆரமபித்த ஸஹதேவனுககு அக்னிபகவான் யுததததிலள திராகின்றது எனனகாரணததினாலே?" என்றுகேட்க, வைசமபாயனர் சொலலத்தொடங்கினார.

"ஜனமேஜயராஜாவே! முன்னம் அக்னிபகவான் அநத மாஹி ஷ்மதிநகரத்தில வாஸஞசெய்துகொண்டு பரஸ்திரீயினிடம விருப்பம வைத்தவனுகக் கண்டுபிடிகபபடடானென்று கேட்டிருக்கிறீரல லவா? நீலனென்னும ராஜாவின்மகள மிக்கஅழகுளளவளாயிருந தாள். அவள தன்தநதைக்கு ஹோமகாலதததைத் தெரிவிபபதறகாக எபபோதும அக்னிஹோததிரதததைக் காததிருநதாள். அநத அக்னி பகவான் அவ்ளுடைய அழகான இதழ்க்குவிவின்வழியாகவரும காற்

றினால் ஊதபடும்வரையில், விசிறபபட்டாலும ஜ்வலிபபதில்லை. [1]அநத அழகியபெண்ணின்மேல் விருபபமுற்ற அநத அக்னிபகவான் நீலராஜாவினாலும மற்றவர்களாலும குறிபபாக அறியபபட்டான். அதன்பிறகு அக்னிபகவான் பிராமமணவடிவமெடுத்து யதேச்சையாக உல்லாசமாய் உலாவிக்கொண்டு, கருநெய்தல்மலர்போன்ற கண்களையுடையவளும் அழகியநிதம்பமுள்ளவளுமாகிய அநதப்பெண்ணின்மேல் ஆசையைக்காண்பித்தான். அபபோது தர்மிஷ்டனான நீலராஜன் அந்த அக்னிபகவானைச் சாஸ்திரபபிரகாரம தடுத்தான். உடனே அகனிபகவான் கோபத்தினால் ஜ்வலிததைககண்டு வியபபுற்றஅரசன் தன் தலை தரையில்படும்படி வணங்கினான். அதன்பிறகு சிலகாலத்துக் கெல்லாம அவ்வரசன் அநதப்பெண்ணை பிராம்மணவடிவமாகவநத அக்னிபகவானுக்குக் கன்னிகாதானஞசெய்தான். அழகியபுருவங்களையுடையவளாகிய அநத நீலராஜன்புதல்வியைப் பெற்றுக்கொண்டபின் ஓளிபபுத தனமாகவுடைய அக்னிபகவான் அவவரசனுக்கு அனுக்ரஹஞ்செய்தான். யாகங்களை மிகச்சிறபபாகச் செய்பவனுகிய அக்னிபகவான் வரமகேட்குமபடி அவ்வரசனைத் தூண்டினான். அவ்வரசன் தன்சேனைக்கு அபயததையே வரமாகபபெற்றுக்கொண்டான். அதுமுதல [2]எநத அரசர்களாவது அறியாமையினால் தம்வலிமையைக் கொண்டு அநதநகரததைஜயிக்க யததனிபபார்களாயின் அவர்கள் தீயினால்எரிக்கபபடுவர். கௌரவசரேஷ்டரான ஜனமேஜயரே! அநத தக்காலததில் அநத மாஹிஷ்மதிநகரததுபபெண்கள் அதிகக் கட்டுக்குட்படாதவர்களாய்த தமமனமபோனபடி இருந்தனர். பெண்களுக்குக் கட்டுபபாடில்லாமலிருக்குமபடி அக்னி வரமகொடுத்தான். அங்கே மங்கையாகள் சுதநதிரர்களாகத தங்கள்விருபபப்படி நடபபதுவழக்கம். பரதச்ரேஷ்டரான ஜனமேஜயமஹாராஜாவே! அக காலம்தொடங்கி அரசாகள் அக்னிபயத்தினால் அநதநகரத்தை எப்போதும் விட்டுவிடுவதுவழக்கம். ராஜாவே! தர்மத்தில் மனம்வைத்த ஸஹதேவன் தன்படை தீபபிடித்துப் பயத்தினாற்கலங்கினதைக் கண்டு மலைபோல்அசையாமலிருநதான். பிறகு அவன் ஆசமனஞ் செய்து பரிசுத்தனாகி அக்னியைத்துதித்தான்.

"ஓ! அக்னிபகவானே! உனக்குநமஸ்காரம். இந்த என்முய

[1] 'அக்னிபகவான் மானிடவடிவத்தோடு தன்விருப்பத்தை வாய்விட்டுச் சொன்னான். எலலாருடைய கிருஹஙகளிலும் இவ்வாறே சொன்னான். அந்தப்பெண்ணினாலும் அவன் அங்கீகரிக்கப்பட்டான்' என்பதும், 'இது நீலராஜனுக்குத் தெரியாது என்று வருவித்துக்கொள்க' என்பதும் பழையஉரை.

ற்சி உனக்காகத்தான். பாவகனே! நீ தேவர்களுக்கு [1]முகமாயிருக்கிறாய். நீ யஜ்ஞபுருஷனுயிருக்கிறாய். எல்லாவற்றையும் பரிசுத்தஞ் செய்வதனால் பாவகனுகிறாய். ஹோமஞ்செய்தனவற்றைத் தேவர்களுக்குச் சேர்ப்பிப்பதனால ஹவ்யவாஹனுகிறாய். உனக்காக வேதங்கள் உண்டாயினவாதலின் நீ ஜாதவேதனுகிறாய். அக்னியே! நீ [2]சித்ரபானு; தேவர்களிற்சிறந்தவன். நீ அனலன்; ஸ்வர்க்கத்தின் வாயிலைத் திறப்பவன்; ஹோமங்களைப் புஜிப்பவன்; ஜ்வலிப்பவன்; [3]சுசி; நீ [4]வைசுவானரன்; [5]பிங்கேசன்; [6]பிலவங்கன்; [7]பூரிதேஜன்; நீ சுபபிரமணியக்கடவுளேயென்றவன்; மகிமையுள்ளவன்; [8]ருத்திரர்ப்பன்; பொன்னுக்குக்காரணமானவன்; அக்னிபகவான் எனக்குச் சக்தியையும், வாயுபகவான் உயிரையும், பூமிதேவி வன்மையையும், ஜலம் ஸுகத்தையும் தரவேண்டும். ஜலத்தின் [9]கர்ப்பமாக இருப்பவனே! பெருஞ்சக்தியுள்ளவனே! ஜாதவேதனே! தேவர்க்காசனே! தேவர்களுக்கு முகமாகியநீ இந்தஸுதகிரியதனால் என்முன்னின்று என்னிட பரிசுத்தஞ்செய். ரிஷிகளாலும் பிராமமணர்களாலும் தேவர்களாலும அஸுரர்களாலும் யாகங்களில எபபோதும் நன்றாக ஹோமஞ்செய்யபபடடவனே! இந்தஸுதக்கியத்தினால் என்னைக்காபபாயாக. புகைக்கொடியுள்ளவனும ஜ்வாலையுள்ளவனும் பாவங்களையழிபபவனும காறறினல் விருத்தியாகிறவனும எல்லாப் பிராணிகளிடத்தும் எபபோதுமிருபபவனுமாகிய நீ இந்தஸுதக்கியத்தினால் என்னைக் காபபாறறக்கடவாய். அக்னிபகவானே! நான் பரிசுத்தனுகப பக்தியுடன் உன்னைத் துதிதிருகிறேன். ஸுதாஷ்டத்தையும் தேசபுஷ்டியையும சாஸ்[10]திரஜ்ஞானத்தையும் மேன்மேலும் பக்தியையும் எனக்குத்தருவாயாக" என்றான். அக்னிபகவானுக்குரிய இம்மந்திரத்தை இவ்வாறுபடித்து அக்னியில்ஹோமஞ்செய்பவன் நீங்காதசெல்வத்துடன் எப்போதும, ஜிதேந்திரியனுகி எல்லாப் பாவங்களாலும் விடப்படுவான். ஜனமேஜயரே! புருஷச்ரேஷ்டனான ஸஹதேவன், "யஜ்ஞங்களைநடத்துகிற அக்னியே! நீ யாகத்திற்கு இந்தஇடையூற்றைச் செய்யத்தகாது" என்றுசொல்லிய பயத்தினால் நடுங்கின அந்தச்சேனையின் முன்னிலையில் பூமிமறையத் தர்பைக

[1] அக்னியில்ஹோமஞ்செய்வதனால் தேவர்களுக்குத்திருப்தியுண்டாகிற
[2] பலவர்ணங்களான கிரணங்களையுடையவன். [தி.
[3] ஜ்வாலையுள்ளவன். [4] எல்லாமனிசர்களிடத்தும் மிருப்பவன்.
[5] பசுமைநிறமுள்ளவற்றுள் சிறந்தவன். [6] தாண்டிச்செல்லுகிறவன்.
[7] பேரொளியுள்ளவன், [8] சிவனுக்குள்ளிருப்பவன். [9] வடவாமுகாக்னி.

கோப் பரபபிச் சாஸ்திரபபிரகாரம் அக்னியைக்குறித்துத் தவஞ்செய்தான். அக்னியும் கருங்கடல் கரைகடவாமலிருப்பதுபோல ஸஹதேவன் பிரார்த்தனையை அதிக்கிரமியாமலிருந்தான். அக்னி கௌரவர்களில் ச்ரேஷ்டனும் மனித்ர்களுக்குப்பிரபுவுமான அந்தஸஹதேவனிடம்வந்து மென்மையாகவும் இன்சொல்லாகவும, "கௌரவனே! எழு; எழு; உனக்கு இந்தப்பரீக்ஷையை நான்செய்தேன். உனக்கும் தர்மராஜருக்குமுள்ள அபிபிராயங்களெல்லாவற்றையும் நான் அறிவேன். பரதச்ரேஷ்டனே! நீலராஜாவின் குலத்தைச்சேர்ந்த ஸந்ததிகளுள்ளவரையிலும் நான் இந்தகரத்தைக் காக்கவேண்டிய வனுக இருக்கிறேன். பாண்டவனே! ஆனலும உன்மனததின்விருபபத்தைச்செய்வேன்" என்றுசொன்னன். 'ஜனமேஜயரே! உடனே ஸஹதேவன் மனமகிழ்ந்து எழுந்து கரங்கள்குவித்துத் தலைவணங்கி அக்னிபகவானைப் பூஜித்தான். அக்னிபகவான் திரும்பிச்சென்ற பிறகு நீலராஜன் அக்னிபகவானுடையகட்டளையினுலேயே புருஷச்ரேஷ்டனும் யுத்தவீரருக்குத தலைவனுமாகிய ஸஹதேவனை மரியாதையாக எதிர்கொண்டழைத்துப பூஜித்தான். ஸஹதேவன் அவன் செய்தமரியாதையைப பெற்றுக்கொண்டு அவனைக் கபபகட்டுவித்த பிறகு அங்கிருந்து தென்திசையை ஜயிக்கச சென்றான்.

சிறந்தகைவன்மையுள்ள அந்தஸஹதேவன் அளவற்றசக்தியுள்ள திரைபுனென்னுமஅரசனை உட்படுத்தி, பாக்ரமத்தினுல பௌரவராஜனை ஜயித்தான். சிறந்தகைகளையுடையஸஹதேவன் பிறகு கௌரவர்களுக்கு ஆசாரியராகவுடைய ஆகிருதியென்னும ஸுராஷ்டிரதேசாதிபதியைப் பெருமுயற்சியினுல வசப்படுத்தினன். தர்மாத்மாவான அந்தஸஹதேவன் ஸுராஷ்டிரதேசத்திலிருந்துகொண்டே சிறந்தகௌரவருள்ளவனும் சிறந்தபுத்திமானும போஜகடமென்னுங்கரத்திலிருபபவனும இந்திரனுக்குநேரில் சினேகிதனுமான பீஷ்மகனுக்கும் அவன்புதரினுன ருக்மியென்பவனுக்கும தூதனுபபினன். ஜனமேஜயமஹாராஜாவே! பீஷ்மகனும அவன்மகனானருக்மியும் ஸஹதேவனிடம் அன்புபறறியும கிருஷ்ணனிடத்தும ஸஹதேவனுடையகட்டளையைவற்றுக்கொண்டனர். சிறந்தபலமும பராக்ரமமுள்ளவனும யுத்தவீரரிறசிறந்தவனும சிறந்தபுத்திசாலியுமான ஸஹதேவன் அவர்களிடம ரத்தினங்களைப்பெறறுக்கொண்டு மறுபடியும் சென்று சூர்பபாரகம் தாலகடமென்னும்தேசங்களையும் தண்டகாவனத்தையும கடலிலுள்ளதீவுகளில்வஸிக்கும மிலேசசஜாதியிற்பிறந்த நிஷாதர்கள் புருஷாதர்கள் கர்ணப்ராவர்ணர்கள் காலமுகர்

களென்னும் நராக்ஷஸருக்குபபிறந்த அரசர்களையும் கோலகிரிமுழு வதையும் ஸுரபி பட்டணத்தையும தாம்ரமென்னும்பெயருள்ள தீவையும் ராமகமென்னுமபாவத்தையும திமிங்கிலனென்னுமராஜா வையும வசபடுத்தி ஒற்றைகாலையுடையமனிதர்களையும் கேரளர் களையும் காட்டிலுள்ளவர்களையும ஸுரஸயந்தி பாஷண்டம் கர்ஹாடக மென்னும்நகரங்களையும தூதர்களாலேயேவசபடுத்தி அவர்களைக் கப்பங்கட்டுவித்தான். பாண்டியர்கள், திராவிடர்கள, ஓட்டர்கள், கேரளர்கள், ஆந்திரர்கள், தாளவனர்கள், கலிங்கர்கள், [1]உஷ்டிரகர்ணி கர்கள் ஆகிய இவர்களையும அழகானகாடுகளையும நகரங்களையும் யவ னர்களின்பட்டணத்தையும தூதர்களைகொண்டே உட்படுத்தி அவர் களைக் கபபங்கட்டுவித்தான். அதன்பிறகு தாமரபர்ணிநதிக்குச்சென் று கன்யாதீரததத்தைக்கடந்து, தென்தேசமெல்லாம்ஜயித்தபின் ஸஹதேவன, அலைகள நிரமபின கடலின்வடகரையையடைந்து பீம ஸேனனுடையபுதநிரஞன கடோதகசனை நினைத்தான். நினைத்த வுடன் ராக்ஷஸனானகடோதகசன் எதிரிற்காணப்பட்டான். பகை வரையழிபபவனும சிறநதபுதநிமானுமாகிய ஸஹதேவன் கடற்கரை யிலுள்ள அநததாழ்வரையிலிருநதுகொண்டே மேருமலைச்சிகரம் போலவநத கடோதகசனைபபார்த்துத தர்மராஜருடையகட்டளைக் காக வரவேண்டுமென்று இன்சொல்லாகச சொன்னன். உடனே கடோத்கசன் ராக்ஷஸசேனைகளோடு ஸஹதேவனைவணங்கிநின் றன். தாமாத்மாவும பகைவரையஜயிபபவனுமாகிய ஸஹதேவன் அங் கிருந்துகொண்டே மிகக்தைரியமும பயங்கரமாகியஉருவமுமுள்ளவ னகிய கடோதகசனைப புலஸ்தியகுலத்தோரும மஹாத்மாவுமாகிய விபீஷணருக்கு ஸ்நேஹத்தைமுன்னிட்டுத்தானுதவிடத்தான். சிறந்த புதநியுள்ளவரும, பிரபுவுமான விபீஷணரும அது கிருஷ்ணனுற் செய்யபபட்டதென்றுநினைத்து ஸஹதேவனுடையகடடளையை அன் புடன்அங்கீகரித்தார். அதன்பிறகு சநதனக்கட்டைகளையும் அகிற் கட்டைகளையும உயாந்த ஆபரணங்களையும பெருவிலைபெற்ற ஆடை களையும் மணிகளையும இன்னும பலவகையானசிறந்தபொருள்களையும் அனுபபினர்” எனறார்.

[1] ஒட்டகக்காதர்கள்.

முப்பத்துமூன்றுவது அத்தியாயம்.

தீக்ஷ்ணயுத்தம். (தொடர்ச்சி.)

(ஜனமேஜயர் மறுபடியும் கேட்க, வைசம்பாயனர் ஸஹதேவன் சோழநாட்டுக்கும் பாண்டியநாட்டுக்கும்சென்றதைச் சொல்லியது.)

ஜனமேஜயர், "பிராம்மணோத்தமரே! கடோத்கசன்வரலை யும் அவன் இலங்கைக்குப்போனதையும் விபீஷணைக்கண்டதையும் காவேரியைப்பார்த்ததையும கேட்க விருமபுகிறேன். விரிசையாக எனக்குசசொல்லும்" என்றுகேட்க, வைசமபாயனர் சொல்லுகிறார்.

"ஜனமேஜயரே! ஸஹதேவன்பாக்ரமத்தை நடநதவாறு சொல்லுகிறேன்; கேளும். அவீன் தன்பராக்ரமததினால் காடுகளிலும் தீவு களிலுமுள்ளவர்களைப போரில்வென்று தென்திசையைவசபடுத்திக் கொண்டு சோழநாடுசென்றான். அபபோது ஸஹதேவன் புண்ணிய தீர்த்தமுள்ளதும பலவகைபபறவைக்கூட்டங்களினால அடையபபட்ட தும் முனிவர்களினால அலங்கரிக்கபபடடதும ஆச்சா, லோதரம், மருதம், வில்வம், நாவல, இலவு, முருக்கு, கடம்பு, எழிலிலுபாலை, குமிழ், கெல்லி, பெருங்கிளைகளுளளஆல், புளி, அததி, வன்னி, பலாசம, அரசு, கருங்காலி, இலந்தை, அசவகாரணம, மா, புணடரகம, வாழைமுதலிய மரங்களினால் வியாபிக்கபபடடுவிளங்குவதும சகாவாகம, வாத்து, நீர்க்காக்கை, கடறகாக்கை, அன்றில், நீர்க்கோழிமுதலியநீரபபறவைகள் அனேகம்கூவபபெற்றதும் அனேக ரிஷிஆசரமங்களினாலும பூஜிபப தற்குரியமரங்களினாலும்விளங்குவ்துமம வேதங்களிலும் வேதாங்கங் களிலும் கரைகண்ட பரிசுத்தரான பிராமமணாகளினால்விளங்குவதும சிலவிடங்களில் கரையில்முளைத்திருககும மரஙகள நிரமபபபூத்திருபப தனால் மாலைகளணிந்திருப்பதுபோன்றதும சிலவிடங்களில் செங் கழுநீர், குவளை, செவ்வல்லி, ஆமபல, தாமரைமுதலியவைகள்மலர்ந்து ஆழகாயிருபபதுமாகிய நதிகளிறிசிறந்த காவிரியைக்கண்டு, 'நமது தேசததில் கங்கை எவ்வாறோ அவ்வாறே இநதக்காவேரி சிறந்தது' என்று ஸந்தோஷமடைநதான். ஸஹதேவன் அந்தநதியைச் சேனை களுடன்தாண்டி, தென்கரைசேர்ந்து செல்ல, நிதொடங்கினான். பாண் டவன் அந்தத்தேசத்தில்வந்திருப்பதைக்கேட்டு அத்தேசத்திலுள்ள வர்கள் விருப்பதுடன் அவனைக்காணச்சென்றனர். காண்பதற்கழ காக [1]தமிழ்நாட்டாராகிய ஆடவரும்மங்கையரும் அங்கேசென்று

[1] மூலததில், 'த்ரமிடா:' எனறிருக்கிறது.

அந்தப்பாண்டவனே ஸந்தோஷத்துடன்கண்டனர். மிருதுவானதேக மும் விசாலமானகண்களுமுள்ளவனும் தேவதைக்கொப்பானவனும் இவ்வுலகத்துள் மிக்க அழகுள்ளவனுமா ஆச்சரியப்படத்தக்கவனு மாகியஸஹதேவன் போகுமபோது அந்தத்தமிழ்நாட்டார்கள்கூடிக் கண்ணிமைகொடாடமறபார்த்தனர். குமாரக்கடவுளுக் கொப்பான அந்தஸஹதேவனைக்கண்டு மங்களகானங்களோடுகூடிய ஸ்தோத்திர ஙகளைச்செய்து, விருமபத்தக்க பற்பல உயர்ந்தபொருள்களையும் மற் றும்விருமபதத்தக்க பலஸௌக்கியங்களையும்அளித்து உபசரித்தனர். சிறந்ததகைகளையுடையஸஹதேவனும ஸந்தோஷத்தோடு அந்தத்தமி ழர்களைக்கண்டு அவர்களுக்குவிடை கொடுத்தனுபபித் தென்திசைக் குபபுறப்பட்டான். தமிழ்நாட்டரசனுகியசோழராஜனைத் தனதுதூத னுலேயே விரைவில்வசபபடுதது அவனிடமிருந்து ரத்தினங்களைப பெற்றுக்கொண்டு பாண்டியநாடுசென்றான். சோழநாட்டிலுள்ள மற்ற மனிதர்கள் ஸஹதேவனைக்காண்பதில ஆசைதீராதவர்களாக அவன் செல்லுமபோது ஸந்தோஷத்துடன் பின்சென்றுகொண்டே பாண் டியதேசம்போயினர். ஜனமேஜயராஜாவே! பிறகு ஸஹதேவன் காட்டிற்சஞசரிக்கும்யானைகளையும் புலிகளையும் மான்களையும் மற்று முள்ள அனேகமிருகக்கூட்டங்களையும கிளிகளையும் மயில்களையும் கழுகுகளையும் காடுகிக்கோழிகளையும் பார்த்துக்கொண்டு பாண்டிய நாட்டைச்சேர்ந்தது அர்ஜுனனுக்குமாமனுகிய பாண்டியராஜனுக் குத தூதர்களையனுபபினன். [1]மலயத்வஜனுகியபாண்டியன் ஸஹ தேவன்கடடளையை அன்புடன்அங்கீகரித்தான். அரஜுனன்மனைவி யும பாண்டியராஜபுத்திரியும அழகிற்சிறந்தவளும நல்லலக்ஷணங்கள் பொருந்தினவளும பெண்களிற்சிறந்தவளுமாகியசித்ராங்கதையென்று பெயர்பெற்ற தமிழபபெண் ஸஹதேவன்வந்ததைத தன்தந்தையிடனல் அந்தப்புரத்திறகேள்வியுற்று மரியாதைகளுக மிகுதியானரத்தினங்களை அன்புடன் அனுப்பினுள். புகழ்பெற்ற பாண்டியராஜனும பலவகை யான விலையுயர்ந்தபொருள்களையும மணிகளையும முத்துக்களையும் பவ ழங்களையும தூதர்களையும ஸஹதேவனுக்கு அனுபபினுன். ஜனமே ஜயராஜாவே! அந்தநிகரற்ற மரியாதையைக்கண்டு ஸஹதேவனும் ஸந்தோஷத்தோடு தனதுஸஹாதரன் புதல்வனுகிய பபருவாகன னுக்கு ரத்தினங்களை மிகுதியாகஅளித்து அர்ஜுனன்மாமனும் திரா விடதேசத்துக்கும் மணலூர்நகரத்திற்கும ராஜாவுமான மலயத்வஜ

[1] ஆதிபர்வம் 836 - வதுபக்கத்தில் சித்ரவாகனனென்றபெயர்கூறப்பட் டிருக்கிறது.

பாண்டியனைத் தூதர்களைக்கொண்டே வசப்படுத்தி அவனிடத்திலிரு
ந்து ரத்தினங்களைப்பெற்றுகொண்டு தமிழாகளாலசூழப்பட்டவனுக
அகஸ்தியருக்கு இருபபிடமும தேவலோகததுகுசசமானமுமான
சிறந்தமலையைச்சேர்ந்தான். ஜனமேஜயரே! அந்தஸஹதேவன் அந்த
மலயமலையை பிரதக்ஷிணஞ்செய்து தெளிவும் குளிர்ச்சியுமுள்ள தீர்
த்தமுடையதும் மனத்தைகவர்கின்றதுமான தாமரபர்ணி என்கிற
யைக்கடந்து கடற்கரைசேர்ந்து அங்

மூப்பத்துநான்காவது அத்தியாயம்.

தி க் வி ஜ ய ப ர் வ ம். (தொடர்ச்சி.)

(ஸஹதேவனுலஅனுப்பபபட்ட கடோத்கசன் விபீஷணரிடம்சென்று
தாணீகை வாங்கிவந்துகொடுத்ததும், ஸஹதேவன் இந்திரப
பிரஸ்தம்சேர்ந்து தர்மராஜருக்கு ஒபபித்ததும்.)

அரசர்க்கரசரும பாரதருமான ஜனமேஜயராஜாவே! அதன் பிறகு சிறந்தகைகளையுடைய ராஜாவான ஸஹதேவன் புத்திமான்களுட்சிறந்தவரும் நல்லஆலோசனையுள்ளவருமான மந்திரிகளுடன் கூட ஆலோசனைசெய்துநிசசயித்துக்கொண்டு ஆவலோடு தனது ஸோதரன்மைந்தனுகிய கடோதகசனைநினைதான். நினைதமாத்திரத்தில் அந்தராகூலன்காணபபட்டான். மிக்கஉயரமும் பெருங் கைகளுமுள்ளவனும இருண்டமேகமபோன்றவனும மாறறறின பொற்குண்டலங்களையும விசிதரமான முதாரங்களையும தோள்வளைகளையும் ரத்தினச்சதங்கைகளையும பொன்மாலையையும அரைக்கடடையும் கடகங்களையும் தோளவளைகளையும கிரீடத்தையும மற்றுமுள்ள ஆபரணங்களெல்லாவறறையும அணிநதுகொண்டவனும் நீண்டகோரப்பற்களும் சிவநதகூந்தலும செமபட்டைநிறமானமீசையுமுள்ளவனும் பயங்கரமான தேகமுளளவனும செஞ்சநதனமணிநதவனும் மெல்லிய ஆடைதரித்தவனும் பலசாலியுமான அந்தக கடோத்கசன் தன்லலிமையினுல் பூமியைநடுங்கசசெய்பவன்போல அங்கேவநதான். ராஜாவே! மலைபோல்வருகின்ற அந்தக்கடோத்கசனைக்கண்டு அங்குள்ள ஜனங்களனைவரும் சிங்கத்தைக்கண்ட அறபமிருகங்கள்போலப பயந்தோடினர். ராவணன் புலஸ்தியரிடம்வருவதுபோல அவன் ஸஹதேவனிடம்வநதான். ராஜாவே! பிறகு கடோத்கசன் ஸஹதேவனை நமஸ்கரித்துக் கரங்குவித்து வணக்கமாகநின்று, 'யான்செய்யத்தக்

கதுயாது?' என்றுகேட்டான் மேருமஹியின்சிகரம்போல வருதுநிற் கும் அருதக்கடோத்கசனைப பாண்டவனை அந்தஸஹதேவன் இர ண்டுகைகளாலும்தழுவி உசசிமோரது மருதிரிகளுடன்கூடி அவனு க்குமரியாதைசெய்து அன்புடன், "மஹாபலசாலியானகுழாதாய்! கபபத்தின்பொருட்டு நான்அனுபபினதாக லங்காபுரிக்குசசென்று அங்கு ராகஷஸர்களுக்குஅரசரும மஹாத்மாவுமான விபீஷணைக் கண்டு ராஜஸூயயாகத்திறகாகப பலவகைகளான ரதினங்களை மிகுதியாகபபெறறுக்கொண்டு திருமபிவா" என்றுசொனனான்

ஜனமேஜயரே! ஸஹதேவனால இவவாறுஉரைக்கபபட்ட கடோ தகசன் மனமகிழ்நது 'அவவாறேஆகட்டும்' என்றுசொல்லித தென் திசைநோக்கிச்சென்றான். ராஜாவே! ஸஹதேவனைப பிரதகஷி ணஞசெய்து லங்கையைநோக்கிபபுறபபட்ட அருதக்கடோத்கசன் ஆமைகளும் முதலைகளும சுறுமீன்களும பெருமீனகளும நீரயானைக ளும சிபபிகளும சங்குகளும மிகுதியாகநிரமபியிருககும கடலைக்கண் டான். அரசாக்காரே! அருதககடோதகசன் ஸ்ரீராமபிரானுடைய திருவுணைபைகண்டு, அவருடையசக்தியைநினைதுகொண்டே கட லின்தென்கரையைசசேர்நது ஸ்வர்க்கபூமிபோல அழகானதும, சுற் றுமதிலுள்ளதும, அழகானகோபுரவாயிலகளினால விளங்குவதும், வெண்மையும்செமமையுமான அனேகமாடமாளிகைகள்நிரமபியதும், அழகான மிருதங்கசபதமுளளதும, எகாலதது மிலுமகாய்ததும பூதது மிருகும மரங்களுள்ளதோடடஙகளினால அழகாயிருபபதும, மலர்க ளின் மணமநிரம்பிய அழகான ராஜமாகஙகளுளளதும, அனேகரத தினங்கள்நிரமபினதும, இநதிரனுடையஅமராவதிநகருகு நிகராயிரு பபதும், ராகஷஸர்களாலடையபபட்டதுமான லங்காநகரதைதைக்கண்டு அதில பிரவேசித்தான். அருதகக்கடோத்கசன் சூலம பாஸமுதலிய ஆயுதங்களைததரிதது பலவிதஅலங்காரஙகளையணிநதிருகும வீர ர்களான அனேகராகஷஸர்களையும தெய்வலோகதது பூமாலைகளுடி யும திவ்யாபரணங்களையணிநதும மதுபானதினால் கடைகணகள சிவநதுமிருபபவரும, பருதநிதமபங்களும தனங்களுமுள்ளவரு மான அழகியபெண்களையுமகண்டான். பீமசேனன்புதலவனைகடோ த்கசனைக்கண்டு அவர்கள மயிழ்சசியையும வியபபையுமடைநதனர். அருதக்கடோதகசன் இநதரக்ருஹத்திறகு நிகரான ராஜகிருஹத தைச்சேர்ந்து துவாரபாலகனைச சநதித்து, "பாண்டுவென்று பெயர் பெற்றவரும மஹாபலசாலியும் கௌரவசரேஷ்டருமான அரசர்ஒரு வர் இருநதார். அவருடைய இளையமைநதா ஸஹதேவனென்பவரைக்

கேள்வியுற்றிருக்கலாம். நான் தர்மராஜாவின்கப்பத்திற்காக அவ ரால்அனுப்பப்பட்டதூதன். அரசர்க்கரசரான விபீஷணரைப் பார் க்கவிரும்புகிறேன். நீ சீக்கிரம் என்னைபற்றித்தெரிவி" என்று சொன்னன்.

ஜனமேஜயராஜாவே! அந்தத் துவாரபாலகன் அவனுடைய அந் தச்சொல்லைக்கேட்டு 'அப்படியேஆகட்டும்' என்றுசொலலித் தெரி விப்பதற்காக அரண்மனைக்குட்போனன். அவன், கைகூப்பி நின்று தூதனுடைய சொலலைமுழுதும ராஜாவுக்குச்சொன்னன். தர்மாத்மா வும் ராக்ஷஸராஜாவுமான விபீஷணா துவாரபாலகன்சொன்னதைக் கேட்டு 'அந்தததூதனை யென்னிடமழைததுவா' என்றுசொன் னர். தர்மநெறிநந்த மஹாத்மாவாகிய ராஜாவினுல இவ்வாறுகட்டளை யிடப்பட்ட அந்தத் துவாரபாலகன் வேகமாகவெளியிலவந்து கோடாத் கசனைக்கண்டு, "தூதனே! சீக்கிரம ராஜாவைப்பார்க்கலாம்; நேரே உளளேசெல்லலாம்" என்றுசொன்னன். த்வாரபாலகனுடைய சொல லைக்கேட்டுக கோடாத்கசன் உள்ளேசென்று, கைலாசகிரிக்கொப பானதும, மாறறுயாநத பொன்மயமான தோரணங்களுள்ளதும, சுற்றுமதிலுள்ளதும், கோபுரங்களினுல்சோபிபபதும, நிலாமுற்றங்க ளும தேவதாகிருஹங்களும நிரம்பியதும, அனேகரதனங்கள் விளங் குவதும, பொன்னினுலும தங்கதகினுலும படிகதகினுலும் வெள ளியினுலும் வச்சிரங்களினுலும வைடூரியங்களினுலுமசெய்யப்பட்ட மிக்கஅழகானதூண்களும பலவகைக்கொடிகளும கொடிமரங்களு முள்ளதும், ரத்தினங்களிழைததுப பலநிறமாயிருபபதும, எங்கும மலர்மாலைகள்தொங்குவதும, உயர்ந்த தங்கமேடைகளுள்ளதுமான அழகிய அந்தக்கிருஹததை முழுவதுமபார்ததான். பீமஸேனனுக் கும் ஹிடிமபிக்கும புதலவனான கடோதகசன், தந்திராதமும குர லும்சேர்ந்து ஸமதாளமுமு அக்ஷரகாலஅளவுமுளளதும தேவதுந்து பிவாத்தியங்கள இடைவிடாமல முழங்குவதுமான இனியஸங்கீதத் தைக்கேட்டு ஸந்தோஷமடைநதான். பாரதரான ஜனமேஜயரே! அதன்பிறகு அந்தக்கடோத்கசன் அந்தததுவாரபாலகனுடன்கூடவே அழகானஅனேகங்கட்டுகளுள்பிரவேசித்து ஆகாயத்தில ஸூர்யனிரு ப்பதுபோலச் சிறநதஸிமாஸனததில் வீறறிருபபவரும், முத்துக்க ளும ரத்னங்களும் பறபலஉயர்ந்தஆபரணங்களும் அணிநதுகொண்ட வரும, தேவதைபோன்ற உருவமுள்ளவரும், தேவலோகத்திய சிற ந்தபுஷ்பமாலைகளையும் ஆடைகளையும்தரிதது உயர்ந்தசாந்தணிந்து கொண்டு ஸூர்யன்போலும அக்னியைப்போலும் ஒளியுள்ளதே

கத்தினால் விளங்குகின்றவரும், தேவர்களுடன் தேவேந்திரனிருப் பதுபோல மந்திரிகளுடன் கூடியிருப்பவரும், மஹாதமாக்களான யக்ஷர்களும், அழகியஒளியுள்ளதெய்வப்பெண்களும், மங்களகானங் கள்செய்து ஸ்வர்க்கத்திலிருப்பவர்போல்க் கொண்டாடப்பெற்றவ ரும், இரண்டுசிறந்தபெண்களினால் பொறுக்கமுடியாவையும் உயர்ந்த வீலைபெறாவையுமான இரண்டுசாமரங்களைப்பிடித்துத் தலைக்குமேல் வீசப்பெற்றவரும், குபேரனைப்போலவும் வருணனைப்போலவும் மஹி மையும் ஐசுவரியமும்பெற்றவரும், எக்காலமும்தர்மதத்திலேயேயிரு ப்பவரும், ஆச்சரியமான ராக்ஷஸராஜாவும், இக்ஷ்வாகுகுலநாதரா கிய ஸ்ரீராமபிரானை என்றும் மனத்திலநினைத்திருப்பவரும், மஹா த்மாவுமான விபீஷணரைக்கண்டு கைகூப்பி வந்தனஞ்செய்தான். மஹாவீரனான கடோத்கசன், இந்திரனிடத்தில் சித்ரதனென்னும் கந்தர்வன்நிற்பதுபோல அவரிடத்தில் வணங்கிநின்றான். ராக்ஷஸ ராஜாவான அந்தவிபீஷணர் தூதனுகவந்த அந்தக் கடோத்கசனைக் கண்டு முறைப்படி மரியாதைசெய்து இனசொலலாக, "கபடத்தை விரும்புகின்ற அவ்வரசன் யாருடையவம்சத்தில் பிறந்தவன். அவன் உடன்பிறந்தவர்களைனவரையும் அவனுடையராஜ்யத்தையும் தேசத் தையும் உன்னையும் நீவந்தகாரியத்தையும் எல்லாவற்றையும்பற்றித் தெளிவாகக்கேட்கவிரும்புகிறேன். இவற்றையெல்லாம் தனித்தனி யே எனக்கு விரித்துச்சொல" என்றுகேட்டார். மஹாத்மாவான விபீஷணரால் இவ்வாறுவினவப்பெற்ற கடோத்கசன் கைகூப்பிநின்று பின்வருமாறு பொருத்தமானமறுமொழி சொல்லலானான்.

"சந்திரவம்சத்திற்பிறந்த ம்ஹாபலசாலியான பாண்டுவென்னும் ஓரரசர்இருந்தார். பாண்டுவுக்கு இந்திரனுக்கொப்பான பராக்ரம முள்ள ஐந்துகுமாரர்கள் பிறந்தனர். அவர்களுள் மூத்தவர்யுதிஷ்டி ரரென்றும அஜாதசத்ருவென்றும பேர்பெற்றவர்; காமத்திலேயே மனமுள்ளவர்; தர்மமேஉருவங்கொண்டதுபோன்றவர். அந்தயுதிஷ் டிரரென்னுமராஜா கங்கைக்குதென்கரையில அஸ்தினாகரத்தில் ராஜ்யாதிபத்யமடைந்து ராஜ்யத்தைஆண்டார். ஓ! ராஜச்ரேஷ் டரே! அந்தராஜ்யத்தைத் திருதராஷ்டிரனுக்குக்கொடுத்துவிட்டுப் பிறகு இந்த்ரப்ரஸ்தம்சென்றார். அந்தஇரண்டுநகரங்களும் கங்கைக் கும்யமுனைக்கும் இடையிலிருக்கின்றன. ராஜச்ரேஷ்டரானவிபீஷண ரே! அந்தஇந்திரப்ரஸ்தத்தில் தமதுஸஹோதரர்களுடன் மகிழ்ச்சி யோடிருந்து எங்கள்ராஜா அரசுநடத்துகிறார். அவருக்கிளையவர் சிற ந்தகைகளையுடையவர்; பீமஸேனனென்றுக்யாதிபெற்றவர்; பெருஞ்

சக்தியும்கீர்த்தியுமுள்ளவர்; இந்திரனுக்கொப்பான பராக்ரமமுள்ளவர். அந்தப்பாண்டுபுத்ரர் பலதிவ்யாஸ்த்ரமயாஸ்த்ரங்களுக்குச்சமமானவர். அவருக்கிளையவர் அர்ஜுனனென்பவர். சிறந்த பராக்ரமமுடையவர். மிருதுவானதேகமும சிறந்தசக்தியுமுள்ளவர். சூரத்தனத்தினால் உலகத்தில்பெயர்பெற்றவர். சூரத்தனத்தில் கார்த்தவீர்யனுக்கும பலதேவனுக்கடலுக்கும அஸ்த்ரவித்தையில பரசுராமருக்கும் யுத்தஞ்செய்வதில் ஸ்ரீ ராமபிரானுக்கும வடிவிலஇந்திரனுக்கும பிரகாசத்தில்ஸூர்யனுக்கும ஒப்பானவர். அந்தப்பாண்டுனர், தேவர்கள், தானவர்கள், கந்தர்வர்கள, பிசாசர்கள், நாகர்கள், அரக்காகள், மனிதர்களாகிய இவர்களனைவரும் சேர்ந்தாலும யுத்தத்தில் (அவர்களால்) வெல்லமுடியாதவர. அவர் தேவகூட்டங்களோடு யுத்தத்திற்குவந்த இந்திரனைத் தம்பராக்ரமத்தினலஜயித்ததுக் காண்டவவனத்தை அக்னிக்குஎரிக்கக்கொடுத்தது அக்னியைத்திருப்திசெய்வித்தவர். அக்னியைத்திருப்திசெய்வித்ததினால அவருக்குத திவ்யாஸ்த்ரங்கள்கிடைத்தன. ராஜாவே! தேவாகளும்அடைவதற்கரிய ஸுபத்ரையென்றுபெயர்பெற்ற கிருஷ்ணஸஹோதரி அவரிடையப்பெற்றுள். ராஜாவே! அர்ஜுனனுக்குஇளையவர் நகுலன்என்றுபெயர் பெற்றவர். அவர் உருவமெடுத்தவந்த மன்மதன்போல உலகத்தில் மிக்க அழகானவர். அவருக்கிளையவர் ஸஹதேவனென்று கியாதி பெற்றவர்; மஹாபாக்யசாலி; யுத்தத்திலகுமார்க்கடவுளுக்குநிகரானவர். நான் அவரால உபமிடம்அறுபபடபடடவன். எனக்குக் கடோத்கசனென்றுபெயர். நான்பீமஸேனராஜாவின்புத்திரன்; மிக்க பலசாலி. என்தாயார மஹாபாக்யசாலியான ஹிடிம்பையென்றுமரக்கி. நான் பாண்டவர்களுக்கு உபகாரஞ்செய்வதற்காக இந்தப்புவனியெல்லாம ஸஞ்சரிக்கிறேன் யுதிஷ்டிரர் இந்தபபூமிமுழுமைக்கும் அரசராய்விட்டார். அவர் ராஜஸூயமென்னும சிறந்தயாகத்தைச செய்ய ஆரம்பித்தக் கபபமவாங்குவதற்காகத் தமஸஹோதரர்களை எல்லாதிசைகளிலும அனுபபியிருக்கிறார். அவர கிருஷ்ணனுடன் சேர்ந்து (யோசித்து) தம்பிமாரையனுபபினர். ராஜாவே! அவர்களில் மஹாரதரும மஹாபலசாலியுமான அர்ஜுனர் விரைவாக வடக்கேசென்று மேருமலையைத்தாண்டி லக்ஷ்மியோஜனதூரம்சென்று ராஜாக்களெல்லாரையும் தமதுபராக்ரமத்தினால்யுத்தத்தில் ஜயித்தும் கொன்றும வசபபடித்தி ஸ்வர்க்கத்தின் அருகேசென்று அதிகமான ரத்னங்களையும் உயர்ந்தகுதிரைகளையும பலவகையான தனங்களையும் கொண்டுவந்து அவற்றையெல்லாம் தர்மராஜாவுக்குக் கொடுத்தார்.

அரசர்க்கரசே! பீமஸேனரும் தம்வலிமையினால் கீழ்த்திசையைஜயித்து அரசர்களைவசபடுத்தித் தர்மராஜாவுக்குத் தனத்தையளித்தார். அவ்வாறே நகுலரும் கபடத்திற்காக மேற்றிசைக்குபுறப்பட்டார். ராஜச்ரேஷ்டரே! ஸஹதேவர் தென்திசையைச்சேர்ந்து எல்லாஅரசர்களையும்ஜயித்து அவர்களால் மரியாதைசெய்யபபெற்றுக் கப்பத்திறகாக என்னை இங்கேயனுபபினர். பாண்டவர்களுடையசரித்திரத்தை உமக்குச சுருக்கமாகச்சொன்னேன். மஹாராஜாவே! தர்மநதெரிநதவரே! தர்மராஜாவானயுதிஷ்டிரரையும் பரிசுத்தமானராஜஸூயயாகத்தையும ஜநத்பிரபுவான கிருஷ்ணபகவானையும் நினைதது பபார்தது இபபோது நீர் கபபமகொடுபபதற்குரியவராகிறீர்" என்றான்.

அவன்சொன்னதைக்கேட்டு ராக்ஷஸர்க்குராஜாவும் தர்மாத்மாவுமாகிய விபீஷணர் ராக்ஷஸர்களுடன் அநதஆஜ்ஞையை அங்கீகரித்தார். சிறந்தஅறிவாளரான அநதபபிரபு அது கண்ணபிரான்செய்ததென்று நினைத்தார். அதன்பிறகு அனேகவிதமான சால்வைகளையும், விரிப்புகளையும, மணியினாலும பொன்னினாலும் அலங்கரிக்கப்பட்ட தந்தக்கட்டில்களையும, பொற்கட்டிலகளையும, பெரியவிலைபெற்ற ஆபரணங்களையும், பவழங்களையும, முத்துக்களையும், பொற்பாண்டங்களையும, பொற்கலசங்களையும, பொறகுடங்களையும, விசித்திரங்களானஅண்டாக்களையும, கொபபரைகளையும, வெளளிப்பாத்திரங்களையும், ரத்னகுண்டலங்களையும, பொன்மலர்களையும், சிறநதபொன்னால் செய்யப்பட்ட மற்றும அனேகமபொருள்களையும், விசித்திரமானசுழிகளோடுகூடியவையும சநதிரனைபபோன்றவையுமான சங்குகளையும், யாகசாலையின் தோரணஸ்தம்பங்களாயிருக்கதக்க பதினன்குபிணமரங்களையும், பொற்றமரைமாலர்களையும, ரத்னமயமானபல்லக்குக்களையும்,மிகுநதவிலைபெற்ற கிரீடங்களையும், ரத்ன்கள் இழைத்தவஸ்திரங்களையும, உயர்நதசநதனங்களையும, பலவகைவஸ்திரங்களையும், ராஜாவான விபீஷணர் ஸஹதேவனுக்குஅளித்தார். மதுபானமசெய்த மதததினால் கண்கள்சிவநத எண்பத்தெண்ணூபிரம்அரக்கர்கள் அந்தவிலையுயர்ந்த பொருள்களைஎத்தையும கொணர்நதனர். அநத ரத்தினங்களெல்லாவற்றையுமவாங்கிக்கொண்டு கடோத்கசன் புறப்பட்டான். அவன் ராஜாவானவிபீஷணருக்கு வநதனஞ்செய்து கைகூப்பிப் பிரதக்ஷிணஞ்செய்து புறபபட்டான். கடோத்கசன் ராக்ஷஸர்களோடு கூட ரத்தினங்களெல்லாம் எடுத்துக்கொண்டு லங்கையிலிருந்து ஸஹதேவனிருக்குமிடத்திற்கு விரைவாகச்சென்றான். அவர்களை

வரும் கடலிக்கடந்து ஸஹதேவனிடம்சேர்ந்தனர். ஜனமேஜய ராஜாவே! ரத்தினங்களைக்கொண்டுவந்திருக்கும் பயங்கரமான அரக் கரையும் கலிடோத்கசனையும் ஸஹதேவன்கண்டான். அங்குள்ளதமி ழர்கள் அரக்கரைக்கண்டு பயந்தோடினர். பிறகு கலிடோத்கசன் ஸஹ தேவனியடைந்து கரங்குவித்துநின்றான். ஸஹதேவனும் ரதத்தினக் குவியலையும் கலிடோத்கசனையுமகண்டு களிபபுற்றான். தன்இருகரங் களினலும் கலிடோத்கசனைத்தழுவியும மற்றஅரக்கரைப்பார்த்தும் அன் புபாராட்டினன். தமிழர்களனைவருக்கும விடைகொடுத்தனுபபின பிறகு தான் புறபபடத்தொடங்கினன். புத்திமானன ஸஹதேவ னென்னும்அரசன் அங்கிருந்து திருமபினன். இவ்வாறு பராக்ரமத் தினலும் இனியசொல்லினலும ஜயலக்ஷ்மிபொருந்தியிருபபதனலும் ராஜாக்களனைஜயித்துக் கப்பங்கட்டுவித்து அநதவீரன் திரும்பிவந் தான். ராக்ஷஸர்களுடன்கூட ரத்தினமயமான பனிமலங்களையெடுத்து க்கொண்டு பூமியை அதிரச்செய்கிறவன்போல இநதிரபிரஸ்தத்தில் பிரவேசித்தான். ஜனமேஜயராஜாவே! ஸஹதேவன் யுதிஷ்டிரரைக் கண்டு கரங்குவித்துவணங்கி வநதனஞ்செய்துநின்று அவராற்கொண் டாடபபெற்றான். யாருக்குமகிடையாத மிகுதியான தனக்குவியல் கள் இலங்கையிலிருநது வநதனவற்றைக்கண்டு தாமராஜா மிகுநத ஸந்தோஷத்தையும் மிக்கவியபபையுமடைநதார். பரதச்ரேஷ்டரான ஜனமேஜயராஜாவே! ஆயிரங்கோடிகளுக்கு மேற்பட்டபொன்களை யும் பலவகைரத்தினங்களையும் பசுக்களையும வெள்ளாடுசெம்மறியாடு எருமைகளையும் மஹாத்மாவானதர்மராஜருக்கு ஒப்பித்துத் தன்காரி யததைச்செய்து ஸஹதேவன் ஸுகமாகவஸித்தான்.

முப்பத்தைந்தாவது அத்தியாயம்.

திக்விஜயபர்வம். (தொடர்ச்சி.)

(நகுலன் மேற்றிசையையஜயித்துக் காணிக்கையுடன் இந்திர பிரஸ்தம்வந்துதர்மராஜருக்குஒப்பித்தது.)

ஹமர்த்தனனகுலன் [1]வாஸுதேவனென்னும் அரசனைஜயிக் கப்பட்ட திக்கை ஜயித்தவகையையும அவனுடையசெய்கைகளையும சொல்வேன். புத்தியிற்சிறநதநகுலன் காண்டவப்ரஸ்தத்திலிருந்து புறப்பட்டு மேற்றிசையைநோக்கிப் பெருஞ்சேனையுடன்சென்றான்.

[1] பௌண்ட்ரகவாஸுதேவன்.

தனதுபெரியஸிம்மநாதத்தினுலும படைவீராகளின் கர்ஜனைகளினு லும தேருருளைகளின் ஒலியினுலும் இந்தபூமியை அதிரச்செய்து கொண்டு தனங்களும் தான்யங்களும பசுக்களும் மிகுதியாகநிரம்பின தும் சுபிரமணியக்கடவுளுக்குபபிரியமுள்ளதுமான ரோஹிதகமலைக் குச் சென்ருன். அவ்விடத்தில சூரர்களான மத்தமயூரகளென்னும் அரசர்களோடு அவனுக்குப பெரியசண்டைநடந்தது. சிறந்தசக்தி யுள்ள அந்தநகுலன் நீரில்லாக்காடான மேசமணிதையும் தானியங் கள்மிகுதியாகவுள்ள சைரீஷகம, மஹத்தமென்னும் தேசங்களை யும் ஆக்ரோசனென்னும் ராஜரிஷியையும வசபபடுத்தினன். ஆக்ரோ சனெனு நகுலனுக்குப பெருஞசண்டைநடந்தது அந்தபபாண்டவன் ஆக்ரோசனுடையதேசமாகிய தசார்ணதேசததைஜயித்து அங்கிரு ந்துபுறபபட்டான். சிறந்தபராக்ரமமுள்ள புருஷச்ரேஷ்டனகுல ன், சிவிகள், திரிகர்த்தாகள், அமபஷ்டர்கள், மாலவர்கள், காப படர்களென்னும் லோகதேசததரசர்களையும மத்தியமகேயர்களை வாட தானர்களென்னும 1பிராமமணாகளையுமஜயித்து மறுபடியும் திருமபி வந்து புஷ்கரமேக்ஷத்திரமாகிய வனத்திலவலிக்கும் உத்ஸவஸங்கேதர் களின்கூட்டத்தாரை ஜயித்தான். லிந்தநாதிக்கரையிலிருகும் மஹா பலசாலிகளான கிராமணீயரென்பவரையும ஸால்வதிந்திபைச்சார்ந்து மத்ஸ்யங்களினுல்ஜீவிகும சூததிராகள் இடையர்களின்கூட்டங்களை யும மலைகளிலவலிபபவரையும்ஜயித்தபப சுகநதமென்னும்தேசத் தையும அமாபர்வதமென்னுமமலையையும உத்தரஜ்யோதிஷம், திவ்ய கடமென்னும நகரங்களையுமஜயித்து அவற்றின் 2தவாரபாலகளை பராகரமத்தினுல வசபபடுத்தினன். அந்தநகுலன் ராமடர்களையும் ஹாராகளையும ஹூணர்களையும மறறுமுளளமேறறிசைராஜாக்க ளைவசையும தன்கடடளையினுலேயேகீழ்படுத்தினன். பாரதரான ஜனமேஜயரே! அங்கிருந்துகொண்டே வாஸுதேவனுக்குத்துதனை யனுபபினன். ராஜாவே! அச்சமறறவனனை அவ்வசன இவன்கட டளையைவற்றுகொண்டான். அதன்பிறகு பலவானனகுலன் மத்ர தேசத்துராஜதானியாகிய சாகலநகருக்குச்சென்று தனதுமாதுல னைசல்லியனைச் சினேகத்தினுலவசபபடுதத்திக்கொண்டான். ஜனமே ஜயராஜாவே! மரியாதைக்குரியவனும யுதத்வீரரிற்சிறநதவனுமாகிய நகுலன் அந்தசசல்லியராஜனுல் மரியாதைசெய்யப்பெற்று மிகுதியான ரத்னங்களைப பெறறுக்கொண்டு புறப்பட்டான். கௌரவச்ரேஷ்ட

1 மூலததில், 'தவிஜாந்' என்றிருகிறது.
2 தேசங்களின்வழிக்காவலான அரசன்.

னும விசித்ரமானயுத்தங்கள்தெரிந்தவனுமான நகுலன் அதன்பிறகு கடலின்உள்தீவுகளில்வஸிக்கும மிகக்கொடியவரான பஹ்லவர், பர்ப்பரர், கிராதர், யவனர், சகரென்னும மிலேச்சராஜாக்களைவசபடுத்தி அவர்களிடமிருந்து ரத்தினங்களைபபெற்றுக்கொண்டு திரும்பினன். மஹாராஜாவே! அந்தமஹாத்மாவினுடையபொக்கிஷமாகிய பெருந்தனத்தைப் பதினுயிரம்ஒட்டகங்கள் கஷ்டபபடடுச்சுமந்தன. பரதச்ரேஷ்டரானஜனமேஜயரே! ஜயலக்ஷ்மிபொருந்தியவனும மாத்ரிபுத்ரனுமானநகுலன் வருணனுல்ரக்ஷிக்கபபட்டதும (பௌண்டரக) வாஸுதேவனுல்ஜயிக்கபபட்டதுமாகிய மேற்றிசையைஜயித்து இந்திரப்பிரஸ்தத்திலிருக்கும் வீரரான யுதிஷ்டிரரிடம்வந்து அந்ததனத்தை அவருக்குஒப்பித்தான்.

திக்விஜயபர்வம் முற்றிற்று.

மூப்பத்தாருவது அத்தியாயம்.

ராஜஸூயபர்வம்.

(ராஜஸூயயாகத்தின் ஆரம்பம்.)

தர்மபுத்திரர் ஜனங்களைரக்ஷித்ததினுலும ஸதியத்தைக் காபபாற்றினதினுலும் பகைவர்களையொழித்ததினுலும பிரஜைகள் தம்தம கருமங்களில் தவறுமலிருநதனர். வரிகளைச் சரியாகவாங்குவதினுலும் தர்மமாகஆள்வதினுலும் மேகம நிரமபவர்ஷித்தது. தேசம செழிப்பாயிருந்தது. எல்லாதொழில்களும் நன்றுகநடந்தன. பசுக்காத்தல் பயிர்செய்தல் வர்த்தகம இவையெல்லாம் ராஜாவின்ஆளுகையினுல் சிறபபாகநடநதன. ஜனமேஜயராஜாவே! திருடர்கள் மோசம்செய்பவர்கள் ராஜாவின்அபிமானம்பெறறவர்கள் ஆகிய இவர்களிடத்திலும் ஜனங்களில் ஒருவர்க்கொருவரிடததிலும் வஞசகப பேச்சுக்கள் யாராலும்கேட்கபபடவில்லை. யுதிஷ்டிரர் தர்மநதவறும விருநததனுல் அநதக்காலத்தில் அனுவிருஷ்டி, அதிவிருஷ்டி, வியாதிகள், தீப்பிடித்தல் இவையெல்லாம்இருக்கவில்லை. அரசர்கள், பிரியத்தைச்செய்வதற்கும் அடிப்பதற்கும் வழக்கமாயுள்ள கப்பத்தைக் கொடுப்பதற்கும் யுதிஷ்டிரரிடம சென்றூர்களேயல்லது வேறுகாரியங்களைப்பற்றிச் சென்றதேயில்லை. தர்மராஜருடையபொக்கிஷம் நியாயமாகவந்தபொருள்களினுலேயே அனேகநூற்றாண்டுகள்செலவுசெய்தாலும் அழியாதபடி பெருகியிருந்தது. தர்மராஜாவானவர் தமது

தாண்யமமுதலியவற்றின் அளவையும் பொக்கிஷத்தின் அளவையுமறிந்து யாகஞ்செய்வதற்கே நிசயஞ்செய்தார். அவருக்குவேண்டியவரீனவரும் தனித்தனியாகவும் சோதரும், "பிரபுவே! நீர்யாகஞ்செய்வதற்கு இதுதருணம்; இப்போதேசெய்வது யுக்தம" என்றுரைத்தனர். அவர்கள்இவ்வாறுபேசிகொண்டிருக்கையிலேயே பழமையானரிஷியும் வேதமூர்த்தியும் [1]ஞானிகள்மாத்திரமேகாணக்கூடியவரும் அழிவில்லாதவருட்சிறந்தவரும் உலகதத்தின்உறபதத்திக்கும பிரளயத்துக்கும்காரணரும சென்றன வருவன நிகழ்வனவாகியஅணைத்துக்கும் ஈசுவரரும கேசியென்னுமஅஸுரனை ஸம்ஹாரஞ்செய்தவரும யாதவர்களரீனவாக்கும விரோதிகளைக்கொன்று ஆபதகாலங்களில்அபயங்கொடுத்து மதில்போலக்காபபவரும் புருஷோததமருமாகிய கண்ணபிரான் வஸுதேவரை மரியாதையுடன் சேரீனதலீவராகவற்படித்திப பெருஞ்சேரீனயினுலசூழபபெறறவராகத தர்மராஜாவுக்கு அளவற்றதனக்குவியலீ எடுததுகொர்ண்டுவநதார். மூடிவில்லாததும் அழியாததுமாகிய ரத்னக்கடலான அநதத் தனகுவியலீயெடுததுக்கொண்டு தமதுதேரினுளியினுல் எங்குமமுழங்கச்செய்து இநதிரபபிரஸ்ததத்தில்பிரவேகித்தார். முன்னமேநிரமபின அநதநகரதை மறுபடியும்நிரபபுவதனுல் பாண்டவர்களின்பகைவர்களுக்குத் துயரஞ்செய்பவரானுர். கிருஷ்ணபகவான்எழுநதருளினதினுல் பாண்டவர்களின்நகரமானது ஸுரயனில்லாதஇடதத்தில ஸுர்யோதயமானதுபோலவும் காற்றிலலாதவிடதத்தில்காற்றடித்ததுபோலவும் மகிழ்ந்திருந்தது. அந்தபபுருஷசரேஷ்டரான யுதிஷ்டிரர், தௌமியர் வியாஸர்முதலியபுரோஹிதர்களோடும் பீமார்ஜுனநகுலஸஹதேவர்களோடும்கூடி மனக்களிபபுடன் கண்ணபிரானையெதிர்கொண்டழைத்து, சாஸ்திரபபிரகாரம் அதிதிஸதகாரஞ்செய்து ஸுகமாகஉட்கார்நதபிறகு குசலபரசனமசெய்து பின்வருமாறு பேசலுற்றார்.

"கிருஷ்ணு! உமமாலேதான் இநதபபுவனிமுழுதும் என்வசததிலிருக்கிறது. யாதவரே! மிகுநததனம் உமதுஅனுக்ரஹத்தினுலை ஸம்பாதிக்கப்பட்டது. தேவகிபுத்ரரே! மாதவரே! உமதுஅனுக்ரஹம்பெற்றநான் இதையெல்லாம் சாஸ்திரபபிரகாரமாகப பிராம்மணச்ரேஷ்டர்களுக்கும அக்னிபகவானுக்கும் உபயோகபபடுத்தக்கருதுகிறேன். பகவானே! சிறந்தகைகளீயுடையவரே! அதற்காக உம்மோடும் என்தம்பிகளோடும்சேர்ந்து யாகஞ்செய்யவிரும்புகிறேன்.

---

1 ! தெரிந்தவர்களாகநினைப்பவருக்குத் தெரியாதவரும்' என்பதுபழைய உரை.

அதுவிஷயததில் நீர் அனுமதிகொடுக்கக்கடவீர். சிறந்தபுஜங்களீ யுடையகோவிந்தா! நீர் உமக்குத் தீக்ஷையைச்செய்வித்ததுக்கொள் ளக்கடவீர். பகவானே! நீர் யாகஞ்செய்தால நான் பாவமற்றினவ னுவேன். பிரபுவே! அல்லது இருதத்தம்பிகளுடன் வேள்விசெய் யுமபடி எனக்கேஉத்தரவுகொடும். கிருஷ்ணு! உம்மால் அனுமதி கொடுக்கபபெற்றுததான் நான் சிறநதயாகத்தைசெய்வேன்" என் ரார. அதைககேடடகண்ணிபிரான் தாமராஜாவின்குணங்களின்மிகு இயைபபறறி நிரம்பபபேசி, "ராஜசரேஷ்டரே! நீதாம அரசர்க்கும அரசா; இருதமஹாயாகதறகுததகுதியுளளவா. நீரே யாகதீக்ஷை செய்துகொள்ளும. நீர் செய்வதஞ்லேயே நாங்கள் கிருதாரத்த ராவோம. உமதுநன்மைக்கு நாங்களிருபபதனால் நீர் நினைததயாகத தைசெய்யும. என்னையும் காரியங்களில்கட்டளையிடும. நீர்சொல லுவனவறறையெல்லாம செய்வேன்" என்று யுதிஷ்டிரருகு மறு மொழிகூறினா. யுதிஷ்டிரா, "கிருஷ்ணு! ஹருஷீகேசா! நான் நினைத்தபடி நீர்வருதுசோருததனால் என்எண்ணம பயன்பட்டது. எனக்குக் காரியஸிததி நிச்சயம" என்றுசொன்னார். கிருஷ்ணனால் அனுமதிகொடுக்கபபெறற தாமராஜா ஸஹாதரரகளுடன்கூட ராஜ ஸூயயாகமசெய்வதறகு வேண்டியஸாதனங்களைச் சேகரித்தார. அபபோது சததுருக்களையடகுகிறவராகிய தாமராஜர், யுத்தவீரர் களிற்சிறநதவனுகிய ஸஹதேவனையும மநதிரிகளனைவரையுமபார்த்து, "இருதயாகதறகின் அங்கங்களையும கருவிகளையும மங்களத்திரவியங் களையும் மஹாமதறகுரியபதார்ததங்களையும தெளமயமுனிவர்முத லியபிராமமணர்களின்சொறபடி பூர்ணமாகவும விரைவாகவும் மணி தர்கள், அவரவர்தகுதிகுதகுதறகபடி முறையேகொண்டுவரக்கடவர். என்விருபபபடி இருதிரஸேனன், விசோகன், அர்ஜுனனுடைய ஸாரதியாகியபூரு இவாகளை அன்னம்முதலியவறறைக்கொண்டுவருவ தறகு நியமிக்கபபடக்கடவர். கௌரவசரேஷ்டனஸஹதேவனே! பிராமமணர்களுடையவிருபபத்தைப பூரதிசெய்யதக்கவையும் ருசியும்மணமுமுள்ளவையுமாக எலலாஉணவுகளும செய்விக்கப்பட வேண்டும்" என்றுகடடளையிட்டார். யுததவீரர்களிற்சிறநதவனன ஸஹதேவன் தாமராஜாவானயுதிஷ்டிரர்சொன்னபோதே, "எல்லாம் ஸித்தமாயிருககிறது" என்றுஅவருக்குத்தெரிவித்தான். ஜனமேஜய ராஜாவே! பிறகு வியாஸமஹரிஷி வேதங்கள்உருக்கொண்டுவந்தது போன்ற மஹானுபாவர்களான பிராம்மணர்களை ரித்விக்குக்களாக அழைத்துவருதனர். ஸததியவதிபுத்ரரான அவர் தாமே அந்தத்தர்ம

ராஜாவுக்கு பிரம்மாவின்ஸ்தானத்தைவஹிதார். தனஞ்சயகோத்திரத்தாரிறகிறநதவரான ஸுஸாமாஎன்பவர் ஸாமகானமசெய்யும உத்காதாவாயிருநதார். பிரமமஜ்ஞாநிகளிறகிறநதவரான ,யாஜ்ஞவல்கிய மாமுனிவர் சிறநதஅத்வர்யுகளிலதலைவர்யிருநதார். வஸுவின்புத்திரரான பைலர் தெளமியருடன்சேரநது ஹோதாவாயிருநதார் ஜனமேஜயராஜாவே ' வேதங்களிலும வேதாங்கங்களிலுமகரைகண்டவர்களாகிய இவர்களுடைய புதல்ரிராகள் சிஷ்யர்களாகவும ஹோதாவின்வேலையைச செய்துகொண்டிருநதனர். அவர்கள் புண்ணியாகவாசனஞசெய்விதஞச சாஸ்திரோக்தபபிரகாரம அநதயாகதது க்கு ஸங்கலபஞசெய்துகொண்டு அநதயாகதது க்குகருபிபிடபபட்ட பெரியயாகபூமியைப பூஜைசெயதனர். அநதபபூமியில ராஜாவினுல் அனுமதிகொடுக்கபபெறற சிறபவேலைக்காராகள தேவகிருஹங்களைப போல நலலவாஸஸ்தானங்களையும விசாலமுமானகிருஹங்களைக்கட்டினர். ராஜாகளிலும மனிதாகளிலுமசிறநதவரான அநதகதர்ம ராஜா தமககு அநதஸமயதது நகு மநதிரியாயிருநதஸஹதேவனைப பாரதது, "நீ ராஜாகளிலயைபபதறகு விரைவாகசசெலலுமதூதர்களை உடனே அனுபபு" என்று கட்டளையிட்டார். ராஜாவின்சொல லைக்கேட்டவுடன் ஸஹதேவன தூதாகளையழைத்து, "தேசங்களிலுள்ளபிராமமணாகள க்ஷத்திரியர்கள வைசியாகள கௌரவிகக த்தக்க சூத்திரர்கள் எல்லாரையுமழைத்துவாருங்கள" என்றுகட்டளையிட்டான். அநதத்தூதாகள் ஸஹதேவன்கட்டளைபபடி எல்லாராஜாக்களையுமழைத்தனர். இன்னும அனேகதூதர்களையும் ஸஹதேவன் அனுபபினன். தூதாகள் குறிகைகளிலேறபி பலதேசங்களுக்குச் சென்றனர். ஜனமேஜயராஜாவே! ராஜாவானயுதிஷ்டிரர் பீஷ்மரையும த்ரோணரையும திருதராஷ்டிரனையும் விதுரரையும கிருபரையும் தமதுபிராதாக்களான துரியோதனன்முதலியோரையும தம்மன்பர்களையும் அழைபபதறகாக நகுலனை அஸ்தினபுரத்துக்கனுபபினர். பாரதரே! அதன்பிறகு அநதப்பிராமமணாகள குநதிபுதரரானயுதிஷ்டிரருக்குக் குறித்தகாலத்தில் ராஜஸூயயாகதீக்ஷைசெய்வித்தனர். தர்மமேமயுருவமெடுத்ததுபோன்றவரும புருஷச்ரேஷ்டருமான தர்மதத்தில்மனமுள்ளவருமான யுதிஷ்டிரா, கேட்டையுமமூலமும்சேர்நத அமாவாசையில் மான்தோலைப்போர்த்தப புள்ளிமான்தோலையுடுத்துத் தேககதத்தில்வெண்ணெயைததடவித் தீக்ஷைசெய்துகொண்டு ஆயிரக்கணக்கானபிராம்மணர்களால்சூழப்பட்டவராகித் தம்மைஹோதார்களோடும் சுற்றத்தாரோடும் ஸ்நேஹிதாகளோடும் மநதிரிகளோடும்

பலதேசங்களிலிருந்துவந்த க்ஷத்திரியஜாதியாரான அரசர்களோடும் ஸைபயாரோடுங்கூடி யாகசாலைக்குச்சென்றார். எல்லாவித்தைகளிலும் தேர்ந்தவர்களும் வேதவேதாங்கங்களிற் கரைகண்டவர்களுமாகிய பிராம்மணர்கள் பற்பலதேசங்களிலிருந்து அங்கேவந்தனர். உடனே ஆபிரக்கணக்கான சிறபவேலைக்காரர்கள தர்மராஜாவின்கட்டளையி னல் அவர்களுக்கும் அவர்களுடன்கூடவந்தவர்களுக்கும தனித் தனியே மிகுதியானபோஜனங்களும் வஸ்திரங்களுமுள்ளவையும் எல்லாப்பருவங்களின்பலன்களுமநிரமபினவையுமான வீடுகளைக்கட் டினர். ராஜாவே! ராஜாவினல் பூஜிக்கபபெற்ற அந்தபபிராமணர்கள் நாட்டியங்களையும் நர்த்தனங்களையும் பார்த்துக்கொண்டும பலகதை களைச்சொல்லிக்கொண்டும் அந்தவீடுகளில்வஸிதனர். ஸுதோஷத துடன்பூஜித்துக்கொண்டும் பேசிக்கொண்டுமிருக்கும மஹாத்மாக்க ளான பிராமமணர்களின்பெருங்கோஷம அங்கே எப்போதும் கேட் கப்பட்டது. 'இவர்களுக்குக் கொடுங்கள்கொடுங்கள்' என்றும 'நீங் கள் புஜியுங்கள் புஜியுங்கள்' என்றும இவ்வகையானபேச்சுக்களே அங்கே எபபோதுமகேட்கபபட்டன. பாரதரே! லக்ஷக்கணக்கான பசுக்களையும படுக்கைகளையும பொன்களையும வேலைக்காரிகளையும ஒவ்வொருவருக்கும தர்மராஜாகொடுததனர். ஸ்வர்க்கத்துக்கு இந் திரணபபோலப் பூமிகரு ஒபபற்றவீரரும மஹாத்மாவுமான தர்ம ராஜாவின் அந்தயாகம இவ்வாறுநடநதது.

மூப்பத்தேழாவது அத்தியாயம்.

ராஜஸூயபர்வம். (தொடர்ச்சி.)

(அழைக்கப்பட்டவர்களெல்லாரும் யாகத்துக்குவந்துசேர்ந்தது.)

ஜனமேஜயராஜாவே! அதன்பிறகு மரியாதைசெய்து அழைக் கப்பட்டஅரசர்கள், தேவவிமானங்களிலிருந்து தேவர்கள புறப்படு வதுபோலத் தமதமகிருஹங்களிலிருந்துபுறபபட்டனர். பாரதரே! அந்தராஜாக்கள் மிகவிலைபெற்ற பலவகைத்தங்களையெடுத்துக்கொ ண்டு அந்தஅந்தத்திசைகளிலிருந்து அங்கேவந்தனர். புருஷச்ரேஷ் டரே! அந்தயாகத்தைப்பற்றித்தெரிந்த அனேகஅரசர்கள் தூதர்கள் சொன்னதைக்கேட்டு மனமகிழ்ச்சியுடன் பலவகைத்திரவியங்களை மிகுதியாகஎடுததுக்கொண்டு தர்மராஜாவையும அவருடையஸபை யையும்பார்க்கவிரும்பிஅவருடையயாகசத்துக்குச்சென்றார்கள். யுத்தங்

களில்ஜயிப்பவனுகிய அந்தகருலன் ஹஸ்தினபுரம்சேர்ந்து பீஷ்மரை யும் திருதராஷ்டிரனையுமழைத்தான். கரங்களைக்குவித்துவணங்கி நின்று பாதருலத்தோராகிய திருதராஷ்டிரனையும் பீஷ்மரையும் சிறந்த புத்திமானுனவிதுரரையும் அழைத்தான். பிறகு துரியோதனன்முத லான பிராதாக்களனைவரையுமு அழைத்தான். துரோணுசாரியர்முத லான அனைவரும மரியாதையோடு அழைக்கபபட்டனர். அதன்பிறகு திருதராஷ்டிரனுமு பீஷ்மருமு புததியிற்சிறநதவிதுரருமு துரியோத னன்முதலானஸஹாதரர்களனைவருமு மனமகிழ்ந்து பிராமமணர் களைமுன்னிடடுக்கொண்டு யாகத்துக்குச்சென்றனர்.

காந்தாரதேசதத்தரசனுகிய ஸுபலன், மஹாபலசாலியானசகுனி, அசலன், விருஷகன், ரதயுத்தஞ்செய்பவரில்சிறந்தவனுகிய கர்ணன், பலவானுனசல்லியன், மிக்கபலசாலியானபாஹ்லீகன், குருவம்சத்தவ னுன ஸோமதத்தன், பூரி, பூரிச்ரவன், சலன், அசவ்தத்தாமா, கிருபர், த்ரோணர், ஸிந்துதேசத்தரசனுனஜயத்ரதன், புத்திரர்களுடன்கூடிய துருபதன்,சால்வராஜன், பிராக்ஜ்யோதிஷகரத்தரசனும் மஹாரதனு மான பகதத்தராஜன் இவர்களும்சென்றனர். அந்தப்பகதத்தராஜன் கடலிலுள்ளதீவுகளில்வஸிக்கும் ம்லேச்சராஜரெல்லாருடனும் சென் ருன். மலைநாட்டரசர்களும் ப்ருஹத்பலனென்னும்அரசனும், பௌ ண்டரகவாஸுதேவனும, வங்கம, களிங்கம், ஆகர்ஷம், குந்தலம், காலவம், ஆந்ரம், த்ராவிடம, சிங்களம, காச்மீரமென்னும்தேசத் தரசர்களும், மஹாபராக்ரமசாலியான குந்திபோஜன், கௌரவாக னென்னுமரசன், மறறுமுள்ளசூரர்களானபாஹ்லீகதேசத்தரசர், இர ண்டுபுத்திரர்களுடன்கூடியவிராடன், மஹாபலசாலியான மாவேல் லன், மஹாவீரனுன சிசுபாலன்ஆகியஇவர்களும, யுத்தததில்அடங்கா தகொமபுப்புள்ளபலராமர், அனிருததன், கங்கன், சாரணன், கதன், பிரத் யும்னன், ஸாம்பன், சூரனுனசாருதேஷ்ணன், உல்முகன், நிசடன், வீர னுன அங்காவஹன்முதலான மஹாரதர்களான யாதவர்களனைவரும், மத்தியதேசமுதலான அனேகதேசங்களுக்கதிபதிகளான ராஜாக் களும, தர்மராஜாவின்ராஜஸூயயாகத்திற்கு வநதனர். ராஜாவே! தர்மராஜாவின்கட்டளையினல் பலவகைபபடடஉணவுகளுள்ளவையும் வா விகளாலும் சோலிகளாலுமசோபிபபவையுமான விடுதிகளை அவர் களுக்கு மநதிரிகள்கொடுததனர். தர்மபுத்திரர் அந்தமஹாத்மாக் களுக்குச் சிறந்தமரியாதைசெய்தனர். மரியாதைசெய்யப்பெற்ற அர சர்கள் கைலாஸமலையின்சிகரங்களுக்கொப்பானவையும் மனத்திற்கினி யவையும் சிறந்தபொருள்களினல்அலங்கரிக்கப்பட்டவையும் செவ்

வையாகக்கட்டப்பட்ட உயர்ந்தவெண்மையானமதில்களினுல் நாற்புற மும்சூழப்பட்டவையும் பொன்மயமானபலகணிகளுள்ளவையும ரத் தினத்தளவரிசைகளினுல்அலங்கரிக்கப்பட்டவையும் ஏறுதற்குச்சுக மானபடிகளுடையவையும உயர்ந்த ஆனைங்கள்முதலியசாமான்க ளுள்ளவையும் புஷ்பமாலைகளாலமறைக்கப்பட்டவையும உயர்ந்தஅகி ல்மணமகமழ்கின்றவையும ஹமஸத்திற்குமசந்திரனுக்கும் ஒப்பான நிறமுள்ளவையும ஒருயோஜனைதூரத்திலேயே எளிதாகக்காணப்படு கின்றவையும் விசாலமானவையும நேருக்குநேரானவாயில்களுள்ள வையும் இன்னும்அனேகம்சிறபபுக்களுளளவையும் பலவகைத்தா துக்கள்சேர்ந்த இமயமலைசிகரங்கள்போன்றவையுமான அவரவர்களு டையவிடுதிகளுக்குசென்றனர். அவ்வரசர்கள அங்கங்கே சிரமபரி காரஞ்செய்துவிடடு, பெருந்தக்ஷிணைகொடுபபவரும ஸபையோர்கள் அனேகரால்சூழப்பட்டவரும தர்மராஜாவுமான யுதிஷ்டிரரைக்கண் டனர். அப்போது அரசர்களும பிராமணர்களும மஹரிஷிகளும நிரமபின அநதச்சபை தேவர்கள்நிரம்பின தேவலோகமபோலவிளங் கிற்று.

முப்பத்தெட்டாவது அத்தியாயம்.

ராஜஸூயபர்வம். (தொடர்ச்சி)

(ராஜஸூயயாகம்நடத்தியது.)

ராஜாவே! பிறகு யுதிஷ்டிரர், பீஷ்மரையும த்ரோணரையும எதிர்கொண்டழைத்து அபிவாதனஞ்செய்து, பீஷ்மர், த்ரோணர், கிருபர், அசுவத்தாமா, துரியோதனன், விவிமசதிஇவர்களைப்பார்த்து, "நீங்கள்எல்லாரும் இநதயாகத்தில் எண்ணசசிறபபிகக்கடவீர்; இங்கே எனக்குள்ளசெல்வங்களெல்லாமஉங்களுடையனவே. என னுல்அழைக்கப்பட்டநீங்கள் உங்களிஷ்டபபடி என்னை நடத்தக்கட வீர்" என்றுசொன்னர். தீக்ஷைசெய்துகொண்ட அந்தப்பாண்ட வஜ்யேஷ்டரான தர்மராஜர் அவர்களெல்லாரையும பார்த்து இவ்வாறு சொல்லி உட்னே அவரவருக்கு ஏற்றவேலைகளில் அவரவர்களை நிய மித்தார். போஜனத்துக்கு வரிசையாக உட்காரவைபபதிலும் எச் சிலேச்சுத்திசெய்விபபதிலும். போஜனங்களைவிசாரிப்பதிலும் யுயுத் ஸுவையும், பக்ஷிணங்களையும் போஜனங்களையும்பற்றியவேலைகளில் துச்சாஸனனையும், பிராம்மணர்களையழைப்பதில் அசுவத்தாமாவை யும், ராஜாக்களுக்குமரியாதைசெய்வதில் ஸஞ்சயனையும், செய்தவற்

றையும் செய்யவேண்டியகாரியங்களையும் செம்மையாகபபார்பபதில் பீஷ்மத்ரோணர்களையும, பொன்னையுமபொன்நாணயங்களையும ரத்தினங்களையும பார்த்துக்கொள்வதிலும் தக்ஷிணைகொடுபபதிலும் கிருபாசாரியரையும ஏற்படுத்தினர். அவ்வாறே மறறபபுருஷசரேஷ்டர்களையும் அவரவருக்குததகுதியானகாரியங்களில் பிரவிர்த்திக்கச் செய்தார். நகுலனை அழைதது வரப்பட்ட பாஹ்லீகன, திருதராஷ்டிரன், ஸோமதத்தன், ஜயத்ரதன்முதலானவர்கள் அங்கேராஜாவைப போலவிளங்கினர். எலலாத்தாமங்களும் தெரிநதவரான கூஹ்ததா வென்னபபட்ட விதுரா பொருடசெலவுசெய்பவராயிருநதார். துரியோதனன், எல்லாரிடங்களிலுமிருநதுவருபகாணிக்கைகளைவாங்கினன். பதிவரதைகளான குநதியும காநதாரியும ஸ்திரீகளுக்குமரியாதைசெய்தனர். அவாகளுடைய மருமகள்மாரனைவரும அவாகளின்கட்டளைகளை விரைவாகசெய்தனர். அஜாமீன் காரியம்நிறைவேற்றுவதற்காகக் கிருஷ்ணன்ஸமீபதிலேயேயிருந்தான். சல்லா உலகங்களாலுமபூஜிக்கப்பட்ட கிருஷ்ணபகவான் மேலானபலனைப் பூரணஞசெய்யவிரும்பி, பிராம்மணர்களின் பாதப்ரக்ஷாளனகாரியத்தில் தாமேஅமர்நதார். தாமராஜரையும அவஸபையையும பார்க்க விரும்பி வநதவர்கள்எவரும் ஆயிரத்துக்குததாழ்நத காணிக்கையை அங்கே கொண்டுவரவில்லை. அநத யாகததில அனேகரத்தினங்களினால் ராஜாக்கள் தர்மராஜரைச் சிறபபிததனர். நாமகொடுக்குமரத்தினங்களினாலேயே தர்மராஜர் யாகத்தை முடிக்கவேண்டுமேயென்று தாம் மற்றவர்களிலும் மேற்போதஷிரும்பி ராஜாக்கள் திரவியங்களை யளித்தனர். மஹாத்மாவான தர்மராஜாவின்ஸபையானது மேல்மாளிகைகளும்சிகரங்களுமுள்ளவையும் சேணிகளால் சூழபபடடவையும் அனேகரதனங்களினால விசிதரங்களானவையும சிறநதலீசுவரியமும் மிக்கஅழகுமபொருநதியவையும தேவவிம்னங்களைப்போலச செய்யபபட்டவையுமான ராஜகிருஹங்களாலும் பலதேசங்களிலிருந்து வநதிருக்கும்அரசர்களின் சிறநதஅரண்மனைகளாலும யாகததுக்காக வநத திக்பாலகர்களின்விமானங்களென்னும ரதங்களாலும் பிராம்மணர்கள்வஸிக்குமகிருஹங்களாலும் மிக்கஅழகாயிருந்தது. ஜீசுவரியத்தினால வருணபகவானேவெலலுகிற யுதிஷ்டிரர், [1]ஆறுஅக்னிகளும் நிரம்பினதக்ஷிணைகளுமுள்ள யாகத்தைச்செய்தார். வேண்டினவற்றையெல்லாம் நிரமபக்கொடுதது எல்லாஜனங்களையும் திருப்திசெய்வித்

[1] **ஆறுஅக்னிகளாவன : ஆதம்பணீயம், கூத்திரத்ருதி, வியுஷ்டி, த்ரிராத்திரம், தசபேயம், ஸப்தபேயம்.**

தார். அன்னமும் அனேகபக்ஷணங்களுமுள்ளதும் புஜித்துத்திருப்தியடைந்தஜனங்கள்நிரம்பினதும தனங்களாகிறகாணிகைகள் மிகுந்ததுமாக அந்தச்சபையிருந்தது. மந்திரதந்திரங்களினும ஸ்வரலக்ஷணங்களினும் தேர்ந்தவர்களானமஹரிஷிகளால் நடத்தப்பட்ட அந்த யாகத்தில் [1]இடாஹோமம் ஆஜ்யஹோமமென்னும்கிரியைகளால் தேவர்கள் திருப்தியடைந்தனர். தேவர்களேபோலவே பிராமணர்கள் முதலான எல்லாவருணத்தாரும தக்ஷிணைகளாலும போஜனங்களாலும் மிக்கபொருள்களாலும அந்தயாகத்தில மிகுந்தஸந்தோஷத்தோடு திருப்தியடைந்தனர்.

ராஜஸூயபர்வம்முற்றிற்று.

முப்பத்தோன்பதர்வது அத்தியாயம்.

அர்க்காஹரணபர்வம்.

(தர்மபுத்திரர் கிருஷ்ணனுக்கு முதலிரியாதைசெய்ததைப்பற்றிச் சிசுபாலன் ஆக்ஷேபித்தது.)

பிறகு அபிஷேசனீயமென்னும் ராஜஸூயத்துக்கு அங்கமான ஸோமயாகஞ்செய்புங்காலத்தில் பூஜிக்கத்தக்கமஹரிஷிகளும் பிராம்மணாகளும ராஜாக்களுடன்கூட அந்தாவேதியென்னும யாகசாலையில் பிரவேசித்தனர். அபபோது மஹாதமாவானயுதிஷ்டிரருடைய அந்த அந்தர்வேதியில் ராஜரிஷிகளுடன்கூட உட்கார்ந்திருந்த நாரதர்முதலிய தேவரிஷிகளும தேவாகளும பிரம்மஸபையில் சேர்ந்திருபபதுபோல விளங்கினர். மிகுந்தமகிமையுள்ள அவர்கள் யாககாரியங்களின்இடையில் ராஜாவினருகில் வாதங்கள்செய்தனர். இஃது இவவாறே ஆகுமென்றும இவ்வாறுகாதென்றும இஃது இவ்வாறும்ஆகலாமென்றும இது வேறுவிதமாகக் கூடாதென்றும பலர் ஒருவர்க்கொருவர் [2]விதண்டாவாதம பேசினர். அபபோது அவர்களிலிசிலர் தர்ககசாஸ்திரத்தினுல நிச்சயிக்கபபட்ட யுக்திகளைக்கொண்டு சிறியவிஷயங்களேப பெரியவைகளாகவும பெரியவிஷயங்களேச் சிறியவைகளாகவும் செய்தனர். அவர்களில் சிலமேதாவிகள் பருந்துகள் ஆகாயத்திலுள்ள மாமஸத்தையடிபபது போலப் பிறர்சொன்ன

---

1 அன்னமாகியஅவிவிஞல்செய்யும்கிரியை.

2 விதண்டாவாதம் = தன்மதத்தை வலியுறுத்தாமலே பிறர்சொல்வதைக் கண்டிப்பது.

விஷயங்களை [1]அடித்தனர். சிலர் தாமசாஸ்திரங்களிலும் சிலர் ராஜஸீகசாஸ்திரங்களிலும் ஸமர்த்தரும் சிலர் சிறந்ததவமுள்ளவரும் எல்லாப பாஷ்யங்களையும் கற்றுணர்ந்தவர்களில் சிறந்தோருமாகிய அந்தசசபையோர் வாத்ஞ்செய்து மகிழ்ந்தனர். வேதங்களெல்லாம் தெரிந்த மஹரிஷிகளும பிராமமணாகளும் தேவர்களுமநிரம்பின அந்தபெரிய அந்தர்வேதியானது நக்ஷத்திரங்கள்நிரமபின ஆகாயம் போல விளங்கிற்று. ஜனமேஜயராஜாவே! அபபோது யுதிஷ்டிரருடையகிருஹத்தில் அந்த அந்தாவேதியிலுள்ளஸபையில் சூத்திரனுவது அனுஷ்டானம்தவறினவனுவது ஒருவனும இல்லை. சிறந்த ஐசவரியமுள்ளவரும சிறந்த ஞானமுள்ளவருமான தாமராஜாவின் யாகசாலையதிலுண்டான அந்தச்சிறபபைபபார்த்து நாரதாமகிழ்ந்தார். ஜனமேஜயராஜாவே! அபபோது க்ஷத்திரியர்கள்எல்லாரும் வந்துசேர்ந்திருபபதைக்கண்டு அந்தநாரதமுனிவர் ஒருசிந்தையுற்றார். புருஷச்ரேஷ்டரே! முன்பு தேவர்கள தங்களஅமசங்களினால் பூமியில்அவதரிக்கும் தருணத்தில் பிரமமலோகத்திலநடந்த பூர்வகதையைநினைந்தார். ஜனமேஜயரே! அது தேவர்களின்சேர்க்கையென்றுஅறிந்து நாரதா தாமரைக்கண்ணராகிய திருமாலை மனததில்தியானித்தார். "எல்லாவறறையும் படைபபவராகிய எவர் முன்பு தேவர்களைக்கட்டளை பிடடாரோ அந்தபபிரபுவும் அஸுரர்களை யழிப்பவருமாகிய மகாவிஷ்ணு அஸுராகளைக்கொன்று தம்பிரதிஜ்ஞையைக் காபபதறகாகத தாமே க்ஷத்திரியவம்சததில வீரராகபபிறந்திருக்கிறார். சிவஸ்வரூபியும பிரமமதேவரூபியுமான பகவான் நாராயணன் தேவர்கள்எலலாரையும் பாரத்து, 'நீங்கள் ஒருவரையொருவர் கொன்றுவிடடுத திரும்பவும உங்கள லோகங்களை அடைவீர்கள்' என்று கடடளையிட்டுத தாமும யதுவம்சத்திலவதரித்தார். வம்சத்ததை விருததிசெய்கிறவரிற சிறந்தவரான் பகவான் பூமியிலுள்ள அந்தகர்களும் விருஷ்ணிகளுமாகிய இவர்களின் வமசத்தில் நக்ஷத்திரங்களுக்கிடையில் சந்திரன்போல மிகச்சிறபபுற்று விளங்கினார். இந்திராதி தேவரனைவரும எவருடைய கைவன்மையைப பற்றிக் கொண்டிருக்கின்றனரோ சத்துருஸம்ஹாரம்செய்பவரான அந்தத் திருமால் மனிதனைப்போலிருக்கிறார். பெரும்பொருளும தாமேயலதரிபபவருமான பகவான் இவ்வளவுபலமுள்ள இந்தக்ஷத்திரியஜாதியைத் திரும்பவும் தாமே ஸம்ஹரிக்கபபோகிறாரே, ஓ! ஓ! ஆச்சரியம்" என்று எல்லாஞதெரிந்தநாரதர் சிந்தித்தார், தாம்தெரிந்த

[1] ஜயித்தனர்.

வர்களில் ச்ரேஷ்டரும் சிறந்தபுத்தியுள்ளவருமான அந்தநாரதமுனி வர் யாகங்களாலாராதிக்கத்தக்க ஈசுவரரான நாராயணரிடத்தில் பிரானென்றறிந்து விவேகமுள்ள தர்மராஜருடைய அந்தப்பெருவேள்வியில் கௌரவத்தோடிருந்தார்.

அதன்பிறகு சிறந்தகுணங்களெல்லாம் பொருந்தினவரும் குணசாலிகளிற்சிறந்தவரும் பரிசுத்தமானமனமுடையவரும் பகைவரை வெல்லுகிறவரும் பாஞ்சாலசேனைகளின்முன்னே செலலுகிறவருமான யாதவர்களனைவரும் தங்கள் கடமையென்றுநினைத்துத தங்கள்மனைவிகளோடும் சுற்றத்தாரோடும மந்திரிகளோடுங்கூட ரத்னசிம்மாசனங்களிலெழுந்தருளிக்கொண்டுவந்தனர். தூரதேசமாயிருந்ததனாலும் பாரமதிகமாயிருந்ததனாலும் ஸமுத்ரராஜரூபியாளவர்கள் பகவானுக்குப் பின்வந்துசேர்ந்தனர். பகைவர்கூடடங்களையழிப்பவரும் ஜனனமில்லாதவரும் சகாயுததாரியும் யாதவச்ரேஷ்டருமான கண்ணன் பின்வந்துசேர்ந்தசேனையைப்பழைதது வஸுதேவரைச சேனைக்கதிபதியாகவைத்து யாகஞ்செய்யும யுதிஷ்டிரரிடமசென்றார். மாதவர் தர்மராஜாவுக்காக அளவற்றதனக்குவியலை முன்னிட்டுக்கொண்டு காண்டவபரஸ்தத்துக்குவந்தார். அவ்விடததிலயஜ்ஞத்திறகாகவந்துமின்னலோடுகூடிய மேகங்கள்போன்ற தேசமுளளவர்களும் ஸிம்மங்களபோன்ற பலசாலிகளுமாகப பூமியைமறைததுநிற்கும் சிசுபாலன் பக்ஷத்திறசேர்ந்த அரசக்கூட்டங்களெலலாம யானைக்கூட்டததலேவன் யானைக்கூட்டத்தலேவர்களைப பாரபபதுபோலப பார்த்துக்கொண்டும ஜனக்கூடடங்கள்வற்றுத கடலபோன்ற ராஜக்கூடடத்தைத் தம ரதகோஷதனிலை கலக்கிக்கொண்டும் கண்ணபிரான்வந்தார். கிருஷ்ணன்வருதலை பாண்டவர்களின்நகரம் ஸூர்யனில்லாதவிடத்தில் ஸூர்யன் உதயமானதுமபோலவும காறறிலலாதவிடத்திற காற்றடித்தாற்போலவும் ஸமுத்ரராஜமடைந்தது.

ராஜநீதியும தர்மசாஸ்திரமும்தெரிந்தவனும் மனிதர்களின்தாதரமறிந்தவனும மாத்ருபுதரனுமான ஸஹதேவன் பிராம்மணர்களையும க்ஷத்ரியர்களையும் பூஜிபபதறகுரியமிக்கபபட்டிருந்தான். உலகங்களுக்குஸூர்யன்போலத தம்ஒளியோடுவிளங்கிக்கொண்டுயாகபூமியில்பிரவேசிப்பவரும, பலராமருக்குஇளையவரும், ஈச்வரரும், சக்திகளின்சேர்க்கையுள்ளவரும், பிரம்மரிஷியும், அறிந்தோமென்றிருபபவருக்குக்காணபபடாதவரும, பிரம்மரிஷ்டர்களான வயதில்முதிர்ந்தபெரியோர்களுக்கு உய்யுமவழியாகவும் ஸ்தாவரஜங்கமங்களிதத்திறகும்பிறப்பிறப்புக்களுக்கிடமாகவுமிருப்பவரும், அதிதத்வரைத்தவற

விடாதவரும், முடிவில்லாதவரும், பகைவர்க்குமுடிவைச்செய்பவரும், காமக்குரோதமுதலிய உட்பகைகளின்கூட்டங்களைக் கெடுப்பவரும், எல்லாவற்றிற்கும்பிரபுவும், ஆபத்தில்தவறுமல்அபயமளிப்பவரும், எதிர்காலத்திலும் நிகழ்காலத்திலும் இறந்தகாலத்திலுமிருப்பவரும், துவாரகாநகரத்திலிவெற்றிபெற்றிருப்பவரும், அளவற்றமஹிமையுள்ள வருமாகியகிருஷ்ணபகவான்வரக்கண்டு தர்மபுதார் அவருக்குத் தக்க மரியாதைசெய்தார். பெருமைசிறுமையென்பவை குணங்களினாலும குறற்ங்களினாலும எற்படுகின்றவையென்றறிந்த தர்மராஜர் பிராம்ம ணாகளைபபூஜித்தபிறகு கண்ணனைஆராதிக்கக்கருதி இதற்குமுன் யாருமஉட்காராததும் ஸூர்யனைபோலபிரகாசிபதுமான சிறந்த ஆஸனத்தை லோகநாதனானகிருஷ்ணனுக்கு அளிக்க, கிருஷ்ணபக வான் அதிலஉட்காந்தார்.

அதன்பிறகு பீஷ்மா தாமராஜாவானயுதிஷ்டிரைப்பார்த்து, "ராஜாவே! பாரதனே! ராஜாக்களுகுத தகுதியின்படி மரியாதை செய்யலாம; யுதிஷ்டிரனே! ஆசார்பன், ரித்விக்கு, ஸம்பந்தி, ஸ்நா தகன், ஸ்நேஹிதன், அரசன், இவ்வறுவருமபூஜைக்குரியவரென்று கூறுகின்றனர். இவர்கள்வந்து ஒருவருஷகாலமிருந்தபின்மரியாதை செய்யவேண்டுமென்றுசொலலுகின்றனர். இவர்களை நீண்டகாலமாக நமமிடம்வந்திருக்கின்றனர். ராஜாவே! இவாகளில் ஒவ்வொவருக் கும் தனித்தனியே மரியாதை கொண்டுவரதகக்கது. முதலில் இவர் களுக்குள் ச்ரேஷ்டனும் சக்தியுள்ளவனுமாயிருபபவனுக்கு மரி யாதைசெய்யவேண்டும்" என்றுசொன்னர். அதறகு யுதிஷ்டிரர், "கௌரவச்ரேஷ்டரே! எவருக்கு முதல்மரியாதைசெய்கிறதென்று நீங்கள் நினைக்கிறீர்களா? யாருக்குசெய்தால தகுதியாயிருகுகும்? பிதாமஹரே! அதனை எனக்குச் சொல்லுங்கள்" என்றுகேட்க, உடனே சந்தனுவின்புத்ரரும வீரருமான பீஷ்மர் தமதுபுத்தியில்ஆரா ய்ந்து புவனிக்குள கிருஷ்ணபகவான் ஒருவரே யாவராலுமபூஜிக்கத் தக்கவரென்றுநினைத்து, "இநதக்கிருஷ்ணன் க்ரஹநக்ஷத்திரங்கள் முதலியவற்றுள் ஸூர்யன்போல இங்குள்ளஎல்லாரிலும் சூரதனதத தினாலும் பலத்தினாலும் மஹிமையினாலும் ஜ்வலிப்பவராலோவளிளங்கு கிறார். இநதக்கிருஷ்ணன்வநதபிறகு இநதமதுஸதல் ஸூர்யனில் லாதவிடத்தில் ஸூர்யோதயமானறபோலவும காறறில்லாதவிடத்தில காற்றடித்தாற்போலவும ஒளியும்மகிழ்ச்சியும்பெற்றது" என்றுசொ ன்னர்.. பிறகு பீஷ்மரால் அனுமதிகொடுக்கப்பெற்ற வீரனானஸஹ தேவன் அந்தக்கண்ணபிரானுக்கு முறைப்படி உயர்ந்த மரியாதை

யைச்செய்தான். பசுவையும் அர்க்கியத்தையும் மதுபர்க்கத்தையும் கிருஷ்ணனுக்கு ஸஹதேவன்கொடுத்தான்.

ஜனமேஜயராஜாவே! அந்தஸமயத்தில் ஓர்ஆச்சர்யம்நடந்தது. கிருஷ்ணனுக்குநடந்த அந்தச் சிறந்தமரியாதையைக்கண்டு க்ஷத்திரியர்களனைவரும் ஒருவரையொருவர்பார்த்து அதைத் தங்களுள்ளங்களில் ஏற்றுக்கொண்டனர். சாஸ்திரபிரகாரம் செய்யப்பட்ட அந்தப் பூஜையைக் கிருஷ்ணன் பெற்றுக்கொண்டார். கண்ணபிரானுக்கு அந்தப்பூஜைசெய்ததைச் சிசுபாலன் பொறுக்கவில்லை. மஹாபலசாலியான அந்தச்சிசுபாலன்,ஸபையில் பீஷ்மரையும் தர்மராஜரையும்இகழ்ந்து கிருஷ்ணனைதூஷித்தான். அவர்களுடைய இங்கிதத்தையும் கருத்தையுமறிந்த ஸஹதேவன் கோபித்தான். அபிமானமுள்ளவர்களும், பலசாலிகளுமான அரசர்களுக்குமுன் ஸஹதேவன் பாதத்தைதூக்கிக் காண்பித்தபோது ஸஹதேவன்தலையில் பெரும்பூமாரி பொழிந்தது. பிறந்ததுமுதல் யாதவர்களுக்கு விரோதியான சிசுபாலன் சொல்லலானான்.

"கேட்டவன் [1]குறைமுள்ள கர்ப்பத்திலிறந்த அரசன்; மறுமொழிசொன்னவன் [2]நதியின்மகன்; துணையைபபெற்றுக்கொண்டவன் இடையன்; கொடுத்தவன்குறைமுளகர்பத்தில் பிறந்தவன். இங்குள்ள ஸபையோரனைவரும் ஹீனமைபாலிருக்கின்றனர். என்ன சொல்வது!" என்றான். அவன் இவ்வாறுசொல்லி நகைத்து உடனே தர்மராஜாவைநோக்கி, மறுபடியும் பேசலானான். "பாண்டவனே! பூஜைக்குரிய மற்றவர்களிருக்க இடையனைபபூஜித்தையே! நீ அவனை எல்லாருக்கும் மேற்பட்டவனுகப பார்க்கிறாயா? மறறவர்களைபபார்க்கவேயில்லையா? நண்பனே! அதிகமாகப்பார்பபதும் பாராமலிருப்பதும் இவ்விரண்டும் காரியதைதைக்கெடுப்பவைகள்; இவற்றுள் நீ எதையெடுத்துக்கொண்டாய்?

நாற்பதாவது அத்தியாயம்.

அர்க்காஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணனுக்கு யுதிஷ்டிரர் பூஜைசெய்தது பிழையென்று கண்டித்துச் சிசுபாலன் ஸபையைவிட்டுச் செல்லத்தொடங்கியது.)

ஓ! கௌரவராஜாவே! இவ்விடத்தில் மஹாத்மாக்களான ராஜாக்களிருக்கும்போது இந்தவிருஷ்ணிகுலத்தோன் அரசர்க்குரிய

---

1 அன்னிய புருஷஸம்பந்தத்தாலுண்டான கர்ப்பம்.

2 தாழ்ந்தஇடத்திற்செல்வது நதியின் இயற்கை.

மரியாதையைப் பெறத்தகுந்தவனல்லன். பாண்டவனே! நீ உன்விரு ப்பத்தினால் தேவகிபுத்ரனைப் பூஜித்தது மஹாத்மாக்களான பாண்ட வர்களுக்குத்தகுந்த ஒழுக்கமன்று. பாண்டவர்களே! நீங்கள் சிறு வர்கள். தர்மம நுட்பமானது. நீங்கள் அறியீர். இந்தவிஷயத்தில் அறிவுகுறைந்தஇந்தப் பீஷ்மா தவறிழடந்திருக்கிறார். உன்னைப்போ ன்றதார்மிஷ்டன் பிறர்பிரியத்திற்காக ஒருகாரியம்செய்யலாமா? பீஷ் மர் உலகத்திலுளளபெரியோர்களால் மிகவும்அவமதிக்கப்படுகிறார். அரசனல்லாதகிருஷ்ணன் தகுதியுள்ளராஜாக்களைவிட்டவர்களின் நடுவி லும் நீங்கள்செய்ததுபோன்றபூஜைக்கு எவ்வாறு உரியவன்? கௌரவ ச்ரேஷ்டனே! அல்லது கிருஷ்ணன் பிராயத்தில்முதிர்ந்தவனென்று நினைக்கிறாயா? ஆகிலும் பெரியவராகிய வஸுதேவரிருக்கையில் அவர் மகன் பூஜைக்கு எவ்வாறுதகுதியுள்ளவன்? கிருஷ்ணனும் உன்விருப பத்தையுணரிந்து ஒப்புக்கொண்டானு? ஆகிலும் த்ருபதனிருக்கை யில் மாதவனைபபூஜிபபதெவ்வாறுதகும்? கௌரவனே! அல்லது கிருஷ்ணனை ஆசார்யனாகநினைக்கிறாயா? அப்படியானால், த்ரோண ரிருக்கும்போது வ்ருஷ்ணிகுலத்தோனை நீபூஜித்தது ஏன்? கௌரவ னே! கிருஷ்ணனை யாகதத்தைநடத்திவைக்கும ரித்விக்கென்றுநினைக் கிறாயா? அங்ஙனமாகில், பெரியவரானவியாஸரிருக்கையில் கிருஷ் ணனைஏன்பூஜித்தாய்? ராஜாவே! புருஷச்ரேஷ்டரும் தாம்நினைத்த போது மரணத்துக்குரியவரும சந்தனுபுத்ரருமான பீஷ்மரிருக்கை யில் நீஏன் கிருஷ்ணனைபபூஜித்தாய்? கௌரவராஜாவே! வீரரும் எல் லாச்சாஸ்த்ரங்களிலும் தேர்ந்தவருமான அச்வத்தாமரிருக்கையில் கிருஷ்ணன் உன்னால் பூஜிக்கபபட்டது எதனாலே? புருஷர்களில்சிறந் தவனும் அரசர்க்கரசனுமாகிய துரியோதனனும பாரதவமசத்தவரு க்குஆசாரியரான கிருபரருமிருக்க நீ கிருஷ்ணனைப்பூஜித்ததெவ்வகை? கிம்புருஷர்களுக்கு ஆசாரியனான த்ருமஸேனனும் கின்னரனையும் விட்டு, கிருஷ்ணனை பூஜித்ததையே! பாண்டுவைபபோல யார்க்கும் வெல்லமுடியாதவரும் குணங்களினால்பிரக்யாதிபெற்றவருமாகிய பீஷ் மகராஜாவும் ராஜாக்களில்ச்ரேஷ்டனானருக்மியும் ஏகலவ்யனும் மத்ர தேசாதிபதியானசல்லியனுமிருக்க நீ கிருஷ்ணனை ஏன்பூஜித்தாய்? பாரதனே! இந்தக்கர்ணன் பராக்ரமத்தில் எல்லாராஜாக்களிலும்சிறந் தவன்; மஹாபலசாலி; பிராம்மணரானபரசுராமருக்குஅன்புள்ளசிஷ் யன். தன்பராக்ரமத்தைக்கொண்டே யுத்தத்தில் ராஜாக்களை ஜயித்த வன். இந்தக்கர்ணனையும் தாண்டி நீ கிருஷ்ணனைப்பூஜித்தது எவ் வாறு? கௌரவச்ரேஷ்டனே! கிருஷ்ணன் ரித்விக்குமல்லன்; ஆசாரி

யனுமல்லன்; ராஜாவுமல்லன்; உன்னுல்பூஜிக்கபபெற்றிருக்கிறுன். அவன்பிரியத்தை நீவிரும்பினதுதவிர வேறுகாரணம்யாது? பாரதனே! (அல்லது) இந்தக்கிருஷ்ணன் உங்களுக்குபபூஜ்யனுகவேயிருந்தால் மற்றராஜாக்களே அவமதிப்பதற்காக இங்கேவரவழைத்தாயா? என்ன? நாங்களெல்லோரும் பயந்தினுலாவது பிரியோஜனத்தை விரும்பியாவது எங்களேக்கேட்டுக்கொண்டதற்காவது இந்தமஹாத்மாவான தர்மராஜாவுக்குக் கப்பங்கள்கொடுக்கவில்லே. இவர் தர்மத்தில்பிரவர்த்தித்துப பூமிக்குஅதிபதியாயிருக்கவிரும்பினதினுல் நாங்கள் இவருக்குக் கபபங்கள்கொடுக்கிறேமம. இவா நமமை மதிக்கவில்லே. ராஜஸபையில் ராஜலக்ஷணங்கள்பெறுத இந்தகக்ருஷ்ணனே இவா அர்க்கியமகொடுத்துபபூஜித்தது நமமைஅவமதித்ததைத்தவிர வேறுஎன்ன? தர்மபுத்திரருக்குத் தர்மாத்மாவென்னுமபபுகழ் திடீரென்றுபோய்விட்டது. எந்தத்துராத்மாவானவன் விருஷ்ணிகுலத்திற்பிறந்து, ராஜாவும மஹாத்மாவுமானஜராஸந்தனே அனியாயமாகக கொன்றுனேனு தர்மந்தவறினஅந்தக்கிருஷ்ணனுக்கு இந்தச்சிறந்த பூஜையை எவன்செய்வான்? இபபோது கிருஷ்ணனுக்கு அர்க்கியங்கொடுத்ததனுல் தர்மாதமாவென்னுமபெயர் யுதிஷ்டிரிடமிருந்துவில கிப்போயிற்று. அசக்தனென்பது வெளியிடபபடடது. கிருஷ்ணு! பரிதாபபடத்தக்க இந்தக்குந்திபுதராகள் அசகதாகளாகவும பயந்தவர்களாகவுமிருந்தால் நீயாவது இந்தபபூஜை உனக்குத்தகுமாவென்பதை அறிந்திருக்கவேண்டும. ஜனர்தனு! அசக்தர்களினுல் கொடுக்கப்பட்டபூஜையைத தகுதியறறநீ ஏன் அங்கீகரித்தாய்? யாருமில்லாதவிடத்தில் சிந்திப்போன ஹவிஸை நாய்தின்பதுபோல உனக்குக் கிடைக்கத்தகாதபூஜையை நீகொண்டாடுகிறுய். ஜனர்த்தனு! இது ராஜச்ரேஷ்டர்களுக்கு அவமானஞ்செய்ததாகாது. உண்மையில் கௌரவர்கள் உண்ணேவமாற்றுகின்றனர்; மதுஸூதனு! ஆண்மையில்லாதவன் விவாகஞசெய்துகொளவதும் கண்ணில்லாதவன் உருவத்தைப பார்ப்பதும எவ்வாறே அவ்வாறேதான் ராஜாவாயில்லாதஉனக்கு ராஜாக்களுக்குரிய மரியாதைசெய்வதும ராஜாவானயுதிஷ்டிரர் எபபடிப்பட்டவரென்பதையும் பீஷ்மர் எபபடிபபட்டவரென்பதையும் வாஸுதேவன் எவ்வகையானவனென்பதையும் கண்டோம். இவையெல்லாம ஒற்றுமையாகவேயிருக்கின்றன" என்றுன். சிசுபாலன் அவர்களேப்பார்த்து இவ்வாறுசொல்லி உயர்ந்த ஆஸனத்திலிருந்து எழுந்து அபபோதே அரசர்களுடன்கூட அந்தஸபையினின்று வெளியிற்சென்றுன்.

நாற்பத்தோராவது அத்தியாயம்.

அர்க்காஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் சிசுபாலன்சொன்னதைக் கண்டித்துக் கிருஷ்ணனைப் பூஜித்தது நியாயமென்று ஸ்தாபித்தது.)

பின்பு, ராஜாவான யுதிஷ்டிரர் சிசுபாலன்பின் ஓடி ஸமாதானஞ் செய்து இனிமையாகப பேசத்தொடங்கினர். "அரசனே! நீ எவ்வகையான பேசசைபபேசினீயோ அவ்வகையானது நியாயமன்று. ராஜாவே! இதில் பாவமதிகம். கடுமை பயனற்றது. தர்மம்பெரிதென்பதை அரசா அறியாம்லிருத்தல்தகாது. பீஷ்மர் சந்தனுவின் புத்ரர். அவரை நீ மரியாதைசெய்வதறகுமாறுக அவமதித்தலாகாது. உன்னைவிட வயதில் மிகமுதிர்ந்த அனேகமஹராஜாகளை இதோபார். இவாகள், கிருஷ்ணனுக்குப பூஜைசெய்ததைப பொறுத்திருக்கின்றனர். அவர்களைபபோலவே நீயும பொறுகக்கடவாய்; சேதிராஜனே! பீஷ்மா கிருஷ்ணனுடைய உண்மையை நன்றுக அறிந்தவர். கிருஷ்ணனை, பீஷ்மர் அறிந்திருபபதுபோல நீயறியாய்" என்றார். அபபோது பீஷ்மா சொல்லதொடங்கினர்.

"உலகத்துக்கெல்லாம மிகபபெரியவரான கிருஷ்ணன்விஷயத்தில் செய்தமரியாதையை ஒபபுக்கொள்ளாதஇவனுக்கு நல்வார்த்தை சொல்லத்தகாது; இன்சொற்சொல்லதகாதவன். யுத்தஞ்செய்கிறவர்களிறசிறந்தவனுன எந்தகக்ஷத்திரியன் மறறொருகக்ஷதத்திரியனை யுதத்தத்தில்ஜயித்து உட்படுத்தினபிறகு அவனைவிட்டவிடுகிறானை அவன் அவனுக்குக் குருவாகிறன். இந்தஸபையிலுள்ள அரசர்களில் கிருஷ்ணனுடைய பராக்ரமத்தினல் யுத்தத்தில்ஜயிக்கபபடாத அரசன் எவனையும் நான் பார்க்கவில்லை. சிறந்தகைகளையுடைய இந்தக்கிருஷ்ணன் நமக்குமாத்திரமே மிகபபூஜ்யர் அலலர்; மூன்றுலோகங்களுக்கும் பூஜ்யா. கூத்திரியச்ரேஷ்டாஅனேகர் கிருஷ்ணனல் யுத்தத்தில் ஜயிக்கபபட்டனரல்லரோ? உலகமெல்லாம இந்தவிருஷ்ணிகுலதேதாரிடம முழுதும நிலைபெறறிருக்கிறது. ஆதலால், முதியவர்களிறபிணும கிருஷ்ணனைப்பூஜிபபோம; மறறவரைபபூஜியோம். சேதிராஜனே! நீ இவ்வாறுசொல்லத்தகாது. இவ்வகையானபுத்தி உனக்கு இருக்கலாகாது. ஞானவிருத்தர்களில் அனேகரை நான் அடித்திருக்கிறேன். ராஜாவே! கண்ணனல் முன்னம் காபபாறறப்பட்டவரும் அவர்மஹிமையையறிந்தவருமான அந்தபபெரியோர்கூடி ஸ்ரீ கிரு

ஷ்ணபகவானுடைய அனேககுணங்களை ஸாதுகளான அவர்கள் சொலலிகொண்டாடுவதை நானகேட்டிருக்கிறேன். இநதசசிறநத ஞானவானுகிய கிருஷ்ணபகவான் அவதரிததமுதல செய்தகாரியங களையும் மனிதாகள பலமுறை விசேஷமாகசசொலலக் கேட்டிருகி றேன். ஓ! சேதிராஜனே! இநதபபூமியில பிராணிகளுகெலலாம ஸௌகயமதைசசெய்பவரும ஸாதுகளால ஆராதிகபபட்டவரு மான ஜனாதனரை நாம நமதுஉறவை முனனிடடு எபபடியாவது பயன்பெறசசெய்யவேணடுமென்று அபிமானத்தினால பூஜிதோமல லோம. அவருடையபுகழையும சூரதனதையும ஜயதையுமஅறி நது பூஜையைசசெலுததுகிறோம. இநதசசபையில மிகசசிறியவனு ஞலும நாமஆராய்நதுபாராதவன் எவனுமிலலை. குணஙகளைபபறறித தான் ஸிருததர்களையுமதாண்டிக கிருஷ்ணனே முதலிலபூஜிககத்தக் கவனென்று நாங்களநிணைகிறோம. பிராம்மணாகளுக்குள அறிவில மிகுநதவனும், க்ஷததிரியாகளுகுள் பலததிலமிகுநதவனும், வைசி யாகளுக்குள தனதானயஙகளிலமிகுநதவனும பூஜ்யன். சூததிரா களிலமடடுமே வயதிலமுதிராதவன பூஜ்ய. பிராம்மணாகளுக் குரிய வேதவேதாஙகஙகளின ஞானமும க்ஷததிரியாகளுகுரிய சக் தியுமாகிய இரண்டுகாரணங்களும இவரைப பூஜைசெய்வதற்குச சோநதன. கேசவனைததவிர சிறநதவன் வேறுயார இமமானிட லோகததிலிருகிறான். கொடை, காரியஞ்செய்யும திறமை, கல்வி, கேள்வி, சூரதனம, நாணம, புகழ், உயாநதபுததி, வணக்கம், லக்ஷமி, தைரியம, சநதோஷம் இவையெலலாம கிருஷ்ணனிடத்தில் தவறுமலிருபபவை. உலகஙகளுக்கெலலாம சிறநதஆசார்யரும தந தையும பெரியவருமாயிருப்பதனால பூஜைக்குரியவரும பூஜிக்கபபடு கிறவருமான அநதக்கிருஷ்ணபகவானே இதோ பூஜிக்கிறோம. நீங்க ளனைவரும பொறுக்கவேணடும். ரிதவிகரு, ஆசார்யன், கல்யாணப் பிளளை, ஸ்நாதகன், அரசன், நண்பன்ஆகிய எலலாருமாயிருபபவர் கிருஷ்ணன். ஆதலால, (அநத) அச்சுதா பூஜிக்கபபட்டார். உலகங்க ளின்ஸ்ருஷ்டிகரும ஸம்ஹாரதறகும கிருஷ்ணனேகாரணம். ஜங் கமமும ஸ்தாவரமுமாகிய இநதஉலகம் கிருஷ்ணனாலேதான் நிலலபெற றிருக்கிறது. ஸ்ருஷ்டிக்குமுன் ஸூக்ஷமமாயிருநத பிரகிருதியும் இவரே. அதைப்படைத்த ஆதிபுருஷரும் இவரே. எல்லாவறறிற் கும எடடாதவரும இவரே. ஆதலால, அசசுதர்தாம பூஜைகரு மகவும்உரியவர். புததி, மனம், (மூலபாகிருதியின்விகாரமான) மஹத் என்னும் தத்துவம், வாயு, தேயு, ஜலம், ஆகாயம், பூமி, (அண்ட

ஜம, ஸ்வேதஜம, உத்பிஜ்ஜம, ஜராயுஜம்என்னும்) நால்வகைப்பொருளகள் இவையணைததும கிருஷ்ணனேயே ஆதாரமாகவுடையவை. ஆதித்யன, சநதிரன, நக்ஷத்திரஙகள, நவகரஹஙகள், திசைகள, திசைகளினமூலைகள இவையணைததுமகிருஷ்ணனிடததிலநிலைபெறறு நிறபவை. எலலாருககும ஆதமாவான ருத்திரபகவானும என்றுமுள்ள பிரமமதேவரும இவரே. அரூபியானபொருள, ரூபகதையெடிததுக கொணடு மானிடவடிவததுடன வநதிருககிறது. வேதஙகளுககு [1]முகம அகனிதேஹாததிரம; மநதிரஙகளுககுமுகம காயதரி; மனிதாகளுககுமுகம அரசன; நதிகளுககுமுகம ஸாகரம; நக்ஷத்திரஙகளுககுமுகம சநதிரன; ஒளிகளுககுமுகம ஆதிதயன; மலகளுககு முகம மேருமலை; பறவைகளுககுமுகம கருடன; கீழ்மேலாகவும குறுகாகவுமுளளஉலகததினவிஸ்தாரம எவவளவோ அவவளவிலுமுளள தேவலோகமுதலான எலலாஉலகஙகளுககும கிருஷ்ணபகவானே முகம. ஆனால சிறுபிள்ளையான இநதசிசுபாலன அறியான. அதனால, எஙகும எகாலமும கிருஷ்ணனே இவவாறுபேசுகிறான. புதியுளளஎநதமனிதன எலலாவறறிலுமசிறநத தாமதைததேடுவானு அவன தாமதையறிவதுபோல இநதசசேதிராஜன அறியான. அலலது முதிரநதவாகளும சிறுவாகளுமாயுளள மஹாதமாகளான அரசர்களில எவன கிருஷ்ணனைதததகுநதவராகநினையாதவன? எவன் இவரைபபூஜிககமாடடான? அலலாமலும, இநதபபூஜை தவறுகச செய்யபபடடதெனறு சிசுபாலனநினைபபானகில குறறமநடநதால எபபடிசசெய்வதுநியாயமோ அபபடிஇவனசெய்யலாம" என்றார.

நாற்பத்திரண்டாவது அத்தியாயம்.

அர்க்காஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணபூஜையில் பொறாமையுற்றஅரசர்களை ஸஹதேவன் மறுபடியும் காலைக்காண்பித்து வீரவாதம்செயதது.)

காங்கேயரால் இவ்வாறுரைகக்பபட்ட சிசுபாலன் அவர்மீது கோபித்தான். அவன் கோபிததைதகண்டு அபபோது ஸஹதேவன் பேசததொடங்கினன.

"சேதிராஜனே! இபபோது நடநததெல்லாம நான் புதியினுல் ஆராய்நதுநடத்தினது. அதன்உண்மையைக காரணததோடு

[1] முகம் - தலைமை.

நான் இங்கேசொல்லுகிறேன்; கேள. அரசர்களனைவருக்கும் கிருஷ்ணன் ஒருவரேபெரியவர். வேறுயாருமில்லை. ஆதலால், அவர் எங்களால் பூஜிக்கப்பெற்றார். நீங்களெலலாரும ஒபபுககொள்ளவேண்டிய வர்கள. இநதராஜாக்களுக்குள் எவன் அதைப்பொறுக்கவில்லையோ அவன் உடனே சேனைகளோடுமவாஹனங்களோடுமே யுதததுக்குப் புறப்படட்டும. அவன்தலையில இதோ என்கால்வைக்கபபடுகிறது. இவ்வாறு பூஜிததகாரணம என்னுற்சொல்லபபட்டது. எனக்கு எவனுவது மறுமொழிசொல்லட்டுமே" என்றான். அதன்மேல புத்திமான்களும கௌரவமுள்ளவாகளும பலசாலிகளுமாயிருந்த ராஜாக்களின் நடுவில் அவவாறு காலைக்காண்பித்தபோது அவாகளில் யாரும் ஒன்றுமபேசவில்லை. இவவாறு ஸஹதேவன் கண்ணனைபபற்றிசசொன்னபோது ஸ்வபாவமாகச சிவநதிருநதசிசுபாலன்கண்கள் கோபத்தினல் அதிகமாகச்சிவநதன. அவனுக்குக கோபமுண்டானதைக்கண்டு பராக்ரமசாலியானபீஷ்மர் மறுபடியும அவனுக்குக் கிருஷ்ணனுடைய சிறநதகுணங்களைபயசொன்னார். பேசுகிறவர்களிலும் புத்திமான்களிலும் சிறநதவரான பீஷ்மர் சிசுபாலனையும ஸைபையோரான எலலாஅரசர்களையும் கூபபிடடு, "ராஜாகளே! கிருஷ்ணனைக்குறித்து ஸஹதேவன்சொன்னது எதுவோ அதுஸரிதான என்று அறியுங்கள். இன்னமும் அவரைபபறறிசசொல்லுகிறேன்; கேளுங்கள்" என்றார்.

நாற்பத்துமூன்றுவது அத்தியாயம்.

அர்க்காஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணன்மஹிமையைப்பற்றி யுதிஷ்டிரர்கேட்க, பீஷ்மர்அவருடைய நாராயணஸ்துதத்தையும்உலகஸ்ருஷ்டியையும்கூறியது.)

யுதிஷ்டிரர், பீஷ்மர்சொல்லியதைக்கேட்டவுடன், அக்காலத்தில யாவர்க்குமே கிருஷ்ணனைதெரிவிபபதற்காகத் திருமபவும் பீஷ்மரைகேட்கத்தொடங்கினார். "பிதாமஹரே! தேவதையும்பக்வானுமாகிய கண்ணபிரானுடையசெய்கைகள எல்லாவறறையும் விரிவாகக் கேட்கவிரும்புகிறேன். அவற்றைவிவரிததுச்சொலலுமம. பிதாமஹரே! பகவானான கிருஷ்ணனுடையஅவதாரங்களைபபற்றியும் செய்தகாரியங்களைபபற்றியும கிருஷ்ணபகவானிடத்தில் பிரகிருதியானது எவ்வாறு இருக்கிறதென்பதைபபற்றியும எனக்குச்சொல்லக்கடவீர்" என்றார். பரதச்ரேஷ்டரானஜனமேஜயராஜாவே! யுதிஷ்டிரரால் இவ்வாறுகேட்

கபபட்டபீஷ்மர் அந்தராஜஸபையில் தேவேந்திரனைபபோலவிளங்கு கின்ற கண்ணபிரான்முனனிலையில் சதுதருக்களஸம்ஹரிததவரான யுதிஷ்டிரரைநோக்கி மற்றவாசெய்தறகரிய ; கண்ணபிரான்செய்கை களைச் சொல்லத்தொடங்கினர். அரசாக்கரசானஜனமேஜயராஜாவே! அறிஞர்களில்சிறநதவரும பிறருக்குப பயத்தைததருமசெய்கைகளை யுடையவருமான அநதபபீஷ்மர், தர்மராஜரிடத்திலிருக்குமஅரசர் கள்கேடட்க எதிரிகளைஜயிபபவனனசேதிராஜனைப பெயர்சொல்லி அழைத்து, கிருஷ்ணனைபபறறிபபின்வருமாறுசொல்லலானர்.

" ராஜாவே ! யுதிஷ்டிரா ! எல்லாக்கும்மேற்பட்ட ரச்வரு டையசெய்கைகளின்முறை யார்ககும் அறியக்கூடாதது. அதுநிகழ் கிறதையும சென்றதையுமபற்றிச சொல்லுகிறேன் ; கேள. யார்க்கும் புலபபடாத பிரபுவானபகவான் இங்கே புல்பபடும்வடிவத்தோடுஇரு க்கிறர். தம்மாலேயே தாம்நிலைபெறறிருபபவரும, பிரம்மதேவருக் குத்தந்தையும அசைவற்றவரும அளவில்லாதவரும எபபோதுமிருப் பவரும் ஆயிரம்தலைகளும ஆயிரம்வாய்களும் ஆயிரம்கண்களும ஆயி ரம்கால்களும் ஆயிரமகைகளும் ஆயிரமராமஙகளும ஆயிரமகிரீடங் களுமுள்ளவரும ஸாவவ்யாபியும ஸாவஜ்ஞரும விச்வரூபியும ஒளி யுள்ளவரும அனேகமகிறங்களுளளவரும தேவாகளுக்குமூதன்மையு மானபகவான் நாராயணன்ஸ்ருஷ்டிக்குமுன் மூலபரகிருதியைக் கடந த்திருநதார். அநதபபிரபுவானநாராயணன் முதலில்அபபுவைப்படைத தார். அதன்பிறகு பகவான் அநதஜலத்தில் தாமே பிரம்மதேவரைப படைத்தார். நான்முகரானபிரமமதேவர் மறறைலோகங்கள்எல்லா வற்றையும தாமேபடைததார். ஆதிகாலததில் எல்லாலோகங்களின் உறபத்தியும இவ்வாறுதான் முதலில் பிரளயம்வரது ஸ்தாவரஙகளும் ஜங்கமங்களுமஅழிநது ஸ்தாவரஜஙகமங்களடங்கிய உலகங்களும் அழிநது பிரமமா தேவர்களும லயமாகிப பஞ்சபூதங்களும்மூழ்கி மஹத்தானது பிரகிருதியில லயமானபோது எல்லாவறறிற்கும்ஆத் மாவும் ஸர்வேசுவரருமான அநதநாராயணன் ஒருவரேநின்றார். தாம ராஜாவே! எலலாதேவர்களும நாராயணனுடையஅஙகங்கள். ராஜா வே ! மேலுலகம அவருகுதலை ; [1]ஆகாயம் நாபி ; பூமி கால்கள் ; அசவினிதேவர்கள் செவிகள் ; சநதிரனுமஸூரியனுமகண்கள ; இநதி ரனும அக்னியுமாகிய இரண்டுதேவாகளும அநதமஹாதமாவுக்கு முகம். மற்றுமுள்ளதேவர்களனைவரும அமமஹாதமாவின் மற றெல்லாஉறுபபுக்களும. நூலிழையிலகோக்கபபட்ட மணிகளபோல

இடைவெளி.

எல்லாப்பொருள்களும் அவரைஆச்ரயித்திருக்கின்றன. மஹாயோகியும் ஸர்வஜ்ஞரும் பரமாத்மாவும் பரபிரம்மமுமான நாராயணன் மஹாப்ரளயம்முடிந்தபிறகு எல்லாம தமஸ்என்னப்பட்டமூலப்ரகிருதியில் லயித்திருப்பதைக்கண்டு தாமேதம்மைப் பிரம்மதேவராகஸ்ருஷ்டித்தார். பரப்பிரமத்தினிடத்திலேயேபிறந்தவரும் எல்லாப்பிராணிகளுக்கும் ஈச்வரரும் குற்றமற்றவருமான அந்தபரம்மதேவர் ஸனத்குமாரரையும் ருத்ரரையும் தவமேதனமாகக்கொண்ட ஸப்தரிஷிகளையும் ஏழுலகங்களையும் ஜனங்களையும் மற்றுமுள்ளஎல்லாவற்றையும் படைத்தார். யுதிஷ்டிரா! அவர்கள் அந்தஅந்தக்காலங்களில் அந்தஅந்த இடங்களில் பற்பலபொருள்களை உத்பத்திசெய்தனர். அந்தமஹாத்மாக்களிடமிருந்து அழிவில்லாத ப்ரகிருதியானது பல உருவங்களாக உண்டாயிற்று. பாரதனே! அனேககோடிகல்பங்களும் அனேகம்பிரளயங்களும் வரிசையாகக் கடந்துபோயின. ராஜாவே![1]மன்வந்தரங்களும் தேவயுகங்களும் மனுஷ்யயுகங்களும் பிரளயங்களும் சக்கரம்போலச் சுழலுகின்றன. உலகமஅனைத்தும் முகத்தில் [2]விஷமுள்ளது. லோகநாதராகிய அந்தப பகவான்நாராயணன் நான்முகக்கடவுளைப் படைத்து எல்லாலோகங்களுக்கும் நன்மைக்காகத் திருப்பாற்கடலில்இருக்கிறார். எலலாலோகங்களுக்கும ஜனங்களுக்கும் பிரம்மதேவர் பிதாமஹர். ஆகலால், அவருக்கும் பிதாவானநாராயணன் எல்லாவற்றிற்கும பிரபிதாமஹராயிருக்கிறார்.

நாற்பத்துநான்காவது அத்தியாயம்.

அர்க்காஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(மதுகைடவருடைய ஸம்ஹாரத்தைப்பற்றிச்சொல்லியது.)

யுதிஷ்டிரா! யார்க்கும்புலப்படாதவரும புலப்படத்தக்கதிவ்யமங்களமூர்த்தியுள்ளவரும் ஸர்வேசுவரருமானபகவானே நாராயணர்களாகிக் கிருஷ்ணஞ்ஞர். எபபொழுதுமுள்ளவரும் எல்லாப்பிராணிகளுக்கும் அந்தர்யாமியுமாகிய அந்தப்பகவான் காரியங்களுக்குத்தக்கபடி பிரம்மா, இந்திரன், ஸூர்யன் தர்மதேவதையெனப் பல ரூபங்களாக அவதாரமெடுக்கிறார். தேவலோகத்தில் தேவக்கூட்டங்களுடன்சேர்ந்திருக்கும் அவதாரங்களைச்சொல்வேன். ஆயிரயுக

---

1 மன்வந்தரம்=தேவயுகங்கள் எழுபத்தொன்று சேர்ந்தது.

2 நாசத்தையே முடிவாகவுடையது.

காலம் தூங்கினபிறகு காரியங்களுக்காகத் தேவர்க்குந்தேவரும் லோகநாதருமானபகவான் அவதரிக்கிறார். தேவருக்குந்தேவரும் லோகநாதரும் அதிதேவரும் ஜ்வலிக்கின்ற அக்னிக்கொப்பான ஒளியுள்ளவருமான பகவான் அனேகஆயிரவருஷங்களுக்குப் பிறகு பிரம்மாவையும் கச்யபரையும் கபிலரையும் பரமேஷ்டியையும் தேவர் கூட்டத்தையும் ஸப்தரிஷிகளையும சங்கரரையும் ஸனத்குமாரரையும் பிரஜை களைஸ்ருஷ்டிபவராகிய மனுவையும் முதலில்படைத்தார். ஸ்தாவ ரங்களும ஜங்கமங்களும் தேவர்களும அஸுரர்களும் நாகர்களும் ராக்ஷஸர்களும் அழிந்துபோன பிரளயகாலத்தில் கடல்நடுவிலிருப்ப வரும், யாராலும் ஜயிக்கமுடியாதவரும, யுத்தஞசெய்யவிருப்பமுள்ள வருமான மதுகைடவரென்னும் அண்ணன்தம்பிகளிருவர் அந்தப்பக வானால் கொல்லப்பட்டனர். அஸுரர்களுக்குமுதன்மையான அவ் விரண்டு மஹாஅஸுரர்களும் ஆதியில் அந்தபபகவானால் மண்ணைப் பிடித்து, யாராலும வெல்லப்படாமலிருக்கும்படி வான்கொடுத்துப் படைக்கப்பட்டனர். அவர்கள் இருவரும் கருங்கடலில்துயின்ற அந்த மஹாத்மாவான விஷ்ணுவின் காதுக்குறுமபியிலிருந்துபிறந்து இர ண்டுபெருமலைகளைபோல நின்றனர். பிரம்மாவினால் நன்றாகவவப் பட்ட வாயுதேவதை தானே அவர்களுக்குள்பிரவேசித்தான். அத னால் அந்தபபெரியஅஸுரர்கள் ஆகாயத்தைமறைத்துக்கொண்டு வள ர்ந்தனர். காற்றளவாக விருத்தியடைந்த அவ்வஸுரர்களைக்கண்டு பிரம்மதேவர் மெல்லத்தடவினர். அவர்களில் ஒருவனை மிகமிருது வாகவும் மற்றொருவனைக் கடினமாகவும் உணர்ந்தார். ஜலத்தில்பிற ந்தவரான பிரம்மதேவர் மிருதுவாயிருந்தவனுக்கு மதுவென்றும் கடினமாயிருந்தவனுக்குக் கைடவனென்றும் தாமே அவ்விருவருக் கும் பெயரிட்டார் தர்மராஜாவே! இவ்வாறுபெயரிடப்பட்ட அவ் விரண்டுஅஸுரர்களும் பலத்தினால்கர்வங்கொண்டு திரிந்து ஆகாய மெல்லாம்வியாபித்தனர். முறறிலும்அச்சமற்ற அந்தமதுகைடவர் கள் ஆகாயமமுழுமையும் மறைத்து யுத்தஞசெய்யவிரும்பி எல்லா உலகத்தின் பிரளயமாகியசமுத்திரத்தில் திரிந்தனர். அந்த அஸுர ர்கள் வருவதைக்கண்டு உலகங்களுக்குக்கர்த்தாவான் பிரம்மதேவர் உலகமெங்கும் ஒரேநீராகஇருக்கும் அந்தக்கடலுக்குள்மறைந்தனர். அந்தப்பிரம்மதேவர் பத்மநாபருடைய நாபியிலிருந்துகிளம்பின தாம ரைமலரினின்றும தாமாகவேஜனித்தார். அந்தக்கமலம சேற்றில் உண்டாகாதது. லோககர்த்தாவான பிரமமதேவர் தாமிருந்தவிட மாகிய அந்தக்கமலத்தைப் பூஜித்தார். அந்தநாராயணனும் நான்

முகனுமாகிய இருவரும் அனேகம்பதினாயிரவருடங்கள் ஜலத்துக்குள் அசையாமல்படித்திருந்தனர். வெகுகாலத்திற்குபிறகு பிரம்மாவிருந்தவிடத்திற்கு, அந்தமத்துகைடவென்னும் இரண்டு அஸுரர்களும் வந்தனர். லோகநாதரும் பேரொளியுள்ளவருமான பத்மநாபர் அவர்களைக்கண்டு கோபத்தால் சிவந்தகண்களோடு படுக்கையிலிருந்து எழுந்தார். யுதிஷ்டிரா! மூன்றுலோகங்களும ஜலமாகவிருந்த அந்தபயங்கரமானகருங்கடலில் அந்தப்பத்மநாபருக்கும் அவ்விரண்டு அஸுரர்களுக்கும் பயங்கரமானயுத்தம் உண்டாயிற்று. அநதக்கடுஞ சண்டை ஆயிரக்கணக்கானவருஷங்கள் நடந்தது. அநதயுததத்தில் அவ்வஸுரர்கள் சோர்வையடையவில்லை. யுததத்தில் அடங்காத கொழுப்புள்ள அவ்வஸுரர்களிருவரும் நெடுங்காலமானபிறகு ஸமர்த்தரான நாராயணரைப்பார்த்து மனத்தில்ஸந்தோஷத்துடன், "ஐயா! உம்முடையயுத்தத்தினால் நாங்கள மகிழ்ந்தோம். நீர்எங்களுக்குச்சிறந்த நமனுயிருக்கிறீர். ஜலத்தினால நனைக்கபடாதஇடத்தில எங்களைக் கொல்லும். தேவசரேஷ்டரே! உமமாலகொலலபபட்டநாங்கள் உமக்குபபுத்திரர்களாகக்கடவோம். எவன் எங்களை யுத்ததத்தில்ஜயிபபனை அவனுக்குப பிளைகளாகுமபடி நாங்கள கடடளையிடபபட்டிருகிறோம்" என்றுகூறினர். ஈச்வரானநாராயணன் அவர்கள்சொன்னதைக்கேட்டவுடன் நகைத்துக்கொண்டே யுதததில் மதுகைடவர் என்னும் அநதஇரண்டு அஸுரர்களையும தமதுஇருபுஜங்களாலும தொடைகளாலும் கசக்கி வதைசெய்தார் கொலலபபட்டுத தண்ணீரில்கரைக்கப்பட்ட அவ்விரண்டுதேகங்களும ஒன்றுகபபோயின. ஜலத்தின்அலைகளினால அடிக்கபபடட அநதஅஸுரா தேகங்களிலிருந்து கொழுப்பு வெளிபபடடது. அநதஜலம் அவவிருவா கொழுபபினாலும வியாபிக்கப்பட்டுமறைநதது. பகவானுகியநாராயணன் பிறகு பல வகைபபிராணிகளைப படைத்தார் தர்மராஜாவே! பூமி முழுதும அவ்வஸுரர்களின் கொழுபபினால் மூடபபடடதனால் அபபோதுமுதல மேதினியென்று சொல்லபபடுகிறது. பதமநாபருடைய பிரபாவதினால் பூமியானது மனிதர்களுக்குச் சாசுவதமான இடமாகச் செய்யப்பட்டது.

மேதஸ்என்னும் கொழுப்பையுடையது.

நாற்பத்தைந்தாவது அத்தியாயம்.

அர்க்காஹரணபர்வம். (தொடர்ச்சி.)

கௌரவச்ரேஷ்டனே! அனேகமாயிரம அவதாரங்கள் நடந்திருக்கின்றன. கூடியவரையில் அவற்றைகுறித்துசொல்லுவேன்; கேள்.

ஆதிகாலத்தில் கடலநீரில்துயின்ற பத்மநாபருடைய எந்தத் தேகத்தின் நாபீகமலதலில தேவர்களும ரிஷிக்கூட்டங்களும் பிறந்தனரோ அந்த அவதாரம [1]பௌஷ்கரிகமஎன்றுகூறபடுகிறது. மந்திரங்களும் பிராம்மணங்களுமாகியவேதங்கள் உருகொண்டதாகிய பகவானுடையவராகாவதாரம புராணங்களில சொல்லப்பட்டிருபது செவிகளுக்கின்பமாகஇருகிறது. அபபோது தேவர்களுக்கெல்லாம் ச்ரேஷ்டரும் பெருந்தவமுளளவரும மாயைக்குமேறபட்டவரும் மஹிமைபொருந்தியவரும தர்மமும ஸதியமும்மஉருக்கொண்டவரும் திருமகளைவிடுஅகலாதவரும தமதுசரிதத்திரதத்தினலும் பாரம்பரியத்தினலும பூஜிக்கபபெறறவருமான விஷ்ணு நான்குவேதங்களே நாலு காலகளும, யூபஸ்தம்பமே கோரபபலலும், யாகங்களே பறகளும், சயனம்என்னபபட்டஅக்னியின்மேடையே முகமும, அக்னியே நாவும், தர்பங்களே ரோமங்களும, பிரமமாஎன்னுமரிதவிக்கே தலையும், இரவுபகல்கள் கண்களும, வேதம் அங்கமும, ஸ்வரங்கள் அணிகளும், நெய் [2]நாசியும, நெய்எடுக்கும்பாத்திரமானசுருவமே அடிமூக்கும, ஸாமவேதகோஷமே ஒலியுமாகவிளங்கும வராகரூபதையெடுத்து மலைகளும செடிகளும காடுகளும் அடங்கிய பூமியைஜலத்திலிருந்து தூகினார். வெளிபபொருளகளாகிய ஜடங்களுக்கும் உட்பொருள்களாகியஜீவன்களுகும ஆதமாவும, காண்பதற்கினியவரும, சிறந்த ஒளியுள்ளவரும, யோகியும, முதன்மையானசாஸ்திரங்களே உருக்கொண்டவரும், எலலாவறறிற்கும மேற்பட்டவரும், நிலைதவறுதவருமான அந்தவராகமூர்த்திக்கு, பிராயசசித்தமேமுகமும, யாகபசுவாகியஆடேமுழுங்காலகளும்,தர்மமேஉருவமும், [3]உதகாதாவென்பவன் செய்யும் ஸாமகானத்தேதாடைகூடியவேஹாமமே ஆண்குறியும், பசுக்களும் லோமலதையுமேபீஜங்களும், மந்திரங்களேஎலும்புகளும், யாசுவேதிகையேதோள்களும, நெய்ம்மணமே தேகவாஸனையும், ஹவ்ய

---

[1] புஷ்கரம்என்னும்கமலத்திலிருந்து உலகத்தைப்படைத்ததுபற்றி அந்தஅவதாரத்தக்கு 'பௌஷ்கரிகம்' என்றபெயர்.

[2] நாகரும்புலன். [3] யாகத்தின்ஒருரித்விக்கு.

மும்கவ்யமுமே மலமூத்திரங்களும், பிராக்வம்சமென்னும் யாகசாலை யின்முன்பாகமே தேகத்தின்முன்பாகமும், யாகதீக்ஷைகளேபலமும் தக்ஷிணையே மனமுமாயிருந்தன. மேலும் உபாகமமென்னும் அத்தியயனஆரம்பமே அழகியஉதடும், பரவர்கயமஎன்னும்யாகங்கமான கிரியையே அலங்காரமானசுழியும, யஜ்ஞசாலையே தனக்குத்தணை யானபத்நியும், (சொரிவதறகுளள) ரத்னமயமானகொமபே உயரமான கொம்புமாகஇருந்தன. என்றுமழியாத ஈச்வரான விஷ்ணுவானவர் இவ்வாறு யஜ்ஞவராஹராகி ஸமுத்திரத்தில்அழுந்தி, குன்றுகளும் செடிகளும் காடுகளுமஅடங்கிய பூமிமுழுதையும தூக்கினர். அந்தத்தண்ணீரில் முழுகிபபோன தமதுதேவியானபூமியை மார்க்கண் டேயர்பார்த்திருக்கையில கொமபிலுல்தூக்கினர். தேவர்க்கும்ஈச் வரும் ஆயிரந்தலைகளுள்ளவருமாகியபிரபு உலகங்களின்நன்மையைக் கருதித் தம்கொம்பினல் பூமியைத்தூக்கி நிலைநிறுத்தினர். கடலை ஆடையாகஉடுத்தவளும் பூஜிக்கத்தக்கவளுமான பூமிதேவி நடந்ததும் நடக்கின்றதும் இனிநடபபதுமான எல்லாவற்றிற்கும் அந்தர்யாமியான யஜ்ஞவராகால இவ்வாறுஎடுகபபட்டாள. தேவர்க்கும்தேவரானவிஷ்ணுவினல தானவாகள்அனைவரும் கொல்லப்பட்டார்கள். இவ்வாறு வராகாவதாரத்தைபபறறிச சொன்னேன். இனிசகிங்க வடிவமெடுத்து ஹிரணியகசிபுவைகொன்ற நரஸிம்மாவதாரத்தைக் கேள்.

நாற்பத்தாருவது அத்தியாயம்.

அர்க்காஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(நரஸிம்மாவதாரம்.)

தர்மராஜாவே! மிகுந்தபலசாலியும பலதினலகர்வமடைந்தவனும் தேவாகளுக்குபபகைவனும மூன்றுலோகங்களுக்கும் முள்ளைப் போன்றவனும அஸுரர்களுக்குமூலபுருஷனும பாக்யமத்தில்லப் பற்றவனுமான ஹிரணியகசிபுவென்னும அஸுராஜன் ஒருவனிருந்தான். ராஜாவே! அவன் கடலுக்குள்பிரவேசித்துப் பதினலாயிரத்துஐநூறுவருஷகாலம் நிறந்ததவஞசெய்தான். அவன் மௌனவ்ரதத்தைவஹித்து அனுஷ்டானத்திலும் உபவாஸத்திலும் உறுதியாக அசைவற்றிருந்தான். குற்றமறறவனே! அவன் மனத்தையும்ஐம்புலன்களையும்அடக்கிப் பிரம்மசரியவிரதத்துடன் செய்ததவத்தினலும்

நியமத்தினலும் பிரமமதேவர் அவன்மீது ஸந்தோஷமடைந்தார். ராஜாவே! ஆபபோது, தாமேஉண்டானவரும், ஜங்கமங்களுக்கும் ஸ்தாவரங்களுக்கும்தந்தையும, பிரம்மஜ்ஞானிகளிற் சிறந்தவரும், மஹிமையுமஜீசுவரியமும் பொருந்தினவருமு, ஸூர்யனைப்போலப் பிரகாசிப்பதும ஹமஸங்கள்கட்டினதுமாகிய விமானத்திலேறினவருமான பிரமமதேவர் ஆதித்யர்களும் வஸுக்களும ஸாத்யர்களும் மருத்துக்களும ருத்திரர்களும் விசுவர்களும் யக்ஷர்களும் ராக்ஷஸர்களும் கின்னரர்களுமாகியதேவர்களாலும திசைகளாலும திசைக் கோணங்களாலும நதிகளாலும கடல்களாலும நக்ஷத்திரங்களாலும முகூர்ததங்களாலும ஆகாயதத்திற்சஞ்சரிக்கும்மற்றக்கிரஹங்களாலும தவத்திற்சிறந்ததேவரிஷிகளாலும் ஸித்தர்களாலும ஸபதரிஷிகளாலும மிக்கபுண்ணியவான்களானராஜரிஷிகளாலும கந்தர்வர்களாலும அபஸரஸின்கூட்டங்களாலும மறறுமுள்ளஎல்லாத் தேவர்களாலும் சூழப்பட்டவராக அநதஅஸுரனிடமதாமேவநது, "நற்றவமுள்ள வனே! பக்தியுள்ள உனது இநதத்தவத்தினல் நான்ஸந்தோஷமடைந் தேன். வரமகேள். உனக்கு ஸுகமுண்டாகட்டும். நீ நிணைத்தபயனை யடைவாய்" என்றுசொன்னர். அதனைக்கேட்ட ஹிரணியகசிபு, "தேவச்ரேஷ்டரே! தேவர்கள, கநதர்வர்கள, யக்ஷர்கள், நாகர்கள், ராக்ஷஸர்கள், மனிதாகள், பிசாசர்கள்இவர்களியாரும எனனைக் கொல்லவலலராகாமலிருக்கவேண்டும. உலகங்களுக்கெல்லாம கர்த் தாவே! சிறந்ததவமுள்ளரிஷிகளும கோபித்து என்மேலிடும்சாபங் கள் பயன்படாமலிருக்கக்கடவன. ஆயுதத்தினலும் அஸ்த்ரத்தினலும மலையினலும மரத்தினலும உலர்நததனலும ஈரமுள்ளதனலும மற்றொன்றினலும் என்னைவதஞ்செய்யக் கூடாமலிருக்கவேண்டும். பிதாமஹரே! ஆகாயததிலும பூமியிலும இரவிலும் பகலிலும உள்ளே யும் வெளியிலேயும எனக்கு வதமபோரிடாமலிருக்கவேண்டும். [1]பசு க்களாலும [2]மிருகங்களாலும பறவைகளாலும ஊர்வனவற்றலும என கது மரணம்வராமலிருக்கவேண்டும. இநதவரநதான் நான்விரும்பு வது. தேவர்க்குநதேவரே! நீங்கள்கொடுக்கிறதாயிருந்தால் நான் இநத வரங்களைக்கேடகிறேன்" என்றுசொன்னன். "அபபா! மேலானவையும புதுமையானவையுமான இநதவரங்களை உனக்கு நான் கொடுத்தேன். நீவிரும்பினவரங்களெல்லாவற்றையும நிச்சயமாகப் பெறுவாய்" என்றுசொல்லி, அநதப்பகவானனபிரம்மதேவர் ஆகாய மார்க்கமாகவேசென்று பிரமமரிஷிகளின்கூட்டங்களினுல் பூஜிக்கப்

1 காட்டுமிருகங்கள். 2 காட்டுமிருகங்கள்.

பட்டவராகப் பிரம்மலோகத்தில்விளங்கினர். அவர் வரம்கொடுத்த தைக்கேட்டவுடன் தேவர்களும் நாகர்களும கந்தர்வர்களும முனிவர்களும பிரமமாவினிடமசென்று, "பகவானே! இந்தவரத்தினால் அந்தஅஸுரன் எங்களைப்பீடிபபான். பகவர்னே! அதனால்தயை செய்து அவனைவதஞ்செய்வதற்கு உபாயத்தைஆலோசிக்கக்கடவீர்" என்றனர். உலகங்களுக்குஅனுகூலமான அவர்களுடையசொல்லைக் கேட்டு மஹிமைபொருந்தியபிரம்மதேவர் தேவக்கூட்டங்களைனவரையும்பார்த்து, "தேவர்களே! அவன்செய்த தவத்தின்பயனை அவன் பெறவேண்டியது அவசியந்தான். தவபயன்முடியுமபோது பகவானவிஷ்ணு அவனை வதஞ்செய்வர்" என்றுசொன்னர். இவ்வாறு அவன் வதத்தைபபற்றிய பிரம்மதேவர்சொன்னதைக் கேட்டபின் அந்ததேவர்களனைவரும ஸுதாஷ்டதுடன் தந்தம்திவ்யலோகங்களுக்குச் சென்றனர். வரமகிடைததவுடனே அந்தவரத்தினால்கர்வங்கொண்ட ஹிரண்யகசிபுவென்னுமஅஸுரன் அந்தஜனங்களெல்லாரையும துன்பபபடுத்தினன். அந்தஅஸுராராஜன் அஸுரக்கூட்டங்களினால் சூழபபட்டு ராஜ்யாதிபத்தியஞ்செய்தான். லோகாலோகம்என்னபபட்ட சக்கரவாளபர்வதத்திறகு உடபட்ட ஏழுதீவுகளையும் தன்பலத்தினால உட்படுத்தினன். தேவலோகத்திறகுரியபோகங்களெல்லாவறறையும இவ்வுலகத்தில் அவன் பூர்ணமாகஅடைந்தான். தானவனகிய அந்தஅஸுராராஜன மூன்றுலோகங்களினுமுள்ள தேவர்களைவென்று மூன்றுலோகங்களையும் தன்வசப்படுத்தி ஸ்வர்க்கத்தில் வாஸஞ்செய்தான். வரதத்தினாலடஙகொண்ட அந்தமஹாபலசாலியானஅஸுரன் தேவலோகத்தில்வாஸஞசெய்து எல்லாஉலகங்களையும்ஜயித்து, 'இந்திரன், சந்திரன், அக்னி, வாயு, ஸூர்யன், ஜலம, ஆகாயம், நக்ஷத்திரங்கள், பத்துத்திசைகள், அஹம, கோபம், காமம், குரோதம், வருணன், வஸுக்கள், [1]அரியமன், யக்ஷர்களுக்கும்கின்னரர்களுக்கும் ராஜாவுமதனங்களுக்கு அதிபதியுமானகுபேரன் ஆகிய இவர்கள்எல்லோருமாக 'நானே இருபபேன்' என்றுசொல்லி அப்படியே பலவந்தமாக அவர்களுடையஇடங்களைஆக்ரமித்து அவர்கள் அதிகாரங்களையும் எடுத்துக்கொண்டான். தேவச்ரேஷ்டர்களாலும் கின்னரச்ரேஷ்டர்களாலும் உயர்ந்தயாகங்கள்செய்து பூஜிக்கப்படவேண்டியவனனன். அவன் நரகத்திலிருப்பவர்களைக் கொண்டுவந்து ஸ்வர்க்கத்திலிருக்கச்செய்தான். பலசாலியான அந்தஅஸுராராஜன் இவ்வாறுனகாரியங்களைச் செய்தபிறகு ரிஷியாச்ரமங்களில் முஹூர்து

[1] த்வாதசாதித்யர்களில்ஒருவன்.

பாவர்களும், ச்லாக்கியமான தவமுள்ளவர்களும, ஸத்தியமும தர்ம முந்தவமுந்தவர்களும, ஜிதேந்திரியர்களுமான முனிவாகளைப் பீடித்தான். அஸுரர்களே யாகங்களின் ஹவிர்பாகங்களுக்கு உரியவர்களாகவும் தேவர்களே யாகஞ்செய்பவர்களாகவும் செய்தான். தேவர்கள் போனஇடங்களெல்லாம அவனும் போய்க்கொண்டிருந்தான். தேவர்களின் ஸ்தானங்களே ஆகரமித்து அரசுபுரிந்தான். இவ்வாறு அந்தத்துராத்மாவுக்கு ஐந்துகோடியே எழுபதினாயிரத்து அறுபத தொருவருஷங்கள் சென்றன. அவ்வளவு வருஷகாலமும் அந்த அஸுரராஜன் எல்லாச்சுகங்களோடும ஐச்வரியத்தையடைந்திருந்தான். அதிகபலசாலியான அந்த அஸுராராஜாவினால் மிகத்துன்புறுத்தபபட்ட அந்தத்தேவாகள் சிவனையும இந்திரனையும முன்னிட்டுக்கொண்டு பிரமமலோகமசென்றனர். பிரமமதேவரையடைந்து வ்யஸனபபட்டுக் கைகூபபி, "பகவானே! சென்றதற்கும் வருவதற்கும் ஈசுவரரே! இங்கேவந்திருக்கும எங்களைக காப்பாற்றக்கடவீர். எங்ளுக்கு இப்போது அலலுமடகலும கொடியஅஸுரன்பயமே இருக்கிறது. பகவானே! நீர் சுயமாகஉண்டானவர்; எல்லா அஸுரர்களையும ஆதியில உண்டுபண்ணினவா; எலலாவற்றிறகும் ஈச்வர்; ஹவ்யங்களையும கவ்யங்களையும படைத்தவர; யாருக்கும புலபபடாத மூலபுருஷர்; அழிவிலலாதவர்" என்றுசொன்னாகள. அதைக்கேட்டுப, பிரமமதேவர் "தேவாகளே! கேளுங்கள். இந்தஆபத்து இபபடிநேருமென்று என்னாலும் அறியமுடியவில்லை. [1]புருஷரும் [2]விசுவரூபரும் பேரொளிபொருந்தினவரும் எலலாபபிராணிகளுக்கும்அறியவும் சிந்திக்கவும்கூடாதவரும பிர்புவும் அழிவில்லாதவருமான நாராராயணராதாம இந்தவயஸனகாலதத்தில எனக்கும உங்களுக்கும முக்கியமானஆதாரம. நாராயணன் அவயக்தமஎன்று சொல்லபபட்ட மூலபபிரகிருதிக்கும மேற்பட்டவர். நான், அந்தஅவயக்தத்திலிருந்து பிறந்தவன். ஜனங்கள, லோகங்கள், தேவாகள, அஸுரர்கள் எலலாரும என்னிடமபிறந்தவாகள். தேவாகளே! உங்களுக்கு நான் எவ்வாறோ அவவாறே எனக்கு நாராயணன்; எலலாருக்கும நான் பிதாமகன். அந்தவிஷ்ணு எல்லாருக்கும பிரபிதாமகர. அந்தவிஷ்ணு அவ்வஸுரனைக் கொல்வது திண்ணம அவருக்கு முடியாதது ஒன்றுமில்லை. ஆதலால், விரைவாக அவரிடமசெல்லுங்கள்" என்று சொன்னர். பரதச்ரேஷ்டனை யுதிஷ்டிரா! பிதாமஹரா, சொன்னதைக் கேட்டவுடன் அந்தததேவர்களனைவரும பிரம்மதேவருடன்கூடவே

---

[1] ஆதமா. [2] எல்லாம தாமாகஇருப்பவர்.

திருப்பாற்கடலுக்குச்சென்றனர். ராஜாவே! ஆதித்யர்கள், வஸுக்கள், ஸாத்யர்கள், விசுவேதேவர்கள், மருத்துக்கள், ருத்திரர்கள், மஹரிஷிகள், அழகுள்ள அசுவினீதேவர்கள் முதலான தேவர்களனைவரும் தங்கள் கூட்டத்தாருடன் நான்முகனைமுன்னிட்டு [1]சுவேதத்வீபம் சேர்ந்தனர். "தேவர்களுக்கெல்லாம் ஈசுவரரே! ஹிரண்யகசிபுவை வதஞ்செய்து இப்போது எங்களைக் காபபாற்றக்கடவீர். தேவர்களுக்கெல்லாம்உத்தமரே! பிரமமாமுதலான எங்கள்எல்லாருக்கும முதல் ஸ்ருஷ்டிகர்த்தா நீர்தாம். மலர்ந்ததாமரையின் இதழ்போன்ற கண்களையுடையவரே! பகைவர்களுக்குப பயங்கரரே! அஸுரவம சத்தைஅழிப்பதற்கு நீரே எங்களுக்குச் சரணமாவீர்" என்று தேவர்கள்சொன்னர்கள். பரிசுத்தமானபுகழ்உள்ளவருமகாணக்கூடாதவரும் எல்லாபபிராணிகளுக்குமஆத்மாவுமானமஹாவிஷ்ணு தேவர்களின் அந்தச்சொல்லைக்கேட்டவுடனே மறுமொழிசொல்லத்தொடங்கினர்.

"அமரர்களே! பயத்தைவிடுங்கள். உங்களுக்கு நான் அபயம தருகிறேன். தேவர்களே! அதேஸ்வர்க்கத்தைத திரும்பவும் சீக்கிரத்தில் பெறுவீர்கள். வரமபெற்றதனால் கர்வமடைந்தவனும் இந்திராதிதேவர்களால் வதஞ்செய்யமுடியாதவனும் அஸுராராஜாவுமான அந்தஹிரண்யனை அவனினங்களுடன்நான் இதோ கொல்லுகிறேன்" என்றார். அதுகேட்ட பிரமமா, "பகவானே! தேவர்க்கும்தேவரானவர்களுக்கும் ஈசுவரரே! இந்தத்தேவர்கள் மிகவருந்தியிருக்கின்றனர். ஆதலால், அந்தஅஸுராராஜனைச சிக்கிரதில கொல்லுவீராக; அவனைக்கொல்ல இதுகாலம்; தாமதம்செய்யலாகாது; வரம பெற்றுக் கர்வங்கொண்ட அஸுரனை அவன்இனத்தாருடன் நீர்கொல்லும்" என்றுசொல்ல, விஷ்ணு, "அவ்வஸுரனைத் துரிதமாகவே அழித்துவிடுவேன். ஆதலால், தேவர்களும நீரும உங்களுலகங்களுக்குச் செல்லுங்கள" என்று மறுமொழிகூறினர். ராஜாவே! இவ்வாறுசொல்லிய தேவர்களை அனுபபினபிறகு, ஈசுவரரும் பகவானுமான அந்தமஹாவிஷ்ணு, பாதிஉடம்பு மனிதவடிவமாகவும பாதி உடம்பு சிங்கவடிவமாகவுமுள்ள நரஸிம்மரூபம்எடுத்துப் பயங்கரமானரூபமும் பேரொளியுமுள்ளவ்வாகக் கையினுல்கையைப்பிசைந்து வாயைத்திறந்துகொண்டு நமனைப்போல ஹிரண்யகசிபுவினிடம் போனர். மிகுந்தபலமுள்ள நரஸிம்மரூபத்தோடுவந்த அந்தமஹாவிஷ்ணுவைக்கண்டு, அவ்வஸுரர்கள் மிகக்கோபித்து ஆயுதவர்ஷங்களை

[1] திருப்பாற்கடலிலுள்ள தீவு.

அவர்மேல் வர்ஷித்தனர். அவர்களால்விடப்பட்ட ஆயுதங்களெல்லா வற்றையும் ஹரியானவர் விழுங்கிவிட்டார். யுத்தத்துக்குவந்த அனேக மாயிரம்அஸுரர்களைக்கொன்றார். கோபங்கொண்ட மஹாபலசாலிக ளான அவ்வஸுரர்கள்னைவரையும்கொன்றபிறகு மிக்ககோபத்துடன் பலத்தினல் கர்வங்கொண்ட ஹிரண்யனை எதிர்த்தோடினர். இருண்ட மேகநிறமுள்ளவரும் நீருண்டமேகமபோலக்கர்ஜிப்பவரும் மேகத் தின்மின்னல்போலப் பிரகாசிக்குமஒளியுள்ளவரும் மேகம்போல வேகமுள்ளவரும் சிறந்த சக்தியுள்ளவருமாகிய அந்தபபகவான், அதிகபலமும கொழுப்புமுள்ளவனும கொழுத்தபுலிபோன்றபராக் ரமமுள்ளவனும கர்வித்தஅஸுரகூட்டங்களினல் காபபாறறப்பட்ட வனுமாகிய அந்தஹிரண்யகசிபுவென்னும அஸுரனுடன் நகங்களா லும பற்களாலும யுத்தஞ்செய்து ஸந்தியாகாலத்தில் வீட்டுத்தலை வாயிலில் அந்தஹிரண்யனைத் தமதுதுடைமேல்வைத்துக்கொண்டு விரைவாக நகங்களால கிழித்தார். சிறந்தபலமும பராக்ரமமுமுள்ள வனும வரம்பெறறதனலகர்வித்தவனுமாகிய அந்தஅஸுரச்ரேஷ்ட னைத் தேவச்ரேஷ்டரானவிஷ்ணு தமபராக்ரமத்தினல் கொன்றார். மஹா மஹிமையுள்ளபகவான் ஹிரண்யகசிபுவையும மறறுமுள்ள அஸுரர்கள்அனைவரையும கொன்று தேவர்களுக்கும மனிதர்களுக் கும் நன்மையைசெய்து பூமியில தாமததைநிலைநிறுத்தி ஸந்தோஷ மடைந்தார். பாண்டுபுத்திரனே! இந்தநரஸிம்மாவதாரம் என்னல் உனக்குச்சொலலப்பட்டது. மஹாத்மாவான விஷ்ணுவின் வாமனவ தாரத்தைப்பற்றியும கேள.

நாற்பத்தேழாவது அத்தியாயம்.

அர்க்காஹரணபர்வம். (தொடர்ச்சி)

(வாமனவதாரம்)

தர்மராஜாவே! முன்னொருகாலத்தில் சூரனும் பலதில் ஒப்பற்றவனும மனிதரமுள்ளவனும விரோசனன் மகனுமான பலிஎன்னும அஸுரராஜன் ஒருவனிருந்தான். மஹாராஜாவே! அந்தக்காலத்தில் அந்தப்பலியானவன் தன்பராக்ரமத்தினல் இந்திரனை ஜயிபபதற்காக அஸுரக்கூட்டங்களினல் சூழபபட்டவனாக இந்திர லோகம்சேர்ந்தான். அந்தக்காலத்தில் அந்தபபலியினல் அசசமுறச செய்யப்பட்ட இந்திராதிதேவர்கள் அனைவரும்சேர்ந்து பிரம்மாவை

மூன்னிட்டுக்கொண்டு திருப்பாற்கடலுக்குச்சென்று ஈசுவராணாராயணனைத் துதிசெய்தனர். அபோது அந்தஹரியானவர் அந்தத் தேவர்களுக்குத் தமதரிசனத்தைக்கொடுத்தார். அந்தப்பிரபுவுக்குத் தேவர்களின்மேலுள்ளகருணையினால் அதிதியினிடம ஜனனம்நேராத தாகச் சொல்லபடுகிறது. இந்தக் கண்ணபிரான் அதிதியின்புத் திராகவும்பிறந்து விஷ்ணுவெனறு க்யாதிபெற்று இந்திரனுக்கு இளையஸோதரராயிருந்தார். அதேதகாலததில பலததிலும் பராக்ரமத்திலும்சிறந்த அந்தஅஸுரனுன்பலி யாகங்களில்சிறந்த அசுவமேதத்தைச் செய்யத்தொடங்கினன். யுதிஷ்டிரா! அஸுராராஜாவின் அந்தயஜ்ஞம நடநதுகொண்டிருகையில அந்தவிஷ்ணு பிராம்மண வேஷததால்மறைநது கேஷ்ளாமசெய்துகொண்டு குடுமியுடன் யஜ்ஞோபவீதததையும் கிருஷ்ணஜிஞதையுமதரிதது பலாசதண்டத்தைப்பிடித்து ஆச்சரியமானகாடகியுளள குளளமானபிரமசாரியாகப் பலியின்யாகசாலையில தக்ஷிணைகொடுக்குமகாலததில புகுநது, "எனக்கு இவ்விடத்திலேயே மூன்றுஅடி நிலததைத தக்ஷிணையாகக் கொடு" என்றும், "மூன்றடிமாதரமே கொடுக்கவேண்டும" என்றும் அஸுராராஜாவானபலியினிடம யாசிததார். அவன் அந்தவிஷ்ணுவுக்கு 'அபபடியேஆகட்டும' என்று வாகுதததஞ்செய்து உடனேகொடுத்தான். விஷ்ணுவானவர அவனிடம பூமியைபபெற்றுக்கொண்டவுடன் மிகவும்வளராநதார. ராஜாவே! சிறுகுழநதையாயிருந்த அந்தவிஷ்ணுவானவர் அவனிடயிதது மூன்றுஅடிகளாலேயே மேலுலகம இடையிலுளள ஆகாயம இவைமெல்லாவறறையும வசபபடுததினர். முன்னர் மஹாபலசாலியான பலியினுடையயாகத்தில யாராலும அசைக்கமுடியாத அந்தஅஸுரசக்ரவர்த்திகள் அதிகபலசாலியான விஷ்ணுவினால கலக்கபபடடனர்

பரதவமசததமசே! ,பலவிதமான முகங்களும பற்பலவேஷங்களும் பறபலஆயுதங்களும் பலவகைபபுஷ்பங்களும் சாநதுகளுமுடையவரும பெரியதேகங்களுடையவரும பயங்கரமான விப்பிரசிதது முதலான அஸுரதலைவாகள் கோபித்துஎல்லாச்சேனைகளையும் கூட்டிக்கொண்டு, பராக்ரமத்தினால் ஜ்வலிப்பவர போலத தங்கள் ஆயுதங்களையெடுத்து அங்கே அடிஅளக்குமபகவானிடம் ஓடிவநதனர். அந்தப்பகவான் மிக்கபயங்கரமான உருவமெடுத்து உள்ளங்கால்உள்ளங்கைகளினாலேயே அவ்வஸுரர்களனைவரையும மர்த்தனஞ்செய்து உடனே பூமியைவாங்கிக்கொண்டார். எல்லாபபிராணிகளுக்கும் ஆத்மாவான அந்தப்பகவான் மேலுலகத்தையும் ஆகாயத்தையும் வ்யாபித

துப் பிறகு தாமிருக்குமிடமான ஸூர்யனிருக்குமிடத்திலிருந்து தமஒளியினால் ஆதித்யகணமிஞ்சிய பிரகாசித்தார். நீண்டகைகளை புடையவரும், பெருமபுகழ்பெற்றவருமாகிய 'அந்தபபகவான் எல்லாத திசைகளையும மூலைகளையும எலலாலோர்கங்களையும் பிரகாசப்படுத்தினர். அவர் பூமியையளக்குங்காலத்தில் சந்திரனும் ஸூர்யனும் ஸ்தனங்களின் ஸ்தானங்களில இருந்தனர்; திருமபவும விருத்தியாகும்போது அவருக்கு நாபிஸ்தானத்தில இருந்தனர். அதறகுமேல் விருத்தியாகுமபோது அவர்கள முழங்காகளிலிருந்தனர். அளவில் லாதமஹிமையுளள விஷ்ணுவைபபற்றிப பிராமமணர்கள இவவாறு உரைக்கின்றனர். யுதிஷ்டிரா! அதன்பிறகு அவா காலத்தூக்கினதனால அண்டம்பிளந்தது. அந்தபபிளபபின்வழியாய் அவருடைய பாதத்திலிருந்து ஒருநதி பெருகிச்சமுதிரத்தில்போய்விழுந்தது. கடலொடுகலந்த அந்தநதியானது பரிசுத்தமானநதியாயிறறு. அந்தப் பகவான் அஸுரத்தலைவர்களைகொன்று அஸுரர்களுடைய ஐசுவரியத்தையும் மூன்றுலோகங்களையும பூமியிண்டத்தையும எடுததுக் கொண்டார். நமுசி, சமபரன், உயாநதமனமுள்ளபிரஹ்லாதாஆகிய, இநத அஸுராகளைமட்டும மணவிமகளுடன் பாதாளலோகதத்தில் நிலைபெறச்செய்தார ராஜாவே! எல்லாபபிராணிகளுக்கும ஆத்மாவான ஹரியானவர் தமதம்குணங்களோடுகூடிய ஐநதுபூதங்களையும் காலமிண்டத்தையும தமஉறபபுக்களாகக காண்பித்தார். எல்லாஉலகங்களும் அவருடையசரீரத்தில் சேரத்துவைக்கப்பட்டதை ஜனங்கள் கண்டனர். அமமஹாதமாவினால வ்யாபிக்கபபடாதது ஒன்றும உலகங்களிலஇல்லை. உபேநதிரனுடைய அவவுருவதைக்கண்டு தேவர், தானவா, மானவர் அணைவரும் விஷ்ணுவின்மஹிமையினால் பீடிக்கபபட்டு மூர்சிதிதனர். கர்வமுளளபலியானவன் மஹாதமாவான விஷ்ணுவினால யாகசாலையிலேயே கட்டப்படடான். விரோசனன் குலமிண்டம் பாதாளத்திலஅமிழ்த்தபபடடது. கருடவாகனராகிய விஷ்ணு தமது ஈசவரசக்தியினால இவவகையானசெய்கைகளைசெய்தும கர்வபபடவில்லை. அஸுரர்களைமஹரிபபவரானவிஷ்ணு அஸுரர்களின்செலவமஅணைதையும மூன்றுலகங்களையும 'இநதிரனுக்கு அளித்தார். மஹாதமாவான விஷ்ணுவின் இநதவாமனவதாரதையும உனக்குச்சொன்னேன். விஷ்ணுவினுடைய இந்தக்கீர்த்தியானது வேதம்அறிநத அநதணரால் ஓதபபடுகிறது. இனி விஷ்ணுவின் மனுஷ்யாவதாரங்களைகேள்.

நாற்பத்தேட்டாவது அத்தியாயம்.

அர்க்காஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(தத்தாத்ரேயஅவதாரம்.)

பெருங்கீர்த்தியுள்ள தத்தாத்திரேயனெனும ரிஷியிருந்தா ரன்றே? அவா மஹாத்மாவானவிஷ்ணுவின் மறுரூருஅவதாரம். வேதங்களும் நல்லொழுக்கங்களுட் யாகங்களுங்கெடடு நாலுவருணங் களும்கலந்து தர்மம்தளர்ந்து பாவம்வளர்ந்து உண்மையழிந்து பொய் மிகுந்து பிரஜைகள்குறைந்து தர்மசாஸ்திரங்களும்ஒழிந்துபோன காலத்தில் அநத்தத்தாத்திரேயரால் யாகங்களும நல்லொழுக்கங்க ளும் வேதங்களும திரும்பவுமகொண்டுவரப்பட்டன. அவர் ஹைஹய தேசத்தரசனுகிய கார்தவீர்யார்ஜுனனுக்கு வரமளித்தபோது அம் மஹாத்மாவினல் நாலுவருணங்களும ஒன்றோடொன்று தனித் தனியே நிலைநிறுத்தபபட்டன. ஹைஹயதேசாதிபதியான கார்த்த வீரியார்ஜுனன் தத்தாத்ரேயருடைய அனுக்ரஹத்தைபபெறுவதற் காக வனத்திலிருந்துகொண்டு கோபத்தையும் நான் எனதுஎன்ற எண்ணங்களையும ஒழித்து நீண்டகாலம நன்றுகபபணிவிடை செய்து அவரைச்சநதோஷபபடுத்தினன். எல்லாமதெரிநதவனுகிய அநதக் கார்த்தவீர்யார்ஜுனன் தத்தாத்ரேயருக்குச சுச்ரூஷைசெய்து தன க்குவேண்டினவரும விதவானகளினல்பூஜிக்கபபெற்றவருமாகிய அந தப்பிராம்மணரிடம் பின்சொலலபபோகிற தனக்குமிகவும்வேண்டின வரங்களைபபெற்றன். சிறநதஜ்ஞானமுள்ளபிராம்மணராகிய தத்தாத ரேயரால் மரணமில்லாமையைததவிர வேறுநாலுவரங்களைக்கேடகும படிசொல்லப்பட்ட அவ்வசன், "நான்செல்வமுள்ளவனுகவும் சிற நத மனமுள்ளவனுகவும், பலவானுகவும ஸத்தியமுள்ளவனுகவும் பொறுமையில்லாதவனுகவும் ஆயிரம்கைகளுள்ளவனுகவும் இருக்கக் கடவேனென்பது எனதுமுதலவரம. கருபபையில் பிறப்பனவும் முட்டைகளில்பிறபபனவும் மற்றுமுளளசராசரங்களுமான எல்லாவற் றையும நான் தர்மத்தினல் ஆளவிரும்புகிறேன். இஃது எனதுஇரண் டாவதுவரம். பித்ருக்களையும தேவர்களையும ரிஷிகளையும பிராம் மணர்களையும பெருவேள்விகளாலும பகைவர்களைக்கூரம்புகளாலும வசப்படுத்தக்கடவேன். இஃது எனதுமூன்றுவதுவரம். இவ்வுல கத்திலும ஸ்வர்க்கலோகத்திலும எவனுக்கிடானபுருஷன் முன்னும் பின்னும இடமோதும்இல்லையோ அவன்தான் என்னை வதஞ்செய்பவ

ஞகஇருக்கவேண்டும்" என்று இந்தநான்குவரங்களையும்கேட்டான். கிருதவீர்யன்புத்திரனாகிய அநுதஅர்ஜுனன் யுத்தத்தில்சிறந்தவனாக இருந்தான். அவன் அனேகமாயிரவருஷகாலம் மாஹிஷ்மதிநகரத்தில் விருத்தியடைந்தான். அநுதஅர்ஜுனன் பூமிமுழுமையையும் கடல்சூழ்ந்த தீவுகளையும்வென்று ஆகாயத்தில்ஸூர்யன்பிரகாசிப்பதுபோலத் தனதுபுண்ணியகர்மங்களினால பிரகாசித்தான். அளவற்றபராக்ரமமுள்ள அர்ஜுனன் முன்னிருந்தவர்களால் ஜயிக்கப்படாதவையான இந்திரத்வீபம், கசேருதவீபம், காமத்வீபம், கபஸ்திமத்என்னுமத்வீபம், கந்தர்வதவீபம், வருணதவீபம், ஸௌஹ்ருஷ்டம்என்னுமதவீபம் ஆகியதீவுகளையும் ஜயித்தான். கார்ததவீர்யார்ஜுனன் கடலிலசென்றபோது ஆடைநனைகிறதில்லையென்பது அவனுக்கு மனிதர்களில்ஒப்பற்ற செய்கையாயிருந்தது. அவன்போன வழியை முந்தியஅரசர்களும அனுஸரிக்கவில்லை. பிந்தியஅரசர்களும் அனுஸரிப்பதில்லை. அவன் வீடுகளெலலாம உயர்ந்தபொன்மயமாயிருந்தன. அவன் தன்னை நாலுபாகங்களாகவருத்து ராஜ்யபரிபாலனஞ்செய்தான். அவற்றில், ஒருபாகத்தினால் சேனையைநடத்தினான்; இரண்டாவதுபாகத்தினால அரண்மனையில்வஸித்தான்; இனியதும் மிக்கநன்மையைததருவதுமான அவ்வரசனுடைய மூன்றுவதுபாகம ஜனங்களைவசபடுத்திக்கொண்டிருந்தது. அந்தபபாகத்தினால் பாகங்களைசெய்தான். கிராமங்களிலும வனங்களிலுமிருக்கும துஷ்டர்களைவரையும நாலாவதுபாகத்தினால் தடுத்தான். அவனுடையஅந்தபபுரங்களிலும் வாயில்கள்மூடபபடுவதில்லை. ராஜாவே! அந்தஅர்ஜுனன் தானே ராஜ்யத்தையும் ஸ்திரீகளையும் ஆடுமாடுகளையும் காப்பவனாகஇருந்தான். அந்தஅர்ஜுனன் தததாதரேயரின்அனுக்ரஹத்தினால் இவவாறு அனேகமாயிரவருஷகாலம பூமியைஆண்டு ராஜ்யபரிபாலனஞ்செய்தான். அவன் உலகத்தின்நன்மைக்காக இவ்வகையான அனேகாரியங்களைச்செய்தான். பரதச்ரேஷ்டனே! தத்தாதரேயரென்றுசொல்லபபட்ட இந்தவிஷ்ணுவின் அவதாரத்தை உனக்குச்சொன்னேன். இன்னும் அமமஹாதமாவின் அவதாரத்தைக் கேள்.

நாற்பத்தோன்பதாவது அத்தியாயம்.

அர்க்காஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(பரசுராமாவதாரம்.)

மஹாதமாவானவிஷ்ணு ஜாமதக்னியாளன்று பெயர்பெறுப பிருகுவமசதத்தில் ஜனித்த அவதாரம எதறகாகவென்று சொல்லு கிறேன்.

ராஜாவே! ஜமதக்னியின்புதநிரான அநதராமரென்பவர சிறநத பராக்ரமமுள்ளவர. ராஜாவே! அபரிமிதபல சாலிகளிறகிறநத அநத ராமர் மஹாஹயராஜாவானகார்த்தவீர்யார்ஜுனனைமுடித்தவர். மஹா வீரனும வலிமையில்லாபற்றவனுமாகிய கார்த்தவீர்யன் பிழைசெய்த தனால ஜமதக்னிபுத்ரரான ராமரால கொலலபபட்டான். பரசுராமர் மஹாஹயதேசத்தரசனும பூமிக்குரசவரனும பகைவரையடக்கினவனு மாகிய அநதக்கார்த்தவீர்யனை யுத்தத்தில தேரிலிருநதபடியே கீழே தள்ளிக்கொன்றார். ஜமபினென்னுமரசனுடைய யாகத்தைக்கெடு த்து அவன்யாகாரியத்திலிருநத ரித்விக்குகளையடித்து அவன்தலை யைபபிளந்தார். சதது நதுபியென்பவனையும கொன்றார். கோவிநத னென்றுசொலலப்படட சிறநதசகதியுளள இநதக்கிருஷ்ணன்தான் யுத்தத்தில ஆயிரமபேரைஜயிபபவனும் ஆயிரங்கைகளையுடையவனு மான கார்த்தவீர்யார்ஜுனனைக்கொலல பிருகுவமசதத்தில அவதரித் தார். பெருமபுகழ்பெறறவராகியஇவர ஸர்ஸ்வதிநதிக்கரையில்சேர்ந்த ஆறுலக்ஷத்துநாறபதினாயிரம க்ஷத்திரியாகளை வில்லைகொண்டுஜயித் தார். அதிகமகொடியவரும மஹாபதருமான அநதபபரசுராமர் பிராம மணத்வேஷிகளானக்ஷத்ரியாகளை வதஞசெய்த அநதத்தருணத்தில பின்னும பதினாலாயிரம சூரர்களைக்கொன்றார். அநதவீரா முதலில் ஆயிரமஅரசாகளை முறியஅடித்தது பின்னும ஆயிரவர்களை உலகமை யாலடித்துக்கொன்று மறறும ஆயிரமபேரை (கதையால) வெடடி னார். பதினாலாயிரமபேரை நெருபபுபபொறியையும புகையையும் குடிபபித்தார். அநதபபரசுராமர் மிசசமுள்ள பிரம்மதவேஷிகளான க்ஷத்ரியாகளையும ஜயித்தபிறகு ஸ்நானஞசெய்தார். க்ஷத்ரியர்க ளால்பீடிக்கபபடடு, துயரதுடன் பிராம்மணர்கள், 'ராமராமா' என்று உரக்கக்கூவ, அநதசசொலலைக்கேளாபொறுக்காமல் லக்ஷக்கணக் கானராக்ஷதகளை கோடாலியினாலறறுகொன்று ஜயித்தார். 'பிருகுராம ரே! ஓடிவாரும' என்று பிராமமணர்கள்கதறினபோது காச்மீர்,

தாதர், குருதிகள், க்ஷுத்திரகா, மால்வர், சகா, சேதிகள், காசிசேத சத்தவர், கரூசா, ரிஷிகர், விதாபபர், அங்கா, வங்கா, களிங்கர், மாகதா, காசிகோஸலா, ராதராயணா, வீதிஹோத்ர், கிராதர், கார் தகிகாலதர்முதலான பறபலதேசதது ராஜாகளே ஆயிரக்கணக்காகக் கூரம்புகளால் அறுதது, [1]ஸோயனுகளுகொடுதது மேருமலையை யும மநதரமலையையும பூஷணங்களாகவுடைய இப்புவனி அனேகம் கோடிக்ஷதரியபபிணங்களால நிரபபபபடடது. அநதபபரசுராம ரால மூவேழுமுறை க்ஷதரியாகள அழிகபபடடனர. பெருங்கோ தரியுளவீரரான அநதபபரசுராமா க்ஷதரியாகளில்லாமறசெய்த பிறகு பட்டுபபூச்சிநிறமும சகோரபக்ஷிநிறமுமுள்ள ரகதத்திஞல் நதி களையும தடாகங்களையுமநிரபபி அவறறில் பிதிர்களுக்குத தாபப ணஞ்செய்தார். அநதபபரசுராமா பதினெடடென்னும கணக்கான தீவுகள் அநேகதையுமவசபபடுதது அனேகமாயிரம அசுவமேதயாகங் களையும அனேகநூறு நரமேதங்களையுஞ்செய்து கடலசூழ்நதபுவனி யைக காச்யபருகருக்கொடுததார இவவாறு பூமியில துஷ்டாகளில லாமறசெய்துவிடடு அதன்கோடியைப பிரதக்ஷிணமசெய்தார். அது முதல் பூவுலகதைதெரிநதஜனங்கள மஹாதமாவான பரசுராமரைப பறறி அக்காலத்திறசெய்யபபடடதும உண்மையானபொருளுளது மான ஒருசலோகததைச சொலலுகின்றனர. அதன்பொருளாவது, "பதினெட்டடி அகலமுள்ள தும புருஷபரமாணததிறகுமேறபடடது மான பொன்யாகவேதிகையைப பரசுராமரிடம காசயபர்வாங்கிக்கொ ண்டார" என்பது. சிறநதகைகளையுடையபரசுராமா இவ்வாறு நிரம பினதக்ஷிணைகளுளள யாகங்களைச்செய்து பின்னும நூறுவருஷகாலம ஸௌபராஜாவான ஸாலவனேடு யுததஞசெய்தார். பரதச்ரேஷ்ட ஞனதர்மராஜாவே! ஸமர்ததரான அநதபபரசுராமா மிகசுழகான ரதததிலேறி ஸௌபராஜனேடுயுததஞசெய்தபோது, பருவமடையாத கன்னிகைகள் "ராமராமா! சிறந்தகைகளையுடையவரே! பருகுவமசத் தாருக்குப புகழைவளரபபவரே! ஆயுதங்களெலலாவறறையும விடடு விடும. நீஸௌபனைகொல்லபோடடார. சங்ரசக்கரகதாயுதங்களை கைகளிலேநதியவரும் தேவாக்கு அபயமளிபபவருமாகிய கண்ண பிரான் பிரத்யுமன சாம்பராகளுடன்சேர்நது யுததத்தில் ஸௌபனைக கொல்லபோகிறார்" என்று பாடியதைக்கேட்டார். பூருஷச்ரேஷ்டரும் பெருங்கீர்த்திபெற்றவருமான பரசுராமர் அதைகேடடவுடன் கால

[1] யுதததிலிறப்பவர் ஸோயமண்டலவழியாக வீரஸ்வர்க்கம்போகிறார்க ளென்பதுபற்றி இங்ஙனம்கூறப்பட்டது;

தத்தையதிர்பார்த்து ஆயுதங்களெல்லாவற்றையும் எறிந்துவிட்டு ஸந்யாஸஞ்செய்துகொண்டு அங்கிருந்தே வனத்திறகுச்சென்றார். பரசுராமர் தேர், ஆயுதங்கள், அம்புகள், கோடாலி, விற்கள் இவையெல்லாவற்றையும் ஜலத்தில்வைத்துவிட்டுச் சிறந்ததவஞ்செய்தார். பகை வரையழிப்பவரும தர்மாத்மாவுமான பரசுராமர், ஞாணம், மதி, சக்தி, புகழ், பாக்யம இவ்வைந்தையுமட்டும்கைக்கொண்டு அந்த ரதத்தை விட்டுவிட்டார். ஈசவராணபரசுராமா ஆதிகாலத்தில்ஏற்பட்ட [1]பாகத்தைக் (கிருஷ்ணனுக்குப) பகுதத்துக்கொடுத்தார். பெரும்புகழுள்ள பரசுராமர் விதியின் நம்பிக்கையினாலேதான் அபபோது ஸௌபரீனைக் கொல்லவில்லை. அவர சக்தியில்லாதவரலலர். ஜாமதகனியரென்று பெயர்பெற்ற பசவாஞ்சியரிஷி இந்தக்கிருஷ்ணனுடைய அமசந்தான். உலகங்களில்போற்றற அந்தபபரசுராமர் பிறகு தவஞ்செய்தார்.

ஐம்பதாவது அத்தியாயம்.

அர்க்காஹரணபர்வம். (தொடர்ச்சி)

(இராமாவதாரமும் கிருஷ்ணவதாரச்சுருக்கமும்.)

ராஜாவே! மஹாத்மாவானவிஷ்ணுவின் பின்அவதாரத்தையும கேள். அழிவில்லாதவரும சிறந்தகைகளுள்ளவருமான விஷ்ணுவானவர் இருபத்தெட்டாவதுசதுர்யுகத்தில் மார்க்கண்டேயரைமுன்னிட்டுத் தம்மைநாலுபாகங்களாகச்செய்துகொண்டு நவமித்திதியில தசரத புத்திரராகஅவதரித்தார். குருந்திபுத்திரா! அழிவில்லாதவிஷ்ணுவானவர் பராக்ரமத்தில்ஸூர்யனுக்குஒபபானவரும பெருமபுகழ்பெற்றவருமான ராமபிரானென்றுலகதத்தில்பெயர்பெறறுத் தர்மத்தைக்காப்பதற்காகவும் உலகத்தைஅனுகரஹிபபதற்காகவும தசரதரிடத்தில்அவதரித்தார். அந்தமஹாராஜாவையும எல்லாலகங்களுக்குமஈசவரானபகவானுடையதேகமென்று கூறுகின்றனர். பாரதனே! அந்த அவதாரத்தில் விசுவாமித்திருடையவேள்விக்கு இடையூறுசெய்த ஸுபாகுவென்றராக்ஷஸன் அந்தராமபிரானல்கொலலபபட்டான். மாரீசன் அதிகமாகஅடிக்கப்பட்டான். சிறந்தஜ்ஞானமுள்ளவிசுவாமித்திரர் சத்துருக்களையெலலாம்வதஞ்செய்வதற்காகத் தேவர்களாலும தடுக்கமுடியாதஅஸ்த்ரங்களை அவருக்குஅளித்தார். மஹாத்மாவான ஜனகருடைய பெருமவேள்விநடக்குமபோது வில்லையாடிக்கொண்டிரு

[1] ஸௌபராஜனைக் கொல்லாமல்விட்டது.

ந்த ராமபிரானுல் மகேசுவரருடைய உறுதியானவில்லானது விரோயாட்டாகஒடிக்கபபட்டது அநதபபிரபு அதன்பிறகு ஜனகபுதரியான ஸீதையுத தமதுபாரையாக விவாகஞசெய்துகொண்டார். மறுபடியும ஸீதையுடனகூட அயோததிநகர்சேர்நது அங்கேகமகிழ்நதிருநதார். பின்பு சிலகாலததுக்குபபிறகு தமபிதாவினுலைகடடளையிடபபட்டுக்கைகேயியினவிருபபததைதசெய்யக்கருதி வனததுக்குச்சென்ருர். எல்லாததாமஙகளுநதெரிநதவருமை எல்லாபபிராணிகளுக்கும் நண்மைசெய்வதிலேயே ஊக்கமுளளவருமாகிய அநதராமபிரான் லக்ஷ்மணருடன்கூட பதினன்குவருஷகாலமை வனததில்வாஸஞசெய்தார். பாரதனே! ஸ்ரீ மஹாலக்ஷ்மியானவள எபபோதுமை அகலாமலிருபபவளாதலால் ஜனஙகளால ஸீதையென்றுசொலலபபட்டு, மானிடவடிவததுடன் அவாபக்கததிலேயிருநதுகொண்டு, பதினன்குவருஷகாலததையும் வனததிலேபோக்கித துயரபபடடுக்கொண்டிருநதாள். தாமாதமாவான அவவிராமபிரான் ஜனஸ்தானததிலவாஸஞசெய்யும்போது மாரீசனையும தூஷணனையும கரனையும திரிசிரஸையும கொடியசெய்கையுள்ள பதினலாயிரமராக்ஷஸாகளையும ஜனஙகளின்நன்மைகாகக்கொன்று தேவகாரியததைசசெய்தார. அபபோது ராமர், சாபததினுல்கெடுக்கபபடடுக கொடியசெய்கையுளள ராக்ஷஸாகளாயிருநத விராதன் கபநதனென்னுமஇரண்டுகநதாவாகனையுமகொன்ருர். அவர், ராவணன்சகோதரியான சூர்பபணகையை மூகுகரியச்செய்தார். ஆதலால தபமணிவினியின்பிரிவையடைநது அவனிதேதிடி வனமெலலாந திரிநதார். அவர ஜனஸ்தானததிலிருநது பமபையென்னுநதடாகதைதக்கடநது ரிசயமூசமலைகுசசென்று ஸுக்ரீவனையும் ஆஞ்சனேயரையுமகண்டு அவர்களுடனும ஸ்நேஹமசெய்துகொண்டார். ராமபிரான் உடனே ஸுக்ரீவனுடன்கூடவே கிஷ்கிநதைக்குசசென்று மஹாபலசாலியும வானராராஜாவுமான வாலியை யுததததிறகொன்று உடனே ஸுக்ரீவனை வானராராஜாவாகப படடாபிஷேகஞசெய்தார. ராஜாவே! பிரிவாற்ருத அமமஹாவீரருக்கு வாயுபுத்திரானஆஞ்சனேயர் லங்காபில ஸீதையைததேடி விசையாகத்தெரிவித்தார். பிரிவாறுத ஸ்ரீ ராமர், வானராகளால ஸமுத்திரததில்அணைகடடுவித்து ஸீதையிருககுமிடநதேடி லங்கையில்பிரவேசித்தார். அவர, அங்கே தேவர்களாலும நாகர்களாலும் யக்ஷர்களாலும் ராக்ஷஸர்களாலும பக்ஷிகளாலும கொல்லவுமவெலலவும் கூடாதவனும அனேக ராக்ஷஸர்களோடுகூடியவனும் உடைக்கபபடட மைதத்திரளபோன்றவனும தேவர்களால் கண்ணெடுதது்பபார்ககமுடியாதவனும் வரம்பெற்றத

ஞல் கர்வமடைந்தவனுமான ராவணனென் னும் ராக்ஷஸராஜாவை மந்திரிகளுடனும் குலத்தோர்களுடனும போரில்வதைத்தார. எல்லாவற்றிற்கும் ஈச்வரரான ஸ்ரீராமபிரான் மூன்றுலோகங்களுக்கும முட்போன்றவனும் வீரனும் பெரியதேகமும மிகுந்தவலிமையுமுள்ளவனுமான ராவணனையும அவன்சேனையையும்கொன்று மஹாத்மாவென்றுபெயர்பெற்ற விபீஷணரை லங்கையில் ராக்ஷஸர்களுக்கு ராஜாவாகப் பட்டாபிஷேகஞ்செய்வித்ததுப பிறகு அவருக்கு [1]அமரத்வத்தையும்அளித்தார். பாண்டவனே! ராமபிரான் மீதையையழைத்துக்கொண்டு புஷ்பகவிமானம்ஏறிச் சேனையுடன் தமதுராஜதானியான அயோத்திக்குச்சென்று தர்மமாக ராஜ்யபரிபாலனஞ்செய்தார். ராஜாவே! அப்போது மதுவின்புத்திரனும் மஹாபலசாலியுமான லவணனென்னுமஅஸுரனை ஸ்ரீராமபிரானுடையகட்டளையிஞல் சத்துருக்னர் வதஞ்செய்தார். தர்மபரிபாலனஞ்செய்கிறவர்களிற் சிறந்தவராகிய அந்தஸ்ரீராமபிரான் உலகங்களின்நன்மைக்காக இவ்வகையான அனேககாரியங்களைச்செய்து நீதியாக ராஜ்யபரிபாலனஞ்செய்தார். விளங்குகின்ற ஸாமகோஷங்களையுடைய நூறுஅச்வமேதயாகங்களை இடையூறின்றிச்செய்தார். ஸ்ரீராமர் அரசாட்சிசெய்யுங்காலத்தில் அழுகுரலகள்கேட்கப்படவில்லை. பிராணிகளுக்கு அகாலமரணம்இல்லை திருடர்களின்பயமுமில்லை. ஸ்ரீராமர் அரசுபுரியும்போது பூமியிலுள்ள எல்லாஜனங்களும் [2]ரிஷிகளுக்கும் தேவர்களுக்கும மனிதர்களுக்கும செய்யுங்கடமைகள்தவறுமலிருந்தனர். ராமராஜ்யம்நடக்கும்போது எவ்விடத்திலும எந்தமனிதனும பிராணிகளுக்குத்தீங்குசெய்யவில்லை. [3]பிராணனும [4]அபானனும [5]ஸமமாக விருந்தன. பூர்வகதையைத்தெரிந்தஜனங்கள் ஸ்ரீராமராஜ்யத்தைபற்றிப் பின்வரும் சுலோகங்களையும சொல்லுகின்றனர். அவற்றின் பொருள் :-இளமைபருவமுள்ளவரும் சிவந்தகண்களும கருநிறமும அழகியமுகமும சிங்கம்போன்றதோள்களுமுடையவரும் யானைக்கூட்டத்தரசுபோல மஹாபலசாலியுமான இராமபிரான் பதினாயிரம வருஷகாலம ராஜ்யாதிபத்யத்தையும ஸுகத்தையும்அடைந்து இப்புவனியைஆண்டார் - என்பது. ஸ்ரீராமர் ராஜ்யபரிபாலனஞ்செய்யுங்கா

---

1 மரணமில்லாமை.

2 ரிஷிகள்கடமை=வேதமோதல் முதலியவை; தேவர்கடமை=வேள்வி முதலியவை; மனிதர்கடமை=விருந்தோம்பல் முதலியவை.

3 வேண்டியஉண்மையையெவளியிலிருந்துகிரஹிப்பது.

4 இருக்கும்தெய்வலிலக்கி வெளிப்படுத்துவது.

5 இதஞல் ஜனங்களுக்கு வியாதியில்லையென்பது கருத்து.

லத்தில் 'ராமர், ராமர், ராமர்' என்றே பிரஜைகள்பேசினர். இவ்வுல கம ராமமயமாக இருந்தது. அக்காலத்தில் அந்தணர்கள், ரிக்வேதத் தையும், யஜுர்வேதத்தையும், ஸாமவேதத்தையும், ஓதாமலிருக்க வில்லை. அவர் தண்டகவனத்திலவஸித்துக்கொண்டு தேவர்களின் காரியத்தைச்செய்தார். தமக்கு முதலில்தீங்குசெய்தவனும் தேவர் களுக்கும் கந்தர்வர்களுக்கும் நாகர்களுக்குமபகைவனும் வீரர்களில் சிறந்தவனுமான ராவணனைக்கொன்றார். தைரியமும் குணங்களுமுள ளவரும் தமபாக்ரமத்தினலபிரகாசிபபவரும் சிறந்தகைகளையுடைய வரும் இக்ஷ்வாகுகுலதைச சிறபபிபபவருமான ராமபிரான் ராவ ணனையும் அவன் இனங்களையுமகொன்று எலலாவறறையுமஜயித்துத தம்முடைய மேலுலகத்திறகுச்சென்றார். இவ்வாறு மஹாத்மாவான தாசரதியின்அவதாரம் சொல்லபபட்டது. ராஜாவே! இருபத்தெட் டாவதுசதுர்யுகதில் அநதஅவதாரத்திறகுபபிறகு சிறந்தகைகளை யுடையவரும் பயந்தவர்க்குஅபயமளிபபவரும் மார்பிலுள்ள ஸ்ரீவத் ஸமென்னும மசசத்தை அடையாளமாகவுடையவருமான விஷ்ணு வானவர் கிருஷ்ணவதாரஞ்செய்தார். காடசிக்கினியவரும வள்ள லும் இவ்வுலகத்திலுள்ளமனிதாகளால் கொண்டாடபபற்றவரும் அடித்தவரைமறவாதவரும தேசகாலங்களையறிந்தவரும சங்கம் சக்க ரம கதை நந்தகமென்னும கதகிமுதலிய ஆயுதங்களைதரித்தவரும் எப்போதும உலகங்களுக்கு நன்மையேசெய்பவருமாகிய அந்தபபக வான் பூமிக்கு நன்மையைச்செய்யக்கருதி [1]வஸுதேவரென்று பிர ஸித்திபெற்று யாதவகுலத்திறபிறந்தார். எதிரிகளுக்குப் பயத்தைச செய்கிறவரும, வேண்டினவற்றை அளிபபவரும, மதுவென்றஅஸு ரனைக் கொன்றவரென்று போபெறறவருமாகிய அந்தக்கிருஷ்ணபக வான் சகடாஸுரன், மருதமரங்கள, பூதனையென்னுமக்கி இவர்க ளின்உயிரைமாய்த்தார். மானிடதேகத்தோடுகூடிய கமஸன்முதலான அஸுரர்களைப போரிலகொன்றார். மஹாத்மாவான பகவானுடைய இந்தஅவதாரமும் உலகங்களின்க்ஷேமத்துகாகத்தான். பரதச்ரேஷ் டனே! இனியும் கலியுகத்தின்முடிவுவருது தர்மம்தளரும்போது பாஷண்டிகளின்கூட்டங்களைக கொல்லவும் தர்மத்தைப்பெருகச்செய் யவும் பிராம்மணர்களின்நன்மைக்காகவும விஷ்ணுவானவர் 'விஷ்ணு யசஸ்' என்றுபெயர்பெற்ற கல்கியாக அவதரிக்கபபோகிறார். விஷ்ணு வுக்கு இந்தஅவதாரங்களும தேவக்கூட்டங்களுடன்சேர்ந்த இன் னும் அனேகஅவதாரங்களும் பிரம்மரிஷ்டர்களால் புராணங்களில் சொல்லப்படுகின்றன.

---

[1] வஸுதேவபுத்திரர்.

ஐம்பத்தோராவது அத்தியாயம்.

அர்க்காஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணவதாரத்தின் காரணம்.)

பீஷ்மர் இவ்வாறுசொன்னபோது குருதிபுதரருமகௌரவர்களை விருதுதிசெய்கிறவருமதர்மராஜாவுமான யுதிஷ்டிரா திருமபவும பீஷ்மரைநோக்கி, "மனுஷ்யாகளிலச்ரேஷ்டரே! பேசுகிறவரிலசிறந்தவரே! புகழ்பெறறவிஷ்ணு யாதவவமசததிலஅவதரித்ததைப பறறி மறுபடியுப தெரிநதுகொள்ளவிருமபுகிறேன். பிதாமஹரே! சிறநத ஞானமுள்ளகிருஷ்ணபகவான் இபபுவியில் யதுவாசததில் எவ்வாறு அவதரிததாரென்பதைபபறறி எனக்குச்சொலலகடவீர்" என்று கேடடார். யுதிஷ்டிரால இவவாறுகேடகபபடட வீரரான பீஷ்மர் மஹாதமாவான விஷ்ணு யாதவாகளிலஅவதரிதததைபபற்றிச சொல லலானார்.

"ஓ! கௌரவனுனயுதிஷ்டிரனே! ஸுகதாஷம; நாராயணன் இவ்வுலகததில யாதவாகளுகுகுள எதறகாகஅவதரிததாரென்பதை நடநதவாறு உனக்குசசொலலுகிறேன். ஓ! மஹாராஜாவே! முன்னர் இவவுலகத்தில் கிருதயுகமநடநதுகொணடிருக்கையில் மூன்றுலோக ஙகளிலும பேர்பெறறதான தாரகாமயமெனனும ஓர்யுததம்நடநதது. ராஜாவே! விரோசனன், மயன, தாரன், வராகன், சுவேதன், விபரசிததி, பிரலமபன், விருதரன், ஜமபன், பலன்முதலானோர்களும நமுசி, காலநேமி, பிரஹலாதனென்றுபோபெறறவன, லம்பன், கிசோரன், ஸ்வர்பானு, அரிஷ்டனென்னும ராக்ஷஸராஜன் முதலியோருமான திதிபுதரராகளும தனுபுதரராகளுமாகிய அனேகமாயிரம அஸுரக்கூடடங்கள் பறபலஆயுதஙகளைதரித்துப பலவகைஅணிகலனணிநதுகொணடு பறபலவாகனங்களிலேறிய தேவாகளுக்கு எதிராக நின்றன. அநதயுததததில தேவாகளும் யுததஞசெய்துகொண்டே அஸுரர்களையெதிர்தது சென்றனர். ஆதிதயாகள், வஸுக்கள், ருதரராகள, ஸாதயர்கள், விசவேதேவாகள, மருத்துக்கள், இநதிரன், யமன், வருணன், சநதிரன, குபேரன், மிகுநதசகதியுள்ள அசுவினிதேவர்கள்முதலான தேவகூட்டததார அசுரர்களுடன் வரிசையாகசசொனாது மிக்கபயங்கரமானயுததததைச்செய்தனர். தேவர்கள், தைதயர்களையும் தானவர்களையும்யுததததில்லஸ்கித்தனர். தேவர்களும் அஸுரர்களுமநிரம்பின அநதச்சண்டை பயங்கரமாகவிருநதது. அவ்விரண்டுசேனைகளுக்கும முதலில் பொதுவானசண்

நடந்தது. கூர்மையான ஆயுதங்களை இறைத்துக்கொண்டே தேவாஸுரர்கள் ஒருவரையொருவர் எதிர்த்துச்சென்றனர். தேவர்களையும கந்தர்வர்களையும் யக்ஷர்களையும் நாகர்களையும் சாரணர்களையும் அஸுராகள்கொன்றனர். 'அந்தப்போரில் அஸுரர்களால கொல்லப்படும தேவர்கூட்டத்தார் ஸமாதானமும் ஈசுவரருமாகியநராயணரையே சரணமாக மனதிலுறுதினர். அந்தச்சமயத்தில் ராகவரான ஹரி விஷ்ணு தமஒளியினால போர்களத்தைப்பிரகாசப்படுத்திக்கொண்டு சங்க சக்கர கதாபாணியாக அவ்விடத்தில் ஆவிர்பவித்தார். உலகங்களால் நமஸ்கரிக்கப்பெற்ற அந்தமஹாவிஷ்ணு கருடவாஹனமேறிவந்ததைக்கண்டு தேவர்கள அனைவரும யுத்தத்தில்பயத்தைவிட்டு உத்ஸாஹத்தோடிருந்தனர். திருமபவும் தேவர்களனைவரும தைரியத்தானவாகளுடன் போர்புரிந்தனர். அந்தயுத்தம பயங்கரமும் நிஷ்க்கருணமும கூடாததும மயிர்ப்பாடிக்கச்செய்வதுமாயிருந்தது. உக்ரமூர்த்தவர்களான இந்திரன்முதலானதேவர்களனைவரும யுத்தத்தில்அஸுரர்களை அடித்தனர். தேவர்களாலபீடிக்கப்பட்ட தைத்யதானவர்கள ஓடினர். பாரதனே! அந்தயுத்தத்தில அஸுரர்களஓடக்கண்டு, கால நேமியென்றுபிரஸித்தபெற்ற அஸுரன் எதிரில்தோன்றினன். நாறு கைகளும நூறுவாய்களும் நூறுதலைகளுமுள்ளவனும சிற்பவுள்ளவனும கொடியவனுமான காலநேமி நூறுகொடிமுடிகளுடையமலை போலச சதகாரங்களை அடிப்பதற்காகநின்றான. ஸூர்யனைப்போல ஜ்வலிக்கின்றகிரீடமும ஒளிக்கினறதோள்வளைகள்முதலிய ஆபரணங்களும புகைக்கிறமான கொடியும செம்பட்டைநிறமானமீசையுமுடைய வஜ்ரக வாயால உதடுகளைக்கடித்துக்கொண்டு மூன்றுலோகங்களின் இடத்தையும மறைக்கும பெருந்தேகத்தையெடுத்துக்கொண்டு யுத்த பூமியிலிருக்கும்தேவர்களைப் பயமுறுத்திப் பதறுதத்திசைகளையுமறைத்து யமனைப்போலக்கோபித்து வாயத்திறந்து எதிர்த்தோடிவந்தான். அந்தயுத்தத்தில ஆயுதங்களைமிகுதியாகப்பிரயோகித்துத தேவர்களைப்பீடித்தான். ஓடிப்போன தைத்யர்களும தானவர்களும திரும்பவும தேவர்களனைவரையும எதிர்த்துவந்தனர். யுதிஷ்டிரா! பிறகு அவர்களை கோபித்து யுத்தத்தில தேவர்களைத்துன்பப்படுத்தினர். மஹாராஜாவே! காலநேமியினாலும் அஸுரர்களாலும யுத்தத்தில் அடிக்கப்பட்ட அந்தத்தேவர்கள பதறுதத்திசைகளிலும ஓடினர். தேவர்கள்ஓடக்கண்டு அஸுரச்ரேஷ்டனான, காலநேமி இந்திரன், யமன், வருணன், வாயு, குபேரன், ஸூர்யன்முதலானதேவர்களைத்தன் வன்மையினாலஜயித்து அவர்களின்வேலைகளையெடுத்துக்கொண்

டான். காலநேமியென்னும் பெரிய அஸுரன் அவர்களெல்லாரையும் விரைவில்வென்றபின், கருடவாஹனமேறிப பேரொளியோடிருக்கும விஷ்ணுவை ஆகாயத்திற்கண்டான். அவரைகண்டவுடன் கோபத தினால் சிவந்தகண்களுடன் பயமுறுத்தி எதிர்த்துசென்றான். பாரதனே! அந்தயுத்தத்தில் அவ்வஸுராஜன் கோபத்துடன் நூறு கைகளையுமஒங்கி எல்லாஅஸ்திரங்களையும விஷ்ணுவின்மார்பிலஎறிந தான். மயன்முதலான தைதயர்கள் தானவர்களனைவரும தமதமஆயு தங்களையெடுத்துக்கொண்டு விஷ்ணுவைதொடாந்தனர். அதிகபல சாலிகளான அஸுரர்களால எல்லாஆயுதங்களையுமஒங்கியடிக்கபபட டும் மலைஅசையாமலிருபபதுபோல விஷ்ணு யுத்தத்திலிருந்துஅசை யாமலிருந்தார். ராஜாவே! காலநேமி மறுபடியுமதொகாபித்தது வேறு ஓர்உறுதியானகதையைஒங்கி அகதையினால விஷ்ணுவையும கரு டனையும அடித்தான். மஹாவிஷ்ணுவானவர் கருடன் களைத்திருந தைக்கண்டு சக்ராயுதத்தையெடுத்துக காலநேமியின்நூறுதலைகளை யும கைகளையும்அறுத்தார். யுத்தத்திறகுவந்த மறற தைத்யதான வர்களனைவரையுமஅடித்தார். தேவர்களுக்கும ரிஷிகளுக்கும் அப யவரம்பதங்களை அளித்தார். பாரதனே! அபபோது ஹரியானவர் மிக்க அன்புடன், அவரவர்க்குரியஅதிகாரங்களைத தேவாகளுக்குக கொடுத தபின் பிரமமஹாவுடன்கூடப பிரமமலோகத்துக்குசென்றார். பிரபுவான நாராயணன் பிரமமலோகதலிபிரவேசித்தபிறகு பழமையான பாப பிரம ஸ்தானமும எலலாவறறிறகும மேறபடட[1]துமான நாராயணச்ர யத்தில்பிரவேசித்து மஹரிஷிகளால துதிகபபெற்று ஆயிரமசிரங் களுள்ளவராகி யோகநித்திரைக்கு ஆரமபிததார். அழிவற்றவரும முதலதேவருமான நிதியசரீரமுளளவருமான மஹாவிஷ்ணு உலகத தை மாயையில் மயஙகசசெய்துகொண்டு நிதநிதரையில் பரவசமடைந தவர்போல எக்காலமும ஸுகமாகசசயனித்திருந்தார். அம்மஹா த்மா அவவாறு சயனித்திருகையில் மானிடவருஷஎண்ணினால முப் பததாறுலகஷமவருஷங்கள சென்றன. கிருதயுகமும திரேதாயுகமும சென்றுத்வாபரயுகத்தின்முடிவில விழிதத்துக்கொண்டார். பிரம்ன்முத லானதேவாகளாலும மஹரிஷிகளாலும்துதிக்கப்பட்ட மஹாவிஷ்ணு சயனத்திலிருந்து எழுந்து பிரமம்மாதிதேவர்களோடுங்கூடத் தேவ காரியதத்திற்காகத தேவஸபைக்குசென்றார். பாரதனே! மேருவின் சிகரததில ஏற்படுத்தபபடட[2]தும ஒளிமிகுந்ததுமான அந்தச்சிறந்த ஸபையில அந்தத்தேவர்களனைவரும பிரமமதேவருடன்கூடப் பிர

[1] வைகுண்டம்.

வேசித்தனர். அங்கேபோய் அந்தச்சபையில் அவர்கள்உட்கார்ந்த னர். அபபோது அந்தசசபை இரைச்சல்அடங்கியிருந்தது. அந் தசசபையில்,பூமிதேவி துயரத்தினுல் மெலிந்தகுரலோடு பேசலுற் றுள். "தேவர்களே! பலசாலிகளான அரசர்களின்சேனைகளினுல் மிக வும்நெருக்கபபட்டு நான் துயரபபட்டவளாக இருக்கிறேன். எக் காலமும பாரத்தினுல் சிரமமடைந்தநான் ஜீவிப்பதேகடினமாயிருக் கிறது. ஒவ்வொருநகரத்திலும கோடிக்கணக்கான சேனைகள்சூழ்ந்த அரசனிருக்கிறான். தேசந்தோறும் ஆயிரம்ஆயிரமவீடுகள் அடங் கினகிராமங்கள் நிறைந்தசணக்காயிருக்கின்றன. பலசாலிகளான அவ் வரசர்களின் அனேகமாயிரமசேனைகளாலும கிராமங்களாலும் நக ரங்களாலும் தேசங்களாலும நான்நெருக்கபபட்டிருக்கிறேன். ஆத லால், என்சக்தியினுல் நான் ஜனங்களைத தாங்கமுடியவில்லை. அந் தப்பிரஜைகளும் துராத்மாக்களான அஸுரர்களால எக்காலமும ஹிம் ஸிக்கப்படுகின்றனர்" என்றுள். பூமியின்சொல்லைக்கேட்டுப் பகவா னனாராயணன் அபபோதே அந்தத்தேவர்களனைவருக்கும் பூமியில் அவதரிக்கும்படி கடடளையிட்டுத் தாமும பூமியில வஸிக்க மனத்தில் நினைத்தார்.

ஐம்பத்திரண்டாவது அத்தியாயம்.

அர்க்காஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணவதாரத்தின்பால்யசரித்திரம்.)

பிறகு, பகவானனவிஷ்ணு வஸுதேவகுமாரராயிருந்து செய்த காரியங்களையெலலாம உனக்குத்தெளிவாகச்சொல்வேன்; முழுதும் கேள். மஹாத்மாவானவாஸுதேவருடையமஹிமையுமசரிதமும், தேவர்களுக்கும மனிதர்களுக்கும உலகங்களுக்கும நன்மையைத்தரு வன. அபபா! ஸர்வவியாபியும் பிரபுவும விசாலமானகண்ணுள்ளவரும ஈச்வரருமான அந்தவிஷ்ணு தமதுவைகுண்டத்தில் எபபோதுதிரு ப்தியடையவிலலையோ அபபோது, பூமிக்குஸுகத்தைசெய்யவும அஸுரர்களையழிக்கவும (கருதி) மருத்துக்கள, வஸுக்கள,ஸூரியன், சந்திரன், கந்தர்வர்கள், அபஸரஸுகள,ருத்திரர்கள், ஆதித்யர்கள், அசுவினிதேவர்கள் ஆகியதேவர்களை, "உலகங்களுக்கெல்லாம ஈசுவ ரர்களே! நீங்கள்மானிடலோகத்தில்பிறவுங்கள்" என்றுகட்டளையிட் டுத் தெரியக்ஜாதிமுதலானஎல்லாஜங்கமபபிராணிகளையும் இவையுண்

டாகக்கடவனவென்று ஸங்கல்பித்ததுத் தமக்காகப்படைத்தார். ஸர் வஜ்ஞரானதாமும் யதாகுலத்தில்பிறந்தார். குழந்தாய்! புருஷோ த்தமரானவிஷ்ணு தாமரைத்தாமாகவே பலவுருவங்களாகசெய்து கொண்டு லீலையாட்டிற்காக இவ்வுலகத்தில் ஆக்கினேமேய்த்தார். அஜாதசத்ருவே! ராஜாவே! அவர் தாமிசையினுலை பூமியிலவ தரித்தவர். பரதசரேஷ்டனே! குழந்தாய்! நான்உரைபபதைக்கேள். ஜனர்த்தனர் அவதரிகுமபோது ஸர்தோஷத்தினுல கடலகள்கொந தளித்தன மலைகள் அசைந்தன. அக்னிகள புகையிலலாமல்ஜ்வலித் தன. ஸுகமானகாற்றுக்கள்வீசின புழுதிஅடங்கியிருந்தது. கர ஹங்களும் நக்ஷத்திரங்களும நன்முகபபிரகாசித்தன ஆகாயத்தில தேவர்களின் தாருபிவாதத்தியங்கள் முழங்கின அககாலத்தில் தேவர்கள்வந்து பூமாரிகளபொழிந்தனர மகுடவாகியங்களினுல் மதுஸூதனரைத் துதித்தனர். அந்தஅவதாரகாலத்தில மஹரிஷிகள ஸ்தோஷத்துடன்வந்தனர். அபபோது நாரதாமுதலான அந்தரிஷி களைக்கண்டு கந்தர்வஅபஸரஸுக்களின்கூட்டங்கள ஆடிபபாடின. அபபோது ஆயிரங்கண்களையுடையவனும் சிறந்தமஹிமையுள்ளவ னுமான தேதேவேந்திரன் கோவிந்தனிடமவந்து அந்தமஹரிஷிகளைபபூஜி த்து, "உலகங்களைபபடைத்தவரானபகவான தமதுதிவ்யசகதியினுல தேவர்கள்செய்யவேண்டியகாரியங்களையும தேவர்களுக்குஆகவேண் டியநன்மைகளையுஞசெய்து திருமபவும தமதுலோகத்துக்குசெல வர்" என்றுசொன்னன். இவவாறுசொலலி ரிஷிகளுடன்கூட மறு படியும் ஸ்வர்க்கத்துகுசென்றன். கண்ணபிரான் அவர்கள்எல்லா ருக்குமவிடைகொடுத்தனுபபித் தமதுதிவ்பபரபாவத்தை மறைத்துக கொண்டு நந்தகோபன்வீட்டில் அனேகவருஷங்கள்வஸித்தார். பிறகு ஒருகாலத்தில் யசோதை வண்டியின்கீழேதூங்கிகொண்டிருந்தஅந தக் குழந்தையைவிட்டுவிட்டு யமுனைபபாறறிறகுச்சென்றாள். அப போது ஸ்ரீ கிருஷ்ணபகவான் குழந்தைலீலையாட்டைநடித்தத தமது கைகால்களையுதறிக்கொண்டு காலகளைமேலேதூக்கி, காலின்பெருவிர லால் சகடத்தையுடைத்து இனியகுரலாகஅழுதார். அந்தச்சிசுவான கண்ணன் ஒற்றைக்காலால சகடத்தைஅநேகதுள்ளிவிடடு முலைஉண் ணவிருமபிக் கவிழ்ந்துபடுத்துஅழுதார். அங்குள்ளஜனங்கள் அந்தக குழந்தையினுலைடைக்கபபடடுக் குடமுமஅசசும் பாயும முறிந்தசக டத்தைக்கண்டு பீக்கவியபபடைந்தனர். கமலஸன்பக்ஷத்தைச்சேர்ந்த சகடாஸுரனே உக்ரமானசக்தியுளள அந்தக்குழந்தை படுத்திருந்தே கொன்றதென்னும பெரியஆச்சரியத்தைச சூரசேனதேசத்தார்நேரில்

கண்டனர். பேருடலும் பருததஸ்தனங்களுமுடைய பூதனியென் பவளும கொல்லபபட்டாள். மஹாராஜாவே! அதன்பிறகு கிருஷ்ண பலராமரிருவரும ஆகாயததில் சஞசரிஸதுர்யர்கள, கிரணங்களால ஒருவர்க்கொருவர் சேருவது போலச சேர்ந்து தவழதலதொடங்கினர். ராஜாவே! அபபோது மஹாஸாபபங்களைபபோன்ற புஜங்களையுடைய ராமகிருஷ்ணர்கள் அவ்வனதில சிலவிடங்களில முழங்கால்களினுல் தவழநதும சிலவிடங்களிலவிளையாடியும எங்குமபோவதனுல் அங் கங்களில புழுதிகளைபபூசிக்கொண்டு விளங்கினர. பாரதனே! கடை யுமபோது தாயிபபெருகுகளைக் குடிதது க்கொண்டு அநதபால கோபாலர் ஒருகால அவ்விடததில பிருதியானவெண்ணெயை விழுங கிக்கொண்டிருக்கையில் கோபஸ்திரீகளாலகாணபபட்டனர். பின்பு அவர்கள, கண்ணனைக் கயிற்றினுல உரலில்கட்டுவிதனர். அநத உரலை அபபடியேஇழுத்துக்கொண்டுபோன அநதசசிசுவினுல் இர ண்டுமருதமரங்கள் வேரோடும கிளைகளோடும முறிக்கபபட்டன. அஃது ஆச்சரியமாயிருநதது. அதன்பிறகு, ராமகிருஷ்ணரிருவரும் குழநதைபபருவதைதத்தாண்டி அதிதஇடைச்சேரியில் ஏழுவயதுப் பிள்ளைகளாயினர். [1]காகபக்ஷங்களோடுகூடிய அழகியமுகங்களையுடை யராமகிருஷ்ணைகள் ஒருவாநீலாமபரதையும் மறறொருவர் பீதாம்பர தையுமதரித்தும ஒருவர் பொனனிறமான சாநதும மற்றொருவர் வெண்ணிறமானசாநதும அணிநதும இலையினுல் காதுக்கினிமையாக வாதகியமவாசிததும கன்றுமேய்ததுகொணடிருநதனர். அவர்கள், காட்டில [2]மூன்றுதலிநாகங்கள்போல விளங்கினர். காதில் மயில் தோகையையும சிரஸில இளநதளிர்களையும் மார்பில் [3]வனமாலையை யுமதரித்த அவவிருவரும கோதகிருக்கும் இரண்டுஆச்சாமரத்தின் போத்துக்கள போல விளங்கினர் ராஜாவே! தலையில் தாமரைமலர் சூடிக் கயிறறை யருஞஞாபவீதமாக போட்டுக்கொண்டும கையில தூக்கோடு சுரைக்காய்களைவைத்துகொண்டும இடையர்க்குரிய புல் லாங்குழல்களை ஊதிக்கொண்டும, வனத்தில்சிலவிடங்களிலதங்கியும சிலவிடங்களில சேர்நதுவிளையாடியும தூங்கவேண்டினபோது ஒரி டத்தில இலைபபசபபுகளிலபடுத்தும ஸுகதோஷமாக பலவிடங்களில் ஓடியும அழகான பெருவனதிறகு அலங்காரமாகக் கன்றுகளை மேய்த்துக்கொண்டிருநதனர். குருஷ்டுதிரனே! அதன்பிறகு வஸு தேவபுத்திராகள் இருவரும பிருநதாவனதிறகுசசென்று அங்கே ஆநிரைமேய்ததுவிளையாடினர்.

---

1 பகஷகுடுமி; சிலுபபாவென்பது உலகவழகு.

2 இருபுறம் சிலுப்பாக்களைச்சேர்தது மூன்றுதலையென்றது.

3 பகவானுகுரிய வைஜயந்தியென்னும் மாலை.

ஐம்பத்துமூன்றுவது அத்தியாயம்.

அர்க்காஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணசரித்திரத்தில் கம்ஸவதம்வரையில்சொல்லியது.)

பின்புஒருகால், அழகியஉருவமும் சிறந்தமுகமுமுள்ள கண்ண பிரான் அந்தஅழகானவனத்தில் மூத்தவரானபலராமரின்றிச் சஞ்சரித்தார். காசபக்ஷத்தைதரித்தவரும் நீலநிறமுள்ளவரும் தாமரைமலர் போன்ற கண்களையுடையவரும் சந்திரனைநடுவில் களங்கமிருப்பது போலத் திருமார்பினில் ஸ்ரீ வத்ஸமென்னும்மறுவுள்ளவரும யிற்றை யஜ்ஞோபவீதமாகவுடையவரும் பீதகவாடையுடுத்தினவரும் உடம் பில் வெண்சாந்தை அணிந்தவருஞ் சுறுத்தும்சுருண்டுமிருக்கும்குழல் களோடுகூடியவரும் அழகும்ஒளியுமுள்ளவருமான யௌவனப்பரு வத்திலிருந்த அந்தப்பிரபு காகாலத்தில் ஒருவனத்தில் தென்றற்காற் றினல்அசையும்அழகானமயிலிறகோடு சிலவிடங்களில்பாடியும், சில விடங்களிலாடியும், சிலவிடங்களில்வீணையாடியும, சிலவிடங்களில் நகைத்தும், பசுக்களைஉதவாறபடுத்துவதற்காக அந்தஇடையர்க் குரியபுல்லாங்குழலை மிக்கஇனிமையாகஊதியும் கோகுலத்தைச்சேர் ந்தபசுக்கூட்டத்தில் சஞ்சரித்தார். பரதசரேஷ்டனே! மஹாப்பரு வம்விஷ்ணுவுமாகிய கிருஷ்ணபகவான் மிக்கஅழகான அந்தவனப்பிர தேசத்தில் வரிசைகளானகாடுகளில் ஸந்தோஷமாகவீணையாடிக்கொ ண்டு பசுக்களுடன்கூடப போய்க்கொண்டிருக்கையில் அவ்வனத்தி லுள்ள பாண்டீரமென்னுமஆலமரத்தைக்கண்டு அதன்நிழலில்தங்க மனங்கொண்டார். குற்றமற்றவனே! முன் கன்றுமேய்த்தவர்களும தமக்கு ஒத்தபிராயமுள்ளவர்களுமான இடைப்பிள்ளைகளுடன்கூட அந்தத்தினமெல்லாம் முன்பு தமதுதிவ்யலோகத்திலிருந்ததுபோல மகிழ்ந்திருந்தார். அவ்வாறுவீணையாடிக்கொண்டிருந்த கண்ணனைப் பாண்டீரமென்னுமஆலமரத்தின்கீழ் வஸிக்கும்இடையர்கள்பலர் உயர் ந்தவீணையாட்டுக்களினல் மகிழ்வித்தனர். வனத்தில்விருப்பமுள்ள ஆயர்களில்சிலர் மனங்களித்துப்பாடினர். மற்றும்சிலர் கோபாலராகிய கிருஷ்ணபகவானைபபறறியே கீதங்கள்பாடினர். அங்கே அவர்கள் பாடிக்கொண்டும் இலைவாதியம் வாசித்துக்கொண்டுமிருக்கும்ஸம யத்தில் கிருஷ்ணன் குழலையும் சுரைக்காய்வீணையையும்வாசித்தார். இவ்வாறு அந்தக்கிருஷ்ணபகவான் இடையர்களுடன் அனேகவீணை யாட்டுக்கள்வீணையாடினர். குந்திபுத்திரனே! அந்தயௌவனப்பருவ

முளளகண்ணனுல அந்தவ்ளோயாடுகாலத்திலும உலகங்களுக்கு நன்மைசெய்யபபட்டது. பாரதனே! எல்லாப்பிராணிகளும் பார்க்கையில் வாஸுதேவர் மடிவில்குதித்து அங்குள்ள அரவின்படத்தின் மேல் நடனஞ்செய்தார். எல்லாஜனங்களும்பார்த்திருக்கையில் காளிய னென்னும்நாகத்தையடக்கிப பின்பு கண்ணன் பலராமருடன்விளோ யாடினர். ராஜாவே! அபபோது கழுதைஉருவமாகவந்த தேனுக னென்னும கொடியஅஸுரன் பனங்காட்டில் பலராமரால்கொல்லப பட்டான். குருதிபுத்திரனே! பின்புஒருகால் அழகியமுகங்களோடு கூடியராமகிருஷ்ணர்கள மிகவிருத்தியடைந்தமேகாதனங்களை மேம்பத துக்கொண்டு வனத்துக்குபபோயினர். சதத்துருக்களைத்துயரபபடுத்து கிறவர்களும தோல்வியடையாதவர்களுமான அவ்விருவரும ஸந தோஷமாக உலகவழக்கபபடி விளோயாடிகொண்டும காடுகளைபபார்த துக்கொண்டும் கர்ஜிதத்துக்கொண்டும் பாடிக்கொஞ்டும் மாங்களி ஞுள்ள இலகாய் முதலியவற்றைபபறித்துக்கெர்ண்டும் கன்றுகளோடும் பசுக்களோடும்போரிட்டுஅழைத்துகொண்டும ஸஞ்சரித்தனர். தேவர் களாலும்பூஜிக்கபபெறற அவ்விருதேவர்களும் மானிடபபிறபபென் னும் தீக்ஷையைவஹித்து அந்தஜாதிக்குரியகுணங்களபொருந்தின வினோயாட்டுக்களுடன் வனத்தில்திரிந்தனர். இளமையினுல் கோபா லர்களுடன் இவ்வாறுவினோயாடித்திரிந்தனர். சிறந்தமஹிமைபொருந தியவரும எல்லாப்பிராணிகளோடும படைபபவருமாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் அதன்பிறகு கோகுலத்திற்குசசென்று அங்கே இடைப பிள்ளைகளாறசெய்யபபட்ட கிரியஜ்ஞமென்னும கோவர்த்தனகிரி பூஜையில் தேவதாரூபத்தோடு ப்ரயஸான்னத்தைபபுஜித்தார். அந்த ரூபத்தைக்கண்ட கோபாலர்களனைவரும கிருஷ்ணனேயே பூஜித்த னர். அபபோது திவ்யரூபத்தைதரித்துத் தேவர்களால்பூஜிக்கப் பெற்றார். பகைவரைபபிடிபபவனே! பசுக்களைக்காப்பதற்காகக்கோ வர்த்தனமென்னும்குன்றம் இளைஞரானவாஸுதேவரால் ஏழுநாள்தூ க்கிபபிடிக்கபபட்டது. அபபோது அந்தச்செயற்கரிய காரியத்தைக் கிருஷ்ணன்விளோயாட்டாகச்செய்தார். பாரதனே! அஃது எல்லா உலகங்களுக்கும மிக்கஆசசரியமாயிருந்தது. தேவர்களுக்குராஜா வானஇந்திரன்பூமிக்குவந்து கிருஷ்ணனுக்குவந்தனமளித்து ஸந்தோ ஷத்துடன் அவரை,' 'கோவிந்தன்' என்றுசொல்லி அவருக்குராஜ்யா பிஷேகஞ்செய்தான். இந்திரன் கிருஷ்ணனே, ;'கோவிந்தா!' என்று அழைத்துத் தழுவிக்கொண்டு ஸ்வர்க்கத்திற்குச்சென்றான். அதன்

1 கோக்களைக்காப்பவர்.

பிறகு காளைவடிவமாகவந்த அரிஷ்டனென்றுபெயரைபெற்ற அஸுர னைக் கிருஷ்ணன் பசுக்களின்நன்மைகாகக்ப பராக்ரமத்தினாலெகொன் றார். ராஜாவே! அதன்பிறகு கேசிஎன்னுமஅஸுரன் குதிரையுருவ மாகவந்தான். பார்த்தனே! அவ்வாறு பதினாயிரமயானபலமுள்ள தாக வனத்திற்குவந்த அந்தக்குதிரையைத் தமது தாமரைமலர்போ ன்றகையையே வஜ்ராயுதமாகக்கொண்டு மதுஸூதனர்கொன்றார். அதன்பிறகு மலலனுகஇருந்த சாணூரனென்னும பெரிய அஸுர னைக்கொன்றார். பகைவரையழிப்பவனே! பாரதனே! எல்லாசேஷ்ண களாலுமசூழப்பட்டுவந்த ஸுதாமனென்னும் அரசனைக் கோவிந தன் சிறுபிராயத்திற்கொன்றார். முஷ்டிகனென்பவன் பலராமரால் கமஸஸபையில எளிதாகக்கொலலப்பட்டான். பாரதனே! கமஸன் மந்திரிகளுடன் கூடவே கிருஷ்ணனலடிக்கப்பட்டான். பகைவாகளை யழிப்பவரான கண்ணபிரான் எல்லாருமபாரதத்திருக்கையில் கமஸனைக் கொன்று 'உக்ரஸேனனுக்கு ராஜ்யாபிஷேகஞ்செய்து தமதுதாய்தந தையரின்அடிபணிந்தார். கண்ணபிரான் இப்படிப்பட்டகாரியங்களைச செய்தவர்.

ஐம்பத்துநான்காவது அத்தியாயம்.

அர்க்காஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணசரித்திரத் தொடர்ச்சி.)

அதனபிறகு, ராமகிருஷ்ணர்கள ஸாந்தீபனியென்னும ஆசா ரியரிடம்சென்றனர. தாமறிந்தவருமம தாமதையனுஷ்டிப்பவரு மாகிய அவவிரண்டுமஹாதமாக்களுமம அவருதிதேசதத்தில் கடுமை யான பிரம்மசரியவிரதத்தையனுஷ்டித்ததுக் குருவுக்குப பணிவிடை செய்து அறுபத்துநான்கு இரவுபகலகளில வேதவேதாங்கங்களைக் கிரஹித்தனர். அந்தயாதவர்களிருவரும் எழுதது, எண், சங்கீதம, வைததியம, யாகபபயிறசி, குதிரைபபயிறசி இவறறையெல்லாம் பன் னிரண்டுநாட்களில கறறுக்கொண்டனர். தர்மந்தெரிந்தவருமம தர் மத்தையனுஷ்டிப்பவருமாகிய அவவிரண்டுவீரர்களுமம தனுர்வேதங கறறுக்கொள்வதற்காகத திரும்பவும ஸாந்தீபனியென்னும ஆசாரி யரை அடைந்தனர், ராஜாவே! அவ்விருவரும விலவித்தையிற் சிற நதஆசாரியரான ஸாந்தீபனியினிட ம்சென்று நமஸ்கரித்து அவரால் கௌரவிக்கபபெற்று அவர்திதேசத்தி லிருநதுகொண்டே ஐம்பது

இராப்பகல்களில் * பத்து அங்கங்களோடுகூடிய தனுர்வேதத்தை ரஹஸ்யங்களுடன்கூட மனத்தில் செவ்வையாகப்பதியுமபடி முற்றும் கற்றனர். பிராமணச்ரேஷ்டரான ஸாந்தீபனி, அவர்கள் காரியமறிந்து வேதினைத்தக்கண்டு அவர்களிடம் குருதக்ஷிணைகேட்டார். ஸாந்தீபனியானவர் ஸமர்த்தரான கிருஷ்ணரைப்பார்த்து, "எனது புதரன் இறந்தகடலில் மச்சத்தினால இழுத்துக்கொண்டு போகப்பட்டான்; திமிங்கிலத்தினலவிழுங்கப்பட்ட என்புதல்வனைக் கொண்டுவா; உனக்கு நன்மையுண்டாகடும்" என்று தம்பிரியாஜனத்தைக் கேடடுக் கொண்டார். புத்திரனைப்பற்றித் துயரப்பட்ட குருவுக்காகக் கிருஷ்ணன், எவ்வுலகிலும் மறைவராலும் செயற்கரிய காரியத்தைப்பற்றியும் பிரதிஜ்ஞைசெய்தார். பரதச்ரேஷ்டனே! ஸாந்தீபனியின்புத்திரனை இழுத்துகொண்டுபோன மத்ஸ்யமாகிய அஸுரன் ராமகிருஷ்ணரைகளால கடலிலிகொல்லப்பட்டான். வெகுகாலத்துக்குமுன் இறந்துபோயிருந்த ஸாந்தீபனி புதரன அளவற்றமஹிமையுள்ள கிருஷ்ணனுடைய அருக்ரஹத்தினல அபமீபாது ரூபடியும சரீரத்துடன் பிழைத்துவந்தான். செய்யவும் நினைக்கவுமமுடியாத அந்த மிகப பெரிய புதுமையைகண்டு எல்லாஜனங்களுக்கும ஆச்சரியமுண்டாயிற்று. ராமகிருஷ்ணர்கள் குருவுக்கு உயர்ந்தஆஸனங்களையும பசுக்களையும குதிரைகளையும தனமுதலிய எல்லாவற்றையும தக்ஷிணையாகக்கொடுத்தனர். கதாயுத்தத்திலும பரிகாயுத்தச்சண்டையிலும எல்லாஅஸ்தரவித்தைகளிலும கிருஷ்ணன் எல்லாருக்கும முதன்மையடைந்து எல்லாஉலகங்களிலும பெயர்பெற்றார். எல்லாரத்தினங்களினலும அலங்கரிக்கபபட்டு ஆதித்தர்களபோலபபிரகாசிக்கும தேவேந்திரரதத்தில நாராயணனைத்தவிர வேறுயார எறலாம்? இந்திரனுடைய ஒப்பற்ற ஸாரதியும அன்புள்ள ஸ்நேஹிதனுமாகிய மாதலி புருஷோத்தமரைத் தவிர வேறுயாருக்குக் கடிவாளமபிடித்தது ஓடடுவான்?

அபபா! யுதிஷ்டிரா! போஜராஜன்மகனான கமஸனும அஸ்தரவித்தையிலும தேகவன்மையிலும சூரத்தனத்திலும காத்தவீர்யா

* 1. சாரி=ஒற்றைகாலால நடப்பது. 2. ஸ்தானம்=வில்லாளி நிற்றல. 3. நியாயம=கதாதிசண்டையில கைகளைப் பலவிதமாக மாற்றுவது. 4. பிரஸாரம்=அஸ்திரங்களையும பாணங்களையும விடுமபோது தக்கபடி அங்கங்களை அமைத்துக்கொள்வது. 5. ஸௌஷ்டவம்=இடுப்பு, முழங்கால், முழங்கை, தோள், தலை, இவைகள் சமமாகநிற்பதும் மாறுபடாமலிருப்பதும 6 கரணம=பாணத்தை எடுப்பது விடுப்பது முதலியன. 7. வியாயாமம்=தேகபயிறசி. 8. மண்டலம் = மேலேசொன்ன சாரிகளைக் கூட்டுவது. 9. கதி=நடை. 10. ஆலனம்=இலக்கைப்பார்ப்பதற்காகப் பலவகைகளாக உட்கார்தல்.

ஜனனுக்குச் சமானமாயிருந்தவன். போஜராஜனுன உக்ரஸேனன் புதல்வனும் போஜராஜர்களின்வமசத்தைச் சிறப்பித்தவனுமாகிய அந தக்கம்ஸனைக்கண்டு மறறஅரசர்கள் கருடனைக்கண்ட நாகங்களைப் போல நடுங்கினர். பாரதனே! விற்களாலும கத்திகளாலும கூர்மை யான பிராஸாயுதங்களாலும சித்ரயுததமசெய்பவர்களான காலாட்கள் நூறுலக்ஷம்பேர் அவனிடமிருந்தனர். யுத்தததில பின்வாங்காத சூரர்கள் எட்டுலக்ஷம்பேர்கள் கம்ஸனிடமிருந்தனர். யுதிஷ்டிரா! அவனுடையகொடிகள பொன்மயமானவை; அவனுடையதேர்கள் உயர்ந்த பொற்கச்சை கடடினவைகள; யானைகளும் அவ்வாறே; அவன் ஸேனை அவவளவுபெரிது. விற்களாலும கதகிகளாலும கூர்மையான பிராஸாயுதங்களாலும் சித்ரயுத்தஞசெய்யும வீரர்களஏறும்குதிரை கள், பலாசமலர்போலச்சிவநதநிறமுளளவை பதினயிரமிருந்தன. யுதி ஷ்டிரா! கமஸனுக்குஸேஹாதரனன ஸுநாமாஎன்பவனைச் சேர்ந்த தும் யாராலும புஜவலிமையினால ஜயிக்கமுடியாததும சிறநதகுதிரை க்காரர்கள் ஏறியதுமாகிய குதிரைக்குட்டிகளின் மற்றொரு பெரிய ஸேனைஇருந்தது. அந்த ஸுநாமாவென்பவன் கம்ஸனை நாற்புறமும் காத்தான். அவன்ஸேனை [1]மிசரகம என்னபபட்டது; அறுபதினயிர மென்று கணக்கிடபபட்டது. யுதிஷ்டிரா! கமஸனுடைய கோபமே பெரியவேகமாகவும, கொடிகளே தீவுகளிலுள்ள பெருமரங்களாக வும், மதயானைகளே பெரியமுதலைகளாகவும ஆயுதக்கூட்டங்களே நுரைக்கூட்டங்களாகவும, குதிரைகளாரின்ஓட்டமே பெருவெள்ள மாகவும, கதைகளும பரிகாயுதங்களுமே மீன்களாகவும, பலவகைக் கவசங்களே பாசிகளாகவும, தேர்களும யானைகளுமே பெருஞ்சுழல் களாகவும, பலவகைஉதிரங்களே சேறுகளாகவும, விசித்ரமானவிற களே அலைகளாகவும், தேர்க்குதிரைகளே கலங்கினமடுக்களாகவும, யுத்தவீரர்களின்கர்ஜனமே சத்தமாகவுமுடையதும் யமனென்னுங் கடலிற்சேருவதும் பயங்கரமுமான போரென்னும மஹாநதியைத் தாண்டிக் கம்ஸனைக்கொல்லுகிறவன் நாராயணனைத்தவிர மற்றவன் எவனிருக்கிறன்? பாரதனே! இந்தககிருஷ்ணன் இந்திரனுடைய ரதத்திலிருந்து கம்ஸனுடைய அநதச்சேனைகளே மஹாமேகங்களைக் காற்றுஅடிப்பதுபோல ஊதிவிட்டார். பிறகு மநதிரிகளுடன்கூட ஸபையில வீற்றிருந்த கம்ஸனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் கொ ன்று ஜயத்தைக்கொண்டுவந்தார். இந்திரனுக்கேயவரான கிருஷ்ண பகவான் வெகுமானிக்கத்தக்க தேவகியையும் மற்றுமுள்ளசுற்றத்தா

[1] நால்வகைச்சேனைகளும் கலந்தது.

சையும் யசோதையையும் ரோஹிணியையும் பலமுறைநமஸ்கரித்து உக்ரஸேனனுக்கு ராஜ்யாபிஷேகஞ்செய்வித்து யாதவத்தலைவர்களால் பூஜிக்கபபெறறார். புருஷோத்தமானகண்ணன் அதன்பிறகு எல்லா அசுரர்களோடும் ஒன்றுசேர்ந்து யுத்தத்திற்குவந்த ஜராஸந்தனென்னுமஅரசனை ஸாஸ்வதியாற்றினருகில் ஜயித்தார்.

ஐம்பத்தைந்தாவது அத்தியாயம்.

அர்க்காஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(நரகாஸுரவதம்.)

பாரதனே! அதன்பிறகு யாதவவமசத்தில்அவதரித்த கிருஷ்ணபகவான் மதுராபுரியைவிட்டுத துவாரகாபுரியைச்சேர்ந்தார்.அதன்பிறகு மஹாத்மாவான தாமரைக்கண்ணர் நரகாஸுரனிடமிருந்து தமக்குததக்கவாஹனங்களையும பலவகைரத்னங்களையும் பெற்றுக்கொண்டார். அப்போது தைத்யர்களும தானவாகளும தடைசெய்தனர். சிறந்தகைவன்மையுள்ள கிருஷ்ணபகவான், வரம்பெறறு மதங்கொண்ட அவ்வஸுரத்தலைவர்களை ஹதம்செய்தார். அநதநரகனென்னும் அஸுரன் அவருக்கு விரோதஞ்செய்தான். யுதிஷ்டிரா! குண்டலத்துக்காக அதிதியென்னுமதேவமாதாவைபபீடிததான். அபபோது நரகாஸுரன்செய்த அநதமிகக்கொடியகாரியததை இதற்குமுன் அஸுரக்கூட்டங்களெல்லாம் ஒன்றுசேர்நதும செய்யவில்லை. அநதநரகாஸுரன் பூமிதேவிக்குப்பிறநதவன். அவனுக்குஇருப்பிடம பிராக்ஜ்யோதிஷபுரமென்பது. யுதத்தத்தில அடங்காத மதமுள்ளவர்களும தேவக்கூட்டங்களுக்கு அச்சத்தை உண்டுபண்ணுகிறவர்களுமாகிய ஹயக்ரீவன், நிகுமபன், கொடியவனனபஞ்சஜனன், ஆயிரம்புதிராகளோடுகூடியவனும் வரமபெறறதனல்கர்வித்தவனுமான மூரனென்னும் அஸுரசிரேஷ்டன் ஆகியஇநநால்வரும் அவன் தேசத்தின் நான்குஎல்லைகளையும் காப்பவராயிருநது ஆகாயமார்க்கமவரையில் தகைநதுநின்றனர். சிறந்த கைவன்மையுள்ளவரும சக்ரத்தையும கதையையும கத்தியையுமதரிப்பவருமான இநதக்கிருஷ்ணன் நரகாஸுரனை வதஞ்செய்வதற்காக யாதவமசத்தவான வஸுதேவருக்குத் தேவகியினிடதத்தில் ஜனித்தார். உலகங்களில் பிரஸித்தமானமஹிமையுள்ள இந்தப்புருஷோத்தமருக்குத் துவாரகாபுரிதான் முக்கியமான இருப்பிடமென்பது உங்களுக்குத்தெரியுமே. யுதிஷ்டிரா! அநதத்

துவாரகாபுரியானது இந்திரனுடைய அமராவதிபட்டணத்தைக்காட்டிலும் குபேரனுடைய வைராஜமென்னும் பட்டணத்தைக்காட்டிலும் மிக்கஅழகுள்ளதென்பதும் உனக்கேதெரியும். தேவரகருக்குநிகரான அநதத்துவாரகாபுரியில ஒருயோஜனைதூரம் நீளமும்அகலமுமுள்ளதும் ஸுதர்மையென்றுபெயர்பெற்றதும் யாதவர்களிருப்பதுமாகிய ஒருஸபைஇருக்கிறது. விருஷ்ணிகளும் அநதகர்களுமாகிய அனைவரும் ராமகிருஷ்ணர்களைமுன்னிட்டுக்கொண்டு இநதஉலகத்தின்இயல்புமுழுமையையும காபபாற்றிக்கொண்டு அந்தச்சபையில் விருக்கின்றனர். பரதசிரேஷ்டனே! ஒருகால் அவர்களனைவரும அநதச்சபையின்கண்வீறறிருகையில் சிறநதமணமுள்ள காற்றடித்துப் பூமாரியும்பொழிநதது. உடனே ஆயிரமஸூரியர்களுகருநிகராக மிகக ஆச்சரியமானஒருபேரொளி சறறுநேரம்ஆகாயத்திலிருநதது. அஃது அங்கிருந்து பூமியில்இழிநதது. அநதஒளியின்மதியில் வெள்ளையானையின்மேலேறித் தேவககூடடங்களனைவரா லும சூழபபெறற தேவேநதிரன் காணபபடடான். பலராமரும கிருஷ்ணனும் ராஜாவானஆகுகனும விருஷ்ணிகளஅநதகாகளின் கூடடங்களோடுகூட விசைவாகளழுநது இநதிரனுக்குநமஸ்காரஞசெய்தனர். அநத இநதிரன் உடனே யானையிலிருநதுஇறஙகிக கிருஷ்ணனைத்தழுவிக்கொண்ட பிறகு பலதேவரையும ராஜாவானஆகுகனையும வஸுதேவரையும உத்தவரையும சிறநதபுநதிரலியான விகத்ருவையும தழுவிக்கொண்டான். அபபா! மஹாராஜாவே! மஹிமைமிகபொருநதியவனும பிராணிகளைக் காபபவனும பாகனென்றஅஸுரனைக கொன்றவனுமாகிய அநதத்தேவேநதிரன் பிரதயுமனன்; ஸாமபன், நிசடன், அனிருத்தன், ஸாத்யகி, கதன், சாரணன், அகரூரன, பானு, ஜல்லி, விடூரதன், கிருதவாமா, மஹாபலசாலியானசாருதேஷ்ணன்ஆகிய தேவாகளுக்கொகபபான யாதவதிரேஷ்டாகளையும மறறுமுள்ள விருஷ்ணிகள் அநதகாகளிலுள்ளபெரியமனிதாகளையுமகண்டு தழுவிக்கொண்டு அவர்களால்அளிக்கபபட்ட பூஜையைபபெறறுக்கொண்டு மிக்கஅன்புடன் கண்ணபிரானைப்பார்தது, "மனிதர்களுக்கெலலாம்ஈச்வரரே! 'குண்டலத்திறகாக நரகாஸுரனைக்கொலலும' என்று அதிதிசொல்லச்சொன்னஞள்" என்றுசொன்னன். கோவிந்தன், "பூமியின்புத்திரனை நரகனைக்கொன்று உடனே குண்டலங்களைகொண்டுவருவேன்" என்று தேவேநதிரனுக்குசசொல்லிப் பலராமரை அழைத்தார். பெருநகீர்த்தியுள்ளவரும் ஸமபுலன்களையும் கடதத்துகிறவருமான வாஸுதேவர், பிரத்யும்னன் அனிருத்தன் பலதத்தில்லுப்பற்ற ஸாம்பன் இவர்

களுக்கும் அவ்வாறேசொல்லி உடனே கருடன்மேலேறி, சங்கத்தை யும்சக்கரத்தையும் கதையையும் கத்தியையும்தரித்துக்கொண்டு தேவ காரியம்செய்யச்சென்றார். அடித்தவரைக்கைவிடாத விஷ்ணுவாகிய அந்தக் கிருஷ்ணபகவான் சத்ருவைக் கொல்வதற்காகச் செல்லும் போது இந்திரன்முதலானதேவர்கள் மனமகிழ்ந்து துதித்துக்கொ ண்டே பின்சென்றனர். நரகாஸுரனைச்சேர்ந்த அஸுரத்தலைவர்களை யும் கொடியராக்ஷஸர்களையும்கொன்றபிறகு, முரனுடைய அருகில் கத்தி கட்டினவலைகள் ஆயிரத்தைக்கண்டனர். அந்த வலைகளை அஸ்த்ரத்தினால்துணித்து முரனையும அவன்புத்திரர்களையுமகொன்று மலைக்கூட்டங்களைக்கடந்து நிசும்பனிடத்தார். ஆயிரம்பேரை ஒரு வனைத்திர்க்கத்திறமையுள்ளவனும எல்லாதேவர்களையும் அடித்த வனும சிறந்த பலபராக்ரமமுள்ளவனுமான ஹயக்ரீவனென்னும் அஸுரனைக்கொன்றார். அளவற்றசக்தியுள்ளவருமையார்க்கும்வெல்ல முடியாதவரும யாதவர்களெல்லாரையுமசிறப்பிக்கின்றவரும் தேவகி புத்திரருமான கிருஷ்ணபகவான், எங்குமஜலப்பிரவாஹம்நிரம்பின லோஹித கங்கையின் நடுவில விரூபாக்ஷனென்னும அஸுரனைக் கொன்றார்.

அதன்பிறகு ஒளியினால் ஜ்வலிப்பதுபோன்ற பாரக்ஜ்யோதிஷ மென்னுமநகரையடைந்தார். அங்கே யுத்தமநடந்தது. பாரதனே! சிறந்தசக்தியுள்ளவனும பூமிபுத்ரனுமாகிய அந்தநரகாஸுரனுடன் தேவேந்திரனுடையகுண்டலத்துக்காக அந்தப்பயங்கரமானசண்டை நடந்தது. பலதற்பிரகாரமுஸுரசேனை தமதுசக்தியினால் சற்று நேரம் நரகாஸுரனை விளையாடவிட்டு அவன்சக்ராயுதத்தை எடுத்த வுடன் தம் சக்ராயுதத்தினால்கொன்றார். வஜ்ராயுதத்தினால்படப்பட்ட விருத்திராஸுரன்தலைபோலச சக்ராயுதத்தினால்அடிக்கப்பட்ட நரகா ஸுரனுடையதலை தேகத்தைவிட்டு உடனே கீழேவிழுந்தது. பூமி தேவி தன்மகனைவிழுந்துபோனதைக்கண்டு தானேகுண்டலங்களைக் கொடுத்துச் சிறந்தகைகளையுடைய கண்ணனைப்பார்த்து, "மதுவைக கொன்றவரே! இந்தநரகன் உம்மாலேயே படைக்கப்பட்டான்; உம் மாலேயேகொல்லப்பட்டான். நீர் எப்படிநினைக்கிறீரோ அப்படிவினை யாடும். அவனுடையஸந்ததிகளைமட்டும் காப்பாற்றும்" என்றுசொன் னாள். அதற்கு வாஸுதேவர், "மஹாத்மாக்களான தேவர்களுக் கும் முனிவர்களுக்கும் பித்ருக்களுக்கும் மற்றுமுள்ளபிராணிகளுக் கும் பயங்கரனும் பிராமணத்வேஷியும் புருஷர்களில்இழிவானவனும் உலகத்தினால் வெறுக்கப்பட்டவனும் தேவர்களுக்கும் உலகங்களுக்

கும் முள்ளம்பன்றியைப்போல உறுத்துகிறவனுமான உன்புதல்வன் உலகமெல்லாம் நமஸ்கரிக்கத்தக்க அதிதிதேவியைத் தன்பலத்தினால்பீடித்தான். அவளுடையகுண்டலங்களைக் கர்வதினால்அபஹரித்தான். அதனால் அவன்கொல்லப்பட்டான். பெண்ணரசியே! நான்செய்ததைப்பற்றி வேருத்தப்படவேண்டாம். உன்புத்திரன் உன்னுடைய மஹிமையினால் மேலானகதியைஅடைந்தான். மேன்மை பொருந்தியவளே! உன்னுடையசுமையைத்தான் இறக்கினேன்; ஆதலால் சேசல்" என்றுசொன்னார்.

ஐம்பத்தாருவது அத்தியாயம்.

அர்க்காஹரணபர்வம். (தொடர்ச்சி.)

—⇝✻✻✻⇜—

ஸத்யபாமையைத் தூணியாகவுடைய கிருஷ்ணன் பூமியின் புத்ரனுகிய நரகனைக்கொன்று திக்குபாலகர்களுடன்கூட நரகனுடையபட்டணத்தைபபிரத்தார். பிறகு சிறந்தசக்தியுள்ள அந்தநரகனுடைய கிருஹத்தையடைந்து அளவற்ற தனங்களையும், அக்னி போலவும் சூரியன்போலவும் பிரகாசிக்கும்மணிகளும் முதலுக்களும் பவழங்களும் வைடூரியங்களும்முதலான பலவகை ரத்தினங்களையும், பெரிதும்சிறிதுமான ஸ்ரீயாகாதக்கற்களையும, படிகக்கற்களையும், ஜாம்பூநதமென்றும் சாதகும்பமென்றும் சொல்லப்படும் பொன்வகைகளையும் பார்த்தார். அவனுடைய அந்தபபுரம் பொன்னிறமும் வெண்ணிறமுமாக அழகாயிருந்தது. நரகன்கிருஹத்தில் அளவற்ற தனம் மிகுதியாகக் காணப்பட்டது. அவ்வளவு தனப்பெருக்கையக்ஷராஜாவான குபேரனுடையகிருஹத்திலும தேவேந்திரனுடைய கிருஹத்திலும் இதற்குமுன் யாருங் கண்டதில்லை. தேவக்கூட்டங்களோடுகூடிய தேவேந்திரன், நரகனும் நிசும்பனும் கொல்லப்பட்ட பிறகு அதிதியின் ரத்னகுண்டலங்களை வாங்கிக்கொண்டு வீற்றிருந்த யதுநாதரிடம், "ஜனார்த்தனரே! பொற்கொடிகள் அணிந்தபொற்கசைகள்கட்டி அங்குசங்களோடுகூடியவையும் சிறந்தபராக்ரமமுள்ளவையும் பயதத்தைத்தரும் உருவமுள்ளவையுமான இருபதினாயிரம்யானைகள் இருக்கின்றன. பலவகையான வெள்ளைவஸ்திரங்களினால் செய்யப்பட்ட கொடிகளோடும் பவழங்களினால்செய்யபபட்ட சேணங்களோடுங்கூடிய நாற்பதினாயிரமயானைகளும் பலதேசங்களிலுண்டான, எட்டுலக்ஷம் உயர்ந்தகுதிரைகளும் இருக்கின்றன. பகைவரைஸம்ஹரிப்பவரே! ஜனார்த்தனரே! உமக்கு விருப்பமிருந்

தால் நீர் தர்மமமாகச் சமபாதித்த மூன்றுலோகங்களுக்கும் சிறந்த இரதத்தனங்களையெலலாம் பழக்கபபட்ட காளைமாடுகளின்மேலேற்றி உமது ஹவாரகாபுரியில் சேர்பபிக்கிறேன்" என்றுசொன்னன். தேவர்களிடதிலும் கநதர்வாகளிடத்திலும் அஸுரர்களிடத்திலுமுள்ள பொன்களும் மணிகளும் நரகன் அரண்மனையிலிருநதன. இந்திரன் அவையெல்லாவற்றையும் மணிபாவததையும் கருடன்மேலேற்றிக் கிருஷ்ணனுடன்கூடத திருமபிசசென்றன். பொன்னினலலங்கரிக்கபபட்ட விதானங்களோடுகூடிய மாளிகைகளவிளங்கும் அநதமணிக்குன்று பலகிறங்களான மேகங்கள்சேர்நதாற்போல விளங்கிற்று. அதில் ரதினப்படிகள்கட்டின பெரியமாளிகைகளிருநதன. கநதர்வச்ரேஷ்டர்களும் தேவச்ரேஷ்டர்களுமாகிய இவர்களுடையஅன்புள்ள புத்திரிகளாகிய பெண்ணரசிகள் அவறறிலிருநதுகொண்டு மதுஸூதனரைக் கண்டனர். ஒற்றைப்பின்னலான சடையைத தரித்துக் காஷாயமுடித்துத் தவததிலிருபபவரான அந்தபபெண்களனைவரும் ஸ்வர்கத்துக்குநிகரான இடத்திலிருபபவரும தோல்வியடையாத மஹாவீரருமான கிருஷ்ணனைச் சூழ்நதுகொண்டனர். அப்போது தவத்தின் கடுமையினலுண்டான துயரம் எவ்வளவும் அவர்களைப பாதிக்கவில்லை. தாமரைமலருக்கொபபான கண்களையுடைய அநதப் பெண்களனைவரும வெண்மையானவஸ்திரங்களையும் பட்டுக்களையும் உடித்துக்கொண்டு, புலன்களை நடத்துகிறவரும் இநத யாதவசிங்கமுமான கிருஷ்ணனிடமவநது கரங்குவித்து, "ஓ! புருஷோத்தமரே! 'தேவர்களுடைய காரியததைச் சாதிபபதற்காகக் கிருஷ்ணன் வரப் போகிறார். அவர் பூமியின்புத்திரனை நரகன், நிசும்பன், முரன், ஹயக்ரீவன், பருசஜனனென்னும அஸுரர்களையும் அவர்கள்சேனைகளையும் வதஞ்செய்து அளவற்றதனதத யடையபபோகிறார். அவர் சொற்பகாலத்தில் உங்களைச் சிறையிலிருநது மீட்பார்' என்று நாரதர் எங்களுக்குசசொன்னர. சிறநத ஞானியும தேவரிஷியுமாகிய அவர் இவ்வாறு சொல்லிச்சென்றார். நாங்கள் எபபோதும உம்மையே நினைததுக்கொண்டு கடநதவஞ்செய்கிறோம். புருஷச்ரேஷ்டரே! இநதக் கெட்டகாலந்தாண்டி, சிறந்தகைகளையுடைய மாதவரை எப்போது காண்போமென்று மனத்தில எண்ணமிட்டுக்கொண்டு அஸுரர்களால காவல்காக்கப்பட்டு எக்காலமும்தவஞ்செய்துவருகிறோம். அதன்பிறகு எங்கள்விருப்பத்தைச் செய்வதற்காக வாயுபகவான்வநது, 'நாரதர் சொன்னதுசொன்னபடியே சீக்கிரத்தில் நடக்கும்' என்றுசொன்னர்" என்றுசொன்னார்கள். அந்தச் சிறநதபெண்களின் முன்னிலையில்

விருஷபப் பார்வையுடையவராயிருந்த கண்ணனென்ற தேவர்களும் கந்தர்வர்களும் பசுக்களின்முன்னிற்கும் மஹாவிருஷபம்போலக் கண்டனர். அந்தப்பெண்கள் சந்திரனுக்கொப்பான அவருடைய முகத்தைக்கண்டு கண்மலர்ந்து மன்மதனளித்துச் சிறந்தகைகளையுடைய அந்தப் பகவானைப்பார்த்து, "ஓ! எடுத்தவிரதம் தவறாதவரே! வாயுபகவானும் எல்லாப்பிராணிகளுக்கும் நன்மையைக்கருதினை நாரதமஹரிஷியும் முன்னர் இங்கே எங்களைப்பார்த்து, 'சங்கம சக்கரம கதை வாளேந்தின மஹாவிஷ்ணுவான நாராயணன் பூமியின்புத்திரனை நரகனைக் கொன்றபிறகு உங்களுக்குக் கணவராவார் என்பது திண்ணம்' என்றும் சொன்னார்கள். ரிஷிச்ரேஷ்டரும் முதன்மையான மஹாத்மாவுமான அந்த நாரதரின்சொற்படி எங்களுக்கு உண்மையாக நீர் பர்த்தாவாகவேண்டும். இஃது எங்கள்பாகயம். பகைவரை யடக்குகிறவரே! கேள்விக்குப் பிரியமாயிருந்தவரைக் காட்சிக்குப் பிரியராகப் பார்க்கிறோம் என்பது ஸந்தோஷமானது. இந்தமஹாத்மாவான (உம்மைக்) கண்டதனால் நாங்கள் கிருதார்த்தர்களானோம்" என்று கூறினர்.

யாதவச்ரேஷ்டரான கிருஷ்ணன் மதனனால் மயலுறறிருக்கும் அந்தப்பெண்களைவரையும் நோக்கி, "விசாலமானகண்களையுடைய பெண்களே! நீங்களிங்கேடபதிதலாம் உங்களுக்குநேரும்" என்று மறுமொழியுரைத்தார். உடனே தேவகிபுத்திரரானபகவான் ரதங்களைத் தனக்குவியல்களுடன்கூடவே அந்தப பெண்களெல்லாரையும் கருடன்மேலேற்றிவைத்தார். தேவேந்திரனுக்குஇளையவரான அந்தகக்கண்ணபிரான் பக்ஷிகள் யானைகளை புலிகளைமுதலான துஷ்டமிருகங்களும, ஸாபபங்களும, குரங்குகளும, மானகளும, பன்றிகளும, புள்ளிமான்களும கூட்டங்கூட்டங்களாகநிறைந்திருப்பதும், கறகளும் கறபாறைகளும தாழ்வரைகளும உயர்ந்தசிகரங்களுமுடையதும், விசித்திரமான மயிலகள்நிறைந்திருபபதுமான மணிபர்வதத்தை எல்லாப்பிராணிகளும பார்த்திருக்கும்போதே பேர்த்துக் கருடன்மேல்வைத்தார். பெருமலைசிகரமபோன்ற அந்தகக்கருடன் மஹாபலசாலிகளான கிருஷ்ணனையும பலராமரையும இந்திரனையும தூக்கிக்கொண்டு தமவன்மையுள்ள சிறகுகளைவிரித்தது மலைச்சிகரங்களையிடித்தும் மாங்களைபபெயர்த்தும எலலாதிசைகளிலும் பேரொலியையுண்டாக்கினார். "வீரனே! பகைவரைவெலலுகிறவரான கருடன் வைசவாநரமார்க்கமென்றுசொல்லபபட்ட நக்ஷத்திரவீதியிற சென்று பெரியமேகங்களையிழுததார். தமஞனியினால் நவக்ரஹங்

கள், இருபத்தேழுநக்ஷத்திரக்கூட்டங்கள், மற்றத்தனிததநக்ஷத்திரங்கள், ஸப்தரிஷிகள், அசுவினிதேவர்கள் இவைகளின் ஒளிகளையெல்லாம மறைத்து மிகபுண்ணிய ஸ்தானமாகிய தேவலோகத்தைச சேர்ந்தார். அந்தபபிரபுவான ஜனார்த்தனர் பலராமரோடு இந்திரனுடையமாளிகையைசசேர்ந்தவுடன் கருடனைவிட்டுஇறங்கி அதிதிதேவியின்பாதங்களை வந்தனஞ்செய்து எல்லாத்தேவர்களாலும பிரமமாதக்ஷர்முதலான ஸ்ருஷ்டிகாதாக்களாலும பூஜிக்கபபெற்றவராக அதிதிதேவிக்குத திவ்யகுண்டலங்களையும சிறந்தவாதனங்களையுமகொடுத்தார்.

அதிதிதேவியும் அவற்றையெல்லாம பெற்றுக்கொண்டு மனததுயரமநீங்கினவளாகி இந்திரனுக்குஇளையஸஹோதரரான கண்ணபிரானையும பலராமரையும கொண்டாடினாள். தேவேந்திரனுடைய மனைவியான இந்திராணி, கிருஷ்ணன்மனைவியான ஸத்தியபாமையைக் கைபபிடித்ததைத்துக்கொண்டு அதிதியினிடமகாண்பித்தாள். துயரமதிர்ந்த அந்தததேவமாதாவான அதிதிதேவி கிருஷ்ணனுக்குப்பிரியமசெய்யக்கருதி அந்தசசத்தியபாமையைபபாராத்து, "அழகியமுகமுள்ள பெண்ணரசியே! கிருஷ்ணன பூமியின்மீதிருக்கும வரையில உனக்கு மூபபுவராமல உடமபில எல்லாவகையானநலல மணங்களும பொருந்தியிருபபாய்" என்றுவரமளித்தாள். அழகிய இடையுளள ஸத்தியபாமை இந்திராணிக்கு விடைகொடுத்து அவளிடத்தில் தானுமவிடைபெறறுக கிருஷ்ணனுடையகிருஹத்துக்குச் சென்றாள். சதகுருகளையடக்குகிறவரான ஸ்ரீ கிருஷ்ணன தேவர்களாலபூஜிக்கபபெறறு மஹரிஷிகளின்கூட்டங்களினால அனுஸரிக்கபபட்டவராகத தேவலோகத்திலிருந்து துவாரகைக்குச சென்றார். தேவாகளுகெலலாமசரேஷ்டரும சிறந்ததகைகளையுடையவருமாகிய கண்ணபிரான் தூரமானமார்க்கத்தை வீரவாகத்தாண்டிக் கோட்டையின்முன்வாயிலையடைந்தார்.

ஐம்பத்தேழாவது அத்தியாயம்.

அர்க்காஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(துவாரகாநகரத்தையும் கிருஷ்ணனுடைய அந்தப்புரஸ்திரீகளின்கிருகங்களையும் வர்ணித்தது.)

பிரபுவும் நாராயணனுமானகிருஷ்ணன் அந்தத் துவாரகாபுரியைக்கண்டு களிப்புற்று எல்லாபபொருள்களோடும் நகரபபிரவேசஞ்

செய்ய ஆரம்பித்தார். துவாரகாபுரியின் நாற்புறங்களிலும பலவகை மலர்களும கனிகளுமுள்ளவையும் அனேக ஜனங்களுள்ளவையுமான அழகிய அனேகதோட்டங்களைக் கண்டார். சூரியனைப்போலும் சந்திரனைப்போலும பிரகாசிக்கின்றவையும் மேருமலையின் சிகரங்கள் போன்றவையுமான மாளிகைகள்நிரம்பி அழகாயிருப்பதும, தாமரைகளின் வரிசைகள்நிரம்பினவையும ரத்னஸங்களால அடையப்பட்ட தண்ணீரோடு கூடியவையும் கங்கைநதிக்கும ஸிந்துநதிக்கும ஒப்பானவையுமான அகழிகளினல்சோபிப்பதும, சூரியனைப்போலப் பிரகாசிபபதும ஆகாயத்தின்மேல எட்டியிருபபதுமானவெண்மதிலினல் மேகங்கள்சூழ்ந்த ஆகாயம்போல விளங்குவதுமாக விசுவகர்மாவினுல்செய்யபபட்ட அழகிய துவாரகாநகரியைக் கண்டார். நந்தன வனத்திற்கும் மிச்சிரம்என்னும சைத்ரோதியான வனத்திறகும் சமானமான வனங்களோடு, அதிகமாகச சங்கீதகோஷமும சிறந்த பொன்மாளிகைகளும நிரமபி ஜனங்களுக்கு ஸந்தோஷகரமாக அந்தச்சிறநத நகரம விசுவகர்மாவினுல் ஸ்வயமாகவே உண்டாக்கபபட்டது. எலலாநகரங்களுக்கும மேலான அநதநகரத்தில, கொடிகள் தூக்கிக் கட்டியிருபபதனுல பறபபவைபோன்றவையும பொன்மயமாயிருப்பதனுல மேருமலையின் சிகரங்கள்போலப் பிரகாசிபபவையுமான புகழ்பெற்ற யாதவர்களின் மாளிகைகளைக்கண்டு, மகிமைபெற்ற இந்திரன் மகிழ்நதான். வெள்ளைபூசி வெளுத்தசிகரங்களோடு கூடியவையும பொன்னல் அலங்கரிக்கபபட்டவையும, மேருமலையின் கொடுமுடிகள்போலப பெரிய மேல்மாளிகைகளோடு கூடியவையும, எல்லாரத்தினங்களு முளளவையும, [1]ஹர்ம்யபம, [2]அர்த்தசநதிரம், [3]நிர்யோகம், [4]பஞ்சரம என்னும கட்டிடங்களோடுகூடியவையும, யந்திரசாலைகளநிரமபினவையும், ரதனமும பொன்னும்சேர்ந்த தளவரிசைகளும சுண்ணும்புக்குழுமபு பூசினதரைகளுமிருப்பதனுல் பல நிறக்கற்களோடுகூடிய மலைகள்போலிருப்பவையும், பொன்மயமான வாயிற்படிகளும வைடூரியக்கல்லாலாகிய தாழ்களுமுடையவையும், எல்லாக்காலங்களிலும ஸுகமான காற்றுளளவையும, மிக்கவிலைபெற்ற சாமான்களுள்ளவையும, அழகியதாழ்வரைகளாலும கொடுமுடிகளாலும சோபிக்கின்ற குன்றுகளுக்கொபபானவையும, ஐநூறுநிறங்களுள்ள புஷ்பவர்ஷங்கள் நிரம்பினவையுமான கிருஹங்களினுலும மேகமுழக்

1 விசாலமான மேல்மாடி. 2 அர்த்தசந்திரன் வடிவாயிருப்பது.
3 கொடுங்கை அதாவது மேல்வீடான கட்டிடம்.
4 கூடுபோலச் கம்பிகளால் செய்யப்பட்ட கட்டிடம்.

கம்போன்ற ஜனகோஷங்களினலும் அந்நகரமானது போகவதிஎன் னும் நாகலோகநகரம்போலிருந்தது. கிருஷ்ணனுடைய வெண் கொடியே ஸ்ரீவதமும், யாதவர்களின் ஆயுதங்களே வானவிற்களும், வீரர்களான யாதவர்களே மயில்களும், அனேகமாயிரம் ஸ்திரீகளே மின்னல்களும, கிருஷ்ணனும் இந்திரனுமே மேகமென்றவதைகளுமாக வுடைய வீடுகளென்னும மேகங்களினல் அலங்கரிக்கப்பட்ட துவா ரகாநகரானது மேகங்களால்மூடப்பட்ட ஆகாயம்போல மிக்கஅழ காயிருந்தது. அவர்கள் கான்குயோஜனைகளும் அவ்வளவேஅகல மும் சிறந்ததனங்கள் நிரம்பினதும உயர்ந்த மேல்மாளிகைகளோடு கூடியதும் சிறியசெய்குன்றுகளோடு கூடியதுமாக விசுவகர்மாவினற் செய்யப்பட்ட கிருஷ்ணபகவானுடைய மாளிகையைக் கண்டனர். சுற்றிலும ஒருயோஜனவிஸ்தாரம் இடமுள்ள அந்தக்கிருஷ்ணன் மாளிகையைச் சிறந்தமஹிமையுள்ள விசுவகர்மாவானவன் இந்திர னுடையகட்டளையினற் செய்தான். மேருமலையின்சிகரம்போல உயர மும் பொன்மயமுமான ருக்மிணியினுடைய சிறந்தகிருஹமும் மிகச் சிறந்தமஹிமையுள்ள விசுவகர்மாவினலேயே செய்யப்பட்டது. எப் போதும் வெண்ணிறமானகிருஹத்திலேயே வஸிப்பவளான ஸத்திய பாமையின்கிருஹமும, பலநிறங்களான ரத்தினங்களிழைத்த படிக ஞ்ஞள்ளதும ''சீதவான்'' என்று பெயருள்ளதுமாக மேகம்முதலிய மறைவுகீங்கிய ஸூர்யனைப்போலப் பிரகாசிக்கும் பதினலு பெரிய கொடிகள்கட்டி அலங்கரித்து முதன்மையானவிடத்தில் தனித்துத் தெரியுமபடி கட்டப்பட்டது. அதேஇடத்தில் பலநிறமான ரத்தி னங்களின்ஒளிகள் எங்கும் வ்யாபிப்பதனல் மூன்றுலோகங்களையும் பிரகாசப்படுத்துவதும் அலங்காரஞ்செய்யப்பட்டதும் எல்லாமாளிகை களிலும் முதன்மையுமான ஜாம்பவதியின் கிருஹமிருந்தது. அவ் விரண்டு கிருஹங்களுக்குமிடையில் (சத்தியபாமையின்வீட்டிற்கும் ஜாம்பவதியின்வீட்டிற்கு மிடையில்) கைலாஸசிகரம்போன்ற வெண் ணிறமான பிரகாசமுடையதும ஜ்வலிக்கின்ற அக்னியைப்போல விளங்குகிற பொன்மயமான சிகரங்களையுடையதும மேருவென்று பெயர்பெறறதுமான ஒருகிருஹம் கடலுக்குஒபபாக விசுவகர்மாவி னல் செய்யப்பெற்றிருந்தது. அதில் காந்தாரதேசத்தரசன்மகளும் குலத்தினுயர்ந்தவளுமான ஸுகேசியென்று பெயர்பெற்றமனைவி கிரு ஷ்ணனல் வைக்கப்பட்டிருந்தாள். சிறந்தஸகலையுடைய தர்மரா ஜாவே! தாமரைமலர்நிறமுள்ளதும அதிகப்பிரகாசமுள்ளதும மிக்க

[1] குளிர்ச்சியுள்ளது.

உயரமுமான பத்மகூடமென்று பெயர்பெற்ற கிருகமானது ஸுப்ரபை யென்னும் கிருஷ்ணன் மனைவியுடையது. கௌரவச்ரேஷ்டனே! ஸுர்யப்பிரபம் என்றுபிரசித்தமாகச் சொல்லபடும் சிறந்தமாளிகை யானது சார்ங்கபாணியினுல் லக்ஷ்மணையென்னும் மனைவிக்குக் கொடுக் கப்பட்டது. பாரதனே! உயர்ந்தவைடூர்யக்கற்களின் ஒளியும் பச சைக்கற்களின்ஒளியும நிரமபினதும வெண்மையான பலகணிக்கம்பி கள் வைக்கப்பட்டதும், 'ஹரி' என்று எல்லாராலும சொல்லப்பட் டதும் தேவர்களாலும ரிஷிகளாலும பூஜிக்கப்பட்டதும் எல்லாவீடு களுக்கும் அலங்காரமானதுமாகிய மாளிகை ஸுமித்ரவிஜயையென் னும் கிருஷ்ணன்மனைவி இருக்குமிடம. அவள் அங்கே கிருஷ்ண னுல்வைக்கப்பட்டாள். எல்லாமாளிகைகளிலும முதன்மையானதும், 'கேதுமான்' என்று பெயர்பெற்றதுமான கிருஷ்ணன்மனைவியின் கிருஹம் எல்லாசித்ரிகளுமம சேர்ந்துகட்டியது. 'விரஜ' மென்று பெயர்பெற்றதும் 'ரஜஸ்' என்றுசொல்லபபட்ட அழுக்கில்லாமையால் அப்பெயருக்குஒத்ததும மஹாத்மாவான கிருஷ்ணனை யாவரும்வந்து பார்க்குமிடமும் அங்குள்ள எல்லா அரண்மனைகளிலும் சிறந்ததும் ஒருயோஜனைவிஸ்தாரமான சுற்றுபரதேசமுள்ளதும் எல்லாரத்தினங் களுமம நிரம்பினதுமான அந்தக்கிருஹத்தைப பிரபுவுக்காக விசுவ கர்மா தானேசெய்தான். அவர்களுடையகிருஹங்களெல்லாம் பொன் மயமானகொடிமரங்களும் கொடிகளும் கடடினவையாகச செய்யப் பட்டிருந்தன. கண்ணனுடையகிருஹத்துக்குக் கொடிகளே வழி காட்டுகின்றவை. அங்குள்ள எலலாருடையகிருஹங்களிலும் மணிக ளின்கோவைகள் கட்டபபட்டிருந்தன. அறுபது பனையுயரமுள்ளதும் அரையோஜனை விஸ்தாரமுள்ளதும கின்னரர்களின் ஸங்கீதகோஷ முள்ளதும் மூன்றுலோகங்களிலும பெயர்பெற்றதும் 'இந்திரத் யும்னம்' என்னும் தடாகமுள்ளதுமான ஹம்ஸகூட கிகாத்தையும், ஸுர்யனுடையமாக்கதையும எட்டினதும எல்லாஜோதிக்கொடி களும் பிரகாசிபபதனுல் ஒளியுள்ளதும் தேவர்களிருக்குமிடமும் மூன்றுலோகங்களிலும் பெயர்பெற்றதுமாகிய மேருமலைச்சிகரத்தை யும், எல்லாஜனங்களும் பார்த்திருக்கையில் அளவற்றமஹிமையுள்ள யாதவசிங்கமான கிருஷ்ணன் பெயர்த்துப் பிரயத்தனத்துடன் தம திருப்பிடம கொண்டுவந்து, வைஜயந்தமென்னும் இந்திரன்கிருஹத் தைப்போன்ற பெரியமாளிகையை முன்னமே செய்துகொண்டார். பகைவரைத் தன்பப்படுத்துகிறவரான கிருஷ்ணனுல் இந்திரன்வீட் டுத் தோட்டத்திலிருந்து கொண்டுவந்த பாரிஜாதமரமும், அங்கே

யே நாட்டப்பட்டிருந்தது. அனேகதூறு முழஅளவுள்ள பொன் பூசின மேல்வீடுகளினல் அநதக்கிருஹம் சூழபபட்டது. அந்தஇடத் திலேதான் கிருஷ்ணனல் சிறநதமரங்களும் வைக்கபபடடன. தாம ரைமலர்களும் செநகழுநீர்ப்புஷ்பங்களும் செவ்வல்லிப்பூக்களும்நிரம் பின ஜலமுள்ளவையும ரதினஙகளும முதலுக்குமேம பெருமணல் களாகவுடையவையுமான ஓடைகளும், கடாகங்களும் அங்கேயேயிரு க்கின்றன. அவறறின் அழகானகரைகளில அநதச்சிறநதமரங்கள் சிறப பிக்கின்றன. ஆச்சா, பனை, அசுவகாணம, அனேகமகிளைகளோடு கூடிய ஆல், [1]பலலாதகம, விளா, [2]இந்திரவிருக்ஷம், சமபகம, கருங் காலி, மிருதகமுதலிய மரங்கள் சுறறிலும் வளர்கபபட்டிருக்கின் றன. இமயமலையிலும நநதனவனத்திலுமுள்ள மரங்களினைத்தும் யாதவகிங்கமான கணனனல கொண்டுவநது அங்கேநாட்டப்பெற் றிருக்கின்றன. அநதக்காடுகளிலுள்ள மரங்களில் எல்லாக்காலங்களி லும ரத்னங்களைபபோல பொன்னிறமும் சிவப்புநிறமும் வெண்மை நிறமுமான மலர்களும கனிகளும நிரமபியிருநதன. ஆயிரம்இதழ் களுள்ள தாமரைகளும் அனேக மநதாரமரஙகளும அசோகம், கர்ணி காரம், திலகம, நாகமல்லிகை, குரவகம, நாகபுஷ்பம், சண்பகம, திருணபுல்லிகை, 3ஸபதபர்ணம, கபநதம, நீபம, குரகம், தாழை, நாககேஸரம், சிறுதாழை, தலதாடகம, பனை, பிரமபம, மகிழ், பிண் டிகை, 4பீஜபூரகம, தூரிஞசி, ஆமலகம, தருதாமலகம், 5கர்ச்சூரம், சிறநதநாவல், மா, பலா, திலதிநதுகம், எலுமிச்சை, அமிருதகம், க்ஷீரிகை, கர்ணிகை, தென்னை, புஷ்கரு, உதகுரோசகம், வாழை, ஜாத மல்லி, பாதிரிமுதலிய இவறறின்வனங்களும், ஆமபலமம, செவ்வல் லியும், கருநெய்தலும நிரமபினவாவிகளும கிணறுகளும அனேக மிருநதன. பூத்த அசோகங்களும, விளாமரங்களும், செமபருத்திக ளும், பிரியாளமரஙகளும், அசோகங்கள் நிலநதைமரங்களும் அவற் றின் கரைகளிலிருநதன. பிரியநகு, இலநதை, யவம, தினிசம், சந் தனம, சகியென்னுமமரம, சரேஷ்மாதகம், பலாசம், தவம, அரசு, அத்தி, [6]வில்வம், வேமபு, இநதிரவிருக்ஷம, மருதம், சிரிபில்வம், பௌளம், கஞ்சா, பலலாதகம, அசுவவிருக்ஷம், ஸ்ரீஜம், [7]வெற்றிலைக் கொடி, லவங்கம, பாக்குமரம், பல்வகைமூங்கில்கள் இவை நாற்புற மும் வளர்க்கபபட்டிருநதன. நநதனவனத்திலுமை சைதரரதமென் னும் குபேரன் தோட்டத்திலுமுளள மரங்களினைத்தும் யதுநாதரால்

1 'சே' என்னும் மரம் 2 தேவதாரு. 3 எழிலம்பாலே.
4 கொய்யா; மாதுளையுமாம். 5 பேரீஞ்சு.

அவ்வனத்தில் நாலுபக்கங்களிலும் வளர்க்கப்பட்டிருந்தன. அழகான அந்தச்சிறந்தவீட்டில் பலவகையுயர்ந்தரத்னங்களே பொன்னிறமும் சிவப்புநிறமும்'இந்திரநீலக்கல் நிறமுமான மணற்குன்றுகளாயமைந்த மஹாநதிகள்' இருந்தன. களித்தமயில்களும் குயில்களும் சப்திக்கும் செய்குன்றுகளெல்லாம் மிகச் சிறப்புற்றிருந்தன. அங்கே யாணைக்கூட்டங்களும் பசுக்களும் எருமைகளும்இருந்தன. பன்றிகளுக்கும் மான்களுக்கும் பறவைகளுக்கும் அங்கேஇடங்கள் செய்யப்பட்டிருந்தன. நாணூறுமுழுயரமுள்ளதும் அமிர்தம்போன்ற நிறமுள்ளதுமாகிய ஒருமலே அந்தவீட்டிற்குப்பிராகாரமாக விசுவகர்மாவினால் செய்யபபட்டிருந்தது. அங்குள்ள மற்றச்சிறந்த குன்றுகளும் நதிகளும் தடாகங்களும் காடுகளும் தோட்டங்களும் அந்தப்பிராகாரத்தினுல் சூழப்பெற்றிருந்தன.

ஐம்பத்தேட்டாவது அத்தியாயம்.

அர்க்காஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(இந்திரன் கிருஷ்ணனிடம்விடைபெற்றுக்கொண்டு ஸ்வர்க்கலோகம்சென்றது.)

கிருஷ்ணனும் பலராமரும் பெருங்கீர்த்திபெற்ற இந்திரனுமாகிய இந்தமூன்றுபுருஷச்ரேஷ்டர்களும் இவ்வாறு துவாரகாநகரத்தைக்கண்டனர். பிறகு கண்ணன் ஸந்தோஷத்துடன் கருடன்தலே மேல்நின்றுகொண்டு பகைவர்களுக்கு மயிர்சிலிர்க்கச்செய்வதாகிய தமதுவெண்சங்கை ஊதினர். அந்தச்சங்கின் முழக்கத்தினுல் கடல் மிகக்கலங்கியது. ஆகாயமெல்லாம் சப்தித்தது. அப்போது அஃது ஆச்சரியமாயிருந்தது. பாஞ்சஜன்யத்தின் சப்தத்தைக் கேட்டவுடன் மதுஸூதனரையும்கண்டு குகுரர்களும் அந்தகர்களும் மகிழ்ந்துவந்தனர். ராஜாவாகிய உக்ரஸேனன் வஸுதேவரைமுன்னிட்டுக்கொண்டு புல்லாங்குழல்களும் சங்கங்களும் முழங்க வாஸுதேவர்மாளிகைக்குச்சென்றான். தேவகியும், ரோகிணியும், ஆஹுகனுடைய திருத்பரஸ்திரீகளுமாகிய அனைவரும் மகிழ்ந்து கண்ணபிரானேயழைப்பதற்குத் தம்தம்வீடுகளிற் பரபரப்போடு ஸஞ்சரித்தனர். 'பிரம்மணத்தேவஸ்திகளனைவரும் அழிக்கப்பட்டனர். அந்தகர்களும் விருஷ்ணிகளும் வெற்றிபெற்றிருக்கின்றனர்' என்றுசொல்லி ஸ்திரீகள்சேர்ந்து அக்ஷதைகள்போட்டபிறகு கண்ணபிரான். கருடவாஹனராகவே தமது அரண்மனைக்குட் சென்றார். ஈசுவராரானமது

1028ьн

ஸுதனர் உடனே அம்மணிபர்வதத்தைத் தக்கவிடத்தில்வைத்தார். தாமரைக்கண்ணராகிய மதுஸூதனர் அநதத்தனங்களையும் ரத்தினங்களையும் ஸபையில்வைத்துத் தந்தையைத்தரிசிக்க ஆவலுற்றார். பாரதனே! அப்போது மிக்கபுகழ்பெற்ற வாஸுதேவர் பிராம்மணரான ஸாந்தீபனியின்பாதங்களை முறைப்படி முதலிற்பிடித்து வந்தனஞ் செய்தார். அகன்றும் சிவந்துமுள்ள கண்களையுடையவரும பகைவர்களானவீரர்களைக்கொல்லுகிறவரும் பெருமபுகழ்பெற்றவரும் இந்திரனுக்கு இளையவருமான கண்ணன், மனத்தில் ஆனந்தம்நிரம்பினவரும் கண்களில் ஆனந்தக்கண்ணீர் ததுமபிக்கொண்டிருபபவரும் தந்தையுமானவஸுதேவரைப் பிரியததுடன் வநதனஞ்செய்தார்; சாந்தீபனி வஸுதேவர்இருவராலும் உச்சியில்மோக்கப்பெற்றார். யாதவச்ரேஷ்டரானகண்ணன் யாதவர்களை வயஸின்க்ரமப்படி சந்தித்து அவர்களெல்லாரையும் பெயரிட்டழைத்தார். பிறகு ஸ்ரீ கிருஷ்ணன் எல்லாரத்னங்களுமநிரம்பின தனங்களெல்லாவற்றையும் அவர்களிடமவர்க்கும் பகுத்துக்கொடுத்தார். கண்ணனுக்கு முக்கியமந்திரிகளும் இந்திரனைப்போன்றவருமான அநத யாதவப்புலிகளிருக்கும் அச்சபை, சிங்கங்கள்வஸிக்கும மலைக்குகைபோலவிளங்கிற்று. பிறகு ஆஸனங்களில்உட்கார்ந்த முக்கியமானகுருர்களையும் அந்தகர்களையும் ராஜாவானஅந்த ஆகுகணியும்பார்த்து, தேவர்க்கதிபதியும் பரந்தகீர்த்தியுள்ளவனுமாகிய தேவேநதிரன் இன்சொல்லினால் அவர்களமகிழும்படி பேசலானன்.

"மஹாத்மாவான கிருஷ்ணபகவான் மானிடலோகத்தில் வஸுதேவபுத்ரராக எதற்காகஜனித்தாரென்பதையும் அவர்என்ன செய்தாரென்பதையும் சுருக்கமாகசசொல்வேன். பகைவரையடக்குகிறவரான இந்தத்தாமரைக்கண்ணர் நூறுயிரம் அஸுரர்களைக்கொன்று பாதாளலோகத்துக்குட்சென்றார். மூந்தியவர்களான பிரஹ்லாதன், பலி, சம்பரன்முதலியவர்களால் அடையப்படாத இந்தத்தனம் கிருஷ்ணனால உங்களுக்கு இங்கேகொடுக்கப்பட்டது. சிறந்தஞானமுள்ள கிருஷ்ணன், வலைகட்டிக்கொண்டிருநதமூனியும் பஞ்சஜனனியும் வென்றபிறகு கற்கோட்டைகளைக்கடந்து நிசும்பனியும் அவன்சேனைகளையும்கொன்றார். சிறந்தசக்தியுள்ள ஹயக்ரீவனென்னும் வலிய அஸுரனும் இவரால்கொல்லப்பட்டான். நரகாஸுரனும் யுத்தத்தில்அடிக்கப்பட்டான். அதிதியின்குண்டலங்களும் திரும்பிக்கொண்டுவரப்பட்டன. மறுபடியும் பாணஸுரவதம் நடக்கப்போகையில் ஆதித்யர்களும் வஸுக்களும் ஸாத்யர்களும் என்னை

முன்னிட்டுக்கொண்டு மதுஸூதனரிடம் வரபமேபாகின்றனர்" என்றான். இந்திரன் இவ்வாறுசொல்லிக் குகுரர் அந்தகர்களெல்லாரிடமும் விடைபெற்றுக்கொண்டு ராமகிருஷ்ணாகளையும் வஸுதேவரையும் தழுவினன். பிரதயும்னன் ஸாம்பன்முதலானவர்களையும் அனிருத்தன், ஸாரணன், பபரு, ஜ்வலிதவாகளையும் கதன், பானு, சாருதேஷ்ணன், ஸாரணன், அக்ரூர், ஸாதயகிமுதலானவாகளையும் கௌரவித்து விடைகேடடுக்கொண்டு விருஷ்ணிகளுகுகும குகுரர்களுக்குமராஜாவான ஆஹுகனுதழுவிகொணடான். போஜன் கிருதவர்மாமுதலான அந்தக விருஷ்ணிகளிடம சொலலிக்கொண்டும கிருஷ்ணனிடம தேவர்களுடன்விடைபெறறுகொண்டும பிரபுவும இந்திராணியின கணவனுமாகியஇநதிரன் எலலாருமபாரதிருகையில் வெளளைமலபோனற ஸ்ரோவதமென்னும யானமேலவறினான். அடிகடி வாயிலிருநதுணடான பெரியகோஷஙகளினால உலகங்களை நிரபபுவதும பொன்மயமான பெருஙகசசை கடடபபட்டதும பொன்னியணிநத தநதங்களுடையதும அழகிய சேணமவிரிக்கபபட்டதும எல்லாரதனஙகளாலும அலஙகரிககபபட்டதும மழைபொழியுமமேகமபோல மதஜலததை எகாலமுமவர்ஷிபபதும பொன்மாலையணிநததும திக்கஜஙகளிலசிறநததுமான ஸ்ரோவதத்தின்மேலேறின இநதிரன் மருதமலசசிகரதில பிரகாசிகரும ஸூரியன் போலவிளஙகினான். அதனபிறகு தேவேநதிரன வயிரக்கலலினறை செய்யபபடடதும பயங்கரமுமான சிறநதஅங்குசததைக கையிற் பிடித்து மிக்கபலசாலியான அக்னிபகவானுடனசென்றான். குபேரன், வருணன், நவக்கிரஹங்கள், ஸ்பதமருதுக்கள்முதலிய தேவக்கூட்டங்கள் பெண்யாணைகளிலும ஆண்யாணைகளிலும விமானஙகளிலும்வறி அன்புடன இநதிரன்பின்சென்றனர். அநதஇநதிரன் வாயுமார்க்கத்தைத்தாணடி வைசுவாநரமாகாகம என்று சொலலபபடட ஆகாயத்தின் மதியமேகைக்குசசென்று ஸூரியமண்டலத்தைச சார்ந்து அங்கேயே அநதர்த்தானமானான்-

---

ஐம்பத்தோன்பதாவது அத்தியாயம்.

அர்க்காஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(தாய்மார்களும் பத்நிகளும் கிருஷ்ணனைக்கண்டது.)

பிறகு யாதவர்களனைவருடைய ஸ்திரீகளும் ஆஹுகன்பத்னிகளும் உலகத்தில் புகழ்பெற்ற நந்தகோப பத்னியாகிய யசோதையும்

மிக்கபாக்கியவதியான ரேவதியும், பதிவ்ரதையான ருக்மிணி, ஸத்ய பாமை, ஜாம்பவதி, காந்தாரி, சிமசுமை, விசோகை, லக்ஷ்மணை, ஸுமித்ரை, கேதுமை, முதலான கிருஷ்ண னுடைய அந்தபுபுரஸ்திரீகளும மஹாதமாவான ஸ்ரீ கிருஷ்ண னுடைய ஐசுவரியததைக்காண விருமபி அன்புடன் மங்களததிரவியங்களை யெடுததுக்கொண்டுஸபைக் குசசென்றனர். அவர்கள கண்ணனபபாக்க ஆவலுடன் ஸபைக் குசசென்றனர். தேவகியும ரோஹிணியும எலலா அசிகளிலும் மூன் வைகைகபபெறறனர் அவாகள பலராமருடன்வீறறிருக்கும் கிருஷ்ண பகலாணைக் கண்டனா. அவ்விரண்டுதேவாகளாகிய ராமகிருஷ்ணர் கள் முதலில் ரோகிணிக்கு அபிவாதனஞசெய்து பிறகு தேவகிக்கு அபிவாதனஞ்செய்தனர். அநதத தேவகியானவள் ரிஷபபபார்வை யுள்ள அவவிரண்டு புததிராகளுடன்சேர்நது ஸ்ரீர்யமேஞடும வருண ணைடுங்கூடிய தேவமாதாவான அதிதியைபபோல மிக்கசோபையுள் ளவளாய் விளங்கினாள. பாரதனே! தேவகாநதிபிஞல் மிகஜ்வலிப பவளபோல யசோதையின்பெண் உடனேஅநுவநதாள். அவள ஏகாநங்கையென்னும பெயருள்ளவள், நிணததரூபமெடுபபவள்; எப் போதும கன்னிகையாயிருபபவள. அவளுகாகததான் புருஷோத் தமானகண்ணன் கம்ஸனையும அவனைசசேர்நதவாகளையும் கொன் றார். பகவானுகிய பலராமா அநதப பெண்ணரசியைத்தழுவி உசசி மோநது இடக்கையிஞல பிடிததுகொண்டார். கண்ணன் அங்கே அவளைக்கண்டவுடன் அன்புள்ளபாஙகியைபபோல வலக்கையிற்பிடித் தார். ஸபையின்நடுவில பொற்சுவரைபோன்ற கைகளையுடைவயஞும் தாமரையாளைபபோன்றவளும் பதமநாபருடைய அவதாரமாகிய ராம கிருஷ்ணர்களுடைய ஸஹோதரியுமான அநதபபெண்ணை யாதவர் ஸபைநடுவிறகண்டனர். பிறகு அவாகள மகிழ்நது ராமகிருஷ்ணர் களின்மேல் அக்ஷதைகளையும நெறபொரிகளையும் புஷ்பங்களையும நெய்யையும பொழிந்தனர். யாதவர்கள் குழநதைகள கிழவர்கள குலத்தோர்சுறறத்தவருடன் கிருஷ்ணனருகில உடகார்நதனர். சிற நதகைகளையுடையவரும் நகாததுஜனங்களுக்குச் சநதோஷத்தைப பெருகசசெய்பவரும் புருஷச்ரேஷ்டருமான கண்ணபிரான் எல்லா ராலும் பூஜிக்கபபெற்றுத் தமதுகிருஹத்தில் பிரவேசித்தார். எப போதும் ஸுகமுள்ளபகவான் ருக்மிணிதேவியுடன் சோநது ஸுக மாகவும் உறசாகமாகவுமிருநதார. பாரதனே! பிறகு ஸத்தியபாமை, ஜாம்பவதிமுதலான எல்லாஸ்திரீகளின் வீடுகள்தோறும் யாதவச்ரே ஷ்டரானகண்ணன் ஸநதோஷமாயிருநதார். கண்ணபிரான் திரும்

பவும் ருக்மிணியின் கிருஹத்துக்குசென்றார். அன்பனே! சிறந்த கைகளையுடையவனே! சார்ங்கபாணியான கண்ணனுடையஜயம் இவ் வகையானது. இதற்காகத்தான் இம்மஹாத்மா மானிடரில்ஜனித் தாரென்று சொல்லுகின்றனர்.

அறுபதாவது அத்தியாயம்.

அர்க்காஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணன் பாஞ்ஸன்யனே ஜயித்தது.)

மஹாராஜாவே! பெரும்புகழ்பெறற கிருஷ்ணன் பிறகு தமது அந்தப் புரஸ்திரீகளிடம் இரவும்பகலும் ஸுகமடைந்து துவாரகைநக ரில் மகிழ்ந்திருந்தார். பரதச்ரேஷ்டனே! அக்காலத்தில் தம்போ னன அனிருத்தனுக்காக இந்திராதிதேவரனைவராலும் செய்யமுடி யாத தேவகாரியத்தைச்செய்தார். பரதச்ரேஷ்டனே! பலிசக்கர வர்த்தியின் மூத்தகுமாரனும் வன்மையும் சூரத்தனமுமுள்ளவனும் ஆயிரங்கைகளையுடையவனுமாகிய பாணனென்னும் அஸுரராஜ னிருந்தான். ராஜாவே! அந்தபபாணன் உறுதியானமனத்துடன் அனேகவருஷகாலம் கடிநதவஞ்செய்து சிவபெருமானே ஆராதித் தான். அவனுக்கு மஹாத்மாவான சங்கரபகவானுல் அனேகவரங் கள் கொடுக்கபபட்டன. அநதபபாணன் இப்புவியில அஸுரர்களுக் குக்கிடைக்க அரியனவாகிய அவ்வரங்களைபபெற்று ஓபபற்றபலசாலி யாகச் சோணிதபுரமென்னுமநகரத்திலராஜ்யபாரஞ்செய்தான். பாண் டவனே! அந்தபபாணனுல் தேவர்கள்னைவரும நடுங்கச்செய்யப்பட் டனர். பாரதனே! பாணன், இநதிரனமுதலான தேவர்களைவென்று அனேகவருஷகாலம குபேரனைபபோலப பெரியராஜ்யத்தை ஆண் டான். ராஜனே! அப்போது பாணனுக்கு உஷையென்று ஒருபுத ல்வி இருந்தாள. குந்திபுத்திரனே! சிறந்தசக்தியுள்ளவனும் பிரத் யும்னன் புதல்வனுமான அனிருத்தனென்பவன் ஏதோ ஓர்உபாயத் தினுல் அந்தஉஷையையடைநது ரஹஸ்யமாகச் சுகித்துக்கொண் டிருந்தான். யுதிஷ்டிரா! அப்போது சிறநதசக்தியுள்ள பாணன், பிரத்யும்னன் மைந்தன் தன்மகளுடன் அங்கேமறைந்து வஸிப்பதை அறிந்து அவனைத் தன்வலிமையினுற் பிடித்துச் சிறைச்சாலையி லிருக் கச்செய்தான். ராஜாவே! ஸுகத்துக்குரிய அந்தராஜகுமாரனை அனிருத்தன் அப்போது பாணனுல்பிடிக்கப்பட்டுத் துயரமடைந்து மதிகலங்கினன். குந்திபுத்திரனே! அதேகாலத்தில் நாரதமஹா

முனிவர் துவாரகையைச்சார்ந்து கண்ணபிராணைக்கண்டு, "கிருஷ்ணா! கிருஷ்ணா! சிறந்தகைகளையுடையவரே! யாதவர்களுக்குப் புகழைப் பெருகச்செய்கிறவரே! உமதுபேரனை அளிருத்தன் அளவிற்ற சக்தியுள்ள பாணஸுரனல்பிடிக்கப்பட்டு இப்போது துயரமடைந்து சிறைச்சாலையிலேயே கிடக்கிறான்" என்றுசொன்னர். இதைச்சொன்னவுடன் அந்தத்தேவரிஷி, பாணனுடையகரத்துக்குச் சென்றார்.

ராஜாவே! நாரதருடையசொல்லைக் கேட்டவுடன் கிருஷ்ணன் பலராமரையும் சிறந்தசக்தியுள்ள பிரத்யும்னனையும் அழைத்து அவரிருவருடன்கூடக் கருடன்மேலேறினர். பரதச்ரேஷ்டனே! அம் மஹாவீரர்கள் கோபத்துடன் கருடன்மேலேறிப பாணனைஜயிப்பதற்காக உடனே அவனது நகருக்குச்சென்றார். மஹாராஜாவே! உடனே அவர்கள் அங்கேபோய் அநதச்சோணிதபுரத்தைக்கண்டனர். மதிலினல்சூழப்பட்டதும பொன்மாளிகைகள் நிரம்பினதுமாகிய அந்நகரைக்கண்டு அவர்களனைவரும ஸுதீதாஷத்தையும் மிகுநதஆச்சரியத்தையும் அடைநதனர். சிவன் சுப்பிரமணியக்கடவுள் பத்திரகாளி விநாயகர் என்னும் தேவர்கள் எப்போதும் பாணனுடையநகருக்கு வாயில்காப்பவர்களாயிருநதனர். யுதிஷ்டிரனே! மேலானசக்தியுள்ளவரும் சங்கசக்கரம் கதை கத்திகளைதரிப்பவருமாகிய ஸ்ரீ கிருஷ்ணன் மிகக்கோபமுற்றுத் தமவன்மையினல் வாயில்காப்பவரை ஜயித்துச் சங்கரபகவானல் காக்கபபட்ட வடக்குவாயிலையடைந்தார். அவ்விடத்தில் சிறநதமஹிமையுள்ளவரும் சூலபாணியுமான மஹேசுவரர், வாய்திறநத நமனைப்போலநதிருக்கும கிருஷ்ணனைக்கண்டு பாணனுக்கு நன்மைசெய்யக்கருதிப பினகம்என்னும் வில்லையும் அம்பையும் எடுத்து அந்தவாயிலில்நின்றார். அபபோது வாஸுதேவர் மஹேசுவரர்இருவரும் யுத்தஞ்செய்தனர். அநதயுத்தம் சிந்திக்க முடியாததும மயிர்பொடிக்கச்செய்யும்படி பயங்கரமுமாயிருந்தது. அவ்விருவரும் ஒருவரையொருவர் ஜயிக்கக்கருதி ஒருவரையொருவர் அம்புகளினல்சிதைத்தனர். அப்போது அவ்விரண்டுதேவர்களும் கோபமுற்றுத் திவ்யாஸ்த்ரங்களைப் பொழிந்தனர். ஜனர்த்தனராகிய ஸ்ரீ கிருஷ்ணன் சங்கரபகவானுடன் சற்றுநேரம் போர்செய்து உடனே அவரைஜயித்துப் பிறகு மற்றவாயில்காப்பவரையும் யுத்தத்தில் வென்று அந்தச்சிறந்தநகருக்குள் புகுந்தனர் பாண்டவனே! புகுந்தவுடன் கிருஷ்ணன் அங்கே பாணனைசசந்தித்து மிகக்கோபமுற்று அவனுடன் யுத்தஞ்செய்தார். பரதச்ரேஷ்டனே! பாணனும் அநத யுத்தத்தில் மிகக்கோபித்துக் கூர்மையான ஆயுதங்களெல்லாவற்றை

யும் கண்ணன்மேல் பிரயோகித்தான். அவன் திரும்பவும் அதிகக் கோபத்துடன் போர்த்தலியிலிருந்து தனது எல்லாக்கைகளாலும் கிருஷ்ணன்மேல் ஆயிரப் அஸ்தரங்களை விடுத்தான். பாரதனே! அப்போது ஐம்புலன்கட்குமு எட்டாதவராகிய கிருஷ்ணன் சற்றுநேரம பாணனுடன் யுத்தஞ்செய்து பாணன்பிரயோகித்த அஸ்திரங்கள்எல்லாவற்றையும் துணித்துக் கோபதுடன் எல்லாஅஸ்தரங்களிலுமு சிறநதும் தெய்வத்தன்மையுள்ளதுமாகிய தமது சக்காராயுததை ஓங்கிப் பெருஞசக்தியுள்ள பாணனுடைய ஆயிரங்கைகளையும் அறுததார். மஹாராஜாவே! கிருஷ்ணனுல் கைகளறுக்கபபட்டு மிகப பீடிக்கபபட்டபாணன் உடனே கிளைகளபோன மரம்போல வீழ்நதான். அநதக்கண்ணபிரான் விரைவாகத் தமபாணங்களினுல் அநதப பாணனைவீழ்த்திப பிரத்யுமனன்மைநதனை அநிருத்தனைப பாணன் சிறைச்சாலையிலிருநது உடனே விடுவிதாதார். கிருஷ்ணன் அநிருதனை அவன்மனைவியான உஷாதேவியுடன் விடுவித்துப பாணனுடைய எண்ணிறநத ரததினங்களைனைத்தையும் கொணர்நதார். யதுவம்சதை விளங்கசசெய்பவரான ஸ்ரீ கிருஷ்ணன் பாணன்வீட்டிலிருக்கும பசுக்கூட்டங்களையும மற்றுமுள்ள ஈசுவரியங்களெலலாவற்றையும தம்வன்மையினுல எடுததுக்கொண்டா. மதுஸூதனா ரத்தினங்களெல்லாவற்றையும மற்றுமுள்ள எலலாத்தனங்களையும எடுத்துகருடன்மேல் ஏறறினா. குநதிபுததிரனை ராஜாவே! சிறநதமஹிமையுள்ளவரும பீதாம்பரமதரிததவரும சிறநதபலமுள்ளவரும திவ்யாபரணங்களினுல விசித்திரமாகவினங்கும் அங்கங்களுளளவரும சங்கசக்கரம் கதை கத்திகளைநதினவரும் வீரருமாகிய கிருஷ்ணபகவான் மஹாபலசாலியான பலராமரையும, மஹாவீரனுப சிறநதஒளியுள்ளவனும் பிரதயும்னன் புததிரனுமாகிய அனிருதனையும், உஷையென்னும அழகுளளபெண்ணையும, அவள்வேலைக்காரர் வேலைக்காரிகளையும் கருடன்மேலேறறிய பிறகு ஸூர்யன் உதயமலையில்எறுவது போல ஸநதோஷதுடன் தாமும கருடன்மேலேறினர்.

அறுபத்தோராவது அத்தியாயம்.

அர்க்காஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணனுடைய வேறுபலஜயங்களைச் சொல்லியது.)

பரதச்ரேஷ்டனே! கிருஷ்ணன் துவாரபாலகர்களையும். நிசும்பனையும் நரகனென்னும்அஸுரனையும் கொன்று, பிராக்ஜ்யோதிஷ

புரமென்னும் நகரின்வழியை கேஷமமாகச்செய்தார். (அன்றியும் ருக்மிணிகல்யாணத்தில்) அரசர்கள், கிருஷ்ணனுடைய வில்லெலியினாலும் பாஞ்சஜன்யமுழக்கத்தினாலும் அச்சமுற்றுத்தப்பட்டனர். பரதச்ரேஷ்டனே! மேகநிறமுள்ள தென்தேசத்துப் படைத்தலைவர் அனேகரால்சூழப்பட்ட ருக்மியைக் கிருஷ்ணன் பயமுறுத்தினர். சக்கரத்தையும் கதையையும் தரித்தவராகிய இந்தக்கிருஷ்ணன் மேகம்போன்றதும் ஸூர்யனுக்கொப்பான ஒளியுள்ளதுமான ரதத்தில் போஜன் புத்திரியான ருக்மிணியை மணியாகக்கொண்டுவந்தார். (அப்போது) கோபித்த ஜராசந்தியனும் சிசுபாலனும் ஜயிக்கப்பட்டனர். தந்தவக்கிரனும் சததன்வாளன்னும் அரசனும் இவரால் யுத்தத்தில்கொல்லப்பட்டனர். இந்திரத்யும்னனும் காலயவனனும் கசேருவனும் ஸௌபர்களின்அரசனுகிய ஸால்வனும் வில்வித்தையில்தேர்ந்தவராகிய இந்தக் கிருஷ்ணனால் கோபித்துக் கொல்லப்பட்டனர். இந்தப் புருஷோத்தமராகிய தாமரைக்கண்ணர் தமதுசக்கராயுதத்தினால் ஆயிரம் மஹகளைவிலக்கி த்யுமத்ஸேனனை அடித்தார். பரதச்ரேஷ்டனே! மஹேந்திரமலைச்சிகரத்தில் இமைநொடிபடுதற்குள் வெகுதூரம் ஸஞ்சரித்து காற்புறமும்ஓடுகிறவர்களாகிய (மைநத துவிதர்கள்) என்னும் இரண்டு வானரர்களைப்பிடித்தார். துவாரகாபுரியில் அக்னிக்கும் ஸூர்யனுக்கும் ஸமமானசக்தியுள்ள மஹாபோஜனும் கொல்லபட்டான். ராஜாவே! அக்ஷப்ரம் என்னும் பட்டணத்தில் கிருஷ்ணனை பரிகாசஞ்செய்பவர்களாகிய கோபதி தாலகேதுவென்னும் இரண்டுஅரசர்களும கிருஷ்ணனால் கொல்லபபட்டனர் அவ்விருவரும் அவர்களின் தேசத்திலேயே கிருஷ்ணனால் ஸம்ஹரிக்கப்பட்டனர். அன்பனே! மஹாத்மாவானகிருஷ்ணனால் காசிநகர் எரிக்கபபட்டது. சேர்ந்துவந்த பாண்டியன், புண்ட்ரதேசத்தரசன், மத்ஸ்யதேசத்தரசன், அங்கதேசத்தரசன், கலிங்கதேசத்திரசன் ஆகிய இவர்களனைவரையும் மாதவர்கொன்றார். யாதவச்ரேஷ்டரான இந்தக்கிருஷ்ணன் ஒருதேரால்யாக நூறுகூத்ரியர்களைக்கொன்று காந்தாரதேசத்துப் பெண்ணாகிய தம்மனைவியைக் கொண்டுவந்தார். பரதச்ரேஷ்டனே! பிரபுவான மஹாஸேநனா அர்ஜுனனைக் குந்தியின்முன்னிலையில் வீரயாட்டுக்காக ஜயித்தார். பரதச்ரேஷ்டனான ராஜாவே! யுத்தத்திற்காகச்சேர்ந்துவந்த அசுவத்தாமா, கிருபர், கர்ணன், பீஷ்மஸேனன், துரியோதனன் இவர்களையும் ஜயித்தார். பிதிஷ்டிரா! சக்கரத்தையும் கதையையும் தரித்தவராகிய இந்தக்கிருஷ்ணன், பப்ருவென்னும் யாதவனுடைய விருப்பத்தைச்செய்யக்கருதி வேணுதாரியென்னும்

அரசன்வரித்த பாரியையைப பலாத்காரமாகக் கொண்டுவந்தார். குதிரைகள், தேர்கள், யானைகளுள்ளதும் செல்வம்நிரம்பினதுமானவேணுதாரியின் வசத்திலிருந்த பூமியினதையும கிருஷ்ணன்ஜயித்தார். பாரதனே! தவத்தினல்சூரத்தனத்தையும தேகவலிமையையும் ஜயிக்குந் திறமையையும்பெற்ற பாணஸுரனல் தேவச்ரேஷ்டர்களினவரும் சேனைகளுடன்கூடத துரத்தபபட்டனர். இந்திராதிதேவர்களும் வஜ்ராயுதத்தினலும் இடியினலும் கதைகளினலும பாணங்களினலும் அனேகநதரம அடித்தும பாணனுக்கு யுதத்தில் மரணமுண்டாகவில்லை. அப்படிபபட்ட பாணன் மஹாத்மாவானகிருஷ்ணனல் ஆயிரங்கைகளினயுந்துணிதது வெல்லபபட்டான்; கொல்லபபடவில்லை. சிறந்தகைகளையுடைய இந்தக்கிருஷ்ணன் கமஸனையும கொன்றார். பாரதனே! தவத்தினல் சூரத்தனதையும வன்மையையும் பிறரை வெல்லுந்திறமையையும் அடைந்த கைடபாஸுரனையும் [1]கணக்கிட முடியாத அனேகஅஸுரர்களையும கிருஷ்ணன்கொன்றார். பரதச்ரேஷ்டனே! சிறந்தபுகழ்பெறற கிருஷ்ணன் ஜமபுவையும ஹரவதனியும விரூபனையும் எதிரிகளையழிபபவனுகிய சமபரணியுமகொன்றார். பரதச்ரேஷ்டனே! இந்தத தாமசைக்கண்ணா போகவதியென்னும நாகநகருக்குச்சென்று வாஸுகியைஜயித்து ருக்மிணிதேவியின்மைதனன பிரத்யும்னனைவிடுவித்தார். இந்தககிருஷ்ணன் இளமபிராயமாயிருக்கும போதே பலராமனைததுணையாகக்கொண்டு இவ்வகையான அனேககாரியங்களைச் செய்திருக்கிறார். இந்தபபிரபுவான கிருஷ்ணன் இவ்வாறு அஸுரர்களினவருக்கும பயததையும தேவர்களினவருக்கும் அபயததையுமகொடுததவரும எலலாஉலகங்களுக்கும ஈசுவரருமாயிருப்பவர். சிறநதகைகளையுடைய கிருஷ்ணன் இவ்வாறு கவே துஷ்டர்களெல்லாரையும தண்டிதது தேவர்களின் அளவற்ற காரியத்தை நிறைவேற்றின்பின் திருமபவும தமதுலோகமாகிய வைகுண்டத்தையடைவார். எல்லா ஐசுவரியங்களுமநிரம்பின தும புண்ணியகேஷத்திரமும ஸுரரினபபோலப பிரகாசிபபதுமான துவாரகாநகரத்தைத் தம்வசபபடுததிக்கொண்டிருககும பெருங்கீர்த்திபெற்ற கிருஷ்ணன், முடிவில் தமநகரத்தைக் கடலில்முழுகச்செய்யப போகிறார். அநதத் துவாரகா நகரத்தில் வஸிக்குமஅரசன் கிருஷ்ணனைத்தவிர மற்றொருவன் தேவர்களினும அஸுரர்களினும் மனிதர்களினும் இருந்ததுமில்லை; இருக்கபபோவதுமில்லை. மஹாரதர்களாக விளங்கும விருஷ்ணிகள் அநதகர்களினவரும இறந்தபின் மிக்கஒளி

[1] மூலத்தில் 'அதிலோமாதி' என்றிருக்கிறது.

யுள்ள ஸ்வர்க்கலோகதத்தை அடையபோகின்றனர். தமகட்டளையி னல் யாதவர்களுக்கு இவ்வகையான முடிவைசெய்தபிறகு ஸாவ வியாபியான நாராயணன் தமமுடைய மேலுலகத்தையடைவது திண் ணம. அறிவிறருவட்டாதவரும யாருக்குமவசபடாதவரும விருப பபடிநடபபவரும எல்லாம தமவசதத்திலிருபபவருமாகிய பகவான், குழநதை விளையாடுபபொருளகளால் விளையாடுவதுபோல ஸ்ருஷ்டி முதலிய வியாபாரங்களைச்செய்துகொண்டு ஸுகமாதாஷமாக அவ்வுலக தத்திலிருக்கிறார். பிரபுவான இநதக்கிருஷ்ணன் கர்பபதத்தில்பிரவே சித்தவருமன்று. ஒருவயிறறிலும வலிதத்தவருமன்று. தமது திவ்ய சக்தியினால் எலலாருககும நன்மையைசெய்கிறார். எவ்வாறு நீர்க்கு மிழி நீரிலிருநதுவழுநது நீரிலேயே லயிக்கிறதோ அவ்வாறே ஜங்க மங்களும ஸ்தாவரங்களுமாகிய பொருளகள நாராயணனிடமிருநது எழுநது அவரிடத்திலேயே லயபபடுகின்றன. பாரதனே! சிறநத கைகளையுடைய கேசவனைககண்டறிய யார்க்குமமுடியாது. உலக மெல்லாம தாமாயிருபபவரும எலலாவறறிறகு மேற்பட்டவருமாகிய அவருககுமேல ஒன்றுமில்லை" எனறார்.

அறுபத்திரண்டாவது அத்தியாயம்.

அர்க்காஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(ஸஹதேவன் அரசர்களைநிராகரித்து மரியாதைகளைச்செயததும், அவர்கள் யுத்தஸன்னஹம் செய்ததும்.)

மஹாபலசாலியான பீஷ்மர் இவ்வாறுசொல்லி ஓய்நதார். அநத ஸபையில் ஸஹதேவன் பயன்தரததக மறுமொழியைச சொல்லலா னன். "அரசர்களே! கேசியைக்கொன்றவரும அறிவுக்கெட்டாத பராக்கிரமமுள்ளவருமாகிய கேசவன் என்னால் பூஜிக்கபபெறுவதை எவர்கள் பொறுக்கவில்லையோ அநதவீரர்களின் தலையிலும் என்னால் இநதக்கால் வைக்கபபட்டது. நான்சொலவதறகுச் சரியான மறு மொழிகூறட்டும். அபபடிக்கூறுகிறவனே என்னால் கொல்லபபடத்தக் கவனுவானென்பதில ஸஹதேஹமில்லை. அறிவுள்ள அரசர்கள் யாரா திருநதால் அவர்கள், ஆசாரியரும தாதையும் சிறப்புற்றவரும பூஜைக் கும் காணிக்கைகளுக்கும் உரியவருமான கிருஷ்ணனை நான்பூஜித்த தைபபற்றி ஒபபுக்கொள்ளக்கடவர்கள" என்றான். அறிவிற்சிறந்த வர்களும் கௌரவபபடடவர்களும் பலமுள்ளவர்களும் யோக்கியர் களுமான ராஜாக்களின்ஸபையில் அவ்வாறு ஸஹதேவன் காலைக்

காண்பித்தபோது யாரும் ஒன்றும்பேசவில்லை. அபபோது ஸஹ தேவன்தலையில் பூமாரிபெய்தது. அசரீரவாக்குக்கள, 'சரி, சரி' என்று கூறின.. வரபபோவதையும கடநதுபோனதையும் பேசுகிற வரும் எல்லாச்சநதேகங்களையும் தீர்பபவருமஎல்லாலகங்களுந தெரிந்தவருமாகிய நாரதர் தமதுகிருஷ்ணஜினத்தை உதறிக்கொண்டு, "தாமரையிதழ்போன்ற கண்களையுடைய கண்ணபிராணை எநதமனிதர்கள் பூஜியார்களோ அவர்களை உயிரோடிறநதவராகஎன்று அறிய வேண்டும; அவர்களிடம ஒருகாலும ஸமபாஷணைசெய்யலாகாது" என்று எல்லார்நடுவிலும மிகததெளிவாகச சொன்னார். பிராமமணர்களுடையவும் க்ஷத்திரியர்களுடையவும தராதரமறிநதராஜாவான ஸஹதேவன் பூஜிக்கத்தக்கவரகளைப் பூஜிதது அநதக்காரியத்தை நிறைவேறறினன்.

அந்தக் கிருஷ்ணைபபூஜிததபிறகு சததுருக்களையழிபபவனகிய சிசுபாலன் கோபத்தினால் மிகச்சிவநதகண்களுடன் அரசர்களைப பார்த்து, "நான் இபபோது சேனைத்தலைவனகஇருகிறேன். நாம் யாதவர்களும் பாண்டவாகளும் சோரநதுவநதாலும யுத்தஞ்செய்ய ஸன்னததமாயிருபபோம்; நீங்கள் எது ஸரியென்றுநினைக்கிறீர்கள்?" என்றுசொன்னன். அநதசசேதிதேசத்தரசன் இவ்வாறு அவ்வரசர்களெல்லாரையும தூண்டிவிட்டு அவாகளுடன்சேர்நது யாகத்தைக் கெடுக்க ஆலோசனைசெய்தான. அநதயாகதத்தில் அழைக்கப்பட்டு வநத ஸ்நாதன்முதலானகூட்டத்தாரனைவரும் கோபித்து முகத்தின் நிறம்மாறினவர்களாகக் காணபபட்டனர். தர்மராஜாவுக்கு (யாக மூடிவில்நடக்கும்) அபிஷேகமும கண்ணனுகுபபூஜையும நடவாம லிருக்குமபடி செய்யவேண்டுமென்று அவர்களனைவரும் அபபோது பேசிக்கொண்டனர். எலலா ராஜாக்களும கோபமூண்டு தம்மைத தாமேசிறநதவர்களாக நினைத்ததனாலும் பூஜைபெறுத வெறுபபினாலும் தாங்கள்ஜயிக்கலாமென்ற நிசசயத்தினாலும் ஆலோசித்துப பேசிக்கொண்டனர். வேண்டினவர்களால் தடுக்கபபடும்போது அவர்களின்உருவங்கள், புகைக்குமமாமஸத்திலிருந்து விலக்கப்பட்டுக் காஜிக்கும்சிங்கங்களின் உருவங்கள்போல விளங்கின. மேகபலமேம வேகமாகவுடையதும் வரம்புகடநததும் குறையாததுமான அரசர்களென்னும் அந்தக்கடலைக்கண்டு யுததத்திற்குஎன்னஹாஎசெய்வதாக உடனே கிருஷ்ண்தெரிந்துகொண்டார்.

அர்க்காஹாணபர்வம் முற்றிற்று.

அறுபத்துமூன்றுவது அத்தியாயம்.

சிசுபாலவதபர்வம்.

(ராஜாக்கள்கோபித்ததைக்கண்டு கலங்கின யுதிஷ்டிரரைப் பீஷ்மர்தேற்றினது.)

யுதிஷ்டிரா, பிரளயகாலக்காற்றினால் கிளப்பப்பட்ட கடலைப் போல பயங்கரமாகக் கோபத்தினாலெழுந்ததும் ஸமுத்திரத்துக் கொப்பானதுமான அரசாகூட்டமண்டலத்தையுமகண்டு, புத்திமான களிறசிறந்தவரும் முதியவரும் கௌரவர்களின் பாட்டனருமாகிய பீஷ்மரைநோக்கி, பெருஞசத்தியுள்ளவனும் பகைவரைக்கொல்லுகிறவனுமாகிய தேவேந்திரன் பிருஹஸ்பதியைக்கேட்பதுபோலக் கேட்கத்தொடங்கினர். "பிதாமஹரே! இந்தஅரசர்களென்னும் பெருங்கடல் கோபத்தினால் கலங்கியிருக்கிறது. இந்தவிஷயத்தில் நான் என்ன செய்யவேண்டுமோ அதனை எனக்குச்சொலலும். பிதாமஹரே! எப்படிநடந்தால் நமக்குயாகத்துக்கு இடையூறுவராமலும பிரஜைகளுக்கும் நன்மைதவருமலுமிருக்குமோ அவ்வாறு எல்லாரிடத்திலும் நடக்கவேண்டியதையெல்லாம எனக்கு இப்போது உரைக்கக்கடவீர்" என்றார். தர்மநெறிநின்ற தாமாஜரான யுதிஷ்டிரா இவ்வாறுகேட்டபோது கௌரவர்களின்கூடஸ்தராகிய பீஷ்மர் பின்வருமாறுசொல்லலானார்:—

"கௌரவபுலியே! நீ அஞ்சாதே. நரய் சிங்கத்தைக் கொல்ல வல்லதா? இந்தவிஷயத்தில் நல்லநீதியுள்ளதும அபாயமில்லாததுமான மார்க்கத்தை முன்னமே [1]அவலமபித்திருக்கிறேன். அபபா! சிங்கமதூங்குமபோது நாய்கள எப்படிசேர்ந்து வந்து குரைக்குமோ அப்படி யாதவஸிமமம[2] தூங்கிக்கொண்டிருக்கையில் இவரசர்களெவரும் எதிர்நின்று குரைக்கின்றனர். அன்பனே! தூங்கின சிங்கம விழித்துக்கொள்ளாததனிக்காதவரையில் ஸிம்மத்தினருகில் நாய்கள்கோபித்துக் குரைக்கும. அசசுதர் ஸிம்மத்துகசமபான வர். உனக்கு இது முன்னமேதெரிந்ததுதானே. ஆனால் நான் கிருஷ்ணனைத்துதிக்கவேண்டுமென் றெண்ணுகிறாய். அரசர்களிறசிறந்தவனே! அபபா! கிருஷ்ணன்தூங்குவதனாலேதான் சிற்றரிவாளனும் சேதிதேசத்தரசனுமான சிசுபாலன் இவ்வரசர்களெல்லாரையும்

---

1 "கிருஷ்ணனை ஆசரயித்திருக்கிறேன்" என்பது.

2 கவனியாமலிருக்கையில்.

சேர்த்து யமலோகத்துக்கனுப்பக்கருதித் தான்லிமமமல்லாமலிருக்கையில இவர்களிலிமமங்களாகுகிறான். பாரதனே! இநதச்சிசுபாலனிடத்திலிருக்கும் சக்தியைக் கிருஷ்ணன் திருமபஎடுத்துக் கொள்ளக் கருதுகிறானென்பதுதிண்ணம. புதிமான்களிற் சிறநத வனே! குருகுலத்துக்கு ஒரு ஆபத்து வந்தபோது அதை நீக்கி அதற்கு ஆதரவாயிருந்து அதை ரக்ஷிக்கவேண்டியது உன்னுடைய கடமை. அதனால் நீ இந்தச் சிசுபாலனை ரக்ஷிக்கவேண்டுமென்று சொல்லுகிறாய். ஆனால் இந்தச் சிசுபாலன் தன்னுடைய குலத்துக்கு ஆபத்தை விளைவிக்கிறவனாயிருக்கிறான். ஆகையால் இவனை ரக்ஷிக்கக்கூடாது. இவனை ரக்ஷிக்கவேண்டுமென்று நீ சொல்லுவது தர்மமாக

முதிர்ந்தவனுயிருந்தும் துஷ்கர்மநிஷ்டனாகிறாய். பீஷ்மா! பறவை இவன் குழந்தையாயிருக்குமபோதே இவனுடை கொல்லப்பட்டிருந்தால் இவ் விஷயத்தில் வியக்கத்தக்கது என்ன இருக்கிறது? பீஷ்மா! யுத்தத் தேர்ச்சியில்லாத குதிரையும் கானமாடும் கொல்லப்பட்டிருந்தாலும் அறிவற்ற கட்டையாகிய சகடம் இவன்காலால் தள்ளப்பட்டிருந்தாலும் அதில் என்ன ஆச்சரியமான காரியமிருக்கிறது? எருக்கினளவான அம்மரங்கள் இவனுல்தள்ளப்பட்டதிலும் காளியநாகம் அடிக்கப்பட்டதிலும் என்ன ஆசசரியம் உண்டாக்கப்பட்டிருக்கிறது? பீஷ்மா! புற்றளவான கோவர்த்தனமலை இவனுல் ஏழுநாள தூக்கப்பட்டிருந்தால் அஃது எனக்கு ஆச்சரியமாகத தோன்றவில்லை. பீஷ்மா! இந்தக்கிருஷ்ணன் விளையாட்டாக மலையின்மேலிருந்து மிகுதியான அன்னத்தைப் புஜித்தானென்று நீசொல்லக்கேட்ட (எனதினத்தவிர) மற்றவர்கள் வியபபுறறனர். தர்மநதெரிநதவனே! மிகபலசாலியான எநதக்கம்ஸனுடைய அன்னத்தை இவன்புஜித்தானே அந்தக் கம்ஸனே இவனுல்கொல்லபபட்டானென்பதுமட்டும பெரியஆச்சரியம். பீஷ்மா! குருவம்சததில இழிவானவனே! தாமமே தெரியாத உனக்கு நான் இபபோது சொல்லப்போகிறசொல் பெரியோர்கள் சொல்லுமபோது உன்னுற்கேடகபபடவில்லையென்று நினைக்கிறேன். பெண்கள்மேலும பசுக்கள்மேலும் அநதணர்மேலும் எவனுடைய அன்னத்தைப் புஜிக்கிறானே அவன்மேலும் தன்னை அடைக்கலமாக அடைநதவன்மேலும் ஆயுதங்களைப் பிரயோகிக்கலாகாதென்று தர்மிஷ்டரும அறிஞருமானநல்லோர், எபபோதும் உபதேசிக்கின்றனர். பீஷ்மா! உலகத்திலுள்ள அநதத்தர்மமெல்லாம் உன்னிடத்திற் பயன்படவில்லையென்று தெரிகிறது. கௌரவர்களில் இழிவானவனே! கிருஷ்ணன் அறிவிற்பெரியவனென்றும் பெருமைபொருநதியவனென்றும் எல்லாருக்கும மேறபட்டவனென்றும் துதித்து, தெரியாதவனுக்குரைபபதுபோல எனக்கு உரைக்கிறாய். பீஷ்மா! கோஹத்தி செய்தவனும ஸ்திரீஹத்திசெய்தவனும் உன்சொல்லினுற் பூஜிக்கபபெறுவனு? பீஷ்மா! இவ்வகையானவனெவனும துதிபபதற்குத் தகுதியுள்ளவனு? இவன் அறிஞருட்சிறநதவனென்றும ஈசுவரனென்றும நீசொல்வதனுல் இநதஜனுர்தநதன இவையெல்லாம சரிதானென்று நினைக்கிறான். இவையனைததும பொய்யென்பது திண்ணம். பீஷ்மா! ஜனுர்தநதன் தன்னோதாமே தெரிநதுகொள்ளத் திறமையுள்ளவனுயின் அவன் எதிர்பாராமலிருக்குமபோது நீ எபபடிமரியாதைசெய்ய நினைக்கிறாய். ஒருவன் ஒருக்காதையைப் பலமுறை

உரைப்பினும் அந்தக்காதை அவ்வுரைப்பவனேக்காவாது. பிராணிகள், குலிங்கசகுனியென்னும் பறவைபோலத் தம்மியற்கையையே பற்றும். உண்மையில் உன்னுடைய இந்த இயற்கையே இழிவானது. இதில் ஐயமில்லே. நீ சந்தியின்மகனுபிருப்புதனால் உன்மனம் நிலே தப்பி ஓடுகிறதென்று நினேக்கிறேன். கிருஷ்ணனேப் பூஜிக்கத்தக்க வரிற் சிறந்தவனுகவும் உன்னே அதற்கு உபதேசிபபவனுகவும் பெற்ற பாண்டவர்களின் இயற்கை உன்இயற்கையிலும் மிக்க இழிவான தென்று நினேக்கப்படுகிறது. தர்மந்தெரியாதவனும் பெரியோர்கள் வழியைவிட்டு விலகினவனுமாகிய நீயா தர்மிஷ்டன்? பீஷ்மா! தன்னிடத்தில் தர்மமிருபபதாக நினேத்திருக்கும் எந்த அறிஞரிற்சிறந்தவன் தர்மந்தெரிந்த நீசெய்ததுபோலச் செய்வன்? நீ தர்மத்தை அறிந்திருந்தாலும் உன்மதி தேர்ந்திருந்தாலும பண்டிதனென்று எண்ணிக்கொண்ட உன்னல் மற்றெருவன்மேல் காதல்வைத்தவளும் தர்மந்தெரிந்தவளுமான அம்பையென்னுங் கன்னிகை அபஹரிக்கப்பட்டது எப்படி? பீஷ்மா! உனக்குக் கோபம்வேண்டாம். உன்னல் கொண்டுவரப்பட்ட கன்னிகையைப பெரியோர்களின் வழியைநினேத்த உன்ஸோதரனை விசித்ரவீர்யனென்னும்அரசன் விரும்பவில்லேயே. தெரிந்தவனே! தன்னன்ற அபிமானமுள்ளவனும் யோக்கியர்கள்நடந்த வழியிலிருபபவனுமாகிய நீ ஜீவிதகிருக்கையில் விசித்ரவீரியன் மணவிகளுக்கு மற்றெருவனுலன்றே ஸந்ததிகள்உண்டாயின. பீஷ்மா! உனக்கென்ன தர்மமிருகிறது. இந்தப பிரம்மசாரிவிரதம்பொய். நீ அறியாமையாலேயோ ஆண்மையிலலாமையாலேயோ இதை வஹிக்கிறுயென்பது திண்ணம. தர்மந்தெரிந்தவனே! எந்த விஷயத்திலும உனக்குச்சிறபபிருபபதாக நான்அறியவில்லே. நீ பெரியோர்களே அடிககவில்லே. அதனுல் இவ்வகையான தர்மத்தை உரைத்தாய். தேவர்களேப பூஜிப்பதும் கொடுப்பதும் வேதமோதுவதும் மிகுதியாகத் தக்ஷிணேகளேக்கொடுத்து வேள்விபுரிவதுமாகிய தர்மங்களேந்தும் ஸந்ததியென்னுந தர்மத்தின் பதினுறிலொரு பாகத்திற்கும் ஈடாகா. பீஷ்மா! பலவகைவிரதங்களும் உபவாசங்களுமிருந்து செய்யுங் கருமங்களேந்ததும ஸந்ததியில்லாதவனுக்குப் பயனற்றவையென்பது சாஸ்திரங்களின்துணிபு. பிள்ளேயில்லாதவனும் பிராயமுதிர்ந்தவனுமாகிய நீ, பொய்யானதர்மத்தை உபதேசிப்பதனுல் ஹம்ஸமபோல உன்சுற்றத்தாராலேயே இனி மரணமடைவாய். பீஷ்மா! முற்காலத்திய விஜ்ஞானிகளாகிய சிலமனிதர்கள் சொல்லுகின்ற ஒருகதையை நீ கேட்பதற்காக நான்தெளிவாகச்சொல்வேன். முற்

காலத்தில் தர்மத்தைச்சொல்வதும் அதற்குமாறுக நடப்பதுமான ஒருகிழஹம்ஸம் கடற்கரையிலிருந்தது. அது மற்றபபறவைகளுக்கு உபதேசிப்பது வழக்கம். 'புண்ணியஞ்செய்யுங்கள். பாவஞ்செய்யாதீர்கள்' என்பதே அதுசொல்வதாம். பீஷ்மா! அதைப பக்ஷிகள் கேட்டன. எபபோதும தர்மதையேஉரைபபதான அன்னத்தின் சொல்லைக்கேட்டு எல்லாபபறவைகளும மகிழ்ந்தன. பறவைகளெல்லாம் அவ்வன்னதைச் சுறறிக்கொண்டு, "பக்ஷிகளுள் சரேஷ்டனே! நீ தர்மங்களெலலாம் பறவைகளுக்குத் தொகுதுசொல்; எங்களுக்குச சிறந்ததர்மமயாது என்பதைச்சொல்" என்றுகேட்டன. அதற்கு அந்தஹம்ஸம், "பறவைக்கூட்டங்களே! பிரஜைகளுக்கு ஹிம்ஸைசெய்யாமையே தர்மம. ஹிம்ஸைசெய்வதே பாவம். புண்ணியபாவங்களை இவ்வாறுகவே சுருக்கமாகஅறியவேண்டும்" என்றது. தர்மததில் ஆசையுறற அந்தபபறவைகள் அந்தக் கிழஅன்னத்தின் சொல்லைக்கேட்டு மகிழ்ந்து ஒன்றுசேர்ந்து, "ஐயா! இவ்வுலகில் எந்தபபறவை மிக்கமனஉறுதியுடன் எபபோதும் தர்மத்தைச் செய்கிறதோ அந்ததர்மாதமா சேரும் கதி யாதென்பதை இப்போது எங்களுக்கு விளக்கிசசொலவாயாக" என்று கேட்டன. அதைக்கேடடு அந்தஹமஸம, "பறவைகாள்! நீங்கள் சிறுவர்கள்; அறத்தின் நுட்பத்தைஅறியீர். எவன் இவ்வுலகில் நல்லெண்ணத்தோடு எபபோதும தர்மத்தையேசெய்கிறானோ அவன் தன்வாழ்நாள்முடிவில் தேகத்தைவிட்டு ஸ்வர்க்கம்சேருவான். பக்ஷிகளே! நானும அவ்வாறே முடிவுக்காலதத்தில இவவுடம்பைவிட்டு ஸ்வர்க்கலோகத்திறகுசசெல்வேன். இதுதான் தர்மதன்முடிவு" என்று இவ்வாறுகத் தர்மத்தைபபறறிய பேச்சையே பக்ஷிகளுக்கு வற்புறுத்திப பேசிற்று. பீஷ்மா! அந்தபபறவைகள் எக்காலமும் தர்மத்தைபபற்றியே அதனிடமகேட்டன. பீஷ்மா! அதன்பிறகு கடல்நீரில் ஸஞ்சரிக்கும மற்றபபறவைகள் புண்ணியமபெறுவதற்காக அவ்வன்னத்திற்கு உணவுகளைக் கொணர்ந்தனவென்று நாமகேட்டிருக்கிறோம். பீஷ்மா! அந்தப் பறவைகளெல்லாம் தங்கள்முட்டைகளை அவ்வன்னதினருகில் வைத்துவிடடுக் கடல்நீரில உலாவிக்கொண்டு மகிழ்ந்திருந்தன. ஸ்வகாரியதில் ஊக்கமுற்ற அந்தபபாவியான அன்னம ஜாக்ரதையிலலாமலிருந்த அந்தபபறவைகள் எல்லாவற்றின்முட்டைகளையும் தின்றது. பிறகு ஒருகால் அந்தமுட்டைகள் சூறைக்காறறுவதை மிக்கபுத்திக்கூர்மையுள்ள ஒருபறவை கண்டு ஐயமுற்றது. அந்தஹம்ஸம்செய்யும பாவத்தைக்கண்டு மிகத்துயரமுற்ற

அந்தப்பட்சி அப்பறவைகளெல்லாவற்றிற்கும் நடந்ததைத் தெரிவித்தது. கௌரவச்ரேஷ்டனே! அதன்பிறகு அந்தபக்ஷிகளும் கண்ணுரக்கண்டு அதனருகேசென்று பொய்யொழுக்கமுள்ள அவ்வன்னத்தை அப்போதேகொன்றன. பீஷ்மா! அந்தப்பக்ஷிகள் அவ்வன்னதைக் கொன்றதுபோலவே அவ்வன்னதத்தின் ஒழுக்கத்தை வஹிக்கின்ற உன்னையும இவ்வரசர்கள் சீறிகொல்வர். பீஷ்மா! பாரதனே! புராணகதைதெரிந்த ஜனங்கள் மேற்சொன்ன ஹம்ஸவிருத்தாந்தத்தைபற்றிய ஒருகாதையையும பாடுகின்றனர். அதையும் உனக்குச் சரியாகஉரைப்பேன். அதன்பொருள் 'ஓ! பறவையே! மனமகெட்டிருக்குமபோது மனததூய்மையில்லாத பேச்சைப் பிதற்றுகிறாய். முட்டைகளைப பக்ஷிபபதாகிய இநத உன்செய்கை உன் சொல்லுக்கு மாறுயிருக்கிறது' என்பது.

அறுபத்தைந்தாவது அத்தியாயம்.

சிசுபாலவதபர்வம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணனைநிந்தித்த சிசுபாலனுடே யுத்தஞ்செய்யத் தொடங்கினபீமனைப் பீஷ்மர் தடுத்தது.)

இந்தக்கிருஷ்ணன் [1]தாஸனென்றுநினைதது இவனுடையுத்தஞ் செய்யவிருமபாத மஹாபலசாலியான ஜராஸநதராஜனை நான் வெகுமானிக்கிறேன். ஜராஸநதனைவதஞ்செய்தபோது கிருஷ்ணன்செய்த காரியத்தையும் பீமார்ஜுனாகள்செய்த காரியத்தையும எவன்சரியென்றுமதிக்கிறான்? வாயில்லாவழியாலதுழைநது கபடமாகத் தன்னைப்பிராம்மணனென்று சொல்லிக்கொண்ட கிருஷ்ணனுக்கு ஜராஸந்தராஜாவின்பராக்ரமநதெரியும. தான பிராம்மணர்களுக்குமேவண்டினவனுகநினைத்திருநத மஹாதமாவான ஜராஸநதன் இநதத்துராத்மாவுக்கு முதலிற்கொடுக்குமபடி [2]பாதபததையனுப்பினான். பீஷ்மா! கிருஷ்ணன், பீமன், அர்ஜுனன்இவாகள ஜராஸநதனுல் 'சாபபிடுங்கள்' என்றுசொலலபபட்டனா. கிருஷ்ணன் அதறகுமாறுகச் செய்தான். மூர்க்கனே! நீ நினைகறிறபடி இவன் [3]உலகத்தைபபடைப்பவனுயிருந்தால் தன்னைஏன் உண்மையில பிராமமணனென்றுஅறிய வில்லை? இநதப்பாண்டவர்கள் உன்னுல் பெரியோர்களின்வழியை விட்டு இழுக்கபபட்டும் அதைச்சரியென்றுநினைக்கிறார்களே; இது

---

1 கம்ஸனுக்கடிமை. 2 கால்கழுவுவதற்கு நீர்.

3 பிரம்மதேவர் பிராம்மணரானதால், இவன்பிராம்மணனுயிருக்கவேண்டுமே; அப்படியானுல் இவன்வேஷம் போலிவானென்பதுகருத்து.

வும் எனக்கு ஓர் ஆச்சரியமதான். பாரதனே! மேலும், பெண்தன்மை யுள்ளவனும வயதுமுதிர்ந்தவனுமாகிய உன்னை எல்லாவிஷயங்களுக் கும் உபதேசிபபவனுகபபெறறவர்களுக்கு இஃதுஆசசரியமன்று" என்று சிசுபாலன்சொன்னன். மிகவகோபமாகவும கடுஞ்சொல் லாகவும சிசுபாலன்சொன்னதைககேட்டு, பலவான்களிற்சிறநதவ னும் பாரக்மசாலியுமான பீமலேனன்கோபிததான். இயற்கையில் நீண்டும் அகன்றும தாமரைமலர்போலசசிவநதுமிருக்கும பீமனு டையகண்கள் கோபத்தினுல் இன்னுமதிகமாகச்சிவநதன. பீமலே னன் நெறறியில் மூன்றுபகுபபுக்களாக எழுமபியிருநத புருவநெறிப பை, திரிசூடமலையில் மூனறுபிரிவுகளாகஓடிம கங்கையைபபோல அரசர்களனைவரும கண்டனர். கோபதனிறை பறகளைக்கடிக்கும பீமலேனன்முகம பிரளயகாலதனில எலலாபபிராணிகளையும்விழுங் கத்தொடங்கும யமன்முகமபோலக் காணபபட்டது: கோபம்தாங் காமல் வேகமாகக்கிளமபின பீமலேன சிறநதகைகளையுடையபீஷ்மசே குமாரக்கடவுளைப் பரமசிவன்அடக்குவதுபோல அடக்கினர். ஜன மேஜயசே! பெரியவரானபீஷ்மர் பலவகைச்சொறகளாலதடுத்தபின் னர் அநதபபீமனுடையகோபம அடஙகிறறு. கார்காலம்கடநத பிறகு கொநதளிக்கின்றகருங்கடல கரையைக் கடவாமலிருபபது போலப பகைவரையடகுகிறவனுகிய பீமன் பீஷ்மர்சொல்லைமீறாம லிருநதான். ஜனமேஜயராஜாவே! தன்பராக்ரமத்தில் உறுதியுள்ள வீரனனசிசுபாலன், பீமன்கோபிததபோது கலஙகவில்லை. பீமலே னன் பலமுறை வேகமாகக்கிளமபியும அந்தவீரனனசிசுபாலன், கோபிதத சிங்கம (அறப) மிருகதைத எபபடிமதியாதோ அபபடியே அவனைமதிக்கவில்லை. பராக்ரமசாலியானசேதிராஜன் பயங்கரமான பராக்ரமமுள்ள பீமன்கோபித்ததைக்கண்டு நகைததுக்கொண்டே, "ஓ! பீஷ்மா! இவனைவிட்டுவிடு; விளக்கில்விழுநத விட்டிற்பூச்சி யைப்போல என்பராக்ரமதினுல் இவனளரிநதுபோவதை அரசாக ளனைவரும பாரக்கட்டும" என்றுசொன்னன். அநதச்சேதிராஜன் சொன்னபேச்சைக்கேட்டபிறகு புதிதமானகளிற்சிறநதவரும கௌர வர்களில்சரேஷ்டருமாகிய பீஷ்மர் பீமலேனனைப்பார்த்துப் பின்வரு மாறுசொல்லலானர். "பீமலேன! சிறநதகைகளையுடையவனே! யுத்ததத்தில் தோல்வியடையாதவன்னை இவன் யுத்ததத்திறகழைக்கி றானே; இஃது இவன்ஸ்வபுத்தியன்று; இ'து கிருஷ்ணனுடைய எண்ணம்.

அறுபத்தாறுவது அத்தியாயம்.

சிசுபாலவதபர்வம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் பீமனுக்குச் சிசுபாலன்வரலாற்றைக் கூறியது.)

இவன் சேதிராஜன்வீட்டில் மூன்றுகண்களும் நான்கு கைகளுமாகப பிறந்தான். கழுதைகளுரலுக்கொப்பான குரலினால இரைந்து ஊளையிட்டான். அதனால் இவன்தாய்தந்தையரும சுறறத்தாரும் பயந்தனர். இவனுடைய விகாரரூபத்தைக்கண்டு தாய்தந்தையர்கள் இவனைவிட்டுவிட நிச்சயித்தனர். அப்போது மனைவியோடும் மந்திரிகளோடும புரோஹிதர்களோடும்கூடச் சென்றதையினால் மனங்கலங்கியிருந்த அவ்வாசனபபாரத்தது ஓர் அசரீரவாணியானது "ஓ! ராஜாவே! இந்தஉன்புத்திரன் பெருமைபொருந்தியவனும பலத்தில மிகுந்தவனுமாகப பிறந்திருக்கிறான். ஆதலால், இவனைக்கண்டு பயபபடவேண்டாம். கலங்காமல் குழந்தையைக்காபபாறறு. இவனுக்கு உன்னால் மரணமில்லை. மரணகாலம இபபோது வரவுமில்லை. இராஜாவே! இவனை ஆயுதத்தினால் கொல்லபபோகிறவன்எவனோ அவனும் பிறந்திருக்கிறான்" என்று சொல்லிற்று. இவ்வாறுசொன்னவார்த்தையை அரசன்முதலானவாகள் கேட்டவுடன், அதைச்சொன்னபூதம் அந்தர்த்தானமாயிற்று. புதிதாகனிடமுள்ள ஸ்நேஹத்தினால் துயரப்பட்ட தாயானவள், "என்னுடையஇந்தப்புத்திரனைப்பற்றிய இந்தச்சொல்லைச சொன்னவனுரோ அவனைக் கைகூபபி வந்தனஞ் செய்கிறேன். அந்த மஹிமையுள்ளபுருஷன் தேவனுயிருந்தாலும் மற்ற யாராயிருந்தாலும் எனக்கு மறுபடியும அந்தச்சொல்லை விரிவாகச் சொல்லக்கடவன். இந்தபபிள்ளைக்கு யமனுகபபோகிறவன் எவனென்பதைக் கேட்கவிரும்புகிறேன்" என்றுசொன்னாள். மறைந்திருந்த அந்தப்பூதமானது திரும்பவும், "எவன்மடியில் லெடுத்துக் கொள்ளபபட்டபோது இந்தக் குழந்தையினுடைய இயற்கைக்கதிகமான கைகளிரண்டும் ஈந்துதலை நாகங்கள்போலத் தையில்விழுமோ, நெற்றியிலிருக்கும் மூன்றுவதுகண் எவனைக்கண்டவுடன் மறைந்துபோகுமோ, அவன் இவனுக்கு நமனுவான்" என்று சொல்லிற்று. அந்தக்குழந்தை மூன்றுகண்களும் நான்குகைகளுமாயிருந்ததையும் அசரீரவாக்கு அவ்வாறுசொன்னதையும் கேள்விபபட்டு, பூமியிலுள்ள அரசர்களனைவரும் பார்க்கக்கருதி வந்தனர். அவ்வாசன் வந்த அரசர்களைத் தகுதிப்படி பூஜித்து ஒவ்வொரு ராஜாவின்மடியிலும்

பிள்ளையைவிட்டான். இவ்வாறு அனேகமாயிரம் ராஜாக்களின்மடி களில் தனித்தனியே வரிசையாக அநதக்குழநதை ஏறிற்று; அச ரீரவாக்குச சொன்னபயணே அடையவில்லே. மஹாபலசாலிகளும யாதவர்களுமான ராமகிருஷ்ணர்கள் துவாரகாநகரத்தில் இவ்விஷயத தைக் கேள்விப்பட்டு யாதவகுலத்துப் பெண்ணுகிய தம்தநதையின் ஸஹோதரியைக் காண்பதறகுச சேதிநகரத்துக்கு வநதனர். பல ராமரும கிருஷ்ணனும முறையே அவவரசனுக்கும அவவரசிக்கும வழக்கப்படி வநதனஞசெய்து கேஷமத்தையும ஆரோகியத்தையும விசாரித்து உடகார்நதனர். அபபோது அவ்வரசி அவ்விருவரையும மிக்க அன்புடன் பூஜித்து உடனே தன்பிள்ளையைத் தானே கிருஷ் ணன்மடியில வைத்தாள். அநதக்குழநதையைக் கிருஷ்ணன்மடி யில்விட்ட மாத்திரத்தில் அதிகக்கைகளிரண்டும விழுநதன. அநத நெற்றிக்கண்ணும் மறைநதது. அதைகண்டு அவ்வரசி துயரமும அசசமுமுற்றவளாகி, "கிருஷ்ணு! கிறநதகைகளே யுடையவனே! பயத்தினுல்பீடிக்கபபட்ட எனககு ஒருவரமதருவாயாக. துயரப பட்டவாகளுக்கு ஆறுதலும பயநதவர்களுக்கு அபயமுமளிபபவன் நீயன்றே?" என்றுசொல்லிக் கிருஷ்ணனிடம வரங்கேடடாள். யாத வராகிய கிருஷ்ணன் அவளால இவவாறு சொல்லப்பட்டபிறகு, "அர கியே! தர்மந்தெரிந்தவளே! நீ பயபபடாதே; என்னுல் உனக்குப பயமிராது. என்தநதையின் ஸஹோதரியே! உனக்கு என்னவரம நான் கொடுக்கவேண்டும்; அலலது நான் என்னசெய்யவேண்டும்; ஸாத்தியமாயிருந்தாலும் அஸாத்தியமாயிருநதாலும நீசொல்வதைச செய்வேன்" என்றுசொன்னர். இவவாறு சொலலப்பட்ட அரசி யானவள் கிருஷ்ணனபபார்த்து, "மஹாபலசாலியே! யாதவச ரேஷ்டனே! பிரபுவே! சிசுபாலன்செய்யும பிழைகளை எனக்காகப பொறுபபாயாக; இதுதான் எனக்குவரமென்றறி" என்று கேட்டுக் கொண்டாள். அதறகுக் கிருஷ்ணன், "அத்தையே! இந்த உன்புத் திரன் கொல்லத்தக்க குற்றஞ்செய்யினும் இவனுடைய நூறுபிழை களை நான்பொறுக்கக் கடமைபபட்டிருக்கிறேன். நீ துக்கத்தில் மன த்தை வைக்காதே" என்றுசொன்னர். வீரனை பீமஸேனனே! யாத வர்களுக்கு ஸுகத்தைத்தரும கிருஷ்ணன்தான் தனக்குயமனென்று அறிநதிருக்கும் இந்தபபாவியான சிசுபாலன் அவர் கொடுத்தவரத் தினுல் கர்வமடைநது மதிகெட்டு உன்னை இவ்வாறு யுத்தத்திற்கு அழைக்கிறான்.

அறுபத்தேழாவது அத்தியாயம்.

சிசுபாலவதபர்வம். (தொடர்ச்சி.)

(தம்மையிகழ்ந்த சிசுபாலனையும் அவனுக்குச்சேர்ந்த அரசர்களையும் பீஷ்மர் அவமதித்துப் பேசியது.)

பீமஸேனா! இந்தசசிசுபாலன் யுதத்தில் தோலவியடையாத உண்மை யுதததிற்கழைபபது இவனுடைய சொநதப் புததியினலன்று. லோகநாதராகிய கிருஷ்ணனுடைய எண்ணநதான் இது. குலக்கேடனும் கெட்டகாலததினால மதிகெடடவனுமாகிய இநதச் சிசுபாலன்போல என்னைத தூஷிக்கதததக்க அரசன் இபபுவியில் எவனிருக்கிறான்? சிறநதகைகளையுடைய இநதசசிசுபாலன், இநதக்கிருஷ்ணனுடைய சக்தியின் ஒருபாகமென்பது நிண்ணம். கிருஷ்ணனைவர் இவனிடத்திலுளள அநதபபாகததை மறுபடியும் எடுத்துக் கொள்ள எண்ணங்கொண்டிருக்கிறார். கௌரவச்ரேஷ்டனே! அதனால்தான் இந்தமதிகெடட சேதிராஜன் நம்மெலலாரையும மதியாமல் புலிபோல மிகவும கர்ஜிக்கிறான்" என்று பீஷ்மர்சொன்னர். அப்போது அநதசசேதிராஜன் அநதபபீஷ்மா சொல்லிய பொறுமல் மிக்ககோபத்துடன் மறுபடியும அநதபபீஷ்மருக்கு மறுமொழிசொல்லலானன்.

"பீஷ்மா! நீ கிருஷ்ணனுக்குச்சொலலுகிற மஹிமையெல்லாம் கிருஷ்ணனுக்கு எதிரிகளான எமக்கேயிருககட்டும. நீ ராஜாக்களுக்குத் துதிபாடமபடிக்கும வருதிலையபோல எபபோதும ஓயாமல் இவனை ஸ்துதிசெய்கிறாய். பீஷ்மா! அயலாரைத்துதிபபதில் உன்மனத்திற்கு விருபபமிருக்குமாயின் நீ இநதஜனாத்தனனைவிட்டு ராஜாக்களைத் துதிக்கலாம. ராஜசரேஷ்டனும பாஹலீகதேசாதிபதியுமான இந்தத்தாதனைத் துதி. இவன்பிறக்கும்போதே இநதப்பூமியைபபிளநதவன். பீஷ்மா! வங்கதேசத்துக்கும் அங்கதேசத்துக்கும் அதிபதியும் பலதில் இநதிரனுக்கொபபானவனும சிறநதவில்லவீரப்பவனுமாகிய இநதக கர்ணனைத்துதிகலாம. சிறநதகைகளையுடையவனே! இவனுக்கு இநதததிவ்யகுண்டலங்களும் இளஞ்சூரியனைப் போல ஒளியுள்ளகவசமும உடன்பிறநதவையாகக் கடவுளாலேயே படைக்கப்பட்டிருக்கின்றன. இநதிரனுகொப்பானவனும் ஜயிக்கவேமுடியாதவனுமாகிய ஜாஸநதனை இவன் கைச்சண்டையில் வென்று அவன்தேகத்தையுமகிழித்தவன். பீஷ்மா! மஹாரதர்களும் பிராம்மணச்ரேஷ்டர்களும் துதிக்கதகக்வர்களுமான துரோ

ணரும அசுவத்தாமாவுமானதகபன்பிள்ளைகளிருவரையும் நீ இடை விடாமல் துதிபபாயாக. அதுநன்று. பீஷ்மா! இவ்விருவர்களில் ஒருவர்கோபித்தால் சாசுசங்கள் அடங்கின, இபபுவனியில் ஒன்றும் மிச்சமில்லாமல செய்துவிடுவரென்பது, என்கருத்து. பீஷ்மா! யுத் தத்தில் துரோணருகும அச்வததாமாவுக்கும ஸமமாகயிறகததக்க இவர்களுக்கீடான அரசனைக் கடலசூழ்நதஉலகததில் நான் பார்க்க வில்லை. நீ இவர்களைத துதிகசநினைக்கிறதிலலை. அரசர்க்கரசனும் சிறநத கைகளையுடையவனுமாகிய துரியோதனனையும் அஸ்திரங்க ளில்தேர்நதவனும உறுதியான பராக்ரமமுள்ளவனுமாகிய ஜயதரத னென்னும ராஜாவையும நிமபுருஷர்களென்னும தேவர்களுக்குஆசா ரியனும உலகததிலபெயர்பெறற பராகரமமுள்ளவனுமாகிய துருமனை யும்விட்டு, கேசவனை மஹாவீரனென்று ஏன்சிலாகிக்கிறாய்? பெரிய வரும பரதகுலததவருக்கு ஆசாரியருமாகிய சாரத்வதர்என்றுசொல் லப்பட்ட கிருபாசாரியரைவிடடுக் கேசவனை மஹாவீரனென்று ஏன் சிலாகிக்கிறாய்? வில்லாளிகளிறசிறநதவனும புருஷசரேஷ்டனுமாகிய ருகமிணியைவிடடுக் கேசவனை மஹாவீரனென்று ஏன்சிலாகிக்கிறாய்? பீஷ்மகராஜனையும சிறநதசசதியுள்ள தநதவகராஜனையும பகதத் தனையும யூபகேதுவையும மகததேசாதிபதியான ஜயதஸேனனையும விராடதருபதர்க ளிருவரையும சகுனியையும பிருஹத்பலனையும் அவநதிதேசததரசகளான விநதானு விநதர்களையும் பாண்டியராஜா வும சிறநதவனுமானசுவேதனையும மிக்கபெருமபாக்யமுள்ளசங்கனை யும கர்வமுளளவிருஷஸேனனையும பராகரமசாலியான ஏகலவ்யனை யும மஹாரதனுனகலிங்கதேசத்தரசனையுமவிட்டு, கேசவனை மஹா வீரனென்று ஏன்சிலாகிக்கிறாய்? பீஷ்மா! எபபோதும ஸ்தோத்திர ஞசெய்வதற்கே உனக்கெண்ணமிருநதால சல்லியன்முதலான அரசர் களையும நீஎன்றுதுதிக்கலாகாது? ராஜாவே! தாமங்களேசசொல்லும் பெரியோர்கள் முற்காலங்களில கதைகள்சொலலும்போது நீகேட்ட திலலையென்பது திண்ணம. அதற்கு நான்ஏன்னசெய்யலாம்? பீஷ்மா! தன்னிடமிகழ்வதும புகழ்வதும பிறரையிகழ்வதும புகழ்வதும பெரி யோர்களின் ஒழுக்கமில்லையென்று நீகேட்டிலை. பீஷ்மா! மேலும் புகழத்தகாத இநதக்கேசவனை நீஅறியாமையால் அன்புகூர்நது துதிபபதை யாருமஒபபவில்லை. கம்ஸனுடையஆளாகக் கன்றுமேய் த்த துராத்மாவினிடததில் வீண்அபிமானத்தினால் உலகமெல்லாவற் றையும் நீஎப்படிச்சுமததலாம? பாரதனே! மேலும உன்னுடையஇந் தப்புத்தி தன்னிலைக்குவராது. நீ குலிங்கசகுனியைபபோலென்று

நானே முன்னம்சொல்லியிருக்கிறேன். பீஷ்மா! குலிங்கசகுனி யென்பது இமயமலையின் பின்புறத்திலிருக்கிறது. அதனிடத்தில் எபபோதும் செய்கைக்குமாறுன சொற்களே கேட்கப்படுகின்றன. அது தான் அதிகஸாஹஸம்செய்துகொண்டிருப்பதை நிணையாமல் 'ஸாஹஸஞ்செய்யாதே' என்று எபபோதும்கூறுகிறது. பீஷ்மா! அற்பப்பிராணியான அந்தப்பறவை இரைதின்னும் சிங்கத்தின்வாயி லிருந்து பற்சந்திலகப்பட்டு வெளியில்தெரியும் மாம்ஸத்துண்டை இழுக்கிறது. பீஷ்மா! சிங்கம ஒபபியிருபபதனால் அதுஜீவிக்கிற தென்பது நிச்சயம். பாபிஷ்டனே! அதுபோலத்தான் நீயுமஎபபோ தும் சொற்களைச்சொல்லுகிறாய். பீஷ்மா! அரசர்களிஷ்டப்படுவத னால் நீ உயிரோடிருக்கிறயென்பது திண்ணம். உலகதினில் வெறுக் கத்தக்க செய்கைகளையுடையவன் உன்னைபபோல வேறெருவனு மில்லை" என்றான்.

ஜனமேஜயராஜாவே! சேதிராஜனுடைய அநதக்கடுஞ்சொல் லைக்கேட்டு அந்தபபீஷ்மர் அவன்கேட்டிருக்க, "இவ்வரசர்கள் இஷ் டப்படிவதனாலல்லவோ நான்ஜீவிக்கிறேனும்! நான்இவ்வரசர்களைத் தூரும்புக்குங்கூடச் சரியாக நினைக்கவில்லை" என்றுசொன்னார். இவ் வாறு பீஷ்மர்சொன்னவுடன் அங்கிருந்த அரசர்கள்கூவினார்கள். அவர்களிற்சிலர் ஸாதோஷித்தனர். சிலர் பீஷ்மரையிகழ்ந்தனர். சிறந்த வில்லாளிகளாகிய சிலர் பீஷ்மருடைய அநதச்சொலலைக் கேட்டு, "பாபியும் கர்வியும் வயதுசென்றவனுமான இந்தப்பீஷ்மரை நாம்பொறுக்கத்தகாது. அரசர்களே! இநதக் கெட்டபுத்தியுள்ள பீஷ்மன் யாகப்பசுபபோலக் கொல்லப்படுவதுநலம; எல்லோரும் கோபித்து ஒன்றுசேர்ந்து கட்டைத்தணலினால இவரையெரித்தாலும் எரிக்கலாம்" என்றுகூறினர். இவ்வாறு அரசர்கள்சொன்னதைக் கேட்டபிறகு கௌரவர்களின்பிதாமகரும அறிவில்சிறந்தவருமான பீஷ்மர் அரசர்களைநோக்கி, "சொல்லுக்குமறுமொழி சொலவதில் ஒருமுடிவையும நான்பார்க்கவில்லை. அரசர்காள்! நான்சொல்லப் போவதை முற்றிலும்கேளுங்கள். என்னை யாகபபசுவைபபோலக் கொல்லுவதையாவது கட்டைத்தீயினால்எரிபபதையாவது செய்யுங் கள். இந்தக்கால்முழுமையும் உங்கள்தலையில்வைத்தேன். இதோ கோவிந்தன் எங்களால்பூஜிக்கப்பெறாமப் பின்வாங்காமல் நிறகிறார். உங்களில் யாருக்கு இறக்க மனம்துடிக்கிறதோ அவன் இப்போதே சக்கரத்தையும் கதையையும்ஏந்தின கண்ணனை யுத்தத்திற்கழைக்க லாம். அவன் வீழ்த்தப்பட்டு யதுவம்சத்தவரான பகவானுடைய தேகத்திலேயே பிரவேசிக்கட்டும்" என்றார்.

அறுபத்தேட்டாவது அத்தியாயம்.

சிசுபாலவதபர்வம். (தொடர்ச்சி.)

—⁂—

(சிசுபாலன் கிருஷ்ணனை யுத்தத்திற்கழைத்தபோது அவன் குற்றங்களைக் கிருஷ்ணன்எடுத்துரைக்கக் கேட்டு அரசர்கள்யுத்தத்தினின்றுவிலகியது.)

பெருமபராக்ரமமுள்ளசேதிராஜன் பீஷ்மர் சொல்லைக்கேட்டதும், வாஸுதேவருடன்போர்புரியக்கருதி வாஸுதேவரைநோக்கி, "ஓ! ஜனார்த்தன! உன்னையழைக்கிறேன். என்னுடன் சண்டைசெய்; பாண்டவர்களெல்லாரையும் உன்னையும் இப்போதேகொல்லப்போகிறேன். கிருஷ்ண! பாண்டவர்கள் எவ்விதத்திலும் உன்னுடன்சேர்த்தே என்னல்கொல்லத்தகுந்தவர்கள். அவர்கள் அரசர்களைவிட்டு அரசனல்லாத உன்னைப பூஜித்தனரன்றே? அரசனல்லாதவனும் தாஸனும் கெட்டபுத்தியுள்ளவனும பூஜைக்குத்தகாதவனுமாகிய உன்னைத் தகுந்தவனைபபோலச சிறுபிள்ளைத்தனமாகப் பூஜித்தபாண்டவர்கள் வதைசெய்யத்தக்கவர்களென்பதே என்கருத்து" என்றுசொன்னன். ராஜச்ரேஷ்டரான ஜனமேஜயரே! 'பராக்ரமசாலியான அந்தச்சிசுபாலன் இவ்வாறுசொல்லிப் புலிபோல்இரைந்து எல்லாப்பிராணிகளும்பார்த்திருக்கையில் மிகக்கோபமுற்று எல்லா அரசர்களோடுங்கூட யுத்தஸந்நாஹஞ் செய்துகொண்டு தர்மராஜருடைய யாகத்தைக்கெடுக்கும் எண்ணத்துடன் விரைவாகச்சென்றான். அதன்பிறகு, கேசியைக்கொன்றவரும் பகைவரையழிப்பவருமாகிய கேசவர் சக்கரத்தையும் கதையையும் கையிலேந்திக்கொண்டு தாருகனென்னுமரதியினுல் கொடிகட்டி அலங்கரிக்கப்பட்டதும் ரதங்களுள் உத்தமமான தமதுரதத்தினருகிற்சென்று பீஷ்மரால் கைகொடுக்கப்பெற்று அதன்மேலேறினர். கெட்டஸ்வபாவமுள்ள அந்தச்சிசுபாலனுல் கோபம்மூட்டப்பட்ட அரசர்களனைவரையும் கிருஷ்ணபகவான் ஒற்றைத்தேராளியாக யுத்தத்தில்ஸந்தித்தார். அப்போது கருடக்கொடிகட்டினரதத்திலிருப்பவரும், உதயகாலஸூர்யனைப்போலத் தம்ஒளியினுல் பிறருக்குத் தாபத்தையுண்டுபண்ணிக்கொண்டு வில்லில்நாணேறிடுகிறவரும், உயர்ந்த புஷ்பரதத்திலிருக்கும் இரண்டாவதுமன்மதனைப்போன்றவரும், தாமரைமலர்போன்ற கண்களையுடையவருமான கண்ணபிரானை அரசர்களனைவரும்கண்டனர். அவ்வாறு தம்பராக்ரமத்தினுல் கொளுத்துகிறவர்போல ஸஞ்

சர்களுமகணணங்களும் அரசாகள பரவசாகளாங்கக் கிருஷ்ணனுக்குத் தக்கமரியாதையைச்செய்தனர். ஜனமேஜயராஜாவே! கிறந்த கைகளையுடையவரும் மஸுரச்ரேஷ்டர்களையழிப்பவரும் பகைவர்களானவீரர்களைக்கொல்லுகிறவருமாகிய அந்தயாதவவீரர் அவ்வரசர்களைநோக்கி இன்சொல்லாகச்சொல்லலானர். "அரசர்களே! நீங்கள லெல்லோரும் என்கட்டளையினல் அச்சமறறுச் சேனைகளுடன்செல்லுங்கள். தான்கெட்டஇந்தபபாவி உங்களையும் கெடுக்கலாகாது. இவன் எங்களுக்கு முறறிலும்பகைவன்; யாதவர்களை ஹிம்ஸைசெய்பவன்; யாதவகுலத்துபபெண்ணின்மகனுயிருந்தும் யாதவர்களிடத்திலேயே மிக்கபகைகொண்டாடுகிறன். அரசாகளே! கொடியசெய்கைக்காரனகிய இவன் எனக்குஅதைமகனுயிருந்தும நாம் பிராக்ஜ்யோதிஷநகரத்திற்குச்சென்றதையறிந்து துவாரகையைக்கொளுத்தினன். முன்னே போஜராஜனகிய உக்ரஸேனன் சைவதகமலையில் வினையாடிக்கொண்டிருக்கையில் யாதவர்களினவரையும அடித்தும சிறைபிடித்தும தன்னூருக்குத திருமபிசசென்றன். என்தநதை அசுவமேதயாகத்துக்காக காவலாளிகளின்காபபுடன்விடுத்த குதிரையை யாகத்திற் கிடையூறுசெய்வதறகாக இந்தக்கொடுநினைவுள்ள இவன் 'கொண்டுபோனன். குறறமறற பபருமவன்னுமயாதவனுடைய மனைவி தன்தேசத்திலிருந்து ஸௌவீரதேசத்துக்குபபோன போது அவள்இஷ்டபபடாமலிருந்தும தனது காமமயக்கத்தினல் அவளை எடுத்துக்கொண்டுபோனன். இவன் தனதுமாதாலனுக்குத்தீங்கிழைப்பவனுக மாயையினுலமறைந்து விசாலனுடைய புதல்வியாகிய பத்மையென்பவளை அவள் துயரபபடும்படி குருரர்களையும் அந்தகர்களையும்கொன்று அவர்களின் மனைவிகளையழவைத்துக் கருசதேசததரசனுக்காகக் கொண்டுபோனன். கெட்ட எண்ணமுள்ளஇவன் என்தநதையினல்வரிகசபபட்டவனும் பதிவ்ரதையும் விசாலராஜன்பெண்ணுமான பதரையைப பரபரபபுடன் உள்ளேபிரவேசித்துஎடுத்தான். 'இவன் என்னைஜயிககக்கருதிக் கருசராஜாவுடன் ஸ்நேஹஞ்செய்துகொண்டு ஜராஸநதனையடுத்து எனக்குஇன்னுதவற்றைச்செய்தான். அரசர்களே! அவற்றையெல்லாம் நான் எண்ணமுடியாது. இவ்வாறு 'இவன் யாதவர்களுக்கு எல்லையில் லாததீங்குகள்செய்தவன். இவன் மிகக்கபடமாகவே நம்முடைய விஷயத்தில் அனேககார்யங்களைசெய்தான். 'இவனைக்கொல்லுவதற்குரியகுற்றங்கள் நூற்றை நாமபொறுபபோம்' என்று இவன் தாயாருக்கு நான் செய்த் கொடியசபதங்களினல் நான்கட்டுப்பட்டிருந்

தேன். அவ்வாறுகூவ இவனையழிப்பதற்குரிய குற்றங்கள் நூறும் என்னால்பொறுக்கப்பட்டன. இவனைக்கொல்லுகிறகாலமாகிய இந்த ஸமயத்தில், நான்எவ்வகையிலும் பொறுக்கக்கூடாத பிழைகள் இரண்டுள்ளன. 'யாகதத்துக்குதடையூறுசெய்பவனைக் கொல்வேன்; பாண்டவர்களுக்கு விரோதியைகொல்வேன்' என்ற இரண்டுவகைநிச்சயம எனக்கு இருக்கிறது. அதை நான்எப்படிமாறுவேன்? என்தாயையின்ஸோதரிக்காக மிகப்பெருந்துயரத்தை நான்பொறுத்துக் கொண்டிருக்கிறேன். நெறகாலத்தினால இந்தக்குறைவு இப்போது எல்லாராஜாக்களின் முன்னிலையிலும் நடந்திருக்கிறது. இப்போது என்விஷயத்தில் இவன் அளவுக்குமீறிசெய்தஅக்ரமத்தை நீங்களே பார்க்கிறீர்களலலவா? நீங்கள்பாராமலிருக்கும்போது செய்தவறைகளையும் நீங்களே ஊஹித்துத்தெரிந்துகொள்ளலாம. எல்லாராஜாக்களும்நிரமபின ஸதலில இவன் காவதம்தோடுசெய்த இந்தவதத்திற்குரிய அக்ரமத்தைமட்டும நானபொறுக்கமுடியாது. இறபபதற்கு ஆசையுள்ள இந்தமூடன் ருக்மிணியின்மேல ஆசைகொண்டிருந்தான். சூதரன் வேதமோதலைபபெறுதுபோல இவன்அந்தஇஷ்டத்தைஅடையாமறபோனுன்" என்றார்.

அங்கே சேர்ந்திருந்த அவவரசாகளனைவரும இவ்வாறு சிசுபாலனைப்பற்றிய தூஷணையைக கண்ணன் சொல்லக்கேடடனர். வாஸுதேவருடைய சொல்லைகேடடவுடன் சேதிராஜனியிகழ்ந்தனர். ரதத்தின்நடுவில் சேதிராஜன் கோபத்தோடு வில்லெடுத்து அம்புகளைத் தொடுபபதைக்கேடடுப் பாரததும் அரசர்களனைவரும் மிக்க பயமுறறு, சேதிராஜனைச் சேனைதலைவில விடடுவிட்டு விரைந்துஓடினர். சிறநதபராக்கிரமமுள்ள சிசுபாலன் அநதக்கிருஷ்ணன் சொல்லைக்கேட்டு இரைசசலுளள அட்டஹாஸஞ்செய்து கிருஷ்ணனைபபார்த்து, "கிருஷ்ணை! ருக்மிணியை நான்முதலில்வரித்ததாக ராஜஸபையில் விசேஷமாகச்சொலலியும் நீவெடகப்படாமலிருபப தேன்? மதுஸூதனை! உன்னைவிட வேறுளநந்தப்புருஷன் தன்மனைவியை வேறொருவன் முன்னால்வரித்ததாகஅறிந்து அதைசசான்றோரிடம் விளம்புவன். கிருஷ்ணை! உனக்கு என்விஷயத்தில் விசுவாஸமும் பொறுக்கவிருபபமுமிருநதால பொறு. இல்லாவிட்டால் பொறுதே. நீ கோபமுற்றாலும அணுக்ரஹமுறறாலும் உன்னால் எனக்கு என்ன ஆகும்?" என்றான். ஜனமேஜயரே! அந்தச் சிசுபாலன் அவ்வரசர்களனைவரும் கிருஷ்ணனுடைய மஹிமையினாலேயே வலிமையற்றுக் குதிரைகளோடும் காலாட்களோடும தேர்களோடும யானை

களோடும் ஓடிப்போனதைக்கண்டு கோபத்தினாற் சிவந்தகண்களுடன் விட்டிற்பூச்சி தீயையெதிர்த்துப்போவதுபோல ஒற்றைரதத்தினாலேயே கிருஷ்ணனை எதிர்த்துச் சென்றான்.

அறுபத்தோன்பதாவது அத்தியாயம்.

சிசுபாலவதபர்வம். (தொடர்ச்சி.)

(சிசுபாலனுக்கும் கிருஷ்ணனுக்கும் யுத்தம்ஆரம்பித்தபோது உண்டானதுர்நிமித்தங்களையும் அவற்றின் லக்ஷணங்களையும்பற்றி யுதிஷ்டிரருக்கு நாரதர் உரைத்தது.)

அப்போது புத்திமான்களிற சிறந்தவராகிய யுதிஷ்டிரர், சிசுபாலன் யுத்தத்திற்காக ஸன்னத்தமாகிக்கொண்டிருந்ததைக்கண்டு, நாரதரிடம், "ஓ! மஹரிஷியே! ஆகாயத்திலும் பூமியிலும் எவ்விடத்திலும் உங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. இப்போது அசாகளின் நாசக்குறிப்பாக பூமியிலும் ஆகாயத்திலும் பலவகைகளான எந்த [1]உத்பாதங்களும் அபசகுனங்களும் உண்டாகின்றனவோ அவற்றையெல்லாமபற்றி உம்மிடத்தில கேட்கவிரும்புகிறேன்" என்று கேட்டார். இவ்வாறுகேட்ட சிறந்தபுத்திமானை தர்மராஜருக்குச சிறந்தஅறிவுள்ளவரும பெருமபுகழ்பெறறவருமான நாரதமுனிவர் எல்லாவற்றையும தெளிவாகச் சொல்லலானார்.

"குருச்ரேஷ்டனே! ஜ்யோதிஷசாஸ்திரம் கறறுணர்ந்தவன் கிரஹங்களின் பராக்ரமத்தையும செல்லுமவழியையும சேருதலையும உச்சத்தையும [2]ஆரோஹணத்தையும் ஒன்றையொன்று எதிர்த்துச செல்வதையும கிரணங்கள்சேருவதையும முயற்சியோடிருப்பதையும் நிலைகுலைதலையும காணக்கூடிய கிரஹங்கள்காணப்படாதிருத்தலையும காணக்கூடாதவைகாணப்படுதலையும நீசமடைதலையும ஏற்றக்குறைவுகளையும நிறத்தையும் இடத்தையும் பலாபலங்களையும் முழுதும் பரீக்ஷிக்கவேண்டும். இவ்வுலகத்தில தெய்விகமாக உண்டாக்கப்பட்ட உத்பாதங்கள் பூமியைச்சார்ந்தவை முதலிலும், ஆகாயத்தைச்சார்ந்தவை பிறகும் உண்டாகின்றன. ஸூர்யன் மேற்றிசையிலிருக்கும்போது எல்லாப்பொருள்களின் நிழலும் கிழக்கேதிரும்பாமலிருந்தால் தோல்விக்கு அஃது ஓர்அடையாளம். எப்போது கிராமங்களிலுள்ள தலைமையான [3]மரங்களின்நிழல் வெயிலில்லாமலிருக்கும

---

1 எரிகொள்ளி விழுதல் முதலிய அபசகுனங்கள்.

2 மேற்செல்லுதை; அல்லது அபிவிருத்தி.

3 மூலத்தில் 'சைத்யகாஃ' என்றிருக்கிறது.

போது) பிரதிபிம்பம்போலத் தெளிவாகக்காணப்படுகிறதோ அப் போது பெரிய அச்சதத்தையறியவேண்டும. கிராமங்களின் தலைமை யானமரங்கள் இலைகள்உலர்ந்தும் இலைகளுமதளிர்களும (அகாலத் தில்) உதிர்ந்தும் தூரிர்களைக்கெட்டும போமாயின் அபபோது நாசத் தைச் சொலலவேண்டும. கிராமவிருக்ஷங்கள், செழித்தஇலைகளும் தளிர்களுமுள்ளவையாகவும விருதத்தியடைகிறவையாகவும காணப படுமாயின் அபபோது க்ஷேமத்திறகு ஸுசதேஹமில்லை. பூவின் மேல்பூவும் காயின்மேல்காயும சேர்ந்துண்டாகுமாயின் அபபோது ராஜாவாயினும ராஜாவைபபோன்றவனாயினும மரணமடைவான். கார்காலம சரதகாலம பனிக்காலம வஸந்தகாலம ஆகியஎல்லாக்காலங் களிலும அவவக்காலதத்திற்குரியவையல்லாத மலர்களும கனிகளும உண்டாகுமாயின் தேசசதத்தில கலக்கத்தையுரைக்கவேண்டும். அகா லதத்தில் நதிகளபெருகுவதும மஹாபயதத்திறகுகுறிபபாம். சிலாக் யமான மரமானது பூஜிகபபெறறதாயினும பெருத்தாயினும காறறி னல்முறிக்கவாவது பெயர்க்கவாவது சரய்க்கவாவது பமமாயின் அகனிபயதத்தையாவது வாயுபயதத்தையாவது அறியவேண்டும. சிற ந்தமனிதனுவது அழிந்துபோவான். திசைகளெலலாம எரியுமா யின் ராஜாக்களுக்கு மாறுதல்கள்உண்டாகும. வெடடித்த தள்ளப படடமரம சபதமசெய்யுமாயின் அதனுடன்கூட அநதராஜ்யமே விழுந்துபோகும. ஆதலால, மரத்தைவீழ்த்தலாகாது. மரத்தை ஒருவன்வெட்டிவிபபானாயின் அநதமரம அவன்மேல் அதற்காகக் கோபிக்கும. வெடடினவனும, பெயர்ததவனும அமமரத்திறகுடை யவனும உடனேயழிவார். 'தேவதாவிகரஹங்கள விழுவதும மண்டபங்களிடிவதும மலைகள் அசைவதும தோலவிகருறிகள். இர விவில வானவிலலைக்கண்டாலும அதனலைபெருமபயமுண்டு. பாதச்சே ஷ்டனே! ஆனல், அதைகண்டவனுக்குமடடும பயமுண்டாகுமே யன்றி மற்றவனுக்கு இராது. இரவில் வானவிலலைக்கண்டவன் உட னே அநதத்தேசசத்தை 'விடக்கடவன். 'எங்கே தேவதாவிக்ரஹங கள் ஆடவும கூவவும நகைகைகவும் கண்திறக்கவும் கண்மூடவும் செய் கினறனவோ அந்தத்தேசசத்தில கலகததைச் சொலலவேண்டும.' கற்களினின்றும நீர்க்கசிவுகளும மறறஎவ்வகையான மாறுதல்களும உண்டாகுமாயின் அவை பயதத்திற்குஅடையாளங்கள்; பெரியமனிதர் களாயினும பரிஜனங்களோடுகூடிய அரசனுயினும இறநதுபோவார் கள்; நகரத்தில் வியாதியாவது உண்டாகும; ராஜ்யத்திலும தேசத் திலும் கலக்கங்களாவதுஉண்டாகும். தேவதைகளின் ஆலயங்களி

லும் ராஜாக்களின் அரண்மனைகளிலும் பூஷணசாலைகளிலும் ஆயுத சாலைகளிலும் தேன்கட்டபடுமாயின் அபோது அந்தத்தேசமே மேலானபலவானால் அழிக்கப்படும். அந்தததேசத்தில் திடீரென்று பயமுண்டாகுமென்றே சொல்லவேண்டும். மாத்திலிருந்தும் யானையின்தந்தத்திலிருந்தும் காளைபாடின் கொம்பிலிருந்தும் சிவந்தரதத்தம்பெருகுமாயின், மரத்தில்பெருகுவதனால் தேசமேபோவதும் யானைத்தந்தத்திற் பெருகுவதனால் புரசுமாறுவதும் மாட்டுக்கொம்பிற்பெருகுவதனால் பசுக்களுக்குமபிராமணர்களுக்கும் நாசமுமுண்டாகுமென்று சொல்லலாம் ராஜாவே' ராஜாவின்குடை தரையில் விழுமாயின் அவ்வரசனும அவன்ராஜ்யமும உடனேயழிந்துவிடும். தேவாலயங்களிலும் ராஜகிருகங்களிலும் யானைகட்டுகிற இடங்களிலும வேறுபாடு காணப்படுமாயின் அந்தததேசத்திற்கும ராஜாவுக்கும் ஊருக்கும் பீடையுண்டாகும். கொடிய 'அனுவிருஷ்டிபயத்தையும் பெருமபஞ்சத்தையும சொல்லவேண்டும. தேவதாவிக்ரஹங்களின் கைகளொடிவதனால் கிருஹஸ்தர்களுக்குப பயமுண்டாகும். (அவற்றின்) ஆயுதம்ஒடிந்தால் லேஸுபதி இறபபனென்றறியவேண்டும். புதிதாகவந்த தேவதாவிக்ரஹம ஸ்தாபனத்திற்குள் இடத்தில் நிலைபெறுத்தபபடாமற் போமாயின் அந்நகரதை ராஜாவிட்டுவிடுவான். பூமிவெடித்தாலும சபதமசெய்தாலும் இடிந்துவிழுந்தாலும அந்ததத்தேசதது அரசன் இறப்பான். தேசமும்கெடும. ஏணிபதம, ஸர்பபம், டிண்டிபம, தீபயகம என்னும் பாம்புஜாதிகளைத் தவளைவிழுங்குமாயின் அங்கே ராஜநாசம்உண்டாகும். அன்னமானது ஒன்றும்சேர்க்கபடாமலும சமைக்கபடாமலும் அதிகபடுமாயின் அந்ததத்தேசத்தார் நோயுற்று இறந்துபோவார். அந்த அன்னததை அவர்கள் புசியார். யுதிஷ்டிரா' (தடாகமமுதலிய) ஜலாசயங்களில நீர்பொங்கினாலும, மரமமுதலிய ஸ்தாவரங்களில தண்ணீர்உண்டானாலும் அங்கிருந்துவெளிபபட்டாலும், பெண்கள் காலில்லாமலாவது மூன்றுகால்கள் இரண்டுதலைகள் நான்குகைகளோடுகூடவாவது இருக்கும்குழந்தையைபபெற்றாலும அந்ததத்தேசதத்திற்குத தோல்வியைச்சொல்லவேண்டும். வெள்ளாடுகளும் செம்மறியாடுகளும் பெண்களும் பசுக்களும் மற்றுமுள்ளபலஜாதிகளுமம இயறகைக்கு மாறுனஸந்ததிகளைப் பிரஸவித்தால் அந்ததத்தேசதத்தில் தோல்வி நிச்சயம். நதியானது கலங்கின்ஜல்மாக எதிர்நோக்கிசென்றாலும திசைகள் ஒளியில்லாமற்போனாலும் அவை தோல்விக்குறிகளாம். பாரதனே!

---

1 மழையின்மை.

இவையும் பூமியையும் ஆகாசத்தையும்சேர்ந்த மற்றுமுள்ள சகுனங் களும் கிருஷ்ணனுலேயே உண்டாகின்றன. பாரதனே! சந்திரஸூர் யர்கள், க்ரஹங்கள், நக்ஷத்திரங்கள், காற்று, நீர், நிலம் இவையணைத் தும கிருஷ்ணனிடமிருந்து உண்டானவை. எந்தத்தோசத்துக்குக் குறைவையாவது விருத்தியையாவது கிருஷ்ணன் செய்யவிரும்புகிறு ரோ அந்ததோசத்தில அதற்குதக்க சகுனங்களே இவரேஉண்டு பண்ணுகிறார். அபபா! அநகக்கிருஷ்ணன் இபபோது தமமாலுண் டான நிமித்தங்களாலேயே சேதிராஜனை சிசுபாலனுக்கு நாசம் வந்திருபபதைத்தெரிவிகிறார். ஸந்தேஹமில்லை. ராஜாவே! இதோ பூமிஅசைகிறது. கெட்டகாற்றுவீசுகிறது. பருவமில்லாத காலத தில் ராஹு சந்திரனைபபிடிகிறான். இடிகளோடு எரிகொள்ளிகள் விழுகின்றன. இருள மிகுதியாகஉண்டாகிறது. சிசுபாலனையழிப பதற்காக இந்தக்கிருஷ்ணன் விருத்தியடைகிறார" என்றார். தேவரிஷி யாகிய நாரதர் இவ்வாறுசொல்லி ஓய்ந்தார். புருஷஸிமமங்களான சிசுபாலனுககும கிருஷ்ணனுக்கும அந்தயுத்தம் நேர்ந்தபோது அவ் வரசர்கள பயங்கரமான அனேகம தூர்நிமித்தங்களைக் கண்டனர். பாரதரே! ராஜாவே! அபபோது அவ்விடத்தில் எலலாத்திசைகளி லும் நரிகள் காணபபடடு அமங்களகரமான அவறறின்,ஊளைகளும் கேட்கபபடடன. மரங்களும் காடுகளும மலைகளும் அடங்கின பூமி யனைதும், சபதித்தது. அமாவாஸ்யையல்லாததினத்தில் மதயான னத்தில் ஸூர்யனை ராஹு விழுங்கினன். வீரரே! எல்லாரத் தங்களாலும அலங்கரிக்கபபடட சிசுபாலன்கொடியின்மேல் கூர்மை யான மூக்குள்ளகழுகு ஆகாயத்தினின்றும இறங்கி உட்கார்ந்தது. அந்தயுத்தம் நேர்ந்தபோது காடுகளிலும நாடுகளிலுமுள்ள மிருகங் களும பக்ஷிகளும அங்கே வேகமாக உத்ஸாஹத்தோடு சேர்ந்து பயங்கரமாகக்கூவின. கிருஷ்ணன் கோபித்தபோது பூமியிலும் ஆகா யத்திலும் இவ்வகையான கொடிய தூர்நிமித்தங்கள் காணப்பட்டன.

எழுபதாவது அத்தியாயம்.

சிசுபாலவதபர்வம். (தொடர்ச்சி.)

(சிசுபாலவதம்.)

பிறகு சேதிதேசாதிபதியான சிசுபாலன், பெரியவில்லைநாணே றிட்டு ஹ்ருஷீகேசரான மதுஸூதனரை எதிர்த்துச்செல்லும் போது அவரைப்பார்த்து, "ஓ! மாதவா! எனக்கு நீ ஒரு சத்ருவே

யிருக்கிறாய். ஆகையால், இப்போது உன்னைக் கொன்றுவிட்டுப் பிறகு கடல்சூழ்ந்தபுவனியை ஆள்வேன். வாஸுதேவா! நான் உன்னோடு வெகுகாலமாகவிரும்பின இருதேர்ச் சண்டை எனது பாக்கியத்தினால் இப்போது எனக்குகேர்ந்திருக்கிறது. ஆ! ஆ!! இப்போது உன்னையும பீஷ்மனையும பாண்டவர்களையும்சேர்த்துக் கொல்லபோகிறேன்" என்றுசொன்னன். அந்தச்சிசுபாலன் இவ்வாறு சொல்லி, சாணைபிடிக்கபபட்டுக் கூர்மையானமுனையுள்ள உக்ரமான பாணங்களினால் யுத்தத்தில் கிருஷ்ணனையடிதான். சேதிராஜனுடைய வில்லினின்றும் வெளிபபட்ட கழுகுஇறகுகள்கட்டபபட்ட அந்தஅமபுகள் அரவங்கள மலையிற்பிரவேசிபபதுபோலக் கிருஷ்ணனிடத்தில் பிரவேசித்தன. அந்தசசிசுபாலன் பாணங்களையெடுப்பதற்கும் விடுபபதற்கும் இடையிலுள்ளகாலம் ஆகாயதத்தில் ஸஞ்சரிக்கும் காற்றின்நடைபோல யாவர்க்கும புலப்படாமலிருந்தது. அம்புகளின் கோவைகளென்னும் நீர்த்தாரைகளைவர்ஷிக்கும் சேதிராஜனென்னும் மஹாமேகமானது மலையின்மேல் மேகம்வர்ஷிப்பதுபோலக் கிருஷ்ணன்மேற் பொழிநதது. வீரர்களாகிய சத்ருக்களையழிப்பவரும் சிறந்தகைகளையுடையவருமாகிய கிருஷ்ணன் உடனேதம் சார்ங்கமென்னும விலலில் அமபுதொடுதததுக்கொண்டு ஸுதீக்ஷ்ணமாகி, "ஓ! சேதிராஜாவே! எனதுஉக்ரமான இநதபபெரியபாணம் சிறந்தவஜ்ராயுதம் மலையைபபிளப்பதுபோல உன்னைவிரைவாகப் பிளக்கத்தக்கது" என்று சொன்னார். கோவிநதர் இவ்வாறு சொல்லும்போது சேதிராஜன் மறுபடியும அனேகமகூர்மையான அம்புகளைக் கிருஷ்ணனைக் குறிபபுவைத்து எய்தான். பராக்ரமசாலியான கிருஷ்ணன் அவன்பாணங்களாலடிக்கபபட்டு, தமதுசார்ங்கததை வளைத்துக் கூர்மையான பாணங்களை நூற்றுகணக்காகவும ஆயிரக்கணக்காகவும விடுத்தார். அந்தச்சேதிராஜன் அநதபபாணங்களையும் அம்புகளைபபொழிநது துணிததுவிட்டு உடனே வேறு ஆறுபாணங்ளினால் கிருஷ்ணனையும அடிததான். உலகத்திற்குத தநதையான கிருஷ்ணன் உடனே அஸ்திரத்தைவிட்டார். சிறநதகைகளையுடைய சிசுபாலன் அநத அஸ்திரத்தை அஸ்திரதினாலேயே தடுத்தான். அதன்பிறகு பலமும பராக்ரமமுமுள்ள சிசுபாலன் கோபித்துத் தாழ்நத கணுக்களோடுகூடிய லக்ஷ்மபாணங்களை வஸுதேவபுத்ரரான கிருஷ்ணனைச சுறறிலும்இறைத்துக் கர்ஜித்தான். பகைவர்களான வீரர்களைக்கொல்லுகிறவனான சிசுபாலன் கிருஷ்ணனைநோக்கி, மிக்க கோபத்துடன், "இப்போது என்பாணங்கள் யுத்தத்தில் உன்தேகத்

தைப் பிளக்கப்போகின்றன. உன்னையும் உனதுபுத்ரர்களையும் அமைச்சர்களையும் பராக்ரமசாலிகளான பாண்டவர்களையும் கொன்று சிறந்த புத்தியுள்ள ஜராஸந்தன், கம்ஸன், கேசி, நரகன் இவர்களுடைய கடனையும் அப்படியே தீர்த்துக்கொள்ளப போகிறேன்" என்று சொன்னன். இவ்வாறுசொல்லிக் கோபதாபினால் சிவந்தகண்களையுடைய சிசுபாலன், நாற்புறங்களிலும பாணங்களைவர்ஷித்துக் கிருஷ்ணனை மறைத்தான். பிறகு கிருஷ்ணன் அஸ்திரத்தினாலேயே அனேகபாணங்களையும் அறுத்துப் பாணவர்ஷங்களினால் சிசுபாலனையும மறைக்கதொடங்கினர். மஹாரதர்களான அவ்விரண்டுவீரர்களும மறைந்துபோனதைக்கண்டு அவ்விருவரையும எல்லாப்பிராணிகளும், "நல்லது, நல்லது; இப்படிப்படடயுத்தம் இதற்குமுன் நாங்கள் கண்டதிலலை" என்று புகழ்ந்தன. பிறகு சிசுபாலன் மூன்று பாணங்களினால கிருஷ்ணனை உடனே அடிததான், கிருஷ்ணனும அநதயுததத்தில மூநதுபாணங்களினால் சிசுபாலனை அடித்தார். பலசாலியான கிருஷ்ணன் மறுபடியும எழுபதுபாணங்களினால் சிசுபாலனை அடித்தார். கிருஷ்ணனால் அதிகமாக அடிக்கப்பட்ட சிசுபாலன் கோபம்மேற்கொண்டு கூமையான பாணங்களினால கிருஷ்ணனை மார்பிலடித்தான். அவன் மறுபடியும ஸமயமபார்த்து மூன்று பாணங்களினால கிருஷ்ணனையடிததுக் காயித்தான். பிறகு மிகக் கொடியயுத்தத்தை அவ்விருவரும வேகமாகச்செய்தனர். அப்போது யுத்தத்தில் அவ்விருவரும் நகங்களால புலிகள்போலவும் தநதங்களினால் மஹாகஜங்கள் போலவும் கோரபபற்களினால் சிங்கங்கள்போலவும் கால்களினால கோழிகள்போலவும கூர்மையான பாணங்களினால் ஒருவரையொருவர் பிளநதனர; அப்போது கோபித்து மிகச் சிறந்தசரமாரியைப் பொழிந்தனர். அவஷீரண்டு புருஷச்ரேஷ்டர்களும் பாணங்களாலேயே பாணங்களைத்துணித்து மனிதர்களுக்கு முடியாத பயங்கரமான அஸ்த்ரயுத்தத்தைச் செய்தனர். பராக்ரமசாலியான சிசுபாலன் ஆக்னேயாஸ்த்ரத்தையிடுதான். கிருஷ்ணன் உடனே அதைவாருணாஸ்த்ரதினால் அழித்தார். சிசுபாலன் உடனே சூபோஸ்த்ரத்தைப் பிரயோகித்தான். ஜகத்பிரபுவான கண்ணன் அதைக் சூபோஸ்த்ரத்தினாலேயே விரைவாகஅழிததார். பிறகு காலத்தினால் மதிதப்பின சிசுபாலன் கோபித்து யமாஸ்த்ரதைப்பிரயோகித்தான். கிருஷ்ணன் யமாஸ்த்ரத்தினாலேயே யமாஸ்த்ரத்தையடித்தார். கிருஷ்ணபகவான் கந்தாவாஸ்த்ரத்தினால் கநதர்வாஸ்த்ரத்தையும், மானவாஸ்த்ரத்தினால் மானவாஸ்த்ரத்தையும், வாயவ்யா

தஸ்ரத்திஞல் வாயவ்யாஸ்த்ரத்தையும், சௌத்ராஸ்த்ரத்திஞல்சௌத் ராஸ்த்ரத்தையும், ஐந்திராஸ்த்ரத்திஞல் ஐந்திராஸ்தரத்தைபும், வை ஷ்ணவாஸ்த்ரத்திஞல் வைஷ்ணவாஸ்த்ரத்தையும் அடித்தார். மஹா பலசாலியான அவர்கள் இவ்வாறு அஸ்த்ரங்களைப்பிரயோகித்து யுத் தஞ்செய்தனர். பலசாலியான சிசுபாலன் பிறகு யுத்தத்தில் மாயை யையுண்டாக்கி, கதாயுதங்கள், முஸலங்கள், சக்தியாயுதங்கள், தோமரங்கள், அமபுகள், கோடாலிகள், முசுண்டிகள் இவற்றைக் கிருஷ்ணன்மேற் பொழிந்தான். கேசியைக்கொன்றவராகிய கிரு ஷ்ணபகவான் அவற்றையெல்லாம் வீணுகாதஅஸ்த்ரத்திஞல் அழித் தார். யுத்தத்தில் சேதிராஜன் மிகக்கொடியகல்மழைபொழிநதான். பிரபுவானவர் கோபித்து அதை வஜ்ராஸ்தரத்திஞல் பொடிசெய்தார். அதன்பிறகு சேதிராஜன பயங்கரமான ஜலவாஷ்தரதைப பொழிந் தான். கிருஷ்ணபகவான் வாயவ்யாஸ்திரதிஞல் அதை நூறுகூரு க்கி விலக்கிவிட்டார்.' மஹாரதரானகிருஷ்ணன் சிசுபாலனுடைய மாயைகளெலலாவற்றையுமஅடிததுச் சறறுநேரம அவனுடன் ஸம யுத்தம்செய்தார். தமகோஷன்மகனன அநதச்சேதிராஜன் பாண யுத்தஞ்செய்துகொண்டே கிருஷ்ணனபயமுறுதது, "இபபோது என்பாணங்கள் கிருஷ்ணனைக் கிருஷ்ணனுயில்லாமற்செய்யட்டும்" என்று தூணிவாகச்சொன்னன். துஷ்டபுத்தியுள்ளவனும சிறந்த வீரனுமானசிசுபாலன் இவ்வாறுசொல்லிக் கிருஷ்ணன்மேல் உக்ர மான சரமாரிபொழிநதான். ஒரு நொடிநேரததில் பாணங்களினு லறுக்கப்பட்ட அங்கங்களையுடைய கண்ணபிரான் மதயானையான து மதஜலத்தைப்பெருக்குவதுபோல ரக்தத்தைபபெருக்கினர். மஹாத் மாவானகிருஷ்ணனுடையஸாரதியும் ரதமும மலைகள்போன்ற குதிரை களும் பாணங்களால் மறைக்கபபட்டுக் காணப்படாமற் போயின. கிருஷ்ணன் அநதநிலைமையிலிருநததைக்கண்டு பிராணிகள்கதறின. அப்போது தாருகனென்னும்ஸாரதி யாதவசரேஷ்டரானகிருஷ்ணனை நோக்கி, "மாதவரே! இப்படிபபட்டசண்டையை இதற்குமுன் நான் கண்டதில்லை. உமது பிரபாவத்திஞல் நிற்கலாமென்றுநிற்கி றேன். ஜனார்த்தனரே! இல்லாவிட்டால் என்உயிர்நில்லாது. கோவிந் தரே! ஆதலால், நன்றுகஆராய்ந்து உடனே இவனைவதஞ்செய்யக் கடவீர்" என்றான். இவ்வாறு ஸாரதியினற்சொல்லபபட்டகேசவர், (அவனைநோக்கி,) "இவன் முன்னே தேவர்களுக்குச்சத்துருவும் வரம்பெற்றதனல்கர்வமடைநதவனும அதிகபலசாலியுமான ஹிரண்ய கசிபுவென்னும் அஸுரனுகஇருந்தான். பிறகு அதிக்பராக்ரமசாலி

யான ராவணனென்னும ராக்ஷஸனுகபபிறந்தான். அநதபபலத்தின் வன்மையினுலேதான் மன்பலத்தை மதிக்கவிலலே. இந்தத்துராத் மாவுக்கு ஒவ்வொருகாலதிலும நானே மிமனுயிருபபவன். ஸார தியே! ஆதலால, அச்சபபடவேண்டாம.' நானிருக்குமமேபாது இவ னென்றுமிலலே" என்றுசொன்னரா. கருடக்கொடியையுடையவரான கிருஷ்ணபகவான் இவ்வாறுசொலலிக் கர்ஜித்துப பாஞசஜன்யமென் னுமமஹாசங்கத்தைஊதி மயங்கச்செய்து தமது திவயமானசகரா யுதததை எடுததார். சக்ராயுதகதிலை யுத்தததில் ஸுதீதனுடைய சிரததையறுததார. சிறநதகைகளையுடையசிசுபாலன் வஜ்ராயுதத்தினு லடிக்கபபட்டமலைபோல மீழ்ந்தான். ஜனமேஜயமஹாராஜாவே! உடனே ஆகாயத்திலிருநது ஸுர்யன்உதயமாவதுபோலச் சேரதி ராஜனுடையதேகத்திலிருநது களமபின சிறநதஒளியை அரசர்கள் கண்டனர். ராஜாவே! அநதச்சிறநதஒளியானது அப்போது உல கங்களால்நமஸ்கரிக்கபபெற்றவரும் தாமரைக்கண்ணருமாகிய கிருஷ் ணரிடம வநதனஞ்செய்து அவருக்குப்பிரவேசித்தது. அநதஒளி சிறநதகைகளையுடைய புருஷோததமரிடம பிரவேசித்ததைக்கண்டு அரசர்களனைவரும ஆசசரியமெனறுநினைத்தனர. கிருஷ்ணனுல் சிசு பாலன்கொல்லபபட்டபோது மேகமிலலாமலே ஆகாயம மழைபெய் தது. ஜ்வலித்துக்கொண்டு இடிவிழுநதது. பூமி நடுங்கிறறு. சொல லுக்கெட்டாததான அநதக்காலத்தில் கிருஷ்ணனைக்கண்ட அரசர்க ளில் சிலர் ஒன்றுமபேசவில்லே மற்றுமசிலர் கோபித்துக்கைகளாற கைகளைப்பிசைநதனர். வேறுசிலர் கோபமேறகொண்டு பற்களால் உதடுகளைக்கடிததனர். சிலஅரசாகள் ரஹஸ்யமாகக் கிருஷ்ணனைப் புகழ்ந்தனர். சிலர் மிகக்கோபித்தவராகவும சிலர் மதயஸ்தராகவு மிருந்தனர் மஹரிஷிகள் மகிழ்நது துதித்துக்கொண்டு கிருஷ்ண னிடமசென்றனர். மஹாத்மாக்களானபிரமமணர்களும் மஹாபல சாலிகளான ராஜாக்களுமாகிய அனைவரும் கிருஷ்ணனுடையபராக் ரமததைக்கண்டுஸநதோஷமாகச சிலாகிததனர். தேவகநதர்வக்கூட டங்களும பூமியிற பெயர்பெற்றஅரசர்களும மஹாத்மாவான கிருஷ் ணனுக்கு நமஸ்காரஞ்செய்தனர். இவ்வுலகத்தில க்ஷத்ரியர்களாகப பிறநத அஸுரக்கூட்டததாராகிய அல்பாயுஸுக்களான துராத்மாக் கள்மட்டும் கிருஷ்ணனைநிந்திததனர். பிரம்மமேதவரைசேர்நதவர்க ளும் மஹாதமாவானகிருஷ்ணனிடததில் மகர்ஷிதர்களுமான பிரம்ம ரிஷிகளும் ஸித்தர்களும கந்தர்வர்களும் நாகர்களும் சாரணர்களும் மங்களமானதேவகானங்களால் கிருஷ்ணனைத்துதிததனர்; பலவகை

யாகப் பாடி ஆடினர்; மஹாத்மாவான கிருஷ்ணனிடம் அன்புகூர்ந்து அவரிடம்வந்தனர். மஹரிஷிகளும் பிராம்மணர்களும் மஹாபலசாலிகளான பாண்டவர்களும் மகிழ்ந்து மிகுந்த அன்புடன் துதித்துக்கொண்டு கண்ணனிடம்சென்றனர். தர்மராஜா தம் ஸஹோதரர்களைப்பார்த்து, "தமகோஷன்மைந்தனும சூரனுமான சிசுபாலனுக்குச் சிறப்பாகத் தேக ஸமஸ்காரமசெய்யுங்கள; காலதாமதமவேண்டாம" என்று கட்டளையிட்டார். தர்மபுதரர்சொன்னதைக்கேட்டவுடன் அவர்ஸஹோதரர்களும் பரபரபுடன் அவாகட டளையை அபபோதேநிறைவேறறினர். தர்மராஜர் கிருஷ்ணனுடையகட்டளையினல் அரசர்களனைவரோடும்சேர்ந்து சிசுபாலன்புதானுகுசு சேதிராஜ் யாபிஷேகஞ்செய்தார்.

எழுபத்தோராவது அத்தியாயம்.

சிசுபாலவதபர்வம். (தொடர்ச்சி.)

(ராஜஸூயயாகம் நடந்தவாலாறு.)

பிறகு, சிறந்தபுத்திசாலியான தர்மராஜருடைய யாகமானது இடையூறுகளும் பூஜையைபபற்றின கலகங்களுமஅடங்கி மஹரிஷிகளுடைய கூட்டங்கள் நிரம்பினதாக நடந்தது. சிறந்தகைகளையுடைய கிருஷ்ணபகவான் சார்ங்கத்தையும் சக்கரத்தையும் கதையையும் ஏந்திக்கொண்டு அவ்வேள்ஹியை முடியும்வரையிறகாதகார். அந்தயஜ்ஞம நடக்குமபோது சிறந்தவாக்குள்ள தர்க்கபபிரஸங்கிகள் பிறர்பக்ஷங்களை ஜயிக்கக்கருதினவாகளாய் அனேகயுக்திவாதங்களைப பேசினர். ஜனமேஜயரே! உபேந்திரரான கிருஷ்ணனுக்காகவே ஸஹதேவனல் நடத்தபபட்டதுபோன்ற அந்த யாகத்தின் சிறந்தமுறையை அவ்வரசர்கள் கண்டனர். ஜனமேஜயராஜாவே! அந்தயாகத்தில் பிராமணர்கள் மிக்கவிருப்பத்துடன புண்யகதைகளைச சொல்லிக்கொண்டும் நாடகங்களையும நர்த்தனங்களையும் பார்த்துக்கொண்டுமிருந்தனர். அந்தயாகத்தில் ஒளியினல் ஜ்வலிபபவைபோன்றவையும ஸுர்யனைப்போல்ப பிரகாசிபபவையுமான பொறபணிமங்களினும் செய்யபபட்ட தோரணங்களைக் கண்டனர். நவக்ரஹங்களினல ஆகாயம் விளங்குவதுபோல அந்த யாகபூமியானது அந்தத் தோரணங்களினல் விளங்கிறது. படுக்கைகளும் ஆஸனங்களும் விலையர்ட்டுப் பொருள்களும் குடங்களும் பாணி

களும சாலகளும கலயங்களும ரத்னமயமாகவும மிகுதியாகவு மிருக்கக்கண்டனர். அரசர்கள் அங்கே பொன்னல்லாததொன்றை யும காணவில்லை. பலவகையான இனியவுணவுகளைபபுசிதது ஸந் தோஷபபடும மஹாதமாகளான பிராமமணர்களின் (குரல்) இடை விடாமல் அங்கே கேட்கபபட்டது. 'பரிமாறமேண்டும, பரிமாற வேண்டும' என்றும, 'புசிகமேணடும், புசிகமவேண்டும' என் றும இவ்வகையான பேசசுகளே எபபோதும அங்கே கேட்கப் படடன. அநதமஹாயாகத்தில் ராஜாவின் வேலைக்காரர்கள பலவகை ருசியுள்ள சிதரானனங்களையும பக்ஷணங்களையும இனியபானங்களை யும பிராமமணாகளுக்கு எகாலமும அளிததனர். ஒவவொரு நாளும லக்ஷமபிராமமணர்கள் புஜிததறகடையாளமாக ஏறபடுத தபபட்ட சஙகம்ஊதபபடடது. ஜனமேஜயரே! அநதச சங்கி னுடைய பெருமசபதம அடிகடி கேடகபபடடது; அதைககேடட வர்கள் ஆசசரியமடைநதனர. ஜனமேஜயரே! இவ்வாறு ஸநதோ ஷமும போஜனதிருபதியுமுளள ஜனஙகள்நிரமபின யாகம்நடநத போது குன்றுகளுகொபபான அனேகம அன்னக்குவியல்களையும தயிர்வாய்க்கால்களையும நெய்மமடுக்களையும ஜனஙகள கண்டனர். ஜனமேஜயரே! தர்மபுதிரரின் அமமஹாயாகததில் அனேக தேச ஙகளடஙகின ஜம்புத்தீவு முழுமையும ஒரிடததிற் சேரநததாகக் காணபபடடது. அநதராஜாவின் மஹாயாகததில அனேகமாயிரம அரசர்கள தங்கள வேலைகாராகளைக்கொண்டு தனங்களையெடுத் துக்கொண்டு பலதேசங்களிலிருநது வநதனர. அரசாகள பூமாலை களசூடித் துலக்கபபட்ட ரதன்குண்டலங்களையணிநது நூறறுக் கணக்காகவும ஆயிரக்கணக்காகவுமுள்ள பிராமமணர்களுக்குபபரி மாறினர். ராஜாக்கள்புஜிக்கததருந்த பலவகை அன்னங்களையும பானங்களையும [1]லேஹ்யங்களையும அவவரசர்கள பிராமமணர்களுக் களித்தனர். பலவகைபபக்ஷணங்களையும இனியமலாகளையும் கனி களையும வெல்லங்களையும்நல்லதேன்களையும் அவர்கள் பிராம்மணர் களுக்கு அளித்தனர. பலதேசங்களிலிருநதுவநத பிராம்மணர்க ளனைவரும் அந்தயாகத்தில இவற்றையெலலாம் ஸநதோஷமாகப் புஜித்து எபபோதும மிகுநத திருபதியையடைநதிருநதனர். இவ் வாறு தனங்களும தான்யங்களும மிகுதியாகநிரமபி ஜனங்கள்ஸந தோஷமாயிருநத அந்தயாகசாலையைக்கண்டு அரசர்கள் மிக்க ஆச் சரியத்தையடைநதனர். தர்மராஜருடைய ராஜஸூய மஹாயாகத்

1 நக்கிச் சாப்பிடத்தக்கவை.

திலரிதவிகருகளணவரும சாஸதிரபபடி அகனிகளை வளாதது மூனறதவருமல ஹோமங்களைச் செய்தனர். வியாஸர் தெளமியர் முதலான பதினறு ரித்விக்குக்கள் தர்மாஜருடைய அந்த மஹாயாகத்தில் தம்தம காரியங்களை விதிபபடிசெய்தனர. அந்தயாக ஸதலில் ஆறுவேதாங்கங்களுந தெரியாதவனுமமிருதியான கேள்வியில்லாதவனும நியமநதவறினவனும பிறருக்குக் கற்பிக்கத்தகாதவனும பாவமுள்ளவனும திறமையிலலாதவனுமான பிராமணன் யாருமிருக்கவில்லை. அங்கே லோபியும தரிததிரனுமில்லை. பசித்தவனும துன்பபபடடவனும இழிவானவனுமானமனிதன் எவனுமில்லை. சிறநதபராக்ரமசாலியான ஸஹதேவன் தாமாஜருடைய கட்டளையினல போஜனமவேண்டினவாகளுக்கு எபபோதும போஜனமபோடுவிததான். அகனிகாரியஙகளில் ஸமாததர்களும் சாஸ்திரங்களையே கண்களாகவுடையவர்களுமான ரிதவிக்குக்கள ஒவவொருநாளும எல்லாக்காரியங்களையுமசெய்தனர். வேதங்களும சாஸ்திரங்களுமதிரிநத பிராமமணர்கள் எலலாவிடங்களிலும வாதங்கள்செய்தனர். வாதமமுடிநதபோது எலலாரும அமமஹாயாகத்தில ஸநதோஷமாகஇருநதனர். வேதஸமபன்னர்களான தேவர்கள் பிராம்மணர்கள் மஹரிஷிகளோடுகூடிய அநதயாகவேதிகையானது ஈகூஷதிரங்கள்நிரமபின மாசற்ற ஆகாயம்போலவிளங்கிற்று. சில பிராம்மணசரேஷ்டர்கள் தங்கள் கல்விததிறமையைக் காண்பிபபதறகாகவும் மறறுமசிலர் தாக்களுசெய்வதறகாகவும வேறுசிலர் கல்வி விருப்பதறினலும சிலர்யாகததைபபார்கும்விருப்பத்தினலும் சிலர் பராக்ரமசாலியான தாமாஜாவினிடதத்திலுள்ள பயத்தினலும வநதனர். யாகம் செய்விபபவாகளாக வநதபிராமமணர்களணவரும் தாம தாம யாகஞசெய்து அவபிருதஸ்நானஞ்செய்தவர்கள். சிறந்தபராக்ரமசாலியான ஸஹதேவன் யாகததின் மூழுகுக்காக எல்லாரத்னங்களும் இழைகபபட்ட பொன்யூபஸ்தம்பங்களைச் செய்வித்தான். பொற்பணமரங்களாற்செயீத தோரணங்களை ஜனங்கள் அங்கேகண்டனர். அநதயாகபூமி அநதத்தோரணங்களால் ஆகாயம் கிரஹங்களால்விளங்குவதுபோலவிளங்கிற்று. அநதஸஸதானது பழகின திசையாணைகள்போலவும் ஆதித்யர்கள்போலவும ஒளியுள்ள அநதத்தோரணங்கள் எல்லாத்திசைகளிலும்வைக்கப்பட்டதனலும், கிரீடங்களைத் தரித்தஅரசர்கள் நீருநததனலும் சேபித்தது. சிறந்தபத்திசாலியும் மஹாத்மாவுமான தாமாஜருடைய ராஜஸூயமஹாயாகம், தேவலோகத்திலுள்ளதேவர்களும யகூஷர்களும் நாகர்களும் தேவ

லோகத்திலும் மானிடலோகத்திலுமுள்ள வித்யாதரர்களும் நிரம்பியிருந்ததனால், மிகவிளங்கிறது; கந்தர்வர்களும் அப்ஸரஸ்ஸுகளும் தேவர்களும் முனிவர்களும் யக்ஷர்களுமிருந்ததனால இரண்டாவது தெய்வலோகம் போலவிளங்கிறது; கிம்புருஷ கின்னரர்களின்லங்கீ தத்தினலும் சிறப்புற்றிருந்தது. அங்கே நாரதர் பாடினர். சிறந்த ஒளியுளள தும்புரு விசுவாவஸு சித்ரஸேனன்முதலான லங்கீதவித் வான்களானதேவர்கள் யாகசார்யங்களினிடையில (பாடி) அங்குள்ள வர்களை லங்கீதாவஹிக்கசெய்தனர். பாடியதற்கினியஅழகுள்ளவர் களான அப்ஸரஸ்ஸுகளனைவரும ஒவ்வொருநாளும கிரியைகளின் இடையில் பாடினர்; ஆடினர். வியாகரணசாஸ்திரங்கள்தெரிந்தவர் கள் ஒவ்வொருநாளும கிரியைகளின்இடையில் இதிஹாஸங்களையும புராணங்களையும் கதைகளையும் முழுதும்உரைத்தனர். பேரிகைகள், முரசுகள், மடுகங்கள், கோமுகங்கள், கொம்புகள், புல்லாங்குழல் கள், சங்குகள், வீணைகள் இவை ஆயிரக்கணக்காகக் கேட்கப்பட் டன. இவவுலகத்திலுள்ளபிராமமணர்களனைவரும க்ஷத்ரியவைசிய சூத்ரர்முதலானவர்களும் மிலேசசர்களனைவரும முதலிடைகடை வர்ணங்களைச் சோந்த ஸங்ஸரஜாதிகளெலலாரும அங்கேவந்தனர். பலதேசங்களிலுண்டான பலஜாதியார்களும் வந்திருந்ததனல் இவ் வுலகமேம யுதிஷ்டிரா கிருஹ்ணதில (வந்து) நிரம்பினதுபோலிருந்தது. பீஷ்மரும தரோணரும துரியோதனன் முதலான கௌரவர்களும யாதவாகளும் பாஞசாலாகளனைவரும அந்தயாகத்தில் அடிமைகள் போல எலலாவேலைகளையும செய்தனர். சிறந்தகைகளையுடைய ஜன மேஜயரே! இவ்வாறுநடந்த சிறந்தபுதியுளள தர்மாஜருடைய அந்த யாகமானது சந்திரனுடைய யாகம்போலவிளங்கிறது. தர்மாஜா வானவர் அந்தயாகத்தில பிராமமணாகளுக்கு வஸ்திரங்களையும சால் வைகளையும் போர்வைகளையும் பொன்நாணயங்களையும் பொற்பாத் திரங்களையும் ஆபரணங்களையும நிரமபக்கொடுத்தார். பரதச்ரேஷ் டரானதர்மாஜர் அந்தயாகத்தில் அரசர்களால்கிடைத்த ரத்னங்க ளெல்லாவற்றையும் பிராமமணர்களுக்குஅளித்தனர்.

எழுபத்திரண்டாவது அத்தியாயம்.

சிசுபாலவதபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் யாகத்தைநிறைவேற்றி அவபிருதஸ்நானஞ்செய்து யாகத்திற்கு வந்தவர்களுக்கு விடைகொடுத்தனுப்பித் துரியோதனன்முதலான பிராதாக்களோடுகூடச் சேர்ந்திருந்தது.)

ஜனமேஜயராஜாவே! அதன்பிறகு தர்மராஜாவின் அநதயாகமானது எல்லாக்ரியைகளும குறைவில்லாததாகவும் எல்லாருக்கும் ஸந்தோஷத்தையுண்டுபண்ணுவதாகவும் பெரிய உத்ஸவமாகவும விளங்கிற்று; இடையூறுகள்நீங்கிச் செய்வதற்கெளிதும நிரம்பினதனங்களும்தானியங்களுமுள்ளதும அன்னமும்பக்ஷணங்களும் மிகுதியாகவுள்ளதும் கிருஷ்ணனுல நன்முகக் காபபாற்றபபட்டதுமாக நடநதது. அவ்வாறு ராஜஸூயமஹாயாகததை யுதிஷ்டிரர் நிறைவேற்றினர். மஹாத்மாக்களான பிராம்மணர்களுக்கு ஆயிரம்கோடி திரவியங்களைக்கொடுத்தார். உலகத்தில் மற்றொர் அரசன் அந்தயாகம் செய்யமாட்டான். யாகத்தைச்செய்வித்தவர்கள் வேண்டினஎல்லாவற்றையும தனங்களையுமபெற்று எபபோதும் திருபதியடைந்திருந்தனர். பிறகு பாண்டுபுத்ரரான தர்மராஜர் யாகத்தின் முடிவில் அவபிருதஸ்நானஞ்செய்து வியாஸரையும தெளமியரையும் வஸிஷ்டரையும் நாரதமாமுனியையும ஸுமந்துவையும் ஜைமினியையும் பைலரையும் வைசம்பாயனரையும் யாஜ்ஞவல்க்யரையும் கபிலரையும் கபாலரையும் கௌசிகரையும பூஜ்யர்களான மற்றுமுள்ள சிறநதரித்விக்குக்களையும பூஜிதது, "உங்களுடையஅனுக்ரஹத்தினுல் இந்த ராஜஸூயமஹாயாகம் எனக்கு நிறைவேறிற்று. கிருஷ்ணனுடைய அனுக்ரஹத்தினுல் தான் என்எண்ணம் நிறைவேறிற்று" என்று சொன்னர். யஜ்ஞம முடிநதபிறகு தேவச்ரேஷ்டரான கிருஷ்ணனையும் பலராமரையும் பீஷ்மர்முதலான கௌரவச்ரேஷ்டரையும் தர்ம ராஜர் பூஜித்தார். தர்மாத்மாவான யுதிஷ்டிரர், அவபிருதஸ்நானஞ் செய்தபிறகு பூமிக்கதிபதிகளான க்ஷத்ரியர்களனைவரும் அருகில் வந்து, " தர்மந்தெரிந்தவரே! நீர் அபிவிருத்தியடைந்திருபபது ஸந்தோஷம. ஸம்ராட்என்னும்,ஸ்தானத்தை அடைநதிருக்கிறீர். அஜமீடவம்சத்தவரே!" அஜமீடவம்சத்தாரின்புகழ் உம்மால் பெருகச் செய்யப்பட்டது. அரசர்க்கரசே! இந்த ராஜஸூயயாகம் செய்ததனுல் மிகப் பெரியதர்மத்தைச் செய்ததாகிறது. புருஷச்ரேஷ்டரே!

வேண்டினவை யெல்லாவற்றினும் நன்முகப் பூஜிக்கப்பெற்றோம்; விடைகேட்கிறோம். எங்கள்தேசங்களுக்குச் செல்வோம். அதற்கு அனுமதி கொடுக்கக்கடவீர்" என்று கேட்டனர். மாஜாக்கள்சொன்னதைக் கேட்டபிறகு தர்மாஜாவானயுதிஷ்டிரர் அவ்வரசர்களுக்குத் தகுதியின்படி மரியாதைசெய்து தமது ஸேஹாதரர்களனைவரையும்நோக்கி, "வீரர்களான இந்தஅரசர்களனைவரும் அன்புடன் நம்மிடமவந்திருக்கின்றனர். இவர்கள் என்னிடம் விடைகேட்டுக்கொண்டு தமதம்தேசங்களுக்குச செல்லுகின்றனர். இந்த உததமர்களான ராஜர்களைத் தேசத்தின்எல்லைவரையிற் பின்செல்லுங்கள். உங்களுக்கு ஸுகமுண்டாகட்டும்" என்றுசொன்னர். தர்மத்தைச் செய்கிறவர்களாகிய பாண்டவர்கள், ஜ்யேஷ்டரான தர்மாஜர் சொல்லைக் கேட்டு அவ்வரசர்களனைவரையும் ஒவ்வொருவராக அவரவர்க்குத் தக்கபடி பின்சென்றனர். பராக்ரமசாலியான திருஷ்டத்யும்னன் பரபரபுடன் விராடன் பின்சென்றன். தனஞ்சயன் மஹாத்மாவும் மஹாரதனுமான த்ருபதனை அனுஸரித்தான். பீஷ்மரையும த்ருதராஷ்டிரனையும் மஹாபலசாலியான பீமஸேனன் பின்தொடர்ந்தான். வீரரான த்ரோணரையும அசுவத்தாமாவையும் யுததங்களில்தலைவனான ஸஹதேவன் பின்சென்றன். ஜனமேஜயராஜாவே! ஸுபலனையும் அவன் புத்திரர்களையும் நகுலன் பின்சென்றன். க்ஷத்ரியச்ரேஷ்டர்களான த்ரௌபதியின் புததிரர்களும் ஸுபத்ரையின் புத்திரனான அபிமன்யுவும் மஹாரதர்களான மலைநாட்டரசர்களையும் மற்றுமுள்ள க்ஷத்திரியர்களையும் பின்சென்றனர். ஆயிரக்கணக்கான பிராம்மணர்களெல்லாரும் இவ்வாறே நன்முகப்பூஜிக்கபபெற்றுச் சென்றனர். ராஜச்ரேஷ்டர்களும் பிராமமணர்களுமனைவரும் சென்றபிறகு சிறந்த மஹிமையுள்ள வாஸுதேவர் யுதிஷ்டிரனைநோக்கி, "கௌரவச்ரேஷ்டரே! நான் உம்மிடம் விடைபெற்றுக்கொள்ளுகிறேன். துவாரகைக்குச் செல்வேன். யாகங்களிற்சிறந்த ராஜஸூயயாகததை நீர்நிறைவேற்றினதில் சந்தோஷம்" என்றுசொன்னர். இவ்வாறுசொல்லபபெற்ற தர்மாஜர் ஜனர்த்தனரைநோக்கி, "ஓ! கோவிந்தா! இந்தச் சிறந்தயாகத்தை நான் நிறைவேறபபெற்றது உமதுஅனுக்ரஹத்தினலேதான். க்ஷத்திரியர்களனைவரும சிறந்தகாணிக்கைகளையெடுத்துக்கொண்டு என்னையடைந்து எனக்குட்பட்டிருந்ததும் உம்முடைய அனுக்ரஹத்தினலேதான். குற்றமற்றவரே! நீர்செல்வதைபபற்றி என்வாக்கானது எவ்வாறுவிடைகொடுக்கும? வீரரே! உம்மைவிட்டு ஒருகாலும் நான் ஸுகமடைவதில்லையே. ஆனல் நீர் துவா

ரகாபுரிக்குச் செல்வதும் இன்றியமையாததுதான்" என்றுசொன்னார். தர்மாத்மாவும் பெரும்புகழ்பெற்றவருமான கிருஷ்ணன் இவ்வாறுசொல்லப்பெற்று அன்புகூர்ந்த யுதிஷ்டிரருடன்கூடவே குந்தியிடம்சென்று, "அத்தைமீ! உன்புத்திரர்கள் இப்போது ஸாம்ராஜ்யமென்னும் பதத்தைபபெற்றனர்; ஐயத்தையும் தனத்தையும் அடைந்தனர். அதனல் நீ ஸந்தோஷத்தையடையக்கடவாய். உன்னுல்விடைகொடுக்கபபெற்று நான் துவாரகைக்குப்போக விரும்புகிறேன்" என்றுசொன்னர். பிறகு கிருஷ்ணன் ஸுபத்ரையையும் த்ரௌபதியையும்கண்டு பிரியம்பாராட்டினர். யுதிஷ்டிரருடன்கூடவே அந்த அந்தப்புரத்திலிருந்து புறபபட்டு ஸ்நானஜபங்களைச்செய்து பிராம்மணர்களைக்கொண்டு ஸ்வஸ்திவாசனஞ் செய்வித்தார். பிறகு சிறந்த கைகளையுடைய தாருகனென்னும்ஸாரதி மேகத்தின் வடிவம்போல விளங்குவதும் சுன்றகு அலங்கரிகபபட்டதுமான தேரைப்பூட்டிக்கொண்டு வந்துசேர்ந்தான். சிறந்தமனமுள்ள தாமரைக்கண்ணர் சிறந்த கருடக்கொடியோடிவந்த ரதத்தைக்கண்டு பிரதக்ஷிணஞ்செய்து அதன்மேலேறித் துவாரகாநகரத்திற்குப புறபபட்டார். தர்மராஜாவும் ராஜலக்ஷ்மிபொருந்தினவருமான யுதிஷ்டிரர் தம்பிமாருடன் கூடச் சிறந்தவலிமையுள்ள கிருஷ்ணனைக் கால்நடையாகப பின்சென்றார். தாமரைக்கண்ணராகிய கண்ணன் சிறந்ததேரைச் சிறிதுநேரம நிறுத்திக்கொண்டு குந்திபுத்ரரான யுதிஷ்டிரரைநோக்கி, "அரசே! நீர் எப்போதும் ஜாக்ரதையாயிருந்துகொண்டு பிரஜைகளைக் காக்கக் கடவீர். பிராணிகள் மேகத்தையும் பறவைகள் பெருமரத்தையும் தேவர்கள் இந்திரனையும் போல உறவினர் உம்மை அடுத்திருக்கக்கடவர்" என்றுசொன்னர். கிருஷ்ணனும் யுதிஷ்டிரரும் ஒருவரோடொருவர் இவ்வாறு ஸம்பாஷணைசெய்துகொண்டபிறகு ஒருவரிடத்தொருவர் விடைபெற்றுக்கொண்டு தம்தமகிருஹங்களை நோக்கிச் சென்றனர். ஜனமேஜயராஜாவே! யாதவச்ரேஷ்டரான கிருஷ்ணன் துவாரகைக்குச் சென்றபோது ராஜாவாகிய்துரியோதனன் [1]ஒருவனும் ஸுபலன்மகனான சகுனியும் ஸுதனுக்கும் ராதைக்கும்புத்ரனான கர்ணனும் துச்சாஸனன் முதலியோரும், விரும்பத்தக்க சிறப்புக்கள் எல்லாவற்றினுலும் நிரம்பப் பூஜிக்கப்பெற்று அந்தத்திவ்யஸபையில் பாண்டவர்களுடன் இருந்தனர்.

சிசுபாலவதபர்வம் முற்றிற்று.

---

[1] ஏகோதர்யோதனः என்ற பாடம்கொள்ளப்பட்டது.

எழுபத்துமூன்றுவது அத்தியாயம்.

தீயூதபர்வம்.

(வியாஸர்விடைகேட்டுக்கொண்டுசென்றபிறகு தர்மராஜர் புரப்பாவேசஞ்செய்தது.)

சிறந்தவில்லாளிகளான பாண்டவர்கள் ராஜாக்களுடன் பின் சென்றபிறகு பாண்டவர்களில் மூத்தவரும் தர்மராஜருமாகிய யுதிஷ்டிரரிடம் வந்தனர். சிறந்தகைகளையுடைய தர்மபுத்திரர் ஸஹோதரர்களுக்கும் நண்பர்களுக்கும் விடைகொடுத்தனுப்பினார். வியாஸர் தம்சிஷ்யர்களால் சூழப்பெற்றவராய்த, தர்மராஜர்எதிரில்வந்தார். ஸஹோதரர்களாற்சூழப்பட்ட அந்தத்தர்மராஜரும் ஆஸனத்திலிருந்து விரைவாகஎதிர்கொண்டுசென்று பாத்யத்தையும ஆஸனத்தையும்அளித்ததத தமது பிதாமகரானவியாஸரைப பூஜித்தார். வியாஸ பகவான் பொன்மயமான சிறந்த ஆஸனத்திலுட்கார்ந்து தர்மபுத்திரரான யுதிஷ்டிரரையும் 'உட்காரலாம' என்றுசொன்னர். பலவிஷயங்களைபபற்றியும் பேசுவதில் ஸமர்த்தரான வியாஸபகவான், ஸஹோதரர்களாற்சூழபபட்டு உட்கார்ந்திருந்த தர்மராஜரைநோக்கி, "ஓ! குந்திபுத்திரனே! பெறுதற்கரிதான ஸாமராஜ்யமென்னும் ஸ்தானத்தைப்பெற்று நீ விருத்தியடைவது நல்லகாலம. குருவம்சத்தை வருத்திப்பவனே! கௌரவர்களெல்லாரும் உன்னல் சிறபபிக்கப்பெற்றனர். ராஜனே! நான் பூஜிக்கபபெறறேன். உன்னிடம் விடைகேட்டுக்கொண்டு செல்வேன்" என்றுசொன்னர். வியாஸரால் இவ்வாறு சொல்லப்பெற்ற தர்மபுத்திரரானயுதிஷ்டிரர தமது பிதாமகரை அபிவாதனஞ்செய்து கால்களைபபிடித்துக்கொண்டு, "மனிதர்களிற்சிறந்தவரே! யாராலும்தீர்ப்பதற்கரிதான ஒருஸந்தேஹம் எனக்குண்டாயிருக்கிறது. பிராம்மணச்ரேஷ்டரே! அதற்கு (நிச்சயம்) கூறுவதற்கு உம்மைவிட வேறுயாருமில்லை. பிதாமஹரே! திவ்யம் ஆந்தரிக்ஷம பார்த்திவம் (பூமியிலுண்டானது) என்றுமூன்றுவகை உத்பாதங்களைப் பகவானான நாரதமுனிவர் சொல்லியிருக்கிறார். அவற்றிற்கு மிகப்பெரியபயன் விளைவதுதிண்ணம். சிசுபாலனிறந்ததனால் அந்தப பெரியஉத்பாதபயமானது அடங்கிற்று?" என்றுகேட்டார். பராசரபுத்ரரும் ஸமர்த்தரும் கிருஷ்ணத்வைபாயனரென்னு பெயர்பெற்றவருமான வியாஸர் தர்மராஜருடைய சொல்லைக்கேட்டுப் பின்வருமாறு மறுமொழிகூறலானார் :—"ராஜனே! பதின்மூன்றுவருஷங்கள்வரை

யில் தூர்நிமித்தங்களின்பலன் பெரிதாயிருக்கும். மனிதர்க்கதிபதியே! இந்தஉத்பாதம் எல்லாக்ஷத்திரியர்களும அழிவதற்குக்குறிபபாம். பரதச்ரேஷ்டனே! நாளடைவில் உன்னியேகாரணமாகக்கொண்டு பூமியிலுள்ளக்ஷத்திரியர்கள்சேர்ந்து தூர்யோதனன்செய்தகுற்றத்திற்காகப் பீமார்ஜுனர்களுடையபலத்தினால நாசமடைவர். அரசக்கரசே! அந்தக்காலம் நேரும்போது நீ ஒரு கனவுகாண்பாய். யுதிஷ்டிரா! அதனை நான் உனக்குச்சொல்வேன்; தெரிந்துகொள். அரசாகரசே! ரிஷபக்கொடியுள்ளவரும் நீலகண்டரும [1]பவரும் ஸ்தாணுவும கபாலமேந்தினவரும் திரிபுரர்களையழித்தவரும் உகரூபமுள்ளவரும் ருத்ரரும் பசுபதியும மஹாதேவரும் உமாகாந்தரும் ஹரரும் [2]சர்வரும் 3 விருஷரும் சூலத்தையும் பினாகமென்னும்வில்லையும் ஏந்தினவரும் தோலாடை உடுத்தவருமாகிய சிவபெருமான் கைலாஸசிகரத்துக்குச் சமானமான விருஷபதகிலேறிக்கொண்டு யமனுடைய திசையான தென்திசையை இடைவிடாமல் நோக்கிச்செலவதாக இரவின்முடிவில்காண்பாய். மனிதர்க்கதிபதியே! இவ்வகையானஸ்வப்னத்தை நீ காணபோகிறாய். அதைபற்றிநீசிந்தையுறாதே. காலம கடக்கமுடியாததன்றோ? உனக்குநன்மையுண்டாகக்கடவது. நான்கைலாசமலைக்குசெல்வேன். நீ ஸம்புலன்களையும்அடக்கி ஜாக்கிரதையோடிருந்து ராஜ்யபரிபாலனம செய்யக்கடவாய்" என்றார். கிருஷ்ணத்வைபாயனரென்று சொல்லபபட்ட அநகவியாஸபகவான் இவ்வாறுசொல்லிச் சிஷ்யர்களோடும பின்செல்லுமரிஷிகளோடும கைலாஸத்துக்குச் சென்றார். தர்மராஜா தமது பிதாமஹரானவியாஸர் சென்றபிறகு சிந்தையும் வியஸனமுமுற்று அவர் சொன்னவிஷயத்தையே பல முறைநினைத்து உஷ்ணமாகபபெருமூச்செறிந்து, "விதியை மாணிட சக்தியினால்வெல்லுவது முடியுமா? மஹரிஷிசொன்னது தவறுமலே வந்துதீரும்" என்றுநினைத்தார். சிறந்தமஹிமைபெற்றயுதிஷ்டிரர் உடனே ஸஹோதரர்அனைவரையுமேநோக்கி, "ஓ! புருஷபபுலிகளே! த்வைபாயனர் எனக்குச்சொன்னதை நீங்கள்கேட்டீர்களன்றோ? அவர்சொன்னதைக்கேட்டபோதே என்புத்தி மரணமடையநிச்சயம்செய்தது. எல்லாக்ஷத்திரியர்களுடையஅழிவுக்கும் நானன்றோ காரணமாகக் காலதத்தினால் உண்டாக்கப்பட்டேனென்று அவர் நினைத்தது. அபபா! ஜீவித்திருப்பதனால எனக்குப்பயன்யாது?" என்றுசொன்னர். "இவ்வாறுசொலலுகின்ற தர்மராஜாவுக்குப் பற்குனன், "ராஜாவே! புத்தியைக்கெடுக்கும் கொடியகலக்கத்தில் நீர்

1 ஏன்றுமிருப்பவர். 2 தெறஅடிப்பவர். 3 அபீஷ்டங்களை வர்ஷிப்பவர்,

பிரவேசிக்கவேண்டாம். மஹாராஜாவே! நன்ருய்ஆராய்ந்து எது யுக்தமோ அதைச்செய்யக்கடவீர்" என்றுசொன்னன். பிறகு ஸத யத்தில் உறுதியுள்ளயுதிஷ்டிரா ஸஹோதராதளனவர்க்கும வியாஸா சொன்னதைச்சொல்லினா; அதைப்பறறியே நினைத்தனர். "ஸஹோ தரர்களே! உங்களுக்கு ஸுகமுண்டாகக்கடவது. இன்றுமுதல நான் செய்த பிரதிஜ்ஞையைக்கேளுங்கள. நண்பர்காள்! நான் ஜீவித்திரு பபதின்பயன்யாது? இன்றுமுதல் பதின்மூன்றுவருஷகாலம் என் ஸஹோதரர்களையும மற்றஅரசர்களையும, கடிந்து பேசமாடடேன். என்குலத்தோரின் கட்டளையிலிருந்துகொண்டு அவாகளுக்குததக்க படி பேசிகொண்டு கூடியிருபபேன். இவ்வாறுநடக்கின்றனைகு என்பிள்ளைகளிடத்தும மற்றவர்களிடத்தும வேறுபாடியாது. உல கத்தில கலகம வேறுபாட்டினலதான்உண்டாவது. மனிதர்களிற சிறந்தவர்களே! சண்டையைத தூரத்திலேயேதடுத்து இனியகாரிய ங்களேயேசெய்து உலகத்தில் நிந்தைக்குஆளர்காமலிருபபேன்" என் றுசொன்னர். தமது ஜ்யேஷ்டஸஹோதரான யுதிஷ்டிரருடைய அந்தச்சொல்லைக்கேடடு அவருடைநன்மையில் ஊகைமுள்ளபாண்ட வர்கள் அவரையேஅதுக்கொண்டனர். பரதச்ரேஷ்டரான ஜன மேஜயராஜாவே! தாமராஜாவானவர் ஸபையின்முன்னிலையில் தம் ஸஹோதரர்களுடன் இவ்வாறுநிசயஞசெய்து கிரமமாகப பிதிர் தர்ப்பணமும் தேவபூசையும்புரிந்து மங்களகாரியங்களேசெய்து கூடதிரியச்ரேஷ்டர்களெல்லாரும சென்றபிறகு ஸஹோதரர்களா லும் அமைச்சர்களாலும் சூழபபெற்றவராய்த் தமதுசிறந்தநகரத்திற பிரவேசித்தார். ஜனமேஜயமஹாராஜாவே! துரியோதனனும ஸப லன்புத்ரனுனசகுனியும் அந்த அழகானஸபையின்கண்ணே இருந் தனர்.

எழுபத்துநான்காவது அத்தியாயம்.

த்யூதபர்வம். (தொடர்ச்சி.)

(துரியோதனன் ராஜஸூயஸபையில் தமோறி, பொறமையுற்றுச் சகுனியிடம் முறையிட்டது.)

புருஷச்ரேஷ்டரான ஜனமேஜயரே! அந்தஸபையிலிருந்த துரி யோதனன் சகுனியுடன்கூட அந்தச்சபையை மூழுதும்வரிசையாக பார்த்தான். கௌரவச்ரேஷ்டனுன துரியோதனன் ஹஸ்தினுபுரத் தில் இதற்குமுன் தான்கண்டிராத தெய்விகவிஷயங்களைக் கண்டான்,

அந்தத்துரியோதனமஹாராஜன் ஒருகால் அந்தச்சபைநடுவில் படிகத்தளவரிசையுள்ளவிடத்திற்குச்சென்று ஜலமென்றுநினைத்து மதிமயங்கித் தன்வஸ்திரத்தைதூக்கிக்கட்டிக்கொண்டான். அதனால் துயரமடைந்து யாருக்கும்முகங்கொடாமல் அந்தசபையைச்சுற்றித்திரிந்தான். பிறகு, மேடுபள்ளந்தெரியாமல் தரையில்விழுந்ததனால் துயரமும் வெட்கமுமுற்றுப பெருமூசசெறிந்துகொண்டு வெறுப்புடன் அந்தச்சபையில ஸஞ்சரித்தான். அதன்பிறகு, படிகமபோலத்தெளிந்த நீருள்ளதும் படிகத்தாமரைமலர்களால் சோபிப்பதுமாகிய வாவியைத் தரையென்றுநினைத்து ஆடையோடு ஜலத்தில விழுந்தான். அந்தத்துரியோதனன் ஜலத்திலவிழுந்ததைக்கண்டு மஹாபலசாலியான பீமசேனனும் வேலைக்காரர்களும் நகைத்தனர். தர்மராஜாவின்கடட்ளையினால் அவனுக்குவேலைக்காரர்கள் உயர்ந்தவஸ்திரங்களைக்கொடுத்தனர். அவன் அவ்வாறிருக்கக்கண்டு மஹாபலசாலியான பீமஸேனன் அர்ஜுனன் நகுல ஸஹதேவர்களனைவரும் சிரித்தனர். பொறுமைக்காஞனதுரியோதனன் அவர்களுடைய பரிஹாஸத்தைபபொறுக்கவில்லை. தன்எண்ணத்தை வெளிக்காட்டாமலிருப்பதற்காக அவன் அவர்களைக்கண்ணெடுத்துபபாராமலிருந்தான். திரும்பவும் ஜலதத்தைத்தாண்டுகிறவன்போல வஸ்திரதைத்தூக்கிக் கட்டிக்கொண்டு நிலத்தில அடியைதூக்கிவைத்தான். அதனால் எல்லாஜனங்களும மறுபடியும்நகைத்தனர். படிகக்கதவினுல் மூடப பட்டவாயிலைபபாராதது அதில்நுழையும்போது துரியோதனன், தலையிலடிபட்டுக் கலங்கிநின்றான். அதுபோலவே 1பெரும்படிகக் கதவுள்ள மற்றொருவாயிலைக் ங்ககளினால இடித்துத்திறக்கும் போது வாயிலுக்குவெளிபபட்டு முன்னேவீழ்ந்தான். மறுபடியும் அவன் திறந்திருந்தவேருவாயிலையடைந்து அதை முன்போன்றதே என்றுநினைத்து அந்தவாயிலிலிருந்துதிரும்பினான். ஜனமேஜயமஹாராஜாவே! அந்தத்துரியோதனராஜன் அவ்விடத்தில் இவ்வாறு பல வகைஏமாறுதல்களையடைந்து பாண்டவர்களால் விடைகொடுக்கப் பெற்று ராஜஸூயமென்னும் மஹாயாகத்திலுள்ள அந்தஆச்சரிய மானஸம்பத்தைப்பார்த்ததினால் துயரமுற்றமனத்துடன் ஹஸ்தினபுரத்திற்குச்சென்றான். பாண்டவர்களின்செல்வத்தினால் கொதிப்புற்று அதையே நினைந்துகொண்டுசெலவுகின்ற துரியோதனராஜனுக்குக் கெட்டஎண்ணமுண்டாயிற்று. ஜனமேஜயரே! பாண்டவர்கள் மனம்

---

1 இலகுவாகத்திறக்கக் கூடியகதவுகளே மிக்கபலத்துடன் இடித்ததிறந்ததனால் வெளியில் விந்துவிழுந்தான்.

களித்திருந்ததையும் அரசர்கள் அவர்களுக்குவசப்பட்டிருந்ததையும் சூழநதைமுதல் எல்லாஜனங்களும் அவர்களிடமஅன்புவைத்திருந் ததையும் மஹாத்மாக்களான பாண்டவாகளின் சிறநதமேன்மையை யும்கண்டு திருதராஷ்டிரன்மைநதனான துரியோதனன், நிறம்மாறிப் போனன். அவன்செல்லும்போது மனம்கலங்கி, சிறந்தபுத்திமானான் தர்மாஜருடைய அநத ஒப்பற்றஐசுவரியதையும ஸபையையுமே தனிமையில்நினைந்துகொண்டிருநதான். திருதராஷ்டிரபுத்ரனான துரி யோதனன் அபபோது மதிகலங்கி அடிக்கடிபேசுகின்றசகுனிக்கு மறுமொழிகூறவில்லை. அவ்வாறுகலங்கிநின்றதுரியோதனனைக்கண்டு சகுனியானவன், "துரியோதனா! பெருமூசசெறிகிறவன் போலச் செல்லுகிறாய்; இதற்குஎன்னகாரணம்?" என்றுகேட்டான். அதற் குத்துரியோதனன், "மாமா! இநதபபூமிமுழுமையும மஹாத்மா வான அர்ஜுனனுடைய அஸ்திரபதாபதனால், ஜயிக்கப்பட்டு யுதிஷ்டிரனுக்கு உட்பட்டுபபோனதையும் யுதிஷ்டிரனுடைய அம் மஹாயாகம அவ்வாறுநடநததையும தேவர்களில் இந்திரன்போல யுதிஷ்டிரன் மிகுநதமஹிமையுள்ளவனு மிருநததையுமகண்டு பொ றுமையால்நிரபபபபட்டு இரவும்பகலுமஎரிக்கபபட்டவனாக, ஆனி ஆடிமாஸங்கள்வநதபோது சிறியதடாகமவறறுவதுபோல்வற்றுகிறே ன்; பார். யாதவசிரேஷ்டனானகிருஷ்ணனால் சிசுபாலன்கொல்லப்பட் டான். அந்தசசபையில் அநதசசிசுபாலன் அடியைத்தொடரும் ஆண் பிள்ளை யாருமில்லாமற்போனன். பாண்டவர்களிடமிருநதுண்டான தீயினால்சுடபபட்ட அரசர்கள், அநதக்குற்றத்தைப்பொறுத்தனர். அதை யார்பொறுக்கத்தகும? அநதத்தகாதபெருங்காரியம கிருஷ்ண னால்செய்யப்படடது. மஹாத்மாக்களான பாண்டவர்களின்பராக் கிரமத்தினால் அதுநிலைததது. அதனாலேதான் ராஜாக்கள்பலவகை ரத்னங்களோடுகூடியதுதக்ஷிணாண்டு வைசியர்களைப்போலக் கபபமகட்டிக் குருநதிபுத்ரனான தர்மாஜாவைலேவிததனர். அவவாறுதர்மாஜாவிட த்தில் ஜ்வலிபபதுபோலப்பிரகாசிதத அநதராஜ்யலக்ஷ்மியைக்கண்டு அநதத்தகுதிபெறுதநான் பொறுமையின்கையில் அகபபட்டுக்கொ ண்டு தாபமுற்றிருக்கிறேன்; தீயிலாவதுகுதிப்பேன்; விஷத்தையா வதுதின்பேன்; ஜலத்திலாவதுவிழுவேன்; ஜீவிக்கமாட்டேன். உல கத்தில்பராக்ரமமுள்ள எநதஆண்பிள்ளை, எதிரிகள்விருத்தியடைந் திருக்கவும் தான்குறைந்திருக்கவும்கண்டு பொறுபபான? அவர் களுக்கு அபபடிப்பட்டஐசுவரியம்வந்திருப்பதைக்கண்டு இபபோது பொறுத்திருக்கிறநான் பெண்ணுமல்லேன்; பெண்ணல்லாதவனுமல்

லேன்; ஆணுமல்லேன்; ஆணல்லாதவனுமல்லேன். பூமிக்கெல்லாம் ஈசுவரனுமிருபபதையும் அப்படிப்பட்டதனஸம்பதையும் அவ்வகை யானயாகத்தையும்கண்டு என்போன்றவன் எவன்தாபமடையாம விருப்பன்? நான் ஸஹாயமின்றி அந்தராஜ்யலக்ஷ்மியைஅபகரிப்பதற் குச் சக்தனல்லேன், ஸஹாயம யாருமிருப்பதாகவும்தெரியவில்லை. ஆதலால், இறப்பதைப்பறறியே நிணைக்கிறேன். யாராலும்தெடுக்கப் படாத பரிசுத்தமானஜீவரியம் குந்திபுத்ரனிடமிருப்பதைக்கண்டு, தெய்வமேமவலியதென்றும், முயற்சிபயனற்றதென்றும் நிணைக்கிறேன். ஸுபலபுத்திரனே! முதலிலேயே அவனியழிபபதறகு நான்முயன் றேன். அவற்றையெல்லாங்கடநது ஜலத்தில்தாமரைபோல அவன் வளர்நது கிளமபினன். அதனல், விதியேபெரியதென்றும முயற்சி பய னற்றதென்றும் நிணைக்கிறேன். திருதராஷ்டிரன்புத்திராகள் குறைந்து போகின்றனர். பாண்டவர்கள் நாளுக்குநாள் விருத்தியாகின்றனர். கிருஷ்ணன் அவர்களிடம் அன்புகூர்நது அவர்களுக்குச்செல்வங்களை விருத்திசெய்கிறன். ஆதலால், நான் அநதஜீச்வரியதையும் அவ் வகையான அந்தசசபையையும் காவலாளிகளசெய்த அநதபரிஹா ஸத்தையும் பார்த்நத தீயினுல்சுடபடுவதுபோலச் சுடப்படுகிறேன். மாமா! மிக்கதுயரமுற்றஎன்னை இபபோது ஈவிட்டுவிடு. எனக்குள்ள ஆறறுமையைத் திருதராஷ்டிரருக்குத்தெரிவி" என்றுசொன்னன்.

எழுபத்தைந்தாவது அத்தியாயம்.

த்யூதபர்வம்.—(தொடர்ச்சி.)

(துரியோதனனும் சகுனியும் சூதாடுவதைப்பற்றிப் பேசிக்கொண்டது.)

சகுனி, "துர்யோதனனே! நீ யுதிஷ்டிரனைப்பற்றிப பொறுமை ப்படத்தகாது. பாண்டவர்கள் எப்போதும் தங்கள்பாகங்களையே தாம் அனுபவிக்கிறார்கள்! விதி பலவகைக்களாகஇருக்கிறது. அவர் களுக்கு விதியினுல் மேன்மையுண்டாயிருக்கிறது. மஹாராஜாவே! பகைவரையடக்குகிறவனே! முன்னே நீ அனேக உபாயங்கள்செய்ய ஆரம்பித்தும் உன்னுல் அவர்களைப் பீடிக்கமுடியவில்லை. புருஷச் ரேஷ்டர்களான பாண்டவர்கள், அவர்கள் அதிருஷ்டத்தினுலேயே (ஆபத்துக்களினின்றும்) விடுபட்டனர். முயற்சியுள்ளமனிதர் தம்காரி யங்களில் இகழ்ச்சியடையார். அவர்களுக்குத் திரௌபதி பார்யை யாகக் கிடைத்தாள். துருபதனும் அவன்புத்ரர்களும் சிறந்தசக்தி

யுள்ள கிருஷ்ணனும் அரசர்களும் துணைவர்களாகக் கிடைத்தனர். ராஜனே! (பிறருடைய) காரியத்தைக்கெடுக்காமல் தங்கள் பிதாவின் பாகத்தை அவர்களடைந்தனர். அஃது அவர்களின்சக்தியினுல் அபிவிருத்தியடைந்தது. அதில் (உனக்கு) என்ன துயரமிருக்கிறது? தனஞ்சயன் அக்னிபகவானை திருப்திசெய்வித்துக் காண்டவத்தையும் பெரிய அம்பறாத்துணிகளையும் திவ்யாஸ்திரங்களையு மடைந்தான். அந்த உயர்ந்தவில்லினுலும தன் கைவன்மையினுலும் அவன் ராஜாக்களை வசப்படுத்தினன். அதில உனக்கென்ன துயரமிருக்கிறது? பகைவரைத் துன்புறச்செய்கிறவனுகிய அந்தஸவ்யஸாசி மயனென்னு மஸுரனை அகனியிலிருந்துவிடுவித்து அவனுல் அந்த ஸபையைச் செய்வித்துக்கொண்டான். அந்தமயனுல் நியமிக்கப்பட்ட கிங்கரர்களென்னும் பயங்கரமான அரக்கர்கள் அந்தசசபையைக் காக்கின்றனர். அதில் உனக்கென்ன துயரம்? பாரதனே! ராஜனே! உனக்குச் சஹாயம யாருமில்லையென்று சொன்னுயே; அது பிழை. இந்தச் சகோதரர்களனைவரும உனக்குடபட்டிருக்கின்றனர். சிறந்த வில்லாளியும வீரருமான துரோணரும அவர்புதரான அச்வத்தாமாவும் உனக்குடபட்டிருக்கின்றனர. ஸுதனுக்கும் ராதைக்குமபுத்ரனுன கர்ணன் உறுதியானவில்லாளி; மஹாரதன். அவன் ஒருவனே பாண்டவர் ஸோமகர்களெல்லாரையும் யுத்தத்தில் வெல்லத்தக்கவன். சிறந்தகைகளையுடையவனே! வேறுசஹாயங்களால் நீ செய்யபபோவது யாது? புருஷச்ரேஷ்டரான பீஷ்மரும் மஹாரதரானகிருபரும் பலசாலியான ஜயத்ரதனும் ஸோமதத்தனுமம நானும என்ஸஹாரதரும் ஸோமதத்தன்புதனுமாகிய எங்களெல்லாருடனும சேர்ந்து பூமிமுழுமையையும் நீ ஜயிக்கக்கடவாய்" என்றுசொன்னன். அப்படிச் சொல்லியதைக்கேட்டுத் துரியோதனன், "ராஜனே! உனகது இஷ்டமிருந்தால் உன்னுடைய நீசொன்னமறற மஹாரதர்களோடும சேர்ந்து இந்தப்பாண்டவர்களை நான்ஜயிபபேன். இவர்களை ஜயித்தேனேயாயின் பூமியும அரசர்களனைவருமமக்க விலைபெற்ற அந்தச் சபையும் என்வசமாகிவிடும்" என்றுசொன்னன். அதறகுச சகுனி, "தனஞ்சயன், கிருஷ்ணன், பீமஸேனன், யுதிஷ்டிரன், நகுலன், ஸஹதேவன், துருபதன், அவன்புத்திரர்கள் இவர்களை யுத்தத்தில் வெல்வதற்குத் தேவர்கூட்டங்களாலுமுடியாது. எல்லாரும் மஹாரதர்கள்; சிறந்தவில்லாளிகள்; அஸ்திரங்களில் தேர்ந்தவர்கள்; யுத்தத்தில் அடங்காதகர்வமுள்ளவர்கள். ராஜனே! எந்தஉபாயத்தினுல் யுதிஷ்டிரனை நான் ஜயிக்கமுடியுமோ அந்தஉபாயம் எனக்குத்தெரி

யும். நீ அதையறிந்து நடத்துவாயாக" என்றுசொன்னான். துர்யோதனன், "மாமா! நமக்கு வேண்டியவர்களுக்கும் மற்றுமுள்ள மஹாத்மாக்களுக்கும் தீங்கில்லாமல் அவர்களை ஜயிக்கமுடியுமாயின் அதை எனக்குச்சொல்" என்றுகேட்க, சகுனி, "யுதிஷ்டிரன் சூதாட்டத்தில் ஆசையுள்ளவன். அவனுக்கு ஆடதெரியாது. ராஜச்ரேஷ்டனை அவன் நாமழைத்தால் வராமலிருக்கமாட்டான். கௌரவனே! நான் ஆட்டத்தில்தேர்ந்தவன். எனக்குநிகரானவன் பூமியிலும் மூன்றுலோகங்களிலுமே இல்லை. நீ அவனை சூதுக்கழை. புருஷச்ரேஷ்டனை ராஜனே! பாச்சிகைகளிலிருப்பனாகிய நான் அவனுடையராஜ்யத்தையும அந்த விளங்குமஹாசுவரியத்தையும் உனக்காக வாங்கிவிடுவேனென்பது திண்ணம. தாயோதனா! இவற்றையெல்லாம் நீ திருதராஷ்டிர மஹாராஜாவுக்குத் தெரிவி. உன்தந்தையினால் உத்தரவுதொடுக்கப்பட்ட பிறகு அவர்களை ஜயமின்றி ஜயிப்பேன்" என்றுசொன்னான். துரியோதனன், "ஸௌபலனே! கௌரவச்ரேஷ்டரான திருதராஷ்டிரருக்கு நீயே காரணங்களுடன் தெரிவிப்பாயாக. நான்தெரிவிப்பது முடியாது" என்றுசொன்னான்.

எழுபத்தாறுவது அத்தியாயம்.

த்யூதபர்வம். (தொடர்ச்சி.)

(துரியோதனனாலும் சகுனியினாலும் சூதாடவைத்துப்பற்றித் தெரிவிக்கப்பட்ட திருதராஷ்டிரன் ஸபைக்குவிடுவித்து, தர்மராஜாவை அழைத்துவரும்படி விதுரரையனுப்பியது.)

மிகக் கெட்டபுத்தியுள்ள சகுனி ராஜாவான யுதிஷ்டிரருடைய அந்த ராஜஸூயயாகத்தைத் துர்யோதனனுடன்கூடப்பார்த்து ஹஸ்தினபுரத்திற் பிரவேசித்தான். பாபஞ்செய்பவனும் அரசர்களையழிப்பவனும், கெட்டபுத்தியுள்ளவனுமாகியசகுனி, துரியோதனனுடைய துயரத்தைக்கண்டு பரதவம்சத்தார் கெடுவதற்காக அவனுடைய அபிப்பிராயமே சரியென்று மனத்தில் உறுதியாகவைத்துக்கொண்டான். துரியோதனன் விருபபத்தைச்செய்கிறவனுகிய சகுனி அவன்சொல்லைக்கேட்டு அவன்கருத்தையறிந்துகொண்டு அறிவே கண்ணாகவுடையவனும் சிறந்தபுத்திசாலியுமான திருதராஷ்டிரமஹாராஜன் வீற்றிருக்கும்போது அவனருகிற்சென்று, "மஹாராஜவே! மனிதர்களுக்கதிபதியே! துரியோதனன் நிறம்மாறி வெளுத்து இளைத்து துயரத்தையும் விசாரத்தையுமடைந்திருக்கிறான். அதையறியும்.

உமது ஜ்யேஷ்டபுத்திரனை துரியோதனனுக்குத் தாங்கக்கூடாத மனத்துயரம பகைவரால உண்டாயிருபபதை நீர் விசாரிக்கஷில்லீ; ஏன் தெரிநதுகொளளாமலிருககிறீர ?" என்றான். சகுனியினால் இவ்வாறு சொலலபபட்ட திருதராஷ்டிரமஹாராஜன் துரியோதனனை யழைத்துச சொல்லதொடங்கினன். "என்அன்புள்ள மகனே! துரியோதனு! என்னகாரணததினால நீ மிகத்துயரபபடுகிறாய். கௌரவசரேஷ்டனே! அநதவிஷயததை நான் கேட்கலாமாயின் எனககுச சொல்; நீ நிறமமாறி வெளுதது இளைதிருபபதாக இநதச்சகுனி சொல்லுகிறான். நான் நினைததுபபாரக்கையில் நீ துயரபபடுவதறகுக காரணம எனககுதெரியவிலலீ புதல்வனே! பெரியஐச்வரியம முழுதும உன்னிடததில நிலைபெறறிருககிறது. உன்ஸஹாதரர்களும நண்பர்களும உனககு இன்னுதவறறைச் செய்வதில்லீ. உயர்நதஆடைகள் உடுக்கிறாய்; மாமஸைததாடுகூடிய அன்னதைதப புஜிக்கிறாய்; உயாநத ஜாதிக்குதிரைகள் வ்றுகிறாய்; எதனால் வெளுதது மிளைததுமிருககிறாய்? விலைபெறறபடகூகைகளும மனததிறகினிய பெண்களும சிறநதவீடுகளும ஸுகமான தோட்டங்களும தேவர்களுக்கிருபபதுபோல உனக்கு இருக்கின்றன. உலகமெலலாம உன் சொல்லிறகட்டுபபட்டிருக்கிறது; ஸுதேஹமிலலீ. யாரானும வெல்ல முடியாத அன்புள்ளபுதரனே! அபபடிபபட்ட நீ ஏழைபோல ஏன் துயரபபடுகிறாய்? அபபா! தாய்தநதையாகளால புதரனுக்குச் செய்யதகதகவறறுள் எதுசிறந்ததாக நினைக்கபபடிருக்கிறதோ அதையும நமமுடையகுலத்தின் ராஜ்யலக்ஷ்மி எல்லாவறறையும நீ அடைநதிருக்கிறாய். தேவலோகத்தில் தேவேநதிரனுக்கு இருபபதுபோல வே எலலாவிருபபங்களும பலவகைச் சிறநதஉணவுகளும பானங்களும உனக்கு இருக்கின்றன. ஏன் வ்யஸனப்படுகிறாய்? நிருக்தம சுநதம்முதலான ஆறுஅங்கங்களோடுகூடிய வேதத்தையும அஸ்தரவித்தையையும் சாஸ்திரங்களையும [1]பதது இலகுகணங்களுடன் கிருபாசாரியரிடம படிதததை தோநதிருககிறாய்; பலராமரிடத்திலும கிருபரிடத்திலும துரோணரிடதிலும அஸ்த்ரவித்தைதகற்றிருக்கிறாய்; நீ ஸஹாதராகளில் ஜ்யேஷ்டன்; ராஜ்யததிலிருககிறாய்; புததிரனே! ஏன்துயரபபடுகிறாய்? புதநிரனே! நீ பிரபுவாயிருந்துகொண்டு ஸுஹதர்களாலும மாகதர்களாலும துதிக்கபபடுபவறறு ஸாமான்யஜனங்களுக்குக்கிடையாத உணவுஉடைகளை மிகுதியாக அனு

[1] 1. ஸ்வரம்; 2. வர்ணம்; 3. பதம்; 4. தாது; 5. வேற்றுமையுருபுகள்; 6 வினையுறுப்புக்கள்; 7. திருதபத்யயம்; 8. தத்திதபத்யயம்; 9. காரகம்; 10. ஸமாஸம்என்பன.

பவிக்கிறாய். எல்லாந்தெரிந்தவனே! இவ்வுலகத்தில் மற்றொருவன் மேன்மையையடைந்திருக்கிறானென்பது உன்வயனத்திறகுக்காரணமாவதெபபடி? அதை நான்கேட்கிறேன்; சொல்" என்றான்.

மந்தபுத்தியுள்ளவனும் கோபம் மேற்கொண்டவனுமான துரியோதனன் திருதராஷ்டிரனுடைய அநதச்சொல்லைக்கேடடுத் தனதையையோக்கி, தன்எண்ணத்தை வெளிபபடுத்திக்கொண்டு பின்வருமாறு சொல்லலானான்:— "நான் அல்பமனிதன்போலஉண்ணுகிறேன்; உடுக்கிறேன்; கெட்டகாலத்தைக்கடக்கக்கருதித் தாங்கக்கூடாதகோபத்தைத் தாங்குகிறேன். அவமானத்தைப பொறுமல் தனதுராஜ்யாங்கங்களை ஆக்ரமித்து மேலாயிருந்து பிறராலுண்டாகும்கஷ்டங்களை விடுவிக்கமுயலுகிறவன்தான் ஆண்பிள்ளையென்று சொல்லபபடுகிறான். பரதவம்சத்தவரே! உள்ளதுபோதுமென்றிருபபதும் தையையும் பயமும, ஐசுவர்யத்தையும் கௌரவதையும்கெடுக்கின்றன. அவற்றினால் 'ஆக்ரமிக்கபபட்டவன் மேன்மையையடையான். மிகபபிரகாசிப்பதும் என்னை நிறமகுறையச்செய்வதுமான ராஜ்யலக்ஷ்மி குநதிபுத்ரனை யுதிஷ்டிரனிடத்திலிருபபதைக்கண்டபிறகு நான்அனுபவிபபது எனக்குத்திருபதிகரமாயில்லை. எதிரிகள் மேன்மையடைவதையும் நான்குறைவதையுமகண்டபின் தர்மராஜாவின் ஐச்வரியம் கண்ணுக்குப புலப்படாததாயினும எதிர்நிற்பது போலத்தோன்றுவதனால் நான்நிறம்குன்றிஒய்நது வெளுத்தும்இளைத்துமிருக்கிறேன். யுதிஷ்டிரனால் காப்பாற்றபபட்ட ஸ்நாதகர்களும கிருஹஸ்தர்களுமான எண்பத்தெண்ணாயிரவர் இருக்கின்றார்கள். அவர்களில் ஒவ்வொருவருக்கும் மூப்பது மூப்பது வேலைக்காரிகளுண்டு. யுதிஷ்டிரனுடையவீட்டில் ஜிதேந்திரியர்களானயதிகள் பதினாயிரவர் பொற்பாத்திரங்களில் புஜிக்கின்றனர். கறுப்பும் நீலமும் சிவப்புமான வர்ணங்களோடுகூடிய மான்தோல்களையும் விலைபெற்ற சால்வைகளையும் காம்போஜதேசததரசன் யுதிஷ்டிரனுக்களுப்பினான். நூற்றுக்கணக்கும ஆயிரக்கணக்குமாகப் பெண்யானைகளையும் பசுக்களையும் குதிரைகளையும் முநூறுஒட்டகங்களையும் அநேகநூறு பெண்குதிரைகளையும் கபபமாகளடித்துக்கொண்டு ராஜகுமாரர்கள் யுதிஷ்டிரனுடையகிருஹத்தில் வந்துசேர்ந்தனர். ராஜாவே! அந்தச்சிறந்தயாகத்தில் அரசர்கள் பலவிதங்களானதனங்களை யுதிஷ்டிரனுக்கு மிகுதியாகக்கொணர்ந்துகொடுத்தனர். சிறநதபுத்தியுள்ள பாண்டுபுத்திரனுக்கு அந்தயாகத்தில் திரவியலாபம்வந்ததுபோல எவ்விடத்திலும் இதற்குமுன் நான்கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. இதெல்

லாம் பொய்யாயிருந்தால் நீர் ஸஞ்சயனைக்கேட்கலாம். ராஜாவே! நமதுசததுரூவின் அளவறறஅநததனகுவியலைக்கண்டு அதைபேய நினைநது நான் ஸுகமபெறுமலிருகிறேன். பிராமமணர்களும பயிரிடுகிறவர்களும் பசுக்கள்வைத்துக்கொண்டிருபபவாகளும் தூற் றுக்கணக்காகக் கூடடமசேர்நது மூவாயிரமகோடி பொன்களை கப்பமாக எடுததுக்கொண்டுவநது வாயிலில தடுக்கபபட்டுநின்றனர். திரிகர்வதேசததார் அழகானபொறகுடஙகளைக்கொண்டுவநது தரம ராஜாவுக்குத் தெரிவித்தபிறகு உள்ளேவிடபபட்டனர். தேவஸ்திரீ கள் எதிலஇநதிரனுக்கு மதுவைவைதததுகொண்டிருக்கின்றனரோ வருணனுடைய அநத வெண்கலபபாத்திரத்தைத் திருபபாற்கடல் தர மராஜாவுக்குக் கொணர்நதுகொடுத்தது. ஆயிரமபொன் வீலெடறற தும அனேகரத்நங்களால் அலங்கரிகபபெற்றதும் உறியில்வைக்க பட்டதுமான சிறநதசங்கததையெடுத்துக கிருஷ்ணன் தாமராஜா வுக்குஅபிஷேகஞசெய்தார். அதையெல்லாமகண்டு எனக்கு பெரிய ஜ்வரம உண்டானதுபோலிருந்தது. பரதசரேஷ்டரே! பறவைகள் அநதசசங்கையெடுததுக்கொண்டு கீழ்கடலுக்கும தென்கடலுக்கும் மேல்கடலுக்கும சென்றன; வடகடலுக்குமடடும் செல்லவில்லை. அர் ஜுனன் அநதவடதிசைக்குச்சென்று அளவறறதனதத்தைக் கப்ப மாகக்கொண்டுவநதான். பாரதரே! மயனுல பிநதுஸரஸிலுளள ரத் னங்களைக்கொண்டுவநதுசெய்து படிக்கலமேலே மூடியிருநததலால ஜலம்நிரமபின தாமரைக்குளம் போலிருக்குமபூமியைக் கண்டேன். பரதச்ரேஷ்டரே! அங்கே நான் துணியைததுக்கினதைபபார்தது ஒரு கோதானும் ஸபைகாக்குமவேலைக்காரர்களும் நகைத்தனர். அப போது என்தாய்தநதையர்களுக்காக என்உயிரைச் சரமபபட்டுக்காப பாற்றினேன். என்னுல்முடிநதிருக்குமாயின் விருகோதரனே அங் கேயேகொன்றிருபபேன். பாரதரே! என்பகைவனுற்செய்யப்பட்ட அந்தப்பரிகாசம் என்னையெரிக்கிறது. ராஜாவே! அநதஸபையில் படிகத்தாமரைகளினுல் விளங்குவதும படிகமேஜலம்போற் செய்பப பட்டதுமாகிய தாமரைக்குளததை ஸபையென்றுநினைத்து விழுந் தேன். அப்போது பீமனும அர்ஜுனனும சப்தத்துடன்சிரித்தனர். திரௌபதியும் பெண்களுடன்சோநது என்மனமவிழுநதுபோகும் படி நகைத்தாள். ஜலத்திலிறங்கி வஸ்திரம்நனைநதுபோனஎனக்கு ராஜாவினுல் கட்டளையிடபபட்டவேலைக்காரர்கள் வேறுவஸ்திரங்க ளைக்கொடுத்தனர். அதுவும் எனக்குப்பெருந்துயரமே. தூண்களி ருக்குமிடத்தில் தூண்களில்லாததுபோலவும் தூண்களில்லாதவிடங்

களில் ஆயிரம்தூண்களிருப்பதுபோலவும் காணப்படுகிறது. ராஜாவே! பிரபுவே! அந்த இடத்தில் நான்படிக்கக்கற்களின்நடுவில் அடிபட்டுக் கொண்டேன். வாயில்லாதஇடம வாயில்போலிருந்ததனால் அங்கேகவெளியில்போகத்தொடங்கிக் கல்லிலமுடடிக்கொண்டு கெற்றியில்மிகவும அடிபட்டுக்கொண்டேன். அதைப்பார்த்துத் தடவிக் கொண்டு வேறுமார்க்கத்திற்சென்றேன் விருகோதரன்பரிஹாஸஞ் செய்து என்னைபபார்த்து, "ராஜாவே! இதுவாயில்; இதுவாயிலன்று" என்றுபுதுமையுரைச்சொன்னன். ராஜாவே! அவ்விடத்தில் அந்தநிலைமையிலிருந்த என்னைக்கண்டு பெண்களுமநகைத்தனர். புருஷச்ரேஷ்டரே! அந்தச சபையிலுளளவாகளுக்கு இதெல்லாம் சிரிக்கக்காரணமாயிருந்தது, நான் இதுவரையில் எங்கும கண்டதும் கேட்டதுமிலலாத ரதனஙகளை அவ்விடத்திற்கண்டேன். அதனால் கொதிபபுழு துயரமுமஅடைந்தேன். தீயிறகுதிபபேன்; கருங்கடலில்விழுவேன். புகழ்பெறறவனுக்கு அபகீர்த்தியானது மரணத்திலும்அதிககஷ்டம. மற்றோர்ஆச்சரியமும அங்குஉண்டாயிற்று; அதையும்சொல்லுகிறேன்; கேளும. எபபோதும் புஜிக்கும்பிராமணர்கள் ஒருலகூஷ்ம கணக்கானதற்கடையாளமாக அங்கே சங்கு வைத்துதீ தினம ஊதபபடுகிறது. பாரதரே! அந்தச்சங்கு அடிக்கடி ஒலிக்கும்போது இடைவிடாத சபதத்தைக்கேட்டேன். அதனால் எனக்கு மயிர்கள்பொடித்தன. மஹாராஜாவே! காணவநத அனேக ராஜாக்களினுலநிரம்பின அந்தஸபையானது மாசறறஆகாயம நக்ஷத்திரங்களினுல் விளங்குவதுபோல விளங்கிறது. மஹாராஜாவே! பிரஜைகளுக்கதிபதியே! சிறந்த புத்திசாலியான தர்மராஜாவினுடைய அந்தயாகசதில் அரசாகள வைசியர்கள்போல எல்லாரத்னங்களையும் காணிக்கைகளாகக் கொண்டுவநதனர். பிராம்மணர்களுக்குப் பரிமாறுகிறவர்கள் அரசர்களே. ஓ! ராஜாவே! யுதிஷ்டிரனிடத்திலிருந்த லக்ஷ்மியானது தேவேந்திரனுக்கும யமனுக்கும வருணனுக்கும் குபேரனுக்கும்இல்லை. பாண்டுபுத்திரனுடைய அந்தசசிறந்த ராஜலகூஷ்மியைக்கண்டு மனக்கொதிப்புற்றநான் ஆறுதலடையவில்லை. பாண்டவர்களுடைய ஐசுவர்யத்தையடையாமல் எனக்கு ஆறுதலில்லை. பாண்டவர்களினுல் ப்ரகவரையாவது படிக்கவைப்பேன். நானுவது பிறரால்அடிக்கப்பட்டுச்சாய்வேன். பகைவரைத் தன்புறச்செய்கிறவரே! இந்தநிலைமையிலிருக்கும்எனக்கு உயிரினுலாவதென்ன? ராஜாவே! பாண்டவர்கள் மேன்மேலும்ஓங்குகின்றனர், நமதுஉயர்வு நின்றுவிட்டது" என்றான்.

அபபோது சகுனி, "தவறுதபாக்ரமமுள்ளவனே! தர்ம ராஜாவினிடத்தில் எந்தஒப்பறறூச்வர்யத்தைக்கண்டாயோ அதை யடைவதற்கு நான் ஓர்உபாயம்சொல்லுகிறேன்; கேள். பாரதனே! இந்தப்பூமிமுழுமையிலும் பாசசிகைகளில நான்தேர்ந்தவன். ஆடும் போது காய்போகுமவழி எனக்குத்தெரியும; பந்தயமதெரியும; தன் ஆட்டம் பிறர்ஆட்டம் இவைகளின் வித்தியாஸம தெரியும். யுதிஷ் டிரனுக்கு ஆட்டத்தில் விருப்பமுண்டு; ஆனால ஆடத்தெரியாது; அழைதேதாமானால் அவசியம்வருவான். அவன் எபபோதும தானே என்னையழைப்பதுண்டு. பிரபுவே! நான் கபடத்தைச்செய்து அவனை நிச்சயமாக ஜயிபபேன். அந்தச்சிறந்த ஐசுவாயத்தைத திருப்பி வாங்கிவிடுவேன். அவனையழை" என்றுசொன்னான். சகுனியினால இவ்வாறுசொல்லப்பட்ட துரியோதனமஹாராஜன் உடனே திருத ராஷ்டிரனைநோக்கி, "ராஜாவே! சொக்கட்டான் ஆட்டம்தெரிந்த இந் தச்சகுனி ஆட்டத்தினாலேயே யுதிஷ்டிரனுடைய ராஜ்யலக்ஷ்மியை வாங்கத் திறமைபுள்ளவன் அதறகு நீர அனுமதிகொடுக்கக்கடவீர்" என்றுசொன்னான். அதைக்கேடட திருதராஷ்டிரன், "விதுரன் மஹாபுத்திசாலி; எனக்கு மந்திரி; நான் அவன்சொற்படியிருப்ப வன். அவனுடன்கலந்து இந்தக்கார்யதனின முடிவைப்பற்றித் தெரி ந்துகொள்வேன். தீர்க்கதர்சியாகிய அந்தவிதுரன் தர்மத்தை முன் னிட்டு இருபக்கத்தாருக்கும தகுந்ததும மிக்கநன்மையுமாகக் காரி யத்தின்முடிவைச் சொல்வன்" என்றுசொன்னான் துரியோதனன், "அரசர்க்கரசே! விதுரா வருவாராயின் அவர் உண்மைத்திருப்பிவிடு வர். நீர்திரும்பினால் நான்இறந்துபோவது திண்ணம. ராஜாவே! நானிறந்துபோனபிறகு நீர் விதுரருடன் ஸுகமாயிரும். பூமிமுழு மையையும் நீர்ஆளலாம். உமக்கு என்னாலவதென்ன?" என்று சொன்னான். அவன் அன்போடும் துயரத்தோடுமசொன்ன அந்தச் சொல்லைக்கேட்டுத் திருதராஷ்டிரன் அவனுடையஎண்ணத்தை அங்கீ கரித்து வேலைக்காரர்களைப் பார்த்து, "சிற்பிகாள்! அனேகமாயிரம் தூண்கள்நிரம்பினதும் நூறுவாயில்களுள்ளதும் மனத்திற்கும பார் வைக்கும் இனியதுமான ஸபையை எனக்கு உடனேசெய்யுங்கள். சில்பிகளெல்லாரையும் வருவித்து அரிந்தச்சபையில் ரத்னங்களால் தள வரிசைகள்போட்டுப பிரவேசிபபதற்கு ஸுகமாகவும அழகாகவுஞ் செய்து உடனே எனக்குதெரிவியுங்கள்", என்று கட்டளையிட் டான். ஜனமேஜயமஹாராஜாவே! துரியோதனனுடைய ஸமாதா னத்திற்காகத் திருதராஷ்டிரமஹாராஜன் இவ்வாறு நிச்சயம்செய்து

விதுரருக்குத் தூதனுப்பினன். விதுரரைக்கேட்காமல் திருதராஷ்டிரனுக்குத் தன்மனத்தில் ஒருநிச்சயமும் உண்டாகவில்லை. திருதராஷ்டிரன் சொக்கட்டானாடுவதிலுள்ள குற்றங்களையறிந்திருந்தும் புத்திரனிடத்திலுள்ள ஸ்நேகத்தினால் இழுக்கப்பட்டான். புத்திமானாகவிதுரர் கலகத்திற்கு வாயிலாகவந்திருப்பதும் நாசத்திற்கு ஆரம்பமாக உண்டானதுமாகிய அந்தச் சமாசாரத்தைக்கேட்டுத் திருதராஷ்டிரனிடம் ஓடிவந்தார் அந்தவிதுரர் தமக்குத் தமயனும் மஹாத்மாவுமான திருதராஷ்டிரனையடைந்து பாதங்களில்தலைவணங்கி, "அரசரே! பிரபுவே! உம்முடைய இந்தமுயற்சியை நான்ஒத்துக்கொள்ளவில்லை. இந்தச்சூதாட்டம் காரணமாக உமதுபுதல்வர்களுக்கு விரோதம்வராமலிருக்கும்படி செய்யுக்கடவீர்" என்றுசொன்னர். அதற்குத் திருதராஷ்டிரன், "விதுரா! தேவர்கள் அனுக்ரஹம்செய்வாயின் எனதுபுத்ரர்களுக்கும் பாண்டுபுத்ரர்களுக்கும் கலகம் உண்டாகாமலிருக்குமென்பது நிச்சயம். நல்லதோ கெட்டதோ, அனுகூலமோ பிரதிகூலமோ, மித்திரர்களுக்குள் சூதாட்டம் நடக்கட்டும். இது விதியின் கட்டளையென்பதில் ஸந்தேகமில்லை. பாரதனே! நானும் துரோணரும் பீஷ்மரும் நீயும்இருக்கும்போது இவ்விருவருக்கும் தெய்விகமாகக்கூட அக்நிமம் எவ்வகையிலும் நேரிடாது. நீ இப்போதே காற்றுவேகமான குதிரைகள்பூட்டின ரதத்திலேறிக்கொண்டு காண்டவப்ரஸ்தம்சென்று யுதிஷ்டிரனை யழைத்துவா. விதுரா! என்னுடைய எண்ணம் யுதிஷ்டிரனிடத்திற் சொல்லத்தகாது. இதை உனக்குச்சொல்லுகிறேன். தெய்வந்தான் மேலானதென்று நினைக்கிறேன். அதனாலேதான் இதுநேரிடுகிறது" என்றுசொன்னன். இவ்வாறு சொல்லியதைக்கேட்ட புத்திமானான விதுரர், 'இந்தக் குலம் இனிஇல்லை' என்றுநினைத்து மிகத்துன்பமுற்றுச் சிறந்தபுத்தியுள்ள பீஷ்மரிடம்சென்றார்.

எழுபத்தேழாவது அத்தியாயம்.

த்யூதபர்வம். (தொடர்ச்சி.)

(ஜனமேஜயர் விரிவாகச்சொல்லும்படிகேட்டதன்மேல் வைசம்பாயனர்சொல்லத்தொடங்கி, திருதராஷ்டிரனிடம் துரியோதனன் துயரப்பட்டதை மறுபடியும் கூறியது.)

ஜனமேஜயர், "ஓ! பிரமஜ்ஞானிகளிற்சிறந்தவரே! எனது பிதாமஹர்களான பாண்டவர்கள் அப்படிப்பட்ட வ்யஸனம்அடைந்த

தற்குக்காரணமும் பராதாக்களுக்கே பெரியநாசத்தைவிளைவித்ததுமாகிய அந்தச்சூதாடடம எவ்வாறுநடநதது? அந்தஆட்டத்திற்குஸைபையோராயிருநத அரசர்கள்யாவர்? அதை ஸங்தோஷித்தவர் யாவர்? மறுத்தவர்யாவர்? பிராமமணரே! நீங்கள் இதைவிரிவாகசொலல விருமபுகிறேன். பிராமமணஸ்ரேஷ்டமரே! பூமியேஅழிநதநதற்கு இதன்றே ஆதிகாரணம்" என்றுகேட்க, பிறகு வியாஸருடையசிஷ்யரும் சிறந்தமஹிமைபுள்ளவரும் வேதாத்தங்களையறிந்தவருமாகிய வைசமபாயனர் நடநதவற்றையெலலாம சொல்லதொடங்கினார்.

"பரதவமசததவரிறசிறநதவரே! மஹாராஜாவே! உமக்கு இநதக்கதையைகேட்கவிருப்பமிருநதால மறுபடியும் விரிவாகசொல்லுகிறேன்; கேளுமம. அமபிகையின்புதலனிகிய திருதராஷ்டிரன் விதுருடையஅபிபிராயதையறிநதபிறகு மறுபடியும எகாநதத்தில தூரியோதனணபபார்ததுப பின்வருமாறுசொல்லலானன். "காந்தாரியின்மகனே! த்யூதமவேண்டாம். விதுரன் அங்கீகரிக்கவில்லை. மிகச்சிறநதபுததியுள்ளவிதுரன் நமக்கு இனனதைஉரையான். விதுரன்சொல்வதே நமக்கு மிக்கநனமையென்றல்லவோ நான்நினைபபது. புத்ரனே! அவன்சொன்னதையெல்லாம் நீசெய்யகடவாய். அதுதான் உனக்குநனமையெனறு யான்நினைக்கிறேன். தேவரிஷியும் இநதிரனுக்குஆசாரியருமாகிய மூன்றுகாலங்களையும அறிநதவருமான சிறநதபுதத்தியுள்ளவருமான பிருஹஸ்பதி இநதிரனுக்கு எநதசாஸ்திரத்தையுரைத்தாரோ அதையெலலாம மஹாகவியாகியவிதுரன் ஸாங்கமங்களுடன் அறிநதிருக்கிறான். புத்ரனே! நான்கூட எபபோதும் அவன் சொல்லிலிருபபவனன்றோ? ராஜனே! சிறநதபுததிசாலியானவிதுரன்தான் கௌரவர்களுக்குத்தலைவனுக நீனைக்கப்படடிருபபவன். மஹாபுத்திசாலியானஉத்தவன்தான் யாதவாகளில பூஜிக்கதக்கவன். மகனே! ஆதலால், சூதுவேண்டாம. சூதில் விரோதததைகாண்கிறோம. விரோதம்வநதால ராஜ்யமேஅழியும. புத்ரனே! அநதச்சூதை விட்டுவிடு தாய்தநதையாகள் மகனுக்குஆக்கும்பேருதவியென்று எதுசொல்லபபடுகிறதோ அதை நீயடைநதிருக்கிறாய். தநதைபாட்டனாகளிடமிருநதுவநத ராஜ்யத்தைப்பெற்றிருக்கிறாய். நீ ஓதினவன்; சாஸ்திரங்களிற்றேர்ந்தவன்; வீடடில் எக்காலமுமகொண்டாடபபடடவன்; ஸுஹாதயர்களில்மூததவன்; ராஜ்யத்திலிருப்பவன்; என்னநனமையை நீபெறுமமலிருக்கிறாய்? சிறநதகைகளையுடையவனே! மற்றஜனங்கள்பெறுதறகரிய சிறநதஉணவுகளையும உடைகளையும் நீபெறறிருக்கிறாய். அன்புள்ளமகனே! நீதூயரப்படுவதேன்?

சிறந்தகைகளையுடையவனே! தந்தைபாட்டனுர்வரிசையாகக்கிடைத்ததும் செழித்ததுமாகிய பெரியராஜ்யத்தை எப்போதும்கட்டளையிட்டுக்கொண்டு தேவலோகத்தில்தேவேந்திரன்போல (இப்புவியில்) விளங்குகிறாய். ராஜனே! உனக்குள்ளஐச்வரியமும் முன்புள்ளஞல் உரைக்கப்பட்டஉனக்குள்ளஸுகங்களும் மற்றவர்கள்பெறுதற்கரியவை. எல்லாந்தெரிந்தவனே! அபபடிப்பட்டஉனக்குத் துயரத்திற்குக்காரணம் என்ன உண்டாயிற்று? அதை எனக்குச்சொல்லவேண்டும்" என்ருன். அதைக்கேட்டுத் துரியோதனன், "உண்ணுகிறேன், உடுக்கிறேனென்றுபாராத்துக்கொண்டு ஆண்மையைவிட்டுப் பிறர் பெருமையில் பொருமைபடாதவனெவனே அவன் இழிவானமனிதனென்றுநிணக்கப்படுகிறான். அரசர்க்கரசே! பிரபுவே! எல்லாருக்கு மிருப்பதுபோன்ற ராஜ்யலக்ஷ்மியானது எனக்குஸந்தோஷத்தைத் தருவதில்லை. குந்திபுத்ரனிடத்தில் சிறபபுற்றுவிளங்கின ராஜ்யலக்ஷ்மியைக்கண்டுதான் வ்யஸனமுற்றேன். பூமிமுழுவதும யுதிஷ்டிரனுடைய ஆஜ்ஞைக்குடபட்டிருபபதைக்கண்டு ஜீவிதத்திருக்குமயான் மிகக்கடினமானவன். துக்கத்தினுல் இதை உமக்குச்சொல்லுகிறேன். ரீபர்கள், சிதரகர்கள், குகுரதேசத்தவர்கள், காரஸ்கர்கள், லோகஜங்கர்களென்னுமாசாகள யுதிஷ்டிரன்வீட்டில அடிமைகள்போல வசப்பட்டிருக்கின்றனர். இமயமலையினுல தடறறீவுகளினுமுள்ள ரத்னநிதிகளோடுகூடிய அரசாகளனைவரும் மிலேசசஜாதியார்களனைவரும் யுதிஷ்டிரன் கிருஹத்தில தூரவிலக்கப்பட்டிருந்தனர். அரசர்க்கரசே! யுதிஷ்டிரன் என்னை மூத்தவனென்றும் சிறந்தவனென்றும் நினைத்து மரியாதையுடன் ரத்னங்களை வாங்கும்படி ஏறபடுத்தியிருந்தான். பாரதரே! அங்கேவந்த மிகச்சிறந்த ரத்னங்களுக்கும காணிக்கைகள் கொண்டுவந்தவர்களுக்கும் இக்கையைத்தெரியவில்லை; அக்கையைநுதெரியவில்லை. அந்தத் தனங்களைவாங்குவதற்கு என்கை போதாமற்போயிறறு. நான் களைபபடைந்திருந்தபோது தூரத்திலிருந்து கொண்டுவந்த ரத்னங்களைக் கையில்வைத்துக்கொண்டு அவரவர்கள் நின்றனர். பிந்துஸரஸிலுள்ள ரத்னங்களைக் கொண்டுவந்து மயஞல் நிர்மாணஞ்செய்யப்பட்டதும் படிக்கல் மூடப்பட்டிருப்பதஞல் ஜலம்நிரம்பின தாமரைக்குளம்போன்றதுமான ஒரிடத்தைக் கண்டேன். நான் ஆடையைத் தூக்கிக்கொள்ளும்போது சத்ருவின் செல்வச்சிறப்பைக்கண்டு மயங்கினவனும் ரத்னங்களில்லாதவனுமாகிய என்னைக்கண்டு விருகோதரன் நகைத்தான். என்னல் முடிந்திருக்குமாயின் அங்கேயே விருகோதரனைக்கொன்றிருப்பேன்.

ராஜாவே! பீமணைக்கொலல யத்தனஞ்செய்திருபபேனுயின் சிசுபால னுக்குவநத கதிதான் நமக்கும்வநதிருகுகும; ஸ்தேஹமில்லை. பாரதரே! என்பகைவன் பரிஹாஸஞுசெய்தது கான்னைச்சுடுகிறது. ராஜாவே! திரும்பவும அதுபோன்ற மற்றொருகுளம தாமரைமலர்களிஞல் விளங்கியிருநததைப் படிகக்கல் பூமியாகநினைதது ஜலத்தில் விழுந்தேன். அவ்விடததில என்னைப்பார்தது கிருஷ்ணன் அர்ஜுனனுடன்கூட, சபதமகேடகும்படி நகைத்தான். தெளபதியும் அனேகஸ்திரீகளுடன்கூட என்மனம் துயரபபடும்படி நகைத்தாள். ஜலத்தில் வஸ்திரம்நனைநதுபோன எனக்குத தர்மராஜாவினுல் ஏவப பட்ட வேலைக்காரர்கள் வேறுவஸ்திரங்களைக் கொடுத்தனர். அதுவும் எனக்குப பெருந்துயரம. ராஜாவே! கான் மற்றொருமோசமபோன தையும சொல்லுகிறேன்; கேளுமு. வாயிலிருபபதுபோலத் தோனறும் வாயிலில்லாதவிடத்தில வெளியே போகததெரியுகிக் கலலில் அடிபட்டு நெற்றியில் புண்பட்டுக்கொண்டேன். அங்கே அவ்வாறு அடிபட்டஎன்னை, சோநதிருநத நகுலஸஹதேவாகளிருவரும துரத்திலிருநதுபாரத்து வ்யஸனபபடடுக கைகளால் அணைததனர். அநத ஸமயத்தில் ஸஹதேவன், என்னைபபார்த்துச் சிரிததுக்கொண்டு, "திருதராஷ்டிரபுதரினே! வாயில் இங்கேயிருக்கிறது; அங்கே போகாதே" என்று அடிக்கடிசொன்னுன். அநதஸமயத்தில பீம னைனும, 'திருதராஷ்டிரபுதரினே!' என்றழைத்து, சிரித்து, "ராஜாவே! வாயில்இங்கே" என்றுசொன்னுன். அநதஸபையில் நான்கண்ட ரதனங்களுக்குப பெயர்களைக்கூட இதறகுமுன் நான் கேட்டதில்லை. அதுவும் என்மனத்தைச சுடுகிறது.

எழுபத்தேட்டாவது அத்தியாயம்.

த்ரௌபதர்வம். (தோடர்ச்சி.)

(ராஜஸூயயாகத்தில் தர்மராஜாவுக்குவந்த காணிக்கைகளைபபற்றித் துரியோதனன் விரிவாகத்திருதராஷ்டிரனுக்குரைத்தது.)

பாரதரே! ஆங்காங்கிருநது அரசர்கள் பாண்டவர்களுக்குக் கொண்டுவந்த சிறந்த தனங்கள் யான்கண்டனவற்றைக கேளுமு. பகைவனுடைய அந்தத்தனத்தைக்கண்டு ம்யங்கினுன் என்னைய அறியாமற்போனேன். பாரதரே! [1]பூமியிலிருநதும பூமியிலுண்டான

[1] பூமியிலிருந்து உண்டானவை ரத்னங்கள்முதலியவை; பூமியிலிருந்து உண்டான பொருள்களிலிருந்துஉண்டானவை வஸ்திரங்கள்முதலியவை.

பொருள்களிலிருந்தும் உண்டான திரவியங்களைத் தெரிந்துகொள்ளும். ஆடுமயிராகளாற செய்யபபடடனவும எலி பெருச்சாளி முதலியவற்றின் தோல்களாற செய்யபபடடனவும பூஞைத்தோல்களாற் செய்யப்படடனவும பொற்சரிகையினுல் அலங்கரிகபபடட்னவுமான சிறந்தபோர்வைகளையும தோல்களையும மிகுதியாகக காமபோஜராஜன்கொடுத்தான். குருவிகள்போலச சித்ரநிறமுள்ளவையும கிளிமூக்குபபோலச சிவநத மூக்குள்ளவையுமான மூநூறுகுதிரைகளையும சிலேஷ்மாதகம வன்னி புன்ரு இவறறின்காய்களினுல் வளர்கபபட்ட ஒட்டகங்களையும பெண்குதிரைகளையும திரிகாத்தசத்தார் கொடுத்தனர். இடையாகள் தங்கள இனதாருடன்கூட [1]நாறகாற்பிராணிகளையும், வஸாதிகள்என்னபபட்ட எபபோதும திரிநதுகொண்டிருக்கும ஜாதியார மறறஅனேக தனஙகளையும எடுததுககொண்டு தாமராஜாவின்வாயிலில நினறனர. மஹாராதர்களிற சிறநதவனுகிய திரிகர்வதேசத்தரசன் தன் பரதுக்களாறசூழபபடடு மனமகிழ்ச்சியோடும அன்போடும அழகான பொறகுடஙகளையும ரத்தினங்களையும் பொன்நாணயங்களையும பொறகடடிகளையும எடுததுககொண்டுவநது தர்மராஜாவுக்கு அளிததான. குவிநதனென்னும பிராமமணச்ரேஷ்டனுல புதநிம்னன தாமராஜாவுகருக் காண்பித்து அன்போடு அளிக்கபபெறற சஙகததை ஸமீஹாதார்களனைவரும அராஜனனுக்குக் கொடுததனர. பொனரேகைகளோடு கூடியதும ஆசசரியபபடததக்கதும ஆயிரக்கணக்கான பொன்நாணயதினுல் விசிதரமானதும் தன் ஒளியினுல் விளங்குவதும அழகானதும கண்களைக்கவருவதும [2]விசுவகர்மாவினுல பூஜிக்கபபெறறதுமாகிய அநதசசங்கை அர்ஜுனன் வாங்கிக்கொண்டான். தர்மராஜனும அதைப பலமுறை நமஸ்காரஞ செய்து எடுத்துககொண்டான். ஊதாமலிருகையிலும் கர்ஜிக்கதக்க அநதசசங்கம அர்ஜுனன் ஊதினபோது மிகவுமஒலித்தது. அநதச்சங்கின் ஒலியினுல அரசாகள தங்களவலிமைகுன்றி விழுநதனர். தமது சக்திநிரமபினவரும ஒருவர்க்கொருவா இனியனசெய்பவருமாகிய திருஷ்டதயுமனனும பாண்டவர்களவீவரும ஸாத்யகியும கிருஷ்ணனுமாகிய இநதஎண்மருமம மூர்சசையடைநத அரசாகளையும எனனியுமகண்டு அபபோது நகைததனர். பாரதரே! பிறகு அர்ஜுனன ஸநதோஷமடைநது பொன்கட்டின கொமபுகளையுடைய ஐநூறுவிருஷபங்களை அநதக்குவிந்தன் என்னும பிராமமணச்ரேஷ்

---

1 பசுகளையும்.

2 விசுவகர்மாவின் சிற்பத்திற்குமேலாகவே இயற்கையிலமைந்தது.

டனுக்குக் கொடுத்தான். 'குவிந்தனென்னும பிராமமணன் மூகமலர்ச்சியுடன் பொன்னும பலவகைவஸ்திரங்களுமாகிய சிறந்தகணிக்கைகளைத் தர்மராஜாவுகனுபபினன். கரச்மீரதேசததரசன் சுதத மும மதுரமுமான திராக்ஷைபபழமதயுதையும இனனும எலலாக காணிக்கைகளையும எடுதது்கொணடு தாமராஜாவினிடம வநதான். யவனர்கள் மனனவேகமுளள மலநாடடுக் குதிரைகளையும பெரிய வில்லபெறற ஆஸனங்களையும புதியவையும இமலசானவையும அழகிய வையும விலலபெறறவையும பிரகாசிபபவையுமான சாலவைகளையும மற்றுமுளள பலவகை ரதனஙகளையும கொண்டுவநது வாயிலலிலன்ற னர். களிங்கதேசததரசனகிய சுருதாயுளன்பவன மிகசசிறநத முத துகளையும ரதனஙகளையும அளிததான். அங்கதேசததரசன் பொன் மயமான ஆபரணங்களையணிநத அழகியபெண்களைக கொடுத்தான். பாரதமே! ராஜாவே! தென்கடறகரையிலிருநது வஙகதேசத்தரசன் நூறறுக்கணகான பொறகடடிலகளையும நூறறுககு மேறபடட போர்வைகளையும ஜலததிலுண்டான ரதனங்களையும மறறச்சிறறரசர் களிடமிருநது அவன் வாங்கின கபபங்களெலலாவற்றையும தாமபுதர னுக்குக் கொடுத்தான. பாண்டியராஜன் தாததுரமலியிலுண்டான தொண்ணூற்றுறபாரம நிறையுளள முதலதரமான சநதனககட்டை களையும தொண்ணூறறு சஙகங்களையும தர்மராஜாவுக்கு விசைநது கொடுதததான். சோளராஜன் கேரளராஜன் இருவரும் கணகக்கிலலாத சநதனங்களையும அகிலகளையும பலவகையான முதது்க்களையும வை டூர்யங்களையும பாண்டுபுதரனுகுகுக் கொடுததனர். அச்மகராஜன் கொமபுகளில்பொன்கடடினவை்யும பொன்னாபரணங்களையணிநதவை யும கன்றுகளோடுகூடியவையும குடஙகுடமாகக் கறக்கிறவையு மான பதினாயிரம பசுகளைக் கொடுததான். விநதுதேசததரசன் பொன்மாலைகளினால அலஙகரிக்கபபட்டவையும விநதுதேசததிலுண் டானவையுமான குதிரைகளில் இருபததையாயிரம கொடுததான். மலைவீரதேசத்தரசன் பொன்னினாலும முதது்க்களினாலும் ரதனங் களினாலும் அலஙகரிகக்பபடடவையும ஒளியினால மத்தியான்னசூரி யனைபபோல பிரகாசிபபவையும யானைகளாட்டினவையுமான மூந் நூறு சிறநததேர்களையும மறறுமுள்ள கபபங்களையும் எடுத்துக்கொ ண்டுவநது பாண்டுபுதரனுக்குக் கொடுததான். பாரதமே! ராஜாவே! அவநதிதேசததரசன் ஆயிரக்கணக்கான பலவகைரதனங்களையும் உய ர்நத முததுமாலைகளையும தோள்வளைகளையும மற்றும பலவகைஆப ரணங்களையும் பதினாயிரமதாஸிகளையும் கபபமாக்கொண்டு ஸபையின்

வாயிலில்வந்து பார்க்கவிருப்பமுள்ளவனுக்குக் காத்திருந்தான். தசார்ணதேசத்தரசனும் சேதிதேசத்தரசனும் வீரனான சூரஸேனதேசத்தரசனும் உயர்ந்தவஸ்திரங்களையும பலவகை ரத்னங்களையும் மற்றுமுள்ள காணிக்கைகளெல்லாவற்றையும எடுத்துக்கொண்டுவந்து பாண்டவனுக்கு அர்ப்பணஞசெய்தனர். காசிராஜன் மிக்கஸந்தோஷத்துடன் எண்பதினாயிரம்பசுக்களையும எண்ணூறுயானைகளையும தர்மராஜாவுக்குக் கபபமாகக்கொடுத்தான. பொன்மாலைகளையணிந்தவையும் ஸிந்துநதிக்கரையிலுண்டானவையுமான குதிரைகள் பதினாயிரத்தையும் பலவகை ரத்னங்களையும் காசிராஜன் காணிக்கையாகக் கொடுத்தான். விதேஹதேசத்தரசனாகிய கிருதக்ஷணனும கோஸலதேசத்தரசனாகிய பிருஹத்பலனும பதினாயிரம சிறந்தகுதிரைகளைக் கொடுத்தனர். வஸாதிகளென்னும தேசத்தாரோடுகூடிய சைபபியராஜனும மாலவர்களோடுகூடிய திரிகர்த்தராஜனும பாண்டவர்களுக்கு ரத்னங்களைக்கொடுத்தனர. ஒவ்வொருஅரசனும கொடுத்த ரத்னங்களுக்கும் அளவில்லை. ராஜாவே! பாருகசசதேசத்தரசன் உயர்ந்தஹாரங்களையும, மறறும பலஆபரணங்களையும, நூல்வஸ்திரங்களை உடுத்துகிறவரும் இளமைபபருவத்திலிருபபவரும மெலலிய தேகமும நீண்டகூந்தலுமுளளவரும பொன்னணிகலங்களை அணிந்தவருமாகிய நூறுயிரமதாஸிகளையும், பிராம்மணத்தமர்கள் தரிக்கத்தக்க சிறந்த சுததமானசால்வைகளையும், எல்லாக் காணிக்கைகளையும கொணர்ந்து கொடுத்தான். அவர்களனைவரும தர்மராஜாவைக் காண்பதற்காக அரண்மனைவாயிலில் நின்றனர். காணிக்கைகளையளிக்கும்போதுமட்டுந்தான் அவர்களுக்கு வழிகிடைத்தது. மழைபெய்வதனாலும நதிகள்பாய்வதனாலும கிருஷ்ணயில் சிரமப்படாமலே தான்யங்களை விருத்திசெய்பவரும ஸமுத்திரக்கரையில் பிறந்தவரும ஸிந்துநதிக்கரையில் வஸிபபவருமான த்ருமர், பாரதர், காச்யர், கிராதகர்களென்னும அரசர்கள் பலவகைரத்னங்களையும் வெள்ளாடுகள், செம்மறியாடுகள், பசுக்கள், கோவேறுகழுதைகள், ஒட்டகங்கள் இவைகளையும் பொன்னையும பழத்திலுண்டான மதுவையும் பல வகைச் சால்வைகளையும் காணிக்கைகளாக எடுத்துக்கொண்டுவந்து அரண்மனைவாயிலில் தடுக்கபபட்டு நின்றனர். மஹாபலசாலியும் சூரனும் மிலேச்சர்களுக்கு அதிபதியும பிராக்ஜ்யோதிஷதேசத்தரசனுமான பகதத்தராஜன், யவனர்சேனையுடன் காறறுக்கொப்பான வேகமுள்ள உயர்ந்த ஜாதிக்குதிரைகளையும மறற எல்லாவகையான காணிக்கைகளையும்கொண்டு விரைவாகவந்து வாயிலிற்றடுக்கப்பட்டு நின்

ரூன். பிராக்ஜ்யோதிஷாதிபதியான அவன் குதிரைகளுக்குப் போட
த்தக்க சிறந்தஆபரணங்களோயும தந்தப்பிடிபோட்ட சிறந்ததகத்திகளே
யும்கொடுத்துச் சென்ரூன். பலதேசங்களிலிருந்துவந்த [1]த்வியகூர்,
[2] த்ரியகூர், [3]லாடாகூர், [4]ஔஷ்ணீஷர், [5]அஹயர், [6]பாஹ்ரகர்,
[7] புருஷாதகர், [8]ஏகபாதர்என்னும் ஜாதியார் அங்கே பொன்வெள்ளி
முதலிய தனங்களே யுதிஷ்டிரனுக்குக் காணிக்கையாகக் கொடுக்க
வந்து வாயிலில் தடுக்கப்படடிருந்ததைக் கண்டேன். பட்டுபபூச்சிநிற
முள்ளவையும் கிளிநிறமுள்ளவையும வானவில நிறமுள்ளவையும்
செவ்வானநிறமுள்ளவையுமாகப பலநிறங்களாயிருக்கும் மனோவே
மான அசீனகம காடடுக்குதிரைகளோயும விலேயில்லாதபொன்னேயும
ஏகபாதர்கள் யுதிஷ்டிரனுககுஅளித்தனர். அபபோது லிம்ஹளதேச
த்தரசன் மிகுதியான தனததையும சிவபபும பசுமையும கறுபபுமான
நூறுபாரம் சிறந்ததருதனகடடைகளோயும எடுத்துக்கொண்டுவந்து
வாயிலில்தடுக்கப்பட்டு நின்ரூன். மஹாராஜாவே! நகுலவிஷயர்க
ளென்றும பாபபரேயாகளென்றும பெயர்பெற்ற அரசர்கள் நூறுயிரம்
தாஸிகளோயும ஆயிரம் சாலவைகளோயும் எடுததுக்கொண்டு வாயிலில்
தடுக்கபபட்டு நின்றனர். ஓ! மஹாபலசாலியே! நினேததபடிசெய்
கிறவர்களாகிய பௌண்டரர், தாமலிபதர் என்னுமசர்கள் சநதனத்
தையும், வெள்ளியையும, அகிறகட்டையாலும பளிங்கினுலும் தர
தங்களினுலும செய்யபபட்ட சாமான்களோயும, ஜாதிக்காய்களோயும்
தக்கோலம் லவங்கம கர்பூரமுதலான பலவகைப பொருள்களோயும்
எடுத்துக்கொண்டு வநதனர். மஹாரத்மாக்களான அவர்களனேவரும
வாயிலில்தடுக்கபபட்டு நின்றனர். மஹாராஜாவே! சைலேயனென்
னுமசன் வெண்படடுக்களே யெடுததுக்கொண்டு வாயிலில் நின்ற
போது காவறகாரரால தடுக்கபபட்டான். சீனரும் ஹூணரும்
கஷரும் காசரும் மலேகளுக்குள்ளிருப்பவருமாகிய இவர்கள் எல்லாத்
தேசங்களிலும பெயரபெற்றவையும் பழகினவையுமான பதினுயிரம
குதிரைகளோயும, உஷ்ணதசீதகாகரும கமபீளதததையும், விசாலமும்
நல்லநிறமும் மென்மையுமுள்ளவையும பாஹ்லீகதேசத்திலும சின
தேசத்திலு முண்டானவையும பட்டுப்பூச்சிகளினுலும [9]ரதனங்களி
னுலு முண்டானவையுமான பட்டுக்களோயும், சுவையுள்ளகனி முத

[1] இரண்டுகண்களே யுடையவர். [2] மூன்று கண்களோயுடையவர். [3] நெற்
றியில் கண்ணேயுடையவர். [4] தலேப்பாகைக்காரர். [5] குதிரையில்லாதவர்.
[6] கைகீண்டவர்கள்; நீந்துகிறவர்களென்பர் சிலர். [7] மீனினதேத்தின்பவர்.
[8] ஒற்றைக்காலர். [9] கற்சாயங்களினுலும்.

லியவற்றையும், நல்லமணமுள்ளவற்றையும் கொணர்ந்து தெரிவித்த பிறகு வழிவிடப்பட்டனர். கர்வடர், தோமரர், சூரர், வர்த்தனக ரென்பவர்கள் பலவிதமான வஸ்திரங்களையெடுத்துக்கொண்டுவந்து வாயிலில் தடுக்கப்பட்டுநின்றனர். மஹாராஜாவே! பிராக்கோடர், நர்டகேயர், நந்திகரகர், நாபிதர், தரைபுரர், பஞ்சமேயர், ஊருஜர் முதலான காட்டரசர்களனைவரும் மிகுதியான தனங்களையும ஸாமான்களையும் எடுத்துக்கொண்டுவந்து வாயிலில் தடுக்கபபட்டுநின்றனர். கௌரவராஜாவே! சகர், துஷாரா, தோமகர், சிருங்கிகள், அசமகர், ஊருகமர்ஆகிய இவர்கள் என்னுல் பத்துக்கோடிகளாக எண்ணப பட்டவையும் தாமரைத்தாது நிறமுள்ளவையுமான பொற்குவியல்களையும் கூர்மையும் நீளமுமானகத்திகளையும தடிகள, சக்திகள், கோடாலிகள் முதலிய மற்றைஆயுதங்களையும பருத்திநூலாற செய்யப்படாத மெல்லியவஸ்திரங்களையும பதபபடுத்தின ஆட்டுத்தோல்களையும் கொழுததஜினங்களையும் கொண்டுவந்து வாயிலில் தடுக்கப பட்டு நின்றனர். கிழக்குத்தேசதத்துக்கு அதிபதியான அரசன் பொன்னினுலும ரத்னங்களினுலும விசிதரமானவையும யாணத்தந்தங்களினுறை செய்யபபட்டவையும மிக்க விலைபெற்றவையுமான ஆஸனங்களையும வாஹனங்களையும சயனங்களையும பொன்னிலைலங்கரிக்கப்பட்டவையும் பழகினகுதிரைகள பூட்டபபட்டவையும புலித்தோல் போர்க்கபபட்டவையும மேலேஅலங்காரங்கள் செய்யபபட்டவையும விசித்ரமான பலஉருவமுள்ளவையுமான ரதங்களையும அனேக விதமான விறகளையும நாராசங்களையும் அர்தசந்திரபாணங்களையும பலஅஸ்தரங்களையும இவ்வகையான இன்னும அனேகமபொருள்களையும எடுதத்துக்கொண்டு மஹாத்மாவான பாண்டவனுடைய யாகசாலையில் பிரவேசித்தான். படபபூச்சியிலுண்டான பட்டுக்கள் இரண்டாயிரததையும் செடிகளாலுண்டான படடுக்கள் பதினாயிரத்தையும் வெண்கலபபாத்திரங்களையும் விலைபெறற ரத்னகம்பளங்களையும் பலவகை ரத்னங்களையும ஸந்தோஷதுடன் தர்மராஜாவுக்கு அளித்தான். ராஜாவே! கடற்கரையிலுள்ள மனிதாகள் இன்னுமனேக ரத்னங்களைக் கொண்டுவந்து பாண்டவனுக்குக் கொடுததனர். ராஜாவே! மாலவர்கள பலவகைரத்னங்களைக் கொடுததனர். அரசர்க்கரசே! மஹாபலசாலியான ஸுராஷ்டிரதேசதததரசன் கோடிமரக்கால் அளவுள்ள கோதுமைமுதலான பலவகைத்தானியங்களையும் பலவகைரத்னங்களையும் எடுத்துக்கொண்டுவந்து பாண்டவனுக்கு அன்புடன் கொடுத்து மஹாயாகத்தில் பிரவேசித்தான். மஹாராஜாவே! அந்த

ஸ்ராஷ்டிராஜன் இரண்டுமரக்கால்பிடிக்கும் நல்லெண்ணெய்க்குட
ங்கள் பதினாயிரமும் ஆயிரம்வண்டி உயர்ந்தவெல்லங்களுமாகிய இவை
எல்லாவற்றையும கொண்டுவந்து குந்திபுத்ரனுக்குக் கொடுத்தான்.
ராஜாவே! பலதேசங்களிலிருந்தும வந்த மற்றஅரசர்களும பலவகை
ரத்னங்களை கொண்டுவந்து தாமராஜாவுக்குக்கொடுத்தனர். தேசங்
களும வனங்களும மலைகளுமடங்கிய இந்தஜமபுத்வீபமுழுமையிலும்
தாமராஜனுக்குக் கப்பம் கொடாத அரசன் ஒருவனுமில்லை. அந்த
யாகத்திற்கு வராதமனிதன் ஏழுவருஷங்களிலுமில்லை. பலவகைக்
கூட்டங்களும நிறைந்த அந்த யாகசாலையானது இந்திரஸபைபோல
விளங்கிறது. ராஜாவே! அரசர்கள் யாகத்தைக்கு வெகுமதிகளாகக்
கொடுத்த பலவகைப பெருந்தனக்குவியலகளைபற்றி நான் சொல்லப்
போவதைக் கேளும. மேருமலைக்கும மந்தரமலைக்குமிடையில் சை
லோதையென்னும நதிக்கரையில் மூங்கில்களின் இனியநிழலில் அடி
த்து வலிபபவர்களும தனி ஆஸனம்முதலிய மரியாதைகளுக்குத்தக்க
வர்களுமான கஷர், பிரதரர், தீர்க்கவேணுக்கள், பாரதர், குலிந்தர்,
தங்கணர், பரதங்கணர் ஆகிய மனிதாகள, எறுமபுகளிஞல் வளை
களிலிருந்து வெளியிற்கொண்டுவரப்பட்ட பிபீலிகமென்னும் பெய
ருள்ள சிறந்ததங்கத்தை மரக்காலால அளக்குமபடி குவியல்களாகக்
கொணர்ந்து கொடித்தனர். கறுத்தவாலும வெளுத்தவாலுமுள்ள
அனேகம் கவரிமான்களையும்,இமயமலையின் மலர்களிலிருந்துண்டான
மிகுதியான இனியதேனையும, வடகுருதேசத்திலிருந்தும் கைலா
ஸத்துக்கு வடக்கிலிருந்தும் வந்த மிகச்சிறந்த சக்தியுள்ள மூலிகை
களையும், மஹாராத்மாக்களான வ்ருஷ்ணிவம்சத்தரசர்களென்னும் அரசர்களும்
மலைநாட்டரசர்களும அஜாதசத்ருவுக்குக் கொண்டுவந்து வணங்கி
நின்றனர். ராஜாவே! அவர்கள் வாயிலில் தடுக்கபபட்டு நின்ற
னர். மனிதர்க்கதிபதியே! இமயமலைக்குப பின்புறத்திலும ஸுமே
யன் உதயமாகிற மலைச்சாரலிலும் கடற்கரையிலும் லௌஹித்ய
மென்னும் ஆறறின் அருகிலும வலிப்பவர்களும கனிகளையும் கிழ
ங்குகளையும் புஜிபபவர்களும தோலாடையுடுப்பவர்களுமாகிய இன்
னுமனேக கிராதர்கள் உயர்ந்தசந்தனங்களையும அகில்களையும் சிற
ந்த சால்வைகளையும் தோல்களையும் ரத்னங்களையும பொன்களையும்
பலவகை வாஸனைத்ரவியங்களையும் கிராதஜாதிப பெண்களாகிய
தாஸிகள் பதினாயிரவரையும் கண்ணுக்கினிய அனேகம்பொருள்களை
யும நெடுநாளம்செல்லத்தக்க மிருகங்களையும பறவைகளையும மலை
களிலிருந்து சேர்க்கப்பட்ட மிகுந்தஒளியுள்ள தங்கத்தையும் கப்

பமாகக் கொண்டுவந்து வாயிலிற்றடுக்கப்பட்டு நின்றனர். ராஜா வே! காபவ்யர், தரதர், தர்வர், சூரர், யமகர், ஔதும்பர், தர்வி பாகர்ஆகிய இவர்கள் வாயிலில் தடுக்கப்பட்டுநின்றனர். காச்மீரர், சுமாரர், கௌரகர், ஹம்ஸகர், சிபிகள், திரிகர்த்தர், யௌதேயர், மத்ரகர், வஸுதேயர், மௌலேயர், தாஹர், க்ஷுத்ரகர், மாலவர், சௌண்டிகர், ஔதகர், ஸால்வர், அங்கர், வங்கர், யவனர், கயர் என்னும் உயர்குலத்தோரும் சிறந்தவரும் குறைமற்றவருமாகிய அரசர்கள் நூற்றுக்கணக்காக விரிசையாக ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு அஜாதசத்ருவுக்குத் தனத்தைக்கொண்டுவருது கொடுத்தனர். பாரதரே! வங்கர், களிங்கர், மகதர், தாம்ரலிபதர், புண்ட்ரகர்என்னு மரசர்கள், தங்கள்தேசங்களிலிருந்துவருது [1]கௌசிகம, [2]பத்ரோர்ணம் என்னும் பட்டுக்களைத் தர்மராஜனுக்குக் கொடுத்தனர். நூகத் தடிகள்போன்ற நீளங்களையுடையவையும் பொறகசசைகள் கட்டப்பட்டவையும் தாமரைமலரின் நிறமுள்ளவையும மேலே சித்ரகமபளங்கள் விரிக்கபபட்டவையும் மலைகளபோன்றவையும் எக்காலமும் மதஜலம் பெருகுகின்றவையும காம்யகமென்னும தடாகதின்அருகிலிருப்பவையும அடக்கமுளளவையும் நல்லஜாதியிற் பிறந்தவையும் அலங்காரங்களுள்ளவையுமான ஆயிரமயானைகளை ஒவ்வொருவனும கப்பமாகக் கொண்டுவருது நிற்கும்போது, 'வாயில்விட்டபிறகு போகலாம்' என்று வாயிற்காவதகாரர்களால் சொல்லபபட்டதனல் அவர்கள் ஸந்தோஷமடையவில்லை. விதேஹர், புண்ட்ரர், கௌலேயர், தாம்ரலிப்தகர், மருகர், காசிகர், தர்த்தர், பௌமேயர், நடநாடகர, கர்நாடர், காம்ஸ்யகுட்டர், பத்மஜாலர், லதீநரர், தக்ஷிணதேசத்தார், புளிந்தர், சபரர், தங்கணர், கஷர், பர்பரர், யவனர், கர்க்கரர், ஆபீரகர், பல்லவர், சகர், காரூசர், துபபகர், காசிகர்முதலான பல ராஜாக்களும பலதிசைகளிலிருந்தும வந்தனர். மற்றுமுள்ள அனேகமஹாத்மாக்களினல அங்கே ரத்னஙகள் கொண்டுவரப்பட்டன. கடலிலுண்டான உயர்ந்தவைடூர்யக்கற்களையும முத்துக்களையும் வலம்புரிச்சங்கங்களையும சிறந்தசிபிகைகளையும் லிம்ஹாஸர்கொடுத்தனர். இந்திரனுடைய வேலைக்காரனகிய சித்ரரதனென்னும கந்தர்வராஜன் ரத்னச்சேணம் போர்ட்டப்பட்டவையும் கடைக்கண்கள் சிவந்தவையும். வாயுவேகமுள்ளவையுமான நானூறு கறுப்புக்குதிரைகளைக் கொடுத்தான். தும்புருவென்னும் கந்தர்வன் ஸந்தோஷமடைந்து மாலிகைநிறமுள்ளவையும் பொன்மாலைகளணிந்தவையுமான

1 நாரிஞலுண்டானது. 2 பூச்சியினலுண்டான்து.

நூறுகுதிரைகளையளித்தான். கௌரவராஜாவே! ஸமாதனை சூகர தேசத்தரசன் அனேகமநூறு சிறந்தயானைகளைக் கொடுத்தான். மத்ஸ்யதேசத்தரசனிய விராடனுல பொன்மாலைகளையணிந்த இரண்டாயிரம் மதயானைகள் கபபங்களாகக் கொடுக்கபபடடன. ராஜாவே! பாமஸராஷ்டிரமென்னும தேசததிலிருநது வஸுதானனென்னும அரசன் பொன்மாலைகளையணிநதவையும வேகமும பலமுமுள்ளவையும இளமைபபருவத்திலிருபபவையுமான இரண்டாயிரம்குதிரைகளையும இருபதாறுயானைகளையும நிரபபின காணிகையாக கொண்டுவநது பாண்டவர்களுக்குக் கொடுததான். ராஜாவே! துருபதனுல் பதினுலாயிரம தாஸிகளும மனைவிகளோடுகூடிய பதினுயிரம் தாஸாகளும யானைகள் பூடடினஇருபதாறு தோகளும தனது முழுராஜ்யமும யாகத்திற்காகப பாண்டவாகளுக்கு அளிக்கபபட்டனர். விருஷ்ணிகுலததோனுகிய கிருஷ்ணனும ஆஜமீடனுக்கௌரவிப்பதறகாகப பதினுலாயிரம சிறநதயானைகளைக கொடுததான். கிருஷ்ணன் அஜமீடனுடைய ஆத்மா; அஜமீடனன கிருஷ்ணனுடைய ஆத்மா; அஜமீடனன் எதைசசொன்னுலும அதையெல்லாம கிருஷ்ணன் செய்வானென்பது திண்ணம. தனஞசயனுக்காகக் கிருஷ்ணன் ஸ்வர்கலோகததையும விடடுவிடுவான. அவ்வாறே கிருஷ்ணனுக்காகத தனஞ்சயன் உயிரையுமவிடுவான். சோழராஜனும பாண்டியராஜனும மலயம்தர்தமென்னும மலைகளிலிருநது பொறகுடங்களில் வைக்கப்பட்ட மணமுள்ள சநதனக்குழமபுகளையும சந்தனக்கட்டைகள் அகிற்கட்டைகளின் குவியல்களையும ஒளியுளள முத்துக்களையும ரதனங்களையும் பொன்மயமான மெலலியவஸ்திரங்களையும் கொண்டுவநது வாயிலில் வழிகிடைக்காமலிருநதனர். ஸிமஹளர்கள் ஸமுத்திரத்திலுண்டான உயர்நத வைடூர்யக்கறகளையும முத்துக்குவியல்களையும நூற்றுக்கணக்கான விரிபபுக்களையும அங்கே கொண்டுவந்தனர். ரத்னமயமான உடைகள போரததவரும கறுத்தநிறமுள்ளவரும கீட்கடைகள் சிவநதவருமான ஸிமஹளர்கள் அநதக் காணிக்கைகளையெடுதது்கொண்டுவநது வாயிலில் தடுக்கப்பட்டு நின்றனர். பிராமமணர்களும ஜயிக்கபபட்ட க்ஷத்ரியர்களும வைசியர்களும் பணிவிடைசெய்யக்கருதின சூத்ரர்களும தர்மராஜாவை ஸந்தோஷபபடுதது்வதறகாகக் காணிக்கைகளைக் கொண்டுவந்தனர். மிலேச்சர்களனைவரும முதல்இடைகடைசியாகிய எல்லாவருணத்தாரும யுதிஷ்டிரனிடம அன்போடும் கௌரவத்தோடும்வந்தனர். பலதேசங்களிலுண்டான பலஜாதியார் வநதிரு

ந்ததனால இவ்வுலகமே யுதிஷ்டிரனுடையகிருஹத்தில் சோக்கபபட்டது போலிருந்தது. அரசர்களால் எதிரிகளுகுச சேர்பபிக்கப பட்ட அளவறற பலவகைக்காணிக்கைகளோப பாரதபோது துயரத்தினல் எனக்கு இறபபதில எண்ணமுண்டாயிற பு. ராஜாவே! யுதிஷ்டிரன், எவர்களுக்குச் சமைதத்தவறையும் சமைகாதவற்றையும் பகுத்துக்கொடுததாரோ அநதபபாண்டவாகளின் வேலைக்காரர் களோப்பற்றி உமகுசசொலவேன். யாணபபாகாகளும குதிரைகாரர்களுமாக மூன்றுகோடியபதினாயிரவா. ரதிகர்கள் பதத்துக் கோடி. காலாடகளுக்குக்கணக்கில்லை. பசசையாக அளக்கபபடுவதும பிறகுசமைக்கபபடுவதும உடனே கொடுகபபடுவதுமாயிருந்தது. மறறோரிடதில் சுததிசெய்வதற்காகப புண்ணியாகவாசனத்தின்கோஷமேயிருநதது. யுதிஷ்டிரனுடைய கிருஹத்தில எல்லாவருணங்களிலும், உண்ணதவறையும குடிக்காதவறையும அலங்காரஞ் செய்துகொளளாதவறையும வெகுமதிகபபடாதவறையும நான்பார்க்கவில்லை. யுதிஷ்டிரனல் காபபாறறபபட்ட ஸ்நாதகர்களும கிருஹஸ்தர்களும எண்பத்தெண்ணாயிரவா. ஒவவொருவருக்கு மூபபது மூப்பது வேலைக்காரிகள். அவாகள மிக்க அன்போடும் திருபதியோடும யுதிஷ்டிரனுடைய பகைவர்கள் அழியவேண்டுமென்று பிராாத்திக்கின்றனர். யுதிஷ்டிரனுடைய கிருஹத்தில பொறபாத்திரங்களில்புஜிக்கும் ஊர்த்துவரேதஸ்களான யதிகள பதினாயிரவர். ராஜாவே! த்ரௌபதி, தான்புஜியாமல் கூனாகள குள்ளர்களமுதலான எல்லாஜனங்களும உண்டதையும உண்ணதையும் கவனித்தாள். பாரதரே! பாஞ்சாலாகள் ஸம்பநதிகளாயிருபபதனலும அநதகர்களும விருஷ்ணிகளும சினேகிதர்களாயிருபபதனலும அவ்விருதிறத்தாமட்டும தர்மராஜாவுக்குக்[1] கபபமாகக்கொடுக்கவில்லை.

எழுபத்தோன்பதாவது அத்தியாயம்.

த்யூதபர்வம். (தொடர்ச்சி.)

(துரியோதனன்சொல்லியதன்தொடர்ச்சி.)

பூஜிகக்கத்தக்கவர்களும ஸத்யமதவருதவாகளும சிறநததவமும நிரமபினவிதையுமுளளவர்களும நன்றுக பேசுகிறவர்களும் வேதங்களின்முடிவுகண்டு அவபிருதஸ்நானம் செய்தவர்களும் தைரியமும் அகாரியங்களில் வெட்கமுமுள்ளவர்களுமாகிய தர்மததில மன

[1] அவாகள்பிரீதியினல்கொடுததனர்.

முள்ளவர்களும புகழ்பெறறவர்களும ராஜ்யபடடாபிஷேகமசெய்யபபெற்றவர்களுமான அரசாகளும யுதிஷ்டிரனிடம காததிருகின்றனர். வெண்கலததிறை செய்யபபடட கறக்குமபாதிரஙகளுடன் அரசர்களினால தக்ஷிணைகளாகக்கொண்டுவரபபடட அனேகபாயிரம் காட்டுபபசுகளை ஆங்காங்குகாணபபடடன. பாரதமே! அநதயாகதில அரசாகள தாமராஜஸூமரியாதை செய்வதறகாக ஊகததுடன் அபிஷேகததிறகுரிய பலவகைபபொருளகளையும தாமாகவேகொண்டு வநதுகொடுததனர். பாஹ்லீகதேசததரசன பொனனிஞலலங்காரஞ் செய்யபபடட ரதததைகொண்டுவநதான். ஸுதக்ஷிணனென்னு மரசன் காமபோஜதேசததிலுளள வெள்ளைகுதிரைகளை அநுபபூட்டினான. சேதிதேசததரசனும மஹாபலசாலியுமான சிசுபாலன் அன்புடன் தேரசசையும உயரமான கொடிமரததையும தாமேகவே கொணாநது கொடுததான. தெனதேசததரசன் கவசதததையும, மகததேசததரசன் மாலையையும கிரீடததையும, சிறநதவிலைளாளியான வஸுதானனென்பவன அநுபதுவயதுளள சிறநதயானையையும, மதஸ்யதேசததரசன் பொன்பாசசிகைகளையும, ஏகலவ்யன் பாதுகையையும, அவந்திதேசததரசன் அபிஷேகததிறகுரிய பலவேக தீர்ததஙகளையும, சேகிதானன தூணியையும, காசிராஜன் வில்லையும், சல்லியன் பொன்னிஞலஅலங்கரிகபபடடதும உறையில்வைகப பட்டதுமான அழகானபிடியுளள கதியையும கொடுததனர். பிறகு தெளமயரும மிகச்சிறநததவமுளள வியாஸரும நாரதரையும தேவலரையும அஸிதரையும முன்னிடுகொண்டு அபிஷேகஞ்செய்தனர். அநதஅபிஷேகத்திறகு மஹரிஷிகள அன்புடன்வநதிருநதனர். வேதஙகளிற கரைகணடவாகளான பரசுராமமுதலியமறறு முளள மஹாதமாக்களும மிகுதியாகத தக்ஷிணைகளைக்கொடுக்கும் தர்மராஜாவினிடம ஸபதரிஷிகள தேவலோகதில் தேவேநதிரனிடமவருவதுபோல மநதிரஙகளைச் சொல்லிக்கொண்டு வநதனர். தவருதபராக்ரமமுள்ள ஸாதீயகி தர்மராஜாவுக்குக் குடைபிடித்தான். பாண்டவாகளாகிய தனஞ்சயனும பீமசேனனும இரண்டுவிசிறிகளையெடுதது க்கொண்டனர். நகுல ஸஹதேவர்களிருவரும இரண்டு வெண்சாமரங்களை எடுதது க்கொண்டனர். முன்யுகதில பிரம்ம தேவர் இநதிரனுக்காக எடுதது கொடுத்தான அநதவருணனுடையசங்கத்தைத திருபபாறகடல தர்மராஜருக்குக் கொணர்ந்து கொடுத்தது. ஆயிரமபொன்களால விசுவகர்மாவினால நன்முகசெய்யபபட்டதும உறியில்வைக்கபபட்டதுமான அநதச் சங்கத்தினால

கிருஷ்ணன் அபிஷேகஞ்செய்தான். அதனால் எனக்குத் துயரமுண்டாயிற்று. பக்ஷிகள் கீழ்கடலிலிருந்து மேல்கடலுக்கும் தென்கடலுக்கும் சென்றன. வடகடலுக்குமட்டும் செல்லவில்லை. அந்தக் காலத்தில மங்களகரமானசகுனங்கள் நூறறுக்கணக்காக ஊதினர். அவை ஊதப்பட்டசபதிக்கும்போது எனக்குமயிர்சிலிர்த்தது. பராக்ரமம குறைந்தவர்களான அரசர்கள் விழுந்தனர். தைர்யமும பராக்ரமமுள்ளவர்களும ஒருவர் அன்புள்ளவாகளுமான திருஷ்டத்யுமனனும பாண்டவாகளும ஸாத்யகியும் கிருஷ்ணனுமாகியஎண்மரும மயகமுற்றஅரசர்களையும் என்னையுமகண்டு நகைத்தனர். ராஜாவே! பிறகு அஜனன் ஸந்தோஷத்துடன் பொன்கடடின கொமபுகளோடுகூடிய ஐந்நூறுவிருஷபங்களைப பிராமமணச்ரேஷ்டர்களுக்குத தானஞசெய்தான். குந்திபுதரனும ராஜாவுமான யுதிஷ்டிரன், மிகச்சிறந்த பெருமையையடைந்திருந்ததுபோல நகுலதேவன், நாபாகன், மாநதாதா, மனு, வேனன்புத்ரனுகியபிருது சக்ரவர்த்தி, பகீரதன், யயாதி, நகுஷன்இவர்கள் யாருமிருந்ததில்லை. இவ்வாறு ஹரிசசந்திரன்போல ராஜஸூயத்தைச்செய்து யுதிஷ்டிரன்பிரபுவானுன் பிரபுவே! பாரதரே! ஹரிச்சந்திரனிடத்திலிருந்ததுபோல் யுதிஷ்டிரனிடமிருக்கும் ராஜ்யலக்ஷ்மியைக்கண்டபிறகு என்உயிர்வாழ்க்கையைச் சிலாகயமாக எபபடிநினைக்கிறீர்? ராஜாவே! இந்தக்காலமே குருடனுல்படைக்கபபட்டதுபோலத் தானுமாறுயிருக்கிறது. தாழ்ந்தவர் விருத்தியாகின்றனர். உயர்ந்தவர் குறைகின்றனர். கௌரவரே! இவவாறு பாரதத்பிறகு என்னஆராய்ந்தபாரத்தும் நான்ஸுகம்பெறவில்லை. அதனால, இவ்வகையான இனபபையும நிறமாறுதலையும துயரத்தையும அடைந்திருக்கிறேன்" என்றான்.

எண்பதாவது அத்தியாயம்.

த்யூதபர்வம். (தொடர்ச்சி.)

(துரியோதனனுக்குத் திருதராஷ்டிரன் பாண்டவர்களைப் பகையாமலிருக்கும்படி நியாயம்சொல்லியது.)

த்ருதராஷ்டிரன், "புத்ரனே! நீ முதல்புத்ரன்; எனதுமுதல் பார்யையின்புத்திரன்; பாண்டவர்களைபபகையாதே; பகைப்பவன் மரணத்துக்குஸமானம்மானதுயரத்தைத் தேடிக்கொள்ளுகிறான். பாரதச்ரேஷ்டனே! பிறருடைய கபடத்தையறியாதவனும் நம்மைப்போலவே ஜீவரியமுள்ளவனும் நமமுடைய மித்திரர்களையே தனக்கும்

மித்திரர்களாக உடையவனும் நம்மைப் பகையாதவனுமாயிருக்கிற யுதிஷ்டிரனே உன்னைபோன்றவன்பகைபடது எவ்வகை? ராஜாவே! புத்ரனே! குலத்திலும் பாக்யமதிலும் அவனுக்குச்சரியாயிருக்கிற நீ அறியாமையால உன்பிராதாவினுடைய ஐச்வர்யத்திறகு ஏன் ஆசைப்படுகிறாய்? இப்படியிராதே; அடஙகு; வயஸனப்படாதே; பரதச்ரேஷ்டனே! அநதயாகச்சிறப்பை நீவிரும்புகிறாயின் அம்மஹாயாகத்தை உனக்கும் ரித்விக்குக்கள செய்விக்கட்டும. அரசர்கள் உனக்கும மிகுதியான திரவியததையும ரத்னங்களையும ஆபரணங்களையும் அன்போடும கௌரவத்தோடும் காணிகையாகக் கொடுபபர். குழநதாய்! அயலானுடையபொருளில ஆசைபபடுவது கெட்டவர்களின்நடை. தனக்குளளதில் திருபதியையடைநது தன் தர்மத்தைவிடாமலிருப்பவனெவனோ அவன்தான் எளிதில் விருத்தியாவான். வேண்டினவற்றைக் கறக்கும பூமி வீரனுக்குபபத்னியென்றுசொல்லபபடுகிறது. அதுபோலவே ராஜ்யலக்ஷ்மியும வீரனுடைய பாரியைதான். இவ்விரண்டும பாரஷ்யகளைபபோன்றவையே. உனக்கும் சக்திபிருக்குமாயின் இநதபபுவனியைஆளவாய். அயலான் பொருளை அபஹரிபபதுமடடுமம சிறிதும்தகாது. வேண்டினவர்கள் விஷயத்தில் அக்ரமத்தைக்கருதுகிறவனுக்கு இமமைமறுமைஇரண்டிலும துயரந்தான். அன்னியருடைய திரவியங்களையடையபபிரவிர்ததியாமலிருப்பதும் தன்கார்யங்களில விடாமுயறசியும ரட்டினபொருள்களைக்காப்பதுமாகிய இவைதாம பிரபுதவத்தின் அடையாளங்கள். ஆபத்துக்களில் துயரபபடாதவனும செய்வனவறறைத திருநதச் செய்பவனும என்றுமமுயற்சியுள்ளவனும தவறுதலில்லாதவனும மனததையடக்கினவனுமான மனிதன் எககாலமும் கேஷமங்களையே பார்பபான். தன்கைகளையே வெட்டுவதுபோல இநதபபாண்டுபுத்ரர்களை நீ வெட்டலாகாது. அநதபபாண்டவாகளும உன்விஷயததில் அபபடியே. உன்பிராதாகளின் அநதத தனதைப்பெறுவதற்காக மித்திரத் துரோஹஞ்செய்யாதே. ராஜாவே! பாண்டுவின்புத்ரர்களைப் பங்கயாதே. அப்படியே உன்பிராதாக்களான அவர்களுடைய நிரம்பினஐச்வரியத்தையும வெறுக்காதே. குழநதாய்! மித்திரத துரோஹஞசெய்வதில் பெருமபாவமிருக்கிறது. உனக்கு எவர்கள் கூடஸ்தர்களோ அவர்கள்தாம் அவர்களுக்கும்கூடஸ்தர்கள். பரதச்ரேஷ்டனே! நீயும அநதர்வேதிகையென்னும் யாகசாலையில் திரவியங்களைத்தானஞசெய்து மனதற்கினிய போகங்களையனுபவித்து மங்கையருடன் வினோயாடிக் கவலையின்றிச் சுகந்தனையிரு" என்றான்.

எண்பத்தோராவது அத்தியாயம்.

த்யூதபர்வம். (தொடர்ச்சி.)

(திருதராஷ்டிரனிடம் துரியோதனன் தன்கருத்தை வற்புறுத்திக்கூறியது.)

அங்ஙனம் கூறியதைக்கேட்ட துரியோதனன் சொல்லுகிறான்:—"எவனுக்குக் கேவலவிமட்டும் மிகுதியாயிருந்து இயற்கையறிவிலலாமலிருக்கிறதோ அவன், அகபபை பக்ஷணங்களின்சுவையை அறியாமலிருப்பதுபோலச் சாஸ்திரங்களின் கருத்தையறிவதில்லை. அல்லதை தெரிந்தே என்னைபபிரமிக்கசெய்கிறீரோ? நீர ஓடத்திற கட்டின ஓட்டம்போலிருக்கிறீர். உமக்கு ஸ்வகார்யத்தில் ஊக்கமில்லையா? அல்லது என்னை நீர்பகைக்கிறீரா? உமமைக்கடடேறியிடுபவராகஅடைந்த இந்தஉமதுபுதந்திரர்கள் நிலைபெறுர்கள். தனக்குத்தானே நேரிடக்கூடிய விஷயத்தையே நாமசெய்யதக்க காரியமாக நீர் எபபோதும்சொல்லுகிறீர். பிறர்புத்திகேட்பவனைத் தேவனுகப்பெற்றவன் வழிதெரியாமல மயங்குவான். அவன்பின்செல்பவர்கள் சரியானவழியில செல்வதெவ்வகை? ராஜாவே! முதிர்ந்தஅறிவுள்ளவரும் பெரியோரைஅடிததவரும ஜமபுலன்களையும கட்டினவருமானநீர தமகாரியங்களைச்செய்யத்தொடங்கினஎங்களை மிகவும் பிரமிக்கசெய்கிறீர். உலகநடையைக்காட்டிலும அரசன்நடை வேறென்று பிருஹஸ்பதிசொல்லியிருக்கிறார். அதனால வேறுதன் ஊக்கத்துடன் எபபோதும தன்லாபததையே சிந்திததலவேண்டும. மஹாராஜாவே! க்ஷத்ரியனுடையதொழில் ஜயததிலேதானிருக்கிறது. அது தர்மமாயிருந்தாலுமசரி; அதர்மமாயிருந்தாலும்சரி; தன்தொழிலைபபறறிப பரீக்ஷையேது? பரதச்ரேஷ்டரே! எதிரிகளினுடைய சிறப்புறற ராஜ்யலக்ஷ்மியைப பெறவிரும்புகிற அரசன் சாட்டையினால் ஸாரதி குதிரைகளை ஓடவிவதுபோல எதிரிகளை எல்லாத்திசைகளிலும ஓட்டவேண்டும. கபடமாகவோ வெளிபபடையாகவோவுள்ள எந்தஉபாயமானது எதிரியைத் துன்பபடுத்துமோ அதுதான் அஸ்தரமறிந்தவரின் அஸ்த்ரம். வெட்டுங்கருவியே அஸ்த்ரமென்று சொல்லப்படவில்லை. சத்துருவென்பதும மித்திரனென்பதும எழுதிவைத்திருபபதுமன்று; படடியமுமன்று. ராஜாவே! எவன், எவனுக்குத துன்பததையுண்டுபண்ணுகிறானோ அவன் அவனுக்குச் சத்துருவென்று சொல்லப்படுகிறான். திருப்தியடை

யாமலிருப்பதுதான் ஐச்வர்யத்திற்குக்காரணம்; அதனால் அதை நான்விரும்புகிறேன். ராஜாவே! விருதத்தியாவதற்கு முயற்சிசெய்வது தான் நீதியின்துணிபு. ராஜ்யத்திலும் செல்வத்திலும் எனதென்கிற எண்ணத்தை யாருமசெய்யத்தகாது. முன்கிடைததைப் பிறர் பிறருடுத்துக்கொள்ளுவார்கள். அஃது அரசர்களின்தர்மமென்றே அறிகின்றனா. இந்திரன் துரோகமபண்ணுவதில்லையென்று வாக்குதத்தஞ்செய்து நமுசியென்னுமஅஸுரனுடைய தலையைவெட்டினன். சத்துருவினிடத்தில் அவ்வகையான ஒழுக்கம எப்போது முள்ளதென்று இந்திரனாலேயே நிரூபிக்கப்பட்டது. பகையிலலாத அரசன் ஊரைவிடுச்செல்லாதபிராமமணன் இவ்விருவரையும பூமி, எலிகளாபபாமபுதின்பதுபோலத் தின்றுவிடுகிறது. ராஜாவே! ஒரு மனிதனுக்குப பிறபபினாலேயே பகைவன்இல்லை. எவனுக்கு எவனோடு தொழிலொனறுயிருக்கிறதோ அவனுக்கு அவன்பகைவன்; மற்றஜனங்கள பகைவராகார். எவன் சத்துருவின்பக்ஷ்ம அபிவிருத்தியாவதை அறிவின்மையினால் கவனியாமல விடுகிறானோ அவனுக்கு அநதச் சத்துருபக்ஷ்ம, சிகித்ஸைசெய்யாமல விடபபடடரோகம போல வேரையபறுதது விடுகிறது. பராக்ரமத்தினால மிக்கமேன்மையையடையும சிறியசத்ருவுங்கூட வேரில்லாதபுற்று மரத்தைதத்தின் பதுபோல அருகிலிருநதே அரிதாதுவிடுவான். அஜமீடவமசத்தவரே! பாரதரே! எதிரியின்சிறபபானது உமக்குபபிரியமாயிருக்கலாகாது. இநதநீதியானது புதிதுமான்கள தலியிலவைதிருக்கும் பாரமாயிருக்கிறது. தன்தேஹதத்தின் வளர்சியைபபோலத திரவியங்கள்விருத்தியாவதை எவன்விரும்புகிறானோ அவன்தான் தன் இனத்தாரில சிறபபையடைகிறான். உடனே மேன்மையைத்தருவது பராக்ரமந்தான். பாண்டவர்களின் ஐசுவரியததைக்காணமலிருநதால் எனக்குப பிராணஸங்தேஹம உண்டாகாது. ஆதலால், அந்தஐசுவரியததைப் பெறக்கடவேன்; அல்லது யுதத்திலிடபட்டுப படக்கடவேன். ராஜாவே! பாண்டவர்கள் நாளுக்குநாள் மேலாகின்றனர். நம்முடையமேன்மையோ நிலையற்றதாயிருக்கிறது. இந்தநிலைமையிலிருக்கின்ற எனக்கு உயிரினாலாவதென்ன?" என்றான்.

எண்பத்திரண்டாவது அத்தியாயம்.

த்யூதபர்வம். (தொடர்ச்சி.)

(சகுனியும் துரியோதனனும் சூதாட்டத்தைப்பற்றி வற்புறுத்திச் சொன்ன தன்மேல் திருதராஷ்டிரன் பாண்டவர்களையழைத்து வரும்படி விதுரை அனுப்பியது.)

சகுனி துரியோதனனைபபார்த்து, "ஜயிப்பவரிற்சிறந்தவனே! பாண்டுபுத்திரனை யுதிஷ்டிரனிடத்திலுள்ள திருதராஷ்டிரலக்ஷ்மியைக் கண்டு நீ துயரப்படுகிறாயோ அந்தராஜ்யலக்ஷ்மியைச் சூதாட்டத்தினால் நான்வாங்கிவிடுவேன். ராஜாவே! குந்திபுத்ரனை யுதிஷ்டிரனை நீ அழைக்கமாத்திரம் வேண்டும். நான் படைகளையில் யுத்தஞ்செய்யாமலும் பிராணஸமசயத்தையடையாமலும புண்படாமலும பாச்சிகைகளிறைத்து, தெரியாதவனுக்தர்மராஜனை ஜயிபபதில்ஸமர்த்தன். பாரதனே! எனதுபந்தயங்கள்தாம் விற்களென்றும, காய்கள் தாம் அம்புகளென்றும், சூதாட்டதினுடைய ரஹஸ்யந்தான் நாண் கயிறென்றும, காய்கணிபபோடும் வகைதான் தேரென்றும் அறி" என்றுசொன்னன். பிறகு துரியோதனன், "வேந்தே! சூதாட்டந் தெரிந்த இந்தச்சகுனி சூதினுலேயே பாண்டவர்களிடமிருந்து ராஜ்யலக்ஷ்மியைவாங்கத் திறமையுள்ளவனுயிருக்கிறன். அதற்கு நீர் அனுமதிகொடுக்கவேண்டும்" என்றன். திருதராஷ்டிரன், "கான்ன துஸ்ஹாதரனும் மஹாத்மாவுமான விதுரனுடைய் சொலலில் நிற்பவன். அவனுடன்கலந்து இந்தக்காரியத்தின்முடிவைத் தெரிந்துகொள்வேன்" என்றுசொன்னன். துரியோதனன், "ராஜாவே! அந்தவிதுரரும வியாஸரைவிட அதிகமாகத தெரிந்தவர்தாம; ஆனல் வெறுந்தர்மத்தையே சொல்லுவர். அது ஜயத்துக்கு ஸாதகமாகாது. பரதச்ரேஷ்டரே! ஜயம் தர்மத்திற்குமாறுனது. ஆதலால், தருமமுள்ளவன்தான் ஜயிப்பவன்.[1] (வியாஸரும விதுரருமாகிய) அவர்களிருவரும் (ஜயத்துக்கு) விரோதிகள். நிச்சயபுத்தியுள்ளவிதுரர் உமதுஎண்ணத்தை மாற்றிவிடுவார. கௌரவரே! அவர் பாண்டவர்களின்விஷயத்தில் நன்மைசெய்யவேக்கத்தோடிருபபதுபோல என் விஷயத்திலில்லை. ஒருமனிதன் பிறர்திறமையையேபற்றித் தன்காரியத்தைஆரமபிக்கலாகாது. கௌரவரே! காரியங்களில் இருவருடையபுத்தி ஒன்றுபோலிருப்பதுமில்லை. பயதைதையொதுக்கிக்கொண்டும்

---

1 'பயத்திற்கேதுவான காரியங்களிலிலக்கித் தனனைகாக்குமதியினன் மழைக்காலத்தில் ஈரப்பாய்போல இருந்தபடியே மடித்துப்போகிறன்' என்பது பழைய உரை.

தன்னைத்தானே காப்பாற்றிக்கொண்டும் மழைக்காலத்தில் நன்கு வளர்ந்த ஆலமரம்போலிருப்பவன் கெடான். வியாதிகளும் யமனும் (ஒரு வன்) நன்மையையடையுமவரையில் காத்திருப்பதில்லை. தான்சக்தனு யிருப்பதற்குள்ளாகவே நன்மைக்காகுமகாரியங்களைச் செய்யவேண் டும்" என்று சொன்னான். திருதராஷ்டிரன், "புத்திரனே! எப்படி யானாலும பலவான்களோடு விரோதம எனக்கிஷ்டமாயில்லை. பகை யானது மாறுதலையுண்டாக்குகிறது. அதுதான் இருமபினாற்செய் யப்படாதஆயுதம. ராஜபுத்திரனே! சண்டையைத் தொடுப்பதும் கைகடந்துபோவதுமாகிய சூதாட்டமென்னும அனர்த்தத்தை ஸாத கமென்று நினைக்கிறாய். அநதச்சூதாட்டம ஆரமபிகபடுமாயின் எவ் வகையிலாவது கூடமையான கதகளையும அமபுகளையும உண்டாக்கி விடும்" என்றுசொன்னான். அதறகுத் துரியோதனன், "முன் னோர்களாலும சூதாடடததின்பழகம் செய்யபபடடிருக்கிறது. அதில் அபாயமும புத்தமும இருநதிருக்கவில்லை. ஆதலால், இப போது சகுனிசொலலும் வார்ததையை நீர எடுததுக்கொள்ளவேண் டும். சீக்கிரத்தில இஙகொருஸபை செய்யக்கட்டளையிடும. சூதாட்ட மானது, ஆடுகிற நமக்கு ஸ்வர்க்கததிறகுச் சிறநதமார்க்கம். ஸ்வர்க் கத்திலிருபபவர்களுகுகுங்கூட அநதஆடடமே சிறநதது. ஆதலால், அதறகு ஒபபு அதுதான். அநதசசூதாடடததைப பாண்டவர்களு டன்கூட நீர்செய்விக்ககடவீர" என்றுசொன்னான். திருதராஷ் டிரன், "ராஜனே! நீசொன்னசொல எனக்குபபிரியமாயிலலை. உன க்கு எதுவிருபபமோ அதைச்செய்யலாம. இநதசசொலலே நினைத் துப பிறகு வருததபபடுவாய். இபபடிபபடடசொல் பின்னால் ஸுகத் தைத்தராதன்றோ? புத்தியும கல்வியுமுளளவனும நன்றுகபபார்த் தும ஆராயநதுமிருபபவனுமாகிய விதுரனுலேயே இவையெலலாம் அறியப்பட்டன. க்ஷத்திரியர்களுடைய உயிர்களுமாய்க்கும் அநதப பெரும் பயம் நமமாலதடுக்கமுடியாமல்வருகிறது" என்றுசொன்னான். புத்திசாலியான திருதராஷ்டிரமஹாராஜன் இவ்வாறுசொலலி விதி பெரிதென்றும் கடக்கமுடியாதென்றும நினைத்து விதியினால்மனமயங கித் தன் மகன்சொல்லிலகபபட்டவனாகி, வேலைக்காரர்களைப்பார்த்து, "நீங்களெல்லாரும ஆயிரம் தூண்களுள்ளதும, பொன்னினாலும் வைடூரியக்கற்களினாலும் விசித்ரமானதும, நாறுவாயில்களுடைய தும், ஸ்படிகத்தோரணங்களுள்ளதும், ஒருகுரோசம்நீளமும அவ் வளவு அகலமுமுள்ளதுமான ஒருசிறநதஸபையை ஜாக்ரதையோடு விரைவிற்செய்யுங்கள்" என்று உரக்கக்கட்டளையிட்டான். புத்தி

சாலிகளும் வேலையிறமேற்ந்தவர்களும் ஜாக்ரதையுளளவர்களுமான ஆயிரக்கணக்கான சிற்பவேலைக்காரர்கள் திருதராஷ்டிரன்சொல்லைக் கேட்டவுடன் சிந்திக்காமலும் விரைவாகவும் ஸபையைச்செய்தனர். அந்தச்சபையில் எல்லாப்பொருள்களையும் கொண்டுவந்துசேர்த்தனர். ராஜாவுக்கு நம்பிக்கையான வேலைக்காரர்கள், அனேக ரத்னங்களிழைத்துப் பல்நிறமுள்ளதும் புதிய பொன்ஆஸனங்களுள்ளதுமான அந்த ஸபை விரைவில்முற்றுபபெற்றதைப்பற்றி அரசனிடம் தெரிவித்தனர். பிறகு தெரிந்தவனான திருதராஷ்டிரமஹாராஜன் மந்திரிகளிற் சிறந்தவரான விதுரரைப்பார்த்து, "ராஜகுமாரனான யுதிஷ்டிரனிடம் சென்று, 'இந்தஎன்ஸபை அனேகரதனங்களினால் அழகாகவும் மிக்கவிலைபெற்ற படிக்கைகளும் ஆஸனங்களும் நிரம்பினதாகவுமிருக்கிறது. நீ ஸஹோதரர்களுடன்கூடவந்து இதைப்பார்க்கவேண்டும். இதில் ஸ்நேஹிதர்களுக்குள் ஒருசூதாட்டம் நடக்கவேண்டும்' என்று நான்சொன்னதாகச்சொல்லி அவனைச் சீக்கிரம் இங்கே அழைத்துவா" என்றுசொன்னான். ஜனமேஜயராஜாவே! திருதராஷ்டிரமஹாராஜன் தன்புத்திரனுடைய எண்ணத்தையறிந்து விதியைவெல்லமுடியாதென்றுநிணைத்து இவ்வாறு செய்தான். அறிஞரிற் சிறந்தவிதுரர் அவ்வாறு அநீதியாகக்கட்டளையிடப்பட்டபோது தமதுபிதாவினுடைய அந்தச்சொல்லை அங்கீகரியாமல், "ராஜாவே! உம்முடைய இந்தக்கட்டளையை நான்ஒப்பவில்லை. குலத்திற்குக் கெடுதிவருமென்று பயப்படுகிறேன். இவ்வாறுசெய்யாதீர். உமது புத்திரர்களுக்குள் வேறுபாடும் சண்டையும் நிசசயமாக உண்டாகும். ராஜாவே! இதற்காகவே சூதாட்டதைபபற்றிப் பயபபடுகிறேன்" என்றுசொன்னார். திருதராஷ்டிரன், "விதுரா! விதியானது பிரதிகூலமாகாமலிருக்குமாயின் இந்தக்கலகத்தைபபற்றி எனக்குத் துயரமில்லை. இந்த உலகமனைத்தும பிரம்மாவினால் விதியின்வசத்தில் வைக்கபபட்டுத்தான் நடந்து கொண்டிருக்கிறது. எதுவும் ஸ்வதந்திரமாகஇல்லை. விதுரா! ஆதலால், இபபோதே தர்மராஜாவினிடம சென்று யாராலும் வெல்லமுடியாதவனும் சூதாடியுத்திரனுமான அவனை என்கட்டளைப்படி விரைவில் அழைத்துவா" என்றுசொன்னான்.

எண்பத்துமூன்றுவது அத்தியாயம்.

த்யூதபர்வம். (தொடர்ச்சி.)

(விதுராரால்அழைக்கப்பட்டபாண்டவர்கள் அஸ்தினபுரம்சென்று ஸபாப்ரவேசம்செய்தது.)

திருதராஷ்டிரமஹாராஜாவினுல் வலிந்து கட்டளையிடப்பட்ட விதுரர், உடனே மிக்கவேகமும பலமுமுள்ளவையும நன்றுகபழக்கப்பட்டவையுமான உயர்ந்தகுதிரைகளினுல் புத்திசாலியானபாண்டவர்களிடம்போகப் புறப்பட்டார். மஹாபுத்திசாலியான விதுரர் அந்தவழியைத்தாண்டிய பிராமணர்களால பூஜிக்கப்பெறறுத தர்மராஜாவின்நகரத்தில் பிரவேசித்தார். தாமாதமாவான விதுரர் குரேபரன் கிருஹத்துக்கொபபான தாமராஜருடைய கிருஹதையடைநது தர்மபுத்ரரான யுதிஷ்டிரரிடமசென்றார். ஸதரியதையை விடாதவரும் மஹாதமாவும அஜாதசதருவுமான தர்மபுத்திரா அநதவிதுரரைத தக்கபடி மரியாதையோடுஅழைத்துத் திருதராஷ்டிரரீனையும அவன்பிள்ளைகளையுமபற்றிவிசாரித்தது, "விதுரரே! உமக்கு மனமகிழ்ச்சியில்லாமை காணப்படுகிறது. கேஷமகாரியமதோடு வநதிருக்கிறீரா? பிள்ளைகள கிழவருக்கு அனுகூலர்களாயிருக்கிறார்களா? பிரஜைகள் அடங்கியிருக்கின்றனரா?" என்றுவினவினார். (விதுரர்,) "ராஜாவே! மஹாத்மாவான திருதராஷ்டிரமஹாராஜா தமபுதரர்களாலும குலதேசாசாரமும்சூழபபெற்று இந்திரன்போல ஸுகமாகஇருக்கிறார். அநத மஹாத்மாவானவர் தமபுதரர்களுடையகுணங்களால மாறறபபட்ட வராய் வயஸின்தத்தைவிட்டுத் தமமிலேயேஸுகமடைநது ஸநதோஷமுற்றிருக்கிறார். கௌரவராஜாவான திருதராஷ்டிரர் முதலில் உன்னுடையக்ஷேமத்தையும குறைவின்மையையும் விசாரித்தது, பிறகு 'புத்ரனே! உன்ஸிஹாதரர்களின் இநதஸபை உன்ஸபைக்குச் சமமான அழகுளளதாயிருக்கிறது. நீவநது பார்க்கவேண்டும. குநதி புத்ரனே! ஸிஹாதரர்களுடன்கூட நீஇநதச்சபைக்கு வநது ஸ்நேஹிதர்களுக்குள் சொக்கட்டானுட்டத்தைஆடி மகிழவேண்டும். நீங்கள் எல்லாரும் சேருவதில் நமக்கு விருப்பமிருக்கிறது. கௌரவர்களனைவரும் முன்னமே வந்துசேர்நதிருக்கின்றனர்' என்று (உனக்குச்சொல்லுமபடி) சொன்னார். ராஜாவே! மஹாத்மாவான திருதராஷ்டிரமஹாராஜாவினுல் ஏற்படுத்தப்பட்டு அந்தசசபையில் உட்கார்ந்திருக்கும் மோசக்காரர்களான சூதாட்டக்காரர்களை நீபார்க்

கக்கடவாயென்பதைச்சொல்வதற்காக நான்வந்தேன். இதைநீசெய் வாயாக" என்றுசொன்னர். யுதிஷ்டிரர், "விதுரரே! சூதாட்டத்தில் நமக்குக கலகம்நிசசயம. தெரிநதவன்எவன் சூதைவிருமபுவன்? நீர் தாம் எதுசரியெனறுநினைக்கிறீர். நாங்களனைவரும உமதுசொற்படி நடபபவர்கள்" என்றுசொன்னர். விதுரர், "வித்வானே! சூதா னது தீங்குக்குவேரென்று எனக்குத்தெரியும். அதைத்தடுப்பதற்கு நான்முயற்சிசெய்தேன். ஆகிலும, ராஜா என்னை உன்னிடத்திற்கு அனுப்பினர். இதைக்கேடடபிறகு உனக்கு எதுநன்மையோ அதைச் செய்துகொள்" என்றுசொனனர். யுதிஷ்டிரர், "விதுரரே! திருத ராஷ்டிரமஹாராஜருடைய புத்ரர்களேதவிர வேறுஆடதக்க சூதர் கள் அங்கே யாரிருககிறார்கள்? எவர்களுடன்சேர்ந்து நான்பலமுறை ஆடவேண்டியிருக்குமு? அவர்களை எமக்குசசொல்லும; உமமைக் கேட்கிறேன்" என்றுகேடடார். விதுரா, "ராஜாவே! காநதார தேசத்தரசனகிய சகுனி ஏலாரையுமமிஞ்சி ஆடுகிறவன்; கைதேர்ந தவன். காய்களஅனுகுவசபபட்டவை. விவிமசதி, சித்தரசேனன், ஸத்யவ்ரதன், புருமித்ரன், ஜயன் என்னுமரசாகளும் ஆடுகிறவர் களே" என்றுசொன்னர். யுதிஷ்டிரர், "பிக்க பயங்கரர்களும் மோசமே உபாயமாகவுடையவர்களுமான சூதர்கள அநதச்சபையில் ஆடுவதற்கு உடகாநதிருக்கின்றனர. பிரமமதேவரால் இவ்வுலக மனைதலும விதியின்வசத்தில் வைக்கபபடடிருக்கிறது. ஒன்றும் ஸ்வ தநதிரமாயில்லை. எல்லாநதெரிநதவரே! திருதராஷ்டிரமஹாராஜா கட்டளையிட்டபிறகு நான் சூதாட்டத்திற்குபபோக விருமபாமலிரு க்கவில்லை. புத்ரனுக்குப பிதாவின்மேல பற்று எபபோதும் உள்ளது தானே. விதுரரே! நீர் எனக்கு என்னசொல்லுகிறீரோ அதைச செய்பவனாக இருக்கிறேன். ஜயிக்குநதிறமையுள்ளசகுனி அநதச் சபையில எனனை அழையாமலிருப்பானுயின் விருபபமில்லாத நான் அவனுடன் ஆடப்போவதில்லை. அழைதபிறகு ஒருபோதும்திரும பேன். இது நான் நெடுநாளாகவைததுக்கொண்டவிரதம்" என்று சொன்னர். தர்மராஜர் இவ்வாறு விதுரருக்குசசொல்லி உடனே பிர யாணத்திற்குவேண்டியயற்றிற்கெல்லாம கட்டளையிட்டு ஸபைசேரு வதற்குமுதல்நாள் தன் இனத்தாரோடும் வேலைக்காரர்களோடும் ஸ்திரிகளோடுங்கூடத் திரௌபதியை முதன்மையாகவைத்துகொ ண்டு புறப்பட்டார். "சுடுதியில்வந்துவிழும் மின்னலானது கண் ணைப்பறிப்பதுபோல விதியானது மதியைப்பறித்துவிடுகிறது. மனி தன் வலைகளினுல் கட்டப்பட்டவன்போல விதிக்குவசப்படுகிறான்"

என்றுசொல்லிவிட்டு, வீரரானதர்மராஜா திருதராஷ்டிரன்அவ்வகை யாக அழைத்ததைப்பொறுமல் விதுரருடன்கூடப புறப்பட்டார். பகைவர்களான வீரர்களைக் கொல்லுகிறவரான தர்மராஜர் பாஞ்சாலீக தேசத்துக்குதிரைகளை பூட்டின ரதத்திலேறி ராஜ்யலக்ஷ்மியால் பிர காசித்துக்கொண்டு ஸஹோதரர்களோடும விருதுகளோடும பிராம் மணர்களைமுன்னிட்டுக்கொண்டு புறப்பட்டார். பிறகு தம்மிடம்வந்த வேலைக்காரர்களை நகரத்தைக்காப்பதற்கு நியமித்தார். ராஜசேஷ்ட ரான ஜனமேஜயரே! உடனே அவர்கள ராஜாவின்கட்டளையைச்செய் தனர். சிறந்தசக்தியுள்ள தர்மராஜாவானவர் தேரையும விருதுகளை யும் நிறுத்திக்கொண்டு பிராமணர்களால் ஸ்வஸ்திவாசனம்செய் வித்தபிறகு அரண்மனையிலிருந்து வெளிப்பட்டார். பிராமணர்க ளுக்கும மற்றவர்களுக்கும் யதாந்தானமாக விதிப்படி ரத்னங்களை யளித்துச் செல்லதொடங்கினர். ஜனமேஜயராஜரே! ஹாரம, கிரீடமுதலிய எல்லா ஆபரணங்களையும் அணிந்துகொண்டு பொன் னிறமாகவிளங்குகின்ற யுதிஷ்டிரர் எல்லா லக்ஷணங்களுமபொருந்தி யதும ராஜஸூயமஸம்பன்ன வெண்மையானவஸ்திரம போர்க்கப பட்டதும அறுபதுவயதுள்ள துமாகிய சிறந்த [1]யானையின்மேலேறிக் கொண்டு, பொன்மயமானவேதிகையில் நெய் ஆகுதிசெய்யப்பட்டு ஜ்வலிக்கும்அக்நிபோல, ராஜலக்ஷ்மியினால் பரகாசித்தார். அப போது தர்மராஜாவானவர் உற்சாகமுள்ள மனிதர்களோடும் வாஹ னங்களோடும் ரதங்களின்பெருங்கோஷத்தினால் ஆகாயத்தைநிரப் பிக்கொண்டும், ஸூதர்களாலும் மாகதர்களாலும துதிக்கப்பெற்ற வராய்க் கிரணங்களுடன்கூடிய ஸூர்யன்செல்வதுபோலப் பெருஞ் சேனையுடன்கூடச் சென்றார். வெண்குடை தலைமேற்பிடிக்கப்பட்ட தனால் பௌர்ணமாஸிச் சந்திரன்போல விளங்கினர். பரதச்ரேஷ்ட ரான தர்மராஜர் பொன்காம்புள்ளவெண்சாமரங்கள் காற்புறமும் வீசப்பெற்றவராய் வழியில் மனிதர்கள் உண்மையோடுமகிழ்ந்து சொல்லும், 'ஜய! ஜய' என்ற ஆசீர்வாதங்களை முறைப்படிபெற் றுக்கொண்டார். ஜனமேஜயராஜாவே! ராஜாவுக்குப்பின்செல்லும் ஸைனிகர்களின் 'ஹல, ஹல' என்ற சப்தம் ஆகாயத்தில் நிரம்பி நின்றது. ஜனமேஜயராஜாவே! பலசாலியானபீமஸேனன் ரதத்தி லேறித் தர்மராஜாவுக்கு முன்சென்றான். பரதச்ரேஷ்டரான ஜனமே ஜயராஜாவே! அழகுள்ளவர்களாகிய நகுல ஸஹதேவர்களிருவரும்

---

1 நகரத்துக்குள் யானைமேலேறிச்சென்று பிறகு ரதமேறி வழியிற் சென்றுரென்று கொள்ளல்வேண்டும்.

மெத்தைபோடப்பட்டும் அலங்காரங்கள்செய்யப்பட்டுமிருந்த இரண்டு தேர்களின்மேலேறிப் பெருஞ்சேணையமகிழ்வித்துக்கொண்டு ராஜாவுக்கிருபக்கங்களிலும சென்றனர். வீரனும் ஆயுதம்பிடித்தவரிற்சிறந்தவனும் வெண்மையான குதிரைகளுள்ளவனுமாகிய அர்ஜுனன் அக்னிபகவான்கொடுத்த ரதத்திலேறிக் காண்டீபத்தையெடுத்துக்கொண்டு பின்சென்றான். ஜனமேஜயராஜாவே! குந்திபுத்ரானயுதிஷ்டிரர் சேணையின்நடுவிற சென்றார். ஜனமேஜயராஜாவே! அழகான அங்கங்களையுடைய திரௌபதிமுதலிய அரசிகள் வேலைக்காரிகளோடும் வீருதுகளோடுங்கூடப் பலவிதமான வாஹனங்களிலேறிப் பெருஞசேணையுடன் ராஜாவுக்கு முனசென்றனர். ஜனமேஜயராஜாவே! வழியிறசெல்லுகின்ற பாண்டவாகளின்சேனை, மனிதர்களும் யானைகளும் குதிரைகளும் நிரமபினதும கொடிகளோடுகூடிய உயர்ந்த தோகளுள்ளதும சிறுத கதைகளைத்தரித்ததும சங்கங்கள், துந்துபிகள், தாளங்கள், புலலாங்குழலகள், வீணைகள இவைகளின் முழக்கங்களினல் பெருஞ்சப்தமுள்ளதுமாக விளங்கிற்று. ஆதிகாலத்தில் லங்கையில் வஸித்துக்கொண்டிருந்த குபேரன் பெரியசேணையுடன் மிகசிறபபாகத தேவராஜாவான இநதிரனிடம சென்றது போலக் குபேரனுக்கொபபான தர்மராஜாவும எண்ணமுடியாத பெருமையையுடையதான நிரமபினசேனையுடன் சென்றார். ஜனமேஜயமஹாராஜாவே! அநதத்தர்மராஜர் தடாகங்களையும நதிகளையும் காடுகளையும சோலைகளையுமதாண்டி நகரதத்தையடைநதார். கௌரவராஜாவான அநதயுதிஷ்டிரர் ஹஸ்தினபுரத்திற்குச் சமீபத்தில் சேனைகளுடன் விடுதியைச் செய்துகொண்டார். சேமமமாயும் மேடுபள்ளமில்லாமலுமிருக்குமிடத்தில் தர்மபுத்திரர் வாஸஞ்செய்தார். ஜனமேஜயராஜாவே! பிறகு விதுரர் வ்யஸனத்தினுலை தழுதழுத்த குரலோடு தர்மராஜாவையணுத்து, திருதராஷ்டிரன் செய்யக்கருதின விஷயமெல்லாவற்றையும் நடந்தபடி அவருக்குச்சொன்னர். அவர் சொன்னதைக்கேட்டுத் தர்மராஜாவானவர், "விதுரரே! என்னையழைத்தது எனக்குப் பொறுக்கவில்லை. எனக்கு விரதமன்றே இருக்கிறது. உலகத்திலுள்ள பிராம்மணர்களுக்கும் பிரஜைகளுக்கும் எப்போதும் சேமமுண்டாகக்கடவது" என்றுசொன்னர். அதன் பிறகு திருதராஷ்டிரனுமம காலத்தினுடையவன்மையினுலும் அழைக்கப்பட்ட தர்மராஜாவானவர் அஸ்தினபுரத்தில் பிரவேசித்தார். தர்மராஜாவானவர் அஸ்தினபுரம்சேர்ந்தபிறகு திருதராஷ்டிரனுடையகிருஹத்திற்குப்போனர். பிரபுவும் தர்மாத்மாவுமான யுதிஷ்டிரர்

திருதராஷ்டிரனையும் பீஷ்மரையும் துரோணரையும் கர்ணனையும் கிருபரையும் அசுவத்தாமாவையும் தகுதிபடி ஸந்தித்தார். சிறந்த கைகளையுடைய வீரரான தர்மராஜர் பிறகு சோமதத்தனையும் தமது பிராதாவான துரியோதனனையும் சகுனியையும் முன்னமே அங்கு வந்திருந்த அரசர்களையும வீரனான துச்சாஸனன்முதலிய ஸஹோதரர்களனைவரையும் ஜயத்ரதனையும மறறக் கௌரவர்களனைவரையும் ஸந்தித்தார். சிறந்ததகைகளையுடைய தர்மராஜர் ஸஹோதரர்களனைவரானும் சூழப்பெற்றுச் சிறந்தபுத்திசாலியான திருதராஷ்டிரமஹாராஜாவினுடைய அந்தபபுரத்திற பிரவேசித்தார். நக்ஷத்திரங்களாற் சூழப்பெற்ற சோஹிணியைபபோல மருமக்களால் எப்போதும் சூழப்பட்ட பதிவ்ரதையான காந்தாரியை அடைகேகண்டார். அவர் காந்தாரியை நமஸ்கரித்து, அவளால் ஆசீர்வதிக்கபபெற்று, வயதுசென்றவனும் அறிவே கண்ணுகவுடையவனுமை ராஜாவும் தந்தையுமான திருதராஷ்டிரனைக்கண்டார். ஜனமேஜயராஜாவே! தர்மபுத்திரரும் பீமஸேனன்முதலான மற்றநாலுபாண்டவர்களுமை திருதராஷ்டிரமஹாராஜாவினுல் உசரியில் மோக்கப்பெற்றனர். ராஜாவே! காண்பதற்கினிய புருஷச்ரேஷ்டர்களான அந்தபபாண்டவர்களைக் கண்டதனுல் குருவம்சத்தவர்களுக்கு ஸந்தோஷமுண்டாயிற்று. அந்தப்பாண்டவர்கள் திருதராஷ்டிரமஹாராஜாவுடைய அனுமதிபெற்று ரத்னங்கள் நிரம்பின கிருஹங்களில் பிரவேசித்தனர். அங்குவந்தவர்கள் திரௌபதிமுதலான ஸ்திரீகளையும் கண்டனர். ஜ்வலிப்பதுபோலப் பிரகாசிக்கின்ற திரௌபதியின் பெருஞ்செல்வததைக்கண்டு திருதராஷ்டிரன்மருமக்கள் மனத்தில் அதிகஸந்தோஷமுள்ளவர்களாக இருக்கவில்லை. பிறகு புருஷச்ரேஷ்டர்களான பாண்டவாகள் ஸ்திரீகளுடன் தனித்தனியே பேசிச்சென்று தேகபபயிற்சிமுதலான சுரியங்களையும் அலங்காரங்களையும்செய்தபிறகு ஸந்தியாவந்தனம்முதலிய கடமைகளைச்செய்து உயர்ந்த சாந்துகளைப்பூசிக்கொண்டும் சுபத்தைச் சிந்தித்துக்கொண்டும் பிராம்மணர்களால் ஸ்வஸ்திவாசனம்செய்வித்து மனத்திற்கினிமையான உண்வுகளையுண்டு தீம்தம்படுக்கையறைகளிற் பிரவேசித்து மங்கையர்களின் கானங்களைக் கேட்டுக்கொண்டு நித்திரை செய்தனர். பெண்கலவியில் கலந்த அந்தப்பாண்டவர்களுக்கு அவ்விரவு ஸுகமாகச்சென்றது. சிரமபரிகாரஞ் செய்துகொண்ட பிறகு வந்திகளால துதிக்கபபெற்று விடியற்காலத்தில் நித்திரையை விட்டெழுந்தனர். அவர்களனைவரும் இரவுமுழுதும் ஸுகமாயிருந்து காலையில் கடமைகளை முடித்துக்கொண்டு சூதாட்டக்காரர்களால் அழைக்கப்பெற்றவர்களாகி அழகானஸபையிற் பிரவேசித்தனர்.

எண்பத்துநான்காவது அத்தியாயம்.

த்யூதபர்வம். (தொடர்ச்சி.)

(தர்மபுத்திரருக்கும் சகுனிக்கும் ஸம்வாதம்.)

யுதிஷ்டிரர்முதலான பாண்டவர்கள் அந்தஸபையில் பிரவேசித்து அரசர்களனைவரையும் ஸந்தித்து, பூஜிக்கத்தக்கவர்களைப்பிராயத்துக்குத்தக்கபடி சேர்ந்துபூஜித்து விசித்ரமும உயர்ந்தமெத்தைகளுள்ளவையுமான ஆஸனங்களில் தகுதியின்படி உட்கார்ந்தனர். அந்தஸபையில் பாண்டவர்களும் மற்ற எல்லா அரசர்களும் உட்கார்ந்த பிறகு ஸுபலபுத்ரனை சகுனி யுதிஷ்டிரரைநோக்கி, "ராஜனே! யுதிஷ்டிரனே! ஸபையில் ஆட்டத்துணி விரிக்கப்பட்டிருக்கிறது. எல்லாரும் உன்னை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். காய்களை உருட்டிவிளையாடுவதற்கு ஸமயம்கொடுக்கவேண்டும்" என்றுசொன்னன். அதற்கு யுதிஷ்டிரர், "ராஜனே! சூதாடுவதானது மோசமும்பாவமுமானது. அதில் க்ஷத்ரியனுக்குரிய பராக்ரமமில்லை. நிச்சயமானநீதியும் ஒழுங்குமில்லை. நீ ஏன்சூதைப் புகழுகிறாய்? சூதனுடையமோசத்தில் கௌரவத்தையாரும்புகழ்வதில்லை. சகுனியே! கொடியவன்போல இவ்வகையான தப்புவழியால் எம்மைஜயிக்காதே" என்றுசொன்னர். சகுனி, "ஆடுகிறமுறைதெரிந்து காய்களிலுண்டாகும் மாறுதல்களில் சோர்விலாமல் கணக்கையும்ஆட்டத்தையும்அறியும் மஹாபுத்திசாலிதான் ராஜ்யகாரியங்களிலும் எதையும்தாங்குவான். குந்திபுத்ரனே! பாச்சிகைகளில் நமதுபந்தயம் பிறரைத்தோற்கச்செய்யும். அதனாலேதான், இதில்குற்றமுண்டாகிறது. ராஜாவே! ஆடுவோம்; பயப்படாதே; பந்தயம்வை; காலதாமதம்செய்யாதே" என்றான்.

யுதிஷ்டிரர், "இவ்வுலகமார்க்கங்களில் எப்போதும் திரிந்துகொண்டிருக்கும் அஸிதரும் தேவலருமாகிய முனிச்ரேஷ்டர்கள், 'சூதர்களுடன் மோசமாகச்செய்யும் சூதாட்டமானது பாவம். யுத்தத்தில் தர்மமாகஜயிப்பதுதான் சிலாக்யமானது. சூதாடுவது சிலாக்கியமன்று. ஆர்யர்கள் மிலேச்சபாஷைபேசார்; மோசஞ்செய்யார். பாவமும் வஞ்சகமுமில்லாதது யுத்தம். அதுதான் ஸத்புருஷர்களுக்குவிதம்' என்றுசொல்லியிருக்கின்றனர். நாம் கூடியவரையில் பிராம்மணர்களை ரக்ஷிப்பதற்கும் துஷ்டர்களைச்சிக்ஷிப்பதற்கும் முயலுகிறோம். அதுதான் நம்க்குத்தனம். சகுனியே! அக்ரம்மாகச் சூதா

டிப் பிறரை ஜயிக்காதே. வஞ்சகத்தினுல் ஸுகங்களையும் தனங்களையும் அடைய நான்விரும்புவதில்லே. ஸமர்த்தனுன சூதாடுகிறவனுடைய நடை கௌரவிக்கப்படுவதில்லே" என்றுசொன்னர். அதற்குச் சகுனி, "யுதிஷ்டிரா! வேதமோதினவன் [1]வேதமோதாதவரையும், கற்றுணர்ந்தவன் கற்றுணராதவரையும் ஜயிக்கப்போவது மோசநதான். ஜனங்கள் அதை மோசமென்று கூறுவதில்லே. யுதிஷ்டிரா! அவ்வாறே சூதாட்டத்தில் கற்றுணர்ந்தவன் கற்றுணராதவரையும், அஸ்தரத்தேர்ச்சியுள்ளவன் அஸ்தரத்தேர்ச்சியில்லாதவனையும், மிகுநதபலமுள்ளவன் பலமகுறைந்தவனையும் ஜயிக்கப்போவதும் மோசநதான். இவ்வாறே எலலாச்செய்கைகளிலுமம தெரிநதவன் தெரியாதவர்களை ஜயிக்கபபோவது மோசநதான். ஜனங்கள் அதை மோசமென்பதில்லே. அப்படி நீ என்னிடமவருவதை மோசமாகநினேப்பாயாயின், உனக்குப பயமிருக்குமாயின், ஆட்டதை விட்டுவிடு" என்றுசொன்னன். யுதிஷ்டிரர், "அரசனே! அழைக்கப்பட்டபிறகு திரும்புவதில்லே. இது நான் வைத்துக்கொண்டிருக்கும் விரதம். விதி பெரிது. விதியின்வசத்தில் நானிருக்கிறேன். இநதச சேர்க்கையில் நான் யாரோடு ஆடவேண்டியிருக்கும்? எனக்கு எதிர்ப்பந்தயம் வைப்பவன் யாரென்று தெரிநதபிறகு ஆட்டம்நடக்கலாம்" என்று சொன்னர். துரியோதனன், "அரசனே! ரத்நங்களையும் தனங்களையும நான்கொடுபபேன். எனது மாமாவாகிய இநதச்சகுனி எனக்காக ஆடுவான்" என்றன். யுதிஷ்டிரர், "ஒருவனுக்காக மற்றொருவன்ஆடுவது தவறுக எனக்குத்தோன்றுகிறது. தெரிந்தவனே! அதைத் தெரிநதுகொள். அபபடியும் இஷ்டமிருநதால் நடக்கட்டும்" என்றர்.

எண்பத்தைந்தாவது அத்தியாயம்.

த்யூதபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரருக்கும் சகுனிக்கும் நடந்தஆட்டத்தில் யுதிஷ்டிரர் பொருள்களைத் தோற்றது.)

சூதாட்டம் ஆரம்பிக்கப்படும்போது அவ்வரசர்களனைவரும் திருதராஷ்டிரனே முன்னிட்டுக்கொண்டு அதச்சபைக்குப் போயினர். ஜனமேஜயரே! பீஷ்மர், துரோணர், கிருபர், சிறநதபுதியாளனவிதுரர் இவர்கள்மட்டும் மனத்தில் அதிகதிருப்தியில்லாமல் திருத

[1] இங்கு 'அச்ரோத்ரியாந' என்றபாடங் கொள்ளப்பட்டது.

ராஷ்டிரனே அனுஸரித்தனர். மஹாபராக்ரமசாலிகளும் சிங்கம்போன்ற, கழுத்துள்ளவர்களுமாகிய அவர்கள் சிறந்த பலஸிம்மாஸனங்களில் சிலர் இருவர்களாகச் சேர்ந்தும் சிலர் தனித்தும் உட்கார்ந்தனர். ஜனமேஜயராஜாவே! அந்தமஹாஜனபாவர்களான அரசர்கள்சேர்ந்த நலுல் அந்தச்சபையானது தேவர்கள்சேர்ந்த தெய்வலோகம்போல விளங்கிற்று. எல்லாரும் வேதங்கள் தெரிந்தவர்கள். எல்லாரும் சூரர்கள். எல்லாரும் ஒளியுள்ள உருவங்களையுடையவர்கள். ஜனமேஜயமஹாராஜாவே! அவர்கள் வந்தவுடன் சினேகிதர்களுக்குள் சூதாட்டமானது நடக்கத்தொடங்கிற்று அப்போது யுதிஷ்டிரர், "ராஜாவே! மிகசுலபமாகவெற்றதும் கடற்சுழியில உண்டானதும் என் னுடையஹாரத்தில் முதன்மையானதும் சிறந்த பொற்கட்டிகளால் அலங்கரிக்கபபட்டதும சிறந்த ஒளியுள்ளதுமாகிய இந்தரத்தினம் எனதுபொருள். மஹாராஜாவே! என்னோடு எதிர்ஆட்டம் ஆடுவதற்குச் சரியான்பந்தயம் உனக்கென்ன இருக்கிறது?" என்றுகேட்க, துரியோதனன், "ரத்தினங்களும் மிக்க அதிகமானதனங்களும் என்னிடத்திலுமிருக்கின்றன; திரவியங்களைப்பற்றி எனக்கு விரோதமில்லை; இந்தஆட்டத்தை ஜயி" என்றுசொன்னன். உடனே பாச்சிகைகளின் உண்மையையறிந்த சகுனி அந்தக்காய்களைக் கையிலெடுத்தான். 'ஜயித்தாய்விட்டது' என்றே யுதிஷ்டிரருக்குசொன்னன். யுதிஷ்டிரா, "கொழுததவனே! சகுனியே! ஆ ஆ! சூதாட்டத்தில் மோசமாகவே உன்னால் ஜயிக்கபபட்டேன். இன்னும் இருவரும் பந்தயம்வைத்து ஆடுவோம. ஆயிர [1]நிஷ்கங்கள் நிரம்பின [2]சூடங்களும் அழியாத பொன்பொக்கிஷமும் மிகுதியான சிறந்ததங்கமும் என்னிடமிருக்கின்றன. [3]இஃது என்னுடையதனம். இதனைவைத்து நான் உன்னுடன்ஆடுகிறேன்" என்றுசொன்னர். இவ்வாறுசொல்லப்பட்ட சகுனி கௌரவர்களுடைய வமசத்தை விருத்திசெய்பவருமம பாண்டவர்களில் மூத்தவருமம ஸதயந்தவறாதவருமான தர்மராஜனை நோக்கி 'ஜயித்தாய்விட்டது' என்றேசொன்னன். யுதிஷ்டிரர், "ஆயிரம்தேர்களுக்கு ஸமமானதும, புலித்தோலினால் மூடபபட்டதும, அசையாததும், அழகானசக்காங்களும் மற்றஸாமான்களுமுள்ளதும், சதங்கைகளின் மாலைகளினால் அலங்கரிக்கப்பட்டதும், ஒளியுள்ள

---

1 நூற்றெட்டுப்பலம்கொண்ட பொன்நாணயம்.

2 'பெட்டிகள்' என்பது பழையவுரை.

3 தொகுதிபற்றி ஒருமையாகக் கூறுகிறார். இங்ஙனம் வருமிடங்களை நன்கு கண்டுகொள்க.

தும், மேகமுழக்கமபோலும் கடலொலிபோலும் சப்தமுள்ளதும், நாமேறிவந்ததும், ராஜதமுமாகிய கொற்றத்தேர் இதோவிருக்கிறது. [1]சூரம் என்னும் பக்ஷிபோல (வெண்மை) நிறமுள்ளவையும் எல்லாத்தேசங்களிலும பழக்கமுள்ளவையுமான சிறந்த எட்டுக குதிரைகள் இந்த ரதத்தை இழுக்கின்றன. [2]பூமியிலஸஞ்சரிக்கும பிராணிகள் இவற்றின்காலடியிலிருந்து விடுபடமாட்டா. அரசனே! இஃது என்தனம. இதனால நான் உன்னோடு ஆடுவேன்" என்று சொன்னர். இதைக்கேட்டவுடன் தன்னிடத்திலநிச்சயமுள்ள சகுனி வஞ்சகத்தை ஆச்ரயித்து 'ஜயித்தாய்விட்டது' என்றே யுதிஷ்டிரருக்குச்சொன்னன். பிறகு யுதிஷ்டிரா, "இளமைபபருவத்திலிருபபவர்களும,பொன்னிறமுள்ளவர்களும, சங்குவளைகளையும தோள்வளைகளையும் கழுத்தில் [3]காசுமாலைகளையும மறறுமுள்ள மிக்கவிலைபெறற ஆபரணங்களையும பூமாலைகளையும அணிந்தவர்களும, உயர்ந்த ஆடைகளை உடுத்துச் சாந்தணிந்து ரதனங்களையும பொன்களையும தரித்தவர்களும, அறுபதுநான்கு கலைகளிலும தேர்ந்தவர்களும, ஆட்டத்திலும் பாட்டிலும ஸமர்த்தர்களுமான நூறுபிரம தாஸிகள் என்கட டனியின்படி ஸ்நாதகர்களுக்கும மந்திரிகளுக்கும அரசர்களுக்கும பணிவிடை செய்துகொண்டிருக்கின்றனர். அரசனே! இஃது என்தனம். இதனால் நான் உன்னுடன் ஆடுகிறேன்" என்றுசொன்னர். தன்னுள் நிச்சயமுள்ளசகுனி அதைக்கேட்டு மோசதத்தைக் கடைபபிடித்து, 'ஜயித்தாயிற்று' என்றே யுதிஷ்டிரருக்குச்சொன்னன். மறுபடியும் யுதிஷ்டிரர், "ஸமாததகளும, அணுகூலர்களும, எபபோதும் உயர்ந்தபோர்வைகளையும் ஆடைகளையும்தரித்தவர்களும, அறிவிலும் புதியிலும சிறந்தவர்களும, ஜிதேந்திரியாகளும, இளமைபபருவத்திலிருபபவர்களும், ஒளியுள்ள குண்டலங்களைத தரித்தவர்களும, இரவும்பகலும் பாதரக்ஷைகளைக கையிலெடுத்துக்கொண்டு அதிதிகளுக்குப மீபாஜனம் பரிமாறுகிறவர்களுமான தாஸாகள் நூறுபிரவர், என்னிடத்திலிருகின்றனர். வேதனே! இஃது என்தனம; இதனால் நீன் உன்னுடன் ஆடுவேன்" என்றுசொன்னர். தன்னுள் நிச்சயமுள்ளசகுனி அதைக்கேட்டு மோசத்தைக கடைப்பிடித்து 'ஜயித்தாய்விட்டது' என்றே யுதிஷ்டிரருக்குச் சொன்னன். மறு

---

1 'குமுத' என்று பாடங்கொண்டு, 'குமுதம்போல வெண்மையான' என்பது பழையவுரை.

2 எவ்வளவு வேகமுள்ளவற்றையும் இவை பிடித்துவிடும்.

3 மூலத்தில் 'நிஷ்கம்' என்றிருக்கிறது.

படியும் யுதிஷ்டிரர், "ஸுபலபுத்ரனே! பொற்கச்சை கட்டினவையும், மஸ்தகங்களுக்கு அலங்காரங்கள் செய்யபபட்டவையும், [1]பத்மம் என்னும் சிவப்புப் புள்ளிகளுள்ளவையும், பொன்மாலைகள் பூண்டவையும், யுத்தங்களிலுள்ள எல்லாக் கோஷங்களையும் பொறுக்கும் படி நன்றாகப் பழக்கபபட்டவையும், கலபபைக்கால்கள்போன்ற தந்தங்களும் பெருந்தேகங்களுமுள்ளவையுமான ஆயிரம் மதயானைகள் என்னிட மிருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும எவ்வெட்டுப் பெண் யானைகள் இருக்கின்றன. நீருண்ட மேகங்கள்போன்ற அநதயானைகளெல்லாம் நகரங்களையே அழித்துவிடும். ராஜாவே! இஃது என் தனமம. இதனால் நான் உன்னுடன் ஆடுவேன்" என்றுசொன்னார். இவ்வாறுசொன்ன யுதிஷ்டிரரைபபார்த்து நகைத்துக்கொண்டே ஸுபலன்புதரானன சகுனி, 'ஜயித்தாய்விட்டது' என்றுசொன்னன். யுதிஷ்டிரர், "பொன்மயமான ஏர்க்கால்களுள்ளவையும், சிறந்தகொடிகள் கட்டினவையும, அடங்கின குதிரைகளோடுமம விசித்ரயுத்தங்கள் செய்யத்தக்க தேராளிகளோடுங் கூடியவையுமான தேர்கள் ஆயிரம் என்னிடத்திலிருக்கின்றன. அந்தத்தேராளிகளில ஒவ்வொருவனும் ஆயிரமபொன்னுக்கு மேற்பட்ட சமபளமவாங்குகிறவன். அவர்கள் யுத்தஞ்செய்தாலும் செய்யாவிட்டாலும மாஸந்தோறும சம்பளம் கொடுக்கப்படும். ராஜாவே! இஃது என்தனம. இதனால் நான் உன்னுடன்ஆடுவேன்" என்றுசொன்னர். மனததில் பகைவைத்தவனும் கெட்டஎண்ணமுள்ளவனுமாகிய சகுனி அவா இவ்வாறு சொன்னவுடன், 'ஜயித்தாயிற்று' என்றே யுதிஷ்டிரருக்குசசொன்னன். யுதிஷ்டிரர், "யுதத்தத்தில அரஜனனுல் தோலவியடைந்த சித்ரரதன் என்னும் கந்தர்வன் அரஜனன்மேல ஸந்தோஷமடைநது குருவி போலச் சித்திரநிறமுள்ளவையும பொன்மாலைபூண்டவையுமான கந்தர்வலோகதது குதிரைகளை அரஜனனுக்கு அன்புடன் அளித்திருக்கிறன். ராஜாவே! இஃது என்தனம. இதனால் நான் உன்னுடன்ஆடுவேன்" என்றுசொன்னர். தன்னுள் நிச்சயமுள்ளசகுனி இதைத்கேட்டு மோசத்தைக் கடைபபிடித்து, 'ஜயித்தாய்விட்டது' என்றே யுதிஷ்டிரருக்குச்சொன்னன். மறுபடியும் யுதிஷ்டிரர், "பதினாயிரம் சிறநத ரதங்களும் வண்டிகளும் பலவகைக்குதிரைகளும் பூட்டியேயிருக்கின்றன. அப்படியே ஒவ்வொரு வர்ணத்திலிருநதும் ஆயிரக்கணக்காக பொறுக்கியெடுக்கப்பட்ட சிறந்த பராக்கமமுள்ள

---

[1] மூலத்தில் 'பத்மிந:' என்றிருக்கிறது. 'கழுத்திலும் கபோலத்திலும் தாமரைமலர்போன்ற புள்ளிகளுள்ளவை' என்பது பழையவுரை.

வீரர்கள் எல்லாரும் சேர்ந்திருக்கின்றனர். அவர்கள் பாலிக்குடித் துக்கொண்டும் சம்பாவரிசிச்சோற்றை யுண்டுகொண்டும் இருக்கின்றனர். எல்லாரும் அகன்றமார்புள்ளவர்கள். அவர்கள் அறுபதினாயிரவர். ராஜாவே! இஃது என்தனம். இதனால் நான் உன்னோடாடுவேன்" என்றுசொன்னார். தன்னில் நிசசயமூளசகுனி இதைக்கேட்டு மோசத்தைக் கடைபபிடித்து, 'ஜயித்தாய்விட்டது' என்றே யுதிஷ்டிரருக்குச் சொன்னன். யுதிஷ்டிரர், "துரியோதனனே! ஒவ்வொன்றிலும அவ்வைரது துரோணங்கள் விலைமதிக்கபபடாத சிறந்த ஆணிப்பொன்னடங்கினவையான நானூறுசெம்பு இருமபுபபாத்திரங்கள் இருக்கின்றன. ராஜாவே! இஃது என்தனம. இதனால் நான் உன்னுடன்ஆடுவேன்" என்றுசொன்னர். தன்னுள் நிச்சயமூள்ளசகுனி இதைக்கேட்டு மோசத்தைக் கடைப்பிடித்து, 'ஜயித்தாய்விட்டது' என்றே யுதிஷ்டிரருகுசசொன்னன்.

எண்பத்தாறுவது அத்தியாயம்.

த்யூதபர்வம். (தொடர்ச்சி.)

(விதுரர் திருதராஷ்டிரனிடம் சூதாட்டத்தை நிறுத்தச்சொன்னது.)

இவ்வாறு எல்லாப் பொருள்களையும் கொண்டுபோவதாகிய கொடிய சூதாட்டமானது நடத்தபபடுமபோது, எல்லாநலதேவதைகளையும் விடுவிபபவராகிய விதுரர் திருதராஷ்டிரனுக்குச் சொல்லலானர் :—"பரதவம்சத்து மஹாராஜாவே! நான் உமக்குச் சொல்லப்போவதை நீர் தெரிந்துகொள்ளும். இறக்கப்போகிறவனுக்கு மருந்து எபபடியோ அப்படியே கேள்வி உமக்குப் பிரியப்படாமலுமிருக்கும். கெடுதிவினைவுள்ளவனும் பரதவம்சத்தைக் கெடுப்பவனுமாகிய இந்தத் துரியோதனன் முன்னர்பபிறந்தபோதே நரிபோல விகாரமானகுரலோடு ஊளையிட்டானன்றோ? இவன் உங்கள்மாணதுதுக்கு ஹேதுவாயிருக்கத் தகும். துரியோதனன் வடிவமாக வீட்டுக்குள் நரியிருப்பதை நீர் அன்பினால் அறியவில்லை. எனது நீதியுள்ளசொல்லைகேளும். தேனெடுப்பவன் தேன்கிடைத்தபோது தன்விழுகைக்குக் காரணமான மலைச்சரிவைப பார்ப்பதிலை; தேனிருக்குமிடத்தில்ஏறி அதிலேயே ஆழ்ந்துபோகிறான்; அதனால், விழுகிறான். அப்படியே இந்தத் துரியோதனனும் சூதாட்டமென்னுந்தேனில் மயங்கித் தான் விழுவதைப்பற்றி ஆராய்ந்துபார்க்கவில்லை. மஹாராதர்க

ளோடு பகைசெய்வதனால் வரும்கெடுதியை அறியவில்லே. மிகத்தெ ரிந்தீவரே! முன்னர் போஜவம்சத்தாருக்குள்ளேயே அஸமஞ்சஸ னென்னும் புத்திரனே ஈசுரத்தோருடைய நன்மைக்காகத் தந்தையே விட்டுவிட்டானென்று எனக்குத்தெரியும். பகைவரைக் கொல்லுகிற வராகிய கிருஷ்ணபகவானால் கம்ஸன் கொல்லபட்டபோது அவர்கட் டனேயினால் அந்தகர்களும் யாதவர்களும் போஜர்களும்சேர்ந்து கம் ஸனே விட்டுவிட்டனர். அதனால், அந்தக்குலத்தோரனேவரும் அனேக வருஷகாலங்களாக ஸந்தோஷமாயிருக்கின்றனர். அர்ஜுனன் உமது கட்டனேயினால் துரியோதனனே அழிக்கட்டும். இந்தப்பாபியையழி ப்பதனால் மற்றக்கௌரவர்கள் ஸுகமாக மகிழ்ந்திருக்கட்டும். ராஜா வே! காக்கையும் நரியுமாகிய துரியோதனனேக்கொடுத்து மயில்க ளும் புலிகளுமாகிய பாண்டவர்களே விலக்குவாங்கும. துயரக்கட லில் நீர்முழுகவேண்டாம். ஒருகுலத்திற்காக ஒருமனிதனே விட்டு விடவேண்டும். தேசத்திற்காகக் கிராமத்தை விடவேண்டும். தனக் காகப பூமியையே விட்டுவிடவேண்டும். எல்லாரதெரிந்தவரும் எல் லாருடைய அபிப்பிராயங்களேயும் அறிந்தவருமான சுக்கிராசாரியர் ஜம்பாஸுரனே விடவேண்டியதற்காக அஸுரசரேஷ்டர்களேப பார்த்து இவ்வாறு சொன்னர். ஒரு ராஜாவானவன் பொன்னேஆனுகின்ற சிலகாட்டுப பறவைகளே வீட்டில்கொணர்ந்துவைத்துக்கொண்டு பொன்னுசை யினால் அவற்றைக்கொன்றுவிட்டானும். வீரரே! பொன்னேவிரும் பினஅவ்வரசன் பொன்னேயெல்லாம் ஒரேகாலத்தில்அனுபவிக்கும் ஆசையினால் கண்ணில்லாமல் எதிர்காலமநிகழ்காலமிரண்டின்லாபங் களேயும் உடனேயழித்துவிட்டான். வேந்தரே! ஆதலால, நீரும் அவ னேப்போலவே பொருளாசைகொண்டு பாண்டவர்களுக்குத் துரோ கம் செய்யலாகாது. பறவைகளேக்கொன்றபுருஷனேபோல ஆசை கொண்டநீரும் பின்னல்துயரபடுவீர். பாரதரே! புஷ்பக்காரன் தோட்டத்தில்அன்புசெய்து (காப்பாற்றி) பூத்தபுஷ்பங்களேமட்டும் எடுத்துக்கொள்ளுவதுபோல நீர் பாண்டவர்களிடம் அன்புவைத்து அப்போது அப்போது அவர்கள் பிரியபபட்டுக்கொடுக்கும தனங்களே வாங்கிக்கொள்ளும்; தீவைப்பவன் மரங்களேக்கொளுத்துவதுபோல அவர்களே வேரோடுகொளுத்தாதீர்; பிள்ளேகள் மந்திரிகள் ஸனே களுடன்கூட யம்லோகத்திற்குச்செல்லாதீர். பரதரேறே! ஒன்றுசேர் ந்தபாண்டவர்களுடன் தேவர்களோடுசேர்ந்து மேரவேந்ததேவேந் திரனுயினும் எதிர்நின்று யுத்தஞ்செய்யமுடியுமா? கலகத்திற்கு

ம்வரானசூதானது மிபருஙமிகாடுமைக்குக்காரணமாக ஒருவர்க்கொரு வர் பகையைஅழைக்கிறது. திருதராஷ்டிரபுத்திரனுகிய இந்தத்துரி யோதனன் அநுதசசூடாடடத்தையடைநது கொடிய துவேஷத்தை யுண்டாக்குகிறான். துரியோதனன்செய்த்பிழையினல் பிரதீபவம்சத் திற்பிறநதவரும சநதனுவம்சதிறபிறநதவரும பீமஸேனவமசத்திற் பிறநதவருமாகிய கௌரவர்களனைவரும பாஞ்ஜீகர்களுடன்கூடத் துயரத்தையடையபபோகின்றனர். விருஷபம் கொழுப்பினல் தன் கொம்பைத் தானேயொடிதத்துக்கொள்வதுபோல இநததுரியோத னன் கர்வத்தினல்கேஷமத்தையும ராஜ்யத்தையும இழந்துவிடுகிறான். ராஜாவே! வீரனும சிறநதபுததியுளளவனுமாகியஒருவன் தன்னறி வைவிட்டுப பிறன்மனததைஒதததபோலாஞயின் அவன் சிறுவனை மாஞமியோடுகூடிய கபபலிலேறினவன் கடலில்மூழ்குவதுபோலக் கொடுநதுயரததிலமூழ்குவான். துரியோதனன் பாண்டவனுடன் பநதயம்போடுகிறான். இவன்ஜயிகக்கிறானெனறு நீர் அதில்பிரியப படுகிறீர். அதிகவினையாடடு சண்டையாகமுடியும. அதனல் மனி தர்களுக்குக் கேடுநேரிடும. நன்றுகூடாதபடும உமதுசூதாட்ட மானது தலைகீழாகபபயனைத்தரும மந்திராலோசனை அடியாக மனத் தைக்கட்டுவது மேலானது. உமமுடையபுததிரனுகிய யுதிஷ்டிர னுடன்நேரும இநதக்கலகததைபபறறி நீர் நினையாமலே ஒபபுக் கொண்டிருக்கிறீர். பிரதீபவமசத்தவரும சநதனுவமசத்தவருமான அரசர்கள்! இநதகௌரவர்களின்ஸபையில இநதநீதிவாகயத் தைக்கேளுங்கள. புததியிலலாதவனியனுலரிபபதனல் ஜ்வலிக்கின்ற கொடியதீயில்லிபூதீகள. சொக்கட்டான்காய்களின்மயக்கதினல மூடபபட்டபாண்டுபுதரனுகிய தாமாஜாவும விருகோதரனும் ஸவ்ய ஸாசியும நகுலஸஹதேவர்களும கோபததையடக்காமறபோவாரா யின் அநதப்பெருங்கலகதில உங்களுககுத [1]தீவுபோலிருபபவன் யாவன்? மஹாராஜாவே! இநதத்யூதமாடுவதறகுமுன்னமே மனததில விரும்பக்கூடிய தனஙகளெல்லாவறறிறகும நீர் இருபபிடமாயிருக் கிறீர். அதிகதனமுள்ளபாண்டவர்களைஜயிததால் அநதத்தனம உம க்குளன்னஆகும்? இபபோது பாண்டவாகளையடையும சகுனியி னுடையஆட்டததை நாம்அறிவோம. பர்வதராஜாவானசகுனி சூதி லுள்ளசூதையறிநதிருக்கிறான். சகுனி, ஙகிருநதுவநதாலென்ன அங் கே போகட்டும. பாரதரே! பாண்டவர்களைச் சண்டைமூட்டாதீர்" என்றார்.

[1] கடல்நடுவில்தீவுபோல ஆதரவாயிருப்பவனென்பதுபொருள்.

எண்பத்தேழாவது அத்தியாயம்.

த்யூதபர்வம். (தொடர்ச்சி.)

(துரியோதனன் விதுரரைநிந்தித்ததும், அவர் அவனுக்கு ஹிதமுரைத்ததும்.)

துரியோதனன், "விதுரரே! நீர் எப்போதும் திருதராஷ்டிரன்புத்திரர்களை இகழ்ந்து பிறர்புகழையே புகழ்கிறீர். விதுரரே! உமக்கு யாரிடத்தில் அன்பிருக்கிறதென்பது எங்களுக்குத்தெரியும். எங்களைச் சிறுவர்களைப்போலவே எப்போதும் தாழ்வாகப்பேசுகிறீர். அப்படிப்பட்டமனிதன் வேறிடத்தில்விருப்பமுள்ளவனென்று அறியத்தக்கவன். அதற்குதக்கபடிதான் இகழ்ச்சியையும புகழ்ச்சியையும்செய்கிறான். அவனவன்நாவே அவனவன்உள்ளத்திலிருப்பதை வெளியிடுகிறது. உமதுமனம் விரோதமாயிருப்பதை நாங்கள்அறிந்திருக்கிறோம். அரவதைமடியில்வைத்ததுபோலிருக்கிறீர்; பூனை போல வளர்ப்பவனையேகெடுக்கிறீர். ஸ்வாமிதரோஹமசெய்யும்உமமை மிக்கபாவியென்று யாரும்சொலவதில்லை. விதுரரே! அதனாலே தான் நீர்பாவத்திற்கஞ்சவில்லையோ? விதுரரே! பகைவர்களை ஜயித்துப் பெரியலாபத்தைபபெறறிருக்கிறோம. இனி எங்களைப்பார்த்துக் கடிஞ்சொறகளைச்சொல்லாதீர். நீர் எங்களபகைவர்களோடுசேர்க்கையில் விருப்பமுள்ளவர்; எங்கள்சேர்க்கையில் வெறுப்பைஅடைகிறீர். தகாதசொல்லைச்சொல்லுகிறமனிதன் சத்ருவாகிறான். அவன்சத்ருக்களைத்துதிக்கும்போது, அவர்களின்ரஹஸ்யங்களை மறைத்துவிடுகிறான். வெடகமற்றவரே! பாண்டவர்களைச்சார்ந்துகொண்டு ஏன் பீடிக்கிறீர்? நீர் எதைஎண்ணுகிறீரோ அதைத்தான் இப்போது பேசுகிறீர். எங்களை அவமதிக்காதீர். உம்முடையமனதை நாங்களறிவோம். பெரியோர்களிடமிருந்து நல்லறிவைக்கற்றுக்கொள்ளும். விதுரரே! நன்றுகலம்பாதிகபபட்டபுகழைக காபபாறறிக்கொள்ளும். அயலார்காரியங்களில் நீர் பிரவிருத்திக்கவேண்டாம். விதுரரே! நீர், 'நானே அதிகாரி' என்றுநினைத்துக்கொளளாதீர். எப்போதும் எங்களைபபார்த்துக் கொடுஞசொற்களைச்சொல்லாதீர். விதுரரே! எனக்கு எதுநன்மையென்று உமமை நான்கேட்கவில்லை. விதுரரே! உமக்குசூக்ஷமமுண்டாகட்டும். பொறுத்தவர்களை நீர் துன்பபபடுத்தவேண்டாம். கட்டளையிடுகிறவன் ஒருவன்தான்; மற்றொருவன் கட்டளையிடுகிறவனில்லை. அந்தக்கட்டளையிடுகிறவன் மனிதன்கர்ப்பத்திலிருக்கும்போதே கட்டளையிடுகிறான். ஜலமானது பள்ளத்தாக்

கிணலிழுக்கப்படுவதுபோல அவனுடையகட்டளையினல் மனிதன் இழுக்கப்படுகிறன். நான் எப்படிக்கட்டளையிடப்பட்டிருக்கிறேனோ அப்படி இருக்கிறேன். தலையினல் மலையையுடைக்கிறவனும் பாம்பைப புசிபபிக்கிறவனும் எவனே அவனுக்கு அவன்புத்திதான்காரியங்க ளில்கட்டளையிடுகிறது. எவன்வலிதுகட்டளையிடுகிறனோ அவன் அநதக்கட்டளையினலேயே தனக்குச் சதருவைத்தேடுகிறன். ஸ்நே ஹத்தை விடாமலிருபபவனைத் தெரியாதவன் அலக்ஷியஞ்செய்கி றன். பரதவம்சததவரே! [1]எவன் கர்பபூரதை முதலில்கொஞ்சதி வெகுநேரம் கவனியாமலிருக்கிறனோ அவன் அதில் மிஞ்சிய சாமப லக்கூட ஒருகாலும அடையான். விதுரரே! எதிரிகளின்பக்கத்திற் சேர்ந்து பகைபபவனுகிய வேண்டாதவனிதனை ஸமீபத்தில வைத் துக்கொள்ளாமலிருபபது முக்கியம. விதுரரே! ஆதலால், உமக்கு எங்கே விருபபமிருக்கிறதோ அங்கேபோகலாம். கெட்டநடையுள்ள ஸ்திரீயானவள மிகவும நலலவார்தை சொலலபபட்டாலும் விட் டேவிடுவாள்" என்றுசொன்னன்.

விதுரா, " [2]இவளவினலேயே ஒருமனிதனை எவர்கள் விடு கிறார்களோ அவாகளின்நட்பு முடிவுள்ளது. மஹாராஜனே! சொ ல்லு. அரசர்களுடைய உள்ளங்கள் கலங்கியேயிருக்கின்றன. அவ ர்கள் இன்சொலலைக்கொடுதது உலக்கைகளால் இடிபபவா. மிகக் குறைநதபுத்தியுள்ள ராஜபுத்திரனே! நீ உன்னைச சிறுவனல்லா தவனுகவும என்னைச் சிறுவனுகவும நினைக்கிறாய். எவன் ஒருமனி தனை ஸ்நேஹத்தில் வைததுக்கொண்டு பிறகு அவனையேதூஷிக் கிறனோ அவன்தான் சிறுவன். வேதமோதின பிராமணன்வீட்டில் கெட்டபோனபெண் எப்படியோ அப்படியே கெட்டபுத்தியானது நன்மையைததராது. சிறுபெண்ணுக்கு அறபதுவயதான கணவன் எப்படியோ அபபடியே பரதசிஷேத்ரஜனை உனக்கு நல்லதைச்சொல் லுகிறவன் வேண்டியிரான். அரசனே! ஆதலால் உன்மனத்திறகினி யதையே நீ விரும்புவையாயின், மாதர், பிததர், முடவர்முதலியவர்க ளிடத்தில் நன்மையும் தீமையுமான எல்லாக் காரியங்களையும் பற் றிக் கேட்டக்கடவாய். இவ்வுலகத்தில் இன்சொறசொல்லும் பாபி யானமனிதன் எப்போதும கிடைப்பான். இன்னுதும் நன்மைபயப்

---

1 நிந்திதவன் உடனே பரிஹாரம் செய்யுவிடில் பழையஸ்நேஹம் எவ்வளவும் நில்லாது என்பது கருத்து.

2 திருதராஷ்டிரனைப்பார்த்துச்சொன்னதாகப் பழைபிரதியை அபிப்பிரா யப்படுகிறது.

பதுமானசொல்லை உரைபபவனும கேடபவனும் கிடைப்பது அரிது. எவன் தர்மத்தையே தலைமையாகக்கொண்டு தன்ராஜாவின் விருப்பையும் வெறுபபையும் கவனியாமல் இன்னதவையாயினும் நன்மை பயப்பனவற்றையே உரைக்கிறானே அவன்தான அரசனுக்குத துணைவன். மஹாராஜாவே! வியாதியினுண்டாகாமல கடுமையினுண்டானதும் கூர்மையானதும் வெபபமானதும கீர்தியைஅழிபபதும் கொடியதும் நாறறமுள்ளதும் ஸத்புருஷர்கள் அடக்கிவிடுவதும் அயோக்யர்கள் அடக்காததுமான அதை நீ [1]அடக்கிவிட்டுச் சாந்தனுக இரு. திருதராஷ்டிரமஹாராஜாவுக்கும் அவர் புத்ரர்களுக்கும் புகழும செல்வமும நீடிதிகாலமிருபபதை நானவிரும்புகிறேன். ஆதலால், உனக்கு அஃது இருக்கவேண்டுமு. உனககு ஒருவநதனம். எனக்கும [2]பிராமணர்கள் க்ஷேமததைக் கொடுககக்கடவர். பாரவையில் விஷமுள்ளஸாபபங்களைத் தெரிநதவன் கோபமமூட்டமாட்டான். கௌரவனே! நான் உனக்கு இதைததான் தொடர்சசியாகச் சொல்லுகிறேன்" என்றுசொன்னர்.

எண்பத்தேட்டாவது அத்தியாயம்.

த்யூதபர்வம். (தொடர்ச்சி.)

(ஆடடத்தில் தர்மபுத்ரர் எல்லாப்பொருள்களையும் தோற்றபிறது ஸஹோதரர்களையும் தம்மையும் திரௌபதியையும் தோற்றது.)

சகுனி, "யுதிஷ்டிரா! பாண்டவர்களுடைய மிகுதியான தனங்களைத தோற்றபு. குந்திபுத்ரனே! தோறகாததிரவியம் உனக்கு ஏதாவதிருக்குமானால சொல்" என்றுகேடடான். தாமபுத்திரா, "ஸுபலபுத்திரனே! என்னுடையதனம எண்ணமுடியாது. அஃது எனக்குத்தெரியும. சகுனியே! நீ தனத்தைபபற்றி ஏன்கேட்கிறாய்? 3 அயுதம, 4பரயுதம, 5சங்கு, 6பதமம, 7அர்பபுதம, 8கர்வ, 9சங்கம், 10நிகர்வம, 11மஹாபத்மம, 12மதயம, 13பரார்த்தம் என்னும கோடி ஸங்கியைகளும அதற்கு மேறபடடவையும பரதயமவைக்கலாம். ராஜாவே! இஃது என்னுடையதனம். இதனால நான் உன்னுடன்

---

1 மூலத்தில் 'பேயம்' எனறிருக்கிறது; பேயம்=குடிக்கத்தக்கது.

2 பிராமணர்சீர்வசனம் வேண்டுமேயன்றி உன்விருப்பம் வேண்டாம் என்பது கருதது.

3 பதினாயிரம்; 4 பத்துலக்ஷம; 5 பத்துலக்ஷம்கோடி; 6 நூறுகோடி; 7 பத்துக்கோடி; 8 ஆயிரங்கோடி; 9 லக்ஷமகோடி; 10பதினாயிரமகோடி; 11 நூறுலக்ஷங்கோடி; 12 பதினாயிரலக்ஷங்கோடி; 13 லக்ஷலக்ஷங்கோடி.

ஆடுவேன்" என்றுசொன்னார். தன்னுள நிச்சயமுள்ளவனன சகுனி இதைக்கேட்டு மோசதததைக் கடைபபிடிதது, 'ஜயித்தாயிற்று' என்றே யுதிஷ்டிரருக்குசசொன்னன். யுதிஷ்டிரர், "சகுனியே! பசுக்கள்நிரமபின் மருதைகளும குதிரைக்கூட்டமும எண்ணிறநத வெள்ளாடுகளும செமமறியாடுகளின் கூடடமும ஸிந்துநதிக்குக் கிழக்கே பர்ணசியென்னும நதியின்கரையில இருக்கின்றன. அவையெலலாம என்னுடைய தனங்கள. அதனால நான் உன்னுடன் ஆடுவேன்" என்று சொன்னர். தன்னுள நிசசயமுளளசகுனி அதைககேட்டு மோசதததைக் கடைபபிடிதது, 'ஜயிததாயிறறு' என்றே யுதிஷ்டிரருக்குச் சொன்னன். யுதிஷ்டிரா, "அரசனே! நகரமும தேசமும பூமியுமெத்தும பிராமமணரலலாதவர்களுடைய தனங்களும பிராமமணரல்லாத மனிதாகளுநதாம் எனக்கு மிசசமுளளபொருளகள். ராஜாவே! இதுதான் என்தனம. இதனால நான் உன்னுடனஆடுவேன" என்று சொனனர். தன்னுள நிசசயமுளளசகுனி இதைககேட்டு மோசதததைக் கடைபபிடிதது 'ஜயிததாயிறறு' என்றே யுதிஷ்டிரருக்குச் சொன்னன். யுதிஷ்டிரா, "ராஜனே! இநத ராஜகுமாராகள் எவற்றினால அலங்கரிக்கபபடடு விளஙகுகின்றனரோ இநதககுண்டலங்கள் கண்டிகள் முதலான ராஜாபாணங்களுணைத்தும் எனதுதனம. அரசனே! இவைகளால் நான் உன்னுடு ஆடுவேன்" என்றுசொன்னர். தன்னுள் நிச்சயமுள்ளசகுனி இதைக்கேட்டு மோசதததைக் கடைப்பிடிதது, 'ஜயிததாயிறறு' என்று யுதிஷ்டிரருக்குசசொன்னன். யுதிஷ்டிரர், "கறுததவனும இளவுயதிலிருபபவனும சிவந்தகண்களும ஸிமமமபோன்ற தோளகளும நீண்டகைகளுமுள்ளவனுமாகிய நகுல னெருவனே எனக்குபபநதயம. இவன் எனதுதனமென்றறி" என்று சொன்னர். சகுனி, "ராஜனே! யுதிஷ்டிரனே! உனக்கன்பனும ராஜகுமாரனுமான நகுலன் எங்களவசமாய்விட்டான். இன்னும் யாரை வைதது ஆடுகிறாய்" என்றுசொலலி அநதககாய்களை மறுபடியும் ஆடினன். 'ஜயிததாயிறறு' என்றே யுதிஷ்டிரருக்குசசொன்னன். யுதிஷ்டிரா, "இநதஸஹதேவன் தர்மங்களை உபதேசிபபவன். இவ்வுலகத்தில் பண்டிதனென்று பெயர்பெற்றவன். என்அன்பனுகிய இநதராஜகுமாரன் பநதயதததுககுத தகாதவனுனுமம இவனை வேண்டாதவனைப்போலப் பநதயமவைத்தாடுகிறேன்" என்றுசொன்னர். தன்னுள் நிச்சயமுள்ளசகுனி இதைககேட்டு மோசதததைக் கடைபபிடித்து, 'ஜயிததாயிற்று' என்றே யுதிஷ்டிரருக்குச்சொல்லி, "ஓ! ராஜனே!'மாத்ரிபுத்ரர்கள் உனக்கு அன்பர்கள். இவர்கள் என்னால்

ஜயிக்கப்பட்டனர். பீமஸேனனும தனஞ்சயனும் உனக்குமேம்பட்டவரென்று நான் நிணைக்கிறேன்" என்றுசொன்னன். யுதிஷ்டிரர், "மூடா! எங்களுடையநீதியை நீ பார்க்கவில்லே. நீ பாபம்செய்கிறாய். ஒத்தமனமுள்ள எங்களுக்குள் மித்திரபேதஞ்செய்யக் கருதுகிறயன்றே?" என்றுசொன்னர். சகுனி, "தனமதமுள்ளவன் பள்ளத்தில்விழுகிறன்; ஜாகரதையில்லாமல் ஸ்தாவரம்போலாகிறன். ராஜாவே! பரதச்ரேஷ்டனே! நீ மூத்தவனும் சிறந்தவனுமாயிருக்கிறாய்; உனக்கு நமஸ்காரம். யுதிஷ்டிரனே! [1]சூதாடுகிறவர்கள் ஆடும்போது வரம்புகடந்தவர்கள்போலப பிதற்றுவன, கனவிலாவது விழிததுக்கொண்டிருக்கையிலாவது காணதவைகளதாம" என்று சொன்னன். யுதிஷ்டிரர், "சகுனியே! யுத்ததில் கபபல்போல எங்களைக் கரைசேர்பபவனும பகைவரைஜயிப்பவனும பராக்ரமசாலியும உலகத்திலொபபற்ற வீரனும ராஜகுமாரனுமாகிய அர்ஜுனன் பாதயத்துக்குத் தகாதவனுயினும அவனைவைத்து ஆடுகிறேன்" என்றுசொன்னர். தன்னுள் நிச்சயமுள்ளசகுனி இதைக்கேட்டு மோசததைக் கடைப்பிடிததது, 'ஜயித்தாயிற்று' என்றே யுதிஷ்டிரருக்குசசொல்லி, "ராஜாவே! பாண்டவனே! பாண்டவர்களுள் சிறநதவில்லாளியாகிய இநத ஸவ்யஸாசியையும் நான் ஜயித்துவிட்டேன். இனி உனக்கனபனை பீமனைவைத்தாடு. ஆட்டத்திற்குப் பந்தயமாக ஒருவன்தான் மிசசமிருக்கிறன்" என்றும் சொன்னன். யுதிஷ்டிரர், "ராஜாவே! எங்களுக்குததலிவனும் யுத்தத்தில் எங்களைநடததுகிறவனும் இந்திரனபோல அஸுரர்களுக்கு ஒபபற்ற சத்ருவும் குறுக்கானபார்வையும் வளைநதபுருவங்களும லிம்மம்போன்ற தோள்களுமுள்ளவனும எபபோதும் அவமதிபபைப் பொறுதவனும மஹாத்மாவும் தேகவன்மையில் தனக்கொபபற்றவனும் இவவுலகில் கதை பிடித்தவர்களுள் முதன்மையானவனும் பகைவரைத் தொலைபபவனும் ராஜகுமாரனுமான அநதப்பீமஸேனன் பந்தயத்துக்குத் தகாதவனுயினும அவனைவைத்தாடுகிறேன்" என்று சொன்னர். தன்னுள நிச்சயமுள்ளசகுனி இதைக்கேட்டு மோசத்தைக் கடைபபிடித்தது, 'ஜயித்தாயிற்று' என்றே யுதிஷ்டிரருக்குச் சொல்லி, "குநதிபுத்ரனே! அதிக்ஷத்ரியங்களையும ஸஹோதரர்களையும யானைகளையும குதிரைகளையும தோற்றாய். தோலாதஷத்ரியம் ஏதாவது உனக்கிருக்குமானால் சொலலு" என்று கேட்டான். யுதிஷ்டிரர், "என்ஸஹோதரர்கள் எல்லாரிலும் நான் சிறந்தவன்; அவர்க

[1] ஆட்டத்திற் பேசினதற்காகக் கோபிக்கவேண்டாம் என்பது கருத்து.

ளுக்கன்பன். நான் ஜயிக்கபபட்டு என்னை நிர்ப்பநதப்படுத்தினால் நானே ஊழியஞ்செய்வேன்" என்றுசொன்னார். தன்னுள் நிச்சய முள்ளசகுனி இதைக்கேட்டு மோசநதனை கடைபபிடித்து, 'ஜயித் தாயிறறு' என்றே யுதிஷ்டிரருக்குச்சொலலி, "ராஜாவே! உன்னை நீதோறறது மிகபபாவமானது. மற்றத தனமிருக்கும்போது தன்னைத்தோற்பது பாவம" என்றும சொன்னன். சூதாடி கருவிகளைத் தெரிநத சகுனி இவ்வாறுசொலலி லோக்ஷீரர்களாகிய அவர்களெல் லாரும தன்பநதயநதிலகபபட்டிருபபதைத தனிநதனியே ராஜாக்க ளுக்குச்சொல்லி வென்றான்.

(பிறகு) சகுனி, "வேநதனே! நீ தோலாதபநதயம ஒன்றிருக்கி றது; அதாவது உனதுமனைவி; பாஞ்சாலராஜன்புதரியான கிருஷ்ணை யைப பநதயதிலவை, அவளால மறுபடியும உன்னை மீடடிக்கொள்" என்றுசொன்னன். யுதிஷ்டிரர், "ஸுபலபுதரினே! அரசனே! குறுமையும நெடுமையுமலலாமலும இனைதத்ராமனும அதிகச் சிவப பில்லாமலுமிருபபவளும, கறுததும சுருணடுமிருக்கும கூநதல்களை யுடையவளும, சரதகாலதது தாமரையிதழ்போன்ற கண்களையுடை யவளும, சரதகாலத்துத் தாமரைபோன்ற மணமுள்ளவளும, சரத் காலதது தாமரைமலரைநிநதவளும, அழகிலும தையரியிலும ஒளியி லும நலலொழுகுகதிலும லக்ஷ்மிக்கொபபானவளும, புருஷர்கள் விருமபததக்கவளும, எல்லாநறகுணங்களும நிரமபினவளும், அனு கூலமானவளும, இன்சொல்லேசொல்லுகிறவளும், அறமபொருளின் படிமனனும மூன்றுபுருஷார்த்தங்களும லபிதது பபதறகுக் காரணமாக மனிதன் நினைக்கதகக வளும், பின்தூங்கி முன்னெழுநதிருபபவ ளும, ஆடிமாடுமேய்ப்பவர்களமுதல் எலலாருடையவேலைகளும ஆன தையும ஆகாததையும முறறிலும அறிகிறவளும, வேர்வை அரும்பும் போது மதுததுளிகளுள்ள தாமரைமலர்போலவும மல்லிகைமலர் போலவும் விளங்கும முகமுளளவளும, துண்ணிடையும நீண்டகூந் தலும் சிவநதவாயுமுள்ளவளும, தேஹததில் ரோமங்கள்குறைநதவ ளும், இன்னும் இவ்வகையான அனேகநற சிறபபுக்களுற்ற அழகான அங்கங்களுடையவளும, பாஞ்சாலராஜன குமாரியுமான திரௌபதி யைப பந்தயமவைத்து ஆடுகிறேன்; ஐயோ!" என்றுசொன்னர். சிறந்தபுத்தியுள்ள தர்மராஜரால் இநதசசொல் சொல்லபபட்டபோது ஸபையோரான பெரியோர்களிடமிருந்து, "ஃபீ! ஃபீ!" என்ற சொற்கள் வெளிபபட்டன. ஜனமேஜயராஜாவே! அந்தச்சபையே கலங்கிற்று. அரசர்களுக்கும பீஷ்மர் துரோணர் கிருபர் முதலியோர்க்கும கண்

ணீரும் வியர்வையுமுண்டாயின. விதுரர் தலையைப் பிடித்துக்கொண்டு உயிர்போனவர்போலத் தலைகுனிந்து நிந்தித்துக்கொண்டு ஸர்ப்பம்போலப் பெருமூச்செறிந்துகொண்டு உடகார்ந்திருந்தார். பாஹ்லீகன், ஸோமதத்தன், பரதீபவம்சத்தாரைசசேர்ந்த ஸஞ்சயன், அச்வத்தாமா, பூரிசிரவஸ், திருதராஷ்டிரன்புத்ரனுகிய யுயுத்ஸு ஆகிய இவர்களும் தலைகுனிந்து நாகங்கள்போல பெருமூசசெறிந்துகொண்டு பார்த்திருந்தனர். திருதராஷ்டிரன்மட்டும் மிக்களிதோஷத்துடன், 'ஜயித்தாயிற்று? ஜயித்தாயிற்று?' என்று பலமுறைகேட்டான்; எண்ணத்தை மறைக்கவில்லை. துசசாஸனன் முதலானவர்களுடன்கூடக் கர்ணன் மிகமகிழ்ந்தான். மற்ற ஸபையோரின் கண்களினின்றும் கண்ணீர்விழுந்தது. ஜயத்தினால் பிரகாசிப்பவனும் அதிககர்வமுள்ளவனுமாகிய சகுனி இவ்வாறு சொன்னபிறகு, 'ஜயித்தாயிற்று' என்றே அநதக்காய்களை மறுபடியும் ஆடினன்.

எண்பத்தொன்பதாவது அத்தியாயம்.

த்யூதபர்வம். (தொடர்ச்சி.)

(துசசாஸனரால் ஸபையில் இழுத்துவரப்பட்ட திரௌபதி சபையோரைப் பார்த்துத் தர்மஙகேகட்டது.)

துரியோதனன், "விதுரரே! வாரும்; பாண்டவர்களால் கௌரவிக்கபபெற்ற அனபுள்ள மனவியாகிய திரௌபதியை அழைத்துவாரும். வீட்டை விளக்கவேண்டும; சீக்கிரம்வரட்டும. அநதக் கெட்டநடையுள்ளவள் வீட்டில் தாஸிகளுடன் சேர்ந்திருக்கட்டும" என்றுசொன்னன்.

விதுரர், "மூடனே! உன்னைபபோன்றவன் பேசசத்தகாததை நீபேசினாய்; கயிற்றினால் சுருக்கிடபபட்டும் அதை அறியாம்லிருக்கிறாய்? படுகுழியில் தொங்குகிறாய்; அதை நீஅறியவில்லை. நீ மானுக இருநது புலிகளை அளவுக்குமீறிக் கோபிக்கசசெய்கிறாய் மிக மந்தமான புத்தியுள்ளவனே! கொடியவிஷமுள்ளஸர்ப்பங்கள் நிறைநத கோபத்தோடு உன்தலையில் இருக்கின்றன. அவற்றை இன்னும் கோபிக்கச்செய்யாதே. நீ யமலோகத்திற்குப் போகாதே. கிருஷ்ணையானவள் தாஸித்தனத்தைத் அடையதகாதவள். தர்மபுத்ரன் தனக்கு ஸ்வதந்த்ரமில்லாதகாலத்தில் அவளைப் பந்தயத்தில் வைத்திருக்கிறானென்று என் அபிப்பிராயம். திருதராஷ்டிரருடையபுத்திரனுகிய இந்த

ராஜாவானவன், தன்னைக்கொல்வதற்காக [1]மூங்கில் காய்ப்பதுபோல, பகையையும் பெரியபயத்தையும் தரத்தக்க சூதைக் கைப்பற்றியிருக்கிறான். இவன் மதங்கொண்டு தன்ஸாசத்தை அறியாமலிருக்கிறான். புண்ணிற்கோலிடுகிறவனுகவும் கொடுஞ்சொற் சொல்லுகிறவனுகவும் இருக்கலாகாது. [2]இழிவானவனிடத்திலிருந்து மேலான பொருளை வாங்கலாகாது. இவனுடைய எந்தச்சொல்லினால் பிறன் துயரப்படுவனே நரகலோகத்திற்குக் காரணமும் அடங்களுமான அந்தச் சொல்லைச் சொல்லலாகாது. வாயிலிருந்து கரைகடந்தசொற்களும் வெளிப்படுகின்றன. அவற்றினால் அடிக்கப்பட்டவன் அனேகம் இரவு பகல்கள் துயரப்படுகிறான். அவை, அயலானுடைய உள் [3]மர்மங்களில்தவிர மற்றஇடங்களில் விழுவதில்லை தெரிந்தவன் அவற்றைப் பிறர்மேல் விடுக்கமாட்டான். ஓர் [4]ஆடு கத்தியைவிழுங்கிற்று. ஆயுதம் தலைக்குள் மறைந்துபோனதனால் அதன்தலையை அறுத்துப் பூமியில் தள்ளுவதாகிய கொடுஞ்செய்கை நேர்ந்தது. அதுபோலப் பாண்டவர்களுடன் பகைசெய்துகொள்ளாதே. பாண்டவர்கள் இவ்வாறு ஒன்றும் சொல்வதில்லை. நாய்த்தன்மையுள்ள மனிதர்கள் காட்டிலுள்ள வேடனுடனும் கிருஹஸ்தனுடனும் வித்தைநிரம்பின ரிஷியானுடனும் அவர்களைக்கண்டு எப்போதும் இப்படித்தான் சூசைக்கின்றனர். மிகக்கொடிய நரகவாயிலான இந்தப்பாவத்தைத் திருதராஷ்டிராருடையபுத்ரன் அறியவில்லை, துச்சாஸனன் முதலான கௌரவர்களனேகர்கள் சூதாட்டத்தின்ஜயத்தில் துரியோதனனை அநுஸரிக்கின்

---

1 "வேனனென்னும் அரசன் ரிஷிகளை அவமதித்ததனால் அழிந்தான்" என்று கூறுவது பழைய உரை.

2 'இழிவான சூது முதலியவற்றால் சத்துருவை ஜயிக்கலாகாது' என்பது பழைய உரை.

3 உயிர்நிலை.

4 ஆடு கத்தியை இலையென்று நினைத்து விழுங்குமாயின் அதன்கழுத்தில் அகப்பட்டுக்கொள்ளும் அந்தக்கத்தியை ஆயுதம் வேண்டுபவன் இழுக்கும்போது அஃது அவ்வாட்டின்கழுத்தைவெட்டிக்கொண்டுதான் வரும். அப்படியே பாண்டவர்பகை உன் உயிரைக்கொண்டுதான் முடியும்என்பது கருத்து.

'ஓர்ஆடு ஒருகத்தியை விழுங்கதொடங்கி அதை விழுங்கமுடியாமையால் பூமியில் வாயைவைத்துக்கொண்டு கால்களினால் கத்தியைத் தள்ளிக்கொண்டு விழுங்கத்தொடங்கிற்று. கத்தியைத் தூக்கினதனால் தன்கையும் கழுத்தும் அறுபட்டுவிழுந்தது' என்பதும், 'ஒருமீன்பிடிப்பவன் தூண்டின் முள்ளில் மாவைத்தடவி ஜலத்தில்போட்டமீன் பார்த்து அவன்வீட்டிலுள்ள அந்த மாவுக்காக அந்தத் தூண்டின்முள்ளைக் கடித்துக்கொண்டது. அந்தமுள்ளை இழுக்கும்போது கழுத்தறுந்து ஆடு இறந்தது என்றதை இவ்விடத்தில் உதாஹரிக்கப்பட்டது' என்பதும் பழையஉரை.

றனர். சுரைக்காய்கள் அமிழ்கின்றன. கற்கள்மிதக்கின்றன. கப்பல் கள் அடிக்கடி வழிதபபிப்போகின்றன. மூடராஜாவான துரியோ தனன் நான்சொல்லும ,ஹிதங்களைக் கேட்கிறதில்லை. கௌரவர்க ளுக்கு முடிவு இதோ வரபபோகிறது ; நிச்சயம். எல்லாரையும் கொ ண்டுபோகும் மிகக் கொடியநாசம் வரும். (ஏனெனில்) மிக்கநன்மை யுள்ளவையான நண்பர்களின் நீதிச்சொறகள் கேட்கப்படுவதில்லை. ஆசையே மேலோங்குகிறது" என்று சொன்னர்.

மதத்தினல் தன்னைமறந்த துரியோதனன் விதுரரை, 'சீ' என்று சொல்லிப் பிராதிகாமியென்னும் வேலைக்காரனைப்பார்த்தான். ஸபை யில் சிறந்த பெரியோர் நடுவில், "ஓ! பிராதிகாமியே! நீ திரௌபதி யை அழைத்துவா. உனக்குப பாண்டவர்களிடத்தில் பயமில்லையே. இந்தவிதுரர் தாம் பயந்து விரோதமாகப பேசுகிறார். அவர் எபபோ தும் நம்முடைய விருதத்தியில் விருபபமில்லாதவர்தாமே" என்று அவ னுக்குக் கட்டளையிடடான். இவ்வாறு கடடளையிடபபட்ட பிராதி காமியென்னும தேர்பபாகன் ராஜாவின்சொலலைக்கேட்டு விரைவாகச் சென்றான். ஸிம்மமிருக்கும் குகையில் நாய்புகுவதுபோலப் பாண் டவர்களின் அரசியான திரௌபதியிருக்குமிடத்திற்குச் சென்று, "திரௌபதியே! யுதிஷ்டிரர் சூதென்னும் கள்மயக்கத்தினல் மய ங்கியிருக்கிறார். துரியோதனன் உன்னை ஜயித்துவிட்டான். ஆத லால், நீ திருதராஷ்டிரன்வீட்டுக்குள் போ. யாஜ்ஞஸேனியே! வேலை செய்வதற்காக உன்னை அழைக்கவந்திருக்கிறேன்" என்றுசொன் னன். திரௌபதி, "பிராதிகாமியே! ஏன் இப்படிப்பேசுகிறாய்? எந்தராஜபுத்திரன் மனிவியைவைத்தாடுவான்? ராஜாவானவர் சூதென்னும் கள்மயக்கத்தினல் மயங்கி மூடராஞரா? அவருக்குப் பந்த யம் மற்றென்றுமில்லையா"? என்றுசொன்னள். பிராதிகாமி, "வேறு பொருள் ஒன்றுமில்லாதபோதுதான் பாண்டவரான அஜாதசத்ரு உன்னைவைத்தாடினர். ஓ! ராஜகுமாரியே! அந்த ராஜாவினல் முத லில் ஸஹாதரர்களும் பிறகுதாமேயும் பந்தயம்வைக்கபபட்டபிறகு நீ பந்தயம் வைக்கபபட்டாய்" என்றான். திரௌபதி, "ஸூதபுத் ரனே! செல்; நீ அந்தசூதாடினவரிடம் சென்று, 'நீர் முதலில் உம் மைத்தோற்றீரா? அல்லது என்னைத்தோற்றீரா?' என்று ஸபையில் கேள். ஸூதபுத்ரனே! இதைத் தெரிந்து கொண்டுவா. பிறகு என்னை யழைத்துப்போகலாம். ராஜாவின் கருத்துத்தெரிந்தபிறகு நான் அக் கத்துடன் போவேன்" என்றாள். அப்போது அந்தப பிராதிகாமி யானவன் ஸபைக்குச்சென்று அரசர்களின் நடுவிலிருக்கும் தர்மராஜா

வைப்பார்த்து, "ஐயா! 'நீர் ஸ்வதந்திரத்துடன் என்னைத்தோற்றீர்? முதலில் உம்மைத்தோற்றீரா? என்னைத்தோற்றீரா?' என்று திரௌபதி உம்மைக்கேடகிறாள்" என்றுசொன்னான். யுதிஷ்டிரர் மனம்குன்றி உயிர்போனவர்போலிருந்தார்; அந்த ஸுதனைப்பார்த்து நல்லதென்றுவது தீதென்றுவது ஒருமறுமொழியும் சொல்லவில்லை. துர்யோதனன், "பாஞ்சாலி இங்குவந்தே இந்தக்கேள்வியைக் கேட்கட்டும். அவள்சொல்லுகிறதையும் இவன்சொல்லுகிறதையும் இங்குளளவரனைவரும் கேட்கட்டும்" என்றுசொன்னான். துரியோதனன் கடடளைக்குட்பட்ட அந்தப பிராதிகாமியென்னும் ஸுதன் தர்மராஜாவின் கிருஹத்திற்குசென்று திரௌபதியைப் பார்த்துத் துக்கத்துடன், "ராஜபுத்ரியே! இந்தச்சபையோர் உன்னையழைக்கின்றனர். கௌரவர்களுக்கு ஸர்தேஹமம்வந்ததென்று நினைக்கிறேன். ராஜபுத்ரியே! அந்தஅல்பன் உன்பெருமையைக் கவனிக்கவில்லையே! அவன் உன்னைச் சபைக்குக்கொண்டுபோக நினைக்கிறான்" என்றுசொன்னான். திரௌபதி, "பிரமமதேவர் இவ்வாறு கட்டளையிட்டிருக்கிறரென்பது நிசசயம். [1]சீதமும் உஷ்ணமுமாகிய இரண்டு உணர்ச்சிகளும கிழவனையும் சிறியவனையும தொடுகின்றன. உலகத்தில் தர்மமொன்றே முக்கியமாகச் சொலலபபட்டிருக்கிறது. அதை நாம காபபாற்றினால் அது நமக்கு நன்மையைச்செய்யும. அந்தத்தர்மம கௌரவர்களைவிட்டுப் போகாமலிருக்கவேண்டும். என்னுடைய இந்தத்தர்மமுள்ள கேள்வியைச் சபையோரிடம் சென்று கேள். தர்மத்தி லெண்ணமுள்ளவர்களும் நியாயத்திலிருப்பவர்களும் மிகச்சிறந்தவர்களுமான அந்தசசபையோர்கள் எதை நிசசயமாக எனக்குச்சொல்லுகிறார்களோ அதைச்செய்வேன்" என்றுசொன்னாள். திரௌபதியின் அந்தச்சொல்லைக்கேட்டு ஸுதன் ஸபைக்குச்சென்று அவள்சொன்னதைச் சொன்னான் அவர்கள் துரியோதனனுடைய அநதப் பிடிவாதத்தையறிந்துகொண்டு தலைகுனிந்தவர்களாகி யாதொன்றும் பேசாமலிருந்தனர். ஜனமேஜயரே! யுதிஷ்டிரர் அதைக்கேட்டுத் துரியோதனன் செய்யக்கருதினதையறிந்து திரௌபதிக்கு நம்பிக்கையான தூதனிடம், "பாஞ்சாலியே! ராஜஸ்வலையாயிருக்கும் நீ அரையில்முடிபபபட்ட ஒறறைவஸ்திரத்துடன் அழுதுகொண்டு ஸபைக்குவந்து மாமனார்முன் நில். ராஜபுதரியாகிய நீ ஸபைக்குவந்ததைக் கண்டபோது ஸபையோரெல்லோரும துரி

---

[1] ஸுகதுக்கங்கள் தகுந்தவனுக்கும் தகாதவனுக்கும் வருகின்றன என்பது கருத்து.

யோதனனே மனத்தினுல்திட்டுவார்" என்று சொல்லியனுப்பினுர். ஜனமேஜயராஜாவே! புத்திமானுகிய அந்தத்தூதன் திரௌபதியின் கிருஹத்திற்கு விரைவாகச்சென்று தர்மபுத்திரருடைய உள்கருத்தைத் தெரிவித்தான். மஹாத்மாக்களான பாண்டவர்கள் சோர்வும் துயரமுமுற்று ஸத்யத்தினுல் மிகக்கட்டப்பட்ட அங்கங்களுடையவர்களாய்ச் சிறிதும்கண்ணெடுத்துப் பாராமலிருந்தார்கள். பிறகு ராஜாவான துரியோதனன், அவர்கள்முகத்தைக்கண்டு மகிழ்ந்து தேர்ப்பாகனைப்பார்த்து, "பிராதிகாமியே! அவளை இங்கேயே அழைத்துவா. அவள் முன்னிலையிலேயே கௌரவர்கள் மறுமொழிசொல்லுவார்கள்" என்று சொன்னுன். அதன்பிறகு துரியோதனன்கட்டளையில் அகபடடவனும் திரௌபதியின்கோபத்திற்குப பயந்தவனுமாகிய பிராதிகாமியென்ற ஸூதன் வெட்கத்தைவிட்டு ஸபையோரை நோக்கி, "திரௌபதிக்கு நான் என்னசொல்வது" என்று திரும்பவும் கேட்டான்.

அப்போது துரியோதனன், "துச்சாஸனு! புத்தியில்லாத இந்த என்ஸூதபுத்தன் விருகோதரனுக்கு நடுங்குகிறுன். நீயே நேரில்போய்த் திரௌபதியைப பிடித்துக்கொண்டுவா. ஸ்வதந்திரம் தப்பினபலகைவர்கள் உன்னே என்னசெய்வார்கள்?" என்றுசொன்னுன். ராஜபுத்ரனுகியதுச்சாஸனன் தன்தமையனுடைய கட்டளையைக்கேட்டவுடன் ஸபையிலிருந்துஎழுந்து சிவந்தகண்களுடன் மஹாரதர்களான பாண்டவர்களின் கிருஹத்திற் பிரவேசித்து ராஜகுமாரியான திரௌபதியைப்பார்த்து, "ஓ! பாஞ்சாலி! வா; வா; ஓ! கிருஷ்ணையே! நீ ஜயிக்கப்பட்டாய்; வெடகத்தைவிட்டுத் துரியோதனுக்காணக்கடவாய். தாமரையிதழ்போன்ற நீண்டகண்களையுடைய வளே! கௌரவர்களைச சேர். தர்மத்தினுல அடையப்பட்டிருக்கிறுய். ஸபைக்கு வா" என்றுசொன்னுன். பிறகு மிக்கதுயரமுற்ற அந்தத் திரௌபதி எழுந்து நிறமாறின தன்முகத்தைக் கையினுல்துடைத்துக்கொண்டும் அழுதுகொண்டும் கௌரவச்ரேஷ்டனும் முதியோனுமான திருதராஷ்டிரமஹாராஜனுடைய ஸ்திரீகளிருக்குமிடத்திற்கு ஓடினுள். பிறகு துச்சாஸனன் கோபத்தோடு அவளைப்பார்த்துக் கர்ஜித்துக்கொண்டு விரைவாக எதிரில் ஓடிவந்து, நீண்டும்இருண்டும் அலைகள்போலப்படிப்படியாயுமிருக்கும் கூந்தல்களில் ராஜபத்நியான திரௌபதியைப்பிடித்தான். ராஜஸூயமென்னும் மஹாயாகத்தின் அவபிருத ஸ்நானகாலத்தில் மந்திரங்களால் பரிசுத்தமான ஜலத்தை அபிஷேகஞ்செய்யப்பெற்ற திரௌபதியின்கூந்தல்கள் திருத

ராஷ்டிரன்மகனுல் பாண்ட்வர்களின் பாக்ரமத்தையவமதித்துப் பலாத்காரமாகத் தொடப்பட்டன. அநததுச்சாஸனன் மிகநீண்டகூந்தலியுடைய அநதத்திரௌபதியை, நாதர்களுள்ளவளாயிருந்தும அநாதையைபோல் இழுத்து ஸபையினருகிற்கொண்டுவந்து வாழை மரத்தைக் காற்றுஅலைப்பதுபோல அலங்கோலமாக இழுத்தான். அவள் இழுக்கப்படுமபோது கொடிபோன்ற உட்ம்பு குன்றி, "புத்தியில்லாதவனே! அயோக்கியனே! நான். ராஜஸ்வலையாயிருக்கிறேன். எனக்கு ஒற்றைவஸ்திரமேயுள்ளது. என்னை ஸபைக்குக்கொண்டு போகத்தகாது" என்று மெல்லச்சொன்னுள். துச்சாஸனன் அப்போது திரௌபதியைக கறுததகூநதல்களில் பலாதகாரமாகபபிடித்துக்கொண்டு, [1]"கிருஷ்ணனையும ஜிஷ்ணுவையும ஹரியையும் நரனையும் தன்னைக்காபபதற்காக யாஜ்ஞஸேனி கூவுகிறுள. யஜ்ஞஸேனன்மகளே! ராஜஸ்வலையாகத்தானிரு; ஒற்றைவஸ்திரத்தோடிரு; அல்லது வஸ்திரமில்லாமலேயிரு; ஆடடத்தில்ஜயிக்கப்பட்டுபோனுய்; தாஸியாகச்செய்யபபட்டாய்; உன்தருதிப்படி தாஸிகளிறசேர்ந்திருக்கவேண்டும்" என்றுசொன்னன். கூந்தல்விரிநது பாதிவஸ்திரமவிழ்நது துசசாஸனனுல அழைக்கபபட்ட திரௌபதி வெட்கமுற்றுக் கோபத்தினுல்உள்கொதிப்புறறவளாகிப பின்வரும்சொல்லை மெல்லச்சொல்லலானுள்;— "இநதச சபையோரனைவரும சாஸ்திரஙகளை ஓதி ஒழுக்கததேதடிருபபவர்கள். எலலாரும இநதிரனுக்கொபபானவர்கள். இவர்களெல்லாரும எனக்குக்குருவைபபோன்றவர்களும குருக்களுமாயிருப்பவர்கள். அவர்களின்முன் நான்இவ்வாறு நிற்கமுடியவில்லை; கொடுஞசெய்கைக்காரா! கெடடநடையுள்ளவனே! என்னை வஸ்திரம்போகும்படி செய்யாதே. என்னையிழுக்காதே. இந்திராதிதேவர்கள் உனக்குதவுணையாகவந்தாலும ராஜபுத்ரர்களானபாண்டவர்கள் உன்னைப் பொறுக்கமாட்டார்கள். மஹாத்மாவானதர்மபுதரர் தர்மததைவிடாதவர். தரமமானது யாவர்க்கும்தெரியாது; தெரிநதவாமடடுமே அறியகூடியது. என்கணவர்விஷயத்தில் சூணங்களையல்லாமல் அணுவளவு குறறத்தையும வாக்கினுற்சொல்லவும் கருதேன். ராஜஸ்வலையானஎன்னைக் கௌரவவீரர்களின் நடுவில் நீஇழுப்பது மிகவுங்கெட்டசெய்கை. இநதச்சபையில்ஒருவனும உன்னையிகழவில்லை. உன்எண்ணத்தையே இவர்கள்அங்கீகரித்திருக்கின்றனரென்பது திண்ணம். சீ! ப்ரதவம்சத்தவர்களில தர்மமும

---

[1] ஒவ்வொருவரையும் இரண்டுபெயர்களால் அவள்சொன்னதாகக் கூறிப் பரிஹாஸஞ் செய்கிறுன்.

க்ஷத்ரியர்களுடைய ஒழுக்கமும் அழிந்துபோயின. கௌரவர்களின் தர்மத்தின் வரை தப்பிப்போனதை இச்சபையில் கௌரவர்களனை வரும் பார்த்திருக்கின்றனர். மஹாத்மாக்களான துரோணருக்கும் பீஷ்மருக்கும் இந்தவிதுரருக்கும் திருதராஷ்டிரமஹாராஜாவுக்கும் விவேகமில்லையே. அதனாலேயே கௌரவர்களில் மூத்தவர்களும் சிறந்தவாகளுமான இவாகள இந்தகமகாடியபாவதத்தைக் காணும லிருக்கின்றனர்" என்றான். அழகான இடையுள்ள அந்தத்திரௌ பதி அவ்வாறுஅழுதுகொண்டேகௌரமபி, கோபமுற்றதன்கணவர்க ளைக் கடைக்கண்ணால பார்த்து முன்னமே கோபத்தினால் எரிக்கப் பட்டதேஹமுள்ள அவர்களை அந்தபபாவையினால தூண்டிவிட் டாள். வெட்கத்தோடும் கோபதோடும் பார்த்த திரௌபதியின் பார்வையினால் அவர்களுக்குண்டானதுயரம் ராஜ்யமும் தனமும சிற ந்த ரத்னங்களும் கவரபபட்டதனாலும் உண்டாகவில்லை. துச்சாஸ னன், அசக்தர்களான தன்கணவர்களைநோக்கும் திரௌபதியைக் கண்டு வேகமாகஅலைத்துமூர்சசித்தவள்போன்ற அவளைபபார்த்து, இரைந்துசிரித்துத் தாலியென்றுஅழைத்தான். கர்ணனும மிகமகிழ் ந்து இரைந்துசிரித்தது துசசாஸனன் சொன்னதைச் சிலாகித்தான். அவ்வாறே காந்தாரதேசத்தரசனுகியசகுனியும துச்சாஸனனைபபுகழ் ந்தான். அவ்விருவரையும துரியோதனனையும் தவிர அந்தசபையி லிருந்தமற்றவர்களுக்கு ஸபையில் திரௌபதி இழுக்கபபடுவதைக் காண்பது மிக்கதுயரமாயிருந்தது.

பீஷ்மர், "பாக்யமுள்ளவளே! தனக்குத் தான்ஸ்வதந்திரமில் லாதவன் அயலானுடையபொருளைப் பந்தயம்வைக்கமுடியாதென்ப தையும் பெண்ணானவள் கணவனுக்குடபட்டவளென்பதையும, பார்க் குமபோது தர்மம்அறியக்கூடாமலிருபபதனால் நீகேட்டஇந்தக் கேள் விக்குச சரியாகப்பகுத்து மறுமொழிசொல்ல என்னால் முடியவில்லை. யுதிஷ்டிரன் செல்வமநிறைந்த பூமியனைத்தையும்விட்டானும் விடு வனேயன்றித் தர்மத்தைவிடான். நான் ஜயிக்கப்பட்டேனென்று அவனேசொன்னான். அதனால் இதில்ஒருநிச்சயமும் நான்சொல்ல முடியவில்லை. சகுனி சூதாட்டத்தில் மனிதர்களுள்ஒப்பற்றவன். குந்திபுத்ரனையுதிஷ்டிரன் [1]அவனால் இஷ்டப்படி விடப்பட்டான். அந்த வஞ்சகத்தை யுதிஷ்டிரன் அறியவில்லை. அதனால் உன்இந்தக் கேள்விக்கு நான்மறுமொழிகூறமலிருக்கிறேன்" என்றுசொன்னார்.

---

[1] இஷ்டமிருந்தால் உன்னைப் பந்தயம்வைக்கலாமென்றுதான் சகுனி சொன்னான்

திரௌபதி, "சூதில் தோற்றவர்களும் அயோக்கியர்களும் கெடுதியுள்ளவர்களும் சூதிலேயே ஊக்கமுள்ளவர்களுமான மோசக்காரர்கள் அதிக ஜாக்ரதையெடுத்துக்கொள்ளாதராஜாவை ஸபையில் அழைத்தபிறகு அவர், இஷ்டப்படிவிடப்பட்டவராவதெப்படி? கெட்ட எண்ணத்துடன் மோசத்துக்கேஆரம்பித்த எல்லாரும் சேர்ந்து, மோசமறியாதவரும் கௌரவர்களுக்கும பாண்டவர்களுக்கும இரேஷ்டருமான தர்மராஜாவை ஜயித்ததபிறகுதான் அவர் இந்தப [1]பந்தயத்தை ஒபபுக்கொண்டார். தங்கள் பெண்களுக்கும் மருமக்களுக்கும் அதிகாரிகளாயுள்ள இருதக்கௌரவர்கள் ஸபையிலிருக்கின்றனர். நீங்களெல்லாரும இருதஎன்கேளவியை ஆராய்ந்துபார்த்துச் சரியானமறுமொழிகூறுங்கள. [2]பெரியோர்களில்லாதது ஸபையன்று; தர்மத்தைஉரையாதவர் பெரியோர்களுமல்லர்; உண்மையில்லாதது தர்மமுமன்று; கபடம்சேர்ந்தது உண்மையுமன்று" என்றுசொன்னாள். அவ்வாறுசொல்லிப பரிதாபபடும்படி அழுதுகொண்டு அசக்தர்களான தன் கணவர்களைநோக்குடி திரௌப்தியைப்பார்த்துத் துச்சாஸனன் கொடியவையும் கேட்பதற்கு இனிமையில்லாதவையும் வெறுக்கத்தக்கவையுமானசொற்களைச் சொன்னன். இழுக்கப்பட்டவளும் அவ்வாறுசெய்யபபடததகாதவளும் ரஜஸ்வலையாயிருப்பவளும் மேலாடைவிழுந்துபோனவளுமான திரௌபதியையும் தர்மராஜாவையும்கண்டு மிகவுமமனம்நொந்த விருகோதரன் கோபமுற்றான்.

தொண்ணூறுவது அத்தியாயம்.

த்யூதபர்வம். (தொடர்ச்சி.)

(பீமனும் விகர்ணனும்கூறியதும், துச்சாஸனன் திரௌபதியின்துகிலுரித்ததும், கிருஷ்ணனுடையஅனுக்ரஹத்தினல் அவளுக்கு வஸ்திரம் வளர்ந்ததும், விதுரர் நீதிமொழிகூறியதும்.)

பீமஸேனன் "ஓ! யுதிஷ்டிரரே! சூதர்டுகிறவர்களின் வீடுகளில் தாஸிகளிருக்கின்றனர். அவர்களைக்கூடப் பந்தயம்வைத்தாடுவதில்லை. அவர்களிடததிலும் தயையுண்டு. காசிராஜன் முதலான

---

[1] மூலத்தில் 'கைதவம்' என்றிருக்கிறது; கைதவம்=வஞ்சனை.

[2] தர்மோதனனிடம் பயந்து தந்திரமாகப்பேசுவது ஸத்யமாகாது; ஸத்யந்தவறினபிறகு தர்மமில்லை. தர்மஞ்சொல்லாதவர்கள் பெரியோரல்லர், பெரியோரில்லாதது ஸபையேயன்று என்பது கருத்து.

அனேக அரசர்கள் காணிக்கையாகக் கொண்டுவந்து கொடுத்த உயர்ந்தபொருள்கள், ரத்னங்கள், வாஹனங்கள், கவசங்கள், ஆயுதங்கள் முதலியவையும், ராஜ்யமும் உமதுசரீரமும் நாங்களும் எதிரிகளால் ஜூதிலுலெடுத்துக் கொள்ளப்பட்டோம்; எனக்குக் கோபமுண்டாகவில்லை; ஏனெனில், எங்களுடைய எல்லாவற்றிற்கும் நீர்தாம் அதிகாரி. திரௌபதியைப் பந்தயம்வைத்ததை மாத்திரம் அக்ரமமென்று நிணைக்கிறேன். இந்த நிலைமைக்குத்தகாத இந்தச்சிறுமி, பாண்டவர்களையடைந்து, அற்பர்களும் கொடியவர்களும் புத்தியில்லாதவர்களுமான கௌரவர்களால் உம் காரணமாகவன்றே துன்பப்படுகிறாள், ராஜாவே! இவளுக்காக இந்தக்கோபத்தை உம்மேல் போடுகிறேன். உமது கைகளிரண்டையும் கொளுத்தப்போகிறேன். ஸஹதேவா! அக்னியைக்கொண்டுவா" என்றுசொன்னான். அதைக்கேட்ட அர்ஜுனன், "பீமஸேனா! இதற்குமுன் நீ இவ்வகையான பேச்சுகளைப் பேசுகிறவனல்லன். கொடியவர்களான நம்துபகைவர்களால் உனக்குத் தர்மத்திலிருந்த மரியாதைகூட அழிக்கப்பட்டதென்பது நிச்சயம். பகைவர்களின் எண்ணம் நிறைவேறும்படி செய்யலாகாது. தர்மமே சிறந்தது. அதையே செய். தார்மிஷ்டரும் ஜ்யேஷ்டருமான ஸஹோதரரை மிஞ்சுவது எவனுக்குத்தகும்? பிறரால் அழைக்கப்பட்ட ராஜாவானவர் க்ஷத்திரியனுடைய விரதத்தைநிணைத்து அயலான் விருப்பத்தையனுஸரித்து ஆடினார். அது நமக்குப பெரும்புகழைத் தருவது" என்றுசொன்னான். பீமஸேனன், தனஞ்சய! இவ்வாறு இவர் தர்மமாகச்செய்ததை நான் அறியாமலிருபபேனயின் இவர் இரண்டு கைகளையும சேர்த்துப் பலாத்காரமாய் எரிகிறநெருபபில் கொளுத்தியிருப்பேன்" என்றுசொன்னான். அந்தப்பாண்டவர்கள் அவ்வாறு துக்கப்பட்டிருபபதையும் பாஞ்சாலி இழுக்கபபடுவதையுங் கண்டு திருதராஷ்டிரன்புத்ரனாகிய விகர்ணன் "ஓ! அரசர்களே! திரௌபதிசொன்ன சொல்லுக்கு விவரிதது மறுமொழிகூறுங்கள். கேள்விக்கு மறுமொழிகூறுவிடின் நமக்கு நரகம் உடனேவரும். கௌரவர்களுக்குள் மிக்க வயதுமுதிர்ந்தவர்களாகிய பீஷ்மரும் திருதராஷ்டிரருமாகிய இவ்விருவரும் சேர்ந்திருந்தும் ஒன்றும்சொல்லாமலிருக்கின்றனர். மஹாபுத்திசாலியான விதுரரும் ஒன்றும்சொல்லவில்லை. எல்லாருக்கும ஆசார்யர்களாகிய துரோணர் கிருபர் இவ்விரண்டு பிராமணர்களுங்கூடக் கேள்விக்கு மறுமொழி ஏன்கூறவில்லை? எல்லாத்திசைகளிலிருந்தும் வந்துசேர்ந்த மற்றஅரசர்களும் விருப்பையும் வெறுப்பையும்விட்டுத் தங்களுக்குத் தெரிந்தஅளவு

சொல்லலாம். அரசர்களே! சிறந்தவளான திரௌபதி பலமுறை சொன்னசொல்லே ஆராய்ந்துபார்த்து, யாருக்கு என்ன அபிப்பிராய மோ அந்தப்படி மறுமொழி சொலலுங்கள்" என்றுசொன்னான். அவன் இவ்வாறு அந்தசபையிலுளவீர்களெல்லாரையும் பார்த்துப பலமுறை கூறினான். அவ்வரசர்கள சரியென்றவது பிழையென்ற வது அவனுக்குச்சொல்லவில்லை. விகர்ணன் அவ்வரசர்களனைவரை யும்பார்த்து அவ்வாறு பலமுறைசொன்னபின் கையினால் கையைப் பிசைந்து பெருமூசசெறிந்துகொண்டு பின்வருமாறு சொல்லலானான். "அரசர்களே! இந்தசசொல்லுக்கு நீங்கள் மறுமொழி சொல்லுங்கள்; அல்லது எந்தக்காரணத்தினாலவது சொல்லாமலிருந்தாலுமிருங் கள். கௌரவர்களே! இந்தவிஷயத்தில நான் எதைச் சரியென்று நினைக்கிறேனோ அதைசசொல்லப்போகிறேன். புருஷச்ரேஷ்டர்களே! வேட்டை, கள், சூதாட்டம, சிறறின்பத்தில் மிக்கபற்று இருநான்கும அரசர்களுக்கு வயஸனங்களென்று சொலலுகின்றனர். இவற்றில் பற்றுள்ளமனிதன் தாமததைவிடடிருப்பான். எந்த நிலைமையிலிருக் குமமனிதன்செய்த செய்கையை உலகத்தார் ஏறறுகொள்ளமாட் டார்களோ அவ்வகையான சூதால் அழைக்கபபட்டசசூதாட்டமென் னும வ்யஸனத்தில அகபபடடுகிகொண்ட தர்மராஜாவினுல திரௌ பதியைப பந்தயமாகவைபபது ஒபபுக்கொள்ளபபடடது. குற்றமற்ற இந்தத் திரௌபதி பாண்டவர்களெலலாருக்கும பொதுவானவள். மேலும் இந்தப்பாண்டவரான தாமராஜர் தமமைத் தோற்றபிறகு இவளைப் பந்தயம்வைத்திருக்கிறார். சகுனியே திரௌபதியைப் பந தயம்வைக்க விரும்பி அவள் பெயரைககூறினான். இவற்றையெல் லாம் ஆராய்ந்துபாாக்கையில இவளை ஜயிக்கபபட்டவளாக நான்நினை க்கவில்லை" என்றான். இதைககேட்டவுடன் விகர்ணனைப் புகழ்வ தும் சகுனியை யிகழ்வதுமாயிருந்த ஸபையாரின்பேரொலி உண் டாயிற்று. அந்தக்கோஷம் ஒய்ந்தவுடன் கோபம்மிகுந்த கர்ணன் அழகானகையைத தூக்கிக்கொண்டு பின்வருமாறு சொல்லலானான்.

"விகர்ண! இதில்அனேகமகெடுதல்கள் காணபபடுகின்றன. அர ணியிலுண்டான அக்கினிபோல நீ எதில்பிறந்தாயோ அதையேயழி ப்பதற்கு இருக்கிறாய். இந்தஸபையோர் கிருஷ்ணையினுல் கேள்வி கள் கேட்கப்பட்டும யாதொன்றும சொல்லாமலிருக்கின்றனர். திரௌ பதி தர்மத்தினாலேயே ஜயிக்கப்பட்டவளென்று இவர்கள் நினைக்கின் றனர். திருதராஷ்டிரபுத்திரனே! நீமட்டும வெறுஞ் சிறுபிள்ளைத்தன த்தினால் [1]வெடித்துப்பேசுகிறாய். சிறுவனுகியநீ ஸபைபாடுவில் பெரிய

[1] அடங்காமற்பேசுகிறாய்.

வன்போலப் பேசுகிறுயன்றே? துரியோதனனுக்கு இளையவனே! ஜயிக்கப்பட்ட திரௌபதியை ஜயிக்கப்படாதவளென்று சொல்வதனால் நீ தர்மத்தைச் சரியாகஅறியவில்லை. உன்புத்தி மிகக்குறைவானது. திருதராஷ்டிரபுத்திரனே! பாண்டவர்களில் மூத்தவனுகிய யுதிஷ்டிரன் எல்லாப்பொருள்களையும் ஸபையில் வைத்துவிட்டபோது திரௌபதிமட்டும் ஜயிக்கப்படவில்லையென்று நீ நிணைப்பதெப்படி? பரதச் ரேஷ்டனே! அந்தத்திரௌபதியும் எல்லாச்சொத்திலும் அடங்கின வள்தானே? இப்படி நியாயமாக ஜயிக்கப்பட்ட திரௌபதியை ஜயிக்கப்படவில்லையென்று நீ நிணைப்பதெப்படி? திரௌபதியை வாக்கினால் சகுனிசொன்னதுண்டு. பாண்டவர்களும் ஒப்புக்கொண்டனரே. இவளை ஜயிக்கபடாதவளாக நீ நிணைத்தகாரணம் யாது? ஒற்றைவஸ்திரத்தோடு இவள் ஸபைக்குக் கொண்டுவரப்பட்டது அதர்மமென்று நிணைக்கிறுயா? அந்தவிஷயத்திலும் என்னுடைய முடிவான பேச்சைக்கேள். கௌரவனே! பெண்ணுக்கு ஒருகணவன் தான் தேவர்களால் விதிக்கபட்டவன். இவளோ அனேகருக்கு வசப்பட்டவள்; அதனால், வேசையென்பது நிசசயம. இவளைச் சபைக்குக் கொண்டுவருவதும் இவள் ஒற்றைவஸ்திரம் உடுத்திருப்பதும் வஸ்திரமேயில்லாமலிருப்பதும் வியக்கத்தக்கதன்றென்று நான்நிணைக்கிறேன். இந்தப் பாண்டவர்களின் பொருள்களனைத்தும் இவளும் இந்தப்பாண்டவர்களும் எல்லாம் தர்மமாகவே சகுனியினால் ஜயிக்கப்பட்ட உடைமைகள். துச்சாஸனா! இந்த விகர்ணன் மிகசசிறியவன்; தெரிந்தவன்போலப் பேசுகிறுன். பாண்டவர்களின் வஸ்திரங்களையும் திரௌபதியின் வஸ்திரத்தையும் கொண்டுவா" என்றுன்.

ஜனமேஜயரே! அதைக்கேட்டவுடன் பாண்டவர்களனைவரும் தங்கள் மேல்வஸ்திரங்களைஎறிந்துவிட்டு ஸபையில் உட்கார்ந்தனர். ராஜாவே! அதன்பிறகு துச்சாஸனன் ஸபைநடுவில் திரௌபதியின் வஸ்திரத்தைப் பலாத்காரமாக அவிழ்த்து இழுக்கத்தொடங்கினுன். வஸ்திரமிழுக்கப்படுமபோது திரௌபதி மிகதுயரத்துடன் அழுது, 'முற்காலத்தில் மஹாத்மாவான வஸிஷ்டமஹரிஷி பெரிய ஆபத்து வரும்போது பகவானுனஹரியை நிணைக்கவேண்டுமென்று சொல்லியிருப்பது எனக்குத்தெரியும்' என்று மனத்தில்நிச்சயித்துத் தன்வஸ்திரம் இழுக்கப்படும்போது சரணகதவத்ஸலரான கிருஷ்ணனைநிணைத்தாள். "சங்கம் சக்கரம் கதைகளைக் கையில்வந்தினவரே! துவாரகையிலிருப்பவரே! அச்சுதா! கோவிந்தா! தாமரைக்கண்ணு!.சரணமடைந்தஎன்னைக் காப்பாற்றும். ஆ! கிருஷ்ணு! த்வாரகாவாஸா!

யாதவர்களைச் சந்தோஷப்படுத்துகிறவரே! எங்கிருக்கிறீர். இந்நிலை மையையடைந்தவனும் அநாதையுமான என்னை ஏன் கவனியாமலிருக் கிறீர்? கோவிந்தா! துவாரகாவாஸியே! கிருஷ்ணா! கோபிஜனப் பிரியா! கேசவா! கௌரவர்களால் அவமதிக்கப்படுகிறஎன்னை நீர் ஏன்அறியவில்லை? ஓ! லோகநாதா! ஓ! பூபதியே! ஆய்ப்பாடி யைக்காப்பவரே! துன்பத்தையழிப்பவரே! ஜனார்த்தனா! கௌரவர்க ளென்னும் கடலிலமூழ்கினஎன்னைக் கைதூக்கிவிடும. கிருஷ்ணா! கிருஷ்ணா! மஹாயோகியே! உலகதுக்கெல்லாம் அந்தர்யாமியே! உலகத்தைபபடைப்பவரே! கோவிந்தா! கௌரவர்களின்நடுவில் கஷ் டப்பட்டுச சரணமடைந்தஎன்னைக் காப்பாற்றுமட" என்றுள். ஜன மேஜயராஜாவே! அந்தச சிறநதபெண்ணை திரௌபதி மூன்று லோகங்களுக்கும ஈசுவரரான ஹரியாகிய கிருஷ்ணரை இவ்வாறு இடைவிடாமல் நினைத்து மிக்கதுயரத்தினால் முகத்தைமூடிக்கொண்டு அழுதாள். அபபோதுத் திரௌபதியின்வஸ்திரதை இழுக்கஇழு க்க, கிருஷ்ணனுடைய அனுக்ரஹதினால், அதைப்போல இன்னும் அனேகவஸ்திரங்கள் உண்டாயின. ஜனமேஜயராஜாவே! தர்மத் தைக் காப்பாற்றினதனால் மறுபடியும பலபலநிறங்களுள்ளவையும் சுத்தவெண்மையுமான அநேகவஸ்திரங்கள் நூற்றுக்கணக்காக உண் டாய்க்கொண்டேயிருந்தன. பிறகு அந்தஸபையில் கேட்க மிகக் கடினமான ஹலஹலவென்னும் சத்தமஉண்டாயிற்று. அந்தஸபையி லுள்ள அரசர்களனைவரும் உலகத்திலில்லாத அநதப்பெரிய ஆச்சரி யத்தைக்கண்டு துசசாஸனனையிகழ்ந்து திரௌபதியைப் புகழ்ந்த னர். கௌரவர்களைபபற்றி, 'சீ சீ!' என்ற இழிவானசொல்லைச் சொல் லினர். ஸபைநடுவில் வஸ்திரங்களின்ராசி குவிந்துபோனபோது துச் சாஸனன் கலைத்து வெட்கி உட்கார்ந்துவிட்டான். அந்தஅரசர்கள் நடுவில் பீமன் கோபத்தினால்துடிக்கும் உதடுகளுடன் கையைப்பிசை ந்து பெருங்குரலோடு சபதஞ்செய்தான்.

பீமன், "உலகத்திலுள்ள க்ஷத்திரியர்களனைவரும் மற்றமனி தர்கள் இதற்குமுன்சொல்லாததும் இனியும யாரும்சொல்லப்போகா ததுமான இநதஎன்சொல்லைக் கேளுங்கள். பூமிக்கு ஈசுவரர்களே! நான் இதைச்சொல்லி இவ்வாறு செய்யாமற்போவேனுயின், அதா வது—பாவியும் துஷ்டபுத்தியுள்ளவனும் பரதவம்சததவரில் இழி வானவனுமாகிய இந்தத்துசசாஸனனுடைய மார்பை யுத்தத்தில் பிள ந்து பலாத்காரமாக இவன்ரத்தத்தைக்குடியாமல் விடிவேனுயின் என் முன்னோர்களான கூடஸ்தர்கள்சென்றகதிக்கு நான் செல்லாமற்

போகக்கடவேன்" என்றான். கொடியதும் மயிர்பொடிக்கச்செய் வதுமாகிய பீமனுடைய அந்தச்சொல்லைக்கேட்டு ஸபையோர் துச்சா ஸனனைநிந்தித்துப் பீமனுக்கு மிகுந்த கௌரவத்தைச செய்தனர். அங்குள்ள யோக்கியர்கள் திருதராஷ்டிரனை இகழ்ந்து திரௌபதி யின்கேள்விக்குக் கௌரவர்கள் சரியான மறுமொழிசொல்லவில்லை யென்றுகூவினர். பிறகு எல்லாததர்மங்களுந் தெரிந்தவிதுரர் கைக ளைத்தூக்கி ஸபையோரைப்பக்கிப் பின்வருமாறு சொல்லலானார்.

"திரௌபதியானவள் கேள்விகேட்டு இவ்வாறு அநாதைபோ லக் கதறுகிறாள். ஸபையோரே! அவள்கேள்விக்கு நீங்கள் மறு மொழிகூறவில்லை. இதனால் தர்மம் கெடுக்கபடுகிறது. கேள்வி யானது ஜ்வலிக்கிறஅக்னிபோல ஸபையில்விழுந்திருக்கிறது. ஸப யிலுள்ளவர்கள் ஸதஸ்யத்தினாலும் தர்மத்தினாலும அதைஅவிக்க வேண்டும. ஆதலால், யோக்யனானமனிதன் தர்மமுள்ளகேள்விக்கு உண்மையோடுமறுமொழிகூறவேண்டும். கர்மக்குரோதங்களின்வன் மையைத் தாண்டினவர்கள் அந்தக்கேள்விக்கு மறுமொழிசொல்ல வேண்டும். வேநதர்களே! விகர்ணன் தன்புத்திக்குத் தக்கபடி கேள்விக்கு மறுமொழிசொன்னான். நீங்களும அறிவுக்கெட்டின வரையில் அந்தக்கேள்விக்கு மறுமொழிசுறுங்கள். ஸபையிலிருபப வன் தர்மதையறிந்தும்கேள்விக்குமறுமொழிகூறுமலிருபபானுயின், பொய்சொல்வதனாலுண்டாகும்பயனில பாதியை அனுபவிபபான். ஸபையிலிருப்பவன் தர்மந்தெரிந்தும் தபபாக மறுமொழிகூறுவானு யின், அவன்பொய்யின்முழுபபயனையும் அடைவானென்பது நிசசயம. இநதவிஷயததில் பிரஹ்லாதருக்கும் ஆங்கிரஸரென்னும்முனிவருக் கும் நடந்த ஸம்வாதமாகப் பெரியோர்சொலலும் பழமையானஇதி ஹாஸத்தை நான்சொலலுகிறேன்.

பிரஹ்லாதனென்னும ஓர்அஸுரச்ரேஷ்டனிருந்தான். அவ னுடையபுத்ரனான விரோசனனென்பவன் ஒருகன்னிகைக்கார்க அங்கி ரஸின்புத்ரனுகிய ஸுதன்வாவை நெருங்கித தொடர்ந்தான். அப போது அந்தக் கன்னிகையையடைவதறகாக அவ்விருவருக்கும் 'நான் பெரியவன்; நான் பெரியவன்' என்றுஅவ்விஷயத்தில் [1]உயிர்ப் பந்தயம் உண்டானதென்று யாம்கேட்டிருக்கிறோம். அவர்களுள் யார்பெரியவனென்றகேள்வியைபபறறி விவாதமுண்டாயிற்று. அவ் விருவரும் பிரஹ்லாதனிடம்சென்று 'எங்களில் எவன்பெரியவன்.

---

[1] 'தோற்றவன் உயிருள்ளவரையில் ஜயித்தவனுக்கு அடிமைசெய்வது' என்பது பழையஉரை.

இந்தக்கேள்விக்குப் பொய்யில்லாமல் மறுமொழிசொல்லும்' என்று கேட்டனர். அந்தப்பரஹ்லாதன் ஸுதன்வாவைக்கண்டு மறுமொழி சொல்வதற்குப் பயந்தான். ஸுதன்வா தோபித்துய பிரம்மதண்டம் போல் ஜ்வலிதமுகொண்டு பிரஹ்லாதனைபபார்த்து, 'ப்ரஹ்லாத! நீபொய்சொன்னலும் ஒன்றுமசொல்லாமலிருந்தாலும இந்திரன் வஜ்ராயுதத்தினால் உன்தலையை நூறுசுக்காகுமபடி அடிப்பான்' என்று சொன்னன். ஸுதன்வாவினால் அவ்வாறு சொல்லபபட்டபோது பிரஹ்லாதனென்னும்அஸுரன் அசரீரிபோல்நடுங்கிச சிறந்தமஹிமையுள்ள கசியபரிடமமேகட்கச்சென்றான். 'மஹானுபாவரே! நீர்தாம் தேவாஸுரர்களுடைய தர்மங்களையும பிராமமணதர்மங்களையும் அறிந்தவர். இந்தத்தர்மஸங்கடத்தைக் கேளுமம. கேள்விக்கு மறுமொழி சொல்லாதவனுக்கும தபபாகமறுமொழிசொலலுகிறவனுக்கும மறுமையில்வரும்உலகங்கள் யாவைஎன்பதை நான்கேடகிறேன்; சொல்லும்' என்றுகேட்டான். அதற்குக் கசியபர், 'மிதரிநதிருந்தும் விருப்பினலாவது வெறுபபினலாவது அசசத்தினலாவது கேள்விகளுக்கு உததரஞசொலலாமலிருபபவன ஆயிரமவருணபாசங்களைத தன்மேல மாட்டிக்கொளளுகிறான். நேரேகண்டவன் கண்டதைச் சரியாகச சொல்லாமல்[1] மாட்டின்காதுபோல ஆடிக்கொண்டு திரிவானயின் அவன் ஆயிரமவருணபாசஙகளைத தன்மேல்மாட்டிக்கொள்வான். அவனுக்கு ஒருவருஷம்நிரமபினபிறகு ஒருபாசமமேலேமாட்டபபடுகிறது. ஆதலால், தெரிநதவன் ஸதயம சொல்லவேண்டும். ஸத்யந்தான் முகயமானது. எங்கே தர்மமானது அதர்மத்தினல் கெடுக்கபபட்டு, எநதஸபையையடைகிறதோ அநத ஸபையோர் தர்மதத்தைததஆணியை எடுததுவிடாவிடின் அவர்களே அந்த ஆணியினல் குத்தபபடுகின்றனர். தலைவன் பாதிபபயனையடைகிறான். செய்தவனுக்குக் கால்பாகம்; இகழததக்க காரியத்தை யிகழாமலிருநத ஸபையோருக்கு மற்றக்கால்பாகம. நிநதிக்கத்தக்கவனை நிந்திப்பாயின் தலைவனும் ஸபையோரும் பாவத்திலிருந்து விடபபடுகின்றனர். பாபம் செய்தவனைமடடுமசாருகிறது. பிரஹ்லாதா! தர்மத்தைக் கேட்கிறவனுக்கு எவர்கள்தபபாகமறுமொழிகூறுவார்களோ அவர்கள் முன்னேழுபின்னேழு தலைமுறைகளையும யாகபபயன்களையும் தானதர்மங்களையும அழிக்கின்றனர். பொருளைப பறிகொடுத்தவனுக்கும பிள்ளைஇறநதவனுக்கும் கடன்காரனுக்கும காரியம்கெடடவனுக்கும் கணவனில்லாதபெண்ணுக்கும ராஜாவினல்பிடிதது வருத

1 'இரணடுபகஷததிலும சேருவது' எனபது பழையவுரை.

தப்பட்டவனுக்கும் பிள்ளையில்லாதவனுக்கும் புலியினால்மோக்கப் பட்டவனுக்கும் மாற்றுரைளள்ளவனுக்கும் ஸாக்ஷிகளால்கெடுக்கப் பட்டவனுக்கும் உள்ளதுக்கங்களெல்லாம் ஸமானமானவையென்று தேவச்ரேஷ்டர்கள் சொல்லுகின்றனர். அஸத்தியஞ்சொல்லுகிறவன் மேற்சொன்னஎல்லாத்துக்கங்களையும் அடைகிறான். கண்ணால்கண்ட தனாலும் கேட்டதனாலும் விஷயங்களை ஞாபகம்வைத்திருப்பவன் ஸாக்ஷியாகிறான். ஆதலால், உண்மைசொல்லுகிற ஸாக்ஷியானவன் அறம்பொருள்கள் கெடாமலிருப்பன்' என்றுசொன்னர். கசியபர் சொல்லியதைக்கேட்டபிறகு பிரஹ்லாதன் தன் புத்ரனைப்பார்த்து, 'விரோசனா! உன்னைவிட ஸுதன்வாபெரியவன். அப்படியே அங்கி ரஸ் என்னைவிடபெரியவர். ஸுதன்வாவின்தாய் உன்தாயைவிடப் பெரியவள். ஆதலால், இந்தஸுதன்வாதான் உன்உயிருக்கு அதிகாரி' என்றுசொன்னன். அதற்கு ஸுதன்வா, 'நீபுத்ரஸ்நேஹத்தைக்கூட விட்டுத் தர்மத்தில்நிலைநின்றாயாதலின் உன்புதாரை விட்டுவிடுகிறேன். இவன் நூறுவருஷகாலம் ஜீவித்திருக்கட்டும்' என்றுசொன்னன். இந்தச்சிறந்ததர்மத்தைக்கேட்ட ஸபையோரனைவரும் திரௌபதி யின்கேள்விக்கு ஏதுசரியானமறுமொழியென்று நினைத்துப்பாருங் கள்" என்றார்.

விதுரர்சொல்லைக்கேட்டு அரசர்கள் ஒன்றும் சொல்லவில்லை. கர்ணன் துச்சாஸனனைபபார்த்து, "தாசியானகிருஷ்ணையை வீட் டுக்குஅழைத்துப்போ" என்றான். நடுக்கத்தோடும் வெட்கத்தோ டும் பாண்டவர்களைப்பார்த்து அழுதுகொண்டிருக்கும் பரிதாபப் படத்தக்க திரௌபதியை ஸபைநடுவில் துச்சாஸனன்இழுத்தான்.

தொண்ணூற்றேராவது அத்தியாயம்.

த்யூதபர்வம். (தொடர்ச்சி.)

(திரௌபதி ஸபையிலழுப, பீஷ்மர் தாமொன்றும் சொல்லமுடியா மையையும் அவள்விஷயத்தில் தமக்குள்ளவருத்தத்தையுஞ்சொல்லித் திரௌபதிகேள்விக்கு யுதிஷ்டிரைமறுமொழிகூறச்சொன்னது.)

துச்சாஸனனாலும் மனத்துயரத்தினாலும பீடிக்கப்பட்டவளும் அப்படிப் பீடிக்கப்பட்டதகாதவளுமான திரௌபதி, "இந்தப்பலவா னன துச்சாஸனன் பலாத்காரமாகஇழுத்ததனால் சக்தியற்றவளாகச் செய்யப்பட்டேன். ஸபையிலுள்ள இந்தக்குருவம்சத்தோருக்கு நான்

வந்தனஞ் செய்கிறேன். இந்தச்சூதாட்டம் நான் செய்ததன்று. இதற்கு முன்காரியத்தையும் பின்காரியத்தையும் நான்செய்யவில்லை. ஆதலால், இந்தக்குற்றம எனக்கிருக்கலாகாது" என்றுசொல்லி ஸபையில்வீழ்ந்தது யாவருக்கும துயரமுண்டாகுமபடி பின்வருமாறு புலம்பலானஞள்.

"இதற்குமுன் ஸ்வயம்வரஸபையில் வந்திருந்த அரசர்களால் காணப்பட்டதுதவிர மற்றெங்கும காணப்படாமலிருந்தநான் இப்போது அம்பலத்துக்குவந்தேன். முன்னேவீட்டிலிருக்கும்போது காற்றும்கதிரோனுங்கூட என்னைக் கண்டதிலை. அந்தநான் இப்போது ஸபைநடுவில் ஜனக்கூட்டத்தில காணப்படுகிறேன். முன் வீட்டிலிருக்கும்போது மேலேகாற்றுபடாளும் பாண்டவர்கள் பொறுக்கமாட்டார்கள். அவர்களே இபபோது இந்தத்துராத்மாவான துசசாஸனனுல் நான்தொடபடுவதைப் பொறுக்கின்றனர். மருமகளும் மகளும் க்ஷ்டப்படத்தகாதவளுமான நான் பீடிக்கப்படுவதை இந்தக்குருவமசத்தவருமபொறுப்பது விபரீதகாலமென்று நான்நிணக்கிறேன். கற்புளளசிறநதபெண்ணுகியநான் ஸபைநடுவில் இபபோது பிரவேசிக்கிறேனென்பதைவிட்ப பெரியஇழிவு என்ன இருக்கிறது? அரசர்களின்தர்மம் இபபோது எங்கேபோயிற்று? முன்னோர்கள் கற்புள்ளபெண்ணை ஸபைக்குக்கொண்டுவருவதில்லை யென்று நாம்கேட்டிருக்கிறோம். முன்னோர்கள்செய்ததும் என்று மழியாததுமான அந்தத்தர்மம் கௌரவர்களிடத்தில் அழிந்துபோயிற்று. பாண்டவர்களுக்குப்பாரியையும் திருஷ்டத்யும்னன்ஸேஹாதரியும் கிருஷ்ணனுக்குத்தோழியும் கற்புள்ளவளுமானநான் இந்த ராஜஸபைக்கு எப்படிவரலாம்? குருவம்சத்தோரே! தர்மராஜருக்குத் தமக்குச்சரியான க்ஷத்திரியவருணத்தில் பிறந்த பாரியையாகிய என்னைத் தாலியென்றுவது தாலியல்லளென்றுவது நீங்கள்சொல்லுங்கள். நீங்கள்சொன்னபடி செய்வேன். குருவம்சத்தவர்களே! குருவம்சத்தவர்களின்கீர்த்தியையழிப்பவனுகிய இந்தஅல்பன் என்னைமிகஉறுதியாகப்பிடித்துத் துன்பப்படுத்துகிறன். அதை நான் வெகுநேரம் ஸஹிக்கமுடியாது. குருவம்சத்துஅரசர்களே! என்னை ஜயிக்கப்பட்டவளென்றே ஜயிக்கபடாதவளென்றே எப்படி நீங்கள்நினைக்கிறீர்களோ அப்படி மறுமொழிகூற விரும்புகிறேன். உங்கள்சொற்படி செய்வேன்" என்றுசொன்னஞள்.

அதைக்கேட்ட பீஷ்மர், "மேன்மைபொருந்தியவளே! முன்னமே சொல்லியிருக்கிறேன். உலகத்தில் தர்மத்தின் சிறந்த வழியை

அறிவது மிகத்தெரிந்த மஹாத்மாக்களுக்கும் முடியாது. உலகத்தில் பலவானுமனிதன் எதைத் தர்மமமாகநினைக்கிறானோ அதுதான் தர்மமாகிறது. [1]மற்றது தர்மதத்தின்கரையில் தடைப்பட்டு நிறகிறது. மேலும் இந்தத்தர்மம லக்ஷுமமாயிருப்பதனாலும் அறிதற்கு அரிதாயிருபபதனாலும முக்கியமாயிருப்பதனாலும உன்னுடைய இந்தக் கேள்விக்கு நிச்சயமாகப்பகுத்து மறுமொழிகூற என்னால் முடியவில்லை. ஆனால், இந்தக்குலத்துக்குச சீக்கிரத்தில் அழிவுவருவது திண்ணம். அதற்குத் தகுபடிதான் கௌரவர்களனைவரும ஆசையையும் அறியாமையையுமே கைபபறறியிருக்கின்றனர். மேன்மையுற்றவளே! அப்படிப்பட்ட எங்களுக்கு நீ மருமகளாயிருக்கிறாய். மேற்குலத்தோர்கள் வியஸனங்களினால் மிகவும் பீடிக்கபபட்டிருந்த போதிலும் தர்மத்தின் மார்கததைவிட்டு வழுவுவதில்லை. பாஞ்சாலியே! துயரப்பட்டுக்கொண்டிருநதும் தர்மதையே கவனிப்பதாகிய இந்தச் சிறந்தவொழுக்கம் உனக்கேதகும். பெரியோர்களும் தர்மந்தெரிந்தவர்களுமாகிய இந்தத துரோணர் முதலானவர்களும உயிர்போனவர்களைபோலத் தலைகுனிநது வெறுந்தேகங்களோடிருக்கின்றனர். இநதக்கேளவிக்கு நிச்சயம சொல்லவேண்டியவன் யுதிஷ்டிரனென்பது எனது அபிபிராயம. நீ ஜயிக்கப்பட்டவளென்றுவது ஜயிக்கப்படாதவளென்றுவது தானே வியக்தமாகச் சொல்ல வேண்டியவன் அவன்" என்றுசொன்னர்.

தொண்ணூற்றிரண்டரவது அத்தியாயம்.

த்யூதபர்வம். (தொடர்ச்சி.)

(துரியோதனன் முதலானவர்கள் பேசுவதும், துரியோதனன் திரௌபதிக்குத் துடையைக் காண்பித்ததனால் பாண்டவர்கள் துரியோதனன் கர்ணன் முதலானவர்களை வதஞ்செய்யப் பிரதிஜ்ஞை செய்ததும், துரியோதனன் முதலானவர்களைத் திரௌபதி சபித்தபோது ஆகாயத்தினின்று பூமாரி பொழிந்ததும்.)

அந்தத் தேவி, [2]அன்றிற்பெடைபோல அவ்வாறு அழுது மிகுதியாகக் கதறுவதைக்கண்டும் அநதச் சபையிலுள்ள அரசர்கள் துரியோதனனுக்குஞ்சி, சரியென்றோ அல்லது பிழையென்றோ ஒருசொல்லும் சொல்லவில்லை. அரசர்களின் பிள்ளைகளும் பேரன்மார்களும்

---

1 ஐசுவரியபலமுள்ளவன் அதர்மத்தைத் தர்மமென்று சொன்னாலும் மறுக்கக்கூடவில்லை யென்பது கருத்து. 2 'குரரி' என்பது மூலம்.

அவ்வாறு பீஷ்மரிருந்ததைக் கண்டபொழுது திருதராஷ்டிரன் மகன் பாஞ்சால ராஜபுத்திரியான திரௌபதியைப்பார்த்துப் புன்னகை நகைத்துக்கொண்டு பின்வருமாறு சொல்லலானான்: "மேலான தை ரியமுள்ளவளே! த்ருபதபுத்ரியே! இந்த உன்கேள்வி உன்புருஷர்க ளாகிய பீமன், அர்ஜுனன், நகுலன், ஸஹதேவன் இவர்களிடத்தி லேயேயிருக்கட்டும். உன்னிடமிருந்த வந்த சொல்லுக்கு இவர் களே மறுமொழிகூறட்டும். பாஞ்சாலியே! உன்விஷயத்தில் யுதிஷ் டிரனுக்கு யாதொரு உரிமையுமில்லையென்று பெரியோர்களின் நடு வில் சொல்லட்டும். எல்லாரும் தர்மராஜாவைப பொய்யனைச் செய் யட்டும். பாஞ்சாலி! (அபபோது) நீ தாஸித்தனத்திலிருந்து விடப் படுவாய். தர்மத்திலிருப்பவனும் மஹாத்மாவும இந்திரனுக்கொப் பானவனுமாகிய தர்மபுத்ரன் உனக்கு அதிகாரியா? அல்லனு? என்பதைத் தானே சொல்லட்டும. இவன் சொன்னவுடனே இர ண்டிலொன்றை யடையலாம். இந்த ஸபையிலிருக்கிற சிறந்த குண வான்களான கௌரவாகளனைவரும் உன்துயரத்தில் அ்கப்பட்டிருந் தும் உன்புருஷர்கள் பாக்யம குறைந்தவர்களாயிருபபதை உண்மை யாக அறிந்துதான் மறுமொழி சொலலவில்லை" என்றான். பிறகு ஸபையோரனைவரும் கௌரவராஜாவான துரியோதனன் சொன்னதை முழங்கிப் புகழ்ந்தனர். கூவிக்கொண்டு மேல்வஸ்திரங்களையெடுத்து விசிறினர். ஆ! ஆ! என்ற துக்கசப்தமும உண்டாயிற்று. மனத் தைக் கவருவதாகிய துரியோதனன்சொல்லைக் கேட்டபிறகு ஸபையி லுள்ள கௌரவர்களுக்குச் சந்தோஷமுண்டாயிற்று. எல்லா அர சர்களும் கௌரவச்ரேஷ்டனான துரியோதனன் தர்மமாக நடக்கிறா னென்று அவனைக்கொண்டாடி அவன்மேல் அன்போடிருந்தனர். அவ்வசசர்களனைவரும், தர்மநெறிநிறகவரான யுதிஷ்டிரரும் யுத்தத்தில் தோல்வியடையாத அர்ஜுனனும் பீமஸேனனும் நகுலஸஹதேவர் களும் என்னசொல்லபோகிறார்களென்று மிகக ஆவலோடு முகங் களைக் குறுக்காகத்திருப்பி ஏறிடபெபார்த்திருந்தனர். அந்த ஒலி ஓய்ந்தபிறகு பீமஸேனன் அழகுள சிறப்புமுள்ளதும் சாந்தகுணப் பெற்றதுமான கையையெடுத்துப பேசலானான்.

"சிறந்தமனமுள்ளவரும் மூத்தவருமாகிய இந்தத்தர்மராஜர் எங் களுக்கு அதிகாரியாக இல்லாமற்போனால் இந்தக்கௌரவவம்சத்தை நாங்கள் பொறுத்திருக்கமாட்டோம். எங்கள் புண்ணியங்களுக்கும் தவங்களுக்கும் உயிருக்குங்கூட அவரே அதிகாரி. அவர் தம்மைத் தோற்றதாக நினைக்கும்போது நாங்களும் (எங்களைத்) தோற்றவர்தாம்.

காலால் பூமியைமிதிக்கும் மானிடத்தன்மையுள்ளவன் பாஞ்சாலியின் இந்தக்கூந்தல்களைத் தொட்டபிறகு உயிரோடு என்னிடத்திலிருந்து விடுபட்மாட்டான். நீண்டும திரண்டும் பரிகாயுதங்களைப போன்றுமிருக்கும் என் இருபுஜங்களையும் பாருங்கள். இவற்றின் நடுவில் அகப்பட்டபிறகு இந்திரனுலும் விடப்படமாட்டான். தர்மமென்னும் கயிற்றினுல் கட்டப்பட்டும என்தமையனரிடதிலுள்ள மரியாதையினுல் தடுக்கபபட்டும் அர்ஜுனனுல் அடக்கப்பட்டுமிருப்பதனுல் இந்தத்துயரத்தையனுபவிக்கிறேன். தர்மராஜரால் அனுமதி கொடுக்கப்பெற்றேனுயின் இந்தப்பாபிகளான திருதராஷ்டிர புதரர்களைச் சிங்கம் அற்பமிருகங்களை யழிபபதுபோலக் கைகளென்னும் கத்திகளால் துணித்துவிடுவேன்" என்றுசொன்னன். அபபோது பீஷ்மரும் துரோணரும விதுரரும், "உன்னிடதில் எல்லாச்சக்தியும் இருப்பது தெரியும். இப்போது பொறுத்துக்கொள்" என்று பீமனுக்குச் சொன்னர்கள்.

கர்ணன், "சிறந்தபெண்ணே! அடிமை, புத்ரன், பிறருக்குட்பட்டபெண் இம்மூவரும் பொருளிலலாதவர்கள். நீ பொருளில்லாத தாஸனுடையமனைவி. உனக்கு நாதனுமில்லை. தாஸனுடைய தனமெல்லாம் எஜமானனுடையது. நீ உள்ளேபோய்த் துரியோதனனுடைய பரிவாரங்களைச்சேர். அதுதான் நீ செய்யவேண்டியகாரியம். மற்றது அவ்விடத்தில் கட்டளையிடபபடும. ஓ! ராஜபுத்ரியே! திருதராஷ்டிர புத்ரர்களெல்லாரும் உனக்கு எஜமானராகிறார்கள்; பாண்டவர்களல்லர். சிறந்தபெண்ணே! யாரையடைந்தால் சூதாடிப்பந்தயத்தினுல் அடிமைத்தனம்வராதோ அபபடிபபட்ட மற்றொருவனைக் கணவனுக உடனேதேடிக்கொள். தாஸியாகப்போனபிறகு தன்னிஷ்டப்படி புருஷர்களைவைத்துக்கொள்வது குற்றமாகாது. அஃது உனக்குத்தெரிந்திருக்கட்டும. யஜ்ஞஸேனன்மகளே! நகுலன் பீமஸேனன் யுதிஷ்டிரன் ஸஹதேவன் அர்ஜுனன் ஆகியஎல்லோரும் தோற்றுப்போனர்கள். அதனுல், நீ தாஸியானுய். தங்களைத்தோற்றவர்கள் உனக்குக்கணவராகார்கள். பாஞ்சாலராஜனுடைய திருபதன்பெண்ணுகியஇவளை யைபருடியில் பந்தயம்வைத்தாடினதர்மராஜன் தன்பிறப்பின்பயனையும் பராக்ரமதையும ஆண்மையையும் நிஜக்கவில்லையோ?" என்றுசொன்னன். பீமஸேனன் அதைக் கேட்டு மிகவும்பொறுதவனுகி ராஜாவையனுஸரித்துத் தர்மமென்னும் கயிற்றினுல்கட்டப்பட்டுக் கர்ணனையெரிப்பவன்போல (பார்த்து) கோபத்தினுல் சிவந்தகண்களோடு துயரத்துடன் மிகபபெரு

மூச்செறிந்தான். அவன், "தர்மராஜாவே! இந்தத்தேர்ப்பாகன் மகன்மேல் எனக்குக்கோபமில்லை. உண்மையாக அடிமைதனிதாழில் தான் அவனிட்டகடடளை. நீர் இவளைபபநதயம் வைக்காமலிருப்பீ ராயின் பகைவர்கள் நம்மை இவ்வாறுபேசுவார்களா" என்று தர்ம ராஜாவைப்பார்த்துச் சொன்னன்.

பீமஸேனன்சொல்லைக் கேட்டவுடன் ராஜ்ரவான துரியோத னன், மதிமயங்கி மௌனமாயிருந்த யுதிஷ்டிரைநோக்கி, "ஓ! அர சனே! பீமஸேனனும் அர்ஜுனனும் நகுலஸஹதேவர்களும் உன்னு டையகட்டளையை எதிர்பார்த்திருக்கினறனர். கிருஷ்ணை ஜயிக்கப் படாதவளென்று நீ நினைக்கிறாயா? அவள்கேள்விக்கு மறுமொழி சொல்" என்றுசொன்னன். தர்மராஜாவைபபார்த்தது, இவ்வாறு சொன்னபிறகு தன்னுடையஜேஷ்டர்யத்தின் காவத்தினால் மதிகெட்ட துரியோதனன் புன்னகையுடன் பாஞ்சாலியைபபார்த்துப பீமஸே னனை அவமானபபடுத்துவதற்காகக் கர்ணனுடன்பரிகாசஞ்செய்து தன்வஸ்திரத்தைவிலக்கி வாழைமரத்துக்கும் ஸ்யாமைதுதிக்கைக்கும் ஒப்பானதும வஜ்ராயுதத்துகருஒபபான திடமுள்ளதும் எல்லாலக்ஷ ணங்களும பொருந்தியதுமான தன் [1]இடத்துடையை, திரௌபதி பார்க்க அவளுக்குக்காண்பித்தான். பீமஸேனன் அவளைப்பார்த் துச் சிவந்தகண்களைவிழித்து அரசர்களின்நடுவில் அந்தஸபையோ செல்லாம்கேட்கும்படி, "ஓ! துரியோதனு! விருகோதரன் பெரும் போரில் உன்னுடைய இந்தத்துடையைக் கதையினால்பிளந்துவிடா னையின் அவன்முன்னோர்கள் சென்றலோகத்திறகுச் செல்லான்" என்றுசொன்னன். கோபித்த பீமஸேனனுடைய மயிர்க்கால்கள் எல் லாவற்றினின்றும் அக்னிஜ்வாலைகள், கொளுத்தப்பட்ட மரத்தின் பொந்துகளினின்றும் கிளம்புவதுபோல வெளிப்பட்டன.

அபபோது விதுரர், "பிரதீபவம்சத்து அரசர்களே! பெரும் பயத்தைப்பாருங்கள். பீமஸேனனால் அந்தபபயமவருமென்று தெரி நதுகொள்ளுங்கள். இநதப் பரதவம்சத்தாரிடத்தில் இந்தப்பெரிய அநீதி மூநதியவினைப்பயனால உண்டாயிருப்பதென்பது நிண்ணம். ஓ! திருதராஷ்டிரபுத்திரனே! ஸபையில் ஸ்திரீயைக்கொண்டுவந்து விவாதஞ் செய்வதென்பது அளவுக்குமேற்பட்ட சூதாட்டமாகச் செய்யபபடடிருக்கிறது. உங்களுடைய யோகக்ஷேமங்களனைத்தும் அழிந்தன. கௌரவர்கள் பாவமான ஆலோசனைகளைச் செய்கின்ற

[1] இடத்துடை தன்ஸ்திரீக்கு உரியது; ஆதிபர்வம் நூஅகம் பக்கத்திற் காண்க

னர். கௌரவர்களே! இந்தத்தர்மத்தைச் சீக்கிரம்தெரிந்துகொள்ளுங்கள். தர்மம் கெட்டால் ஸபைகெடும். சூதாடுகிறவன் தன்னைத் தோற்பதற்குமுன்னே இவளைப்பந்தயம்வைத்திருப்பானுயின் இவளுக்கு அதிகாரியாயிருந்திருப்பன். ஸ்வதந்திரமில்லாதவன் எதை வைத்தாடுகிறானே அதைஜயித்தது கனவில்ஜயித்த தனம்போலத் தானுகுமென்று நினைக்கிறேன். கௌரவர்களே! சகுனிசொல்லைக் கேட்டு இந்தத்தர்மத்தை விட்டுவிலகிப்போகாதீர்கள்" என்றுசொன்னர். அப்போது துரியோதனன், "யாஜ்ஞஸேனியே! பீமன் அர்ஜுனன் நகுலஸஹதேவர்கள் இவர்களுடைய சொல்லுக்காகக் காத்திருக்கிறேன். யுதிஷ்டிரனுக்கதிகாரமில்லையென்று அவர்கள்சொல்லட்டும். உடனே அடிமைத்தனத்திலிருந்து விடப்படுவாய்" என்று சொன்னன். அப்போது அர்ஜுனன், "குந்திபுத்ரரும் மஹாத்மாவுமான தர்மராஜர் முதலில் எங்களைப்பந்தயமவைத்தபோது அதிகாரமுள்ளவராயிருந்தார். அவர்தம்மைத் தோற்றபிறகு யாருக்கதிகாரியென்பதைக் கௌரவர்களேவரும் அறியுங்கள்" என்றுசொன்னன். கர்ணன், "துச்சாஸனு! நான்சொல்வதைத்தெரிந்துகொள். வெகுநேரம் இவளேடென்னபேச்சு? வீரனே! திரௌபதியையழைத்துபோ துரியோதனு! நீ அவளைத்தாஸியாகவைத்து உன்னிஷ்டப்படியனுபவி" என்றுசொன்னன். பிறகு காந்தாராராஜாவின் புத்ரனசகுனி, "கர்ணு! நிறந்தகைகளையுடையவனே! 'உன்னிஷ்டப்படிசெய்' என்று நீ சொன்னது நன்றுயிருக்கிறது" என்றுசொன்னன். துராத்மாவான துச்சாஸனன் பிறகு திரௌபதியைப்பலாத காரமாகச் சீக்கிரத்தில் உள்ளேஅழைத்துக்கொண்டுபோக ஆரம்பித்து அவளையிழுத்தான். அதனால் பெண்ணரசியான பாஞ்சாலி கதறினுள். "பீஷ்மரே! துரோணரே! அச்வதாமாவே! கிருபரே! தர்மிஷ்டரும் தர்மதத்தில் அன்புள்ளவருமானவிதுரரே! என்னைக்காப்பாற்றுங்கள. திருதராஷ்டிரமஹாராஜாவே! உமதுமருமகளைக் காப்பாற்றும். மஹானுபாவையும் எல்லாமதெரிந்தவளும எல்லாவற்றையும் பார்த்திருப்பவளுமான காந்தாரியே! துரியோதனன்பயத்தினல்வருத்தபபட்டு நடுங்கியிருக்குமென்னைக் காப்பாற்று. வீரர்களைப பெற்ற குந்திதேவியே! என்னை நீபார்க்கவில்லையே. அயோக்யனல் பீடிக்கப்படும் உன்மருமகளை நீகாபபாற்றவில்லையே. இவ்வாறு அடிக்கடிபுலம்புகிறஎன்னைப்பற்றி யாரும் ஒன்றும்சொல்லாமற்போனல் பாக்கியமற்றநான் துரியோதனனுக்குவசப்பட்டுக கெட்டுபபோவேன் பாண்டுமஹாராஜாவும் தர்மதேவதையும தேவேந்திரனும

வாயுபக்வானும் அச்வினிதேவதைகளும் தங்கள்மருமகளைக் காப்பாற்றவில்லையே. பதிவிரதையும் பாக்கியமில்லாதவளுமானநான் ஜீவிப்பேனுயின் கஷ்டம். சீ!" என்றுள்.

விதுரர், "ராஜகுமாரியே! நீசொல்லுகிறதை நான்கேட்கிறேன். இந்தப்பாண்டவர்கள் ஒன்றும பேசுவதில்லையே. பாபபுத்தியுள்ளவனும் செய்நன்றிகொன்றவனுமான துரியோதனனே உன்விருப்பத்திற்காக நான்சொல்லும் சொல்லை நீயே கேள். துரியோதனனும் அவனைசேர்ந்தவர்களும மிகக்கெட்டவர்கள். திருதராஷ்டிரமஹாராஜர் பிள்ளைகளுடன்கூடவே மோசம்செய்கிறார். பாபபுத்தியுள்ளவனும் மிகக்கெட்டவனுமாகிய இந்ததுரியோதனன் நான்சொல்லும் பெரியசொல்லைக் கேளாமற்போவதிலு என்னவோ" என்று திரௌபதிக்குச்சொல்லித திருதராஷ்டிரனுடைய புத்ரனுதுச்சாஸனனைப்பார்த்து, "ராஜபுத்ரா! திரௌபதியைக் கஷ்டப்படுத்தாதே; நீ நாசத்தைபபாராமலிருக்கலாம" என்று சொன்னர். துச்சாஸனனுக்கு இவ்வாறு சொன்னபிறகு திருதராஷ்டிரனைப்பார்த்து, "மஹாராஜாவே! நீர் இவ்வாறு திரௌபதியைக் கஷ்டப்படுத்துவீராயின் பாண்டவர்களைக் கெடுத்தகாரணத்திலேயே இந்தபாபியான உமதுபுத்ரனும் அவன்மந்திரிகளும கோபித்தபீமார்ஜுனர்களிருவர்களாலும் நகுலஸஹதேவர்களாலும் வெகுசீகிரத்தில் அழிக்கபடுவார்கள். ஆதலால், பிள்ளையைத தடுக்கக்கடவீர். கெட்டுப போகக்கருதவேண்டாம" என்று சொன்னர். இதைக்கேட்டு, புத்திகெட்ட திருதராஷ்டிரன் ஒருமறுமொழியும சொல்லவில்லை. அப்போது நீண்டகண்களையுடைய பாபியான துரியோதனன் விதியினுல் வந்த அறிவின்மையினுல் இழுக்கபபட்டு விதுரர்சொன்னதை லக்ஷ்யஞ்செய்யாமல ஸந்தோஷத்துடன் அடிக்கடி திரௌபதிக்குத துடையைக்காண்பித்தான். துடையைக்காண்பிக்கும்போது தர்மபுத்தரின் தமபியும் பலமும்அகங்காரமுமுள்ளவனுமான விருகோதரன் துரியோதனனைப்பார்த்தான்.. அபபோது பீமஸேனன், தனகுச்செய்த அந்த அவமானத்தைநினைத்துச சிவந்தகண்களைவிழித்துக் கோபத்தையடக்கி வெளிப்படையாகப் பின்வருமாறு சொல்லலானுன்.

"நான் துரியோதனனைக்கொல்வேன். தனஞ்சயன் கர்ணனைக் கொல்வான். சூதில் தேர்ந்தவனுகிய சகுனியை ஸஹதேவன் கொல்வான். இந்த ஸபைநடுவில் மறுபடியும இந்தப் பெரியசொல்லைச் சொல்வேன். நமக்கு யுத்தமமேநரும்போது தேவர்கள் இதை ஸத்யமாகச்செய்வார்கள். இந்தப்பாவியான துரியோதனனை யுத்தத்தில்

கதையினால் கொல்வேன். தரையில்விழுந்த இவன்தலையைக் காலால் மிதிப்பேன். சூரனும் கொடியவனும் துராத்மாவுமான துச்சாஸன னுடைய மார்பைப்பிளந்து சிங்கம்போல ரக்தத்தைக்குடிப்பேன்" என்றுசொன்னான். அர்ஜுனன், "பீமஸேனா! உன்னுடன்பகைத்த வர்கள் இருப்பதில்லை. வீட்டில் ஸுகமாயிருக்கும் மூடர்களுக்குப் பெரும்பயம்தெரியாது. பீமா! சிறந்தவர்களுடையமுயற்சி பேச்சி னால்தெரிவிக்கப்படாது. கூத்திரியதர்மத்தின்படி இவர்கள் யுத்தத் தில் நம்முடன்நிற்பார்களாயின் துரியோதனன் கர்ணன் துராத்மா வானசகுனி துச்சாஸனன் இவர்களுடைய ரக்தத்தையும் பூமிகுடிக் கும். பீமஸேனா! இந்ததுராத்மாக்கள் ஸந்தோஷப்படும்படி பேசு கின்ற பொறுமைக்காரனைகர்ணனை உன்ஆஜ்ஞையினால் நான் யுத் தத்தில் கொல்வேன். கர்ணனையும் கர்ணனைச சேர்ந்தவர்களையும் பாணங்களினால் யுத்ததத்திற்கொலவேன். மறறுமுள்ளஎந்தஅரசர்கள் புத்தியில்லாமல்என்னுடன் யுத்தஞ்செய்வார்களோ அவர்களெலலோ ரையும் கூரியஅம்புகளினால் யமலோகத்திறகனுப்புவேன். என்னு டையஸத்யம்போமானால் இமயமலை இடத்தைவிட்டுவிலகும்; ஸூர்ய ன் ஒளியற்றுப்போவான்; குளிர்ச்சி சந்திரனைவிட்டுபோய்விடும்" என்றுசொன்னான். அர்ஜுனன் இவ்வாறுசொன்னபிறகு பெருமை யுள்ளவனும் பராக்ரமமும சிறப்புமுள்ளவனும் மாதரிபுத்ரனுமான ஸஹதேவன் பெரியகையைத்தூக்கிச் சகுனியின்வதத்தைச்செய்யக் கருதிக் கோபத்தினால கண்கள்சிவந்து பலமுறைபெருமூச்சுவிட்டுக் கொண்டு பின்வருமாறுசொலலலானான். "மூடா! காந்தாரராஜாக்க னின்புகழைக் கெடுத்தவனே! நீ எவறறைப பாசசிகைகளென்று நினைக்கிறாயோ இவைபாச்சிகைகளலல; உன்னால் யுத்தஞ்செய்வதற் காக எடுக்கப்பட்ட கூர்மையானபாணங்களாகும். ஸுபலபுத்ரனே! கூத்திரியதர்மப்படி நீயுத்ததத்தில்நிறபாயாயின் உன்னைப்பற்றிப் பீமன் சொன்னதை உன்விஷயத்திலும உன்பந்துக்கள்விஷயத்திலும் செய் கையினால் நிறைவேற்றுவேன். [1]மூடித்துக்கொள்ளவேண்டியவற்றை யெல்லாம் மூடித்துக்கொள்" என்றான். ஜனமேஜயரே! ஸஹதே வன்சொல்லைக்கேட்டு மனிதர்களுள் மிக்கஅழகானகுலனும் சொல் லலானான். "இந்தச்சூதாட்டத்தில் மோசக்காரர்களும திருதராஷ் டிரபுத்ர்களும் துரியோதனனுக்கு வேண்டினவர்களுமான எவர்க ளால் இந்தத்திரௌபதி கொடுஞ்சொற்கள் சொல்லபபட்டாளோ, மிகக் கொடியகடையுளளவாகளும இறகபோகிறவர்களும் காலத்

[1] பிறகு நீயிருக்கமாட்டாய்என்பதுகருத்து.

தினால் ஏவப்பட்டவர்களுமான அவர்களில் பெரும்பான்மையோருக்கு யமலோகத்தை நான்காண்பிப்பேன். எனக்குப் பக்கபலமாகியும் மனிதர்களில் இழிவானவனும் துராத்மாவுமான உலூகனென்னும் சகுனியின் அன்புள்ளபுத்ரனே யுத்தத்தில் நான்கொல்லப்போகிறேன். தர்மராஜருடைய கட்டளையினாலும் திரௌபதியின் கருத்தையனுஸரித்தும் பூமியில் திருதராஷ்டிரபுத்ரர்கள் இல்லாமற் சீக்கிரத்தில் செய்துவிடுவேன்" என்றான். திரௌபதி, "பாபிஷ்டா! நீ துடையை எனக்குக்காண்பித்து மோஸம்பார்த்துக்கொண்டதனால் உனக்கு மரணம் துடையிலேயே வரப்போகிறது. துராத்மாவான் உன்ஸஹோதரன் என்னை இப்படிப்பீடிப்பதனால் இவனது ரக்தத்தை விருகோதரன் குடிக்கவேபோகிறான். மிகக்கெடுதியுள்ள இந்தக் கர்ணனைப் பிள்ளைகள் பந்துக்கள் மந்திரிகள் சேனைகள் முதலியவர்களோடு தனஞ்சயன்கொல்லப்போகிறான். அபதாதனமுள்ளவனும் மோசக்காரனும் பாபத்தில் மனமுள்ளவனுமாகிய சகுனியையும் அவன் சுற்றத்தாரையும் ஸஹதேவன் கோபித்து யுத்தத்திலேகொல்லப்போகிறான்" என்றுசொன்னாள். தர்மமான ஒழுக்கமுள்ள திரௌபதியினால் இந்தசசொல் சொல்லப்பட்டபோது அந்தச்சபையில் ஆகாயத்திலிருந்து மிகப்பெரியபூமாரிபொழிந்தது. ஜனமேஜயாஜாவே! அவர்கள்சொன்னதைகேட்டு அந்தஸபையோர் பேசவில்லை. அர்ஜுனன்பயத்தினால் அந்தச்சபையெல்லாம் ஒலியடங்கியிருந்தது.

தொண்ணூற்றுமூன்றுவது அத்தியாயம்.

த்யூதபர்வம். (தொடர்ச்சி.)

(கோபித்தஅர்ஜுனனை யுதிஷ்டிரர்ஸமாதானப்படுத்தியதும், திரௌபதிக்குத் திருதராஷ்டிரன் வரமளித்ததும்.)

அப்பொழுது திரௌபதி சொல்லியதைக்கேட்டுக் கோபமுற்றதனஞ்சயன் கோபத்தினால் சிவந்தகண்களுடன், "இந்தத்தர்மராஜரானயுதிஷ்டிரர் என்னைத்தடுக்கிறார்" என்றுசொன்னான். இவ்வாறுசொல்லி வீரனனஸவயஸ்ஸியானவன் கோபத்தாற் சிவந்தகண்களுடன் வில்லியெடுத்துக்கொண்டெழுந்து அந்தச்சத்துருக்களைப் பார்த்தான். பிரளயகாலத்தில் எல்லாலோகங்களையுமெரிக்கும் அக்னியைப்போலவும் தக்ஷயாகத்தில் பசுக்களைக்கொல்லுகையதனித்துக் கோபித்த ருத்ரரைப்போலவும் வில்லைக்கையிற்பிடித்துக் கொல்

வதற்காகப் பலமுறைநோக்கிக்கொண்டு யுத்தத்திற்குமுயற்சியுள்ள வனுயிருந்தஅர்ஜுனனை அங்குள்ள அரசர்களனைவரும் கண்டனர். அவ்வாறிருந்த அர்ஜுனனைக்கண்டு அங்குள்ளமனிதர்கள் வ்யஸன முற்றனர். தனஞ்சயனுடைய பராக்ரமத்தையறிந்தவரனைவரும் அப்போது உயிரில்லாசையையிட்டு இமைகொட்டாத கண்களோடு இறந்தவர்போலிருந்தனர். அர்ஜுனனையும தர்மபுத்திரையும் அரசர்கள் கண்ணெடுத்துப்பார்த்தனர். அப்போது அர்ஜுனன் கோபித்த தைப்பார்த்துப் பூமிநடுங்கிற்று. ஆகாயத்திற் சஞ்சரிக்கும்பிராணிகளும் பயப்பட்டுநடுங்கின. அப்போது ஸூர்யனும்பிரகாசிக்கவில்லை; காற்றுமடிக்கவில்லை; சந்திரன், நக்ஷத்திரங்கள், ஆகாயம், திசைகள் ஒன்றும்பிரகாசிக்கவில்லை; ஸ்தாவரங்களும் ஜங்கமங்களுமாகிய உலகமனைத்தும் கலங்கிப்போயிற்று. அந்தஅர்ஜுனன் எழுந்திருக்கும் போது ஆகாயத்தில் ஸூர்யன்உதயமாவதுபோல விளங்கினன். அவ்வாறுகோபித்துப் பிரளயகாலத்தில் உலகத்தையழிக்கும் யமனுக்கொப்பாயிருந்த அர்ஜுனனைக்கண்டு பீமஸேனனும் ஸந்தோஷமடைந்து யுத்தஞ்செய்யவே எண்ணங்கொண்டான். அப்போது கருடன் நாகங்களைக்கொல்வதுபோல எலலாபபகைவரையும் கொல்லக்கருதி மிக்கோபிதத தனஞ்சயனைத திரௌபதியும்நோக்கினாள். கோபித்துப் பிரளயகாலதது அக்னியைபபோல ஜ்வலிக்கின்றஅர்ஜுனன், கண்ணெடுத்துபபார்க்க முடியாமலிருந்தான். பராக்ரமத்தோடுகூடியஅர்ஜுனனைக்கண்டு அந்தநகரத்திலுள்ளோர் வ்யஸனபபட்டனர். வேகமாகக்கிளமபுகின்ற தனஞ்ஜயனைக்கண்டு தர்மராஜா வானவர் இநதிரன் உபேநதிரனையடக்குவதுபோல அடக்கினர். தையுள்ளவரும் மூத்தவரும் தர்மராஜாவுமான யுதிஷ்டிரர், "அர்ஜுனா! அவஸரமாகக் காரியமசெய்யாதே. கீர்த்தியழியலாகாது. பாபஞ் செய்தவர்களாகிய இந்தசகுநாட்டக்காரர்களை நான்எரித்துவிடமுடியும். ஆனால், அஜாதயத்திற்கு அதுமார்க்கமென்றறிந்ததனால் என் கோபம் அடங்குகிறது. 'பாண்டவனே'! 'உலகநன்மைக்காக நீயும் இந்தக் கோபத்தையடக்கு'" என்றுசொன்னர். தர்மராஜாவினால் இவ்வாறுசொல்லப்பட்ட பாண்டவனதனஞ்ஜயன் தூரியோதனன் மேலிருந்தகோபத்தை அடக்கிக்கொண்டான். அந்தவீரனபற்குனன் அடங்கினபோது ஸ்தாவரங்களும் ஜங்கமங்களுமடங்கியஉலகம் மறுபடியும் ஸுகதோஷமடைந்தது. ஜனமேஜயரே! அவ்வாறு தமையனாரால் அர்ஜுனன் தடுக்கப்பட்டதைக்கண்டு விருகோதரன் துயரமடைந்தான். அந்தச்சபை சப்தமில்லாமலிருந்தது. ஜனமேஜயரே!

அப்போது திருதராஷ்டிரமஹாராஜாவின் திருஹஸ்தத்தில் அக்னிஹோத்ரசாலையில் நரி உரக்கஊளையிட்டது. நாலுபக்கங்களிலும் கழுதைகளும் கொடியபக்ஷிகளும் நரிகளுக்கு எதிராக ஒலித்தன. தத்துவஜ்ஞானியானவிதுரரும் காந்தாரியும் விதுரனை பீஷ்மத்ரோணகிருபர்களும் அநுதவிகாரமான சப்தத்தைக்கேட்டு, 'சுபமுண்டாக்வேண்டும், சுபமுண்டாகவேண்டும' என்று உரக்கக்கூறினர். பிறகு காந்தாரியும் எல்லாம்தெரிந்தவரானவிதுரரும் அந்தக்கொடிய அபசகுனத்தைக்கண்டு துக்கத்துடன் திருதராஷ்டிரமஹாராஜாவுக்குத் தெரிவித்தனர்.

அதன்பிறகு திருதராஷ்டிரன், "புத்தியில்லாததுரியோதனனே! அயோக்யா! கௌரவர்களின்ஸபையில் ஒருபெண்ணை - அதிலும் தர்மபத்னியான திரௌபதியைபபார்த்தபரிஹாஸமாகப்பேசினாய். அதனால், கெட்டுபபோகிறாய்" என்றுசொன்னான். நல்லபுத்தியுள்ளவனும் உண்மையையறிந்தவனுமான திருதராஷ்டிரன் இவ்வாறுசொல்லித் தன்புத்ரர்களுக்கு அபாயம் நேர்ந்திருபபதைப் புத்தியினால் ஆராய்ந்து அவர்களின்நன்மையைத்தேடி, பாஞ்சாலராஜன் மகளான கிருஷ்ணையைநோக்கி, இன்சொலைமுன்னிட்டு, "பாஞ்சாலீ! தர்மத்தையே தலைமையாகக்கொண்டவளும கறபுளளவளுமாகியநீ எனது மருமக்களுக்குள் சிறந்தவளாகையால உனக்கென்னவம் வேண்டுமோ அதை என்னிடமகேள்" என்று சொன்னான். அதைக்கேட்டுத திரௌபதி, "பரதசரேஷ்டரே! நீர் எனக்குவரமகொடுபபதாயிருந்தால் கேட்கிறேன். எல்லாத் தர்மங்களையும அனுஸரிபபவரும் மேன்மை பொருந்தினவருமான யுதிஷ்டிரர் தாஸராகாமலிருக்கக் கடவர். உயர்ந்தமனமுள்ளவனும் என்புதல்வனுமாகிய இந்தபரதிவிந்தியனை அறியாதசிறுவர்கள் 'தாஸபுத்ரா!' என்றழையாமலிருக்க வேண்டும். பாரதரே! முதலில் ஸாதாரணமனிதனுகஇராமல் ராஜபுத்ரனுகஇருந்து கொண்டாடபபட்டபுருஷன் தான்தாஸபுதரனென்றறிந்தால் இறந்துவிடுவானன்றே? என்றுசொன்னாள். "சிறந்தவளே! நீளப்படிச்சொல்லுகிறயோ அபபடியேயாகட்டும். மங்களமானவளே! உனக்கு இரண்டாவதுவரமும் கொடுப்பேன்; கேள். என்மனமேமகொடுக்கிறது. உனக்கு ஒருவரம்போதாது" என்று சொன்னான். திரௌபதி, "ராஜாவே! ரதங்களும் விற்களுமுள்ளவர்களான பீமசேனர்ஜுனர்களும் நகுலஸஹதேவர்களும் அடிமைகளாயிராமல் ஸ்வதந்திரர்களாயிருக்கும்படி நான் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றுகேட்டாள். திருதராஷ்டிரன், "மஹானுபாவை

யே! பெண்ணே! நீ விரும்புகிறபடியே ஆகட்டும். நம்மிடத்தில் மூன்றுவதுவரமுங்கேள். இவ்விரண்டுவரங்களினால் நீமுழுநன்மையும் பெறவில்லை. தர்மந்தவறுதலானநீதான் எனது மருமக்களெல்லாரிலும் சிறந்தவள்" என்றுசொன்னான். திரௌபதி, "மஹிமை பொருந்தியவரே! ஆசையானது தர்மத்தைக்கெடுக்கும். ஆதலால், நான்ஆசைப்பட்டவில்லை. ராஜச்ரேஷ்டரே! நான் மூன்றுவதுவரம் வாங்கத்தகாதவள். அரசர்க்கரசே! வைசியனுக்கு ஒருவரமென்றும், க்ஷத்திரியப்பெண்ணுக்கு 'இரண்டு வரங்களென்றும், ராஜாவுக்கு மூன்றுவரங்களென்றும், பிராம்மணனுக்கு நூறுவரங்களென்றும் சொல்லுகின்றனர். இந்தஎன்கணவர்கள் மிகப்பாபமுள்ளவர்களாகஆகி இப்போது கரையேற்றப்பட்டனர். ராஜாவே! இனி, தம்நற்செய்கைகளினால் நன்மைகளையடைவார்கள்" என்று சொன்னாள்.

தொண்ணூற்றுநான்காவது அத்தியாயம்.

த்ரௌபதர்வம். (தொடர்ச்சி.)

(கர்ணன்சொன்னதற்காகக்கோபித்த பீமனைத் தர்மபுத்திரர் அடக்கினது.)

கர்ணன், "அழகினால் பெயர்பெற்றமானிடப்பெண்கள் நாம் கேட்டிருப்பவர்களுள் யாருக்கும் இப்படிப்பட்ட செய்கையிருந்ததைக் கேட்டிலம். இந்தஸபையில் திருதராஷ்டிரபுத்ரர்கள் பாண்டவர்களின்மேல் கரைகடந்த கோபாவேசம்கொண்டிருந்த ஸமயத்தில் துருபதபுத்திரியானகிருஷ்ணை பாண்டவர்களுக்குப்பரிஹாரமானாள். ஓடமில்லாத ஜலத்தில்விழுந்து தரைஅகப்படாமல முழுகிக்கொண்டிருக்கும்பாண்டவர்களுக்கு இந்தபபாஞ்சாலி கரைசேர்க்கும் கப்பலானாள்" என்றுசொன்னான். கௌரவர்களின் நடுவில் அவன்சொல்லியதைக்கேட்டு, பீமஸேனன் மிக்ககோபமும் துயரமுமுற்றவனாகி, 'பாண்டவர்களுக்கு ஸ்திரீதான்கதியா' என்றுசொல்லி அர்ஜுனனைப்பார்த்து, "ஓ! தனஞ்சயா! 'ஸுததி, புண்ணியகர்மம், ஞானம் என்னும் மூன்றுஒளிகள் சேர்ந்தவன்தான் மனிதன்; ஏனெனில், இம்மூன்றினாலேதான் பிரஜைகள் படைக்கப்பட்டிருக்கின்றனர். உயிர்போனபிறகு அசுத்தியும் ஒன்றுமில்லாததுமானதேஹம் உறவினரால்விடப்படும்போது இம்மூன்றுந்தான் ஆத்மாவுக்கு ஸாதகங்களாகின்றன' என்று தேவலர்சொல்லியிருக்கிறார். பெண்டாட்டியை அயலான்தொட்டதனால் நமக்கு அந்தஒளிகெடுக்கப்பட்டது. பிறன்

தொட்டவளிடத்தில் உண்டானது ஸந்ததியாவதெப்படி?" என்று சொன்னன். (அதற்கு அர்ஜுனன்) "பாரதனே! மேலோர், இழிவானவன் கடுஞ்சொற்களேசசொன்னலும், சொல்லாவிட்டாலும் அவனுக்கு மனமொழிகூறுவது ஒருகாலுமில்லை. எல்லாந்தெரிந்தவர்களும் தமக்குத்தாமே கௌரவத்தைப்பெற்றவர்களுமான சான்றோர்கள் பிறர்செய்தஉபகாரங்களைமட்டும் நினைப்பார்கள். அபகாரங்கள் செய்யப்பட்டிருந்தபோதிலும் அவற்றைநினையார்" என்றுசொன்னன். பீமஸேனன், "அரசர்க்கரசே! தர்மராஜாவே! சேர்ந்திருக்கும் இந்தச்சத்துருக்களைவரையும் இங்கேயே வேரோடழித்துவிட்டோமா? அல்லது இதைவிட்டுவெளிப்பட்டபிறகு செய்யட்டுமா? பாரதரே! இதில் நமக்குஸந்தேகந்தான் எதற்கு? வாய்ச்சொல்தான் எதற்கு? இந்தஇடத்தில் இப்போதே இவர்களைக்கொன்றுவிடுகிறேன். இந்தப்பூமியை நீர்ஆளும்" என்றுசொல்லித் தன்தமபிமார்களுடன்கூட மான்களிஞ் நடுவிலிருகும் ஸிம்மம்போல அடிக்கடி பகைவரைக் கண்ணெடுத்துப்பார்த்தான். சிறந்தகைகளுடைய வீரனகியபீமன் சிறந்தசெய்கையுடைய தர்மராஜாவினுல் ஸமாதானஞ் செய்யப்பட்டும் அவரைப்பார்த்து உட்கொதிப்பினுல் கஷ்டப்பட்டுக்கொண்டேயிருந்தான். ஜனமேஜயரே! கோபித்தபீமஸேனனுடைய காதுகள்முதலான துவாரங்களிலிருந்து புகையோடும் பொறிகளோடும் ஜ்வாலையோடுங்கூடத் தீயுண்டாயிற்று. அவனுடையமுகம் பிரளயகாலத்தில் உருவமெடுத்தயமனுடையமுகம்போலப் புருவநெறிப்பினுல் பார்க்கக்கூடாமலிருந்தது. கைகளால் சோபிப்பவனகிய அந்தபீமனை யுதிஷ்டிரர் கையினுல்தடுத்து, "பாரதனே! இதுவேண்டாம்; பேசாமலிரு" என்றுசொன்னர். கோபத்தினுற் சிவந்தகண்களையுடைய அம்மஹாவீரனைத தடுத்தபிறகு தம்தகைதையான திருதராஷ்டிரனிடம் கைகூப்பிநின்றார்.

தொண்ணூற்றைந்தாவது அத்தியாயம்.

த்யூதபர்வம். (தொடர்ச்சி.)

(திருதராஷ்டிரன் விடைகொடுத்ததன்மேல் தர்மபுத்திரர் இந்திரப்ரஸ்தம்சென்றது.)

யுதிஷ்டிரர், "பரதவம்சததரரே! உமக்கு நாங்கள் என்ன செய்யக்கடவோம்? எங்களுக்குக் கட்டளேயிடும். நீர்தாம் எங்களுக்குப்பிரபு. பாரதரே! எபபோதும உமதுகட்டளேப்படி நடக்கக்

கருதுகிறேம்" என்றுசொன்னர். திருதராஷ்டிரன், "அஜாதசத்ருவே! உனக்கு நன்மையுண்டாகட்டும். நீங்கள்க்ஷேமமாய் உபத்திரவமில்லாதவழியிற் செல்லுங்கள். என்னல்விடைகொடுக்கப்பெற்ற நீங்கள் உங்கள்தனங்களுடன்சென்று ராஜ்யத்தையாளுங்கள். முதிர்ந்தவனுகிய எனதுஇந்தக்கட்டளையை நீங்கள் அறியவேண்டும். நான் சொல்வதெல்லாம் உங்கள் நன்மைக்கும் மேன்மைக்கும் முக்கியகாரணமாகும். அப்பா! யுதிஷ்டிரா! தர்மங்களின்துட்பமானவழிகளை நீ அறிந்தவன். சிறந்தஅறிவுள்ளவனே! நீ நன்றுகக்கற்பிக்கப்பட்டவன்; பெரியோர்களிடத்தில பணிவுசெய்தவன். அறிவுள்ளஇடத்தில் அடக்கமிருக்கும். பாரதனே! நீ ஆறுதலடை. [1]மரமல்லாதவற்றில் வாள்முதலிய ஆயுதங்கள் பிரவேசிப்பதில்லை. ஆதலால், மரத்திலேதான் அவைபோடப்படுகின்றன. எவர்கள், தீங்குகளேமறந்து குற்றங்களேப்பாராமல் குணத்தையேஅறிந்து பகைசெய்யாமலிருக்கின்றனரோ அவர்கள்தாம் மேன்மக்கள். மேன்மக்கள் பிறர்செய்த உபகாரங்களேயே நினேப்பதன்றிப் பிறரால்செய்யப்பட்டதீங்குகளே நினேயார்; அயலாருக்கு உபகாரஞ்செய்யும்போது பிரதியுபகாரத்தை எதிர்பாரார். யுதிஷ்டிரா! கீழ்மக்கள் ஒற்றுமையாகபேசும்போதே கடுஞ்சொற்களேசசொல்வர். தாங்கள் முதலிற்சொல்லாமல் பிறர் சொன்னபிறகு அவர்களுக்குக் கடுஞ்சொல்சொல்லுகிறவர்கள் நடுத்தரத்தினர். தீரர்களானமேன்மக்கள் பிறர் இன்னுதகடுஞ்சொற்களேச்சொன்னலும் (சொல்லக்கருதி) சொல்லாமலிருந்தாலும் தாங்கள்ஒருபோதும மறுமொழிசொலலார். எல்லாம்தெரிந்தசான்றோர் ஆத்மஞானததையடைந்து உபகாரங்களேயேநினேப்பதன்றி அபகாரங்கள்பிறரால்செய்யப்பட்டிருந்தாலும் அவற்றைநினேயார். ஸாதுக்கள் ஆரியர்களின்வரம்புகளேக்கடவாமல் காண்பதற்கினியவராகவேயிருப்பார். அப்படியே யோகியனகியநீயும் ஸபையில் சான்றோர்நடப்பது போலவே நடந்திருக்கிறாய். அபபா! துரியோதனன்செய்த அந்தக் கொடுமையை மனத்தில்வைக்காதே. பாரதனே! உன்தாயான காந்தாரியையும, உன்குணத்தில் அன்புடன்வந்திருக்கும் முதியோனும் கண்தெரியாதவனுமாகிய உன்தந்தையுமாகிய என்னையும் பார். நான் நமதுபுதரர்களின் ஸ்நேஹிதர்சனேயும் பலாபலங்களேயும் பார்க்கக் கருதினதனல் தெரிந்ததான் இந்தச்சூதாட்டத்தை விலக்காமலிருந்தேன். வேந்தே! உன்னே ராஜாவாகவும் எல்லாச்சாஸ்திரங்களேயும் கறறுணர்ந்தசிறந்தபுத்தியுள்ளவிதுரனே மந்திரியாகவும் பெறறகௌர

[1] பொறுத்தவனிட்டத்தில்தான் பகைசெய்வர்என்பது கருத்தி.

வர்களுக்கு யாரும்கவலைப்படவேண்டியதேயில்லை. உன்னிடத்தில் தர்மமும் அர்ஜுனனிடத்தில் மனவுறுதியும் பீமஸேனனிடத்தில் பராக்ரமமும் புருஷச்ரேஷ்டர்களான நகுலஸஹதேவர்களிடத்தில் சுத்தமானசூரபக்தியும இருக்கின்றன. அஜாதசத்ருவே! உனக்கு ஸுகமுண்டாகட்டும். காண்டவப்ரஸ்தத்தைச்சேர். உன்பிராதாக்க ளான துரியோதனன்முதலானவர்களுடன் உனக்குஸ்நேஹமிருக் கட்டும். உன்மனம் தர்மத்திலேயேவைக்கபடவேண்டும்" என்று சொன்னன். ஜனமேஜயரே! தர்மராஜாவானயுதிஷ்டிரர் இவ்வாறு சொல்லபபட்டவராய் யோக்யர்கள்செய்யும் பிரதிஜ்ஞையெல்லாவற் றையுஞ்செய்து ஸஹோதரர்களுடன்புறபபட்டார். அந்தபபாண்டவர் கள் கிருஷ்ணையுடன் மேகங்களபோன்றரதங்களிலேறி மனமகிழ்ந்து இந்திரப்ரஸ்தமென்னும சிறந்ததநகரத்திறகுச சென்றனர்" என்றனர்.

த்யுதபர்வம்முற்றிற்று.

தோண்ணூற்றுருவது அத்யாயம்

அனுத்யூதபர்வம்.

(துரியோதனன் அர்ஜுனனிடம் தனக்கிருக்கும்பயத்தையும் அவன் பராக்ர மத்தையும் திருதராஷ்டிரனுக்குச்சொல்லி அதற்கு உதாரணமாகக் கார்த்தவீர்யார்ஜுனன் சரித்திரத்தை எடுத்துரைத்தது.)

ஜனமேஜயர், "அநதப்பாண்டவர்கள் மிகுதியான ரத்னங்க ளோடும் தனங்களோடும அனுப்பப்பட்டதையறிநதபிறகு திருத ராஷ்டிரபுத்திரர்களின்மனம எவ்வாறுயிற்று?" என்றுகேட்க, வைசம் பாயனர் சொல்லுகிறார்.

"ஜனமேஜயராஜாவே! புததிசாலியான திருதராஷ்டிரனுல் அந்தப பாண்டவர்கள் அனுப்பப்பட்டதையறிந்து, துச்சாஸனன் உடனே தன்தமையனிடம்சென்றான். பரதச்ரேஷ்டரான ஜனமேஜய ரே! பரதச்ரேஷ்டனை துசசாஸனன் மனத்தில் வருத்தங்கொண்டு (கர்ணன்சகுனிமுதலான) மந்திரிகளுடன் கூடியிருக்கும் துரியோத னனிடமடைநது, "ஓ! மஹாரதர்களே! நாம்கஷ்டப்படுக் கொணர் ந்துசேர்த்த இநதபபொருளகளையெல்லாம இழவர் சதருக்களுக் குக்கொடுதது அழிதது விடுகிறார். இதனையறியுங்கள்" என்றுசொன் னன். பிறகு பாண்டவர்களின்மீது பொறுமைகொண்டவர்களாகிய

துரியோதனன், கர்ணன், ஸுபலன்புத்ரனான சகுனி இவர்கள் ஒருவரோடொருவர்சேர்ந்து விசித்ரவீரியன்புத்ரனும் புத்திசாலியுமான திருதராஷ்டிரமஹாராஜனிடம் விரைவாகச்சென்று நயமாகத்தெரிவித்தனர். துரியோதனன், "ராஜாவே! வித்வானும் தேவர்களுக்குப்புரோஹிதருமான பிருஹஸ்பதி இந்திரனுக்கு ராஜநீதியைச் சொல்லும்போது சொன்னவிஷயம் நீர்கேட்டதில்லையா? சத்துருக்களைக் கொல்லுகிறவரே! [1]எல்லாஉபாயங்களையும்செய்து சத்துருக்களைக்கொல்லவேண்டும்.' பின்னிட்டு யுத்தத்தினாலாவது ஸஹாயஞ்சேர்த்துக்கொள்வதனாலாவது உமக்கு அவர் தீங்குசெய்வார். அதனால், நாம் பாண்டவர்களின்தனங்களினால் எல்லாஅரசர்களையும் வசப்படுத்திப் பாண்டவர்களோடு யுத்தஞ்செய்வோமாயின் நமக்கென்ன குறையும்? கெடுப்பதற்காகவந்த கோபித்தலர்ப்பங்களைக் கழுத்திலும்முதுகிலும் போட்டுக்கொண்டு எவன் (கொல்லாமல்) விட்டுவிடுவான்? தந்தையே! கோபித்து ஆயுதங்களையெடுத்துத தேர்களிலேறிக்கொண்டு போருமபாண்டவர்கள் சீறினஸர்ப்பங்கள்போல நம்மைமிச்சமில்லாமற்செய்துவிடுவார்கள். அர்ஜுனன் கவசத்தை நன்றுகப்போட்டுக்கொண்டும் சிறந்தபாணிகளையெடுத்துக்கொண்டும் போகிறான்; காண்டீவத்தைஅடிக்கடிஎடுக்கிறான்; பெருமூச்சுவிட்டுக்கொண்டு பார்க்கிறான். விருகோதரன் விரைவுடன் பெருங்கதையையெடுத்துத் தனதுதேரைப பூட்டிக்கொண்டு வேகமாகச் சென்றானென்று நாம்கேள்விபடுகிறோம். நகுலன் கத்தியையும் அர்த்தசந்திரன்வடிவமான கேடகத்தையும் எடுத்துசசென்றானும். ஸஹதேவனும் தர்மராஜாவும் குறிப்புக்களினால் ஸம்ஜ்ஞைசெய்துகொண்டனராம். அவர்களனைவரும் அனேக ஆயுதங்களோடும் ஸாமான்களோடுங்கூடிய தேர்களிலேறிக்கொண்டு மற்றரதிகர்களை அடிப்பதற்காக ஸேனைசேர்க்க புறப்பட்டுப்போயினர். ஒருகாலத்தில் நம்மால்தீங்குசெய்யப்பட்ட அவர்கள் அதைப் பொறுக்கமாட்டார்கள். திரௌபதியைக்கஷ்டப்படுத்தினதை அவர்களில் எவன் பொறுக்கக்கூடியவன்? யுத்தத்தில் கோபித்தஅர்ஜுனனுக்கு எதிர்நிற்பவனை நான்காணவில்லை. தேராளிகளிற் சிறந்தவர்களான பீஷ்மர், த்ரோணர், கர்ணன், அச்வத்தாமா, கிருபர், விருஷஸேனன், விகர்ணன், ஜயத்ரதன், பாஹ்லீகன், ஸோமதத்தன், பூரி, பூரிச்ரவன்,

---

1 'உமக்குத்தீங்குசெய்கிறவர்களை யுத்தஞ்செய்யாமலே எல்லாஉபாயங்களாலும் கொல்லவேண்டும்; அல்லது, யுத்தத்திலாவது கொல்லவேண்டும்' என்பது பழையஉரை.

சலன், சகுனி, அவன்புத்ரன், கௌரவரைச்சேர்ந்த மற்றுமுள்ள அரசர்கள் இவர்களனைவரும் யுத்தஞ்செய்யத்தொடங்கினும் அர்ஜுனனுக்கு எதிர்நிற்கமாட்டார்கள். பராக்ரமத்தில் அர்ஜுனனுக்கு ஸமமானவில்லாளி உலகத்தில்இல்லை. இரண்டுகைகளுள்ள இவ்வர் ஜுனன் ஆயிரம்கைகளுள்ள (கார்த்தவீரிய) அர்ஜுனனுக்கு ஸமமானவன்" என்றுசொன்னன். திருதராஷ்டிரன், "புத்ரனே! அர்ஜுனனுக்குஸமமான பராக்ரமமுள்ள வீரபுருஷனென்று உன்னால் எடுத்துரைக்கபபட்டவன் யார்? ஈந்தமஹாவீரனை யான்கேட்க விரும்புகிறேன்; சொல்" என்றுகேட்க, துரியோதனன் சொல்லலானன்.

"ராஜாவே! மஹாத்மாவான கார்த்தவீரியனுடைய சரித்திரத்தைக் கேளும். எல்லாலோகங்களுக்கும் காரணமாயுள்ள பிரம்மதேவர் பரபரம்மத்திலிருந்து உண்டானவர். வித்வானகிய அத்ரி மஹரிஷி பிரம்மாவின்புத்ரர். அதரியின்புதல்வன் சந்திரன். சந்திரன் பிள்ளை புதன். புதன்மகன் புரூரவன். அவன்மகன் ஆயு. ஆயுவின் பிள்ளை நகுஷன். நகுஷன்பிள்ளை யயாதி. யயாதியின்மகன் யது. மஹாராஜாவே! யதுவின் புத்ரன் ஸஹஸ்ரஜனென்று பெயர் பெற்றவன். ராஜாவே! ஸஹஸ்ரஜனுடைய புத்ரன் சக்ரதாஸனென்னபபட்டவன். சக்ரதாஸனுடையபிள்ளை ஹேஹயனென்னுமரசன். ஹேஹயனுக்குத் தர்மநேத்ரனென்னும் புத்ரனிருந்தான். தர்மநேத்ரனுக்குக் கிருதியென்பவன் புத்ரன். கிருதியின் புத்ரன் கிருதவீரியன். கிருதவீரியன்புத்ரன் பலவான்களிற்சிறந்த கார்த்தவீர்யார்ஜுனனென்பவன். மஹாராஜாவே! அந்த அர்ஜுனன் உக்ரமான தவஞ்செய்தகாலம் பதினாயிரம்வருஷத்துக்கு மேலானதென்று நான் முன்கேட்டிருக்கிறேன். ராஜாவே! பிதாவே! ஏழு தீவுகளும் பட்டணங்களும் ஸமுத்ரங்களும் நதிகளுமுள்ள இந்தபூமியனைத்தும் அவனால் உக்ரமானசெய்கையினால் ஜயிக்கப்பட்டது. சிறந்தபராக்ரமமுள்ள அந்தஅர்ஜுனன் யாருமுசெய்யமுடியாததவத்தைச்செய்து அத்ரியின்புத்ரரான தத்தாத்ரேயனும்முனிவரை ஆராதித்தான். அந்தத் தத்தாத்ரேயர் அவ்வரசனுக்கு நாலுவரங்கள்கொடுத்தார். அவன் முதலில் ஆயிரம்கைகளை முக்யமானவரமாகக் கேட்டான். அதர்மத்தில் மனம்இறங்கும்போது சான்றோரால் தடுக்கபபடுவது இரண்டாவதுவரம்; க்ஷத்ரியதர்மத்தினால் பூமியைஜயித்துத் தர்மத்தினாலேயே பிரஜைகளை மகிழச்செய்வது மூன்றாவது வரம்; அநேக யுத்தங்களைச்செய்து சத்துருக்களை ஆயிரக்கணக்காகக்கொன்று மேன்

மேலும் யுத்தத்திற்கு ஆரம்பிக்கும்போது தனக்கு மேற்பட்டவனால் மாத்திரம் வதஞ்செய்யப்படுவது நான்காவதுவரம். பாரதமே! அவன் யுத்தஞ்செய்யும்போது ஆயிரம்கைகளும் ரதமும் கொடியும் உண்டா யினவென்று நான்முன்னேகேட்டிருக்கிறேன். ராஜாவே! தந்தையே! அபபடியே [1]ஏழுதீவுகளும் பட்டணங்களும் கடல்களும் நதிகளு முள்ள இந்தபூமி அவனால்ஜயிக்கப்பட்டது. சிறந்தபராக்ரமமுள்ள அந்த அர்ஜுனன் பிறகு ஏழுதீவுகளுக்கும் அதிபதியானான். மஹா பலசாலியான அந்தஅரசன் மஹாயாகங்களைச்செய்தான். அந்த மஹாவீரன் அனேகவருஷகாலம் பூமியையாண்டான். பரதச்ரேஷ்ட ரானராஜாவே! மாஹிஷ்மதியென்னும் நகரத்துக்கு அதிபதியான அவ்வர்ஜுனன் ஒருகால் தன்மனைவிகளுடன்கூடி நர்மதையாற்றுக் குச்சென்றான். பரதச்ரேஷ்டரே! ராஜாவே! அவ்வரசன் அந்தநதிக் குச்சென்று ஜலத்துக்குள்ளிறங்கி ஜலக்ரீடைசெய்ய ஆரம்பித்தான். பிதாவே! அதேகாலத்தில் லங்காதிபதியும் சிறந்தபலசாலியுமான ராவணன் ராக்ஷஸர்களுடன் அவ்விடம்போனான். எபபோதும் கோப முள்ளவனும் வரம்பெற்றதனால் களித்தவனுமாகிய அந்தராவணன் நர்மதையில் அவ்வர்ஜுனனைக்கண்டு மிக்ககோபத்துடன் தேவேந் திரனைச் சம்பாஸுரன் எதிர்த்ததுபோல எதிர்த்துச்சென்றான். அர்ஜுனனும் அந்தராவணனைக்கண்டு எதிர்த்தான். பிறகு அந்த ராவணஅர்ஜுனர்களிருவரும் போர்புரிந்தனர். ராஜாவே! அப் போது யாராலும் வெல்லமுடியாதவீரனும் வரம்பெற்றதனால் கர்வங் கொண்டவனுமாகிய ராவணனை ராஜாவான அர்ஜுனன் தன்பலத்தி னால் யுத்தத்தில்ஜயித்து வில்லின்நாணினால்கட்டித் தன்நகரத்திற்குச் சென்றான். புலஸ்தியமுனிவர் அந்தராவணன் கட்டப்பட்டதைக் கேள்விப்பட்டுக் கார்த்தவீரியார்ஜுனனை நகரத்திற்போய்க்கண்டு ராவணனைக் கட்டிலிருந்துவிடுவித்தார். பாரதமே! பராக்ரமமும் பலமுமுள்ள கார்த்தவீரியார்ஜுனன் பிறகு ஒருகால் கர்வத்தினால் ஒன்றுந்தெரியாமல் ஸமுத்திரக்கரைக்குச் சென்று திரிந்துகொ ண்டே ஸமுத்திரத்தின்மீது கூர்மையானபாணங்களை மிகுதியாகஎய் தான். ஸமுத்ரராஜன் அவனுக்கு நமஸ்காரஞ்செய்து கைகூப்பிக் கொண்டு, "வீரனே! பாணங்களைவிடாதே. உனக்கு நான்என்ன செய்யவேண்டும்; சொல். ராஜச்ரேஷ்டனே! என்னைச்சேர்ந்தஜந் துக்கள் உன்னால்விடப்பட்ட சிறந்தஅம்புகளினால் பீடிக்கப்படுகின் றன. பிரபுவே! அவற்றிற்கு அபயங்கொடு", என்றுகேட்டான்.

[1] ஸபாபர்வம் 43 - ம்பக்கம் குறிப்பிற்காண்க.

அர்ஜுனன், "ஸமுத்ராஜனே! இப்போதே சிக்கிரத்தில் எனக்கு ஒருயுத்தம்கொடு. இல்லாவிட்டால உன்னைபபிடிபபேன். ஆதலால், நீ தாமதம்செய்யாதே" என்றுசொன்னான. ஸமுத்ரராஜன், "ராஜனே உலகத்தில அனேகமஹாவீரர்கள இருக்கின்றனர். அரசர்க்கரசே மஹாபலசாலியே! அவர்களில் ஒருவரோடு யுத்தஞசெய்" என்றான் அர்ஜுனன், "யுத்ததில் எனக்குஸமமானசிறந்தஆயுதம்பிடித்தவன் எங்கேயாவதுஇருப்பானுயின் அவனை எனக்குசொல். அவன் என்னுடையுத்தத்தில நிற்கவேண்டும" என்றுகேட்டான். ஸமுதரராஜன் "ராஜனே! ஜமதக்கியென்னும்மஹரிஷியை நீகேடடிருக்கிறயா? அவருடையபுத்ரன் உனக்குவேண்டினபடி யுத்தத்தைக் கொடுக்கத் தக்கவன்" என்றுசொன்னான். பாரதரே! முன்னமே நாரதருடையடை ருந்தகாபத்தினல் சூழபபட்ட அந்தமஹரிஷிமஹேந்ரபர்வதத்தைச் ஸமுத்ர ராஜன்சொல்லகேடட்டவுடன் கோபத்துடன் விரைவாகச்சென்றான். அவன் அந்தஆசரமதிற்குசென்றுநினைத்தபடியெல்லாம்செய்தான். தன்பக்கலுடன்கூடத் நிங்குகளைபிகசசெய்தான். அவன் மஹரத் மாவானபரசுராமருகு மனவருத்தத்தையுண்டுபண்ணினான். பரசு ராமருடைய ஸூர்யன்போன்றஉக்ரமானபராக்ரமம் அவன்சேனைகளை யெரிப்பதுபோல ஜ்வலித்தது. பிறகு அவர்களிருவரும்விருத்திரா ஸுரனும்இந்திரனுமபோல யுத்தஞசெய்தனர். பிறகு பரசுராமர் விரைவாகக் கோடாலியையெடுத்துக்கொண்டு ஆயிரம்கைகளுள்ள கார்த்தவீரியார்ஜுனனை அனேகம் கிளைகளோடுகூடியமரத்தைப் போல •வெட்டினர். அவன் அடிபட்டுவிழுந்ததைக்கண்டு, அவனு டைய சுற்றத்தார்சேர்ந்து கத்திகளையும் சக்தியாயுதங்களையும்எடுத் துக்கொண்டு பரசுராமரையெதிர்தனர். பலசாலியானபரசுராமரும் விரைவாகத்தேரிலேறி வில்லைவளைத்து உயர்ந்த அஸ்திரங்களைப்பிர யோகித்து அரசர்களையழித்தார். ராஜாவே! அதன்பிறகு பரசுராம ரிடத்தில் ப்யத்தினல்பீடிக்கபபட்ட அரசர்கள், விம்மதத்தினிடத்தில பயந்தமான்கள்போல மலைக்குகைகளில் பிரவேசித்தனர். பரசுராம ரிடமுள்ளபயத்தினல் அவர்களில் யாரும தீங்குஞருக்குரியகர்மங்களைச் செய்யவில்லை. பிராம்மணர்களைப் பாராமையினல் அந்தஜனங்கள் சூத்ராயினர். அதனலேதான் க்ஷத்ரியதர்மத்திலிருந்த திரவிடர், காசர், புண்டரர், சபரர் இவர்கள் தர்மங்கெடடுச் சூத்திரர்களாயினர். பிறகு புருஷர்களிழந்த க்ஷத்ரியபபெண்களிடத்தில் பிராம்மணர் களால் க்ஷத்ரியஸந்ததிகள உண்டாக்கப்பட்டன. •அவற்றையும் பர சுராமர் பலமுறைகொன்றார். அவ்வாறு இருபத்தொருமுறைகொன்ற

பிறகு தேவலோகத்திய அசரீரிவாக்கானது இன்சொல்லாகவும் எல்லாஜனங்களுக்கும் கேட்கும்படியாகவும் பரசுராமரைப்பார்த்து, "ராம! ராம! இதைவிடும். இந்தக்ஷத்திரியர்களைப் பலமுறைகொல்வதனால் உமக்கு ஒருலாபத்தையும் நீர்பார்க்கவில்லை" என்றுசொல்லிற்று. அப்படியே ரிசீகர்முதலான பிதிர்க்களும் மஹாத்மாவான பரசுராமரைப்பார்த்து, "ராம! ராம! மஹாவீரனே! ஓய்ந்துவிடு" என்றனர். தம்பிதாவைக்கொன்றதைப் பொறுதபரசுராமர் அந்த ரிஷிகளைப்பார்த்து, 'நீங்கள் என்னைத் தடுக்கலாகாது' என்று சொன்னார். பிதிர்க்கள், "ஜயிப்பவரிற் சிறந்தவனே! நீக்ஷத்ரிய ஜாதியாரைக்கொல்வது சரியன்று. குழந்தாய்! நீ பிராம்மணனுயிருந்தும் அரசர்களைக்கொல்வது தகாது" என்றனர். அந்தப் பரசுராமர், தமதுபிதிர்க்கள் சொன்னதைக்கேட்டவுடன் கோபத்தைவிட்டு ஆயிரக்கணக்கான அசுவமேதங்களையும் நூற்றுக்கணக்கான நரமேதங்களையும்செய்து கடல்சூழ்ந்தபூமியைக் காசியபருக்குக்கொடுத்தார். பிதாவே! தனஞ்சயன் யுத்தத்தில் அந்தப்பரசுராமருக்கும் அந்தக்கார்த்தவீரியார்ஜுனனுக்கும் ஸமமானவனென்பதில்லைத்தேஹமில்லை. அரசர்க்கரசே! பாக்கியத்தினால் யுத்தத்தில் அர்ஜுனனைஜயிக்கமுடியாது" என்றான்.

தொண்ணூற்றேழாவது அத்தியாயம்.

அநுத்யூதபர்வம் (தொடர்ச்சி.)

(துரியோதனன்சொற்படி திருதராஷ்டிரன் மறுபடியும் சூதாடுவதை ஒப்புக்கொண்டது.)

துரியோதனன், "ராஜாவே! முன்னர் நிகழ்க்கவும்முடியாத தாயிருந்த அர்ஜுனனுடையபராக்ரமங்களைப்பற்றிக் கேளும். வில்லாளிகளிற்சிறந்த அர்ஜுனன் முன்னே செயற்கரியகாரியத்தைச் செய்தான். அரசரே! ஆருபதனுடையங்கரத்தில் திரௌபதியின் ஸ்வயம்வரகாலத்தில் குழுமந்தைமுதல்கிழவன்வரையில் கூடியிருந்த எல்லாக்ஷத்ரியர்களும் சேர்ந்தஸபையில் அர்ஜுனன் யார்க்கும் பார்க்கமுடியாமல் விரைவாக மத்ஸ்யத்தை ஜலத்தில்தள்ளினான். எல்லா அரசர்களாலும் ஸாதிக்கமுடியாத அந்தச்சிறந்தவில்லை எல்லாஅரசர்களும்பார்த்திருக்கையில் ஒருநொடியில் நாணேறிட்டான். பலவானபற்குனன் அப்போது மத்ஸ்யயந்திரத்தை அடித்த பிறகு திரௌபதியினுல் கழுத்தில் பொன்மாலைபோடப்பட்டான். திரௌ

ஸபாபர்வம்.

பதியிலுல் அர்ஜுனன் வரிக்கப்பட்டதைக்கண்டு சிறந்தபாக்ரம் மூள்ள வீரர்களாகிய அரசர்களனைவரும் கோபித்து எல்லாஆயுதங் களையும் எடுத்துக்கொண்டு ரோஷத்தினுல் கர்ணனைமுன்னிட்டுக் கொண்டு அர்ஜுனனையெதிர்த்துச்சென்றனர். அப்போது மஹா பலசாலியான அந்தஅர்ஜுனன் அங்கே எல்லாஅரசர்களும் கோபித் திருக்கக்கண்டு கூர்மையானபாணங்களினுல் அவர்களைத்தடுத்துத் தான் ஜயம்பெற்றான். அர்ஜுனன் பராக்ரமத்தின் வன்மையினுல் கர்ணன்முதலான அவ்வரசர்களனைவர்களையும் யுத்தத்தில் ஜயித்து முன்னம் எல்லாக்ஷத்ரியக்கூட்டங்களின் நடுவிலும் பீஷ்மர் அம் பையையடைந்ததுபோலச் சிறந்தவளான கிருஷ்ணையையடைந்தான். பிறகு ஒருகால் அர்ஜுனன் தீர்த்தயாத்திரைக்குச்சென்றான். தங் தையே! அப்போது நாகராஜன்மகளான உலூபியையடைந்தான். நாகர்களிற் சிறந்த வன்களிருக்கையில் அந்தஉலூபியினுல் அர்ஜு னனேவரிக்கப்பட்டான். அதன்பிறகு கோதாவரியிலும் கிருஷ்ணை நதியிலும் காவேரியிலும் ஸ்நானஞ்செய்தான். அங்கே பாண்டியனை யடைந்து அவன்பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொண்டான்; அவ்விடத்திலிருந்து ஸந்தோஷமடைந்தபிறகு அவன் தென்திசைக் குச்சென்றான். அவன் தென்கடற்கோடிக்குச்சென்று அப்ஸரஸு களின்ஸம்பந்தமான குமாரதீர்த்தத்தைசேர்ந்து கன்னியாதீர்த்தத் தையடைந்து அதில் முதலிலடிவமாயிருந்த அந்த ஐந்துஅப்ஸரஸு களையும் தன்பலத்தினுலும் பராக்ரமத்தினுலும் கரையிலெடுத்துச் சாபத்திலிருந்து விடுவித்தான். அதன்பிறகு பற்குனன் துவார கைக்குச்சென்று கிருஷ்ணனுடைய கட்டளையினுல் ஸுபத்ரையை மணவியாக அடைந்து அவளைத் தேர்மேலேறிக்கொண்டு தன்நக ரத்திற்குச் சென்றான். அவன் அவளைத்தூக்கிக்கொண்டுபோன தைக்கேட்டு, பிரத்யும்னன், கிருதவர்மா, கீதன், ஸாரணன், ஸாத்யகி, ஆஹுகன், ஸாம்பன், சாருதேஷ்ணன், விதூரதன், பலராமர்முத லிய யாதவர்களனைவரும் புலிக்கூட்டம்போலவும் ஸிம்மக்கூட்டம் போலவும் மிகக்கோபித்து (அந்த) அர்ஜுனன்மீது யுத்தத்திற்குச் சென்றனர். யானைகளிலும் குதிரைகளிலும் தேர்களிலுமேறிக்கொ ண்ட அனேகம்கோடியாதவர்கள் ஒருவனுகக் காட்டிலுஞ்செல்லும் அர் ஜுனனை மிக்ககோபத்துடன் சூழ்ந்துகொண்டு அவனுடன் யுத்தஞ் செய்தனர். அர்ஜுனன் ஒருவனுகவே அவர்களுடன் மிக்கபயங் கரமான யுத்தத்தைச்செய்தான். அவனுக்கும் அவர்களுக்கும் சில நேரம் ஸமயுத்தம்நடந்தது. அரசர்க்கரசே! பிறகு வீரனனர்ஜு

னன் யுத்தத்தில்பராக்ரமத்தினால் யாதவர்களனைவரையும் கூர்மை யானபாணங்களினால் தகைந்து ஜயித்து அந்தஸுபத்ரையையழைத் துக்கொண்டு இந்திரபரஸ்தத்தில் பிரவேசித்தான். மஹாராஜாவே! பல்குணனுடைய பராக்ரமத்தை மறுபடியும் கேளும். அந்த அர்ஜுனன் அக்னியினால்கேட்கபபட்ட காண்டவவனத்தை அக்னிக்குக் கொடுத்தான். 'ராஜாவே! அர்ஜுனனால் அவ்வனமகிடைத்தவுடன் அக்னிபகவான் காண்டவவனத்தையும் அதிலுள்ளவற்றையும் பக்ஷிக் கத்தொடங்கினான். அரசர்க்கரசே! அவ்வாறுபக்ஷிக்கின்ற அந்த அக்னியை மஹாபலசாலியும் ஸமர்த்தனுமான ஸவ்யஸாசி தேரி லேறி வில்லியும அமபுகளையும்எடுத்துத் தூணிகளைத்தரித்துத் தன் பராக்ரமத்தினால்காத்தான். அதைக்கேட்டஅ தேவேந்திரன் மேகங் களையனுப்பினான். அவனாலேவபபட்ட அந்த மேகக்கூட்டங்கள் அதிகமழைபெய்தன. பிறகு அர்ஜுனன் ஆகாயமெங்கும் பாணக் கூட்டங்களாலேவிடதது அம்மேகக்கூட்டங்களைத தடுத்துவிட்டான். அஃது ஆச்சரியமாகஇருந்தது. மேகங்கள் தடுக்கபபட்டதைக்கேட் டுக் கோபமுற்றஇந்திரன் வெளியேயாகனயிலேறிகொண்டு எல்லாத் தேவர்களின்கூட்டங்களினாலும் சூழப்பட்டவனாகிக் காண்டவவன த்தைக் காப்பாற்றுவதற்காக அர்ஜுனனோடு யுத்தஞ்செய்யப்போ னான். பாரதரே! ருத்ராகளும மருத்துக்களும வஸுக்களும அசு வினிதேவர்களும் ஆதித்யர்களும ஸாத்யர்களும் விச்வேதேவர்க ளும் கந்தர்வர்களும் மற்றுமுள்ளதேவக்கூட்டங்களுமாகிய தேவ ச்ரேஷ்டர்கள் ஒன்றுசேர்ந்து ஆயுதங்களைத்தரித்துத் தம்பராக்ரமத் தினால் ஜ்வலிப்பவர்களாகித் தனஞ்சயனைக்கொல்வதற்காக ஓடினர். ராஜாவே! பிரளயகாலத்தில் என்னபெரிய அபசகுனங்கள் காணப் படுமோ அவையெல்லாம் அபோது காணப்பட்டன. பிறகு தேவ க்கூட்டத்தாரெல்லாம் அர்ஜுனனை எதிர்த்தனர். அவர்களையும் அந்தத் தேவச்சேனையையுமபார்த்து அர்ஜுனன் கலங்காமல் கூர் மையான அம்புகளைக் கையிற்பிடித்துப பிரளயகாலத்துயமன்போல இந்திரனையும் தேவர்களையும் நோக்கிநின்றான். ராஜாவே! பிறகு இந்தி ராதிதேவர்களனைவரும் மானிடனுகிய அவ்வர்ஜுனன்மேல் பாணவர் ஷங்களைப பொழிந்தனர். சிறநதபராக்ரமசாலியான அர்ஜுனன் அப் போது விரைவாகக் காண்டீவத்தையெடுத்துக்கொண்டு பாணக்கூட் டங்களினால் தேவர்களின்பாணங்களைத்தடுத்தான். ராஜாவே! மிகச் சிறந்த பலமுள்ளதேவர்களனைவரும கோபித்து மனிதனுனஅந்தஸவ் யஸாசியின்மேல மறுபடியும் பற்பலஅஸ்திரங்களைப் பொழிந்தனர்.

அர்ஜுனன் தேவர்களால்கூடப்பட்ட அந்தஅஸ்திரவர்ஷங்களைக் கூர்மையான அம்புகளினால் இரண்டாகவும மூன்றாகவும துணித்தான். மறுபடியும் பார்த்தன் கோபித்து விஷமண்டலமாகவசீகரித்துத் தேவக்கூட்டங்களைசுற்றிலும் கூர்மையான அம்புகளைவிடித்தான். பரதச்ரேஷ்டரே! தேவக்கூட்டதினெல்லாம அர்ஜுனனுடன் பலமுறை யுத்தஞ்செய்து அவனுடையபாணங்களினால பீடிக்கப்பட்டவர்களாகி யுத்தத்தில் அவனைஜயிக்கமுடியாதென்று தெரிந்துகொண்டு சண்டையையொழிததனர. ஸாவதத்தையும இந்திரனையுமவிட்டுவிட்டு எல்லாத்திசைகளிலும ஓடினர். ருத்ரர்களும கந்தர்வர்களும கிழக்கிலும், மருத்துக்கள்தெற்கிலும, வஸுக்களும அசுவினிதேவர்களும மேற்கிலும, ஆதித்யர்களும விசுவேதேவர்களும்வடக்கிலும் பயந்தோடினர். ஸாத்யர்கள் அர்ஜுனன்பாணங்களினிலைத்துப பயந்து மேலுலகுக்கே சென்றனர். இவ்வாறு தேவக்கூட்டதினெல்லாம் விற்பிடிதத அர்ஜுனனையே அடிக்கடிபார்த்துக்கொண்டு எல்லாத்திசைகளிலும் ஓடினர். யுத்தத்தில அந்தத தேவக்கூட்டங்கள் ஓடினதைக் கண்டு மஹாபராக்ரமசாலியான இந்திரன் கோபிதது அர்ஜுனன் மேல் பாணங்களைபொழிந்தான். அர்ஜுனன் மனிதனுயிருந்தும் தேவர்க்குதிதியான இந்திரனை அடிததான். பிறகு அந்தத்தேவேந்திரன் கல்மழைபொழிந்தான். அர்ஜுனன் மிககோபிதது அந்தக் கல்மழையைப பாணங்களினலதிதான. தேவேந்திரனும ஸவ்யஸாசியின்கிறந்த பராகரமத்தையறியக்கருதி அந்தககலமழையை மிகவும் அதிகப்படுதினன். அர்ஜுனனும இந்திரன்மகிழும்படி மஹாவேகமுள்ள அந்தக்கலமழையைத் தன்பாணங்களினால அழிதான். இந்திரன் அர்ஜுனனைக்கொல்வதறகாக அங்கதமென்னுமமலையை மரங்களுடன் இருகரங்களாலும்பெயர்த்து அர்ஜுனன்மீது எறிந்தான். உடனே அர்ஜுனன் வேகமுள்ளவையும ஜ்வலிப்பவையும் குறிதபலாதவையுமான பாணங்களினால் அந்தசகிறந்தமலையை. ஆயிரம பொடியாகஅடிததான். யுத்ததிற்சிறந்தவனுகிய அர்ஜுனன் இந்திரனையும பாணங்களால்அடித்தான். மஹாராஜாவே! அதன் பிறகு இந்திரன் பராக்ரமமுமபலமுமுள்ளவீரனுகிய அந்தஅர்ஜுனனை ஜயிக்கமுடியாதவனென்றுஅறிந்து தன்பிள்ளையின்பராக்ரமத்தினுல் மிகுந்தஸந்தோஷதையடைந்தான். ராஜாவே! அப்போழுது அந்தயுத்தத்தில் அர்ஜுனனைஜயிபபதற்குத் திறமையுள்ளவன் ப்ரஸித்தமாகத்தேவலோகத்தில் யாருமில்லை. பூமமதேவருமசக்தல்லர். சிறந்தபராக்ரமமுள்ள அர்ஜுனன் அபபோது யக்ஷர்களை

யும் ராக்ஷஸர்களையும் நாகர்களையும் பாணங்களினல்அடித்து ஜ்வலிக் கின்ற அக்னியில் இடைவிடாமல்தள்ளினன். அப்போது தேவேந் திரனும் தேவக்கூட்டங்களும் ஆகாயத்தில்தடுக்கப்பட்டதைக்கண்டு, யாரும் அர்ஜுனனைத்தடுக்கமுடியாமற்போயினர். முற்காலத்தில் கருடன் அமிர்தத்துக்காகத் தேவர்களை எப்படிஜயித்தானோ அப் படியே அர்ஜுனனும் தேவர்களைஜயித்து அக்னியைத்திருப்திசெய் வித்தான். பாரதரே! அர்ஜுனன் அவ்வாறு தன்பராக்ரமத்தினல் அக்னியைத்திருப்திசெய்வித்ததால் தேரையும் கொடியையும் குதிரை களையும் திவ்யாஸ்த்ரங்களையும் காண்டீவமென்னும் சிறந்தவில்லையும் அம்பறாத்தூணிகளையும் கீர்த்தியையும்அடைந்தான். அரசர்க்கரசரே! பரதச்ரேஷ்டரே! மறுபடியும்கேளும். அர்ஜுனன் வடதிசைக்குச் சென்று நகரங்களும் பர்வதங்களுமடங்கிய [1]ஒன்பதுவர்ஷங்களையும் ஜயித்து ஜம்புத்வீபமுழுமையையும் தன்வசப்படுத்திக்கொண்டு தன் பலத்தினல் அரசர்களனைவரையும்ஜயித்துக கப்பம்கட்டுவித்து ரத் னங்களெல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு திரும்பி நகரத்துக்குச் சென்று மூத்தவனும் மஹாத்மாவும் தர்மராஜாவுமான யுதிஷ்டி ரனுக்கு ராஜஸூயமஹாயாகத்தைச்செய்வித்தான். அந்த அர்ஜுனன் இன்னும்அனேகம் பிரஸித்தமானகாரியங்களையும் முன்னேசெய்தான். இந்த மூன்றுலோகங்களிலும் பராக்ரமத்தில் அர்ஜுனனுக்கொப் பானவன் யாருமில்லை. தேவர்களும் அஸுரர்களும் யக்ஷர்களும் பிசாசர்களும் நாகர்களும் ராக்ஷஸர்களும் மஹாரதர்களாகியபீஷ்மர் துரோணர்முதலிய கௌரவர்களெல்லாரும் உலகத்தில்வீரர்களுள்ளில் லாளிகளுமாகிய எல்லாஅரசர்களும் யுத்தத்தில் அர்ஜுனனுடன் எதிர்யுத்தம் செய்யமாட்டார்கள். கௌரவரே! நான்எப்போதும் என்மனத்திலிருக்கும் அர்ஜுனனையே பார்த்துக்கொண்டும் சிந்தித் துக்கொண்டும் அவன்பயத்தினல் நடுங்கிக் கொண்டிருக்கிறேன். பிதாவே! நான், பாணத்தையும் காண்டீவத்தையும்தரித்து, பாசா யுதத்தைக் கையிற்பிடித்தயமனைப்போலிருக்கும் அர்ஜுனனை எப் போதும் வீட்டுக்குவீடு பார்க்கிறேன்; பாரதரே! பயத்தினல் அனேக மாயிரம் அர்ஜுனர்களைப்பார்க்கிறேன். இந்தநகரமனைத்தும் அர் ஜுனர்களாயிருப்பதாக எனக்குத்தெரிகிறது. பாரதரே! பிதாவே! யாருமில்லாதஇடத்திலும் அர்ஜுனனைத்தான் பார்க்கிறேன். கன வில் அர்ஜுனனைக்கண்டு புத்திமயங்கித் தடுமாறுகிறேன். அர்ஜு னனையே மனத்தில்வைத்துக்கொண்டிருக்கும் எனக்கு அச்சம்அஞ்ஞா

[1] பூமியின் பிரிவுகள்.

ரம் அம்புஜம்முதலிய அக்ஷத்தைமுதலாகவுடையபெயர்களே பயத்தையுண்டுபண்ணுகின்றன. தர்மதேயே! அர்ஜுனனிடத்திலிவர் மற்ற வீரர்களிடத்தில் எனக்குப்பயமில்லை. யுத்தத்தில் அர்ஜுனன் பிரஹ்லாதனையும் பலியையுங்கூடவென்றுவிடுவன். மஹாராஜாவே! பிதாவே! அதனால் அவனிடத்தில் யுத்தஞ்செய்வது நமக்குதகாது. எனக்கு அவனுடைய பராக்ரமமதிகமாயிருக்கிறதென்பதுமுண்டு. நான் எப்போதும் துக்கப்படுகிறேன். முன்காலத்தில் தண்டகாவனத்தில் மாரீசனுக்கு, மஹாவீரனாகிய ராமனிடத்தில் எப்படிப்பயமிருந்ததோ அப்படியே எனக்கு அர்ஜுனனிடத்தில்பயமிருக்கிறது" என்றுசொன்னான்

திருதராஷ்டிரன், "யாராலும் அணுகமுடியாத மஹாபராக்ரமம் அர்ஜுனனிடத்திலிருப்பது எனக்குத்தெரியும். அந்தவீரனாகிய அர்ஜுனனுக்கு வெறுக்கத்தக்கவாகிய சூதாட்டத்தையும் அஸ்த்ரயுத்தத்தையும் தீயசொற்சொல்வதையும் நீ எவ்வகையிலும்செய்யாதே. அவர்களிடத்தில் இவற்றைச்செய்தால் அர்ஜுனனுக்கும் உங்களுக்கும் சண்டையுண்டாகும். மகனே! ஆதலால் நீ எப்போதும் அர்ஜுனனிடத்தில் ஸ்நேஹமாயிரு. பரதனே! பூமியில் எந்தமனிதனுவது அர்ஜுனனுடன்ஸ்நேஹமாயிருபபானையின் அவனுக்கு மூவுலகங்களிலும் யாதொருபயமுமில்லை. குழந்தாய்! ஆதலால், நீ எப்போதும் அர்ஜுனனுடன்ஸ்நேகமாயிரு" என்றுசொன்னான். துரியோதனன், "கௌரவரே! சூதாட்டத்தில் தர்மராஜனுக்குக் கபடமாகத் தோல்வியுண்டாக்கபட்டது. பிதாவே! அதனாலே தான் நமக்குஜயம். வேறுஉபாயத்தினால் நமக்கு ஜயம்வராது" என்றுசொன்னான். திருதராஷ்டிரன், "குழந்தாய்! பாரதனே! பாண்டவர்களைப்பற்றித் தந்திரஞ்செய்யலாகாது. முன்னமே பாண்டவர்களுக்குவிரோதமாக அனேகஉபாயங்கள் உன்னால்செய்யப்பட்டன. குந்திபுத்ரர்கள் அந்தஉபாயங்களெல்லாவற்றையும் தாண்டிவிட்டார்களன்றே? குழந்தாய்! ஆதலால், நமதுகுலத்தோரும் பிரஜைகளும் உயிர்வாழ்ந்திருக்கும்படி நன்மையைச்செய்யும்விருபபம் உனக்கிருக்குமாயின் நீ உன்னினேகிதரோடும் உறவினரோடும் ஸஹோதரரோடும் கூட அர்ஜுனனிடம் எப்போதும் ஸ்நேஹமாயிரு" என்று சொன்னான். ராஜாவானதுரியோதனன், திருதராஷ்டிரன் சொன்னதைக் கேட்டுச் சிறிதுநேரம்ஆலோசித்து விதியிலை ஏவப்பட்டுப் பேசலானான்.

"புருஷச்ரேஷ்டரே! பாண்டவர்கள் வனம்போவதைப்பந்தயமாகவைத்து மழுபடியும்ஆடுவோம். உமக்கு நன்மையுண்டாகும்,

இப்படித்தான் நாம் அவர்களை வசப்படுத்தமுடியும். சூதாட்டத்தில் தோற்றவர்கள் அவராயினும் நாமாயினும தோலுரித்துப் பன்னிரண்டுவருஷகாலம் மஹாவனத்தில்இருக்கவேண்டும. பதின்மூன்றுவதுவருஷம் சுற்றத்தாருக்குதெரியாமல்இருக்கவேண்டும. தெரிந்தால் திரும்பவும் பன்னிரண்டுவருஷகாலம் வனத்தில்வஸிக்கவேண்டும். நாமாவது வஸிபபோம். அவர்களாவதுவஸிக்கட்டும். அநத நிச்சயத்தோடு சூதுதடக்கட்டும். பாண்டவர்கள் மறுபடியும் காய்களையுருட்டி இநதச்சூதையாட்டும். பரதசரேஷ்டரானராஜாவே! இதுதான் நமக்கு முதன்மையானகாரியம. இநதசசகுனி காய்கள் அனுகூலமாகவருவதென்னும் வித்தையையறிநதவன். நாம் மிகுதியானதனங்களைஞல் எதிரிகள் அணுகமுடியாத பெருஞ்சேனையையும் மித்திரர்களையும்மகிழ்வித்து வசபபடுதது ராஜ்யத்திலிவேரூன்றிவிடுவோம். ராஜாவே! அவர்கள் பதின்மூன்றுவதுவருஷத்தின்விரதத்தைத்தாண்டுவாராயின் அவர்களை நாம்ஜயித்துவிடலாம். வீரரே! நீர் இதைஅங்கீகரிக்கவேண்டும்ம" என்ருன். திருதராஷ்டிரன், "வழியில் நெடுந்தூரம்போயிருந்தபோதிலும் அநதபபாண்டவர்களை உன் இஷ்டப்படி சீக்கிரமதிரும்பிவரச்செய். பாண்டவர்கள்வந்து மறுபடியும் இந்தச்சூதாட்டத்தை நடத்தட்டும்" என்றுசொன்ஞன். அப்போது துரோணர், லோமதத்தன், பாஹ்லீகன், கிருபர், விதுரர், அசுவத்தாமா, வைசயபுத்ரனும் வீரனுமாகியயுயுதஸு, பூரிச்ரவஸ், பீஷ்மர், மஹாரதனுனவிகர்ணன் இவாகளெல்லாரும், 'சூது வேண்டாம்; ஸமாதானமிருக்கட்டும்' என்றுகூறினர். ராஜகாரியம் தெரிந்தகண்பாணவரும் இஷ்டபபடாமலிருக்கையில் பிள்ளையினிடம் அன்புள்ள திருதராஷ்டிரன் பாண்டவர்களை அழைக்கச்செய்தான். ஜனமேஜயமஹாராஜாவே! அபபோது தர்மந்தவறுதவளானகாந்தாரி பிள்ளைகளிடத்திலுள்ள அன்பினுல் தூயப்பட்டுக்கொண்டு ராஜாவான திருதராஷ்டிரனிடம்பார்ததுச் சொல்லத்தொடங்கினுள்.

"மஹாபுத்திசாலியான விதுரர், துரியோதனன் பிறந்தபோதே 'குலத்தைக்கெடுப்பவனுகியி இவனிடம்பரலோகத்துக்கு அனுப்புவது நலம்' என்றுசொன்ஞர். பாரதரே! இவன்பிறந்தவுடன் நரிபோலஊளையிட்டான்என்றே? கௌரவர்களே! இந்தக்குலத்திற்கு இவன்தான் முடிவுஎன்பதை அறியுங்கள். பிரபுவே! பாரதரே! நீர் உம்முடைய பிழையினுல் அகாதமான்னலத்தில் முழுகிபபோகாதீர். விவேகமில்லாத சிறுபிள்ளைகளுடையபுத்தியை ஏற்றுக்கொள்ளாதீர். கொடியதாகிய வம்சகூபத்திற்கு நீர்காரணமாகவேண்டாம். பரதச்ரேஷ்டரே!

கட்டினஅரணிய எவன்உடைப்பன்? அவிந்தீநெருப்பை எவன் ஊதுவன்? அடங்கிபிருக்கின்ற குந்திபுத்ரர்களை எவன்கோபமூட்டுவான்? எப்போதும உம்மைமறவாமலிருக்கும தர்மராஜாவுக்கு நரீணும் மறுபடியும், நினைவுமூட்டுவேன். புத்திகெட்டவனுக்கு நன்மையையும் தீமையையும்பற்றிச்சாஸ்திரம கற்பிக்காது. ராஜாவே! பெரியவன் எவ்வகையிலும் சிறுவர்புத்தியையெடுத்துக்கொள்ளலாகாது. உமது புத்ரர்களாகிய பாண்டவர்கள் உம்மையே நாதராகப்பெற்றிருக்கக் கடவர். அவர்கள் வேறுபடுத்தபட்டு உம்மைவிட்டுவிடலாகாது. ஆதலால், குலத்தைக்கெடுக்கும இதந்தரியோதனனை என்சொற்படி விட்டுவிடலாம. ராஜாவே! பிள்ளையினிடத்திலுள்ள அன்பினால் நீர் அவ்வாறு செய்யாமற்போனீர். அதன்பயன்தான் குலமழிவதற்குக்காரணமாகவநதிருக்கிறதென்பீ அறியும். அடக்கமும் தர்மமும் நீதியுமுள்ளதாகிய உமதுபுத்தியே உமக்குஇருக்கட்டும். தவறு நீர். கொடுமைகலநதஜீசவரியமானது அழிநதுவிடும். நயத்தினால் விருத்தியடைந்த ஜீசவரியமானது புத்ரபௌத்ர்முதலானவர்களுக்கெல்லாம் செல்லும்" என்றான். அபபோது திருதராஷ்டிரமஹாராஜன் தர்மந்தெரிநதவளான காநதாரியைபபார்த்து, "குலத்துக்கு நாசம்வந்தாலும் வரட்டும்; என்னால்தடுக்கமுடியாது. இவர்கள் எப்படிநினைக்கிறார்களோ அபபடியேநடக்கட்டும. பாண்டவர்கள் திரும்பிவரட்டும். என்பிள்ளைகள் பாண்டவர்களுடன் திரும்பவும் சூதாடட்டும்" என்றுசொன்னன்.

தொண்ணூற்றேட்டாவது அத்தியாயம்.

அனுத்யூதபர்வம் (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் நடுவழியிலிருந்து திருப்பிவந்து திரும்பவும் சூதாடினது.)

பிறகு புத்திமானஆன திருதராஷ்டிரமஹாராஜாவின் ஆஜ்ஞையினால் பிராதிகாமியானவன் வெகுதூரமசென்றிருந்த குந்திபுதரரான யுதிஷ்டிரரைப பார்த்து, "தர்மராஜாவே! ஸபையில் காய்களைவைத்துச் சொக்கட்டான்வஸ்திரம விரிக்கபபட்டிருக்கிறது. பாண்டவரே! உமதுபிதாவாகிய திருதராஷ்டிரமஹாராஜா உமதை வருது ஆடச்சொல்லுகிறார்" என்றுசொன்னன். யுதிஷ்டிரர், "பிராணிகள் நன்மையையும் தீமையையும் விதியின்கட்டளைப்படி அடைகின்றன. அவ்விரண்டும் விட்டுப்போவதில்லை. மறுபடியும் ஆடவேண்டுமா? சொக்

கட்டான் ஆடுவதற்காக அழைப்பது கெடுதலுக்குக்காரணமென்றுதெரிந்திருந்தாலும் கிழவருடையகட்டளையினால் அதை நான்விடமுடியவில்லை. பொன்மயமானமிருகம் இருப்பதில்லை. ஆகிலும், ராமர் பொன்மானின்மேல்ஆசைப்பட்டார். கஷ்டம்நெருங்கினகாலங்களில் புத்திகளும் மிகவும் மாறிப்போகின்றன" என்றுசொல்லிக்கொண்டே தம்மைஹாதரர்களுடன் திரும்பினர். சகுனியின்மோசத்தையறிந்திருந்தும் அவர் மற்றபடியும் சூதாடப்போனர். மஹாரதர்களும் பரதச்ரேஷ்டர்களுமான அந்தப்பாண்டவர்கள் மறுபடியும்மைபைக் குட்பிரவேசித்து வேண்டினவர்களின் உள்ளங்களைத் துயரப்படுத்தினர். பாண்டவர்கள் விதியினல்பீடிக்கப்பட்டு எல்லாஜனங்களும் அழிவதற்காக மறுமுறையும் சூதாடுவதில் தம்தம்தகுதிப்படிஉட்கார்ந்தனர். அப்போது சகுனி, "ஓ! பரதச்ரேஷ்டனேயுதிஷ்டிரா! கிழவர் தனத்தைஉங்களுக்குக் கொடுத்துவிட்டது புகழத்தக்கதுதான். ஆனல், பெருவிலைபெற்ற பந்தயமொன்றைமட்டும் கேள். நாங்கள் உங்களால் சூதாடிஜயிக்கப்பட்டாலும் புள்ளிமான்தோலையுடுத்துப் பன்னிரண்டுவருஷம் மஹாவனத்திலிருப்போம்; பதின்மூன்றும்வருஷம் உறவினரால்அறியபடாமல் இருப்போம்; அறியப்பட்டால் மறுபடியும் பன்னிரண்டுவருஷகாலம் வனத்தில்வலிப்போம். நீங்கள் எங்களால்ஜயிக்கபப்ட்டாலும் கிருஷ்ணையுடன்கூடத் தோலாடையுடுத்துப் பன்னிரண்டுவருஷம வனத்தில்வலியுங்கள்; பதின்மூன்றுவதுவருஷம் உறவினரால்றியப்படாமல்வலியுங்கள்; அறியப்பட்டால் திரும்பவும் பன்னிரண்டுவருஷம் வனத்திலிருங்கள்; பதின்மூன்றுவதுவருஷம் சரியாகநிறைவேறினுல் நீங்களானுலும் நாங்களானுலும் மறுபடியும் வழக்கம்போலத் தங்கள்தங்கள் ராஜ்யத்தைப் பெறலாம். பாரதா! யுதிஷ்டிரா! இந்தநிச்சயம்செய்துகொண்டு எம்முடன் மறுதடவையும் காய்களையுருட்டிச் சூதாடவா" என்றுசொன்னன். உடனே ஸபையிலுள்ளவர்களனைவரும் மனத்தில்வருத்தமுற்று ஸபைநடுவில் கைகளைவிரைவாகத்தூக்கி, "ஆ! ஆ! சீ! இந்தப்பெரும்பயத்தைச் சுற்றத்தவர் தர்மராஜாவுக்குத் தெரிவிக்கவில்லையே! இந்தப் பரதச்ரேஷ்டன் தன் புத்தியினல்அறிவதினே அறியானே" என்றுகூறினர். ஜனங்களின்மிகுதியானசொற்களைக்கேட்டும் தர்மராஜர், வெட்கத்தினுலும் தர்மத்திற்காகவும் மறுமுறையும் சூதாடப்போனர். மஹாபுத்திசாலியானதர்மராஜர் தெரிந்திருந்தும் கௌரவர்களுக்கு ராசப்கிட்டியிருந்தாலுமிருக்கலாமென்று நினைத்துத் திரும்பவும் சூதாடினர். அவர், "சகுனியே! தன்தர்மத்தைக்

காப்பாற்றுகிற என்போன்றஅரசன் அழைக்கப்பட்டபிறகு திரும்பிப் போவதெப்படி? ஆதலால், உன்னுடன்கூடாடுகிறேன்" என்று சொன்னார். அதற்குசகுனி, "பாண்டவர்களே! ரிஷபங்களும் குதிரைகளும் பசுக்களும் செம்மறியாடுகளும் வெள்ளாடுகளும் யானைகளும் பொக்கிஷமும் பொன்னும் தாஸிகளும் தாஸர்களும் அளவற்றனவாக நிரம்பியிருக்கின்றன. அவற்றையெல்லாம்விட்டுக் காட்டில்வஸிபடுதுஎன்றே நமக்குப்பந்தயம். நீங்களாயினும் நாங்களாயினும் ஜயிக்கபபட்டால வனத்தையடைந்து வஸிக்கவேண்டும், பதின்மூன்றுவதுவருஷம உறவினரால் அறியப்படாமலிருக்கவேண்டும். புருஷச்ரேஷ்டர்களே! தர்மராஜாவே! இந்தஸபேபந்தயத்தை நிச்சயஞ்செய்துகொண்டு ஆடுவோம்" என்றுசொன்னன். ஜனமேஜயராஜாவே! தர்மராஜாவான யுதிஷ்டிரர், விதியின்பலத்தினால் இவ்வாறு தூண்டப்பட்டு, பீஷ்மர், துரோணர், புத்திமானான விதுரர், யுயுத்ஸு, கிருபர், ஸஞ்சயன், காந்தாரி, குந்தி, பீமார்ஜுனர்கள், நகுலஸஹதேவர்கள், வீரனான விகர்ணன், திரௌபதி, அசுவத்தாமா, ஸோமதத்தன், புத்திசாலியானபாஹ்லீகன் ஆகிய இவர்களால் அடிக்கடிதடைக்கப்பட்டும் நிறுத்தவில்லை. இவ்வாறு மேற்சொன்னவர்கள் நன்மையைக்கருதித்தடுத்தும் தேவகாரியமாகிய பூபாரம்தொலைவது நிறைவேறுவதற்காகச சிறிதுநேரம்[1] கலியையடைந்தார். ராஜாவே! கலியினால் பிரவேசிக்கப்பட்டவராய் 'அப்படியேயாகட்டும்' என்று சகுனிக்குமறுமொழிகூறி வனவாசத்தையொப்புக்கொண்டு ஆடினர். தர்மராஜர் அந்தப்பந்தயத்தை யொப்புக்கொண்டார். ஸுபலபுத்திரனான சகுனி காய்களையெடுத்தான்; 'ஜயித்தாயிற்று' என்றே யுதிஷ்டிரருக்குச் சொன்னன்.

தொண்ணூற்றேழாவது அத்தியாயம்.

அனுத்யூதபர்வம். (தொடர்ச்சி.)

(பாண்டவர்கள் மறுமுறையும் சூதில்தோற்று வனத்திற்குப் புறப்படும் போது கௌரவர்களை வதஞ்செய்வதாகப் பிரதிஜ்ஞைசெய்தது.)

தோல்வியடைந்த பாண்டவர்கள் கூட்டமான வனவாஸிகளைச்செய்துகொண்டு வரிசைப்படி தோல்உத்தரியங்களையெடுத்துக்கொண்டனர். பகைவர்களை யடக்குகிறவர்களான பாண்டவர்கள் ராஜ்யம்

[1] பாபம்.

அபகரிக்கப்பட்டுத் தோல்களைப் போர்த்துக்கொண்டு வனவாஸத்திற் காகப் புறப்பட்டதைக்கண்டு துச்சாஸனன் பேசலானன் :— "மஹாத்மாவாகிய துரியோதனமஹாராஜாவின் ஆஜ்ஞாசக்கரம சுழலத் தொடங்கிற்று. பாண்டவர்கள் தோற்றுப பெரிய ஆபத்தையடைந்தனர். [1]இப்போதுதான் தேவர்கள் [2]இடமில்லாத ஸமவழிகளில் செல்லுகின்றனர். ஏனெனில், குணங்களில்சிறந்தவர்களும் வயதில் பெரியோருமாகியநாம் அயலாரைவிடச் சிறப்புற்றிருக்கிறோம். பாண்டவர்கள் பீடிழிகாலம் முடிவில்லாத நரகத்தில் தள்ளப்பட்டனர். அனேகவருஷகாலம் ஸுகமுமகெட்டு ராஜ்யத்தையுமிழந்துபோயினர். எவர்கள் தனத்தினால்மதங்கொண்டு திருதராஷ்டிரபுத்திரர்களை விட்டனரோ அந்தப்பாண்டவர்கள் தோற்றுப பொருளிழந்து காட்டுக்குச்செலலப்போகின்றனர். இவர்களுடைய விசித்திரமானகவசங்களையும் பிரகாசிக்கின்றஆபரணவஸ்திரங்களையும் மனிதர்கள் களையக் கடவர். சகுனியினுடையபந்தயத்தை ஒப்புக்கொண்டபடி எல்லோரும் புள்ளிமான்தோல்களை உடுத்துவிக்கப்படட்டும். உலகங்களில் தங்களைபபோன்ற மனிதர்களில்லையென்று மனத்தில் எபபோதும நினைத்துக்கொண்டிருந்த இநதபபாண்டவர்கள், இபபோது விபரீதத்தையடைந்து எள்ளுப்பதர்கள்போலப் பயன்படாதவர்களாகித் தங்களைச் சரியாகத்தெரிநதுகொள்வர். இப்படிபபட்ட அகங்காரமுள்ள மிக்கபலசாலிகளான பாண்டவர்கள இநதபபுள்ளிமான்தோலாடையுடுத்தது யஜ்ஞதீக்ஷைசெய்துகொள்ளாதவன் தோலுடுப்பதுபோலிருக்கிறது; பாருங்கள். சிறந்தஅறிவுள்ளவனும் ஸோமகயம்சத்தவனுமாகிய துருபதன், தன்பெண்ணைபபாஞ்சாலியைப பாண்டவர்களுக்குக்கொடுத்ததனால் இவ்வுலகதத்தில ஒருபாக்யமும் பெறாதவனானன். ஆண்மையற்றபாண்டவர்கள் திரௌபதிக்குக்கணவர்கள். திரௌபதியே! அற்பமான்உடைகளையுடுத்து மேலேதோல்போர்த்துச் செல்வமில்லாமலும் ராஜ்யமில்லாமலும்ம காட்டிலிருக்கும் கணவர்களைக்கண்டு நீ என்னஸந்தோஷததையடையப்போகிறாய்? எங்களுள் யாரை நீவிரும்பகிறாயோ அநதமற்றொருகணவனை வரித்துக்கொள். பொறுமையும் இநதிரியநிக்ரஹமுமுள்ளவர்களும் சிறந்த ஸுவரியமுள்ளவர்களுமாகிய இந்தக்கௌரவர்களனைவரும் கூடியிரு

[1] தங்களுக்கு ஏகராஜ்யம் வருதலதான் ஸரியான தெய்விகம் என்பது கருத்து.

[2] அங்கேவருதிருந்த ஜனங்களின்நெருக்கத்தினால் இடமில்லாதவழி என்பது பழைய உரை.

க்கின்றனர். இவர்களில ஒருவனைக் கணவனாக வரித்துக்கொள். இந்தக்காலவித்தியாஸம் உனக்குவராது. எள்ளின்பதரும் தேனிலால் செய்தமிருகமும் [1]நெற்பதருமாபபடியோ. அபபடியே பாண்டவர்கள் ஐவரும் பயனற்றவர்கள். நிலைமைதவறினபாண்டவர்களையனுசரித்து உனக்கென்ன ஆவது? பதரானஎள்ளை ஆட்டிவது வீண்சிரம்ந்தானே?" என்றான். கொடியவனாகிய அந்தத்துச்சர்ஸனன் பாண்டவர்களைப்பார்த்தது இவ்வகையான கடுஞ்சொற்களைசசொன்னான்.

பீமஸேனன் அதைக்கேட்டு மிகவுமபொறுதவனாகி அவனைப் பயமுறுத்திக் கோபத்துடன் விரைவாக அவனிடமசென்று இமய மலையிலுள்ள ஸிம்மம் ஈரியைவனைப்பதுபோல அவனை வனாத்துக்கொண்டு, "கொடியவனே! பாபிகள்பேசுவதுமபயன்படாததுமானபேச்சைப்பேசுகிறாய். சகுனியின்வித்தையாலன்றோ நீ அரசர்களைநடுவில் தற்புகழ்சசிசெய்கிறாய்? இபபோது சொல்லம்புகளினால் எங்கள்உள்ளங்களை எபபடி நீமிகவும்குத்துகிறாயோ அபபடியே யுத்தத்தில் உன் ஹ்ருதயத்தைப்பிளந்து உனக்கு இதனைநினைவுமூட்டுவேன். இன்னும எவர்கள் கோபத்துக்கும பொருளாசைக்குமவசப்பட்டு உன்னுடன்சேர்ந்து உன்னைக்காப்பாற்றுகின்றனரோ அவர்களையும் அவர்களைச்சேர்ந்தவர்களையும் யமலோகத்துக்கனுப்புவேன்" என்றுசொன்னான். தர்மமார்க்கத்தில்கட்டுப்படாத தோளாடையுடுத்த பீமஸேனன் இவ்வாறுபேசும்போது துசசாஸனன் வெட்கமின்றி, "மாடே! மாடே!" என்று அவனையழைத்துக் கௌரவர்களின் நடுவில்கூத்தாடினான். பீமஸேனன், "துசசாஸனா! கொடியவனே! கொடுஞ்சொற் சொல்லத்தான் உன்னால்முடியும். ஏமாற்றிய பொருளையடைந்தபிறகு தன்னைப்புகழ்ந்துகொள்வது எவனுக்குத்தகும்? குந்திபுத்ரனை விருகோதரன், யுத்தத்தில் உன்மார்பைப்பிளந்து உதிரத்தைக்குடியாவிட்டால் புண்ணியவான்கள்செல்லுமம உலகங்களுக்குச் செல்லமாட்டான்." வெகுசீக்கிரத்தில் யுத்தத்தில் எல்லாவிலாளிகளும்' பார்த்திருக்கையில் திருதராஷ்டிரன்பிள்ளைகளைக்கொன்றபிறகு ஒய்வேன். இதைஉனக்கு உண்மையாகச்சொல்லுகிறேன்" என்றான். ராஜாவும் புத்தியில்லாதவனுமாகிய துரியோதனன் பாண்டவர்கள் ஸபையினின்று வெளியேபோகும்போது ஸிம்மமபோல உல்லாஸமாகநடக்கும்பீமஸேனனுடையநடையை உற்சாகத்துடன் தன்னைடையினால் நடந்துகாட்டினான். விருகோதரன் பாதிதீக்ஷிதத்தைத் திருப்பி அவனைப்பார்த்து, "மூடா! இவ்வளவோடு முடிவானதொன்றுமில்லை.

[1] மூலத்தில் 'காகயவா:' என்றிருக்கிறது.

வெகு சீக்கிரத்தில் உன்சுற்றத்தாருடன் நீகொல்லப்படும்போது இதனைஉனக்குஞாபகப்படுத்தி மறுமொழிகூறுவேன்" என்றுசொன்னான். பலமும் மானமுமுள்ள பீமஸேனன், இவ்வாறு தன்னைச்செய்த அவமானத்தைப்பார்த்துக் கோபத்தையடக்கிக்கொண்டு வெளியிற் போவதற்காகத் தர்மராஜாவைப் பின்செல்லும்போது குருவம்சத்தவரின்ஸபையில் பின்வருமாறு சொல்லலானான்.

"நான் துரியோதனனைக்கொல்வேன்; தனஞ்சயன்கர்ணனைக் கொல்வன்; சூதாடத்தெரிந்தசகுனியை ஸஹதேவன்கொல்வன்; இந்தச்சபைநடுவில் மறுபடியும் ஒருபெருஞ்சொல்லைச்சொல்வேன். நமக்குயுத்தம்நேரிடும்போது தேவர்கள் அதைநிறைவேறச்செய்வர். அதாவது, இந்தப்பாவியானதுரியோதனனை யுத்தத்தில் கதையினால் கொல்லப்போகிறேன். உடனே தரையில்விழுந்திருக்கும் இவன் தலையைக் காலால்மிதிப்பேன். பேச்சில்சூரனும் கொடியவனும் துராத்மாவுமாகிய இந்தத்துசசாஸனனுடைய ரக்தத்தைச் சிங்கம் போலக்குடிப்பேன்" என்றான். அர்ஜுனன், "பீமஸேனா! நீபகைக் கத்தக்கவர்கள் இங்கில்லையே! வீட்டில்ஸுகமாகவளர்ந்து கர்வமுள்ளவர்கள் பெரும்பயத்தையறியார். பீமா! சிறந்தவர்களின் கருத்து இவ்வாறு சொல்லினால்அறியபடுவதில்லையே. இதற்குப் பதினான்காவதுவருஷத்தில் எதுநேரிடுமோ அதனையாவரும் பார்ப் பார்" என்றுசொன்னான். பீமஸேனன், "துரியோதனன், கர்ணன், துராத்மாவானசகுனி, துசசாஸனன் இவரால்வருடைய ரக்தத்தையும் பூமிகுடிக்கப்போகிறது" என்றுசொன்னான். அர்ஜுனன், "பீமஸேனா! அஸூயைபடுகிறவனும் வேடிக்கைபார்ப்பவனும் மிகப்பேசுகிறவனும் தன்னைப்புகழுகிறவனுமாகியகர்ணனை உன்சொற்படி நான் யுத்தத்தில்கொல்வேன். பீமஸேனன்ஸந்தோஷப்படுவதற்காக அர்ஜுனன் பிரதிஜ்ஞைசெய்கிறான். கர்ணனையும் கர்ணனைச் சேர்ந்தவர்களையும் யுத்தத்தில் பாணங்களினால்கொல்வேன். மற்றமுள்ள எந்தஅரசர்கள் புத்திமயங்கி எனக்கெதிர்யுத்தம்செய்வரோ அவர்களஇன்வரையும் பாணங்களினால் யமலோகத்திற்கு நான்அனுப்புவேன். என்னுடையஸத்யமதவறுமானால் இமயமலை இட்டம்விட்டஇலகும். ஸூர்யன்ஒளியற்றுப்போவான். சந்திரனை விட்டுக் குளிர்ச்சிபோய்விடும். இதற்குப்பதினான்காவதுவருஷத்தில் துரியோதனன் மரியாதையுடன் ராஜ்யத்தைக்கொடாமற்போவானு யின் நான்சொன்னவையெல்லாம் ஸத்யமாகும்" என்றுசொன்னான். அர்ஜுனன் இவ்வாறுபேசினவுடன் அழகும் பராக்ரமமுமுள்ள

மாத்ரியின் புத்ல்வனுனஸஹதேவன் சகுனியின் வதத்தைச்செய்யக் கருதிப் பருத்ததையைதனுக்கிக்கொண்டு கோபத்தினுற்கிவந்தகண்க ளுடன் பன்னகம்போற்சீறிப் பின்வருமாறுசொல்லலானுன்:—" காந் தாரதேசத்தரசர்களின் புகழைக்கெடுத்தமூடா! எவற்றைப்பார்த்தி கைகளென்று நீ நினைக்கிறுயோ அவைபாச்சிகைகளல்ல; யுத்தத் தில் நீவேண்டுகிற கூரியஅம்புகளே உன்னையும உன்பாதுக்காவையும் பற்றிப் பீமன்சொன்னபடியே அநதக்காரியத்தை நான்நிறைவேற்று வேன். நீ செய்யவேண்டியவற்றையெல்லாம் செய்துமுடித்துக்கொள். ஸுபலபுத்திரனே! நீ கூறத்திரியதர்மப்படி யுத்தத்தில்எதிர்நிற்பா யாயின் என்பாக்ரமத்தினுல் உன்னையும் உன்பாதுக்காவையும் இங் கேயே கொன்றுவிடுவேன்" என்றுன். ஜனமேஜயராஜாவே! ஸஹ தேவன்சொல்லைக்கேட்டு மனிதர்களுள் மிக்கஅழகானகுலனும் சொல்லலானுன்:—" துரியோதனனுடைய விருப்பத்தையனுஸரித்த திருதராஷ்டிரபுததிரர்கள் எவர்கள் திரௌபதியைப்பார்த்துக் கொ டுஞ்சொற்களைச்சொன்னர்களோ கெட்டகண்ணுள்ளவர்களும்,காலத் தினுல்எவப்பட்டவர்களுமாகிய அவர்களில் பெரும்பான்மையோர்களை நான் யமலோகத்திற் சேர்ப்பிப்பேன். சகுனியின் அன்புள்ளமகனும் கொடியவனும் மனிதர்களில்இழி வானவனுமாகிய உலூகனென்னும்தராத்மாவையும் யுத்தத்தில்கொல் வேன். நான் திரௌபதியின்கருதையனுஸரித்துத் தர்மராஜாவின் கட்டளையினுல் பூமியில்திருதராஷ்டிரன் பிள்ளைகளில்லாமலிருக்கும் படி வெருசீக்கிரத்திற்செய்வேன்" என்றுன். நீளமானகைகளை யுடையவர்களும் புருஷச்ரேஷ்டர்களுமான அந்தப்பாண்டவர்களளை வரும் இவ்வாறு அனேகம்பிரதிஜ்ஞைகளைசசெய்து திருதராஷ்டிர னிடம்சென்றனர்.

நூறுவது அத்தியாயம்

அனுத்யூதபர்வம். (தொடர்ச்சி.)

(திருதராஷ்டிரன்முதலானவர்களிடத்தில் விடைபெற்றுக் கொண்டு தர்மபுத்திரர் புறப்பட்டது.)

யுதிஷ்டிரர், " பரதவம்சத்தவரையும் பிராயமுதிர்ந்த பிதாமக ராகியபீஷ்மரையும் ராஜாவானசோமதத்தனையும் மஹாராஜாவான பாஹ்லீகனையும் மற்றுமுள்ள அரசர்களையும் துரோணரையும் கிருப ரையும் அசுவத்தாமாவையும் விதுரரையும் திருதராஷ்டிரரையும் திருத

ராஷ்டிரபுத்ரர்களெல்லாரையும் மஹாவீரனை ஸோமதத்தன்மகனையும் சிறந்தபுத்திமானவிகர்ணனையும் யுயுத்ஸுவையும் ஸஞ்சயனையும் மற்றுமுள்ளஸபையோரையும் பெரும்பாக்கியத்தையுடைய காந்தாரியையும் என்தாயாரானகுந்தியையும் விடைகேட்டுக்கொள்ளுகிறேன். விடைபெற்றுக்கொண்டுசென்று திரும்பிவந்து உங்களெல்லாரையும் காண்பேன்" என்றுசொன்னார். அப்போது அவர்கள் வெட்கத்தினால்குன்றித் தர்மராஜாவைப்பார்த்து ஒன்றும்பேசவில்லை. மனத்தில்மட்டும் சிறந்தபுத்தியுள்ள தர்மராஜாவினுடைய க்ஷேமத்தைப்பிரார்த்தித்தனர். விதுரர், "ராஜபுத்திரியும பூஜிக்கத்தக்கவளும் கஷ்டந்தாங்காதவளும் எப்போதும் ஸௌக்கியத்திலேயே பழகினவளும் வயதுசென்றவளுமானகுந்தி காட்டுக்குச்செல்லத்தகாதவள். மேன்மைபொருந்தினகுந்தி இங்கேயே என்வீட்டில் மரியாதைசெய்யப்பட்டுவஸிப்பாள். பாண்டவர்களே! இதனை அறியுங்கள். உங்களெல்லோருக்கும் ஆரோக்கியம்உண்டாகட்டும்" என்றுசொன்னார். (அவரைப்பார்த்து) பாண்டவர்களெல்லாரும், "குற்றமற்றவரே! நீர்எங்களுக்குஎபடிச்சொல்லுகிறீரோ அப்படியேயாகட்டும். நீர் தந்தையின்ஸஹோதரர்; தந்தைக்கு ஸமமானவர். நாங்கள் உம்மையே நம்பியிருப்பவாகள். நீர்தாம எங்களுக்கு முதன்மையான ஆசார்யர். எல்லாம் நீர்ஆஜ்ஞாபிக்கிறபடிதான். சிறந்தபுத்தியுள்ளவரே! இன்னும் நாங்கள்செய்யத்தக்கதுயாதோ அதையும் கட்டளையிடக்கடவீர்" என்றுகூறினர். விதுரர், "பரதச்ரேஷ்டனாயுதிஷ்டிரா! நான்சொல்லுகிறதைத் தெரிந்துகொள். அதர்மத்தினால் ஜயிக்கப்பட்டஒருவன் தோல்விக்காகத் தூண்டப்படுவதில்லை. உனக்குத் தர்மந்தெரியும். அர்ஜுனன் யுத்தத்தில்ஜயிப்பவன். பீமஸேனன் பகைவரைக்கொல்லுகிறவன். நகுலன் பொருளீட்டுகிறவன். ஸஹதேவன் பொருளைகாபபாற்றுகிறவன். தௌம்யர் பிரம்ம ஜ்ஞானிகளிற்சிறந்தவர். திரௌபதி அறம்பொருள்களை யறிந்தவள்; தர்மத்தையனுஷ்டிப்பவள். நீங்களனைவரும் ஒருவர்மேலொருவர் அன்புள்ளவர்கள்; ப்ரர்ப்பவர்களுக்கும்பிரியமானவர்கள்; எப்போதும் ஸந்தோஷமுள்ளவர்கள். அயலார் உங்களைக்கலைக்கமுடியாது. இவ்வுலகத்தில் உங்களைப்பார்த்து ஆசைப்படாதவர்யார்? பாரதனே! இந்தஉன்மனவுறுதி எல்லா க்ஷேமங்களுக்கும்காரணம். உன்பகைவன் இந்திரனுக்கேர்ப்பானவனுயிருந்தாலும் இந்தக்குணத்திற்கெதிர்நிற்கமாட்டான். முன்னர் இமயமலையில் மேருஸாவர்ணிமுனிவராலும் வ்யாஸபகவானாலும் பிருகுதுங்க

மென்னும்மலையில் (பரசு) ராமராலும் திருஷத்வதியென்னும் நகரத்தில் பரமசிவனாலும் உபதேசிக்கப்பெற்றிருக்கிறாய். கல்மாஷிநதிக்கரையில்வஸித்த பிருகுமஹரிஷிகளு நீ சிஷ்யனாகஇருந்தபோது பிரஜைகளை நிகழ்விபத்தைப்பற்றி அவர் உபதேசித்ததையும்கேட்டிருக்கிறாய். நாரதர் எந்தக்காலமும் உண்மைகாண்பவர். இந்தத்தெளமியர்தாம் உனக்குப் புரோகிதராயிருக்கிறார். ரிஷிகளால்கொண்டாடப்பட்ட அந்தஉன்புத்தியை ஆபத்துக்காலத்தில் நீவிடாதே. பாண்டுபுத்ரனே! நீ அறிவிலுல் இளையின்புத்ரனை புராவனையும் மிஞ்சுகிறாய்; பராக்ரமத்திலுல் மற்றராஜாக்களையும் தர்மத்தையனுஷ்டிபதத்லுல் ரிஷிகளையும் ஜயிக்கிறாய். இந்திரனுடையஜயத்திலும் யமனுடையபொறுமையிலும் குபேரனுடையதானத்திலும் வருணனுடைய இந்திரியஜயத்திலும் மனமவைத்திருக்கிறாய். தன்னைதருகையையும் குளிர்ச்சியாயிருப்பதையும் ஜீவனத்திற்குக்காரணமாயிருபதையும் ஜலத்தினிடமிருந்தும், பொறுமையைபூமியினிடமிருந்தும், நிரம்பினபிரதாபத்தை ஸூர்யனிடமிருந்தும், தேஜஸ்பலத்தை வாயுவினிடமிருந்தும், தனக்குவேண்டின மற்றசிறபபுக்களை எல்லாப்பிராணிகளிடத்திலிருந்தும பெறுவாயாக. உனகளுகு ஆரோக்கியமும் க்ஷேமமும உண்டாகுகடவன. திருமபிவந்தஉங்களைப பார்க்கக்கடவேன். யுதிஷ்டிரா! ஆபத்துகுரியதர்மங்களிலும் ராஜ்ய கஷ்டங்களிலும மறறஎலலாக்காரியஙகளிலும காலந்தாழாமசரியாக நடக்கக்கடவாய். குருதிபுரதனே! பாரதனே! விடைபெற்றுக்கொள்ளுகிறேன். நன்மையைபபெறுவாயாக. காரியமநிறைவேறி க்ஷேமமாகத்திரும்பிவந்த உன்னைப் பார்க்கக்கடவோம. உங்களிடத்தில் பூர்வஜன்மங்களிறசெய்த பாபத்தையும கிருசிதத்தையும யாருமறியான்" என்றுசொன்னார் ஸத்யத்தில் உற்சாகமுடைய பாண்டிபுதரானயுதிஷ்டிரர் விதுரரால இவவாறுசொலலபபெற்று 'அபபடியே' என்றுசொலலிப ரிஷ்மரையும தௌம்யரையும. நமஸ்கரித்துப் புற

நூற்றுரோராவது அத்தியாயம்.

அனுத்யூதபர்வம். (தொடர்ச்சி.)

(குந்தியினிடம்சொல்லிக்கொண்டு பாண்டவர்கள் வனம்சென்றது.)

ஜனமேஜயராஜாவே! அந்தஅதர்மராஜர் வனத்திற்குபபுறப்பட்டபோது துயரமுற்றஜனங்கள் அவரைப்பார்பபதற்காக நான்கு

பக்கங்களிலும் உயர்ந்தமாளிகைகளிலும் தேவாலயங்களின்மேலும் கோபுரங்களெல்லாவற்றிலும் மரங்களெல்லாவற்றிலும் ஏறினர். அவர்கள் ஸ்திரீகளுடன்ஏறித் தூரத்திலிருந்து பார்த்தனர். அந்தக்காலத்தில் அந்தவீதிகள் ஜனங்கள்நிறைந்து நடக்கமுடியாமலிருந்தன. ஜனங்கள், மேற்கண்டவிடங்களிலேறித் துயரத்துடன் தலைகுனிந்து பாண்டவர்களைநோக்கினர். குடையும் வஸ்திரங்களும் ஆபரணங்களுமில்லாமல் மாவுரியையும் தோலையும்உடுத்துக் கால்நடையாகச் செல்லுகின்ற தர்மபுத்திரரைப்பார்த்து மனதில்மிக்கதுக்கமுள்ள ஜனங்கள் பலவிதமானசொற்களைச சொன்னார்கள்.

"எவர் போகும்போது பெருஞ்சுமாரங்கதளம் பின்சென்று கொண்டிருந்ததோ அவர் கிருஷ்ணையுடன் தனித்துப்போக, ஸஹாதரர்களான நாலுபாண்டவர்களும் புரோஹிதரானதௌம்யருமாத்திரம் பின்செல்லுகின்றனர். மஹாத்மாவானயுதிஷ்டிரர், சகுனிமோசஞ்செய்ததற்காக வில்லெடுத்தபீமார்ச்சுனர்களைத்தடித்து ராஜ்யத்தையும்விடுத்த தர்மத்திலேயேநிலைநின்றார். எவனை இதற்குமுன் ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும்தேவர்களும் பார்க்கமுடியாதோ அந்தத் திரௌபதியை இப்போது ராஜமார்க்கத்தில் போகும்ஜனங்களும் பார்க்கின்றனர். உயர்ந்தவாஸனைகள் பூசிக்கொள்ளத் தக்கவளும் செஞ்சந்தனம் அணிந்துகொள்ளுகிறவளுமான திரௌபதியை மழையும் வெயிலும் குளிர்ச்சியும் சிக்கிரதத்தில்நிறமமாறச்செய்யப்போகின்றன. இப்போது குந்திதேவி ஏதோஓர் ஆவேசம்கொண்டுதான் பேசுவாளென்பது நிச்சயம். இந்தக்காலத்தில் அவள் பிள்ளைகளையும் மருமகளையும் பார்க்கமுடியாது. குணமில்லாத பிள்ளையையும் துக்கப்படும்போது பார்ப்பதற்குமுடியாது. யாருடையஒழுக்கத்தினால் இவ்வுலகமனைத்தும வசப்படுத்தப்பட்டிருக்கிறதோ அவரைப் பற்றிச் சொல்லவேண்டுமா? ஹிம்மையைச்செய்யாமையும் தையும மனவுறுதியும் ஒழுக்கமும் அடக்கமும் மனஒழிவுமாகிய இவ்வாறுகுணங்களும் புருஷச்ரேஷ்டராஜாதர்மராஜாவை அலங்கரிக்கின்றன. அதனால், இவருடையகஷ்டத்தினால் பிரஜைகள்மிகத்துயரப்படுகின்றன. கோடைக்காலத்தில் தண்ணீர்வற்றிபோவதனால் நீரிலுள்ளமீன்முதலியஜந்துக்கள் வருத்தப்படுவதுபோலப் பூமிக்குத்தலைவனுகிய தர்மராஜருடையகஷ்டத்தினால் உலகமெலாம் துயரபடுகிறது. வேரறுத்துவிட்டால் மரம் மலர்களோடும் காய்களோடும் வாடுகிறது; இந்தச்சிறந்தமஹிமையுள்ளதர்மராஜர் மனிதர்களுக்குவேர்; மற்றஜனங்கள் இவருக்குப் பூவும் காயும் இலையும கிளைகளுமாயிருக்கின்றனர்.

ஆதலால, நாமும அங்கே அவர்ஸஹோதரர்கள்போலவே புத்ரர்க ளோடும சுறறத்தாரோடுங்கூடத் தர்மராஜாபோகுமிடத்திற்கே செல் வோம். தோட்டங்களையும நிலங்களையும, வீடுகளையும்விட்டு இன்ப துன்பங்களை ஒன்முக அனுபவித்துக்கொண்டு மிக்கதர்மிஷ்டரான தர்ம ராஜர்பின்செல்வோம். கொடிகள [1]பெயர்க்கப்பட்டும், மேடைகளிடிக் கப்பட்டும, தனஙகளும தானியங்களும மற்றுமுள்ளமுக்கியமான பொருள்களெலலாம் எடுத்துகொள்ளப்பட்டும, தூளிகளால்மூடப பட்டும, கிருஹதேவதைகளிஞல் விடப்பட்டும, ஸேணிகளாகஒடும் பெருச்சாளிகளினல் வியாபிக்கப்பட்டும், தண்ணீரும்புகையுமில்லாம லும விளக்கப்படாமலும,பலிகள் யாகங்கள மந்திரஜபங்கள் ஹோமங் களழிந்தும், பாத்திரங்களுடைந்தும, கெட்டகாலத்தினல்கெடுக்கப பட்டவைபோன்ற நம்மால்விடப்பட்டவீடுகளைச சகுனியாளடும். பாண்டவர்கள்போகும் வனமே நகரமாகட்டும. நமமால்விடப்பட்ட நகரம் வனமாகட்டும. நம்மிடத்தில்பயந்து ஸர்ப்பங்கள் புற்றுக்களை யும், மான்களும் யானைகளும விலமஙகளும பக்ஷிகளும வனங்களையும விட்டுவிடட்டும. மிருகஙகளும் பறவைகளும் நாமிலலாதவிடத்தை யடைந்து நாம்செல்லும இடத்தைவிட்டுவிடட்டும். (அவை) புற்க ளையும மாம்ஸங்களையும கனிகளையுமுண்ணுகிற பிராணிகளிருக்கும் இடங்களை விட்டுவிடட்டும. நாம பாண்டவர்களுடன் மிகசசுகமாக வனத்தில்வஸிபபோம்” என்றார்கள்.

இவ்வாறு பலஜனஙகளினும் சொல்லப்பட்ட அநேகவிதமான சொற்களைத் தர்மராஜர்செவிப்புறார். அதனால, அவர்மனங்கலங்க வில்லை. பிறகு நாற்புறங்களிலுமுள்ள ஒவ்வொருவீட்டிலும் பிரம்ம க்ஷத்ரியவைசியசூத்ரஜாதிஸ்திரீகள் உப்பரிகைகளிலேறிப பலகணி களின் அருகிற்சென்று கதவுகளைத்திறந்து, மரவுரியையும் தோலையும் உடுத்து ஏழைகளாகவிருந்த பாண்டவர்களைக் கண்டனர். இதற்கு முன் யாராலும்காணப்படாத அந்ததந்திரௌபதி ராஜஸ்வலையாயிருக கையில் ஒற்றைவஸ்திரமும் அவிழ்ந்தகூந்தலுமாக அழுதுகொண்டு காலால் நடந்துபோகின்றதைக்கண்டு, அந்தஸ்திரீகளேவரும மிக வும்முகங்கருகித் துக்கத்தினலும சோகத்தினலும வருத்தமுற்று மெய்ம்மறந்து பலவிதமாகபபுலம்பி, “ஆ! ஆ! சீ! சீ!” என்று சொல்லிக் கண்களால் நீர்சொரிந்தனர். வனவாஸத்தைக்குறித்து மனத்தில்நிச்சயஞசெய்துகொண்ட தர்மபுத்திரர் ஜனங்களின்சொல லைக்கேட்டுக்கொண்டே ஸஹோதரர்களுடன் புறப்பட்டார். அவர்

1 ‘ஸமுஜ்ஜிதாந்’ என்றுபாடம் இருத்தல்வேண்டும்.

புறப்படும்போது திரௌபதி மிக்கதுயரத்துடன் புகழ்பெற்றகுந்தியிடத்திலும் அங்குள்ள மற்றஸ்திரீகளிடத்திலும விடைகேட்டுக் கொண்டாள். அப்போது பாண்டவர்களின் அந்தப்புரத்தில் மிகப் பெரிய கூச்சல்உண்டாயிறறு. குந்தியும் திரௌபதிபோகிறதைக் கண்டு மிகக்கொதிப்புற்றவளாகித துயரதினுல் தழுதழுதசொல்லோடு கஷ்டப்பட்டுப்பேசலானுள்.

"குழந்தாய்! இந்தபெரிய ஆபத்தையடைந்தும் நீ வ்யஸனப்படத்தகாது. ஸ்திரீதர்மங்கள் உனக்குதெரியும. நீ நல்ல ஒழுக்கமும் செய்கையுமுள்ளவள். வெண்மையான புன்னகையுள்ளவளே! உன்கணவர்களைப்பற்றி உனக்கு நான் ஒன்றும்உபதேசிக்கவேண்டாம். நீ கற்புள்ளவள்; குணங்கள்நிரம்பினவள்; (பிறந்ததும்புகுந்ததுமாகிய) இரண்டுகுலங்களும் உனனுல் அலங்கரிக்கபெற்றன. குற்றமற்றவளே! இந்தக்கௌரவர்கள் அதிருஷ்டமுள்ளவர்கள். அதனுலேதான் உன்னுல் எரிக்கபடாமலிருக்கின்றனர். எண்ணீணப்பதனுல் தைரியமடைந்து தீங்கில்லாமல வழியிறசெல்வாயாக. அவசியமநேரிடும்விஷயங்களில நல்லபெண்களுக்கு மனவேற்றுமையுண்டாவதில்லை. எல்லாவறறிலுமபரிதான தர்மதினுலேயே காபாறறப்பட்டுசரீக்ஷத்தில் நன்மையை யடைவாய். என்புதாணன ஸஹாதேவனை வனதிலிருக்குமபோது நீ எப்போதும் பார்த்துக் கொளளவேண்டும. சிறந்த புதியுளள இவன் இந்தத்துயரத்தை யடைந்ததனுல் சோர்ந்துபோகலாகாது" என்றுசொன்னுள். அந்தத் திரௌபதி, 'அபபடியேயாகடடும்' என்றுசொலலிய பெருகும்கண்ணீரினுல் நனைக்கபபட்டவளாகி [1]ஒறறைவஸ்திரத்தோடும விரித்த கூந்தலோடும் வெளிபபடடாள். அழுதுகொண்டுபோகின்றதிரௌபதியைத் துக்கத்துடன் குந்தி பின்சென்றுள; அபபோது ஆபரணங்களும வஸ்திரங்களும எடுக்கபபுட்டும புள்ளிமான்தோலால் தைக்கத்தில்மூடபபெற்றும மெடகதினுல்கொஞ்சமதசிலகுனிந்தும் பகைவர்களால் ஸந்தோஷதுடன்சூழபபெறறும் நண்பர்களால துயரபபடடுப் பெற்றுமிருந்த தன்புத்திரர்களெல்லாரையும் பார்த்தாள். மிக்கஅன்புள்ளவளான அந்தக்குந்தி அந்தநிலைமையிலிருந்த புத்திரர்களெல்லாரையுமஅணுகித் தழுவிக்கொண்டு வ்யஸனத்தினுல் பலவாறுக மிகப் புலம்பிப பின்வருமாறுசொல்லலானுள்:—"நல்லதர்மத்தையும நடையையுமுடையவர்களும ஒழுக்கத்தினுலும மரியாதையினுலும் அலங்கரிக்கப்பட்டவர்களும் பெருந்தன்மையுள்ளவர்களும உறுதியான

[1] இங்கே இரண்டுசொற்கள் விடப்பட்டன.

பக்தியுள்ளவர்களும் எப்போதும தேவதைகளுக்கு யாகஞ்செய் வதேகாரியமாயிருப்பவர்களுமான உங்களுகுத துயரம்வநததே! இஃது ஏனனவிதியின்விததியாஸம. ஊஙகளுககு இநதக்குற்றம் யாருடைய சாபததினால வநததென்று எனபுதறியில் ஆலோசிக்கி றேன். உத்தம குணங்களுள்ளவாகளாயிருக்கும மிக்கதுயரத்தையும் சிரமத்தையும அனுபவிப்பவாகளான இது, உங்களுகேபபெறற எனது பாக்கியக்கேடுதான். பராக்ரமம தைரியம் பலம உதஸாஹம மஹிமை இவைகளில் குறைவில்லாமலிருநதும ஜேசுவரியமிலலாமல இனறுதுப போனதேனகள் காட்டில்கடுமுரடுகளில எபபடிவஸிபபிகள? உங்க ளுக்கு வனவாஸம் இவ்வாறு அவசியம்நேருமென்று முன்னமே எனக்குத் தெரிநதிருக்குமாயின பாண்டு இறநதபின் சதசிருங்க மலையிலிருந்து அஸ்தினாகரத்திறகு வநதிருககமாட்டேன். பிள்ளை களின் துககதனைப பாராமல ஸ்வாக்கத்திறகுபபோவதையே பிரிய மாகநினைததவரும தவமும புத்தியுமுள்ளவருமாகிய உங்கள்பிதா பாக்யசாலியென்று நினைக்கிறேன். புலன்களுக்குபபுலப்படாதவற் றையும் அறிகிறவளும தர்மதெரிநதவளும மேன்மையுள்ளவளும் மேலானகதியைபபடைநதவருமான மாதரி எவவகையிலும பாக்கியம் பெற்றவளென்று நினைக்கிறேன். கணவனிடததிலடைந்த இன்பத்தி லும் அறிவிலும பரலோகமடைநததிலும அவளால் நான் ஏமாற்றப் பட்டேன். எனககு உயிர்தான்வேண்டும; துககதனுக்கேஏற்பட்ட நான் உதவியற்றவள. புதரர்களே! நான் கஷ்டபபட்டுபபெறற என் அன்புள்ள நன்மக்களானஉங்களை நான்விட்டிசேன. நாளும வனத் திற்கு உங்களுடன்செல்வேன். திரௌபதி! என்னை என்விட்டுவிடு கிறாய். இநத உயிர்வாழ்க்கையானது முடிவுள்ளதாயிருக்கிறது. பிரம் மதேவர் தவறுதலினால எனக்குமட்டும முடிவைவிதியாமற்போனதோ? அதனாலேதான் ஆயுள் என்னைவிடவில்லையோ? ஹா! கிருஷ்ணை! த்வாரகாவாஸியே! பலாமனுக்கினையவனே! எங்கிருகிறாய்?. என் னையும புருஷச்ரேஷ்டாகளான இநதபபாண்டவர்களையும துக்கத்தி லிருந்து நீ ஏன்காபபாற்றவில்லை? 'முதலும் முடிவுமில்லாத உன்னை எந்தமனிதர்கள் விடாமல்தியானமசெய்கின்றார்களோ அவர்களை நீ காபபாற்றுகிறாய்' என் னுமசொல் எப்படிப பொய்யாயிற்று? நல்லதர் மத்தையும மஹிமையையும புகழையும் சூரத்தனத்தையும் அடைந் திருக்கும் இவர்கள் (பாண்டவர்கள்) துயரபபடதகாதே! கிருஷ்ணை! இவர்களிடது தயசெய்யவேண்டும். நீதிசாஸ்திரத்தின்விஷயங்களை யறிநத பீஷ்மர், துரோணர், கிருபர்முதலிய குலதலைவர்களிருக்கை

யில் இந்த ஆபத்து எப்படி வந்தது? ஆ! பாண்டுவே! ஆ! மஹாராஜாவே! " எங்கேயிருக்கிறீர்? யோக்யர்களான புத்ரர்கள் பகைவரால் சூதாடி வெல்லப்பட்டுக் காடுபுகுவதை என்கவனியாமலிருக்கிறீர்? ஸஹதேவா! மாத்ரிபுத்ரா! நீ திரும்பு. நீ என்சரீரத்தைக்காட்டிலும் என்க்கு அதிகப்பிரியமான்வன். கெட்டபிள்ளைபோல என்னைவிட்டு விடாதே. உன்னுடைய இந்தஸஹாதார்கள் ஸத்தியத்துக்கு ஆசைப்பட்டவராயிருந்தால் செல்லட்டும். நீ என்னைக்காப்பாற்றுவதனால் இங்கேயே தர்மத்தைச்செய்" என்றான். இவ்வாறுபலம்புகிறகுந்தியைவணங்கி நமஸ்கரித்துப் பாண்டவர்கள் ஸஹதோஷமில்லாமல் காட்டுக்கேசென்றனர். விதுரர், தாமும்மிகத்துயரமுற்று, துயரபபட்டுக் கொண்டிருக்கும் அந்தக்குந்தியை நியாயங்கள்சொல்லித் தேற்றி மெல்லமெல்லத் தம்கிருஹத்துக்கு அழைத்துக்கொண்டுபோனர். திருதராஷ்டிரபுத்ரர்களின் மனைவிகளனைவரும சூதாடினஸபையில் திரௌபதியைக கொண்டுவந்ததையும் வஸ்திரத்தைஇழுத்ததையும் முழுதும்கேடடுக் கௌரவர்களை மிகவும்திட்டிக் சூல்விட்டழுதனர். தாமரைமலர்போன்ற முகங்களைக் கைகள்மேல் வைத்துக்கொண்டு நெடுநேரம் சிந்தையுற்றிருந்தனர். திருதராஷ்டிரமஹாராஜனும் தன் பிள்ளைகள்செய்த அக்ரமத்தை நினைத்துப் பரிதபித்தமனத்துடன் ஆறுதலையடையாமலிருந்தான். மனம்ஒருவழிப்படாமல் சிந்தைகொண்டு வியஸனத்தினுல் மனங்கலங்கின திருதராஷ்டிரன் சீக்கிரம் வர வேண்டுமென்று விதுராருக்குச்சொல்லியனுபபினன். பிறகு விதுரர் திருதராஷ்டிரன்வீட்டிற்குச் சென்றார். ராஜாவான திருதராஷ்டிரன் பயந்து விதுரரிடம் கேட்கலானன்.

நூற்றிரண்டாவது அத்தியாயம்.

அனுத்யூதபர்வம். (தொடர்ச்சி.)

(பாண்டவர்கள் காட்டுக்குப்போனபிறகு திருதராஷ்டிரன் பயந்து விதுரரிடம் ஆலோசித்ததும், துரியோதனன் முதலானவர்கள் துரோணரைச்சரணமடைந்ததும், அவர் அவர்களுக்குத்தப் புத்திசொன்னதும்.)

அம்பிகையின்புத்ரனான திருதராஷ்டிரமஹாராஜன் தீர்க்காலோசனையுள்ள மந்திவிதுரர்வரக்கண்டு அச்சத்துடன், "விதுரா! குந்திபுத்ரனும தர்மபுத்ரனுமான யுதிஷ்டிரனும் பீமஸேனனும் ஸவ்ய

ஸாசியும் மாத்ரியின்புத்ரர்களான நகுலஸஹதேவர்களும் தெளம்ய ரும் புகழ்பெற்றதௌரபதியும் எப்படிச்செல்லுகின்றனர்?• நான் கேட்கவிரும்புகிறேன். அவர்களின் செய்கைகளெல்லா வற்றையும் சொல்" ளீன்றுகேட்டான். விதுரர், "குந்திபுத்திரனையுதிஷ்டிரன் வஸ்திரத்தினல் முகத்தைமூடிக்கொண்டு போகிறான். பீமன் தன்து பெருங்கைகளிரண்டையும் பார்த்துக்கொண்டு போகிறான். ஸவ்ய ஸாசி மணல்களிறைத்துக்கொண்டே தர்மராஜாவின் பின்செல்லு கிறான். மாத்ரியின்புத்திரனஸஹதேவன் முகத்தில்வர்ணம்பூசிக் கொண்டு போகிறான். உலகத்தில் மிக்கஅழகானநகுலன் மனஞசோர்ந்து உடம்பெல்லாம் புழுதியைப்பூசிக்கொண்டு தர்மராஜாவின்பின் செல்லுகிறான். நீண்டகண்களை யுடையவளும் அழகியவளுமான திரௌபதி கூந்தல்களினல முகத்தைமறைத்துக்கொண்டும் அழுது கொண்டும் ராஜாவின்பின்செல்லுகிறாள். ராஜனே! தௌம்யர் மார்க் கங்களிலுள்ள தர்பங்களைக் கையினலெடுத்து ருத்ரையும் யமனை யும்பற்றின ஸாமங்களை ஸ்வரத்துடன் சொல்லிக்கொண்டு செல்லு கிறார்" என்றுசொன்னர். திருதராஷ்டிரன், "பாண்டவர்கள் இப் போது பலவிதமான குறிகளைச்செய்துகொண்டு போகின்றனரே! விதுரா! ஏன் அவர்கள் இப்படிப்போகின்றனர்? அதை எனக்குச் சொல்" என்றுகேட்க, விதுரர் சொல்லலானர்.

"ராஜ்யமும தனங்களும் கவரப்பட்டும் உமதுபுத்திரர்களால் அவமதிக்கப்பட்டுமிருந்தாலும் சிறந்தபுதிமானான தர்மராஜாவின் புத்தி தர்மத்தைவிட்டு விலகுவதில்லை. பாரதரே! எப்போதும் உமது புத்ரர்களிடத்தில் தயையுள்ள அந்ததர்மராஜன் மோசத்தினல் கெடுக்கப்பட்டுக் கோபத்தோடு உகாமானபார்வையினல் பார்த்து, இந்தக் கௌரவஜனங்களை தஹிக்கலாகாதென்றுநினைத்துக் கண் களைத்திறக்கவில்லை. அதற்காக அந்ததர்மராஜன் முகத்தைமூடிக் கொண்டுபோகிறான். பரதச்ரேஷ்டரே! பீமன் அவ்வாறுபோவதற்குக் காரணத்தைச் சொல்லுகிறேன்; கேளும். 'கைகளின்வன்மையில் எனக்கீடானவனில்லை' என்ற எண்ணத்தினல் தன்கைகளைப் பரபரபிக் கொண்டு பீமன்போகிறான். ராஜாவே! கைகளென்னும தனத்தி னல் கர்வித்தபீமன் தன்கைகளாகிய தனத்திறகுத்தக்கபடி பகைவர் களுக்குச் செய்யத்தக்கதைச்செய்யக்கருதிக் கைகளைக் காண்பித்துக் கொண்டு போகிறான். குந்திபுத்ரனும் ஸவ்யஸாசியுமான அர்ஜுனன் தான். பாணங்கள் பிரயோகிப்பதைக் காண்பிப்பதற்காக மணல்களை இறைத்துக்கொண்டு ராஜாவின்பின் செல்லுகிறான். பாரதரே! இப்

போது மணல்கள் அவன்கையிலிருந்து [1]தடையில்லாமல் உதிருகின்றனவோ அப்படியேதடையில்லாமல் எதிரிகளின்மேல் சர மாரிகள் பொழியப்போகிறான். பாரதரே! 'இந்தக்காலத்தில் என் முகத்தை யாரும் தெரிந்துகொள்ளலாகாது' என்றுநினைத்து ஸஹ தேவன் முகத்தில் வர்ணமபூசிக்கொண்டு செல்லுகிறான். பிரபுவே! 'போகும் வழியில் பெண்களின்மனததை நான்கவரலாகாது' என்று நினைத்து அங்கமெல்லாம் புழுதிகளைப்பூசிக்கொண்டு நகுலன் செல் லுகிறான். ராஜஸுவலியாயிருந்த [2]திரௌபதி ஒற்றைவஸ்திரதோடும் விரித்த கூந்தலோடும் அழுதுகொண்டே, 'எவர்களால் நான் இந்தக் கஷ்டத்தை யடைந்திருக்கிறேனோ அவர்களுடையமனைவியர்கள் பதி ஞன்காவதுவருஷத்தில் கணவாகளும மைந்தர்களும் உறவினரும் ஸ்நேகிதர்களும் கொல்லபபட்டமம பந்துக்களின்உதிரங்களால் உடம் பெல்லாம் பூசப்பட்டமம தலைவிரித்து உடமபெல்லாம் தூசிமூடபபெற் றும் தர்ப்பணஞ்செய்துவிட்டு அஸ்தினபுரதில பிரவேசிக்கவேண் டும்' என்றுசொன்னாள். பாரதரே! சிறந்தஞானமுள்ள புரோஹித ரான தௌமியர் தென்மேற்குமூலையிலிருக்கும தர்பபங்களையறுதது யமனைபபற்றிய ஸாமங்களை ஸ்வரஙகளுடன்சொலலிக்கொண்டு முன் செல்லுகிறாரன்றே? அவர், 'யுத்தத்தில் பரதவமசத்தவர்கள் கொல் லப்பட்டபிறகு கௌரவர்களின் புரோஹிதர்கள் இவவகையானஸாமங் களையே சொலலபபோகினறனர்' என்று தெரிவித்துக்கொண்டு செல் லுகிறார். பாண்டவர்களைமட்டும் மிச்சமாக அனுப்பினதனால் உம் மைச்சேர்ந்த மற்றவர்கள் மிச்சமிருபபதில்லையென்ற நிச்சயத்துடன் தௌம்யர் ருத்ரஸாமங்களைச் சொலலுகிறார்" என்றுசொன்னர். திரு தராஷ்டிரன் "விதுரா! சூதாடினவர்கள் என்னசொன்னார்கள்? நக ரத்திலுள்ள ஜனங்கள் என்னசொன்னார்கள்? என்னுடைய நன்மைக் காக எல்லாவற்றையும் விடாமறசொல்" என்று கேட்க, விதுரர் சொல்லலானர். "மஹாராஜாவே! பிராம்மண க்ஷத்திரிய வைசியசூத் ரர்களும் மற்றவர்களும் சொன்னதை நான் உமக்குசொல்லுவேன்; கேளும். 'ஆ! ஆ! நம்மூடையதலைவர்கள் போகின்றனர்.' கௌர வர்களில் பெரியோர்களும் குழந்தைகளைபபோல இவ்வாறு நடத் தினதைப பாருங்கள். சீ! கஷ்டம. ராஜ்யத்திலாசைப்பட்டுப் பாண்டு புத்ரர்களை நாட்டைவிட்டுக் காட்டுக்கனுபபுகிறார்களே! பாண்டவர்

---

[1] மூலத்தில் 'அஸக்தாஃ' என்றிருக்கிறது; இதற்கு, 'ஒன்றோடொன் றுசேராமல்' என்பது பழையவுரை.

[2] இங்கேஇரண்டுசொற்கள்விடப்பட்டன.

கனை விடப்பிரிந்த காமெல்லோரும் அநாதர்களாயிருக்கிறோம். துஷ்டர்களும் லோபிகளுமாகிய கௌரவர்களிடத்தில் நமக்கு என்ன ஸுகதோஷமிருக்கிறது?' என்று நகரத்துஜனங்கள் மிகுத துயரப்பட்டு அடிக்கடி கதறினார்கள். சிறுதமனமுள்ள அநுதபபாண்டவர்களும் மேற்சொல்லிய இங்கிதக் குறிப்புக்களினால் மனததிலுள்ள நிச்சயத்தைத தெரிவித்துக்கொண்டு வனத்திற்குச் சென்றனர். அந்தபபுரு ஷச்ரேஷ்டர்கள் அஸ்தினபுரத்திலிருநது இவ்வாறு வெளியிற போனபோது மேகமில்லாத ஆகாயத்தில் மின்னல்களுண்டாயின. பூமியும் நடுங்கிற்று. ராஜாவே! அமாவாசையில்லாதபோது ஸூர்யனுக்கு ராஹுக்ரஹணம் உண்டாயிற்று. ஊரை அபஸவயமாகச சுற்றி எரிகொள்ளி விழுந்தது. கீழுகு நரி காக்கைமுதலான மாம்ஸமதின்னும பிராணிகள தேவாலயங்களிலும கிராமங்களின் தலைமையான மரங்களிலும் மதில்களிலும் கோபுரங்களிலும குத்தின. ராஜாவே! உமது தூரலோசனை நடநததனால டரதவமசத்தார் அழிவதறகுக் குறியாக இவ்வாறு இநதக்கொடிய பெரிய அபசகுனங்களுண்டாயின" என்றார்.

ஜனமேஜயராஜாவே! அரசனை திருதராஷ்டிரனும புத்திமானவிதுரருமாகிய இவ்விருவருமு இவ்வாறு பேசிகொண்டிருகையிலேயே அநநக்கௌரவர்களின் ஸபைபடுவில் அனேகமஹரிஷிகளாற சூழபபெறறகாதர் எதிர்தோன்றி, "இதற்குபபதினெண்காவது வருஷததில இவ்விடததில துரியோதனன்செய்த பிழையினாலும பீஷ்மர்ஜோணாகளுடையபலத்தினாலும் கௌரவர்கள் அழியபபோகின்றனர்" என்று பயங்கரமானசொலலைச்சொன்னர். மிகச்சிறநதபரமம தேஜஸைத தரிக்கின்றவரும் தேவரிஷிகளிற் சிறநதவருமானகாதர் இவ்வாறுசொலலி ஆகாயத்திலேறி உடனேமறைநதார். பிறகு துரியோதனனும காணனும ஸுபலபுதிரனாகுனியும துரோணரைத தஞ்சமர்கதினைத்தனர். ராஜ்யதததையே அவருக்கு ஒபபுவித்தனர். அப்போது துரோணர், பொறுமைக்காரனை துரியோதனனையும துசசாஸனனையும கர்ணனையும மற்றெல்லாபபாரதர்களையும் பார்த்து, "பாண்டவர்கள் தேவர்களின்புத்ரர்களென்றும் கொல்லமுடியாதவர்களென்றும் பிராம்மணர்கள்சொல்லுகின்றனர். நானோ என்னிச்சயனமடைந்த திருதராஷ்டிர புத்ரர்களையும் திருதராஷ்டிரனையும சொன்னால் கூடியவரையில் அன்போடும் முழுமனத்தோடுமே அனுஸரித்திருப்பேன்; விடமாட்டேன். ஆனால், தெய்வம் மிக்கவலிமையுடையது. உங்களால் ஜயிக்கப்பட்டபாண்டவர்கள் தர்மத்திற்காக வனம்

போகின்றனர். அந்தப் பாண்டவர்கள் பன்னிரண்டுவருஷம் வனத்தில்வஸித்துப பிரம்மசரியவிரதத்தை யனுஷ்டித்துக் கோபத்தையும் பொறுமையையுங்கொண்டு உங்களுக்குப பெருந்துயரம் உண்டாகும படி பகைதீர்க்கப போகின்றனர். திருதராஷ்டிரமஹாராஜாவே! ஸ்நேஹிதர்களுஞண்டான சண்டைக்காக நான் துருபதனை ராஜ்யத்திலிருந்து தள்ளினேன். என்னைக் கொல்வதற்காகப் புத்ரனைவேண்டித துருபதராஜன் யாகஞ்செய்தான். அவன் யாஜஉ பயாஜரென்னும் ரிஷிகளின் தவத்தினல், திருஷ்டத்யும்னனென்னும் புத்ரனை அக்னியிலிருந்தும் நண்ணிடையாளான திரௌபதியென்னும பெண்ணையாகவேதியின் நடுவிலிருந்தும அடைந்தான். திருஷ்டத்யும்னன் மைத்துனனென்னும் ஸமபந்தத்தினல் பாண்டவர்களால் கௌரவிக்கப்பெற்றவன்; அவர்களுடைய விருபபத்தைச்செய்ய ஊக்கமுள்ளவன்; அவனிடத்தில் எனக்குப் பயமுண்டாயிருக்கிறது. அகனி ஜ்வாலையின் நிற்முளளவனுகவும் வில்லியும் கவசத்தையும் அமபையு முடையவனுகவும் அக்னிபகவானல் அவன் கொடுக்கப்பட்டவன். எனக்கு மனிதத்தன்மையிருபபதனல் அவனிடத்தில் இபபோது பெரிய பயமிருக்கிறது. பகைவர்களான வீரர்களைக் கொல்லுகிறவனிய துருபதனும் அவர்கள்பக்ஷத்தைச சேர்ந்தவனன்றே? ரதர்கள் அதிரதர்களின் எண்ணிக்கையில முதல்வனும் இளமைப்பருவத்தி லிருபபவனுமான அர்ஜுனனுடன் எனக்கு யுத்தம நேருமாயின் என்பிராணன்போவது மிகவும நிச்சயம. கௌரவர்களே! பூமியில் இதற்குமேற்பட்ட பெருந்துயரம வேறு என்ன இருக்கிறது? 'திருஷ்டத்யும்னன் த்ரோணருக்கு மிருத்யு' என்னுஞ் சொல் எங்கும் பரவியிருக்கிறது. என்னைக் கொல்வதற்காகவே அவனை பாண்டவர்களால ஆச்சரயிக்கப்பட்டிருக்கிறுனென்று உலகதத்தில் பிரசித்தி அதிகமாயிருக்கிறது. எனக்கு அந்த விபரீதகாலம உன்நிமித்தமாக வந்திருபபது நிச்சயம். நீங்கள் உங்களுடைய நன்மைமன்ச் சீக்கிரம செய்துகொள்ளுங்கள் இவ்வளவுசெய்ததனல ஒன்றுமசெய்ததாகவில்லை. பனிக்காலத்திய பூண்மாநிமுல்போல இது சிறிதுநேரமுள்ள ஸுகந்தான். பெரியயாகங்களையெல்லாம்செய்யுங்கள். ஸௌக்யங்களை அனுபவியுங்கள். தானங்களைக்கொடுங்கள். இதற்குப்பதினைந்காவதுவருஷத்தில் பெரிய ஆபத்தையடையபோகிறீர்கள். துரியோதனு! இதைக்கேட்டபிறகு உன்விருப்பம்போலச் செய். உனக்குஇஷ்டமிருந்தால் தர்மபுத்ரனோடு ஸந்திசெய்துகொள்" என்றுசொன்னர். துரோணர் சொன்னதைக்கேட்டுத் திருதராஷ்டிரன், "குருவான

துர்யோதனாதியோலவது சார். விதுரா! பாண்டவர்களைத் திருப்பியழை. அவர்கள் திரும்பாமற்போவாராயின் என்புதல்வர்களாகிய அந்தப பாண்டவர்கள் ஆயுதங்களோடும் தேர்களோடுமுள்ள படைகளோடும் ராஜபோகங்களையுடையவர்களாயும் சிறப்பிக்கப்பெற்றவர்களாயும் செல்லடும்" என்றுசொன்னன்.

நூற்றுமூன்றுவது அத்தியாயம்.

அனுத்யூதபர்வம். (தொடர்ச்சி.)

(திருதராஷ்டிரனும் ஸஞ்சயனும் பேசிக்கொண்டது.)

ஜனமேஜயமஹாராஜாவே! இவ்வாறு சூதில்ஜயிக்கப்பட்ட பாண்டவர்கள் வனத்திற்குச்சென்றபோது திருதராஷ்டிரனுக்குள் கவலைபுகுந்தது. கவலையுடன் பலவகை எண்ணங்கொண்டு பெருமூச்செறிந்து உடகாந்திருக்கும் திருதராஷ்டிரமஹாராஜனைப்பார்த்து ஸஞ்சயன், "பூமிகாதிபதியே! ராஜாவே! பாண்டவர்களை ராஜ்யத்தைவிட்டுக் காட்டுக்கனுப்பித் தனங்களை நிரபிய பூமியையடைந்த பிறகு என்தாயபடுகிறீர்?" என்றுகேட்டான். திருதராஷ்டிரன், "யுத்தத்தில் ஸமர்த்தர்களும் பலசாலிகளும் மஹாரதர்களுமாகிய பாண்டவர்களோடு பகைகொண்டிருக்கிறவர்களுக்குத் தூயரமில்லாமையேது?" என்றுசொல்ல, ஸஞ்சயன், "ராஜாவே! நீர்செய்தகாரியம் கன்றுபிறந்திருக்கிறது. ஜனங்களுக்குத் தொடர்ச்சியாக நாசத்தைத் தரத்தக்க பெருமபகைவரைத்துவிட்டது. பீஷ்மரானும் துரோணரானும் விதுரரானும் தடுக்கப்பட்டும் உமதுபுத்திரனும் மிகப்புத்திகெட்டவனும் வெட்கமில்லாதவனுமாகிய துரியோதனன், பாண்டவர்களின் அன்புள்ளவரானவியும் தர்மந்தவறுதலுள்ளவரான திரௌபதியை 'இங்கேயழைத்துவா' என்று பிராதிகாமியென்னும் ஸூதபுத்திரனை அனுப்பினன். தேவர்கள் ஏகதமனிதனுக்கு அபஜயத்தைக்கொடுப்பார்களோ அவனுடையபுத்தியைக் குறைத்துவிடுவார்கள். அவன் விபரீதங்களையே பார்ப்பான். கேடுநெருங்கி மதிகலங்கிப்போனபோது அநியாயம் நியாயம்போலதோன்றி மனத்தைவிட்டு விலகாமலிருக்கும். கேடுவருமுன் தீயவையெல்லாம நல்லவைபோலவும் நல்லவையெல்லாம் தீயவைபோலவும் தோன்றும். இவனுக்கும் அபபடியே தோன்றியிருக்கிறது நிச்சயம். காலமானது தண்டத்தையோங்கி யார்தலையையும் உடைக்கிறதில்லை. காரியங்களைமாறுகக் காண்பிப்பதுதான் காலத்தின்வன்மை. கர்ப்பத்தில் பிறவாதவளும

தவமுள்ளவளும் அழகுள்ளவளும் நல்லகுலத்தில் (அக்னியினின்றும் பிறந்தவளுமாகிய) பாஞ்சாலியை ஸபையில்இழுத்தபோதே மயிர்பொடிக்கச்செய்யும் பயங்கரமான இந்தக்காலம் உமதுபிள்ளைகளினால் தேடிக் கொள்ளப்பட்டது. வஞ்சகச் சூதாடுகிறவனைத்தவிர வேறுளவன், எல்லாச் தர்மங்களுமதெரிந்தவளும் புகழ்பெற்றவளுமாகிய அவளைப் பலாத்காரமாக ஸபைக்குவில கொண்டுவருவான்? பெண்தன்மைக்குரிய ருதுகாலத்திலிருப்பவளும் ஒற்றைவஸ்திரம் தரித்தவளுமாகிய அந்தப்பெண்ணரசியான பாஞ்சாலி, பொருள்களும் ராஜ்யமும் வஸ்திரங்களும் மஹிமையும் அபஹரிக்கப்பட்டு எல்லாபிரகாசங்களையுமிழந்து தர்மமென்னுங்கயிற்றினால் கட்டப்பட்டு பாக்கியமற்ற செய்பச சக்தியில்லாதவர்களைப்போல அடிமைத்தனமையையடைந்திருந்த பாண்டவர்களை நோக்கினாள். துயரப்படத்தகாத அந்தத் திரௌபதி கௌரவாகளின் ஸபையில் துயரப்பட்டுக் கோபித்திருந்தபோது துரியோதனனும் காணுமபடி கடுஞ்சொற்கள் சொன்னார்கள். ராஜாவே! இவ்வாறு எல்லாம் தாறுமாறுகளடைந்தென்று எனக்குத்தோன்றுகிறது" என்றுசொன்னன்.

திருதராஷ்டிரன், "ஸஞ்சய! அந்தத் திரௌபதியின் துயரமுற்ற கண்களினால் பூமியேயெரிக்கப்படுமே. இப்போது என்புதல்வர்களில் யாராவதுதிசசமிருப்பார்களா? தர்மிஷ்டையும் தர்மபத்னியும் அழகும் இளமையுமுள்ளவளுமாகிய கிருஷ்ணை அந்தச்சபைக்குவந்த கண்டு பரதவம்சத்தவரின் ஸ்திரீகளனைவரும் காந்தாரியுடன்சேர்ந்து, பயங்கரமாகக்கூவினர். தம்தம குழந்தைகளுடன்சேர்ந்து தினமும் அவர்கள் துயரப்படுகின்றனர். திரௌபதியைபிழைத்ததற்காக பிராம்மணர்கள் கோபித்தனர். ஸாயங்காலங்களில் அக்னிஹோத்ரங்கள் யாராலுமசெய்யப்படவில்லை. பயங்கரமானபெருங்காற்றும் பேரிடியும் உண்டாயின. ஆகாயத்திலிருந்து எரிகொள்ளிகள்விழுந்தன. அமாவாஸையில்லாதகாலத்தில் ராஹுவினால் ஸூர்யக்ரஹணம் உண்டாயிற்று. அதுபிரஜைகளுக்கு மிகக்கொடியபயங்கரமாயிருந்தது. அப்படியே தேர்ச்சாலைகளில் நீப்பிடித்தது. பாரதர்களின் கெடுதலுக்குக் குறிப்பாகக் கொடிகள்விழுந்தன. துரியோதனுடைய அக்னிஹோத்ரசாலையில் நரிகள் பயங்கரமாகஊளையிட்டன அவற்றிற்கு நாலுபக்கங்களிலும் கழுதைகள் எதிராகக்கத்தின. ஸஞ்சய! உடனே பீஷ்மரும் துரோணரும் கிருபரும் ஸோமதத்தனும் சிறந்தமனமுள்ளபாஹ்லீகனும் அதைவிட்டுப்போனார். பிறகு விதுர

[1] இங்கே, இரண்டு சொற்கள் விடப்பட்டன.

ஞல் தெரிவிக்கப்பட்டதான், 'கிருஷ்ணை என்னஎன்னவரங்கள் விரும்புகிறாளோ அவற்றையெல்லாம் அவளுக்குக்கொடுப்பேன்' என்று சொன்னேன். அபோது பாஞ்சாலி பாண்டவர்கள் தாஸர்களாயில்லாமலிருக்கும்படி கேட்டுக்கொண்டாள். நானும் அவர்களைரதங்களோடும் விறகளோடும் செல்லும்படி அனுப்பினேன். அபோது சிறந்தபுத்தியுள்ளவனும் எல்லாதர்மங்களும் தெரிந்தவனுமாகிய விதுரன், 'எபோது கிருஷ்ணை ஸபைக்குவந்தாளோ, அதுதான் பாரதகளுக்குமுடிவுக்காலம். இந்தபபாஞ்சாலராஜன்மகள் லக்ஷ்மி. அவளுக்குமேற்பட்டவள் யாருமில்லை. இந்தப்பாஞ்சாலி தெய்வத்தினால் சிருஷ்டிக்கப்பட்டு இந்தப்பாண்டவர்களையடைந்திருக்கிறாள். உண்மையானபிரியமுள்ள அந்தக்கிருஷ்ணபகவானால காப்பாற்றப்பட்டவர்களும் அவமானத்தைப்பொறுதவர்களுமாகிய குந்திபுத்தர்களும் சிறந்தவில்லாளிகளாகிய யாதவாகளும மஹாரதர்களானபாஞ்சாலர்களும் திரௌபதியின் தயரதைபபொறுப்பார்கள். பாஞ்சாலர்களால் சூழப்பெற்று அர்ஜுனன்வரப்போகிறான். அவர்களின்நடுவில் சிறந்தவில்லாளியும் மஹாபலசாலியுமான பீமஸேனன் யமன் தண்டாயுதத்தைச்சுழற்றுவதுபோலக் கதையைச்சுழற்றிக்கொண்டு வரப்போகிறான். அபோது சிறந்தபுத்திமானான அர்ஜுனனுடையகாண்டீவ கோஷத்தையும பீமனுடையகதையின் வேகத்தினாலுண்டானசப்தத்தையும் அரசர்கள்கேட்டு ஸஹிக்கமுடியாது. அதுவிஷயத்தில் எபோதும் பாண்டவர்களோடு ஸ்நேஹமே எனக்குச்சரியாகத்தோன்றுகிறது. விரோதம் சரியன்று. எபோதும் கௌரவர்களைப்பார்க்கிலும் பாண்டவர்கள் மிக்கபலசாலிகளென்று நான்நினைக்கிறேன். இதுதான் சரி. சிறந்தபலமும் பராக்ரமமுமுள்ள ஜராஸந்தனென்னும் அரசன் கையேயாயுதமாகவைத்துக்கொண்டபீமனால் யுத்தத்திற் கொல்லப்பட்டானே! பாதசரேஷ்டரே! யூதலால், பாண்டவர்களோடு உமக்குஸ்நேஹமேயிருக்கவேண்டும். இவ்விருதிறத்தாருக்கும் சரியாணைதைச் சந்தேகப்பட்டாம்மற்செய்யும். மஹாராஜாவே! இவ்வாறு செய்தால் நீர்மேலானநன்மையையடைவீர்' என்றுசொன்னான். ஸஞ்சய! விதுரன் இவ்வாறு தர்மத்திற்கும் ராஜ்யலாபத்திற்கும் ஒத்தீத சொல்லைச்சொன்னான். பிள்ளையின்விருப்பத்தையுணர்ந்த நான் அதை ஏற்றுக்கொள்ளாமற்போனேன்" என்றுசொன்னான்.

அனுத்யூதபர்வம் முற்றிற்று.

ஸபாபர்வம் முற்றிற்று.

ஸபாபர்வம்

பிழையும் திருத்தமும்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
13	31	ரோணங்கள்	ரோஹணங்கள்
31	5	நூற்றுமவரும்	நூற்றுவரும்
	26	உபாவிக்கின்றனர்	உபாவிக்கின்றனர்
32	26	அச்சபையில்	அச்சபையில்
34	20	பாரதரே!	பாரதனே!
40	12	லகஷ்மி	லக்ஷ்மி
52	8	ஸார்வாயனா	ஸால்வாயனர்
56	15	பெறுகிறான்.	பெறுகிறான்.
82	36	ஹிரிவம்சங்களில்	ஹரிவம்சங்களில்
86	8	சதுர்தசி	சதுர்த்தசி
101	26	ப்ரதங்கணரென்னும்	பரதங்கணரென்னும்
134	2	நாராயணனைக்	நாராயணனே
	20;21	யானைகூட்டத்தலைவன் யானைக்கூட்டத்தலைவர்	யூகபதியானது யூகபதி
140	15	பூஜ்யன்	பூஜ்யர்
141	9	முகம	முகம்
151	20	கேட்டுப்,	கேட்டு,
156	14	வீரியாரர்ஜுனன்	வீரியார்ஜுனன்
158	17	தான்	தாம்
218	1	த்ஸ்ரத்திஞல்	ஸ்த்ரத்திஞல்
262	32	ஸ்தீரிகளோடு	ஸ்திரீகளோடு
264	28	தர்மாராஜாவானவர்	தர்மராஜாவானவர்
270	33	ஆயிரக்கணக்காக	ஆயிரக்கணக்காக்
288	21	தனஞ்சய!	தனஞ்சய!
304	22	தனஞ்ஜயனை	தனஞ்சயனை